
தென்னிந்திய
செங்குந்த சமூக
கைத்தறி, மாதர் மாநில மாநாடு
கோவை
சிறப்பு மலர்
ஈரோடு

தென்னிந்திய செங்குந்தர் சமூக, கைத்தறி, மாதர், மாநில மாநாடு.

ஈரோடு.

சிறப்பு மலர்

1976

வெளியீடு :

கோவை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கம்,
ஈ ரோ டு .

AS LIGHT AS AIR
AS COLOURFUL
AS BUTTERFLY
Co-optex
COTTON PRINTED SAREES.
That's right! Light cotton printed sarees — Such mod motifs — Such patterns to please — Such colours to thrill! Cotton printed Sarees from Co-optex are the rage now.
Butterfly is handloom

உ

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

செங்குந்தர் குலதெய்வம்
குன்று தோறுடும் குமரன்

இக்கவின்மிகு கண்கவர் மலர்—

தென்னிந்திய செங்குந்தர் சமூக, கைத்தறி,
மாதர், மாநில மாநாட்டை நள ஆண்டு
மார்கழித் திங்கள் 10 ஆம் நாளில் (25—12—76)
ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியின் திடலில்
V. M. மொட்டையப்ப முதலியார் மாளிகையில் அமைந்த
V. V C. R. முருகேச முதலியார் அரங்கத்தில்
உயர்திரு. C. நடராஜ முதலியார் அவர்கள் தலைமையில்
உயர்திரு. G. கருப்பையா மூப்பனார் அவர்கள்
தொடங்கிவைத்தபோது
மலர்ந்த மலர்.

இம் மணமிகு மலரை,
உயர்திரு. A V. RM. சங்கரநாராயணன் அவர்கள்
மலர்த்த, மலரின் மணத்தை முதலில் நுகர்ந்தவர்—
உயர்திரு. A. சங்கர முதலியார் அவர்கள்.



தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

ஓர் அழகுமலர் அரும்புகிறது

உங்கள் கரங்களில் செங்குந்த வண்ணமலர்.
வண்ணமலரின் முகப்பு - வானவில்லின் தொகுப்பு.
சீரோடு நெடிதுயர்ந்த கோபுரம் -
ஈரோடு திருத்தொண்டீஸ்வரர் ஆலயம்.
விரிந்து பரந்த காவிரி - செழித்து வளர்ந்த செந்நெற் கழனி
மாயோன் மருகனின் தோற்றம் - மனத்தூய்மைக்குத் தரும் ஏற்றம்.
எண்குண இறைவனின் தன்வழி வந்த நம்குல நவவீரர்கள்.
இகழ்வெல்லும் செங்குந்தர் புகழ்சொல்லும் கொடித் தோற்றம்.

மலர் விரிகிறது - மணம் வருகிறது . . .

அறிவுசால் அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.
கவிஞர் பெருமக்களின் கற்பனைப் படைப்புக்கள்.
செங்குந்தர் குலச் சீலர்களின் சீர்த்திமிகு சிந்தனைகள்.
மங்கையர் குலத் திலகங்களின் கூர்த்தமதிக் கட்டுரைகள்.
கொங்குத் திருநாட்டின் அருள்மிகு ஆலயங்கள் --
அவற்றின் மருள்நீக்கும் தோற்றங்கள்.

இம்மலரில் நாம் காணும் நல்லவர்கள், நம்குலம் தழைத்தினிதோங்க
அயராது அரும்பணி புரிந்தவர்கள் — புரிகின்றவர்கள்.
அவர்தம் அரும்பணியின் அடையாளச் சின்னங்கள் —
அவை காலத்தால் அழியாத கலைக்கோயில்கள் ;
கைத்தறித் தொழிற் கூடங்கள் ; கல்யாண மண்டபங்கள்.
அறிவுநலம் நிறைந்த ஆன்றோர்தம் அருளுரைகள் ;
நிறைமொழி மாந்தர்தம் வாழ்த்துரைகள்.
இன்னும் இதுபோல் கண்ணுக்கும் கருத்துக்கும்
விருந்தளிக்கும் படைப்புக்கள்தாம் எத்தனை ! எத்தனை !!

இவை அத்தனையும் நிறைந்து, செந்தமிழ்ச் செங்குந்த
குலத்தோரின் செம்மையுறு சிந்தனைக்கு விருந்தாய் மலர்ந்த
மலரின் சுவையைச் சுவைக்கலாம் வாரீர் !

மலர்க் குழு

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

தென்னிந்திய செங்குந்தர், பதின்மூன்றாவது

மாநில சமூக, மாதர், கைத்தறி மாநாடுகள்

அழைப்பிதழ்

பெருந்தகையீர்! வணக்கம்.

வருகிற 25, 26—12—1976 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஈரோடு, செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, V. M. மொட்டையப்ப முதலியார் மாளிகையில், V. V. C. R. முருகேச முதலியார் அரங்கில் தென்னிந்திய செங்குந்தர் 13-வது மாநில மாநாடும், மாதர், கைத்தறி மாநாடுகளும் நடைபெற இருக்கின்றன. அறிஞர் பெருமக்கள் பலர் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர்.

தாங்கள், நண்பர்களுடன் பெருந் திரளாகக் கலந்து கொண்டு மாநாடுகள் சிறப்புடன் நடைபெற ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தங்களன்புள்ள,

E. M. பாலசுப்ரமணியம்,
த. விசுவநாதன்,
A. நாகரத்னம்,
லோகசுந்தரி செல்லையா,
K. P. இராமசாமி,
J. சுத்தானந்தம்,
வரவேற்புக்குழுச் செயலாளர்கள்.

M. P. நாச்சிமுத்து,
(சமூக மாநாடு)
செல்லம் சுந்தரம்,
(மாதர் மாநாடு)
கே. ஜி. பி. ஆறுமுகம்,
(கைத்தறி மாநாடு)
வரவேற்புக்குழுத் தலைவர்கள்.

நிகழ்ச்சி நிரல்

25—12—76 சனிக்கிழமை காலை 9 மணி.

சமூக மாநாடு.

இறை வணக்கம் :

குந்தர் குலக்கொடி ஏற்றுதல் :

திரு. **T. V. வெங்கிட சுப்ரமணியம்,** M. A., B. L.,
அவர்கள், காஞ்சீபுரம்.

வரவேற்புரை :

திரு. **M. P. நாச்சிமுத்து,** B. A., B. L., அவர்கள்
ஈரோடு.

கைத்தறிக் கண்காட்சித் திறப்பாளர் :

திரு. **R. சம்பந்தமூர்த்தி முதலியார்** அவர்கள்
செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

மாநாட்டைத் துவக்கிவைப்பவர் :

திரு. **G. கருப்பையா மூப்பனார்** அவர்கள்
தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சென்னை.

மாநாட்டுத் தலைவர் :

திரு. **C. நடராஜ முதலியார்,** B. A., B. L., அவர்கள்
துணைத் தலைவர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

தியாகி குமரன் படத் திறப்பு :

நடிகர் திலகம், பத்மஸ்ரீ **சிவாஜிகணேசன்** அவர்கள்

திரு. **T. N. சபாபதி முதலியார் படத் திறப்பு :**

திரு. **V. ரத்ன முதலியார்,** B. A., B. L., அவர்கள்
முன்னாள் தலைவர், பப்ளிக் சர்வீஸ் கமிஷன், சென்னை.

திரு. **S. மீனாட்சி சுந்தர முதலியார் படத் திறப்பு :**

திரு. **N. D. சுந்தரவடிவேலு,** M. A., L. T., அவர்கள்
முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

திரு. **தி. அ. சண்முக முதலியார் படத் திறப்பு :**

திரு. **P. S. பாலசுப்ரமண்ய முதலியார்** அவர்கள்
தலைவர், சென்னை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்.

மலர் வெளியீடு :

திரு. **AV. RM. சங்கரநாராயண முதலியார்**
அவர்கள், உரிமையாளர், கோமதி மில்ஸ், அம்பாசமுத்திரம்.

மலர் பெறுபவர் :

திரு. **A. சங்கர முதலியார்,** B. A., B. L., அவர்கள்
அட்வகேட், சேலம்.

சிறப்புச் சொற்பொழிவு :

டாக்டர் திரு. **C. பாலசுப்பிரமணியம்,** M. A. M. LITT. PHD.
அவர்கள், தமிழ்த்துறைத் தலைவர், பல்கலைக் கழகம், சென்னை.
பொருள் : **செங்குந்தர் வரலாறு.**

திரு. **துரைராமசாமி** அவர்கள்
தலைவர், ஈரோடு மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி.

நன்றி நவிலல் :

25—12—76 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி

மாதர் மாநாடு.

வரவேற்புரை :

திருமதி. **செல்லம் சுந்தரம்** அவர்கள், ஈரோடு.

மாநாட்டைத் துவக்கி வைப்பவர் :

திருமதி. **V. சரோஜினி வரதப்பன்** அவர்கள்
தலைவி, அகில இந்திய மாதர் சமூக வாரியம், சென்னை.

மாநாட்டுத் தலைவி :

திருமதி. **M. சரஸ்வதி முத்துசாமி,** B. SC., B. T. அவர்கள்

படத் திறப்பு : தில்லையாடி வள்ளியம்மை

ஆக்கூர் திரு. **சு. ராமலிங்க முதலியார்** அவர்கள்
தலைவர், தஞ்சை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்.

சிறப்புச் சொற்பொழிவு :

திருமதி. **T. N. அனந்தநாயகி,** B. A., B. L., அவர்கள்
செயலாளர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சென்னை.

திருமதி. **Y. G. பார்த்தசாரதி,** B. A., M. ED.
முதல்வர், சேஷாத்திரி பாலபவன், சென்னை.

திரைப்பட நடிகை திருமதி. **S. வரலட்சுமி** அவர்கள்
,, குமாரி **விஜயசந்திரிகா** அவர்கள்

நன்றி நவிலல் :

நாடகம் : இரவு 9 மணியளவில் திரைப்பட நடிகை குமாரி **விஜயசந்திரிகா** குழுவினரின் **"இம்மைப் பிறப்பில்"** என்னும் நாடகம் நடைபெறும்

26—12—76 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

கைத்தறி மாநாடு.

வரவேற்புரை :

திரு. **K. G. P. ஆறுமுகம்,** B. A., அவர்கள்
தலைவர், புஞ்சை ஊத்துக்குளி, நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

மாநாட்டைத் துவக்கி வைப்பவர் :

மாண்புமிகு **C. சுப்ரமணியம்** அவர்கள்
பாரத நிதி அமைச்சர், டெல்லி.

மாநாட்டுத் தலைவர் :

திரு. **கொண்டா லக்ஷ்மண் பாபுஜீ** அவர்கள்
ஆந்திர மாநில முன்னாள் அமைச்சர்.

திரு. **A. மாரியப்பன் படத் திறப்பு :**

திரு. **K. A. காசிவிஸ்வநாத முதலியார்** அவர்கள்
திருச்செங்கோடு.

சிறப்புச் சொற்பொழிவு :

கவியரசு. **கண்ணதாசன்** அவர்கள், சென்னை.

சொல்லின் செல்வர் திரு. **E. V. K. சம்பத்** அவர்கள்
துணைத் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

திரு. **ப. நெடுமாறன்** அவர்கள்
செயலாளர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

திரு. **P. சிதம்பரம்,** M. A., B. L.,
செயலாளர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

திரு. **பிரகடகோட்டையா** M. L. C. அவர்கள், **ஆந்திரா.**

திரைப்பட நடிகர்கள் : திரு. **ஜெய்கணேஷ்,**
திரு. **ராமாராவ்.**

தீர்மானங்கள் : பிற்பகல் 4 மணியளவில்

நன்றி நவிலல் :

நாட்டுப்பண் :

குறிப்பு :— நாள் ஒன்றுக்கு உணவுக் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ. 3/-
டிக்கெட் மாநாட்டு அலுவலகத்தில் கிடைக்கும்.

தென்னிந்திய செங்குந்தர் சமூக, கைத்தறி, மாதர்
13-வது மாநில மாநாடு, ஈரோடு.

சமூக மாநாட்டு வரவேற்புக் குழு

தலைவர் :

திரு. **M. P. நாச்சிமுத்து முதலியார்** B. A., B. L.,
அவர்கள்.

❊

பொதுச் செயலாளர் :

திரு **E. M. பாலசுப்பிரமணியம்** அவர்கள்

❊

துணைச் செயலாளர் :

திரு **த. விசுவநாதன்** அவர்கள்

கோவை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் 101 பொதுக் குழு உறுப்பினர்களும், ரூ. 500க்கு மேற்பட்டு நன்கொடை தந்தவர்களும் வரவேற்புக்குழு உறுப்பினர்கள் ஆவார்கள். பெயர்ப் பட்டியல் அனுபந்தமாக வெளியிடப்பட்டுள்ளது.

தென்னிந்திய செங்குந்தர் சமூக, கைத்தறி, மாதர் 13-வது மாநில மாநாடு, ஈரோடு.

நிதி வசூல் குழு

A. முனியப்ப முதலியார்

M. ராமசாமி

V. V. பெரியசாமி

P. R. வெங்கடாசலம்

K. S. தர்மலிங்கம்

A. தங்கவேலு

G. திருவேங்கடம்

உணவுக் குழு

K. M. சென்னியப்பன்

P. ராமசாமி

P. வெங்கடாசலம்

V N. பாலு

V. K. பெரியண்ண முதலியார்

A பரமசிவம்

தென்னிந்திய செங்குந்த சமூக, மாதர், கைத்தறி

13-வது மாநில மாநாடு, ஈரோடு.

சிறப்பு மலர்.

மலர் வெளியீட்டுக் குழுவினர்

ந. சண்முகானந்தன்

நா. ஆறுமுகம் M. A.,

தி. ஜெகதீசன்

தென்னிந்திய செங்குந்தர் சமூக, கைத்தறி மாதர்
13-வது மாநில மாநாடு, ஈரோடு.

கைத்தறி மாநாட்டு வரவேற்புக் குழு.

தலைவர் :	திரு. K. G. P. ஆறுமுக முதலியார்	அவர்கள்
செயலாளர்கள் :	திரு. K. P. இராமசாமி முதலியார்	,,
	திரு. J சுத்தானந்த முதலியார்	,,

கைத்தறிக் கண்காட்சிப் பொறுப்பாளர்.

திரு. K A. பழனியப்ப முதலியார் ,,

தொண்டர் படை.

தலைவர் :	திரு. A. பெரியசாமி B. Sc., B. A., B. T..	அவர்கள்
துணைத் தலைவர்கள் :	திரு. M. துரைசாமி B. A., B. T.,	,,
	திரு. V. பரமசிவம் B. Sc., B. T.,	,,
	திரு. P. அர்த்தநாரிசாமி B. Sc., B. T.,	,,
	திரு. M. M. ஜெயராமன் B. A. B., T.,	,,
செயலாளர் :	திரு. A. பாலதண்டபாணி M. A.,	,,
துணைச் செயலாளர்கள் :	திரு. A. R. பழனியப்பன்	,,
	திரு. P. M. சுப்பிரமணியம் P. E. T.	,,

மாதர் மாநாட்டு வரவேற்புக் குழு.

தலைவர் :	திருமதி செல்லம் சுந்தரம்	அவர்கள்
துணைத் தலைவர்கள் :	டாக்டர் ராஜலட்சுமி M. B. B. S.	,,
	திருமதி சீதாலட்சுமி அங்கமுத்து	,,
செயலாளர்கள் :	திருமதி A. நாகரத்தனம்	,
	திருமதி லோகசுந்தரி செல்லையா	,,
துணைச் செயலாளர்கள் :	திருமதி சந்திரா சோமசுந்தரம் B. Sc., B. Ed.	,,
	செல்வி B. கிருஷ்ணமாலா M. A.	,,

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவாழ்வும் தருமநெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலால் அபிராமி கடைக்கண்களே.

ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி



தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள்



பாரத நிதியமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள்

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள்



நடிகர் திலகம் பத்மஸ்ரீ சிவாஜிகணேசன் அவர்கள்
தியாகி குமரன் படத் திறப்பாளர்:



திரு. **கொண்டா லக்ஷ்மண் பாபுஜி** அவர்கள்
ஆந்திர மாநில முன்னாள் அமைச்சர்.
தென்னிந்திய செங்குந்தர் சமூக பதின்மூன்றுவது கைத்தறி
மாநாட்டுத் தலைவர்.

सत्यमेव जयते

Vice-President

INDIA

NEW DELHI

December 15, 1976.

I am glad to know that the South Indian Sengunthars Social, Women and Hand-loom Weavers' Conference will be held at Erode from the 25th December. I send my best wishes for the success of the Conference.

(Sd.) Jatti.

FINANCE MINISTER
INDIA.

सत्यमेव जयते

New Delhi - India
16th December, 1976.

·MESSAGE

Shri C. Subramaniam, Finance Minister is glad to know that the next conference of the South Indian Sengunthars Social Sangam is being held on the 25th and 26th of December, 1976 at Erode and that a souvenir is also being brought out to mark the occasion.

He is happy to send his best wishes for the success of its deliberations.

PRAGADA KOTAIAH
General Secretary,
Andhra Pradesh Congress Committee &
Member, All India Hand-loom Board.

NIDUBROLU,
16—12—1976.

MESSAGE

—

I am glad to learn, that South India Hand-loom Weavers Conference will be held at Erode on 25th and 26th of this month under the able and efficient guidance of our veteran co-operator and the foremost leader of our hand-loom weavers Sri M P. Nachimuthu, who has been my close associate during the last 3 decades.

I hope that this conference will find effective solutions for the pressing problems confronting the handloom industry and pave the way for the rapid economic prosperity of the handloom weavers, who are now backward in all respects.

Sd. Pragada Kotaiah.

Dr. T. V. Sivanandam,
M. B. B. S., F. I. C. S., F. C G. P.,
SURGEON,
Member, Medical Council of India.

R S. Puram,
COIMBATORE.

The South Indian Sengunthar social, women and Hand-loom weavers Conference is to be held at Erode on 25th and 26th December '76.

I whole heartedly wish Sri M. P. N. and the Conference a grand March and all success.

(Sd.) Sivanandam.

K. RAJARAM,
CHAIRMAN,
TAMIL NADU SLUM CLEARANCE BOARD,
MADRAS.

Dear friend,

Very glad to know that you are convening the 'Conference of Sengunthar's at Erode and our friends Thiru. G. Karuppiah Moopanar, Padmashri 'Shivaji' Ganesan and Thirumathi Sarojini Varadappan are participating in the Conference. Dr. Thiru. C. Subramaniam is going to inaugurate the Conference. I am also glad that Thiru Konda Lakshman Bapuji is presiding over the function.

I wish the Conference every success.

Yours sincerely,

K. Rajaram.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,

தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

அன்புடையீர்,

வணக்கம். பழம்பெருமையும், பண்பும், தமிழறிவும், தமிழ்ப் பற்றும், உயரொழுக்கமும் நிறைந்த செங்குந்தர் குலப் பெருமக்கள் மாநாடு கூட்டி; ஆக்கப் பணிகளில் ஈடுபடுவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். நாட்டு முன்னேற்றத்திற்கு ஒற்றுமையும் உயர் பண்புகளும் உறுதுணையாக அமையவேண்டும். அம்முறையில் நம் மாநாடு ஈரோட்டில் அமைவதாக.

13வது தென்னிந்திய செங்குந்தர் மாநில மாதர் கைத்தறி மாநாடு ஈரோட்டில் நடைபெறுவது வரலாற்றுப் பெருமைக்குரியதாகும் தனிப்பெரும் தலைவர் திரு. M. P. நாச்சிமுத்து அவர்களின் தொண்டு சிறப்பதாக.

அன்புடன்,

சி. பாலசுப்பிரமணியன்.

MESSAGE

அன்புடையீர்,

வணக்கம். இம்மாதம் இறுதி வாரத்தில் செங்குந்தர் மாநாடு ஈரோட்டில் நடைபெறுவதை அறிந்து மகிழ்கிறேன். நான் மாநாட்டில் கலந்து கொள்ள இயலாது. அதற்காக வருந்துகிறேன்.

மாநாடு மிகச் சிறப்பாய் நடைபெற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

மு.ரா. பெருமாள் முதலியார்.

V. Rathna Mudaliar, B. A., B. L.,
Chairman,
Madras Public Service Commission (Retd.)
Madras.

DECEMBER,
9—12—76.

தென்னிந்திய செங்குந்தர் மாநில சமூக, மாதர், கைத்தறி மாநாடு ஈரோட்டில் நடப்பதை அறிய நாம் பெருமிதப்படுகிறோம்.

கல்வியும், உள்ளமும் உயர, மனிதன் உயருகிறான். மனிதன் உயர உயரச் சமூகமும் நாடும் உயருகிறது. வாழ்க்கைச் சூழ்நிலையில், வாழ்க்கையின் சுவையை அறிந்து, குல மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதே மகாஜன சங்கத்தின் இலட்சியம். இந்த இலட்சியங்களை நமது சங்கங்கள் நிறைவேற்றி வருவது நம் அனைவருக்கும் அளவிலாப் பெருமை. தலைச்சங்கம் வளர்ந்து ஓங்கவும் மக்களுக்குத் தொண்டாற்றவும், மகாநாடு சிறப்புற நடைபெற வேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறேன்.

நமது குல மக்கள் பல்லாண்டு இனிது வாழ்க வாழ்க என்று இறைஞ்சுகிறேன்.

அன்பன்,

V. ரெத்தின முதலியார்,

A. V. Rm. V. Sankaranarayanan (alias Mani)

Managing Partnar :
THE GOMATHY MILLS (SPINNING)
VIRAVANALLUR-627426 (Tirunelveli Dt.)
TAMIL NADU.

"செங்குந்த மக்களின் நலங்கருதி கொண்டாடப் படும் 13-வது மாநாடு குறித்து பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

நமது குல மக்கள் மென்மேலும் முன்னேறவும், மாநாடு வெற்றிகரமாக இனிது நடந்தேறவும், அதன் சிறப்புமலர் எழில் பெறவும் எனது இதயங்கனிந்த வாழ்த்துக்களை நல்குகிறேன்.

A. V. Rm. V. சங்கரநாருயணன்"

தங்களன்புள்ள,

A. V. Rm. V. சங்கரநாருயணன்.

உ

முருகா.

செங்குந்தர் மாநில மாநாடு.

வாழ்த்துப்பா.

நேரிசை வெண்பா.

வாழிய செங்குந்தர் மாநில மாநாடு
ஏழிசைபோல் என்றும் இனிதோங்கி - காழியுறை
கந்தன் கருணையினுல் கைத்தறி சீர்பெற்றுச்
சந்ததமும் வாழி தழைத்து.

அன்பன்,

கிருபானந்தவாரி.

திரு. சு. இராமலிங்க முதலியார்,
தலைவர்.

தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கம்,
ஆக்கூர்.

அன்புடையீர்,

நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் 13-வது மாநில சமூக, மாதர், இளைஞர், கைத்தறி மகாநாடு ஈரோட்டில் நடக்க இருப்பதும் மகாநாடு சம்மந்தமாய்ச் சிறப்பு மலர் ஒன்று வெளியிட இருப்பதும் அறிந்து மனம் நெகிழ்ந்து வாழ்த்துகிறேன்.

நம்குல வள்ளல்களால் 1927–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பெற்ற இச்சங்கம் பல நெருக்கடிகளுக்கிடையில் தொடர்ந்து 49 ஆண்டு களாக நடந்து அதன் வாயிலாகச் செய்த தொண்டின் பயனாக, நம் குலத் தவர்களிடையே சற்று அயர்வு நீங்கிப்பல ஜில்லாக்களில் 12 மகாநாடுகள் நடந்து நாளது 1976 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக ஈரோட்டில் 13-வது மாநில மகாநாடு நடப்பது மிகவும் பயனுள்ள செயலே என்பதில் ஐயமில்லை.

நம் குல பெரியவர்கள், செல்வந்தர்கள், மாணவர்கள், மாதர்கள் படித்துப் பட்டம் பெற்றவர்கள், வியாபாரிகள், அரசியல் தலைவர்கள் முதலானவர்கள் உலகம் மிகவும் வேகமாக மாறிவருவதை அறிந்து இனியும் வாளாயிராமல் மற்ற சமூகத்தாருடன் கல்வி, கேள்வி, பொருளாதாரம் முதலிய துரைகளில் முன்னணியில் செல்ல இம்மகாநாடு வழி வகுக்குமென்று நம்புகிறேன்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் ஓங்கி வளரவும் வர வேற்பு குழுவின் பெரு முயற்சியால் இம்மகாநாடு தனிச் சிறப்புடன் நடக்கவும் எல்லாம் வல்ல நம் குலக் கடவுளாகிய ஸ்ரீ முருகப் பெருமானை வணங்கி எனது பாராட்டுதலையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு மகா நாட்டின் பயனாக உருவாகும் சிறப்பு மலர் தெய்வ மணம் தேசமணம் கமழச் சிறப்புடன் அமைந்து நம்மைச் சுபிட்சப் பாதையில் இட்டுச் செல்ல புத்துணர்ச்சியை ஊட்டுவதாக மலர வேண்டு மென்று எனது உளம் நிறைந்த நல் ஆசியையும் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

தங்கள்,

(ஒ-ம்) சு. இராமலிங்க முதலியார்.

திரு. ம. பொ. சிவஞானம்,
துணைத் தலைவர்,
தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

அன்புடையீர்,

வணக்கம். தென்னிந்திய செங்குந்தர் மாநில சமூக, மாதர் கைத்தறி மாநாடு டிசம்பர்த் திங்களில் ஈரோட்டில் நடைபெறவிருப்பது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். கைத்தறி நெசவாளர்களின் துயர் தீர்க்கும் பணிகளை மாநாடு மேற்கொள்ளும் என்று நம்புகிறேன். தங்கள் தலைமை அதற்கான வழிவகைகளைச் செய்யும் என்றும் கருது கின்றேன். பதின்மூன்றாவது தென்னிந்திய செங்குந்தர் மாநில சமூக மாதர், கைத்தறி மாநாடு எல்லாவகையிலும் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

அன்புள்ள,

(ஒ-ம்) ம. பொ. சிவஞானம்.

திரு. **சி. கே. குமாரசாமி,** எம். ஏ.,

பதிவாளர்,

சென்னைப் பல்கலைக் கழகம்,

சென்னை-600005.

அன்புடையீர்,

வரலாற்றுப் பெருமையும் தொன்மையும் மிக்க இனம் செங்குந்தர் இனமாகும். ஏழ்மை நிறைந்த வாழ்க்கையேயெனிலும் தூய்மையும், உழைப்பும் நிறைந்து திருமுருகப் பெருமான் வழிபற்றிச் சிவசிந்தனை யுடன் வாழ்ந்துவரும் செங்குந்தர் இனம் ஒன்றுபட்டு உயர்நிலை பெறத் தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம், சென்னையில் 29—4—1927ல் திருவாரூர் வள்ளல் திரு. என். சபாபதி முதலியார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரை அவ்வமைப்பு ஆற்றல் சான்ற தலைவர்கள் வழிகாட்டலிலும், உழைப்பு மிக்க, செயலாளர்களின் செயல்திறனிலும், தன்னலங்கருதாத தொண்டர்கள் உழைப்பிலும் உயர்ந்து சிறந்து வருகிறது. 1929–ஆம் ஆண்டில் ஈரோட்டில் முதல் மாநில மாநாடு நடைபெற்று, அதன் பின்னர்ப் பன்னிரண்டு மாநில மாநாடுகள் நடைபெற்று, வரும் டிசம்பர்த் திங்கள் 25, 26–ஆம் நாள்களில் பதின்மூன்றுவது மாநில மாநாடு ஈரோட்டில் நடைபெறவிருப்பதறிந்து ஈரோட்டுப் பகுதியினைத் தாயகமாகக் கொண்டுள்ள நான் பெரிதும் மகிழ்கிறேன். செங்குந்தர் சமூகம் கல்வி, பொருளாதார, சமூக உயர்வு பெற, இம் மாநாடு வழிகாணும் என்று நம்புகிறேன். தொண்டால் உயர்ந்த பெரியவர்கள் முன்னின்று நடத்தும் இம்மாநாடு முருகப் பெருமான் திருவருளால் மிகச் சிறப்பாக நடைபெறுவதாக என ' அவனருளாலே அவன்தாள் வணங்கி ' வாழ்த்துகிறேன்.

தங்களன்புள்ள,

(ஒ-ம்) சி. கே. குமாரசாமி

கா. அ. ஷண்முக முதலியார்,

செங்குந்தர் தெரு,
திருப்பத்தூர் (வ. ஆ.)

அன்புடையீர்,

வணக்கம். நம் மாநாடு காலநிலையால் அடிக்கடி நடைபெற முடியாமற் போனாலும், இப்போது ஈரோட்டில் நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். செங்குந்த மரபினர் நாட்டுப் பற்று மிக்கவர்கள். பழங்காலந் தொட்டுக் கோலேந்தி நாட்டைக் காப்பதிலும், நூலேந்தித் துணி நெய்து மக்களின் மானங்காப்பதிலும் ஈடுபட்டிருப்பவர்கள். நம் சமூக முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்ட குலப் பெருமக்களின் நினைவைப் போற்றி வணங்கவும், இனி, செய்யவேண்டிய கடமைகளை எண்ணித் துணியவும் மாநாடு வாய்ப்பாக அமையும்; இலைஞர்கள் புத்துணர்ச்சி பெற்று ஆக்க வழியில் ஈடுபடத் தூண்டும். செங்குந்தர் வாழ்வு தழைக்க வேண்டும். அதற்கான எல்லா முயற்சிகளையும் வரவேற்றுப் பாராட்டுகிறேன். அறிஞர்களும், வழிகாட்டிகளும் கலந்து கொள்ளும் இம்மாநாடு பயனுள்ளதாகச் சிறந்து அமையவும் மாநாட்டு மலர் நன்முறையில் மணம் பரப்பவும் திருவள்ளி மணாளன் திருவடிகளைப் போற்றி வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,

கா. அ. ஷண்முக முதலியார்.

R. கனகசபை,

12, கனகசபை நகர்,
சிதம்பரம்.

அன்புடையீர்,

சுமார் முப்பது ஆண்டுக் காலமாக நெசவாளர் சங்கங்களுக்கு உற்பத்திக்குக் கடனுதவி செய்யும் பொறுப்பில் இருந்தாலும் அவர்களுடைய உண்மையான நிலையைத் தமிழக அரசு அவர்களைப் பற்றி ஆராய உயர்திரு. K. சந்தானம் அவர்கள் தலைமையில் நியமித்த குழுவில் அங்கத்தினராக இருந்தபொழுது அறிய நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

நெசவாளர்களில் தொண்ணூறு சதவிகிதம் செங்குந்தர்கள் அதில் சுமார் பத்து அல்லது பதினைந்து சதவிகிதம் ஓரளவு திருப்திகரமான நிலையில் இருக்கின்றனர். மற்றவர்கள் மிக ஏழ்மையான நிலையில் இருப்பதைப் பல இடங்களில் நேரில் கண்டேன். சமுதாயத்தில் ஒரு கணிசமான பகுதி இந்நிலையில் இருப்பது நாட்டுக்கு மிகக் கெடுதி விளைக்கும்.

ஆகையால் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர புதிய முறைகளைக் கையாண்டு அவர்கள் அதிகமான ஊதியம் அடைய முயற்சிக்க வேண்டும். ஆலைகளுடன் போட்டி போட முடியாதாகையால் அவ்வாலைகளால் தயாரிக்க முடியாத ரகங்களை உள்நாட்டு உபயோகத்துக்கும், வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் ஏற்ற முறையில் அதிகவேகமாகவும் உற்பத்தி செய்ய அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

நமது உடலில் ஓர் உறுப்புக் கெடுமானால் எப்படி உயிருக்கே அபாயம் நேரிடுமோ, அப்படியே ஒரு பெரும் அளவுள்ள மக்கள் தொகை பின்தங்கி விடுமானால் எல்லோருக்கும் கெடுதியாக முடியும். ஆகையால் அந்தச் சமூகம் முன்னேற வேண்டியது அரசின் கடமை மட்டுமல்லாமல் மற்றைய சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குடிமகனுடைய கடமையுமாகும். இதை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்று அனைத்துச் சமூகத்தினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

R. கனகசபை.

M. Bhaktavatsalam.

15, Warren Road,
MYLAPORE,
MADRAS-600 004.

My dear Nachimuthu,

I am glad to hear from you about the Conference that are being held on 25th December 1976. I offer to you and your colleagues my warmest felicitations and best wishes. I have no doubt that the Souvenir that will be issued will be quite attractive and educative.

With kind regards.

Yours sincerely,

M. Bhaktavatsalam.

T. M. Narayanaswamy Pillai,
M. A., B. L.,

B-27, 11th Cross,
THILLAINAGAR,
TIRUCHI - 620018.

MESSAGE

My dear Nachimuthu,

I wish the conference of the Sengunthar Community to be held at Erode on the 25 and 26 of December 1976, every success. As you point out, the Sengunthar Community is an important branch of our society; since it is backward, it has to be helped in everyway—socially, educationally and economically. Their improvement will conduce to the improvement of the nation as a whole. It is not a service to a community alone, but a SERVICE TO THE NATION.

Once again I wish the conference every SUCCESS.

Yours Sincerely,
(Sd.) T. M. Narayanaswamy Pillai.



செங்குந்தர் குலத் திலகம் 'வண்ணக் களஞ்சியம்'
காஞ்சி நாகலிங்க முனிவர்

உயர்திரு. **V. V. C. R. கந்தப்ப முதலியார்**

முதல் செங்குந்தர் வர்த்தக மாநாட்டு
வரவேற்புக்குழுத் தலைவர்

சைவப் பெருவள்ளல்
உயர்திரு. **V. V. C. R. முருகேச முதலியார்**

மலர்ச் சோலையின்
உள்ளே...

சூடிக் கொடுத்த
மலர்க் கரங்களின்
தேடிக் கொடுத்த
நறுமலர்கள்.

செங்குந்தர் கல்வி வளர்ச்சி

சி. கே. குமாரசாமி, எம். ஏ.,
பதிவாளர் சென்னைப் பல்கலைக்கழகம்.

'கல்வி சிறந்த தமிழ் நாடு' என்று மகாகவி சுப்ரமணிய பாரதியார் பாடினர். தொன்னெடுங்காலமாகக் கல்வியில் தமிழ்நாடு புகழ் பூத்து நிற்கின்ற காரணத்தாலேயே பாரதி இவ்வாறு பாடினர். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதும் இந்நாட்டு மூதுரை. தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றிய திருவள்ளுவரும்,

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்' (திருக்குறள் 393)

என்று கல்வியின் இன்றியமையாமையினைச் சுட்டினர். ஒரு பிறவியில் ஒருவன் படித்த கல்வி அவன் தன் ஏழு பிறவிக்கும் துணை நிற்பதாகும் என்ற பொருளில்

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து' (திருக்குறள் 398)

என்று குறிப்பிட்டுள்ளார். கல்வியினை ஐயந்திரிபறக் கற்க வேண்டும் என்றும், பின்னர்க் கற்ற வழியில் நிற்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' (திருக்குறள் 391)

கல்வி கற்க வேண்டிய பருவம் இளமைப் பருவமே என்பதனையும்' இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' ,என்று நம் முன்னோர் மொழிந்தனர்.

'எக்குடியிற் பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர்'

என்ற தொடரும்,

'களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத் தோராயினும் கற்றுணர்ந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்'

என்ற நாலடியார்ச் செய்யுளும் கல்வியின் சிறப்பினை — கற்றவர் பெறும் மதிப்பினைப் புலப்படுத்துவனவாகும்.

தமிழ்நாட்டில் செங்குந்தர் எனும் சீரிய இனத்தார் தொன்று தொட்டே வாழ்ந்து வருகின்றனர். குந்தம் என்பது வேற்படை. செங்குந்த மரபினர் வீரவாகுதேவர் முதலிய முருகக் கடவுளின் வழித்துணைவர்கள் ஒன்பதின்மர் வழித் தோன்றினவர் என்று கூறுவர். நல்ல உயர்ந்த குறிக்கோளையும் ஒழுக்கத்தையும் கைகொள்பவர்களாதலின் 'கைக்கோளர்' என்றும் வழங்கப் பெற்றனர். இம் மரபினரான உப சுப்பிரமணிய வமிசத்தினர் என்று கூறும் வழக்கமும் உள்ளது. காலஞ் சென்ற அறிஞர் டி. வி. சேஷகிரி ராவ் என்பார், செங்குந்தக் குடியினர் சொல்வளமும் செல்வாக்கு வளமும் சான்றவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்மரபினர் தொன்றுதொட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்மைக்கு அடுத்த பெருந்தொழில் இதுவேயாகும். 'செய்யுந் தொழிலில் நெய்யுந் தொழிலுக்கு நிகர் இல்லை நேர்' என்பர். ஆயினும் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வயிற்றைக் கழுவ வருவாய் தருகிறதேயன்றி வளம் பெற்றுச் செல்வ வாழ்வு வாழ வகை செய்யவில்லையெனலாம். நெசவுத் தொழிலில் ஈடுபடுவோர் தம் குடும்ப உறுப்பினர் அனைவரையும் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. மனைவியும் மக்களும் துணை செய்தாலன்றி நெய்யுந் தொழிலைச் செய்யவியலாது என்பது நெசவாளியின் சூழ்நிலையாகும். எனவே முன்னர் நெசவாளி தன் குழந்தைகளைப் படிக்க வைக்காமல் சிறு வருவாயினையும் பெரிதாக எண்ணித் தன் தொழிலில் ஈடுபடுத்தினர். எனவே செங்குந்தரின் கல்விப் பரப்பு விரிவடையாமல் இருந்தது.

தற்போது செங்குந்தர் சமுதாயத்தில் ஒரு புதிய மறுமலர்ச்சி தோன்றியுள்ளது. தங்கள் வாழ்க்கை வசதியும், பொருளாதார நிலைமையும் எப்படியிருந்த போதிலும் எப்பாடுபட்டேனும் தம் மக்களைப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆர்வம் செங்குந்தர் குலப் பெரியவர்கள்பால் ஏற்பட்டுள்ளது. தாங்கள் படிக்க வாய்ப்பில்லாமற் போய் விட்ட அவல நிலையை எண்ணித் தம் சந்ததியினராவது நான்கு எழுத்து கற்றுக் கொண்டு ஏதேனும் உத்தியோகத்திற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று உண்மையாக—உறுதியாக எண்ணுகிறார்கள். இதுதான் இன்று செங்குந்தர் இனத்தில் ஏற்பட்டுள்ள ஒரு திருப்பம் – மறுமலர்ச்சி எனலாம்.

இந்த நிலையில் கல்வித்துறையில் நேரடியாகத் தொடர்புடையவன் என்ற காரணத்தாலும், அத்துறையில் அதிக அக்கறையும் ஆர்வமும் துடிப்பும் தொண்டும் கொண்டவன் என்ற காரணத்தாலும் நான் சில செய்திகளை இங்குக் குறிக்க விரும்புகிறேன். பொதுவாக இப்போது இவ்வினத்துப் பெற்றோர்கள் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி வசதியளிக்க வேண்டுமென்பதிலே மாறுபட்ட கருத்துடையவர்கள் எவரும் இலர். ஆனல் நடைமுறையில் அக்கல்வி வசதியினை - வாய்ப்பினைத் தங்கள் பிள்ளைகளுக்கு வழங்கும் நிலையில்தான் நான் அவர்களிடையே **மூவகைப் போக்கினரைக்** காண்கிறேன்.

ஒரு வகையினர் மேம்பட்ட வாழ்க்கை வசதியுடையவர்கள். இவர்கள் தங்கள் பிள்ளைகள் படிப்பிற்குத் தொடக்கத்திலிருந்தே திட்டம் தீட்டி விடுகிறார்கள். இவர்கள் தங்கள் பிள்ளைகள் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் அக்கறை எடுத்துக் கொள்கிறார்கள். நாள்தோறும் அவர்கள் படிப்பு எவ்வாறு முன்னேறிச் செல்கிறது என்று கண்காணிக்கிறார்கள். நல்ல பள்ளியிலும் கல்லூரியிலும் தங்கள் பிள்ளைகளுக்கு இடந்தேடி, வேண்டுமானால் சிறந்த தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களிடம் தனிப் போதனைக்கு (Special tuition) ஏற்பாடும் செய்கிறார்கள். பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களிடம் அவ்வப்போது சென்று அவர்களிடம் தங்கள் பிள்ளைகளின் படிப்பு முன்னேற்றம் குறித்து அறிந்து வருகின்றனர். சுருங்கச் சொன்னால் தங்கள் பிள்ளைகளின் கல்வியைப் பொறுத்தவரையில் அக்கல்வி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரப் பல்லாற்றானும் துணை நிற்கின்றார்கள். இவ்வகைப் பெற்றோர் மிகச் சிறுபான்மையினரே.

இரண்டாவது நிலையினர் தம் பிள்ளைகளைப் படிக்க வைக்கவே செய்கின்றனர். ஆனால் தங்கள் வாழ்க்கை நெருக்கடியினால், அலுவலகப் பணி காரணமாகத் தங்கள் பிள்ளைகளின் கல்வியினைக் கவனிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அக்கறையும் நெஞ்சில் நிறைய இருந்தாலும் அவர்களால் சரிவரக் கவனிக்க முடியவில்லை. பிள்ளைக்குரிய ஆசிரியர்களை அண்டிப் பிள்ளைகளின் கல்விநிலை குறித்து உசாவியறிய வாய்ப்பும் நேரமும் இன்றிக் கலங்குகின்றனர். பிள்ளைகளின் கல்விக்குச் சற்றுக் கூடுதலாகச் செலவிடலாம் என்று எண்ணினாலுங் கூட அவர்களுடைய பொருளாதார நிலை அதற்கு இடந்தருவதில்லை. ஆனால் பொறுப்புணர்ந்த பொறுப்புடைய பெற்றோர்களின் கீழ்க் கல்வி கற்கும் பிள்ளைகளும் பொறுப்புணர்ந்து தங்கள் நிலையுணர்ந்து கல்வி கற்பதில் கருத்தூன்றி நிற்கிறார்கள். அவர்களுக்கே ஒரு வேகமும் அக்கறையும் ஏற்பட்டு விடுகின்றன. அதனால் அவர்களுடைய கல்வி முன்னேற்றம் பிறர் பாராட்டும்படி அமைகிறது. பள்ளிக்குள் காலடி எடுத்து வைக்காத பெற்றோர் பலரின் பிள்ளைகள் படிப்பில் மிகவுயர்ந்த நிலைக்கு வந்து விடுவதனைக் காணும் பொழுது அவர்களுக்குப் பின்னணியாகப் பெற்றோர்களின் ஊக்கம் இருக்கவேண்டும் என்பதனையறிய வேண்டும். கிராமப் புறங்களில் இருக்கும் பெற்றோர் பலர், தாங்கள் எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகளாக இருந்தாலும் தங்கள் பிள்ளைகள் கல்விக்கடலின் பரப்பையும் ஆழத்தையும் காணவேண்டுமென்று எண்ணி அதற்குரிய வழிவகைகளைக் கண்டு தங்கள் பிள்ளைகளை உருவாக்குகிறார்கள்.

மூன்றாவது ஒருவகையினர் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தம் பிள்ளைகள் படித்துவர வேண்டும் என்ற ஆசை நெஞ்சில் உண்டு. ஆனால் அதற்குரிய செயலில் இறங்குவதே இல்லை. மிகவும் மெத்தனமாகவே இவர்கள் செயல்படுகிறார்கள். அவர்கள் தம் ஏழ்மையும் ஒருகாரணமேயாம்- தங்கள் பிள்ளைகள் எவ்வாறு படிக்கிறார்கள்? அவர்கள் படிப்பு முன்னேற்றத்திற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் இவர்கள் எண்ணிப்பார்ப்பதே இல்லை. 'சுடர் விளக்காயினும் ஒரு தூண்டு கோல் வேண்டும்' என்னும் உண்மையினை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். மக்களின் கல்விப் பயிருக்கு உரமூட்ட இவர்கள் தவறி விடுகிறார்கள். இதனால் நன்கு செழித்து வளர வேண்டிய கல்விப் பயிர் முளையிலேயே வாடிவிடுவதனைக் காண்கிறோம். நிலத்திற்கு அடிக்கடி சென்று பயிரைப் பராமறித்து வராத உழவன் நல்ல விளைச்சலை ஒரு நாளும் காண்பதில்லை. அதுபோலவே பிள்ளைகளின் படிப்பில் அக்கறை கொண்டு

அதற்கான வழிவகைகளைக் காணாத பெற்றோர்கள் படிக்காமல் ஊர் சுற்றும் பிள்ளைகளை உருவாக்குகிறார்கள். எனவே மூன்றாம் வகைப் போக்கினர் நெஞ்சில் வைத்த ஆர்வத்தோடு நின்று விடாமல் செயலிலும் தம் ஆர்வத்தையும் அக்கறையையும் வெளிப்படுத்த வேண்டும்.

இம்முறையில் இன்று செங்குந்தர் கல்வி வளர்ச்சி அமைய வேண்டும். 'வீடு திருந்தினால் நாடு திருந்தும் என்பர். 'நாடெல்லாம் வாழக் கேடொன்றும் இல்லை' என்றும் கூறுவர். இம்முறையில் செங்குந்தர் குலப்பெருமக்கள் தங்கள் மக்கட் செல்வங்களில் மாண்புறு கல்வியில் கருத்தைச் செலுத்தி, வெந்தணலால் வேகாத, வேந்தரால் அபகரிக்க முடியாத, கள்வரால் கொள்ளை கொள்ள முடியாத, ஈதலால் குறையாத, செல்வமாக விளங்கும் கல்விச் செல்வத்தினை வாரி வழங்க வேண்டும். ''பிச்சை புகினும் கற்கை நன்றே'' என்றபடி எப்பாடுபட்டேனும் கல்வி என்னும் இலக்கினை–இலட்சியத்தினை அடைய வேண்டும் என்று பாடுபட வேண்டும்.

''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்'' *(திருக்குறள் 67)*

என்றபடி, தந்தையின் கடமை, மக்களைப் பாங்குறப் படிக்க வைப்பதாகும். ''பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்'' என்று பாடிய பாரதியின் கனவு நனவாகவேண்டும். கல்விச் சிறப்பிற்கும் கூரிய மதிக்கும் கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் காலத்திலிருந்தே பெயரும் புகழும் பெற்ற செங்குந்தர் இனம் வழிவழிப் பெருமையை மேலும் வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

With the best compliments from :

***N. Manokaran*, B. Com,,**

DHARAPURAM.

ரதிகளும் தழுவிடும் அதிசய ஆடைகள்!

கவிஞர். வல்லம் வேங்கடபதி

கைத்தறி வாழ்கஅவர் கைத்திறன் வெல்க
பொய்தறி யாதிரு பொன்வள நாட்டில்
அற்றைநாள் பெருமை அணியணி யாகும்
இற்றைநாள் அதுவே தனிஅணி யாகுக!

புகையினும் மெல்லிய பூந்துகில் நெய்து
வகைவகை யாக வழங்கிநம் முன்னோர்
தம்புகழ் யாங்கணும் தங்கிடச் செய்தனர்
அம்புகழ் அழகெலாம் அதில்மயக் குற்றது!

நிலவினும் வெள்ளிய மெல்லிய ஆடைகள்
குலவு மாதர்தம் கோபுர மேனியில்
கனவுகள் வளர்க்கும் காவிய மாயின
மனத்திடை ஊறும் மலைத்தேன் ஆயின!
அன்னிய நாட்டின் அழகிய ரதிகளும்
மின்னிய படிநம் பொன்னுடை தழுவினர்!

ஆண்டவன் நம்மை ஆடையில் லாமல்
ஆண்டியாய் உலகில் அனுப்பிவிட் டானென
ஈண்டிவண் 'நெய்வோன்' இதயம் புழுங்கி
காண்டகு ஆடைகள் கைபுனைந் தியற்றி
அணிந்திடு வீர்என் அன்புடை மக்காள்
அணிந்திடு வீரென ஆசையோ டளித்தனன்!
நன்றி நவின்றிட நாவா யிரங்கள்
ஒன்றாய்ப் பெறினும் ஒ! அவை போதா!

பாதி மனிதனைப் பரமன் படைத்தான்
மீதி மனிதனை உடையால் நிறைத்தான்!
உடலால் பாதி உடையால் பாதி
அட! இம் மனிதர் அடைந்தார் சோதி!
உடலை உயிரை 'ஒருவன்' அளித்தான்
உடையை அவன்தன் 'உறவோன்' கொடுத்தான்!

அவனும் தெய்வம் ஆமெனச் சொன்னால்
எவரே இங்கிதை எதிர்த்து ரைப்பாரே

அயல்நாட் டினர்நம் அழகிய ஆடையில்
மயல்கொண் டாரம் மகிமையென் என்பேன் !
கப்பல் கப்பலாய் கைத்தறித் துணிகள்
தப்பா திறக்கிட தங்கடற் கரையில்
ஒப்புதல் அளித்தே ஒருபெரும் வேட்கையில்
எப்போ தென்றவர் எதிர்பார்த் திருக்கும்
நல்லதோர் காலம் நணுகிற் றதனால்
நல்லதே விளையும் நாடெலாம் மகிழும் !
நானும் நீயுமோர் ஒருமனப் பட்டே
தேனொடு பாலாம் கைத்தறி என்றே
போற்றி வளர்த்தால் பொன்பொருள் குவியும்
ஏற்றம் கிடைக்கும் ! ஏழ்மை
கூற்று வாய்ப்பட்டுக் குலைந்தொழி யும்மே !

★★★

வளர்க கைத்தறி !   வாழ்க நெசவாளர் !!

அலவாய்ப்பட்டி வள்ளலார்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட், No. S. 1282.

அலவாய்ப்பட்டி P. O. (Via) வெண்ணந்தூர் சேலம் Dt.

எங்கள் சங்கத்தில் 20ம் நெ. 4x6, 4x7 துண்டு தான் வேஷ்டி & காடா பீஸ் ரகங்களும், 60ம் நெம்பர் 2x8 சின்னபாவஞ்சு, பெரியபாவஞ்சு, சின்ன பேட்டு, பெரிய பேட்டு, 1x2 துண்டு மெட்டிகளும், 30, 40-ம் நெ. கொத்துகளும் 2x7, 2x7½ 2x8, 4x8, 2x9 2x10 வேஷ்டி ரகங்களும் 60, 80, 100ம் நெம்பர், 1x4 ஸ்பெஷல் பாவஞ்சு பேட்டு வேஷ்டி ரகங்களும் 40, 60-ம் நெம்பரில் 1x6, 1x7, 1x9 சேலை ரகங்களும் குறைந்த விலையில் சிறந்த முறையில் தயார் செய்கிறோம்.

பெ. ரங்கசாமி முதலியார், உபதலைவர்.

A. வருதராஜு முதலியார், தலைவர்.

நிர்வாகஸ்தர்கள் :

திரு. சு. நாச்சிமுத்து முதலியார்,
திரு. S. அங்கப்ப முதலியார்,
திரு. P. ரங்கசாமி முதலியார்,
திரு. சு. பெருமாள் முதலியார்.

தாரக மந்திரம்

திருமதி A. நாகரத்னம், ஈரோடு

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்."
—குறள்.

கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரால் வியாபாரியாக நுழைந்த ஆங்கிலேயன் சுகபோகப் பாளையக்காரர்களுக்குக் கடன் தந்து, வரிவாங்கும் உரிமை பெற்றான். பாளையக்காரர்களோ 'தங்கள் சித்தம் என் பாக்கியம்' என்று கைகட்டி வாய்பொத்திச் சேவகம் செய்த துரோகத்தனத்தைப் பயன்படுத்திக்கொண்டு பாரதமாதாவின் கைகளிலே விலங்கிட்டு அடிமைச் சிறையிலே தள்ளிவிட்ட அலங்கோலத்தைக் காணச் சகியாத பாரதமாதாவின் முப்பது கோடிப் புதல்வர்களும் 'அன்னையின் விலங்கை யொடிப்போம்' என்று நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்டு தோள் தட்டி ஆர்த்தெழுந்து போர்ப்பரணி பாடிவிட்ட நேரமது. அங்கிலையில் படை நடுங்கும் பரங்கியரின் ஆதிக்க ஏகாதிபத்தியக் கொடுஞ் சிறையினுள்ளே பதறியழும் நாதியற்ற பாரதத்தோரைத் 'திடம்கொள்க திண்ணம் நம் விடுதலை' எனத் தீர்ந்து கூறி அடிமையிருளகற்றி ஆண்மைத்தளையீந்து அறப் போர்க்களத்தே தளபதியாய்—சுதந்தர ஒளி விளக்காய் அறன் வலி கண்டவர் காந்தியார்.

'சுதந்திரம் எனது பிறப்புரிமை: அதை நான் அடைந்தே தீருவேன்' என்ற காந்தியின் தலையான கொள்கையினை அடுத்து, அவரது **தாரகமந்திரமாக** வாழ்க்கையின் நிலையானதொரு பகுதியாக—அக்கொள்கையின் வலுவானதொரு கூறாக—வரலாற்றின் முறையானதொரு பக்கமாகச் சிறப்பானதொரு இடத்தினைத் 'தீண்டாமை ஒழிப்புப்' பெற்றிருந்தது என்பது எவராலும் மறுக்க முடியாத—மறக்க முடியாத ஓர் உண்மையாகும். தீண்டாமை ஒழிப்பில் அவர் கொண்டிருந்த ஆர்வமும்; அக்கரையும், அவர் நாட்டிற்காக ஆற்றிய தொண்டு, அதனால் விளைந்த தியாக உணர்வு. பாரதத் தாயின் மீது கொண்டிருந்த தீராத பற்று, மாறாத பாசம் இவை எவற்றிற்கும் சற்றேனும் தாழ்ந்ததல்ல—குறைந்ததல்ல. அவர் பேசுகின்ற பேச்சி

லெல்லாம்—விடுகின்ற மூச்சிலெல்லாம் — ஆற்றிய தொண்டிலெல்லாம் சுதந்திரம் என்ற ஒலி எவ்வாறு பிறந்திட்டதோ, அதே நிலையைத் தீண்டாமை ஒழிப்பும் பெற்றிருந்தது என்பதுமட்டுமல்ல, அது அவர்தம் உயிர் மூச்சாக விளங்கியது என்பது சிறப்பானதொரு அம்சமாகும்.

ஓ! தீண்டாமை எவ்வளவு கொடியது! அதனை ஒழிக்கக் காந்தி எடுத்துக் கோண்ட முயற்சிகளும், அதற்காக அவர் கொண்டிருந்த மனவுறுதியும், அதன் விளைவாக அவர் நடத்திட்டப் போராட்டங்களும் எழுத்திலடங்கா நிலைமைத்தாகும். ஆ! தீண்டாமையை ஒழிக்க நினைத்த காந்தியின் பண்புதான் எவ்வளவு உயர்வானது.

“தீண்டாமை இந்து சமயத்தின் ஒரு பகுதியானல் அது அழுகிப் போனதொரு பகுதியாகவே இருத்தல் வேண்டும், என்பதனை அழுத்தம் திருத்தமாக கூறியவர் காங்யதிரர். பாரதத் தாயின் முப்பது கோடிப் புதல்வர்களிலே ஒரு சாரரை மட்டும் தீண்டாமை — தீண்டத் தகாதவர் என்ற நச்சுக் கொள்கையின் பெயரால் ஊரின் ஒருபுறத்தே—சேரியில் ஒதுக்கிவைப்பது பாவம். அத்திராப்பாவத்திற்குரிய தண்டனை தான் கோடிக்கால் பூதமாக உருவெடுத்து இதற்கு முன் காணுத நிலையில் ஆயிரக்கணக்கான இந்தியர்களின் உயிரைக் குடித்துச் சுவைபார்த்தது என்பது இதயத்தின் குருதி பெயர்த்துப் பொறித்திட்டக் கருத்துக்களாகும். தாழ்த்தப்பட்டவர்களை ‘பள்ளர்’ என்றோ ‘பறையர்’ என்றோ அவர் கூறியதில்லை. அவர்களை ஆண்டவனின் பெயரால்—அந்தக் காக்கும் கடவுளான திருமாலின் பெயரால்—அரியின் பெயரால்—‘அரிசனங்கள்’ என்றும். தரித்திர நாராயணர்கள்’ என்றும் கூறுவார். தீண்டாமைக் கொடுமை இந்து சமுதாயத்தின் புரையோடிய புண். அப்புண் ஆறும் வரை இந்து சமுதாயத்திற்கு விடுதலை இல்லை. சமுதாய விடுதலை இல்லாவிட்டால் நாட்டு விடுதலையும் கிட்டாது என்பது அவரது உறுதியான—உண்மையான அதேசமயம் தீர்க்கமானதொரு கணிப்பாகும். ‘அரிசன நலன் வேண்டுமா? சுயராஜ்ஜியம் வேண்டுமா?’ என்று என்னைக் கேட்டால் என் மனம் முன்னதாக அரிசன நலனே வேண்டும் என்று கூறும் என்ருர். தீண்டாமையை இந்து சமயத்தில் படிந்துள்ள கறையாகக் கருதினர். சமயம் நேரும்போதெல்லாம் அக்கறையை அகற்ற அவர் அரும் பாடுபட்டார்.

ஒருசமயம் சிற்றூர் ஒன்றில் காந்தியார் பேசச் சென்ருர். அங்குக் கூடியிருந்த கூட்டத்தினருக்கு ஓர்புறமாக சேரிவாழ் மக்களை நிர்வாகிகள் ஒதுக்கி வைத்துக் காந்தியாரைக் காணவும், அவர்தம் கருத்துக்களைக் கேட்கவும் ஏற்பாடு செய்திருந்தனர். காந்தியார் கூட்டத்திற்கு வந்ததும் ஒரு சிலர் மட்டும் ஒதுங்கி நிற்பதற்குக் காரணம் கேட்டார். நிர்வாகிகள், அவர்கள் சேரிவாழ் மக்கள்—தீண்டத் தகாதவர்கள் என்று கூறினர். அதனைக்கேட்ட காந்தியார் அமைதியாக மேடையை விட்டிறங்கிச் சேரி வாழ் மக்கள் மத்தியில் சென்றமர்ந்து பேசினர். சேரிவாழ் மக்களின் கரையிலா மகிழ்ச்சி விண்ணதிரும் வாழ்த்தொலி மூலம் வெளியாயிற்று.

வெள்ளையர்கள் அரிசனங்களுக்கென்று தனித் தொகுதிகளை அமைத்த போது அதனை எதிர்த்தும், திருவாங்கூர் நாட்டின் 'வைக்கம்' என்ற ஊரில் அரிசனங்களைக் கோயிலுக்குள் விடவேண்டும் என்பதற்காகவும், போராட்டங்கள் நடத்தியவர் காந்தியார். அதுமட்டுமல்ல 'தீண்டாமை இந்து சமயத்தின் உயிர்நாடியென உறுதிப்படுத்தப்படுமானால் இந்து சமயத்திற்கு நேர்மாறாகக் கிளர்ச்சி செய்யப் புறப்படுவேன்' என்று போர்க்கொடி உயர்த்தியவர் காந்தியார்.

எனவே எல்லோரும் இன்புற்றிருக்கச் சமுதாய வழி காண்பதற்காக சர்வபரித்தியாகம் செய்த காந்தியாரின் அலங்காரம் குலுங்கினால் மட்டும் போதாது. அவரது நினைவான கனவுகள் நனவாகவேண்டுமானால்—அவர்தம் ஆசைகள் தேசமெங்கும் செயல்படவேண்டுமானால் தீண்டாமை ஒழிப்பு ஏட்டில் எழுத்தளவில் மட்டும் இருந்தால் பயனில்லை. நாட்டினில் செயலிலும், நிலை நாட்டப் பெறவேண்டும். காந்தீயம் பேசிக் கடைத்தரச் செயல்களுக்குக் கதவு திறந்துவிடும் இழிநிலைகள் நீங்கினால் தான், பொக்கை வாய்ப் புன்னகையால் புவியை ஆண்டுத் தலைவரினும்—தக்கோனாய் அனைவரினும் மிக்கோனாய்த்—தாரணிமீது எக்காலும் புகழ் மணக்க—எண்டிசையும் பெயர் சிறக்க வாழ்ந்து—பொக்கெனவே புகையாகிப் போன அண்ணலின் ஆன்மா சாந்தியடையும்.

தென்னிந்திய செங்குந்தர் மாநாட்டிற்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்.

A. மகாலிங்க முதலியார்,

34, லீபஜார், சேலம்-636009.

பார்ட்னர்ஸ்:

M. விஸ்வநாதன்,
M. சிதம்பரநாதன் B. A.,
M. சியாமளநாதன் M. A.,
M. சத்தியநாதன், B. A.,

Tel : "ADHARAVU"

Phone : Offi : 2525
Resi : 8544

செங்குந்தர்கள் மாநில மாநாட்டிற்கு
எங்கள் உளம் கனிந்த
நல்வாழ்த்துக்கள் !

P. நடராஜ முதலியார் சன்ஸ்,

கமிஷன் மண்டி,

லீ பஜார் ● சேலம்-636 009.

N. ஜெகதீசன்,
K. சீனிவாசன்,
N. செல்வகுமார்.

Tel : "BRIGHT"

Phone : Offi : 3400
Resi : 8973
Resi K. S : 5947

The position of weavers in the Vijayanagar Empire....

VIJAYA RAMASAMY □ Bharathi Nagar □ New Delhi.

There is a common but mistaken notion that the weaving communities. though constituting one of the most important professional classes of any society, have always been poor. To this day the opinion regarding their poverty-stricken circumstances is expressed in the saying "தறிக்குழி அல்ல சாவுக்குழி". But such a generalisation would be entirely incorrect. The fortunes of the weavers of Tamil Nadu have passed through innumerable vicissitudes. Their status in society and economy at a particular point of time depended on the condition of the weaving industry. But the hide tide of their good fortune was under the Vijayanagar kings.

Causes for the Growing Importance of the Weaving Industry.

The Vijayanagar Empire ushered in certain important developments. The rulers gave great encouragement to temple building. Invariably these temples were also the focal points of growing urban centres. The presence of professional weavers in the temple premises was vital to the urbanisation process. Prior to this development weaving had always been a part-time industry which was combined with agriculture. But with growing urbanization, weaving became a full time profession.

The weavers also began to constitute the backbone of the commercial prosperity of the Vijayanagar Empire. This was due to the tremendous increase in the export of textiles during this period. The excellence of South Indian textiles and the demand for them in foreign markets was adequately testified to by the European travellers to Vijayanagar. Marco Polo calls them " the best and most delicate buckrams " and says " those of the highest price looked like the tissues of a spider's web ". There is no King nor Queen in the world but might be glad to wear them. Barbosa also comments on the great extent of the weaving and cloth trade on the Coromandel coast. Caesar Fredrick reports that the varieties of coloured cloth especially Calico produced on the Coromandel coast were shipped to Malacca from San. Thome. He also praises the fast colours used by the Indian weavers and says "The colours do not fade but become brighter with every wash ". Litschoten, the Dutch traveller comments of the situation in the 16th Century. " At Nagapatnam, San. Thome and Masulipatnam very fine varieties of cloth are woven. They have beautiful designs on them and are dyed in different colours ". The historian Moreland, writing in his book "India at the death of Akbar " says " The handloom cloth woven in

India was adequate for the consumption of its population. In this it faced no competition. But apart from this a considerable portion of Indian textiles was also exported abroad to Arabia, Burma and the islands beyond as well to countries along the African sea coast. "The growth of the export trade in textiles and the rapid urbanisation in the empire resulted in the weavers being assigned a leading place in society and economy.

The Guild Organisation of the Kaikhola Weavers and Their Role in Economic Protests

The weavers were organised in guilds. Because of the prestige and trustworthiness of the weavers it is said that these associations were sometimes used as banks. The people gave their money into their hands for safekeeping. Even kings are said to have entrusted their money to these guilds. The guild of the Kaikkola weavers was perfectly organised and empowered to deal with all problems faced by its members. The association was divided into 72 Nadus which were further classified into Kilai Nadus and 4 desai Nadus. The desai nadus were—(a) Sivapuram (Walajabad) East of Kanchipuram where Kamakshi Amman is said to have placed Nandi as a guard; (b) Thondipuram, where Thondai Vinayakar was stationed; (c) Virinjipuram to the West guarded by Subramanya and (d) Solingapuram to the South watched over by Bhirava. The Mahanadu was at Kanchipuram and the supreme head of the Kaikkolas was the Mahanattan. The guild had its own code and the weaver who violated the code was put out of his caste, association and Nadu. All disputes between Kaikkolas were settled by the various local associations and in special cases were taken up to the Mahanattan. Apart from settling the cases before their guild, the eminent Kaikkola Mudalis also acted as judges in cases concerning the temple. Thus one inscription [1] refers to a case of theft in the Thirukkazhankunram temple in the time of Bupathi Udaiyar in which Kaikkola Mudalis arbitrated.

The guild collectively made the payment of taxes on behalf of its members. Some of the taxes on the weavers were—Accutari, Paraitari, Salikattari. tari–Irai etc. A list provided from Tiruvaigavur in Tanjore district [2] gives the rate of taxation on weavers in the Vijayanagar period :

Kaikkola weaver with one working loom	:	4 params
Weaver with loom that does not work	:	2 params
Lace looms not in working order	:	1½ params.

The loom at Pulipparakoyil in Chingleput district was charged at the rate of 2 params [3], the loom at Valayur in the same district was charged at 3 params [4] and in Kunnathur at 4 params. In cases where taxation tended to be arbitrary and oppressive, there is ample evidence to show that the craft guilds were able to negotiate with the Government through the staging of protests and by collective bargaining. Thus an inscription of 1388 tells us that the Kaikkolas

desarted in a body " and without paying the dues to the temple, deserted the premises, and left it in ruins.[5] An inscription from South Arcot dating back to 1485[6] speaks of a "resettlement of the Kaikkolas... who had left the villaga unable to pay taxes". The weavers of the Vanevanmadur temple threatened to leave unless their dispute with the local merchants was satisfactorily settled?

In spite of the payment of heavy taxes, the weavers were very well off. A document relating to the 12th—13th Centuries (Madura District) speaks of the sale of land to Kaikkolas of the temple "[8]. An interesting inscription dated 1346[9] (Chingleput District) says that the owners of temple lands resigned their tenancy because of imposition of tax, and therefore, the temple authorities sold away the lands to some Kaikkola and Kaikkola Mudalis. This shows that the economic position of the weavers must have been considerably sound. In fact, Mr. Arokiaswami claimed that the term "Mudali" an honorary title given to the Kaikkolas is derived from mudal or welth.

Grants made by the Kaikkola Weavers

The weaver guilds as well as individual weavers were in such a sound economic position that they were able to make donations to temple and for charitable purposes. An inscription dated 1398 says that the Kaikkola Mudalis of one of the temples made a gift of all land in the hamlet to the temple.[10] There is also evidence that a gift was made by a section of the Kaikkolas of a share of their lands to another section for the services the latter had to render to the temple". Sometimes a fixed contribution was got from the weavers or they might agree to meet the cost of some of fering.[12]

The Privileges Enjoyed by the Weavers

The growing importance and prestige of the weavers in the economic sphere inevitably led to social enhancement. They were given the honorary title of "Mudaliar" meaning "The first in society". A member of privileges were given to them by the kings and they were exempted from many onerous tax burdens. One Mahamandaleswara Saluva Narasimhadeva remitted the taxes due from the Kaikkolas of Kunnatur.[13] The Kaikkolas of Chingleput were, as a special privilege exempt from a number of taxes.[14] The social privileges extended to the Kaikkolas in recognition of their contribution to society, included the right to use various royal insignia like leather musical instruments; a sword, the banner of garuda, golden musical instruments, golden fans, golden palanquin and the five musical instruments—Sringa, Tammata, Sankha, Zheri and Jayaghanta. They were further allowed to use sandlewood oil for their special rituals and permitted to cover their houses with plaster. An inscription[15] says that the Kaikkolas of Kanchi got the privilege of using Sangu and Dandu on all occasions. Later similar rights were extended to the weaver guilds of Virinchipuram. Brahmadesam and others.[16]

The Role of the Weavers in the Temple

The Kaikkolas and Kaikkola-Mudalis occupied a very special place in the temple.[17] The Kaikkola weavers had an important part to play in the annual festival at Tirupati. The Matangi Vesham was an important ceremony at which a Kaikkola worked himself into a state of divine intoxication and then a metal wire was passed through the middle of his tongue without causing any harm. In the Perantalu vesham, a Kaikkola dressed up like a female and rode around the town on a horse, distributing kumkum, saffron paste, and the flowers of the goddess to the inhabitants. At Kanchipuram the ratha festival in honour of the goddess Kali was arranged by the Kaikkolas and some of the car pullers had two cards drawn through their flesh, 12 inches apart. The Sur Samhara day was an important occasion for this weaver community referred to in the inscriptions as "Kaikkolas" but in contemporary literature as "Sengunthar", a name which would stem from the special incident of Sur-Samhara. On this day they dressed up as the traditional nine warriors led by Vir Bahu and re-enacted the scene of the destruction of the demon. At the srirangam temple during this period, the ritual of offering a coconut to the deity was done by the Kaikkolas.

Describing the exact position of the weavers in this period, Prof. Burtonsteir states[18], "The question is whether a powerful and populous part of Hindu society was to enjoy a ritual rank commensurate with its ranking on other aspects of South Indian life. For they appear to have exerted a profound influence upon Medieval society enjoying a rank and social power which was far grater than that accorded to them by the legal and social texts of the period...". Silurburg (Ed) Social Mobility in the Caste System of India—Article by **Burtonstein** and all the evidences given above go to prove that the weavers were indeed "Mudali" or the first in society and held a privileged position in the Vijayanagar Empire.

Conclusion

Two clear conclusions can be drawn from the mass of evidence that has been presented. First, that the weavers become vital to the economic prosperity of Vijayanagar and the pivotal point of the temple complex, the urban centres and the mainstay of Vijayanagar's commercial contacts with forein powers. Secondly, that the economic power of the weaver communities led to the assumption of special privileges in the temples and in society. Thus this study illustrates the co-relation that exists between economic power and social dominance. The weavers held a prestigious position in the society of the Vijayanagar period because they formed the backbone of the economy. With the establishment of the European companies the independence of the weavers was gradually corroded and they lost their pre-eminent position in the society.

1 185 of 1894
2 91 of 1915
3 231 of 1911 Rep. 1912
4 364 of 1908
5 No. 354 of 1909/10 P 112
6 No. 292. 1928/29 P 31
7 No. 218 P 20 1929/30
8 No. 237/1941/42 P 157
9 No. 57/1932/33 P 70
10 No. 3531 of 1911
11 248 of 1916 ARE, 1916 Pt. II Para 28
12 473 of 1921
13 No. 170 1932/33
14 422 of 1925. 162 of 1918

குறைந்த விலை! கெட்டிச் சாயம்!! நீடித்த உழைப்பு!!

கைத்தறி துணிகளையே வாங்குங்கள்.

போன்: 55.

அத்தனூர்ப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., S. 1253.

அத்தனூர்ப்பட்டி P. O ○ வாழப்பாடி Via. சேலம் Dt.

● கவர்ச்சியான ரகம் ● கண்ணைக் கவரும் நிறம்
● புதுமையான டிசைன் ● நம்பிக்கையான தயாரிப்பு
● நாணயமான விலை

இவை யாவும் ஒருங்கே இணைந்த ஸ்தாபனம்.

● உயர்ந்த தரமே எங்கள் இலட்சியம். ●

தலைவர்:
க. பெருமாள் முதலியார்.

வள்ளல் உயர்திரு. தீ. நா. சபாபதி முதலியார்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தை நிறுவியவர்



உயர்திரு. K. A. சண்முக முதலியார்
தலைவர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கம், சென்னை



உயர்திரு. **C. நடராஜ முதலியார்**, B. A., B. L.,
துணைத் தலைவர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

செங்குந்தர் ஏற்றிய தீபம்!

பேரூர்க் கல்வெட்டு

தகவல்: கல்வெட்டறிஞர் **செ. இராசு,** ஈரோடு.

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவணச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சொழதெவற்கு யாண்டு பதிநெழாவதின். எதிர் எதிர் ஆளுடையார் திருவாங்பட்டி உடையார் கொயி காணி உடைய. சிவப்பிராமானங் விக்கிரம சொழபட்டனும் இராசபட்டனும் சொமநாததெவனும் மருதவனப் பெருமாளும். இந்நால்வொம் பெருரிலிருக்கும் **கைக்கொளரில்** குலைய பொத்தியான. செல்வஞான சம்பந்தங் பக்கல் கொண்டற் அச்சு ஒந்றுக்கு நித்தம் அரை சந்தியாதீபம். கொயில் குடமுங் குச்சியுங் கெபண்டு கொயில் புகுவார் சந்திரா தித்தவற் செலுத்துவொமாக. கல்வெட்டி குடுத்தொம் இது மாகெசுரர் இரெட்சை.

★★★

ஆலயங்களுக்குத் திருவிளக்கு ஏற்றுவது தெய்வத் திருத்தொண்டுகளில் தலையாயது. அவ்விளக்குகள் சந்தியா தீபம், நந்தா தீபம் என்று பெயர்பெறும் அத் தீபத்திற்கு வேண்டும் நெய்க்காகச் 'சாவா மூவாப் பசு' போன்றவைகளைக் கொடுப்பர்.

மூலப் பொருளாக அதாவது முதல் வாடாக் கடமையாகப் (Fixed Deposit) பொன்கொடுத்து அதிலிருந்து வரும் வட்டியைக்கொண்டு விளக்கெரிப்பதும் உண்டு.

கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் பேரூர்ப்பட்டீச்சுரப் பெருமானுக்குச் சந்தியா தீபம் எரிக்க நினைக்கின்றுர். அங்கிருந்த குலையன் பொத்தியான செல்வன் ஞான சம்பந்தன் என்ற செங்குந்தர் குலச் செம்மல் அதற்காக கோயிற் காணியுடைய சிவபிராமணர் வசம் 'அச்சு' (பொற்காசு) ஒன்று கொடுத்தார்.

அவர்கொடுத்த பொற்காசினைப் பெற்றுச் சந்திர சூரியர் உள்ள வரை விளக்கெரிக்க ஒப்புக்கொண்டு நான்கு அந்தணர் எழுதிக்கொடுத்துள்ளனர். இதோ இச்செய்தி கூறும் பேரூர்க் கல்வெட்டினைக் காணுங்கள். தென்னிந்தியச் சாசனங்கள் தொகுதி–5 எண். 236 A R 560/1893)

செங்குந்தர் பேரரசு முறை

எழுபத்திரண்டு நாடுகள்

சிவபுரம் நாடு (கிழக்கு)

1. சிவபுரம்
2. மேலப்படப்பை, கீழப்படப்பை, ஆத்தஞ்சேரி
3. மானம்பதி, அகரம், மூணத்தொன்று, செம்பாக்கம்
4. முன்னூர், பரமேச்சுரமங்கலம்· மதுராந்தகம்
5. திண்டிவனம், சாரம்
6. அக்கரைப்பத்து, மைலம்
7. திருவக்கரை, ஒழுகரை, புதுச்சேரி, கதிர்காமம்
8. திரிபுவனம், நல்லாத்தூர் வளவனூர்
9. திருவதிகை, பாலூர்
10. இடையாற்றூர் திருவெண்ணெய்நல்லூர்
11. பனமலை, அனந்தபுரம்
12. வழுதலைப்பட்டு
13. மாப்பறை, ஆசூர்
14. பட்டினம், கருங்குழி
15. மன்னார்கோயில்
16. பாளையம்
17. குப்பாக்கம் திருக்கண்டேச்சுரம்
18. ஜம்பை, திருவரங்கம்

தொந்திபுரம் நாடு (தெற்கு)

1. தொந்திபுரம்
2. முருகமங்கலம்
3. திருவாமாத்தூர்
4. திருவண்ணாமலை
5. வாத்தூர், செங்குறிச்சி
6. கச்சித்திடல்
7. சேலம், விருத்தாச்சலம்
8. திட்டைக்குடி
9. திருமலைப்பாடி
10. திருக்கோவல்
11. திருநாகேச்சுரம் கும்பகோணம்
12. திருச்செம்பொன்பள்ளி
13. கோயில், சீர்காழி
14. மாப்பிள்ளை குப்பம்
15. திருமருகல்
16. தேவூர், காட்டூர்
17. நல்லாச்சேரி, போலகம்
18. இராமேச்சுரம் குமரி

விரிஞ்சிபுரம் நாடு (மேற்கு)

1. விரிஞ்சிபுரம்
2. ஆமூர், குடியேற்றம்
3. வாணியம்பாடி
4. கொறட்டை
5. தருமபுரி
6. பவானி
7. தாரமங்கலம்
8. எழுகரைநாடு
9. புகழாறை
10. பூரத்திசை
11. திருச்செங்கோடு
12. வையாபுரி, பழனி
13. அவிநாசி
14. நஞ்சுண்டகுடி
15. காவல்பாளையம்
16. கருவூர், நத்தம்
17. கருகூர், காங்கயம், சிவன்மலை, சென்னிமலை
18. தாமக்கல்

சோழசிங்கபுரம் நாடு (வடக்கு)

1. சோழசிங்கபுரம்
2. திருத்தணிகை
3. தெளிநாடு
4. நெறிநாடு
5. திருவடிநாடு
6. திருமேழிசை
7. கொந்தம்பாக்கம்
8. திருக்காளத்தி
9. தொண்டைமானாடு
10. வரைநாடு
11. வேங்கடகிரி
12. திருப்பதி
13. ஜெகநாதம்
14. சீட்டம்பள்ளி
15. செம்புரம்
16. வாதபுரி
17. சந்திரகிரி
18. காசி, கயா, அயோத்தி, இமயநாடு.

ஆதாரம் : செங்குந்த பிரபந்தத் திரட்டு.

தகவல் : ந. சண்முகானந்தன்
T. ஜெகதீசன்
(மலர்க் குழு)

"செங்குந்த குலத் தோன்றல்"

அமரர் திரு. V. M. மொட்டையப்ப முதலியார்,

1929-இல் ஈரோட்டில் முதல் மாநாடு நடப்பதற்கு மூலகாரணமாக இருந்தவர்.

அன்றும் இன்றும்

C. நடராஜ முதலியார், B. A., B. L.,

(துணைத்தலைவர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.)

50 ஆண்டுகளுக்கு முன்னர் செங்குந்தர் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடைவதற்காகத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமும், செங்குந்தமித்திரனும் தோற்றுவிக்கப்பட்டன. அன்று தென்னிந்தியாவில் அதாவது தமிழ்நாடு, கேரளம், ஆந்திர பிரதேசத்தில் உள்ள சித்தூர் மாவட்டம் முதலிய இடங்களில் இருந்த பல லட்சக்கணக்கான செங்குந்தர்களிடையே எம். ஏ., பி. எஸ். சி., பி. ஏ., பி. எல்., பி. இ., எல். டி., பட்டதாரிகளின் எண்ணிக்கை மொத்தத்தில் 20-க்கும் குறைவாகவே இருந்தது. எம். பி. பி. எஸ், பட்டம் பெற்ற டாக்டர் ஒருவர் கூட இல்லையெனத் தெரிகின்றது. ஒரு மாவட்டத்தில் பல்வேறு ஊர்களிலும் இருந்த செங்குந்தர்கள் ஒருவரையொருவர் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொள்ளாமல் இருந்தனர். ஒருவரையொருவர் தெரிந்துகொள்ளாமல் இருந்ததினால் பெண் கொடுக்கல் வாங்கல் எல்லாம் குறுகிய வட்டாரத்தைச் சேர்ந்த சில ஊர்களுக்குள்ளேயே இருந்து கொண்டிருந்தன. ஒரு வட்டாரத்தில் இருந்த செங்குந்தர்கள் மற்ற வட்டாரத்தில் இருந்தவர்கள் செங்குந்தர்கள் என்று தெரிந்திருந்தும் அவர்களை அன்னியர்கள் என்று குறை கூறி, சம்பந்தம் செய்துகொள்ளாமல் இருந்தனர். நெசவுத் தொழில் செய்பவர்கள் அரை வயிற்றுக்கேனும் கஞ்சி குடிப்பதற்கு நமக்குப் போதும் என்று வேறு தொழில் செய்ய விரும்பவில்லை. வசதியுடையவர்கள் நூல் வியாபாரமும், ஜவுளி வியாபாரமும் நமக்குப் பரம்பரை வியாபாரம் என்றும் ஒருசிலர் விவசாயமே எங்கள் முன்னோர் செய்த தொழில் என்று விவசாயத்தையே நம்பியும் இருந்தனர். பிள்ளைகளை ஏன் படிக்க வைக்க வேண்டும்? தறிக்குழியில் இறங்கி வேலை செய்தால் ஏதோ நாலணா எட்டணா காசு கிடைக்கும் என்று பிள்ளைகளைப் பெரும்பாலும், 2, 3-ம் வகுப்புப் படிப்புடனே நெசவாளர்கள் நிறுத்திவிட்டுத் தறிநெசவில் ஈடுபடச் செய்தனர்.

தலைச் சங்கம் (தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்) ஆரம்பிக்கப் பட்ட பின்னர், பிரசாரகர்கள் கிராமம்கிராமமாகவும் ஒவ்வொருநகரிலும் உள்ள பல்வேறு இடங்களுக்கும் சென்று, பிரசாரம் செய்ததின் பயனுகவும் செங்குந் தமித்திரன் மூலமாகவும் செங்குந்தர்கள் எங்கு எங்கு இருக்கின்றனர் என்று ஒருவரையொருவர் தெரிந்து கொண்டனர். எல்லோரும் ஒரே சமூகத்தினர் என்று தெரிந்துகொண்டதின் பயனுகத் திருமணச் சம்பந்தங்கள் குறுகிய வட்டாரத்துக்குள் இல்லாமல் செங்குந்தர் எங்கு இருப்பினும் பெண் கொடுக்கல் வாங்கல் உறவு ஏற்படுத்திக்கொள்ளுதல் வளர்ச்சியடைந்து வரு கின்றது. ஒரு ஊருக்குள்ளேயே வடக்குத் தெருவுப் பெண்ணை தெற்குத் தெருவில் இருக்கும் பிள்ளைக்கு மணம் செய்து கொடுத்தல் கூடாது, தில்லைப் பெண் எல்லை தாண்டாது என்ற கொள்கைகள் மறைந்துவிட்டன. ரயில் வசதி பஸ் போக்குவரத்து வசதி அதிகரித்துவிட்டதனுலும் தலைச் சங்கம், மித்திரன் இவைகளின் மூலமாக பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள செங்குந்தர்கள் எல்லோரும் ஒரே குலத்தவர் என்று தெரிந்து கொண்டதன் பயனுகவும் பொருத்தமான திருமணங்கள் நூற்றுக்கணக்கில் நடைபெற்று வருகின்றன. ஒரு குடும்பத்தினரே செங்கற்பட்டு, திருநெல்வேலி, வட ஆற்காடு, சேலம் முதலிய மாவட்டங்களில் உள்ள செங்குந்தர் குடும்பங்களுடன் சம்பந்தம் செய்துகொண்டும் இருக்கின்றனர்.

நிற்க, தலைச் சங்கத்தின் பிரசாரம் காரணமாகவும், அரசினர் உதவிச் சம்பளம் அளிப்பதன் மூலமாகவும் இன்று நம்மவர்களில் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளும், நூற்றுக் கணக்கில் என்ஜினியர், மருத்துவர் பட்டம் பெற்ற வர்களும், ஒருசில I. A. S. அதிகாரிகளும் இருக்கின்றனர். சிலர் உயர்ந்த உத்தியோகங்களிலும் இருக்கின்றனர். நம்மவர்களில் ஆண்களும் பெண்களும் பல்வேறு துறைகளிலும் படித்துப் பட்டம்பெற வேண்டும் என்ற ஆவலுடன் படித்து வருகின்றனர்.

தொழில் முறையிலும் நம்மவர்களில் செல்வம் உடையவர்கள் நூற்பு மில் ஆரம்பிக்க வேண்டும் என்று மகா நாடுகள் தோறும் தீர்மானங்கள் செய்த தின் பயனுக இன்று நம்மவர்களில் ஆதிக்கத்தில் சில நூல் நூற்பு மில்கள் பெரும்பாலும் நம்மவர்களின் முதலீட்டுடன் நடைபெற்று வருகின்றன. பல் வேறு தொழில்களிலும் நம்மவர்கள் ஈடுபட வேண்டும் என்ற முயற்சியினுல் பல்வேறு துறைகளிலும் நம்மவர்கள் தொழில்களை ஆரம்பித்து நடத்தி வருகின்றனர். நம் குலத்தவர்கள் உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பித்து நடத்த வேண்டும் என்ற மகாநாட்டுத் தீர்மானங்களுக்கேற்ப தாரமங்கலம், ஈரோடு சென்னிமலை, முதலிய இடங்களில் பள்ளிகளும் சமீபத்தில் ஈரோட்டில் முதலியார் கல்வி நிறுவனத்தின் சார்பில் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

தலைச் சங்கத்தினரும், நம் சமூகத்தினரும் நாம் பல்வேறு துறைகளிலும் முன்னேறி விட்டோம் என்று நினைப்பதுடன் நில்லாமல் நாம் இன்னும் மேன் மேலும் கல்வி, சமூகம், கைத்தறித் தொழில், வாணிபம் செய்தல், தொழில்களை ஆரம்பித்தல், முதலியவற்றில் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

சமூகப் பழக்க வழக்கங்களில் இக்காலத்திற்கு ஏற்ப இல்லாதவைகளை நீக்கிப் பல்வேறு சமூகத்தினரிடையே நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்ற வேண்டும். முன்பெல்லாம் எல்லோரிடமும், இன்னும் பாமர செங்குந்த மக்களிடையேயும் பெண் கொடுக்கும்போது பிள்ளை வீட்டாரிடமிருந்து பரிசப்பணம் வாங்கும் பழக்கம் இருந்து வருகின்றது. பெண்களை விற்பதுபோல் பரிசப் பணம் வாங்குவது முறையல்ல, இப்போது என்ஜினியரிங், மருத்துவப் பட்டங்கள் பெற்ற பிள்ளைகளின் பெற்றோர்களில் பெரும்பாலோர் தங்கள் பிள்ளைகளைப் பேரம் பேசுவதுபோல், பெண் வீட்டாரிடம் பெண்ணுக்கு 50 சவரன்கள் அல்லது 100 சவரன்கள் பெறுமான நகைகள் போடவேண்டும் திருமணங்களை ஆடம்பரமாகச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் அதைச் செய்ய வேண்டும் என்று பெண் வீட்டாரிடமிருந்து நகைகளையும் மற்ற சீர்வரிசைச் சாமான்களையும் பெண் வீட்டாரைச் சிரமப்படுத்தி வாங்கும் பழக்கம் வளர்ந்து வருகின்றது. இதனால் பல பொருத்தமான திருமணங்கள் நடைபெறாமல் போகின்றன. பெண் வீட்டார் கடன் தொல்லையில் மூழ்கி வருத்தப்படுகின்றனர். பலர் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரே பெண்ணைப் பெற்றிருக்கும் செல்வந்தர் குடும்பச் சொத்திற்கு ஆசைப்பட்டு, பெண்தேடி அலைந்து காலாகலத்தில் தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்யாமல் இருக்கின்றனர். பெண் வீட்டாரும் தங்கள் பெண்ணுக்குப் பிள்ளை வீட்டார் நகைகள் அணிவது குறித்துப் பேரம்பேசுகின்றனர். பிள்ளைவீட்டாரைக் கசக்கிப்பிழிந்து நகைகளையும் விலையுயர்ந்த சேலைகளையும் பெற்று அந்தப் பெண்ணை அந்த பிள்ளை வீட்டிற்கே திருமணஞ் செய்து அனுப்பி வைத்தல் வெட்கப்படும்படியான செயல். இத்தகைய திருமண ஒப்பந்தங்கள் பேரங்கள் பேசுதல் வியாபார பேச்சாக இருக்கின்றதே தவிர திருமணப் பேச்சாக இல்லை. சில வருடங்களுக்கு முன்னால் இத்தகைய வியாபாரப் பேச்சுவார்த்தைகளே கிடையாது, இத்தகைய பேரங்களில் நம்மவர்கள் ஈடுபடுதல் கூடாது. பெண் வீட்டாரும் பிள்ளை வீட்டாரும் திருமணத்திற்கு நாள் குறித்துத் திருமணத்தை முடித்தல் நல்லது. இடையே ஒப்புத் தாம்பூலம், கெட்டித் தாம்பூலம், நாள் குறித்தல் முதலிய வழக்கங்களை விட்டுவிட வேண்டும். திருமணப் பத்திரிகை அச்சடித்து வீடு வீடாகச் சென்று நண்பர்களையும், உறவினர்களையும் திருமணத்திற்கு அழைத்த பிறகு திருமணத்திற்கு முன்னாள் இரவு ஏன் நிச்சயதார்த்தம் என்ற சடங்கை வைத்துக்கொள்ள வேண்டுமென்பது தெரியவில்லை. திருமணம் அப்போதுதான் நிச்சயம் ஆகின்றதா. பிள்ளை வீட்டார் பெண்ணுக்குக் கொடுக்க வேண்டிய நகைகளையும், ஆடைகளையும் முன்னதாகவே கொடுத்து

விடலாம். பிள்ளை அழைப்பு, பெண் அழைப்பு, ஊர்வலம் இவைகளை விட்டு விடுதல் நல்லது. அறிஞர் பெருமக்கள் இவைகளை ஆழ்ந்து யோசித்து ஆவன செய்தல் நல்லது.

50 வருடங்களுக்குள் நம் குலத்தவர்கள் இருந்ததை விட இன்று பல் வேறு துறைகளிலும் முன்னேறியிருப்பினும் இன்னும் நாம் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கின்றது. ஆங்காங்கு இருக்கும் கற்றறிந்த பெரியோர்களும், ஆன்றோர்களும், அறிஞர்களும், செல்வந்தர்களும் நம் முன்னேற்றத்திற்காக ஆவன எல்லாம் செய்தல் வேண்டும்.

கோவை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கத்திற்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.

S. பழனியப்ப முதலியார்,
S. ஆறுமுக முதலியார்,

55, அருணாசல ஆசாரி தெரு.
சேலம் - 636 001.

Phone : 3062

புகழ்கொண்ட செங்குந்தர்

பாடலை உதவியவர் :

ஊமையாம்பட்டி கவிஞர், ந. கந்தசாமி, இராசிபுரம்.

(வெள்ளையர் நம் பாரத நாட்டை ஆண்டபோது அவ்வெள்ளையரது - அக்கும்பினியாரது சிறப்பையும் செங்குந்தர்களது சிறப்பையும் ஒப்பிட்டுக் கும்பினியாரது சிறப்பைவிடச் செங்குந்தர் சிறப்பே மேலானது — உயர்வானது—புகழ்கொண்டது எனமுழங்கும் பழம் பாடல்)

சீமைதனில் ஒருதீவு கும்பினிக்கு, செங்குந்தர்
　　தேசமெல்லாம் செழிக்கச்
சென்னப்பட்டனம் லார்டு கெவுணர்பட்டம் மாறும்
　　செங்குந்தர் லார்டுபட்டம்
சேனைதலை சிறைகண்ட போதிலும் மாருது
　　தேசப்பிர சித்தமாகும்
சீரான கவர்னரவர் எழுவரே; நாடாளும்
　　செங்குந்த கவர்னர்எழுவர்
தாமச மிலாமலே கலெக்டர் பெருதனம்
　　தரணியில் ஜட்ஜ்ஙிகராம்
தக்கபுகழ் நாட்டாண்மை தருகாரியக்காரர்
　　தாசில் தாரராகும்
தறித்திண்ணை சிங்காதனத்தினெதிர் மன்னர்முன்
　　தகுகன்னி நடனமிடவும்
சாரட்டுக் குதிரைமுதல் வீதியில் உலாவுமே
　　தண்டுகமே யானகுதிரை
மாமேவு நாடேழு சங்கோதி டபாய்த்தனம்
　　மற்றுசங் கோதிகள்சலான்
வரிசைபெறு துரைகளவர் தீர்ப்புகள் அநீதமாம்
　　வண்மையுள பாவடிதனில்
வரும்பிராது தீர்ப்புகள் அணுவும் நூல்காயாது
　　வாய்மொழி சிலாசாசனம்

வகையான முன்தண்டு கும்பினிக் குண்டங்கே
வாய்த்ததறி முன்தண்டுதான்
நேமமாய் அச்சபையில் உண்டு கைக்கோலங்கை
நீடிய குறிக்கோலதாம
நெறியான கும்பினித் துரைகள் செயும்நீதியும்
நெடிய செங்குந்ததுரைகள்
நீதியும் பார்த்திட அதிகமாம் புகழ்கொண்ட
நிசமான செங்குந்தமே!

—பழம்பாடல்

With best compliments of :

NEW INDIA TEXTILES.

Manufacturers of : HIGH CLASS TOWELS,

POST BOX No. 164,

8, SENGUNTHAR STREET,

FORT, **ERODE–638001.** S. Ry.

★ பண்டைத் தமிழ் நூல்களில் ஆடைகள். ★

புலவர். வை. இராசு, ஜெயங்கொண்ட சோழபுரம்.

தோற்றுவாய் :

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, தொல் புகழில், பூத்துக்குலுங்கிப் புதுமைப்பொழிவுடன் ஏத்தி இன்புறும் வண்ணம், நீலத்திரைக் கடலில் நெடுங்காலத்திற்கு முன்பே, கோலமிகு கலங்கள் விட்டு, ஞாலத்தில் சிறந்து விளங்கிய இனம், நம் தமிழினமாகும். ஆம்; நம் தமிழினம் என்றுமே பிறர் கையை எதிர்பாராது ''தன் கையே தனக்கு உதவி'' என்னும், பொன்னன கொள்கையைப் போற்றி வந்த இனம். இணையற்று வாழ்ந்த இத்தகைய தமிழர்கள், தன்னிகரில்லா தரணியில் உழவையும், நெய்தலையும் உயிர் மூச்சாகப் போற்றி வந்தனர். இவ்விரண்டின் சிறப்பைக் கருதியே ஔவையும் தாம் உரைத்த நல்வழியில்,'' உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்'' (பாடல் 23) என்று உரைத்தாள். அவ்விரண்டனுள் இரண்டாவதான ஆடையின் இன்றியமையாமையைக் கருதிய ஆன்றோர்கள்'

''ஆடையில்லா மனிதன் அரைமனிதன்''
''இன்ன அணியெல்லாம் ஆடையின்பின்''

என்றெல்லாம் இன்னபலவாறு இயம்பியுள்ளனர். மனிதனை மனிதனுகக் காட்டும் பல்வகை ஆடைகளை உண்டாக்கக் காரணமாக விளங்கிய நெய்தல் தொழில் சங்க காலத்தில் இருந்தே சிறந்து விளங்கி வருகின்றது என்பதற்கு இலக்கியங்கள் சான்றுகள் பகர்கின்றன. அத்தகைய நெய்தல் தொழிலைப் பற்றியும், அவற்றினின்றும் வந்த ஆடைவகைகளைப் பற்றியும் இலக்கியங்கள் இயம்புவன சிலவற்றைப் பற்றி இக்கட்டுரையில் இனிது காண்போம்.

ஈடில்லா ஆடையின் எண்ணற்ற வகைகள் :

அக்காலத்தில் தமிழகத்தில் பல்வேறுவகைப்பட்ட ஆடைகள் நெய்யப்பட்டன. கோசிகம். பீதகம், நுண்துகில் சித்திரக் கம்பி, பொன்னெழுத்து, தேவாங்கு, கூறை, அறுவை, ஒவியல், பணிப் பொத்தி, சிதார், சீரை, புதுமடி, புதுக்காழ்ப் போர்வை, முதலிய 36 வகைப்பட்ட ஆடைகள் இருந்தனவாக சிலப்பதிகார உரை உரைக்கின்றது. பருத்தியினுலும், பட்டினுலும் மட்டுமின்றி எலிமயிர், ஆட்டுமயிர் முதலியவற்றினுலும் கம்பளங்கள் போன்றவை அக்காலத்தில் நெய்யப்பட்டன என்பதை,

''நூலினும் மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்''

என்னும் சிலப்பதிகாரத் தொடரினுல் அறியலாம்.

ஆடைகள் நிற நிறமாகவும், பூத்தொழில் செய்யப்பெற்றும் சிறந்து விளங்குகின்றன என்பதை,

''நீலக் கச்சை பூவாராடை (புறநானூறு—274)

என்னும் புறப்பாடலாலும்,

''செக்கரன்ன சிவந்து நுணங்குருவிற்
கண்பொரு புகூஉ மொண்பூங் கலிங்கம்?' (வரி 432, 33)

என்னும் மதுரைக் காஞ்சித் தொடர்களாலும் அறியலாம்.

இவ்வாறே திருமுருகாற்றுப்படையில் சூரரமகளின் மாண்பைக் கூறுங்கால் அவர்கள் சிவந்த நிறமுடைய ஆடையை அணிந்திருந்தனர் என்பதை,

''கோபத்தன்ன தோயாப் பூந்துகில்'' (வரி 15)

என்றும், முருகனைப் பற்றிக் கூறுங்கால்,

''செய்யன் சிவந்த ஆடையன்'' (வரி 206)

எனச் சிவந்த நிறமுடைய ஆடையை அணிந்ததாகத் தெரிவிக்கின்றன.

நாலடியார் இயற்றிய சமண முனிவர்களும் நன்னெறியில் செல்வம் தேடவேண்டும் என்பதனைக் கூறுங்கால்,

''பட்டும் துகிலும் உடுத்து உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே'' (பாடல் 264)

என்று, பட்டையும், துகிலையும் கூறியுள்ளனர்.

நளவெண்பாவில் உள்ள கலி நீங்கு காண்டத்தில் ''நளன் வாகுகன் உருவத்தோடு இருக்கும்போது, வீமன் நளனைவேண்ட, அவன் முன்பு காட்டில் கார்க்கோடகன் தந்த ஆடைகளை அணிந்து வாகுகன் உருவம் மறைந்து, நளன் தன்னுடைய பழைய உருவத்தை அடைந்தான்,' என்பதைக் கூறுங்கால்.

''ஒருதுகிலை வாங்கி உடுத்தான்;—ஒருதுகிலைப்
போர்த்தான்.........''

என்று, புகழேந்திப் புலவர் உரைத்துள்ளார். இதனால் உடுப்பது வேட்டி எனவும், போர்ப்பது துண்டு எனவும் அறிய முடிகிறது.

ஆடைகளை நெய்யும் போதே ஓவியங்களை அமைத்து நெய்யப்பட்டுச் சிறந்து விளங்கின என்பதை,

''வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்''

என்னும் மணிமேகலைத் தொடர்களால் அறியலாம்.

ஆடை வகைகளின் அரும்பெயர்க் காரணங்கள்:

நூலினலும், மயிரினலும், நுழைநூற் பட்டினலும், நீண்ட அளவினதாக நெய்யப்பட்ட ஆடை, பின்பு தனித்தனியாக அறுக்கப்பட்டதால், ''அறுவை'' என்றும்

பின்பு அவை சிறுசிறு பகுதிகளாகத் துண்டிக்கப்படுவதால், ''துண்டு'' என்றும் பெயர் பெற்றது. துணிக்கப்பட்ட பகுதி, ''துணி'' என்று பெயர் பெற்றது. நீண்ட ஆடையைச் சிறுசிறு பகுதிகளாகக் கூறு செய்யப்பட்டமையால் ''கூறை'' எனப்பட்டது.

நுண்ணிய ஆடையின் கண்கவர் தன்மை:

பழந்தமிழ் நூல்களில், ஆடைகளுக்கு உவமையாகப் பாம்பின் சட்டை; மூங்கிலில் உரித்த மெல்லிய தோல், புகை பால் நுரை, அருவிநீர் முதலியன கூறப்பட்டுள்ளன.

கண்ணிற் பார்வை, இஃது இழைபோன வழி என்று, குறித்துப் பார்க்க இயலாத நுண்மையை உடையவாய்ப், பூத்தொழில் முற்றுப் பெற்ற மென்மையால் பாம்பினது தோலை ஒத்து, துகில் மிகமென்மையாய் நெய்யப்பட்டு வந்துள்ளன என்பதை,

''நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்
''தரவுரியன்ன வறுவை'' (வரி 82, 83)

என்னும் பொருநராற்றுப்படையினுல் அறியலாம்.

மூங்கிலின் உட்புறத்தே பெயர்த்தெடுக்கப்படும் வெள்ளிய தோல் போல, நெய்யப்பட்டு, அவ்விழைகளின் வரிசைகள், கண்ணுக்குப் புலப்படா வண்ணம் மென்மையாய் இருந்தன என்பதனை,

''பாம்புரியன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா
ஒன்பூங் கலிங்கம்'' (புறநானூறு 383)

என்னும் புறப்பாடலாலும்.

''மாசில் காம்பு சொலித்தென்ன அறுவை'' (வரி 236)

என்னும் சிறுபாணாற்றுப் படையாலும் அறியலாம்.

தூய்மையான அருவிநீர்வீழ்ச்சி ஆடைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளதை,
''தெண்ணீர் அவிர்துகில்புரையும் அவ்வெள்ளருவி'' (வரி 54, 55)

என்னும் குறிஞ்சிப் பாட்டு இனிது விளக்கும்.

நற்றிணையில் ஞாயிற்றின் ஒளிக்கு ஆடையை உவமையாகக் கூறுமுகத்தான்,
''துகில் விரித்தன்ன வெயில் அவிர் உருப்பின்'' (பாடல் 43)

என்று எயினந்தையார் கூறியுள்ளார்.

பட்டாடையில் தூயனவாகத் திரளமுடிந்த முடிகள், கரையிலே அமைக்கப் பெற்று, பொலிவுடன் விளங்கின என்பதனை,

''கொட்டைக் கரைய பட்டுடை'' (வரி155)

என்னும் பொருநராற்றுப்படைத் தொடரினுல் அறியலாம்.

நெடும்புகழ் பெற்ற நெய்தோர் வீதி:

தமிழுக்கு அணிசெய்யும் ஐம்பெருங்காப்பியங்களுள் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் இந்திர விழாவுரைத்த காதையில், புகார் நகரின் வளத்தைக் கூறுங்கால், ஆடை நெய்வோர் வீதியை,

''பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்'' (வரி 16, 17)

என்று இளங்கோவடிகள் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இவ்வாறு பல்வகை மெல்லிய இழைகளைக் கொண்டு நுண்ணிய வேலைப்பாடுகளோடு ஆடை நெய்வோர் தமிழகத்தில் முன்பு மிகுதியாக வாழ்ந்திருக்கின்றனர். அவர்கள் தனி வீதியில் வலமாக வாழ்ந்து வந்துள்ளனர். மணிமேகலையில் வஞ்சி மாநகரின் வளந்திகழும் வீதிகளைக் கூறுங்கால்,

''கண்ணுழை கல்லா நுண்ணூற்கைவினை
வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகும்''

என்று இக்கைவினை வாய்ந்த ஆடைநெய்வோர் வீதி சிறப்பிக்கப்பட்டுள்ளது.

அக்காலத்தில் ஆடை நெய்தோர்:

பழங்காலத்தில் பெண்டிர் பருத்தியிலிருந்து மிகவும் நுட்பமாய் நூலை நூற்று வந்தனர். இதனையே சிலர் தொழிலாக மேற்கொண்டமையின் ''பருத்திப் பெண்டு'' என்றே வழங்கப்பட்டிருந்தனர். இதனை,

''பருத்திப் பெண்டின் பனுவலன்ன'' (புறநானூறு 125)

என்னும் புறப்பாடலால் அறியலாம்.

இத்தொழிலையே கணவனை இழந்த கைம்பெண்கள், நல்ல பொழுது போக்காக மேற்கொண்டு வந்துள்ளனர். இத்தொழில் சிறந்த ஆறுதலை அளிப்பதோடு, ஊதியமும் தர வல்லது. இவ்வாறு கைம்பெண்கள் இத்தொழிலை மேற்கொண்டனர் என்பதை,

''ஆளில் பெண்டிர் தாளின் செய்த
நுணங்குநுண் பனுவல்'' (பாடல் 353)

என்னும் நற்றிணையாலும்,

''நுண்ணிய பலவாய பஞ்சு நுனிகளாற் கைவன் மகடூஉத் தனது செய்கை மாண்பினால் ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூல் நூற்றலென்பது'' (சூத்திரம் 1உரை) என்னும் இறையனார் களவியல் உரைத்தொடராலும் அறியலாம்.

''பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியும் ஆறு'' (நன்னூல் சூத்திரம் 23)

என்னும் நூற்பாவாலும் பெண்கள் அத்தொழிலைச் செய்தமையை அறியலாம்.

நாயன்மார்கள் அறுபத்துமூவருள் ஒருவரான நேச நாயனுர் என்பார், உடையும், கோவணமும், கீளும் நெய்து சிவனடியார்களுக்கு வழங்கினுர் என்பதை,

''தம்பிரான் அடியார்க்காகப்
பாங்குடை உடையுங்கீளும் பழுதில் கோவணமும் நெய்வார்''

என்னும் திருத்தொண்டர் புராணத்தால் அறியலாம்.

சங்க நூல்களில் பல பாடல்கள் பாடிய ''அறுவை வணிகன் இளவேட்டனுர்'' என்ற புலவர் தம் பெயரிலுள்ள அடைமொழியால், இவர் நெய்யப் பெற்ற ஆடைகளை விற்று வணிகராகத் திகழ்ந்தார் என அறிய இடமுண்டு.

ஆடையை முன்னேர் அணிந்த விதம்:

பிறந்தநாள் விழாவில் அவ்விழாவிற்கு உரியவர் வெண்மையான ஆடையை உடுத்தனர். மகளிர் பூப்புக்காலத்தில் சிவந்த ஆடைகளையும், கல்விக் காலத்தில் வெண்மையான ஆடைகளையும் அணிந்து வந்துள்ளனர்; என்று அகப்பாடல்கள் தெரிவிக்கின்றன. மகளிர் பகற்காலத்தில் பட்டாடையும், இராக்காலத்தில் பருத்தி ஆடையையும் அணிந்து வந்துள்ளனர் என்பதை,

''மடமங்கையர் பட்டுநீக்கித் துகிலுடுத்து'' (வரி 106, 107)
என்னும் பட்டின பாடலைத் தொடரால் அறியலாம்.

அரசனுடைய மெய்க்காப்பாளர், தூதர் முதலியோர் சட்டை அணிந்து, தலையில் பாகையிட்டிருந்தனர் என்பதை,

''சஞ்சையன் முதலாந் தலைக்கீடு பெற்ற
கஞ்சுக முதல்வர் ஈரைஞ் ஞாற்றுவரும்''

என்னும் சிலப்பதிகாரத் தொடரால் உணரலாம்.

அரசனிடம் வேலைபார்த்த குதிரைவீரர் முதலிய அலுவலர்கள் சட்டையையும், பணிப்பெண்கள் கச்சும் அணிந்திருந்தனர்.

முனிவர்கள் மரவுரியாலாகிய இடுப்பாடையையும், மார்பில் தோலாடையையும் அணிந்திருந்தனர். எளிய வாழ்க்கையினர் இடுப்பில் ஓர் ஆடையை அணிந்தும் மற்றோர் ஆடையை உடம்பில் போர்த்தும்,—''உடுப்பவை இரண்டே'' — என்னும் ஔவையின் அமுதவாக்கிற்கிணங்க வாழ்ந்தனர்.

பல்வேறுவகைப்பட்ட இடுப்பாடைகளும், மேலாடைகளும், பாவாடைகளும் இருந்தனவாகப் பிற்கால இலக்கியங்களாலும், கல்வெட்டுகளாலும் பேசப்படுகின்றன.

முடிவுரை:

சங்ககாலம்முதல் இன்றளவும் தொன்றுதொட்டு, தமிழகத்தில் நெசவுத் தொழில் நிலைத்திருப்பது போன்றே, ஆடைகளும் இன்றளவும் இலங்கை, பர்மா, மலேயா முதலிய கீழைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. சோழர்கால ஓவியங்களாலும், நாயக்கர்கால ஓவியங்களாலும், மராட்டியர்கால ஓவியங்களாலும் பின் நூற்றுண்டுகளில் ஆடைவகைகள் அதிகரித்து வந்துள்ளதை அறியலாம். இஸ்லாமிய, கிருத்துவ மதத்தவர்களின் சேர்க்கையால் ஆடைவகைகள் மேலும் பெருகி மேனுட்டு உடைகள் இன்று பெருவழக்கில் அமைந்து நாகரிகம் ஓங்கி வருகின்றது. இயந்திரப் பெருக்கத்தாலும், அறிவியல் முன்னேற்றத்தாலும் பல்வகைப் பொருள்களால், பல்வேறு வண்ண ஆடைகளும், பூவேலைப்பாடுமிக்க ஆடைகளும் இக்காலத்துப் பெருகிவருகின்றன, எனவே, பண்டு தொட்டு இன்று வரை, உடுக்க ஆடைகொடுத்து, உலகில் உயர்ந்தவராக நம்மை எல்லாம் மதிக்கச் செய்யும், அந்நெசவுத் தொழிலாளர்களை, நாம் மறவாது நீண்டகாலம் போற்றிப் பேணுவோமாக!



அமரர் திரு. **M. ஜெகந்நாத முதலியார்** அவர்கள்
திருத்தணியில் நடந்த பன்னிரண்டாவது செங்குந்த மாநாட்டில்
கொடியேற்றுவித்தவர்.

ஏற்றுமதி செய்வோம்! ஏற்றம் பெறுவோம்!!

தி. சே. பழனிவேலு,
செயலர், தமிழ் நாடு கைத்தறித் தொழில் வர்த்தக சங்கம்,
செயலர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

பழம் பெருமை :-

மரப்பட்டைகளையும், தழைகளையும் ஆடையாக அணிந்து வந்த மனிதன், தனக்குத் தேவையான ஆடையை, அணிந்து கொள்வதற்கு அழகாகவும், எளிதாகவும் அமைத்துக் கொள்ள எடுத்துக்கொண்ட ஒரு புத்தம் புதிய முயற்சியே, சமுதாய வரலாற்றில் ஒரு புதிய திருப்பமாகும். அப்புதிய முயற்சியின் பலன்தான் நம்மால் பெருமையுடன் புகழ்ந்து பேசப்படும் கைத்தறி நெசவுத் தொழில். ''செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப்பார்க்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை''.

பருத்திக்கொட்டையிலிருந்து பிரித்து எடுத்த பஞ்சை பாவையர் இராட்டையால் நூற்றார்கள்; இராட்டையால் நூற்ற நூல் மிகவும் நுண்மையாக, மெல்லியதாக இருந்தது. ''ஆளில் பெண்டிர் தாளிற் செய்த, நுணங்கு நுண்பறுவல்.'' இத்தகைய நுண்மையான மெல்லிய நூலைக்கொண்டு நெய்யப்பட்ட ஆடையில் உள்ள இழைகளின் வரிசை காண்பதற்கு இயலாத வகையில் அமைந்து இருந்தது. ''பாம்பு புரியன்ன வடிவினை காம்பின், கழைபடு சொலியின் இழையணி வாரா'' கைத்தறி நெசவுத் தொழிலாளியின் உழைப்பால் உருவான தன் சிந்தனையே பாவாகவும். கைவண்ணமே ஊடையாகவும் கொண்டு உருவாக்கிய அற்புதமான ஆடைகள், அப்பொழுதே மொட்டவிழுந்த புதிய பூப்போன்று இருந்தன; பாம்பு உரித்ததோல் போன்று இருந்தன; மூங்கிலின் உட்புறத்தே உள்ள தோல் போன்று இருந்தன; புகையை விரித்தால் போன்று இருந்தன; பாலாவியைப் போன்று விளங்கின.

இத்தகைய தரமான துணிகளைத் தமிழகம் காலம் காலமாக அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டியது. ரோமாபுரிக்குத் தமிழகம் பெரும் அளவில் மஸ்லின் துணிகளை ஏற்றுமதி செய்தது; அவைகளை ரோமானியர்கள் அதிகவிலை கொடுத்து வாங்கினர் என்று வாரிங்டன் (E. H. WARINTON) என்ற வரலாற்றுப் பேராசிரியர் கூறுகின்றார். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்க அரேபிய வணிகர்கள் நம் துணிகளை வாங்கிச் சென்று எகிப்திலும், ரோமிலும், பிற நகரங்களிலும் விற்றனர். என்று ஹெரடோடஸ், பிளினி போன்ற வரலாற்று வல்லுனர்கள் விளக்கமாக எழுதியுள்ளனர்.

இன்றைய நிலை :-

ஏற்றுமதிக்கான ரகங்கள் உற்பத்தி செய்கின்ற திறமை மிக்க நெசவாளர்களில் மிகப்பெரும்பான்மையோர் நம்மவர். கவர்ச்சிமிக்க, கெட்டிச் சாயம் போட்ட, தரமான நூலை விநியோகித்து நவீன டிசைன்களில் ஏற்றுமதி ரகங்களை உற்பத்தி செய்விக்கின்ற ''மாஸ்டர் வீவர்'' களிலும் மிகப் பெரும்பான்மையோர் நம்மவர். உண்மையாகவே செயல்படுகின்ற கைத்தறித்துணி உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை நம்மவர்கள் பொறுப்பில் உள்ளன.

இத்தகைய அனுகூலங்கள் எல்லாம் நமக்கு அமைந்து இருந்தும், பரம்பரை பரம்பரையாக, தலைமுறை தலைமுறையாக, நம் ரத்தத்தில் ஊறியுள்ள இந்தத் தொழில் நுணுக்கத்தைப் பயன்படுத்திப் பெரும் பலன் அடைகின்றவர்கள் நம்மவர்கள் அல்லர் என்பதை எண்ணும்போதெல்லாம், இந்த நிலை மாறுவதற்கு, நாம் சிறிய அளவிலேனும் முயற்சி செய்கின்றோமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது. இலங்கையை இழந்தோம்; பர்மாவை இழந்தோம்; இழந்தவைகளுக்கு ஈடுகட்ட வேறு எந்த முயற்சி செய்தோம்?

கைத்தறி ரகங்களின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியிலிருந்தும் — நாடு முழுவதிலும் ஆகும் மொத்த உற்பத்தியில் பாதிக்கு மேலேயே தமிழகத்தில் உற்பத்தியாகியும், அயல்நாடுகளிலிருந்து கைத்தறித் துணி வாங்குவதற்கென வருகின்ற பலரும், பம்பாயையும் டெல்லியையும் நோக்கித்தான் முதலில் செல்கின்றனர். பெருமளவில் கைத்தறித் துணி வாணிபம் செய்யும் நம்மவர்களில் எத்தனைபேருக்கு, இந்த நகரங்களில் அலுவலகங்கள் உள்ளன.

ஏற்றுமதிக்கேற்ற கைத்தறித் துணி ரகங்கள் நாட்டின் எந்த மூலையில் தயாரானாலும், அந்த இடங்களுக்கெல்லாம் சென்று. உற்பத்தியாளர்களிடம் அடித்துப் பேசி, குறைந்த விலையில் கொள்முதல் செய்து, அந்தத் துணிகளை, அழகழகான, விதம் விதமான கண்ணைக் கவரும் ஆடைகளாக மாற்றிக் குளிர் சாதன அமைப்புள்ள அலுவலகங்களில் அவைகளைக் காட்சிப் பொருள்களாக அமைத்து, ஆர்டர்கள் கொடுக்க வரும் அயல்நாட்டு வியாபாரிகளை அன்புடன் வரவேற்று, அவர்கள் உள்ளங்கவர் கள்வர்களாகச் செயல்படுகின்ற இந்த வடநாட்டு வியாபாரிகளைப் பார்த்து, நான் என்றுமே பொறாமைப் பட்டதில்லை! நம்மவர்களும் இந்த ஏற்றுமதித் துறையில் பெருமளவில் ஈடுபாடு கொள்ளும் நன்னாள் எந்நாளோ! என்ற ஏக்கமே என் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்பது பழக்கமாகப் போய்விட்டது.

அமெரிக்க ஐரோப்பிய நாடுகளுக்கும், ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கும் கைத்தறித்துணிகளை ஏற்றுமதி செய்வதில், நம்சமூக வாணிபப் பெருமக்கள் பெருமளவில் ஈடுபட்டு, மத்திய மாநில அரசுகள் அளிக்கும் பலப்பல சலுகைகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள உள்ள உறுதியுடன் செயலாற்ற வேண்டும்.

கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் கைத்தறித் துணி ஏற்றுமதி வாணிபம் எவ்வளவு பெரிய அளவில் நடைபெறுகின்றது என்பதைநன்கு விளக்கும் :-

1972—73ல் ஏற்றுமதியான லுங்கி, பட்டி மார்பு, சேலை, வேட்டி ரகங்களின் மதிப்பு	ரூ. 16,63,11,000
1973—74 ,, ,, ,, ,,	ரூ. 32,06,18,000

1974—75	,,	,,	,,	,,	ரூ.	29,14,28,000
1972—73	ஏற்றுமதியான சட்டைத் துணிகள், டவல்கள் மதிப்பு				ரூ.	7,02,23,000
1973—74	,,	,,	,,	,,	ரூ.	9,52,84,000
1974 - 75	,,	,,	,,	,,	ரூ.	13,25,18,000
1972—73	ஏற்றுமதியான தைத்த ஆடைகளின் மதிப்பு				ரூ.	16,00,88,000
1973—74	,,	,,	,,	,,	ரூ.	35 கோடி ரூபாய்
1974—75	,,	,,	,,	,,	ரூ.	50 கோடி ரூபாய்

1974—75ல் ஏற்றுமதி செய்யப்பட்ட எல்லாவகை கைத்தறித் துணிகளின் மொத்த மதிப்பு 92 கோடியே 39 லெட்சத்து 46 ஆயிரம் ரூபாய். 1975—76ல், இது இரட்டிப்பாக ஆகியிருக்கிறதென்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டிருகின்றது. எனவே, ஏறத்தாழ ஒரு நூற்றி எண்பத்தைந்து கோடி ரூபாய்க்கு 1975—76ல் கைத்தறித் துணிகள், துணிகளாகவும், ஆடைகளாகவும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மாபெரும் வாணிபத்தில் நம்முடைய பங்கு என்ன?

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.

★

With the best compliments from :

SREE MARIAMMAN TEXTILES,
Post Box No. 113,
Mudaliar Street : : KOMARAPALAYAM.
SALEM Dist. (Tamil Nadu)



உயர்திரு. **M. P. நாச்சிமுத்து முதலியார்**, B. A., B. L.,
தென்னிந்திய செங்குந்தர் மாநில சமூக மாநாட்டு
வரவேற்புக் குழுத் தலைவர்

திரு. **E. M. பாலசுப்பிரமணியம்**
பொதுச் செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த சமூக மாநாடு.

செங்குந்தர் வாழ்த்து.

வாழியொட்டக் கூத்தன் வகைவந்தார் தாம்வாழி
வாழி மன்ன னெந்நாளும் வையகத்தில் வாழி
கொலைகளவு கட்காமல் கோள்விலகி மக்கள்
உலைவிலா வின்ப முகந்து

—களிப்பொருபது

மாதவ முடைய தேவி மலரடிச் சிலம்பு தித்த
தீதிலா வீர வாகு முதலிய தீரர் தந்த
பூதர மென்ன வோங்கு புயமுடைக் குந்தர் வாழ்க
நீதிசேர் புகழி னோங்கு நெடுந்தொண்டை நாடும் வாழ்க

—பிள்ளைத் தமிழ்

கனம்வாழ்க வெத்திக்குங் கார்பெய்தல் வாழ்க கவின்மணிநீ
றினம்வாழ்க மன்ன ரெழில்வாழ்க சைவ விருடியர்தம்
மனம்வாழ்க வைதிக மாமறை வாழ்கசண் மாமுகன்சீர்
தினம்வாழ்க வாழ்கநங் கைக்கோள ராகிய செங்குந்தரே

—கலித்துறை மாலை

காணருங் கைலைக் கந்தக் கணவரை யாதி வாழ்க
பேணுறு சைவச் சின்னம் பெருகுக பிழையில கீர்த்தி
பூணுமொன் பானென் வீரர் பொலிகுலம் விளைக தேவர்
சேணுல காள வைத்த செங்குந்தஞ் சிறக்க மாதோ

—கலித்துறை மாலை

ஆதிசத்தி பாதச்சிலம்பி லவதரித் தவர்க்கும்
அமரர்சிறை தனைதீர்த்த வருளாள ருக்கும்
சூதுசெயு மசுரர்களைச் செயித்துசெயங் கொண்டவர்க்கும்
செங்குந்தர் சிவநீதி தெளிவ வருக்கும் செயமங்களம்

—ஊசல்

வாழி திருவொற்றியூர் வாழிவடி வாம்பிகைத்தாய்
வாழி யவள்கணவன் மக்களுடன்–வாழிய
இந்தப் புவியில்வள ரெவ்வுயிரு நன்னடையில்
குந்தப் பெரியருடன் கூடி

—செங்குந்த விநாயகர் மாலை

ஆவாழி வாழி யந்தண ருலுமறை யாதரிக்கும்
கோவாழி வாழிசெங் குந்த சிலாக்கியர்க் கூறிடுமம்
பாவாழி வாழி யதுபகர் வோருறும் பான்மைமிகும்
கூவாழி வாழிய வாழிய ரோவிசை கூர்தரவே

—செங்குந்த சிலாக்கியர் மாலை

வாழிய தண்பெய லானின மந்தணர் மாமகங்கள்
வாழிய தேவர் முனிவர் புலவர் மனிதரெலாம்
வாழிய காஞ்சியி னங்கச்ச பேச னுமாசகிதம்
வாழிய விங்கவன் றுடொழுஞ் செங்குந்த மாணவரே

—செங்குந்தர் மரபு விளக்கம்

சேனைத் தலைவரெனுஞ் செங்குந்தர் வேலரொடு
கானக் குறவள்ளி காதலனும்-வானினுயர்
குந்தப் படையுங் கூறுநவ வீரர்களும்
இந்தப் புவியிலுளா ரின்படைய-சந்ததமும்
வாழி மிகப்பெரிதும் வண்மைகொடு வாழியவே
ஏழுலகமும் போற்ற வினிது

—மரபு விளக்கச் சூருவளி

கார்வாழி வாழி கலைமகள் வாழி கனகமயில்
கூர்வேலுஞ் சேவற் கொடிவாழி வாழி குகனிருதாள்
சீர்வாழி வாழி தெய்வயானை வள்ளி சிறந்தகச்சி
யூர்வாழி செங்குந்த வேலவர் வாழி யுலகெங்குமே

—திருக்கை வழக்கத்தந்தாதி

சோணாட்டு முதலியெனச் சொலவந்த
செங்குந்தத் தொகுதி வாழி
நாணுளு மலர்செய்த நற்றரும
மித்தரைமே னன்கு வாழி
காணாத காட்சியெலாங் காட்டியருள்
கந்தப்பன் கருணை வாழி
மாணாரும் வடிவேலு மயிலுமிரு
மாதர்களும் வாழி வாழி

—செங்குந்த குல மாட்சி

ஆதாரம் : செங்குந்தர் பிரபந்தத் திரட்டு.
தொகுப்பு : ந. சண்முகானந்தன்
T. ஜெகதீசன்
மலர்க்குழு

EXPORTS OF HANDLOOMS

By

M. MADURAI NAYAGAM,
Secretary,
Handloom Export Promotion Council,
MADRAS.

The handloom industry occupies an important place in the economy of the country by providing employment to a large number of people. There are over 3.8 million handlooms in the country, at present, providing employment to more than 10 million people directly besides a large number, who are employed in allied activities. The production from the handloom sector is estimated at about 2,200 million mts. out of a total production of 8,200 million mts. of cotton cloth. It is envisaged that at the end of the Fifth Plan, the handloom sector will produce about 3,000 million mts. out of an estimated total production of 10,000 million mts. of cotton cloth. The socio-economic importance of handloom industry was all along engaging the attention of the Government. During the first four Five Year Plan periods, more than Rs. 100 crores was spent on the development of the handloom industry. A total provision of Rs. 41.16 crores has been earmarked for handloom industry during the Fifth Five Year Plan. Of this, Rs. 1.1. crore was incurred during the first two years of the Fifth Plan and a provision of Rs. 10.05 crores has been earmarked to be spent during 1976—77 for revitalisation of handloom sector. The importance of development of handloom industry has been recognised at the highest level and the development of handloom industry has been included in the Prime Minister's 20-Point Economic Programme.

The central programme, under the 20-Point Programme, for the development of handloom industry during the Fift Plan would

concentrate around starting of intensive development projects and export-oriented projects, strengthening and expanding Weavers' Service Centres and the Institute of Handloom Technology and organising and strengthening marketing of handloom products. Steps are also being taken by the Government to expand the co-operative coverage from the present level of 30% to about 60% at the end of the Fifth Plan, besides ensuring regular and adequate supply of raw materials needed by the Industry at reasonable prices and rationalisation of reservation policy for handlooms to give greatest protection to the sector.

Besides meeting the clothing requirements within the country, the handloom industry produces innumerable varieties, which have been finding lucrative markets in most of the developed countries. From an export performance of Rs. 16 crores in 1968—69, the exports of hanloom goods touched an all-time high during 1975—76. On the basis of provisional figures, exports during 1975 — 76 would be of the order of Rs. 185 crores. Of these, exports of readymade garments alone accounted for nearly Rs. 117 crores. Cotton handloom fabrics and made-ups occupied the second place with an export earning of Rs. 50 crores. The value of exports of silk and others would be around Rs. 18 crores. The substantial increase in exports has largely been in the area of readymade garments, where some of our handloom fabrics have gained wide consumer acceptance in the fashion conscious markets of the developed countries. The garment trade has largely been in the form of blouses for women and shirts and casual wear shirts for men. Our garment export trade, in recent months, has been facing bad weather. This unfavourable condition arose out of indiscriminate excess exports of handloom garments during 1975 and in the first half of current year to certain countries. Further, the present type of garments exported are mostly for the summer wear. Unless the handloom industry is able to produce other varieties, which could meet the winter clothing requirements, the garment export trade and the handloom industry would face similar problems year after year. The Weavers' Co-operative Societies and the individual exporters should put their shoulders together to develope new blended fabrics of cotton/silk, cotton/wool, cotton/jute and silk/wool and also some heavier cotton fabrics, so that, the handloom industry would be able to have a year round programme of production for meeting the requirements for all

கூட்டுறவு வானில் ஒளி வீசும் நல்முத்து.

திரு. **M. P. நாச்சிமுத்து,** B. A., B. L.,

சென்னிமலையில் நம் செங்குந்தர் சமூகத்தில் 'முதல்' அட்வகேட் பட்ட தாரியாகத் தேர்வு பெற்ற சிறப்புக்குரியவர் இவர். பிரபல நூல் வர்த்தகராக விளங்கிய திரு. மு. பழனியப்ப முதலியார் அவர்களின் ஏகபுதல்வர் திரு. மு. ப. அவர்கள் தம் ஆயுட் காலம் முழுதும் இவரைச் 'செல்லப் பிள்ளை' யாகவே கருதி, மிகச் சிறப்பாகவே பேணி வளர்த்தார். பட்டதாரி ஆனவுடன் சிலகாலம் வக்கீலாகத் தொழில் நடத்தினர். கல்வியாளர்களிடையேயும் வர்த்தகப் பெருமக்களுடனும் பழகிய இவர் சிறந்த குண நலன்களும், உயர் பண்பாடுகளும் கொண்டு பொது வாழ்விலும் ஈடுபட்டார். அக்காலத்தில், சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவராக இருந்த கோவை. திவான் பகதூர் C. S. இரத்தின சபாபதி முதலியார் இவரைக் கூட்டுறவுத் துறையில் ஈடுபடுத்த விரும்பி, இவரைத் தலைவராகக் கொண்டு 'சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்கள். பிற்காலத்தில் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் அகில இந்திய கைத்தறி இயக்கத் தலைவராகவும் விளங்குவார் என்று அக்காலத்திலேயே தெரிந்துதான் இவரைக் கூட்டுறவுத் துறைக்குத் திவான் பகதூர் அவர்கள் பொறுக்கி எடுத்தார்களோ எனக் கருதி வியப்படைகிறோம். 1941ல் துவங்கப் பெற்ற நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தை செம்மையுற நிர்வகித்து இன்றுவரை அதன் தலைவராய்ப் பொறுப்பேற்றுப் பெரும்

> # "சென்னிமலை ஈன்றெடுத்த சுடர்மணி"
>
> — **முருகப்பிரியன்,** சென்னிமலை. —

பணியில் இயங்கி வருகிறார். ஆரம்ப காலத்தில் இரண்டாவது உலக யுத்தம் நடைபெற்ற காலங்களில் நூல் பற்றுக் குறையாலும் வர்த்தக மந்தத்தாலும், அரசின் துணிநூல் கட்டுப்பாடுகளாலும் போதிய அளவு நூல் கிடைக்காமல் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டது. அதுசமயம் தமிழகத்தில் அநேக ஊர்களில் நெசவாளர் சங்கங்கள் ஓரளவு நஷ்டமடைந்தும், ஸ்தம்பித்தும் செயலற்றும் விட்டன. ஆயினும், நம் தலைவரின் விடா முயற்சியினாலும், உறுப்பினர்கள் அவர்பால் கொண்ட பற்றுதலினாலும் பல சிரமங்களையும் கடந்து இயங்கி வந்தது. முற்பகுதியில் மலிவு விலைச்சேலைகள், வேஷ்டி, துண்டு ரகங்களை உற்பத்தி செய்து வந்த பின்னர் 1952 முதல் படுக்கை விரிப்பு முதலிய புதிய ரகங்களைத் தயாரிக்க முற்பட்டது முதல் நிறுவனத்திற்குப் புதிய ஜீவனையும் வர்த்தக மேம்பாட்டிற்கு நல்ல திருப்பு முனையையும் தந்தது. முதலில் 54 உறுப்பினர்களையும் ரூ. 1771/- பங்குத் தொகையையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1952க்கு மேல் மேலும் புதிய உறுப் பினர்களைச் சேர்த்து படுக்கைவிரிப்பு, தலையணை உறைகள், வண்ணமிகு திரைச் சேலைகள் முதலிய புதிய ரகங்களை உயர்தரத்தில் உற்பத்தியையும் விற்பனையையும்

seasons. The export-oriented programme recently launched in the various States with hundred percent central assistance should devote more attention to this aspect of the export trade. These pilot projects must serve as catalytic agents and serve to give meaningful employment to lakhs of weavers.

Weavers' Co-operatives have not contributed, so far, in any significant measure, to the export earnings of the country. A few leading Co-operative Societies like Co-optex and Chentex in Tamil Nadu and Kerala State Handloom Weavers' Co-operative Society and a few State Export Corporations have, of late, started taking more interest in the manufacture of exportable varieties and in direct exports. Chentex (Chennimalai Weavers' Co-op. Society), a primary Society, has entered the export field successfully under the able guidance of its President Shri M. P. Nachimuthu. The other Co-operative Societies should emulate the example of this Society by allocating a portion of their production capacity exclusively for manufactring exportable items by periodically changing the designs to meet the demand of the importers. The services of Weavers' Service Centres of the All India Handloom Board should be used by the Co-operative Societies fully for developing new designs, patterns, so that, their export production will have a meaningful contribution for caputring new export markets. It is a fact that export trade requires a very dynamic and vigorous approach and both quality and delivery standards have to be rigorously met. It should be possible for the Co-operatives to play an increasing part in the export efforts, provided, they streamline their production, design and marketing operation and adhere to timely delivery.

Before concluding, it is pertinent to mention that the success in the export front is so far, due to the streneous and sincere efforts put by our enterprising exporters by dint of hard, sustained efforts and aggressive salesmanship. It is hoped that the exports would reach new heights in the years to come and bear the fruits abundantly as a result of the sincere implementation of the 20-Point Economic Programme.

●

As the Individual so the society; as the society so the nation; and as the nation so the generation.

மேற்கொண்டு, சங்கம் வளர்ச்சி பெறவும், அதன் மூலம் நெசவாளர் நலமும் வளமும் பெறுவதற்குத் திறனுடன் செயலாற்றினுர்கள். இவரின் நிர்வாகத் திறனினுலும், ஆக்க வளர்ச்சிக்குரிய பல சாதனைகளைச் செயலாற்றினுலும் சங்கம், இந்தியத் துணைக் கண்டத்தின் கூட்டுறவுத் துறையில் மிகப் பிரபலமானதொரு, முன்னணியில் நிற்கின்ற சிறந்த நிறுவனமாக விளங்குகின்றது. மில் தயாரிப்புகளில் 'அரவிந் வேஷ்டி' 'பின்னி ஷர்டிங்' 'மேட்டூர்மல்' எனச் சிறப்பாகக் கூறுவதுபோல், 'சென்டெக்ஸ்' என்ற சிறந்த வியாபாரக் குறியுடன் சங்கத்தின் உயதரக் கைத்தறித் துணிகள் உலகெங்கிலும் நன்கு ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன.

இவரின் செயலாற்றல்களின் மேன்மைகளையும் சாதனைகளையும் தனியாகச் சொல்லவும்—'சென்டெக்ஸ்' நிறுவனத்தின் உயர்வையும் சிறப்பையும் தனியாகச் சொல்லவும் இயலாத ஒரு நிலையில் ஒருசேர எழுதவேண்டிய அளவு, கூட்டுறவு வளர்ச்சியின் ஒவ்வொரு அங்கத்திலும் ஒன்றி இணைந்து நேரிடையாகச் செயலாற்றிய இவரின் நல்லியல்புகளை என்னவென்றுரைப்பது?

நெசவாளர் சமுதாய நலத்திட்டத்தின்படி அரசின் மான்யம் பெற்றும், சங்கத்தின் பொது நிதி கொண்டும், 100 வீடுகள் கொண்ட 'நெசவாளர் குடியிருப்புக் காலனி' ஒன்று அழகுற அமைத்தும். குடிதண்ணீர் வசதி, சாக்கடை வசதி, பண்டகசாலை; துவக்கப் பள்ளி, மின்விளக்கு முதலிய நலன்கள் நிலவச்செய்தும், சிறந்த கூட்டுறவுச் சின்னமாகத் திகழச் செய்துள்ளார். ஆன்மீக வளர்ச்சிக்கும் இறை பணியாற்றுதற்கும் சிறந்த முறையில் 'சித்திவிநாயகர்' கோவிலும் அமைக்கப்பெற்று உள்ளது. இங்ஙனம் நெசவாளர் சமுதாய நன்மையில் பெரிதும் ஆர்வத்துடனும், பற்றுதலுடனும் செயலாற்றிவரும் தலைவரின் சிறப்புமிகு சேவைக்குப், பாராட்டும் மதிப்பும் அளிக்கும் வகையில், சங்க உறுப்பினர் மகாசபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பெற்று, குடியிருப்புக் காலனிக்கு 'M. P. நாச்சிமுத்து நகர்' நெசவாளர் காலனி எனச் சிறப்பாகத் தலைவரின் பெயரைச் சூட்டித் தங்கள் அன்பைத் தெரிவித்துக் கொண்டார்கள். கூட்டுறவுச் சிறப்பினுக்குச் சிகரமாக 'M. P. N. நகர்' செழுமையுடன் விளங்குகிறது. நெசவாளர் குடும்பங்களின் திருமணம் முதலிய விசேஷ வைபவங்களுக்கும், சங்கத்தின் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் உதவும்படியாகச் சிறந்த கூடம் அமைத்து, அதனுள் விருந்திளர் விடுதி. வாசகசாலை, மருத்துவமனை முதலியவைகளை நிறுவியும், தேச பிதா காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வண்ணம் 'மகாத்மா காந்தி சமுதாயநல மன்றம்' எனப் பெயரிட்டுக் காலனியின் அழகுமிகு ஓவியமாகத் திகழ்கிறது. நவீன கருவிகள் அமைத்துப் பெரியதொரு சாயப் பட்டறையும். பாவடியும், விளையாடுமிடமும் அமைத்து எல்லா வசதிகளும் செய்திருக்கிறுர்கள்.

எழில்மிகு 'M P. நாச்சிமுத்து நகர்' காலனி திறப்பு விழா: அதுசமயம் தமிழக ஆளுநராக இருந்த மேதகு. மைசூர் மகாராஜா அவர்கள் தலைமையில், அமைச்சர் திரு. R. வெங்கட்ராமன். திரு N. S. S. மன்றுடியார் முதலிய பெருமக்கள் சூழ, மிகச் சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் 'வெள்ளி விழா' எனும் வெற்றி விழா: அதி சமயம், இந்திய அரசின் உப ஜனாதிபதியாக இருந்த மேதகு. V. V. கிரி அவர்கள் தலைமையில் மிகக் கம்பீரமாகவும், ராஜரீகமாகவும் கொண்டாடப்பெற்றது. அவ்வைபவத்தில் தமிழவேள் P. T. ராஜன்; அதிசய மனிதர் G. D. நாயுடு, அமைச்சு சாதிக் பாட்சா, கூட்டுறவு டாக்டர் P. நடேசன், N. S. S, மன்றுடியார் முதலிய பெருமக்கள் பலர் வருகைதந்து சிறப்பித்து மகிழ்ந்தனர். இந்துமத வளர்ச்சிக்கெனத் தம்வாழ்க்கையை அர்ப்பணித்த தவசிரேஷ்ட காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி புதிய பெரியவாள்

ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் தமது கோவை மாவட்டச் சுற்றுப்பயணத்தில், தமது பரிவாரங்களுடன் இந் நகருக்கு வருகை தந்தார்கள். இரு தினங்கள் தங்கி முகாம் செய்து, சிறப்புக்குரிய சிவபூஜைகளை வேத விதிப்படி செய்தும், நகர்வலம் வந்து, மக்களின் இறையன்பு ஆர்வத்தையும், புனிதத்தையும் கண்டுணர்ந்து மகிழ்ந்து அருட்பார்வை கொண்டு ஆசிகள் வழங்கியதும் ஆன சிறப்பு நிகழ்ச்சி. வாழ்வில் என்றும் நெஞ்சம் இனிக்கச் செய்யும் பெருஞ்சிறப்பு அம்சமாகும். அண்மையில் தமிழக ஆளுநராக இருந்த மேதகு. K. K. ஷா அவர்கள் வருகை தந்தபோதும், சமுதாய நலமன்றத் திறப்பு விழாவில் தலைமை ஏற்க, இந்திய அரசு நிதி அமைச்சர் மாண்புமிகு. C. சுப்பிரமணியம் அவர்கள் வருகை தந்தபோதும். இந்திய அரசின் துணைவர்த்தக அமைச்சர் மாண்புமிகு விஸ்வநாதபிரதாப்சிங் அவர்கள் கைத்தறித் தீவிர அபிவிருத்தித் திட்டச் செயலாற்ற வருகை தந்தபோதும், தமிழக கைத்தறித் தொழில் வளர்ச்சி ஆய்வுக்குழு திரு: சந்தானம் கமிட்டி வருகைதந்தபோதும் மிக விரிவான முறையில் நகர்மக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து மகிழ்ந்த பெருஞ் சிறப்பு நிகழ்ச்சிகள் நகரின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும், அணிகலன்களாகத் திகழ்கின்றன எனலாம். இவ் வைபவங்களில் கலந்துகொண்ட பெருமக்கள் அனைவரும் தலைவர் திரு. M. P. நாச்சிமுத்து அவர்களைப் பெரிதும் பாராட்டிப் புகழ்ந்துரை அணிவித்தவைகளினூடே உபஜனாதிபதி அவர்கள் தலைவருக்குப் 'பொன்னாடை' அணிவித்துக் சிறப்புச் செய்தது பேரொளிவீசிப் பிரகாசித்தது.

கூட்டுறவுத்துறையில் மிகுதியும் ஈடுபட்டுச் செயலாற்றுதலுடன். கல்வியாளர்களாகவும் இவர்கள் பெரும் பணியாற்றியிருக்கிறார்கள். சென்னிமலையில் 'செங்குந்தர் கல்விக் கழகம் நிறுவுவதில் பங்குபெற்றும், 'கொமரப்பா செங்குந்தர் உயர் நிலைப்பள்ளி' நிறுவியும் பல ஆண்டுகள் அப்பள்ளியின் தாளாளராகப் பொறுப்பு ஏற்றும் நடத்தினர். அவரது முயற்சியால் பள்ளிக்குப் பலவிதத் திட்டங்களுக்கு அரசினரிடம் மான்யங்கள் பெற்றும், சிறந்த ஆசிரியப் பெருமக்களை நியமித்தும் சிறப்பாக நடைபெறவும், வளர்ச்சி பெறவும் பெரிதும் திறனுடன் செயலாற்றினார்கள். உயர்நிலைப்பள்ளி தேறிய மாணவர்கள் உரிய கல்லூரிகளில் இடம் பெற்றுப் படிக்கவும், பட்டாதாரியானவுடன் அவர்களின் வேலைவாய்ப்புக்கு உதவும்படியான தம் செல்வாக்கை ஈந்தும் பலரின் முன்னேற்றகரமான வாழ்க்கைக்கு அடிகோலினார்கள். மகத்தான சேவைசெய்தார்கள்.

பல்வேறு துறைகளில் பங்குகொண்ட இவர்கள் தாம்பிறந்த நம் செங்குந்தர் குலநல மேம்பாட்டிற்காகவும் பன்னெடுங் காலமாக சேவைசெய்து வருகிறார்கள் என்பது நாமனைவரும் அறிந்த விஷயமே. நம் செங்குந்த மகாஜன சங்கத்தில் அங்கம்பெற்று, நிர்வாகசபை உறுப்பினராகவும், செயலாளராகவும் உப தலைவராகவும் தற்போது தலைவர் குழுவில் பங்கு பெற்றும் சிறப்பாகச் சேவைபுரிந்து வருகிறார்கள். அநேக ஊர்களில் செங்குந்தர் சபை பேரவைகளில் தலைமை ஏற்றும், மாநில மாநாடொன்றில் செங்குந்த இளைஞர் மாநாட்டிற்குத் தலைமை வகித்தும் நம் சமூக நன்மைக்கும் மேன்மைக்கும் ஒற்றுமையுடன் அனைவரும் சேர்ந்து பணியாற்றும் நல்ல பல திட்டங்களை எடுத்துரைத்திருக்கிறார். அமரர் வள்ளல் தி. நா. சபாபதி முதலியார், திரு. C. நடராஜ முதலியார், B. A., B. L., காஞ்சி மணிமொழியார், 'கனகாபிஷேகம்' பெற்ற திருமகள் மில்ஸ் அதிபர் திரு. கா. அ. சண்முக முதலியார், V. V. C. R. முருகேச முதலியார், நீதிபதி இரத்தின முதலியார், V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் போன்ற நம் குல திலகங்களுடன் நட்பும் உறவும் கொண்டு, நம் சமூக மக்களின் தொழில், கல்வி வர்த்தகம் முதலியவைகளின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் உறுதுணையாக முன்னின்று செயலாற்றியிருக்கிறார்கள். இதுசமயம் கோவை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தின் தலை

மைப் பொறுப்பையும் ஏற்றுச் செங்குந்தர் 13வது மாநில மாநாட்டைச் சிறப்புற நடத்து தலைத் தம் தலையாய செயலாக உணர்ந்து அயராது செயலாற்றி வருகிறார்கள். மணி விழாக்கண்ட பிராயத்தும், இளைஞர்களும் கண்டு வியக்கும்வண்ணம், அயராது செயலாற்றியது நம் செங்குந்தர் அனைவரையும் ஒருங்கிணைத்துச் சேர்த்துச் சிறப்பாக 13வது மாநில மாநாடு நடைபெற்று நிறைவு பெறத் தலைமைப் பொறுப்பமர்ந்து தளர்விலாது செயலாற்றியது, அவரின் சமூக சேவைக்குச் சிகரமாயமைந்து பொலிவுறத் திகழ்வதைக் கண்டு நாமனைவரும் இறும்பூதெய்துகிறோம். போற்றிமகிழ விழைகின்றோம்.

'சென்டெக்ஸ்' நிறுவனத்தின் தலைமைப் பொறுப்புடன், முன்னர் ஆந்திரம், கேரளம் இரண்டும் சேர்ந்திருந்த காலத்தும், சென்னை மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உபதலைவராகவும், பின்னர் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பு ஏற்று, இடையறாது திறனுடன் செயலாற்றி, கூட்டுறவுத் துறையைப் பெருமளவு வளர்ச்சியுறச் செய்தும், தமிழக நெசவாளர் சமுதாயம் பெரிதும் நலம்பெறவும் அரிய சேவை செய்துள்ளார்கள். அகில இந்தியக் கைத்தறி நிறுவனத்திலும் உபதலைவராகப் பொறுப்பேற்று, கைத்தறித் தொழிலுக்குப் பல்வேறுவகை உதவிகளை மத்திய அரசிலிருந்து பெறுதற்கு உறுதுணை புரிந்திருக்கிறார். கைத்தறித் தொழில் வளம்பெறவேண்டி மத்ய அரசிடம் இவர் விடுத்த வேண்டுகோள்களே 20 அம்சத் திட்டத்தில் 9ம் அம்சமாகக் கைத்தறித் தீவிர வளர்ச்சித் திட்டம் இடம் பெற்றிருக்கலாம் எனக் கருதுகிறோம்.

கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் சிறந்த விற்பனைச் சந்தைகளைப் பெறுதற்கு தூரத் தென்கிழக்கு நாடுகளுக்கும், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா முதலிய மேல்நாடுகளுக்கும் தூதுகோஷ்டிகளுக்குத் தலைமை தாங்கிச் சென்று, நிறைந்த வர்த்தகத் தொடர்புகளை மேற்கொள்ளச்செய்தார், தமிழகக் கூட்டுறவு நெசவாளர் சமுதாயம் இவரின் ஒப்பற்ற செயல்களில் கருத்தூன்றிக் கவனித்துப் பல ஊர்களில் இவருக்குச்சிறப்பான வரவேற்பளித்தும், 'கைத்தறித் தந்தை' என்றும் 'கைத்தறிக் காவலர்' என்றும் போற்றியும், பாராட்டுதல்களைத் தெரிவித்தும் விழாக் கொண்டாடியிருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவி, அவை மூலம் நெசவாளர்களுக்குத் தடையின்றி நூல் கிடைக்க வழி வகை செய்தார்கள். கூட்டுறவுத் துறைமூலம் நாட்டுயர்வுக்குத் தொண்டாற்றும் பெரும்பணியில் ஒப்பாரும் மிக்காருமின்றி செயல் திறனுடன் பணிகளை மேற்கொண்ட இவரை நற்பெயரும், புகழும், சிறப்பும், நல்லோரின் உயர்நட்பும் தாமே வந்தடைந்தன எனலாம். அமரர். நேருஜி, ராஜாஜி, காமராஜ், பெரியார் ஈ வே ரா; அண்ணாதுரை ஜீவா, P. T. ராஜன், மா. பொ. சி., முதலிய சர்வகட்சித் தலைவர்களும், சித்தாந்த செம்மல்கள் டாக்டர் இராதாகிருஷ்ணன், மேதகு. மைசூர் மகாராஜா போன்றவர்களும், முன்னாள் ஜனாதிபதி V.V. கிரி, மாண்புமிகு C. சிப்ரமணயம், R. வெங்கட்ராமன், சோமப்பா, டாக்டர் P. நடேசன், G. D. நாயுடு முதலானவர்களும் இவரைச் சிறந்த கூட்டுறவுத்துறைத் தலைவராகப் பாராட்டித் தங்கள் அன்பையும் ஆசிகளையும் தந்து போற்றியுள்ளனர்,

'சென்டெக்ஸ்' நிறுவனத்தின் 1941ல் துவங்கியபோது 54 உறுப்பினர்களும் பங்குத்தொகை ரூ. 1771/ செலுத்தியதுமுதல், சிறப்பாகச் செயலாற்றி, வர்த்தகச் செழுமையும், வளமையும் கொண்டு திறனுடன் நிர்வகித்து வந்ததில் தற்சமயம் பாரத நாட்டில் இணையற்றதொரு முதல்தரமான கூட்டுறவு நிறுவனமாக விளங்குகிறது

என்பதைக் கீழ்க்காணும் விபரங்களிலிருந்து தெரிந்துகொள்கிறோம். தவிர 'சென்டெக்ஸ்' நிறுவனத்தின் படுக்கை விரிப்புகள், அழகோவியமென்ன வண்ணமிகு அரங்கத் திரைத்துணிகளும், தலையணை உறைகளும் விரும்பி வாங்கும் நகரவாசிகளின் நலனையனுசரித்துச் சிங்காரச் சென்னையிலும், ஹைதராபாத்திலும் நிரந்தர விற்பனைக் கூடங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். பாரதமெங்கும் இன்னும் பல கிளைகள் நிறுவி, ஆல்போல் வளர்ந்து பல்வளமும் பெருகுவதாகுக.

'செய்யுந் தொழில்களைச் சீர்தூக்கிப்பார்க்கின் நெய்யுந்தொழிலுக்கு நிகரில்லை' எனப் பொய்யாமொழிக்கு ஒப்ப, சொல்லுவதுமட்டுமல்லாது, செயல் வேந்தராகவும் திகழும் இவர்கள் தலைமை ஏற்றுள்ள 'சென்டெக்ஸ்' கூட்டுறவு நிறுவனத்தில், நெசவாளர்கள் 580 பேர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து, ரூ. 3.40 இலட்சம் பங்குத்தொகை செலுத்தியிருக்கிறார்கள். கடந்த ஆண்டில் ரூ. 8.75 இலட்சம் ஊதியம் வழங்கப்பெற்றுள்ளது. நிறுவனத்தின் நலநிதியாக ரூ. 14.00 இலட்சமும், ஒதுக்கீட்டு நிதிகளில் ரூ. 12.67 இலட்சமும் பங்கு முதலீட்டு நிதியில் ரூ. 2.36 இலட்சமும் சேர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் ரூ. 59.19 இலட்சம் துணிகளை உற்பத்திசெய்தும், ரூ. 77.87 இலட்சம் துணிகளை விற்பனைசெய்துமுள்ளது. இப்புள்ளி விபரங்கள் ஈடு இணையில்லாத பெரும் சாதனைகளாகும். அண்மையில் 'சென்டெக்ஸ்' நிறுவனத்திற்கு வருகைதந்து, பார்வையிட்ட மத்திய அமைச்சர் மாண்புமிகு V. P. சிங் அவர்கள் கைத்தறிக் கூட்டுறவுத் துறையில், பாரத தேசத்திலேயே 'சென்டெக்ஸ்' நிறுவனமே முதல் இடம் பெற்றுச் சிறந்து விளங்குவதாகவும், இதற்கொப்பாக வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை' என்றும் வியப்பு மேலிட்டு வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்கள்.

கண்ணுக்குச் சரியாகப் புலப்படாத சிறு ஆலம் விதையின் மரம் ஒரு அரசின் படைக்கும் நிழல்தரும் அளவுக்குப் பரந்து, விரிந்து. பசுமையாய், வளர்ந்து தோன்றுவதுபோல், இக் கூட்டுறவு நிறுவனம் விளங்குதற்கு ஒப்புயர்வற்ற நிர்வாகத்தின் மேன்மையைக்காட்டுகிறது. நிறுவனத்தின் அதன் ஒவ்வொரு செயல் திறனிலும் இடையறாது கவனம் செலுத்தியும் இனிமையும், அன்பும், பண்பும், பரந்த நோக்கும் கொண்ட உரிய நெறிகளை வாழ்வில் இணைப்பாகக் கொண்டிலங்கும் 'கைத்தறிக் காவலர்' தலைவர் திருமிகு M. P. நாச்சிமுத்து அவர்கள் நம் சென்னிமலை செங்குந்தர் சமூகத் தவப் புதல்வர்களில் சிறந்த ஒரு திருமகனை ஒளிவீசிப் பிரகாசிப்பதைக் கண்டுவகை கொள்கிறோம், 'தோன்றிற் புகழொடு தோன்றுக' எனும் பொய்யாமொழிக்கொப்ப, சான்றோர்கள் நடுவிருக்கும் இவருக்குத் திருவருட் கிருபையால் சிறப்புமிகு ஜெயமும், கீர்த்தியும், நல்கவும், எல்லா நற்பேறுகளும் வளமாகப் பெற்று நலமாகப் பல்லாண்டு வாழ்க! வாழ்க!! என வாழ்த்துக்கூறி இதயஞ்சலி செய்வோமாக.

பவானித் தலபுராணம்

ஒராட்டுக்குப்பை வாசுதேவ முதலியார் எழுதிய பவானித் தல புராணத்தை குட்டியண்ண முதலியார் அச்சிட்டார். ஆண்டு தெரியுமா? கி. பி. 1882 ல்!

ஆம் 96 ஆண்டுகட்கு முன்!!

★ செங்குந்தர்களாலேயே நிர்வகிக்கப்படுகிறது.

★ கைத்தறி உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகியோருக்கு பெருமளவில் ஆதரவளிப்பது.

★ செங்குந்தர்களின் தொழில், பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருப்பது.

★ நம்பிக்கைக்கும், நாணயத்திற்கும் பெரும் புகழ் பெற்றது.

BLUE MOUNTAIN
CHITS & FINANCE (P) LTD

புளூ மவுண்டன்

சிட்ஸ் & பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்,

55, தம்பு செட்டித் தெரு, **சென்னை-1.**

இயக்குனர் குழு:

1) M. S. **ரெங்கய்ய முதலியார்,** B. A., தலைவர், ஆடிட்டர், சென்னை-31.

2) S. **சபாபதி முதலியார்,** மேலாளும் பங்குதாரர், யேல் இண்டஸ்ட்ரீஸ், சென்னை-1.

3) **தி. சே. பழநிவேலு முதலியார்,** மேலாளும் பங்குதாரர் மதராஸ் ஹேண்ட்லூம் கம்பெனி, சென்னை-1.

4) S. **தியாகராஜ முதலியார்,** B. E., மேலாளும் இயக்குனர், சதர்ன் அல்லாய் பவுண்டரீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-60.

5) R. **பிச்சை முதலியார்,** B. A., B. L., இயக்குனர், மதராஸ் பளயகாட் கம்பெனி பிரைவேட் லிமிடெட், சென்னை-1.

6) S. **ரெத்தினவேலு முதலியார்,** பொது மேலாளர், சதர்ன் அல்லாய் பவுண்டரீஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-60.

7) M. **சோமசுந்தர முதலியார்,** பங்குதாரர், சுப்பீரியர் டெக்ஸ்டைல்ஸ், சென்னை-1.

8) K. R. **ஆரவமுத முதலியார்,** பங்குதாரர், ஸ்ரீ பாலாஜி டிரேடர்ஸ், சென்னை-1.

9) M. S. **விஜயசேகர முதலியார்,** B. com., சென்னை-1.

‘உழவர்’

புலவர். க. இராமசாமி, ஈரோடு.

கருத்தமேனி, குழிவிழுந்த கண்ணிரண்டு;
காவிபடி பற்கோவை; நெஞ்செ லும்பு
உருக்கொண்டு உலவிவரு உருவந் தானே
உழவனவன் உருக்குலைந்த உருவ மாகும்!
கருவாடக் கருக்கலில்தான் கலப்பை தூக்கி
காடுழுகக் கருத்துடனே கட்டிக் கொண்ட
முருகில்லா முண்டாசுக் கோவ ணத்தால்
மூடிட்ட முடவனவன் உழவன் அன்றோ?

உழுபவர்கள் உலகத்தின் ஆணி என்றே
உரைத்திட்டான் உயர்புலவன் வள்ளு வன்தான்!
பழுதில்லாத் தொழில்பலவே பாரி ருந்தும்
பழமைமிகு தொழிலொன்று உழவு தானே!
அழுமக்கள் அரைவயிற்றுக் கஞ்சிக் காலாய்
ஆடியதில் ஆற்றுவிக்கும் காற்றாய் வீச
அழுமவர்தம் பசிப்பிணியைப் பறக்கச் செய்யும்
அருந்தொழிலைச் செய்பவரும் உழவர் அன்றோ?

உலகுய்ய உழவர்தாம் உணவை எண்ணி
உவந்தின்று உழைக்கின்றார்; ஆயின் மக்கள்
மலரனைய மங்கையவள் உறவை நாடி
மக்களினம் பெருக்கிடவே உழைக்கின் றார்கள்!
நிலமென்னும் நங்கையவள் தன்னைத் தொட்டு
நிமிர்ந்துழவே புரிந்துணவைப் பெருக்கச் சொல்லப்
பலரின்று பெருக்கத்தின் தீமை கண்டும்
பதினாறும் பெறுகவென வாழ்த்தும் சொல்வார்!

மாடுகட்டிப் போரடித்தால் மாளா தென்றே
மாவிலங்கு ஆனைகட்டிப் போர டித்தார்;
பீடுற்ற பொன்மொழியை ஏட்டில் தானே

பிறந்திட்ட நாமின்று நன்றே கற்றோம்!
நாடுகின்ற நற்றொழிலாம் உழவு தன்னை
நாமின்று ஏற்றோமா? இல்லை யன்றோ?
வாடுவார்தம் வறுமையினை விரட்டி யின்பம்
வழங்குதற்கே வந்திட்டார் உழவர் தாமே!

மாடிரண்டை மாண்புறவே ஏரிற் பூட்டி
மதித்தொழுகும் கோலேந்தி காடு தன்னை
ஆடிவரு முன்னுழுது விதைவிதைக்க
ஆவலுடன் ஆதவனின் கொடுமை யேற்றுப்
பீடின்றிப் பெண்டாட்டிக் கொண்டுவந்த
பிழைப்புக்காய் காய்ச்சிட்ட கஞ்சி தன்னை
வாடிட்ட மிளகாயைக் கடித்துக் கஞ்சி
வயிற்றடக்கும் வளமன்றோ உழவ னுக்கு?

முதுமையுற்றும் முதுகொடிய மாடு ழைக்கும்
முறையொப்ப முழுநாளும் உழைத்து ழைத்து
"அதுவன்றோ அவன்விதித்த விதி'யென் றெண்ணி
அரைவயிற்றுக் கஞ்சிகே அல்லல் பட்டுப்
புதுமைமிகு பசுமையெனும் புரட்சி தன்னைப்
பூத்திடவே புழுதிபடி உலகந் தன்னை
மதுசிந்து மலர்க்காடாய் ஆக்கு வித்தோன்
மண்மகளாள் மகனுகும் உழவ னன்றோ?

வில்லேரில் உழுவார்தம் பகைமை தன்னை
விரும்பித்தான் ஏற்றாலும்; ஏற்றி டாதே
சொல்லேரில் உழுவார்தம் பகைமை தன்னை!
செம்மையுறத் திருக்குறளும் உழவர் தம்மை
எல்லாரும் ஏற்குவணம் எழுதி வைக்க,
எத்துணைபேர் இவ்வுலகில் உழவர் தம்மை
பல்லாண்டு வாழ்கவென உள்ளத் தாலும்
படுந்துயரை எண்ணியின்று போற்று கின்றார்!

உழவுக்கும் தொழிலுக்கும் வணக்கம் செய்வோம்
உவகையுடன் பாரதியும் பாடிச் சென்றான்;
கழனிதனில் காலைமுதல் இரவு வந்தும்
கவலையுடன் கணக்காகத் தொழிலைக் செய்யும்

உழவனவன் உணவின்றி வாடு கின்ருன்;
உயிராகும் உணவுதனைப் பதுக்கி நாளும்
உழவனவன் உறவுதனை மதித்தி டாமல்
உலவுகின்ருர் உலகமதில் உவகை பொங்க!

நல்குரவை உழவென்னும் தலைப்பிற் குப்பின்
நற்குறளில் நமக்களித்த நோக்க மென்ன?
தொல்லுலகு தொழிலாகும் உழவு தன்னைத்
தொல்லையெனக் கைவிட்டால் தொல்லை என்னும்
நல்குரவு நாளைநமை நாடி வந்தே
நலிவடையச் செய்யுமிங்கே; மக்கள் தம்மை
பல்குழுவும் பாழ்செய்யும்; உழவர் தம்மைப்
பகைத்திட்டால் பாரதமும் அடிமையாகும்!

கண்ணழகு கன்னிக்கு வேண்டும் என்பார்
கருவாகும் உழவரைத்தான் கருத மாட்டார்;
பண்ணழகு பாடலுக்கு வேண்டும் என்பார்
பாட்டாளி உழவரைத்தான் போற்ற மாட்டார்!
தண்ணிலவு இரவுக்கு வேண்டும் என்பார்
தாளாளன் உழவரைத்தான் தள்ளு கின்ருர்!
மண்ணழகு மாநிலத்தில் வேண்டும் என்பார்
மறவனவன் உழவனைத்தான் மறந்து நிற்பார்!

கருவில்லா பிறப்புக்கு அழகே இல்லை
கழனிதனை உழுதார்க்கு அழிவே இல்லை;
புருவமிலா கண்ணுக்கு அழகே இல்லை!
புதுமைதரு உழவருக்கு அழிவே இல்லை;
இருப்பில்லா செலவிற்கு அழகே இல்லை
இருந்துண்ணு உழவருக்கு அழிவே இலலை;
உருவில்லா படைப்பிற்கு அழகே இல்லை
உணவாக்கும் உழவருக்கு அழிவே இல்லை!

செந்தமிழைத் தமிழ்நாட்டைத் தமிழர் தம்மைச்
சேர்ந்திருக்கும் துயில்நீக்கி எதிர்கா லத்தில்
விந்தையுறு மளவிற்கு உழவர் உள்ளம்
விரும்புகின்ற பணியாவும் புரிந்தே நன்மை
முந்தவரு முயற்சிகளைச் செய்வோம் நாளும்
முத்தமிழால் முருகுறுவோம் வையம் எங்கும்!
நந்தமிழே நிறைதற்குத் தொழிலே செய்வோம்
நம்நட்பை ஆக்குவித்த உழவால் உய்வோம்!

தென்னிந்திய செங்குந்தர் மாநில சமூக கைத்தறி,
மாதர் மாநாடுகள் ஈரோட்டில் சிறப்புடன்
நடைபெற எங்கள் வாழ்த்துக்கள்.

N. A. வேலப்ப முதலியார்,

ஜவுளி வியாபாரம்,

10/2, சுப்பிரமணிய சிலை தெரு,

சென்னை - 600059.

தென்னிந்திய செங்குந்த சமூக மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினரில் சி



திரு. A. S. துரைசாமி முதலியார்



திரு. A. கிருஷ்ணன்



திரு. P. நாச்சிமுத்து முதலியா



திரு. V. V. C. R. M. கந்தசாமி B. SC.,

திரு. A. கைத்தமலை

திரு. E. V. பாலசுப்பிரமணி

மலரை வெளியிடுபவர் :

A. V. RM. சங்கரநாராயண முதலியார்,

உரிமையாளர் :

கோமதி மில்ஸ், அம்பாசமுத்திரம்.

மலரைப் பெறுபவர் :

திரு. சங்கர முதலியார், B. A., B. L.,

வழக்கறிஞர், சேலம்.



மாரியப்பன் படத்
திறப்பாளர்
திரு. **K. A. காசிவிஸ்வநாத முதலியார்**
திருச்செங்கோடு.



T. N. சபாபதி முதலியார் படத்
திறப்பாளர்
திரு. **V. ரத்ன முதலியார்**, B. A., B. L.,
சென்னை.

கைத்தறிக் கண்காட்சிப்
பொறுப்பாளர்
திரு. **K. A. பழனியப்ப முதலியார்**
ஈரோடு.



திரு. **A. K. அருணாசல முதலியார்**

திரு. **R. வெங்கடாஜலம்**

தில்லையாடி வள்ளியம்மை

ஆக்கம் — சு. இராமலிங்கம்

முன்னுரை :

உலக நாடுகள் பல; அவற்றுள் தென்னாப்பிரிக்காவும் ஒன்று. தமிழர்களாகிய நாம் அந்நாட்டை நினைக்கின்றபோது நம் கண்முன்னே அந்நாட்டு நிறவெறிக் கொடுமையின் கோரத் தாண்டவம் தோன்றுகின்றது; அக்கொடுமைகளைக் களைந்தெறியத் தென்னாப்பிரிக்க அரசை எதிர்த்துச் சத்தியாகிரகப்போர் நடத்திய காந்தியடிகள் தோன்றுகின்றார்; அச் சத்தியாகிரகப் போரில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு உயிர்த் தியாகம் புரிந்த தில்லையாடி வள்ளியம்மை தோன்றுகின்றார்! ஆம்; காந்தியடிகள் நடத்திய தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகப் போராட்டச் சரித்திரத்தில் வள்ளியம்மையின் தியாகம் முதலிடம்பெறும் சிறப்பு வாய்ந்தது எனலாம்!

காந்தியடிகள் உள்ளம் :

தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் நடத்திய பல போராட்டங்களில் அஞ்சா நெஞ்சுடன் ஆருயிர் ஈந்தவர் பலர். என்றாலும் வள்ளியம்மையைப் போன்று அவர் உள்ளத்தைத் தொட்டவர்கள் யாருமிலர். இதனைக் காந்தியடிகள் உள்ளமே நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. அவர் சொல்லுகிறார்,

"தென்னாப்பிரிக்காவில் எவருடைய தியாகம் ஆண்டவனுக்கு உகந்ததாய் இருந்தது; பயனளித்தது; என்று ஒருவரும் சொல்ல முடியாது. ஆனால் வள்ளியம்மையின் தியாகமும், மற்ற சகோதரிகளின் தியாகமும் பயனைப் பெற்றன என்பது நிச்சயம்."

—காந்தி நூல்கள் முதல் தொகுதி, பக்கம் 371

அவரே மேலும் சொல்லுகிறார்,

"வள்ளியம்மை பிறந்த இடம் ஜோகன்ஸ்பர்க். நான் இங்கே பேசும்போது அந்த இளம் பெண்ணின் உருவம் என் கண் முன்னால் நிற்கிறது. சத்திய லட்சியத்திற்காக வள்ளியம்மை உயிர்த்தியாகம் செய்தாள். லட்சியத்தில் குருட்டு நம்பிக்கை கொண்டவள். எனக்குத் தெரிந்துள்ள அளவுக்கு அவளுக்கு விஷயங்கள் தெரியா. சாத்வீக எதிர்ப்பு என்ன என்பதை அவள் அறியாள். இதனால் தன் சமூகம் என்ன நன்மையை அடையும் என்பதும் வள்ளியம்மைக்குத் தெரியாது. தன் நாட்டு மக்களின் எல்லையற்ற உற்சாகத்தினால் பரவசம் அடைந்தாள்; சிறைபுகுந்தாள்; நோயுற்று உடல்நிலை பாழாகி வெளியே வந்தாள்; சிலதினங்களில் மாண்டாள்"

—காந்தி நூல்கள் முதல் தொகுதி, பக்கம் 491

எனவே வள்ளியம்மையின் தியாக வரலாற்றை நாம் அறிந்துபோற்றுதல் நம்முடைய தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.

தோற்றமும் வளர்ச்சியும் :

வள்ளியம்மையின் தந்தையார் ஆர். முனிசாமி முதலியார். இவர் புதுச்சேரி முதலியார். ஜோகன்ஸ்பர்க்கில் திண்பண்டங்களும், பலசரக்குகளும் விற்பனை செய்யும் கடை வைத்திருந்தார்.

தாயார் மங்களத்தம்மாள் என்று அழைக்கப்பட்ட ஜானகியாவர். இவர் தஞ்சை மாவட்டத்திலுள்ள தில்லையாடி கிராமத்தில் பிறந்தவர். இருவரும் நமது செங்குந்தர் குலத்துதித்த தூயவர்கள் ; தியாகச் செம்மல்கள். நமது வள்ளியம்மை அவ்விருவருக்கும் ஜோகன்ஸ்பர்க்கில் 1898ம் ஆண்டு மூத்த மகளாகப் பிறந்தாள், அவளுடைய இளம் வயதில் அவர்களுடைய நாகரிகமான குடும்பமாகத்தான் இருந்திருக்கிறது. வள்ளியம்மையும் பெற்றோரால் நாகரிகமான முறையிலேயே வளர்க்கப் பெற்றாள். அவள் அங்கிருந்த அரசினர் பள்ளியில் படித்தாள்.

உள்ளக் கொதிப்பு :

அப்போது வள்ளியம்மைக்கு வயது பதினாறுதான் ஆகியிருந்தது. உலகத்தைச் சரியாகக்கூடப் புரிந்துகொள்ள இயலாத இளமைப் பருவம் அது. அவ்வளவாகக் கல்வியறிவும் பெற்றவள் அல்லள்; சத்தியாகிரகம் என்றால், அது என்ன என்றே அறியாதவள். என்றாலும் அந்த வயதிலே அந்த இளநங்கையின் உள்ளமும் கொதித்தெழும்படியாக, தென்னாப்பிரிக்க நீதி மன்றம் "தென்னாப்பிரிக்காவில் இந்திய முறைப்படி நடைபெற்ற திருமணங்கள் செல்லா என்று அறிவித்தது". எனவேதான் வள்ளியம்மையின் உள்ளம் நெருப்பாயிற்று ; சொற்கள் கனலைக்கக்கின.

"இந்த முடிவை ஏற்றுக்கொள்வதனால் என்னுடைய தாய் என்னுடைய தந்தைக்குக் கட்டிய மனைவி ஆகமாட்டாளே! நான் முறைப்படி பிறந்த மகள் ஆகமாட்டேனே?" என்றெல்லாம் எண்ணிய வள்ளியம்மையின் நெஞ்சம் வெடித்துவிடும் போல இருந்தது.

இந்தியர்கள் திரண்டனர் :

இந்தியர்களுடைய மானமே இப்புதிய சட்டத்தினால் அழிந்துபடும் நிலை ஏற்பட்டது. எனவே இந்தியர்கள் அனைவரும் ஒன்று திரண்டனர் ; தம் உயிர் கொடுத்தேனும் மானம்காக்க முன்வந்தனர் ; சத்தியாகிரகப் பேரணி நடத்தத் திட்டமிட்டனர்.

வள்ளியம்மையின் தந்தையார் அச்சமயம் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். ஆகவே அவரை மருத்துவ மனையில் சேர்த்துவிட்டு, வள்ளியம்மையும், அவள் தாயாரும் இந்த அநியாய சட்டத்தை எதிர்த்து முறியடிக்க வரிந்து கட்டிக்கொண்டு அமைதிப்போர் புரியப் புறப்பட்டனர்.

போரில் குதித்தாள் :

அன்று 1913ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் 29ஆம் நாள் 'ஜோகன்ஸ்பர்க்' கிலிருந்து 'நியூகாசி' லுக்குப் புறப்பட்ட சத்தியாகிரகப் பெண்கள் பேரணியில் சேர்ந்துகொண்டனர், வீராங்கனை வள்ளியம்மையும் அவள் தாயாரும். அவள் இளநங்கையாக இருந்தாலும் அணியில் நடந்து சென்றதுடன் தனது கடமை முடிந்துவிட்டதாக எண்ணவில்லை. சார்லஸ் டவுன், டண்டி, லேடிஸ்மித், மாரிட்ஸ்பர்க். டர்பன் போன்ற முக்கியமான இடங்களில் எல்லாம் சத்தியாகிரகப்படையினர் தங்கிச் சென்றபோது, அந்த அந்த ஊர்களில் எல்லாம் தன்னால் இயன்றமட்டும் தொண்டுகள் செய்தாள்.

சிறைப்பட்டாள் :

அவள் சென்றகுழு கைது செய்யப்படவில்லை. எனவே மீண்டும் 'நியூ காசிலி' லிருந்து புறப்பட்டு அவளது குழு 'டிரான்ஸ்வாலு'க்குள் நுழைந்தது. அப்பொழுது அந்நாட்டு அரசினர், அவளையும் அவளது அன்னையையும், மற்ற பெண்களையும் 'வால்க்ஸ்ரஸ்ட்' என்ற இடத்தில் 1913ஆம் ஆண்டு. டிசம்பர்த் திங்கள் 22-ஆம் நாள் கைது செய்தனர்; அவர்களுக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்து 'மாரிட்ஸ்பர்க்' சிறையில் அடைத்து வைத்தனர்.

உடல்நலம் கெட்டாள் :

சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட உடனேயே வள்ளியம்மையின் உடல் நலம் பாதிக்கப்பட்டுவிட்டது. சிறைக்குள் படுத்த படுக்கையாக இருந்தாள். இடையே காந்தியடிகளுக்கும் 'ஸ்மட்சு'க்கும் ஏற்பட்ட தற்காலிக உடன்பாட்டின்படி அவளுடைய தண்டனை முடிவதற்கு முன்னமேயே 1914-ம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள், 11-ஆம் நாள் அன்று விடுதலையானாள். அச்சமயமோ அவளுக்கு மிகக்கடும் நோய்!

பரிதாப நிலை :

விடுதலை பெற்ற வள்ளியம்மை தள்ளாடித் தள்ளாடிச் சிறையின் வாயிற் புறம் வந்தாள். அப்போது காந்தியடிகளும், அவரது நண்பர் 'போலக்கும்' அவளைப் பார்க்க அங்கு வந்தனர். அப்பொழுது அவள் மயக்கம் போட்டு விழக்கூடிய நிலையில் இருந்தாள். வள்ளியம்மையின் தாயார் விரைவாக மகளை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கும் ஆவலில் இருந்தார். ஒரு சமுக்

காளத்தைவிரித்து அதில் வள்ளியம்மையைப் படுக்கவைத்து,வள்ளியம்மையின் தாயாரும் 'போலக்'கும், காந்தியடிகளும் மெதுவாகத் தூக்கிவந்தார்கள். தம்மால் இவ்வாறு வள்ளியம்மையும், அவள் தாயாரும் கவலையும் பரபரப்பும் அடைய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டதே என்று காந்தியடிகள் கவலைப் பட்டார். வள்ளியம்மை குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே விடுதலை ஆகியிரா விட்டால் சிறைச்சாலையிலேயே இறக்கும்படி நேர்ந்திருக்கும் என்பது திண்ணம்.

தியாகக் குடும்பம் :

வள்ளியம்மையை வீட்டிற்கு அழைத்து வருவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்தான், அவள் தந்தையார் மருத்துவ மனையில் இரண சிகிச்சை செய்யப்பெற்றுக் குணமாகி வீட்டிற்கு வந்திருந்தார். அவர்க்கு நோய்மட்டும் ஏற்படாமலிருந்தால் அவரும் தம் மகளோடும், மனைவியோடும் சேர்ந்து சிறை சென்றிருப்பார். என்றாலும் அவர்களுக்கும் முன்பே, அவர் ஒரு முறை சிறை சென்று திரும்பியவர்தான். எனவே வள்ளியம்மையின் குடும்பமே ஒரு தியாகக் குடும்பம் என்பதில் ஐயமில்லை.

உயிர்த்தியாகம் :

வள்ளியம்மை நல்ல உயரமான, அழகான பெண், ஆகவே உடல் நோயினால் அவள் மெலிந்து கிடந்தபோது அவளைப் பார்ப்பதற்குப் பரிதாப மாக இருந்தது. அவளின் இந்த அவல நிலையைக் காந்தியடிகளே,

"நான் அவளைப் பார்த்தபோது, படுத்த படுக்கையாகவே இருந்தாள், உயரமானவளாகையால் மெலிந்து, நலிந்து இருந்த அவள் உடல் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது"

—**காந்தி நூல்கள் முதல் தொகுதி, பக்கம் 369**

என்று குறிப்பிடுகிறார். வள்ளியம்மையை அவளது வீட்டிலேயே போய்ப் பார்த்த காந்தியடிகளுக்கு மிகுந்த வருத்தமாக இருந்தது.

"வள்ளியம்மா! நீ சிறை சென்றதற்காக வருந்துகிறாயா?" என்று அடிகள் கேட்டார்.

"வருத்தமா? இப்போதுகூட இன்னொருதடவை கைது செய்யப் பட்டால் நான் சிறைக்குச் செல்லத் தயார்" என்றாள் அந்த வீராங்கனை.

"அதனால் நீ இறந்துபோவதாக இருந்தால் என்ன செய்வாய்?"

'அதை நான் பொருட்படுத்தவே மாட்டேன். தாய் நாட்டிற்காக உயிரைக் கொடுக்க விரும்பாதவர்கள் யார் இருப்பார்கள்?"

—**காந்தி நூல்கள் முதல் தொகுதி, பக்கம் 369-70**

காந்தியடிகளுக்கும் வள்ளியம்மைக்கும் இவ்வுரையாடல் நடைபெற்ற சில நாட்கள் கழித்து 22—2—1914 அன்று வள்ளியம்மை இவ்வுலக வாழ்வை நீத்து வானுலகு அடைந்துவிட்டாள். ஆம்; எலும்பாலும், தோலாலும் ஆன உடம்பை விட்டுப் புகழுடம்பைப் பெற்றுவிட்டாள்!

காந்தியடிகள் இரங்கல் உரை:

காந்தியடிகள் வள்ளியம்மை இறந்ததும் 'இந்தியன் ஒப்பினியன்' என்னும் இதழில்,

"இந்தியாவின் புனித மகள் ஒருத்தியை இழந்துவிட்டதற்காக வருந்துகிறோம். ஏன்? எதற்கு? என்று கேட்காமல் தனது கடமையுணர்ந்து ஆற்றிய காரிகை அவள். மாதர்களுக்கு அணிகலன்களான துன்பத்தைச் சகிக்கும் மனோபலம், தன்மானம். நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவள். அவளுடைய உதாரணம் இந்திய சமுதாயத்தில் வீணாகப்போகாது என்று நம்புகிறேன்"
என்று அவள் இறந்ததற்காக வருந்தியும் அவளது தியாகத்தைப் புகழ்ந்தும் எழுதியுள்ளார்.

வள்ளியம்மையைப்பற்றிக் குறிப்பிட நேர்ந்தபொழுதெல்லாம் காந்தியடிகளின் உள்ளம் நெகிழ்ந்துவிடும். "ஒருவேளை என்னுடைய தமையனாரின் (இலட்சுமிதாஸ் காந்தி) மரணத்தைக்காட்டிலும். வள்ளியம்மையின் மரணம் எனக்குப் பேரிடியாக இருக்கலாம்" என்று ஒருமுறை அவர் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை:

வள்ளியம்மையின் உயிர்த்தியாகத்தைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் முறையில் "வள்ளியம்மை மண்டபம்" ஒன்றை நிறுவுவது என்றுதென்னாப்பிரிக்க இந்தியர்கள் முடிவு செய்தனர். ஆனால் அதனைச் செயல்படுத்தவில்லை, அதுபற்றிக் காந்தியடிகள் தமது 'தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகம்' எனும் நூலில் குறிப்பிட்டுவிட்டுக் கூறிய சொற்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சிறப்பினைப் பெற்றதாகும்.

அவர் சொன்னார்,

"மண்டபம் கல்லினாலும், காரையினாலும் கட்டினால்தான் என்ன? கட்டப்படாவிட்டால்தான் என்ன? வள்ளியம்மை தொண்டு அழியாதது. தன் கரங்களினாலேயே சேவை என்னும் கோவிலை அவள் எழுப்பினாள். அவளுடைய மாண்புமிக்க உருவம் பலர் இதயத்தில் நிரந்தரமாகப் பதிந்து இருக்கிறது. இந்தியா உள்ளவரையில் தென்னாப்பிரிக்கா சத்தியாகிரக சரித்திரத்தில் வள்ளியம்மை பெயரும் நீங்கா இடம் பெற்றிருக்கும்"

—காந்தி நூல்கள் முதல் தொகுதி பக்கம் 370

ஆம்; இன்றும் அவளது பெயர் நிலைத்து நிற்கத்தான் செய்கின்றது,

வாழ்க வள்ளியம்மை! வெல்க அவள்தம் தியாகம்!

உயர்திரு. ஆக்கூர் சு. இராமலிங்க முதலியார்
தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கத் தலைவர்



உயர்திரு. D. சேதுராமன்

கங்கை வேடனும் காளத்தி வேடனும்

அருள்மொழியரசு திருமுருக
[redacted] கிருபானந்தவாரியார்.

அன்பு என்ற சிறந்த பண்புடன் கூடியிருப்பதுதான் உயிர் வாழ்க்கை அன்பு இல்லையானால் அவ்வுடம்பு எலும்பின்மீது தோல் போர்த்திய ஒரு பொம்மை போன்றது.

"அன்பின் வழிய துயிர்நிலை, அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த வுடம்பு"

என்கின்றார் திருவள்ளுவர். ஆகவே உயிர் வாழ்க்கைக்கு உயிராக இருப்பது அன்பு.

உயிர்களின் சிகரமாக இருப்பவன் மனிதன். ஆகவே மனிதன். அன்புடைமை மேற்கொள்ளவில்லையானால் அவன் மனிதனாகமாட்டான். இந்த அன்புடைமை உயர்ந்த பண்புடையார் பால் காணப்படும்.

கருடனுடைய குஞ்சு பறக்குமானால் அதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆமைக் குஞ்சு ஆகாயத்தில் பறந்து போனால் அது ஆச்சரியமல்லவா?

அதுபோல் கொலை புலை பரம்பரையாகவே இல்லாத அந்தணர்—சைவர் முதலியோர் அன்புடையவராக இருந்தால் அது ஆச்சரியம் ஆகாது. பரம்பரையாகவே கொலை புலை முதலிய கொடுங் குணங்கள் நிறைந்த வேடர் மரபில் பிறந்த ஒருவர் அன்புக்கு உறைவிடமாக—அன்பின் சிகரமாக விளங்குவாரானால் அது மிக மிக ஆச்சரியமாகும்.

கங்கைக் கறையில் வாழ்ந்த குகனும், காளத்தியில் அருள் பெற்ற கண்ணப்பரும் வேடர் குலத்தில் வந்தவர்கள். இருவர்களும் அன்புருவமாகத் திகழ்ந்தார்கள்.

மாணிக்கவாசக சுவாமிகள் சைவசமய குரவர்கள் நால்வரில் தனி சிறந்தவர். கல்லுங் கசிந்துருகுமாறு கனியமுதம் அன்ன திருவாசகத்தைப் பாடியருளினவர். இத்தகைய பெருமானார் வியந்து பாராட்டுகின்றார் கண்ணப்ப நாயனாரை.

அவர் பாராட்டுகின்ற அழகே ஒரு தனிச் சுவையானது 'சமான மில்லாதவர்கள் இருவர்'' என்கின்றார். ''அந்த இருவர் யார்?'' என்றால் ''கண்ணப்பர் ஒன்று' 'நான் ஒன்று'' என்கிறார்.

''கண்ணப்பருக்கும் இந்த வுலகிலே நிகர் கிடையாது; அதுபோல் எனக்கும் இந்த வுலகில் நிகர் கிடையாது;என்றால் மாணிக்கவாசகர் தற்பெருமை பேசுகின்றாரா? என்று தோன்றும். இல்லை, இல்லை. ''அன்புடையவர்களிலே கண்ணப்பருக்குச் சமானம் இல்லை. அன்பு இல்லாதவர்களிலே எனக்குச் சமானம் இல்லை என்கிறார்.

ஆ! ஆ! என்ன அருமை! அன்பின் உச்சியில் கண்ணப்பரும், அதன் அடியில் மாணிக்க வாசகரும் நிற்கின்றார்கள்.

அந்தப் பாடல் இது.

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

மார்க்கத்தில் போட்டுத் தேய்ந்த பழஞ் செருப்பு சிவபெருமானுடைய புருவ நடுவில் ஏறியது.

கொப்புளித்து உமிழ்ந்த தண்ணீர் பரமேச்வரனுக்குச் சிறந்த அபிஷேகமாயிற்று. சிறிது கடித்து எச்சில் செய்த மாமிசத் துண்டு உயர்ந்த தேவாமிர்தம்போல் ஆயிற்று. வனவேடன் பக்த சிகாமணியாக ஆனான். ஆதலால் பக்தி என்னதான் செய்யாது? இது பரம ஆச்சரியம்! என்று கூறுகின்றார் ஆதிசங்கரர்.

மார்க்கா வர்தித பாதுகா பசுபதே ரங்கஸ்ய கூர்ச்சாயதே
கண்டூஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷேகாயதே
கிஞ் சித் பக்ஷித மாம்ஸ சேஷ கடளம் நவ்யோப ஹாராயதே
பக்தி; கிம் நகரோதி அஹோ வசநரோ பக்தாவதம் சாயதே.

கண்ணப்ப நாயனாரை சமயகுரவர் நால்வர்களும், நக்கீரர் முதலிய பெரும் புலவர்களும் புகழ்ந்து பாடியிருக்கின்றார்கள்.

இவர் அன்புருவமாகி இறைவன் மீது எல்லையில்லாத அன்பினைச் செலுத்தி ஆறுநாள் தொண்டு செய்து முத்திபெற்றார்.

இனி கங்கை வேடர் குல திலகராம் குகப் பெருமானைப் பற்றிச் சிந்திப்போம்; குகன் உயர்ந்த அன்புக் கருவூலமாக விளங்கினான் இராமரிடம் அன்பு செலுத்தியவர்கள் பலர். அநுமான், சுக்ரீவன்,

விபீஷணன், ஜடாயு, சபரி, சரபங்கர், பாரத்துவாசர் முதலியோர் ஸ்ரீராமரை நேசித்தார்கள். ஆனால் பயன் சிறிதுங் கருதாது நேசித்தவன் குகன்; நிஷ்காம்ய பக்தி செய்தவன், "நாட்டிலே குகனார் செய்த நன்மையை நயக்க மாட்டேன்" என்று சுக்ரீவன் கூறி வியந்து பாராட்டுகின்றான்.

மிகச் சிறந்த நண்பனாக குகன் விளங்கினான். அதனால் இராமர் அவ்வேடர் குலத்தவனை, ஆசாரம், கல்வி, தகுதி முதலிய ஒன்றினாலும் உயர்வு இல்லாத அவனை, தன் தம்பி என்று கூறித் தழுவிக்கொண்டார்.

"ஆழநீர்க் கங்கை அம்பிக டாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் தம்பி, நீ
தோழன்; மங்கை கொழுந்தியெனச் சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்"

என்று சீதையின் உள்ளத்தில் வைத்துக் குகனுடைய பெருமையை விளக்குகின்றார்.

"உள்ளத்தால் பொய்யா(து) ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற திருவள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாக நின்றான் குகன், இதனைக் கம்பர் "பொய்யில் உள்ளத்தன் புகலலுற்றான்" என்று கூறுவதனால் அறிக.

குகனைப் பற்றி இலட்சுமணர் ராமரிடம் கூறும்போது, "சுற்றமுந் தானும் உள்ளந் தூயவன் தாயின் நல்லான்" என்று குறிப்பிடுகின்றார்.

இப்படிக் குகன் தலைசிறந்த அன்பனாக விளங்கியதற்குக் காரணம் பண்டைப் பிறப்பின் தவப்பயனாகும்.

கண்ணப்பர் முற்பிறப்பில் அர்ச்சுனன் என்பதை நினைவு கூர்தல் வேண்டும்.

அதுபோல் குகனைப் பற்றியும் சிந்திக்கத்தக்க செய்தியுண்டு. கங்கைக் கரையில் ஒரு முனிவர் மாதவம் புரிந்துகொண்டிருந்தார். ஒரு மன்னன் வேட்டையாடினான். பாணம் குறி தவறி ஒரு முனிவரைக் கொன்று விட்டது. அதனால் பிரமகத்தி அவனைத் தொடர்ந்தது. அதற்கு அஞ்சிய அரசன் கங்கைக் கரையில் தவஞ்செய்யும் முனிவரிடம் பிராயச்சித்தங் கேட்டு உய்வான் வேண்டி வந்தான். அவ்வேளையில் முனிவர் ஆச்சிரமத்தில் இல்லை. அவருடைய தவப்புதல்வன் கூரிய மதியும் சீரிய நலமும் பூண்டவன். வயது 12. அப்புதல்வன் அரசனை வரவேற்று, "உமக்கு என்ன குறை?" என்று வினவினான்.

"குழந்தாய்! நான் இந்த நாட்டு மன்னன்; வேட்டையாடினேன். குறி தவறிய கணை ஒரு அந்தண முனிவரைக் கொன்றுவிட்டது. அதனால் பிரமகத்தி என்னைத் தொடர்ந்து வருத்துகின்றது. அது தீரும் வழியைக் கேட்க வந்தேன். உன் தந்தை இன்மையால் வருந்துகிறேன்."

"அரசே! வருந்தற்க அப் பாவந் தீரும் வழியை நான் கூறுவேன். என்னைச் சிறுவன் என்று கருதாதே. ஒரு சிறுவன் விளக்கை எடுத்துச் சென்றால் இருள் விலகுந்தானே, விளக்குத்தான் உயர்வு. எடுத்தேனும் ஒருவன் சிறுவன் எனினும் குற்றமில்லை. ஆதலால் நான் உனக்கு கழுவாய் கூறுவேன். இதோ இந்தக் கங்கையில் நீராடு வட திசையை நோக்கி நில். சித்தத்தை ஒருமுகமாக்கி, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி 'முருகா' 'முருகா' 'முருகா' என்று மும்முறை கூறு. பிரமகத்திப் பாவம் தீரும் என்றார்.

அரசன் அவ்வாறு செய்து பாவந் தீரப்பெற்று முனிபுத்திரனைப் பணிந்து, துயர் தனிந்து நகரம் போனான்.

பின்னர் முனிவர் வந்தார். தேர்ச் சுவட்டினை நோக்கி, 'யார் வந்தது' என்று கேட்டார். முனிமகன் நிகழ்ந்தகைக் கூறினான். முனிவருடைய கண்கள் சிவந்தன. சீற்றமுற்றார்.. "மூடனே! என்ன காரியம் புரிந்தாய். உனக்கு முருகபக்தி யிருக்கின்றதா? அடாத காரியம் புரிந்துவிட்டாய். நீ என் மகனா? மலையளவு பஞ்சுப் பொதியைக் கொளுத்த ஒரு தீக்குச்சியே போதுந்தானே. சிறு பஞ்சினைக் கொளுத்த மூன்று தீக்குச்சி தேவையா! ஒருமுறை முருகா என்று கூறினால் கோடி பிரமகத்திப் பாவந் தீருமே! ஒரு பிரமகத்தியைப் போக்க மூன்று முறை முருகா என்று கூறவேணுமா! முருக நாமத்தின் பெருமையை நீ நன்கு அறிந்தாயில்லை. ஆதலால் வேடனாகப் பிறக்கக் கடவது" என்று சபித்தனர்.

தவ மைந்தன் நடுங்கித் தந்தையைத் தொழுதான். அவர் திருவுள்ளம் இரங்கி, "நீ கங்கைக் கரையில் வேடர்குலத் தலைவனாகப் பிறப்பாய். முருகனுடைய நாமங்களில் ஒன்றாகிய குகன் என்ற பேருடன் விளங்குவாய். ஸ்ரீராமருடைய நண்பனாக வாழ்ந்து முடிவில் முருகனுடைய திருவடி சார்வாய்" என்று அருள் புரிந்தனர்.

அதுபடியே அம் முனிவர் திருமகன் குகன் என்ற வேடர் பெருமானாகப் பிறந்தான் என உணர்க.

"இன் துணைவன் இராகவனுக்கு; இலக்குவற்கும்
இளையவற்கும் எனக்கும் மூத்தான்"

என்று குகனைக் கோசலையிடம் பரதர் அறிமுகஞ் செய்கின்றார்.

ஆதலால் குகன் தலைசிறந்த அன்பன். காளத்தி வேடனும் கங்கை வேடனும் அன்புறுவாய்த் திகழ்ந்து உலகிலுள்ள மன்பதைகட்கு வழிகாட்டிகளாக விளங்கினார்கள்.

உயர்திரு. **R. சம்பந்தமூர்த்தி முதலியார்**
செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.



தலைச்சங்கப் பொருளாளர்
உயர்திரு. **M. சுப்பராய முதலியார்**



உயர்திரு. **T. S. பழனிவேல்**, B. A.,
செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்



நமது கொடி வரலாறு

நமது செங்குந்தர்க்குரிய கொடி, வெள்ளை நிறத்துணியில் நடுவே குந்தப்படையும், அதன் வலப்புறம் சேவலும், இடப்புறம் புலியும், சின்னங்களாக அமைத்து பட்டொளி வீசிப்பறக்கக் காணலாம். கொடியின் இச்சின்னங்களும், நிறமும் நம்மியக்கத்தின் குறிக் கோள்களைத் தெற்றெனவிளக்குவன. அவற்றை நாம் ஒவ்வொருவரும் அறிந்து அக் கொடியை நம்முயிரே போல வணங்கிப் போற்றுதல் நமது ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

குந்தச் சின்னம்

குந்தம் என்பது ஈட்டி. அது முற்காலத்தில் நமது முந்தையோர்களான, கயிலாயப் பரம்பரையில் வந்த, வீரவாகுத்தேவர் உள்ளிட்ட நவவீரர்கள் கைகளில் திகழ்ந்து சூரபன்மன், சிங்கமுகன், தாரகாசுரன் முதலிய அசுரர்களை அழித்தும், பிற வேந்தர்களை வென்றும், முருகவேளின் அன்புக்குப் பாத்திரமான முசுகுந்தச் சோழனை சக்கரவர்த்தி யாமாறு உலகெங்கும் வலம் வந்து எதிர்த்தவர்களையெல்லாம் அழித்தொழித்த வீரமும், நிறைந்த சிறப்பினையுடையது. உமையம்மையால் நவவீரர்களுக்கும் கொடுக்கப்பட்டது. எனவே நம் வீரவாகுத் தேவர் வழிவந்தோர் என்பதையும், கயிலாயப் பரம்பரையினர் என்பதையும் விளக்குவதற்காக இக்குந்தச் சின்னம் நம் கொடியில் நடுநாயகமாக விளங் குகின்றது.

சேவற் சின்னம்

சேவல் என்பது பறப்பனவற்றுள் ஆண்பாலைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல். ஆனால் இங்கு நாம் கோழிச்சேவலைக் குறிப்பிடுகின்றோம். கந்தவேள் சூரபன்மனைக் கொல்வதற்காகத் தம் வேலாயுதத்தை அவன்மேல் எறிய, அவன் அவ்வேலுக்கு அஞ்சி யோடி, கடலுக்குள் சென்று, மாமரமாய் நிற்க, அவ்வேல் அம்மரத்தை இரண்டாகப்

பிளந்தது. மரத்தின் ஒருபகுதி கோழிச் சேவலாகவும், மறு பகுதி மயிலாகவும் மாறி முருகக் கடவுளை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தன. முருகன் அவ்விரண்டையும் பார்த்து தம் அருட் கண்களால் திருக்குறிப்புக் காட்ட, அவை சீற்றமடங்கி அவரருகில் வந்து நின்றன. வந்ததும் மயிலின்மீது தாம் அமர்ந்துகொண்டு, சேவலை நோக்கித் தம் கொடியில் ஏறி அமர்ந்துகொள்க என, அவ்வாறே அச் சேவல் ஏறி அமர்ந்தது. அதனு லேயே முருகக் கடவுள் 'சேவற்கொடியோன்' எனப்பட்டார்.

சேவல் முருகவேள் கொடியின் சின்னம். நாம் முருகவேளின் தம்பிமார். எனவே இச் சேவல் சின்னம் நமக்குரியதாயிற்று.

புலிச்சின்னம்

சூரபன்மனுக்குரியது புலிக்கொடி. முருகக்கடவுள் அவனை வென்றதும், தாம் அவனை வெல்வதற்குத் துணைசெய்த வீரவாகுத்தேவருக்கு அச்சுசூரனின் புலிக்கொடியைப் பரிசாக அளித்தார். நாட்டில் அறத்திற்கு அழிவு நேருகின்றபோது, தெய்வம் தலையிட்டு அறத்தை நிலை நிறுத்தும், அதன்படி சூரபன்மன் முதலிய அசுரர்கள் ஆட்சியால் நாட்டில் அதர்மம் தலைதூக்கி நின்றபோது, முருகக் கடவுள் அவ்வதர்மத்தை யழித்துத் தர்மத்தை நிலை நிறுத்தினர். அத்தகைய அறச்செயலுக்குத் துணை நின்றவர்கள் வீரவாகு உள்ளிட்ட நவ வீரர்கள்.

மேலும் சோழ மன்னர்களுக்கும் புலிச்சின்னம் கொடிச்சின்னமாக விளங்கி யிருந்தது. நமது முன்னோர்களாகிய நவ வீரர்கள் முசுகுந்தச்சோழ மன்னனுக்குப்படைத் துணைவர்களாகவும், உறவினர்களாகவும் விளங்கி; அம்மன்னனை 'சக்கரவர்த்தி' எனும் நிலைக்கும் உயர்த்தியவர்கள். முசுகுந்தனின் மகனும், வீரவாகுத்தேவரின் மகள் (சித்திரவல்லி)வயிற்றுப்பெயரனும் ஆகிய அங்கிவன்மனும், வீரவாகுதேவர்க்குப் புட்பத் கந்தியிடத்துத் தோன்றிய மகன் அனகனும் முறையே கருவூரிலும், காஞ்சீபுரத்திலும் அரசு வீற்றிருந்து பேரரசு நடத்தியுள்ளனர்.

இவ்வாறு செங்குந்தர் மரபு, சோழ மரபு ஆகிய இரண்டிற்கும் புலிக்கொடி உரியதாய் இருந்தது. இதனை 'ஈட்டி எழுபது' எனும் நூலில் ஒட்டக்கூத்தர்,

''கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்ததால்''

(பாட்டு எண் 37)

என்று சிறப்பித்துப் பாடுகிறார். மேலும் இக் கருத்தினையே,

''சோழன் மரபினுக்குச் சொல்லத் தகுந்தகுமே
வாழும் புலிக்கொடியை வையகத்தில்—சூழுறவால்
குந்தன் மரபினுக்குங் கூறத் தகுந்தகுமே
அந்தக்கொடியினையே யாம்,''

என்னும் இவ்வெண்பாவும் போற்றிச் சிறப்பிக்கிறது.

பிளந்தது. மரத்தின் ஒருபகுதி கோழிச் சேவலாகவும், மறு பகுதி மயிலாகவும் மாறி முருகக் கடவுளை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தன. முருகன் அவ்விரண்டையும் பார்த்து தம் அருட் கண்களால் திருக்குறிப்புக் காட்ட, அவை சீற்றமடங்கி அவரருகில் வந்து நின்றன. வந்ததும் மயிலின்மீது தாம் அமர்ந்துகொண்டு, சேவலை நோக்கித் தம் கொடியில் ஏறி அமர்ந்துகொள்க என, அவ்வாறே அச் சேவல் ஏறி அமர்ந்தது. அதனாலேயே முருகக் கடவுள் 'சேவற்கொடியோன்' எனப்பட்டார்.

சேவல் முருகவேள் கொடியின் சின்னம். நாம் முருகவேளின் தம்பிமார். எனவே இச் சேவல் சின்னம் நமக்குரியதாயிற்று.

புலிச்சின்னம்

சூரபன்மனுக்குரியது புலிக்கொடி. முருகக்கடவுள் அவனை வென்றதும், தாம் அவனை வெல்வதற்குத் துணைசெய்த வீரவாகுத்தேவருக்கு அச்சுசூரனின் புலிக்கொடியைப் பரிசாக அளித்தார். நாட்டில் அறத்திற்கு அழிவு நேருகின்றபோது, தெய்வம் தலையிட்டு அறத்தை நிலை நிறுத்தும், அதன்படி சூரபன்மன் முதலிய அசுரர்கள் ஆட்சியால் நாட்டில் அதர்மம் தலைதூக்கி நின்றபோது, முருகக் கடவுள் அவ்வதர்மத்தை யழித்துத் தர்மத்தை நிலை நிறுத்தினர். அத்தகைய அறச்செயலுக்குத் துணை நின்றவர்கள் வீரவாகு உள்ளிட்ட நவ வீரர்கள்.

மேலும் சோழ மன்னர்களுக்கும் புலிச்சின்னம் கொடிச்சின்னமாக விளங்கியிருந்தது. நமது முன்னோர்களாகிய நவ வீரர்கள் முசுகுந்தச்சோழ மன்னனுக்குப்படைத் துணைவர்களாகவும், உறவினர்களாகவும் விளங்கி; அம்மன்னனை 'சக்கரவர்த்தி' எனும் நிலைக்கும் உயர்த்தியவர்கள். முசுகுந்தனின் மகனும், வீரவாகுத் தேவரின் மகள் (சித்திரவல்லி)வயிற்றுப்பெயரனும் ஆகிய அங்கிவன்மனும், வீரவாகுதேவர்க்குப் புட்பத் கந்தியிடத்துத் தோன்றிய மகன் அனகனும் முறையே கருவூரிலும், காஞ்சீபுரத்திலும் அரசு வீற்றிருந்து பேரரசு நடத்தியுள்ளனர்.

இவ்வாறு செங்குந்தர் மரபு, சோழ மரபு ஆகிய இரண்டிற்கும் புலிக்கொடி உரியதாய் இருந்தது. இதனை 'ஈட்டி எழுபது' எனும் நூலில் ஒட்டக்கூத்தர்,

> ''கலிக்குறும் படுவள வனுக்குங் காதுசூர்
> வலிக்குறும் படுதனி வாகைக் குந்தர்க்கும்
> பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
> புலிக்கொடி மரபிரண் டினுக்கும் போந்ததால்''
>
> (பாட்டு எண் 37)

என்று சிறப்பித்துப் பாடுகிறார். மேலும் இக் கருத்தினையே,

> ''சோழன் மரபினுக்குச் சொல்லத் தகுந்தகுமே
> வாழும் புலிக்கொடியை வையகத்தில்—சூழுறவால்
> குந்தன் மரபினுக்குங் கூறத் தகுந்தகுமே
> அந்தக்கொடியினையே யாம்,''

என்னும் இவ்வெண்பாவும் போற்றிச் சிறப்பிக்கிறது.

எனவே புலிச்சின்னம் நாம் முருகவேளிடத்துப் பெற்ற பரிசுப் பொருள்; அன்றியும் செங்குந்தர், சோழர் எனும் இரு மரபுக்கும் உரிய சின்னம். நாமும் முற்காலத்தில் அரசச் செல்வத்தைப் பெற்று இந்த அவனியை ஆண்டவர்கள். இக் குறிப்புக்களையும் கொண்டே நாம் நமது கொடியில் புலிச்சின்னத்தையும் பொறித்துள்ளோம்.

வெண்மை நிறம்

கொடியின் நிறம் வெண்மை. வெண்மை என்பது தூய்மையைக் குறிக்கும். கலைமகள் 'வெள்ளைக் கலையுடுத்து வெண்டாமரையில் வீற்றிருப்பவள்' என்று கவிஞர்களால் பாராட்டப்பெறுகிறார்.

சிவபெருமான் வெண்ணீறு அணிந்த மேனியனே. எனவே நாம், உடலில் தூய்மையும், உள்ளத்தில் தூய்மையும் ஆன்மாவில் தூய்மையும் கொண்டு விளங்கவேண்டும் என்பதை அறிவுறுத்தவே நமது கொடியை வெண்மை நிறத்தில் தேர்ந்தெடுத்துள்ளோம்.

நமது கடமை

நமது இக்கொடியை நாம் போற்றி வணங்குதல்வேண்டும். நமது சங்கக் கூட்டங்களும், மாநாடுகளும், விழாக்களும் நடைபெறுகின்றபோழ்து, நம்மவரில் ஒருவர் இக்கொடியை ஏற்றிவைத்த பின்னரே, மற்றைய நிகழ்ச்சிகள் நடைபெறுதல் வேண்டும். கொடியை ஏற்றியதும் கொடிக்கு முன்னாலேயே நாம் அனைவரும் ஒழுங்குற நின்று ஓர் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதலும் நன்று.

தென்னிந்திய செங்குந்தர் மாநில மாநாட்டிற்கு நல்வாழ்த்துக்கள்.

Phone: { Offi: 24146, Resi: 24647 }   P. B. No. 535   Tel: KEYENPEE

K. N. P. அருணாசல முதலியார் & கோ.,

ஜவுளி வியாபாரம்,

487, பெரிய கடை வீதி,

திருச்சி-620008.

★ ஒரு கண்ணோட்டம் ★

(1929 ஆம் ஆண்டு ஈரோட்டில் நடந்த தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மாநாட்டைப் பற்றிச் 'செங்குந்தமித்திரன்' வெளியிட்ட செய்திகளின் தொகுப்பு)

★ ★ ★

தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மாநாடு விபவ ஆண்டு, தைத் திங்கள் 7, 8 தேதிகளில் (19. 20—1—1929) ஈரோட்டில் நடைபெற்றது. தலைமைச் சங்கத்தின் விருப்பப்படி ஜனவரி மாதத்தில் மாநாட்டைக் கூட்டுவதென 10—10—1928இல் முடிவு செய்யப்பட்டது.

தலைமைச் சங்கத்தாரின் ஆலோசனையையும், ஒத்துழைப்பையும் பெரும் பொருட்டுத் தலைமைச் சங்கத்தின் அமைச்சரும் 'செங்குந்தமித்திரன்' ஆசிரியருமாகிய திரு, ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்களை ஈரோடு, சித்தோடு, ஊத்துக்குளி முதலிய இடங்களைச் சேர்ந்த செங்குந்த மகாஜனங்கள் 12—12—28இல் வரவழைத்து மகாநாட்டைச் சிறப்புடன் நடத்துவதற்குரிய ஆலோசனைகளைப் பெற்றனர்.

தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மாநாடு என்னும் பெயருடன் சமூக மாநாடு, வர்த்தகர் மாநாடு, வாலிபர் மாநாடு, கைத்தொழிற் கண்காட்சி என்னும் பிரிவுகளுடன் கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கோவை திரு. V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் சமூக மாநாட்டு வரவேற்புத் தலைவராகவும், திருச்செங்கோடு திரு. T. R. கந்தப்ப முதலியார் அவர்கள் வர்த்தகர் மாநாட்டு வரவேற்புத் தலைவராகவும், ஈரோடு திரு. நா. மு. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் வாலிபர் மாநாட்டு வரவேற்புத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

திரு. V. V. C. V. நடேச முதலியார் அவர்கள் பொதுச் செயலாளராகவும், திரு. செ. ராமசாமி முதலியார் அவர்கள், திரு. V. V. C. V. பெரியசாமி முதலியார் அவர்கள் ஆகிய இருவரும் பொருளாளர்களாகவும் அமர்த்தப்பட்டனர்.

ஈரோடு திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., அவர்கள் (தலைமையாசிரியர். ராஜா உயர்நிலைப் பள்ளி, சிவகங்கை) தொண்டர் படைத் தலைவராக இருந்து மிகச் சிறப்புடன் தொண்டாற்றினார்.

பிரஞ்சு அரசாங்கத்தின் இந்திய அமைச்சர் புதுவை திரு. ஆ. வே. முத்தைய முதலியார் பி. ஏ., பி. எல்., அவர்கள் சமூக மாநாட்டின் தலைவராகவும், தென்காசி திரு. தெ.ப.கு. ஆறுமுக முதலியார் அவர்கள் வர்த்தகர் மாநாட்டிற்குத் தலைவராகவும்,

குடியேற்றம் திரு. மா. வே. பீமராஜா முதலியார் அவர்கள் வாலிபர் மாநாட்டிற்குத் தலைவராகவும் இருந்து சிறப்பித்தனர்.

சென்னை அரசாங்கத்தின் சட்டசபை மெம்பர் கனம் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் பி. ஏ., பி. எல்., அவர்கள் சமூக மாநாட்டையும், திருவாரூர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள் வர்த்தகர் மாநாட்டையும், கொல்லங்கோடு திரு. கு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் வாலிபர் மாநாட்டையும் திரு. ஈ. வி. ராமசாமி நாயகர் அவர்கள் கண்காட்சியையும் திறந்துவைத்துப் பெருமைபடுத்திச் சிறப்பித்தனர்.

தலைச் சங்கத்தின் பிரதிநிதியாக, ஈரோட்டில் இருந்து மாநாட்டினைச் சங்கத்தின் சட்டப்படிக்கு நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து மாநாடு சிறப்புடன் நடைபெறத் துணைபுரியும்படி திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைச் சங்கத்தாரால் மாநாட்டுச் சிறப்புச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 மாதங் களுக்கு முன்னரே ஈரோட்டுக்கு அனுப்பப்பட்டார்.

மாநாடு சம்மந்தமாக அவ்வப்போது நடைபெறும் வேலைகள் துண்டுப் பிரசுரம் மூலமாகவும், தமிழ், ஆங்கில தினசரிப் பத்திரிகைகள் வாயிலாகவும். 'செங்குந்த மித்திரன்' மூலமாகவும் அனைவரும் அறியும்படி வெளியிடப்பட்டன,

மாநாட்டிற்கென பிரப் துரையவர்கள் மைதானத்தில் 600 அடி நீளமும், 400 அடி அகலமும் உள்ள 'செங்குந்த நகர்' ஒன்று புதிதாய் நிர்மாணிக்கப்பட்டது. அதனுள் 'நவ வீரர் மாளிகையும்' அதனைச்சுற்றித் தெருக்களும் அமைக்கப்பட்டன.

நவவீரர் மாளிகை 800 அடி நீளமும், 200 அடி அகலமும் உடையதாய் விளங் கியது. மாளிகையின் தெற்குப் பாகத்தில் 50 அடி நீளமும் 39 அடி அகலமும் உள்ள 400 பேர் அமரக்கூடிய மேடை அமைக்கப்பட்டது.

செங்குந்தர் நகரில் நுன்ழந்தவுடன் மேற்கில் அமைந்த 'கந்தப்ப முதலியார் வீதி' யில் வரவேற்புத் தலைவர்கள் அலுவலகம், செயலாளர் அலுவலகம், விசாரணை அலுவ லகம், செங்குந்தமித்திரன் அலுவலகம், ஒட்டக்கூத்தர் வாசகசாலை, சில விற்பனைக் கடைகள் முதலிய இருந்தன.

இடதுபுறமாகச் செல்லும் 'சண்முகசுந்தர முதலியார் வீதி'யில் தொண்டர் தலைவர் அலுவலகமும், சில விற்பனைக் கடைகளும் காணப்பட்டன. வலதுபுறமாகச் செல்லும் 'சபாபதி முதலியார் வீதி'யில் தமிழ்நாடு, திராவிடன், குடியரசு முதலிய பத்திரிகைகளின் காரியாலயங்களும், சில கண்காட்சி சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

கிழக்கில் அமைந்த 'செங்கோட்டையா முதலியார் வீதி'யில் அரசாங்கத்தின் கைத்தறித் தொழிற்சாலையிலிருந்து கொண்டுவரப்பட்ட புதுமாதிரித் தறி நெசவுச் சாலைகளும், துணிகளுக்கு அச்சடிக்கும் இயந்திரச் சாலைகளும், சாயந்தீர்க்கும் சாலைகளும். மற்றும் அநேக விசித்திரக் கண்காட்சி சாலைகளும் அழகுற விளங்கின.

இவ்வீதிகளுக்கு நடுவணதாய இடத்தில் 60 அடிகளுக்கு மேற்பட்ட உயரமுள்ள செங்குந்த கொடிமரம் நாட்டப்பட்டிருந்தது. ஈரோட்டின் எந்தப் பாகத்திலிருந்து பார்த்தாலும் இக்கொடி மரத்தின் ஊச்சி நன்கு தென்பட்டது.

ஈரோடு நகரமானது, ரயில்வே ஸ்டேஷன் முதல் 'செங்குந்தர் நகர்' வரையில் உள்ள முக்கியத் தெருக்கள் எல்லாம், தோரணங்களும், கொடிகளும், பச்சிலைகளும், வாழை, கமுகு, ஈச்சு முதலிய மரங்களும் கட்டப்பட்ட பூப்பந்தல்களாலும், சித்திர வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டுத் 'தேவ நகரம்' போல் திகழ்ந்தது.

மாநாட்டையொட்டி, ஈரோடு நகராட்சி சிறப்பான பல ஏற்பாடுகளைச் செய்திருந்தது. தெருக்களில் சிறிதும் குப்பை இல்லாமல் அவ்வப்போது சுத்தம்செய்து அப்புறப்படுத்தவும். பிரதிநிதிகள் தங்குகின்ற இடங்களில் உள்ள கக்கூஸ்களை அடிக்கடி சுத்தம் செய்யவும், செங்குந்த நகரில் உள்ள வீதிகளை ஒழுங்காக வைத்திருக்கவும் பல நகராட்சித் தொழிலாளர்களை எப்போதும் தயாராக இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாநாடு கூடுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பிருந்தே ஈரோடு நகரிலும். செங்குந்த நகரிலும் உள்ள முக்கியமான தெருக்ளுக்கு எல்லாம் லாரி மூலமாகத் தண்ணீர் தெளித்துச் சிறிதும் புழுதி கிளம்பாமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாநாடு நல்ல நிலவுக் காலத்திற் கூடினுலும் வரவேற்புக் கழகத்தினர் விரும்பிய பல இடங்களில் விளக்குகளைப் புதியதாய் அமைத்தும், அவசியமான சில இடங்களில் புதிதாய்க் குழாய்கள் வைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நகராட்சி ஆரம்ப பாடசாலைகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 21 ஆம் தேதி திங்கள்கிழமை உட்பட சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய மூன்று தினங்களும் விடுமுறை விடப்பட்டது. அப்பள்ளிகளில் பிரதிநிதிகள் தங்குவதற்காக அவற்றைக் காலிசெய்து தந்து உதவியது. இவையாவும் நகராட்சியின் விஷேச ஏற்பாடுகளாகும்.

ஊர்வலம் காலை 8.30 மணிக்கு ரயில்வே ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டது. புறப்படும்போது 5000 பேர்கள் அடங்கிய ஊர்வலம் புறப்பட்ட சிறிது நேரத்திற்குள்ளாக 10000 பேர்கள் அடங்கிய ஊர்வலமாக மாறி 10 மணிக்குச் செங்குந்தர் நகரை அடையும்போது 15000 பேர்கள்கொண்டதாக முடிவடைந்தது.

ஊர்வலம் கொடி மரத்தை அடைந்ததும் தொண்டர் படைத் தலைவர் திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் பி. ஏ., எல். டி., அவர்கள் செங்குந்தர் கொடியேற்றப் பாட்டினை இனிய இராகத்தோடு பாடினர், அதன்பின் மாநாடு சிறப்புடன் தொடங்கியது.

தொகுப்பு; **ந. சண்முகானந்தன்,**

T. ஜெகதீசன்.

மலர்க் குழு'

அறுபத்து மூவர் விழா

திரு. A. முனுசாமி,
தலைவர்,
அருள்நெறி அறுபத்துமூவர் விழாக் குழு

பரம கருணாநிதியாகிய சிவபெருமான், தம்மை உணர்ந்து தம்மிடத்து இடையறாத அன்பு செய்யும் மெய்யடியார்களுக்கு உலகத்திலுள்ள அரிய பெரிய, இனிமையாகிய எப்பொருள்களிலும் மிகுந்த இனியராய், ஒருகாலும் இடையறாத பேரின்பத்தை அளிப்பர் ஆதலால் மெய்யுணர்வுடையோர்கள் தமக்குரிய மனைவி, மைந்தர் முதலிய உயிர்ச்சார்புகளிலும், வீடு, பொன் முதலிய பொருள் சார்புகளிலும், இவ்வுலக வாழ்க்கையிலும், பரலோகத்திலும் உயிர்க்குயிராகிய சிவனே தமக்கு இனியர் என்று தெரிந்து, அச்சார்புகளோடு கலந்திருப்பினும் தாமரை இலையில் தண்ணீர்போல அவைகளிடத்தே பற்றுச் சிறிதுமின்றி, சிவபெருமானிடத்தே இடையறாத மெய்யன்புடையர்களாக, சிவனடியார்களையும் சிவலிங்கத்தையும் சிவன் எனவே கண்டு, வழிபட்டு வந்தவர்கள் அறுபத்து மூன்று நாயன்மாராவார்கள். "அளவிலாத பெருமையராகிய அளவிலா வடியார் புகழ் கூறுகேன் அளவுகூட உரைப்பரிது ஆயினும் அளவிலாசை துரப்ப வறைகுவேன் — என்று சுவாமிகள் கூறுவர். அத்தகைய தொண்டர் தம் பெருமை சொல்லவும் எளிதோ?

அடியார்க்கு அடியன். அடியார்களை வாழ்த்தி வணங்கும்போது சிவன் மிக மகிழ்ச்சியுறுகிறான் என்பதனை நாம் அறிவோம். எங்களூர் ஈரோடு கோவில் சிறிதாயினும் மிகுந்த அருளுடையது, கீர்த்தியுடையது மைலாப்பூர் முதலான தலங்களில் அறுபத்து மூவர் விழாவைக் கண்ணுற்ற எங்கள் தந்தை திரு. அர்த்தனாரி முதலியாரும் தொண்டர் சீர்பரவுவார் திரு. R. P. தங்கவேலு ஐயா அவர்களும் நமதூரிலே அதைப் போல விழா எடுக்க எண்ணினார்கள். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் கந்த புராணம், பெரிய புராண விரிவுரைகளில் எடுத்துச் சொல்லி உற்சவ மூர்த்தங்களை உருவாக்க பொன்னும் பொருளும் கிடைக்கச் செய்தார்கள்.

ஈரோட்டிலே அருள்மிகு தொண்டீஸ்வரப் பெருமானுக்கும் அருள்மிகு கஸ்தூரி ரங்கநாத பெருமாளுக்கும் பிரம்-மோத்ஸவம் வைகாசியிலே ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். அதை ஒட்டி அறுபத்து மூவர் விழாவும் ஏற்பாடு

செய்தார்கள். ஆனால் தற்போது பிரமோத்ஸவம் நடைபெறவில்லை இருந்தாலும் திருத்தொண்டீஸ்வர் கோவிலிலிருந்து பஞ்சமூர்த்தி புறப்படும்போது அறுபத்து மூவரையும் ஒரே சப்பரத்திலே எழச்செய்து திருவீதிவுலா ஏழு ஆண்டுகள் நடந்தது.

பல பெரியவர்கள் அறுபத்து மூவர் உத்சவத்தைப் பெரிய புராணம் வகுத்த சேக்கிழார் சுவாமிகளின் நக்ஷத்திரத் தன்றோ அல்லது திருத்தொண்டத் தொகையை அருளித் தந்த சுந்திரமூர்த்தி சுவாமிகளின் குரு பூசையை ஒட்டியோ செய்வது சாலச் சிறந்ததெனத் தெரிவித்தபடி சென்ற ஆண்டிலிருந்து ஆடி சுவாதி நட்சத்திரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசையை ஒட்டி நடத்துவதெனத் தீர்மானித்தோம்.

அறுபத்து மூவர் விழாவில் என்ன செய்கிறோம், எப்படிச் செய்கிறோம், அதனால் என்ன பயன் என்னும் வினாக்களுக்கு விடையளித்தலிலேயே இந்தக் கட்டுரை முடியும் என எண்ணுகிறேன்.

இந்த விழாவை நடத்துவோர் ஒரு குழுவாகச் சேர்ந்து சட்டதிட்டங்களை வகுத்துப் பதிவு செய்துள்ளோம். அந்தக் குழுவிற்கு "அருள்நெறி அறுபத்து மூவர் உத்சவக்குழு" என்று பெயரிட்டுள்ளோம் திருமேனிகள் சமைத்த போதே விழா வெடுக்க பொருளிற்கு முட்டுவராமலிருக்க ரூ. 30,000 நிதி திரட்ட அதனின்று வரும் வட்டியைக் கொண்டு விழா நடத்த ஏற்பாடு செய்தோம். இந்தக்குழுவின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் மாதம் 50 பைசா அல்லது ஆண்டுக்கு ரூ 6/- சந்தா செலுத்த வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டது. சந்தா பொருள் வரவிற்கும் பயன் பெருகிறது அத்துடன் அங்கத்தினர்களை ஈடுபாடு செய்யவும் பெரிதும் பயன்படுகிறது. சுமார் 150 அங்கத்தினர்கள் தற்போது உள்ளார்கள். வட்டி வரத்தும், சந்தா தொகையையும் வைத்து நாங்கள் எட்டு நாட்கள் விழாக் கொண்டாடுகிறோம். விழாவின் சிறப்புக்களைக் கண்டவர்கள் ஆண்டுதோறும் பங்குகொண்டே தீருவார்கள். எட்டு நாட்களிலும் முறையாகத் திருமுறை மாநாடு, இலக்கிய மாநாடு. சைவ மாதர் மாநாடு, பட்டி மன்றம் முதலியவைகளை ஏற்படுத்திச் சிவசிந்தனையை எங்தெந்த வகையில் ஊட்டமுடியுமோ அந்தந்த வகையில் செய்ய முயலுகிறோம். பன்னிரு திருமுறைகளையும் தலைசிறந்த கற்ற சான்றோர்கள் மூலம் விரிவுரைக்கு ஏற்பாடு செய்கிறோம். மக்கள் பட்டிமன்றம், வழக்காடு மன்றங்களைப் பெரிதும் விரும்புவதால் சைவ கருத்துக்களை அவ்விதமாகவும் பரப்ப ஏற்பாடு செய்கிறோம்.

விழா முடிவிலே அறுபத்து மூவர் திருமேனிகளுக்கும் காவிரியிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து சிறப்பு முழுக்காட்டி நன்கு அலங்கரித்துப் புஷ்ப விமானம்போல் சோடனை செய்து வீதியுலாவும் நடைபெறுகிறது. முன்னே பஞ்சமூர்த்திகள் செல்ல பின்னே அறுபத்து மூவரும் வருவது எந்த நாட்டிலும் காணக்கிடைக்காத காட்சியே ஆகும். பெருமையாகச் செல்லுகிறோம் என்று நினைக்காதீர்கள். பல இடங்களில் அறுபத்து மூவருக்கும் இரண்டு மூன்று நாயன்மார்களை ஒரே மஞ்சம் அல்லது பல்லக்கு போன்று செய்து வரிசையாக எடுத்துச் செல்வார்கள் அதிலே மூர்த்திகளின் தோற்றம் சரியாக காட்சி யளிக்காது. எங்களூரிலே அறுபத்து மூவரும் ஒரே விமானத்தில் பவனி வரும்பேது உள்ளமெல்லாம் கொள்ளை கொள்ளும் அளவிற்கு ஈர்க்கும் சக்தி பெற்றுத் திகழும். ஒவ்வொரு நாயன்மாரும் தனித்தனியே சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு, விமானம் மின் விளக்குகளால் ஜோடனை செய்யப்பட்டு வரும்போது சிவபெருமான் நாயன்மார் குழாத்துடன் வருவது போன்றே காணப்பெறும் உங்கள் வாழ்நாளிலே ஒருநாளைக்குக் காணுங்கள். அறுபத்து மூவர் விழா சிந்தையினின்று நீங்காது. உலாவரும்போது சான்றோர்களும் நல்லிசைவாணர்களும் திருமுறையைப் பண்ணோடும், யாழின் நாதத்தோடும் இசைத்து அருளுவார்கள். உள்ளமெல்லாம் தித்திக்கும். நினைக்குந்தோறும் உவகையேற்படும்.

எங்கள் குழு ஆண்டுதோறும் விரிவுரை வீதிவுலா மட்டும் நடத்துவ தோடமையாமல் இலவச வெளியீடாக சமயக் கருத்துக்களைப் பிரசுரிக்கவும் எண்ணியுள்ளோம். பள்ளி மாணவர்களை ஈர்க்கும் வகையில் மணிவாசகப் பெருந்தகை அருளிய சிவபுராணத்தை ஈரோடு நகரிலுள்ள பள்ளிக் குழந்தை கள் மூன்று, நான்கு, ஐந்து வகுப்பு மாணவர்களுக்குக் கொடுத்து அதை ஒப்பு விக்கும் குழந்தைகளுக்கெல்லாம் பரிசு கொடுத்தோம் அடுத்த ஆண்டிலி ருந்து சற்று அதிகமாகக் குழந்தைகளுக்கு சைவக் கருத்தைப் புகுத்த எண்ணி யுள்ளோம்.

இதைப்போன்ற விழாவிலே பல வடிவங்களில் பக்தியைப் பெருக்க முடிகிறதை நாங்கள் உணருகிறோம் சிலர் காட்சிப் பொருளை விரும்புவார்கள். சிலர் நல்ல இலக்கியத்தை விரும்புவார்கள், நல்ல வரலாற்றின் மூலம் சிந்தை தெளிவார்கள். நல்லிசையின் மூலம் பக்தி பரவசமடைவார்கள். இவைகளெல் லாம் விழாவிலே கிடைக்கப்பெறும். உங்களை அறுபத்துமூவர் விழாவிற்கு வந்து உள்ளம் நெகிழும் காட்சியையும், உயிருக்கு உறுதுணையாக திருமுறை யையும் விரிவுரைகளையும் கேட்டும் கண்டும் இன்புறுமாறு அழைக்கின்றோம்.

திரு. **K. G. P.** ஆறுமுகம், B. A.,
தென்னிந்திய செங்குந்த கைத்தறி மாநாட்டு
வரவேற்புக்குழுத் தலைவர்.

துணைத் தலைவர்கள்

கோவை மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்.

திரு. S. K. பாலுசாமி



திரு. N. K. கோபாலகிருஷ்ண முதலியார்



திரு. K. இராமலிங்க முதலியார்



திரு. J. K. நாராயணன்

ஆடையிற் சிறந்தது

— பாவேந்தர் பாரதிதாசன் —

ஆடையிற் சிறந்ததுகைத் தறிஆடை—மக்கள்
அனைவர்க்கும் நல்லதந்தத் தேனோடை
ஓடையில் தேனைஅள்ளி உண்ணவாரீர்—அள்ளி
உண்டுகைத் தறிக்குதவி பண்ணவாரீர்.

சேலையிற் சிறந்ததுகைத் தறிச்சேலை—அது
தேவைக் குரியவண்ண மலர்ச்சோலை—குளிர்
சோலை வண்ணமலர்கள் வாங்கவாரீர்—நம்
தூயகைத் தறித்தொழிலைத் தாங்கவாரீர்.

வேட்டியிற் சிறந்ததுகைத் தறிவேட்டி—கலை
வெற்றிக்கெல் லாம்அதுவே வழிகாட்டி—புகழ்
காட்டும் கலைக்குநலம் காட்டவாரீர்—நம்
கைத்தறித் தொழிலைநிலை நாட்டவாரீர்.

எந்நாட்டிலும் தென்னாட்டுக் கைத்தறித்தொழில்—திசை
எட்டும் பரப்பியது தன்பேரெழில்—நம்
தென்னாட்டுக் கைத்தறித் தொழில்ஓங்க—ஓங்கச்
செல்வநிலை யுங்கலையும் தழைத்தோங்கும்.

வேண்டுகோள்

N. K. கோபாலகிருஷ்ண முதலியார்,
தலைவர் : ஈரோடு கைத்தறித்துணி வணிகர்கள் சங்கம், ஈரோடு.

○○○

அன்பார்ந்த செங்குந்தர் சமூகத்தின் உடன்பிறப்பே,

உங்கள் அனைவரையும் இக்கட்டுரையின் வாயிலாகச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன்.

செங்குந்தர் சமூகம் என்று தோன்றியதோ அன்று முதல் குலத்தொழிலாக ஏற்பட்டது நமது கைத்தறி நெசவுத்தொழில். இன்னும் நமது சிந்தனை செல்லுமானால் மனிதன் அறிவு பெற்ற அன்று நமது கை நெசவுத்துணி, தனது நாகரீகத்தை வளர்க்க முதற்படியாக இருந்திருக்கிறது. இடைக்காலங்கள் பல ஆயிரம் வருடங்கள் மாறியும், பல மாற்றுத் துணிகள் தோன்றியும், அழிவு பெறுமல் நிலைபெற்று நின்ற ஒரே தொழில் நமது கைநெசவே ஆகும். பலதரப்பட்ட தொழில்கள் காலப்போக்கில் அழிவுற்று உள்ளதை நாம் கண்கூடாகப் பார்த்துள்ளோம். இருப்பினும் நமது நெசவுத்தொழில் நமது நாட்டில் மட்டுமல்லாமல் கடல் கடந்த நாடுகளிலும், இன்றும் நிலைபெற்று நிற்பது நமக்குக் கண்கூடு. இமயம் முதல் குமரிவரை இத்தொழில் வளம்பெற, வெளி நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள, நமது நாட்டின் ஈடு இணையற்ற பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் தமது 20 அம்ச திட்டத்தில் சேர்த்து, அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருவதற்கு, நமது செங்குந்தர் சமூகம் தனது நன்றியறிதலை இம்மாநாட்டின் வாயிலாக மன மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றது.

நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற எல்லாச் சமூகத்தினரும், மதத்தினரும், நாட்டினரும், நமது குலத்தொழிலின் சகோதரர்களே என்று நாம் நமது கருத்தில் கொண்டு கூட்டு முயற்சியுடன் இத்தொழிலை வளம்பெறச் செய்ய முயற்சிக்கவேண்டுமென்று விரும்புகின்றேன். எனவே இம்மாநாடு இந்தக் கூட்டு முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்என்று பெரிதும்நம்புகிறேன்.

நாம், நமது நெசவுத்தொழிலைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடாவிட்டால் இந்த நெசவுத்தொழில் அழிவுப்பாதையில் அடியெடுத்து வைப்பதுடன் நமது சமூகத்தினரின் வாழ்க்கைத்தரம் நசிந்து விடுவதுடன், எதிர்காலத்தில் வருங்காலச் சந்ததியர்களின் பார்வைக்கு இலக்கியத்தில் மட்டுமே இடம்பெற்று நிற்கும்.

எனவே பழம்பெரும் பெருமையை, நெசவுத் தொழில்பற்றிப் பேசுவதை விடுத்து, நெசவுத் தொழில் ஆக்கமும் ஊக்கமும் பெற கல்லும் காவிரியும் உள்ளளவும் நிலைபெற ஆக்கப்பணியில் நாம் அனைவரும் ஈடுபடுவோமாக!

◆

தசாங்கம்

ஸ்ரீ சத்திய சந்தூர்

*

காப்பு

நீசாங்க வீட்டியர்—தசாங்க முறைசெய
கசாங்க னடியிணை—வசாங்க மாமரோ.

மலை

பொன்னவிரும் பைங்கூரற் பூவையே செங்குந்த
மன்ன ருறையு மலைபகராய்—இன்னலற
வந்தவரை யாதரித்தும் வாழ்வித்தும் ஓங்கிவளர்
கந்தவரை நேரிவரை காண்

ஆறு

செம்பொற் சிறையனமே செல்வச் செங்குந்தமன்னர்
அம்பொன் கொழித்திடுநல் லாறியம்பாய்—எம்பரையைத்
தங்கையெனக் கொண்டுவிணைத் தாங்கிமணைப் போற்றுசிவ
கங்கையுமொண் காவிரியுங் காண்.

நாடு

கீதமிசைக் குங்குயிலே கேடில் செங்குந்தமன்னர்
நாதமொடு புனித நகர்கூறுய்—பாடுபுரி
மந்தன் செருக்ககற்றி மாட்சியொடு காட்சிதரும்
கந்தப யன்பதிகள் காண்.

மாலை

போதேறித் தேனுகரும் புள்ளேசெங் குந்தமன்னர்
தாதேறித் தேன்பிழிற்றுங் தார்பிழற்றுய்—ஏதும்
இரத்தல்செயா தியார்க்கும் இருமை நலநல்கும்
அரத்தமுநல் லாத்தியுமே யாம்.

குதிரை

தாலக் கிழங்கில் வழைவார்க் குருசேசெங்
கோலக்கை வேலரூர் கொக்கிசையாய்—ஞாலமிசை

மைச்சிரவர்க் கெட்டாத வானவர்கோ னூர்தருமுச்
சைச்சிரவங் கோரமெனச் சாற்று.

யானை

அன்பிற் பிரிவரிய அன்றிலே செங்குந்தர்
இன்புற்றிவரும் இபபோதாய்—வன்புற்றெண்
காவதப்போ ரேனுங் கடிப்பொழுதில் தேய்க்குறுமை
ராவதமா ரூர்சரமு மாம்.

முரசு

கேதஞ் சிறிதுமிலாக் கேகயமே செங்குந்த
நாதர் முரசு நனி விளம்பாய்—ஓதமெலாம்
கீதமொடு கூடித் திகமுங்கால் ஓங்கொலிகொள்
வேதமொடு வென்றியுமாம் விள்.

கொடி

நங்கையர்வேய் தோள்பழகு நாகணவாயேகுந்த
வங்கையர்தங் கேதனநீ யாய்ந்துரையாய்—துங்கமிகு
காவலொடு வைகித்தாங் காவலர்மெய் காக்குமெழிற்
சேவலொடு வேங்கையுமாங் தேர்.

செங்கோல்

தீதி லருங்கற்பில் திகழ்புறவே செங்குந்தர்
நீதிதரு செங்கோல் நிலைபுகலாய்—கோதில்பல
வானவரை மானவரை வாழ்விப்பான் எங்குமொன்றே
யானதனிச் செங்கோ லறி.

(குறிப்பு : தசாங்கம் என்பது செங்குந்தரது மலை, ஆறு, நாடு, நகர். மாலை, குதிரை, யானை, முரசு, கொடி, செங்கோல் ஆகிய வற்றைப் புகழ்ந்து பாடப்பட்ட நூலாகும்)

ஆதாரம் : செங்குந்தர் பிரபந்தத் திரட்டு.

ந. சண்முகானந்தன்,
T. ஜெகதீசன்.
மலர்க் குழு.

திருமதி. **செல்லம் சுந்தரம்**
தென்னிந்திய செங்குந்தர் மாதர் மாநாட்டு
வரவேற்புக்குழுத் தலைவி.

சிறப்பு மிக்க பொறுப்புக்களில் நம்மவர்களில் சிலர்



திரு. **S. K. சுந்தரம்**
தாளாளர்,
செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.

திரு. **C. பால்சாமி** முதலியார்
தலைவர், செங்குந்தர் கல்யாண
மண்டபம், ஈரோடு.



திரு. **E. S. தியாகரராஜன்**
பொதக்கூர்பேட்

திரு. **R. பிச்சைமுத்து முதலியார்**, B.A.
'செங்குந்தமித்திரன்' பதிப்பா

இணைப்புப்பாலம்

தி. ரா. செல்வராசன், M. A.,

நிலவுலகிலிருந்து நிலாவுலகத்திற்கு மனிதன் சென்று வருகிறான்; செவ்வாய்க்கும் விண்கலன் செலுத்திச் செய்திகளைத் திரட்ட முயல்கின்றான். இது அறிவாராய்ச்சியின் - விஞ்ஞானத்தின் வெற்றி. ஆனால் மனிதர்களுக்கிடையே - இரண்டு இதயங்களுக்கிடையே - உள்ள இடைவெளியை வெல்லும் வழியைக் காண நினைப்பும் இல்லையே!

பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடர்க்கும் விழிதந்து, கைகொடுத்து மேலுயர்த்தும் திருப்பணியே இன்றைய உலகின் இன்றியமையாத் தேவை. பல்வேறு துறைகளில் கருணை கொண்ட நெஞ்சங்கள் தந்நலம் துறந்து இருளினை ஓட்ட இன்ப விளக்கேற்ற அன்பு ஒளி பரப்புகின்றன. அன்னை தெரேசா, ஆல்பர்ட் சுவைட்சர் போன்றவர்கள் மானுடத்தின் மாபெரும் தொண்டர்கள்.

சமுதாய வீதியிலே விற்பனைப் பொருள்களின் மதிப்பீடு வினாடிக்கு வினாடி மாறி வருகின்றன. காலந்தோறும் கருத்துகள் வளர்ந்து வருகின்றன. ஐம்புலன் வழி வரும் இன்பத்தினும் அவற்றை அடக்க எழும் ஆன்மை இன்பம் நிலைத்தது; இது மெய்யறிவு இது தனக்கென வாழும் சிறு வட்ட வாழ்க்கையினும், தமக்கெனப் பொருள் திரட்டும் சிறுபொழுது மகிழ்ச்சியினும் பிறர் நலம் பேணும் செயல்களால் பெறுவது களங்கமிலாக் களிப்பு; இதுவே மெய்யின்பம் பெரும் பொருள் திரட்டுவது பெருகிய துன்பம் என எண்ணுமாறு புதுப்புதுச் சட்டங்கள் தினம் தினம் தோன்றும் இந்நாளில் அறிவையும் ஆற்றலையும் பொழுதையும், பொருளையும், தம்மினும் தாழ்ந்து வறுமைச் சேற்றில் புதைந்து 'ஆயுள் தண்டனை' யை அனுபவிக்கும் ஏழை எளியோர்க்குச் செலவிட வேண்டாமா? அன்பர்பணி செய்ய ஆளாகுதலே ஆண்டவனுக்குச் செலுத்தும் காணிக்கை அன்றோ! ஆதலால் எப்பணிக்கும் முதற்பணியாய்ச் சமுதாய உணர்வும் உழைப்பும் ஒவ்வொருவர் நெஞ்சிலும் செயலிலும் மின்னிடல் வேண்டும்.

ஒருவன் எவ்வளவுதான் திண்ணிய எண்ணங்கள் கொண்டவனாக இருப்பினும், அவன் எண்ணியவற்றைப் பிறரால் தாமே பெற முடிகிறது. ஒருவனுடைய அகவாழ்க்கையும் புறவாழ்க்கையும் எத்தனையோ பேர் உதவியால் உருவாகுகின்றன. இதற்குக் கைமாறு புரியப் பிறர்க்கு ஒல்லும் வாயெல்லாம் ஓவாது நல்லறம் புரிய வேண்டியுள்ளது. இன்று ஒருவர் தனித்து உலகையே மறந்து மதியாது வாழ்தல் இயலாத ஒன்று. துறவிகளுக்கும் செல்வாக்கான பல்லோர் தொடர்பும் பழக்கமும் விளம்பரமும் தேவைப்படும் காலமிது. எந்த ஒரு செயலும் தக்கவர் பரிந்துரையோ, அறிமுகமோ, செல்வாக்கோ, இன்றி முறைப்படி நடக்கும் என்று நினைப்பவர்க்கு இலவுகாத்த கிளி உவமையாகும்

தொழில் வழி அமைந்த குடி, மண உறவு முறையால் வளர்ந்து, பிறப்பினால் தொடர்ந்து, வாழும் இடத்தால் நெருங்கிக் காலப் போக்கில் சாதி என்ற பிரிவு நிலைத்து விட்டது. தலைமுறைகளாகப் பின்தங்கிய மக்களுக்குக் கல்விச் சலுகைகளும் வேலைவாய்ப்பு ஒதுக்கீடுகளும் தந்து அரசு பேருதவி புரிந்து வருகிறது. பிரிவில்லா ஒரே நிறையான சமுதாயம் அமைத்திட முதலில் நிலவி வரும் இல்லாமை, கல்லாமை, இயலாமை ஆகிய பொல்லாங்குகளைப் போக்கிட வேண்டும்.

செங்குந்தர் குல மக்கள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சிதறுண்டு வாழ்கின்றனர். கல்விகற்று வேலை தேடி வேற்றூர்களில் சென்று வாழ்வதால்,நம்மவர் யார் யார் என்று அறிந்து கொள்வதே அரிதாக மாறி வருகின்றது. பல்லாண்டுகள் பழகினும் சாதியைக் கேட்டு அறிவது பண்பாடு குறைவு என எண்ணி ஒருவரை ஒருவர் தெரிந்து கொள்ளாமலே பிரிந்து வாழ்கின்றோம். வெளிப்படையாகத் தெரிய உதவும் சாதிச் சின்னங்களோ குழுஉக்குறிகளோ இல்லாமையால் ஒட்டி உறவாட வழியில்லை; உதவிடவும் இயலவில்லை. சுயமரியாதை உணர்ச்சி மிகு முன்னோடிப் பிள்ளைகளாகிய நாம் வாழ்க்கைப் போராட்டத்தில் பின் தங்கிக் கிடக்கின்றோம்.

இனி நாம் செய்ய வேண்டியது என்ன? செங்குந்தர் என்னும் சமூக உணர்வு கொண்டவர்கள், தத்தம் தனிச் சிறப்புக்களைச் சற்றே மறந்து, சமுதாய மேம்பாட்டிற்குத் தம்மால் இயன்றளவு உழைத்திட வேண்டும். ஊர்தோறும் நகரந்தோறும் நம் குலமணிகள் ஒன்று சேர்ந்து அமைப்புகளை உருவாக்கிக் கூட்டுச் சிந்தனையிலும் கூட்டமைப்பிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும். செங்குந்தர் அமைப்புகள் பலகை அறிவிப்புக்களாக மட்டுமே நில்லாமல், பல்வேறு சமுதாயப் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படவேண்டும்.

ஆக்கப் பணிகள் ஆயிரம் இங்குக் காத்துக்கிடக்கின்றன. கற்க வேண்டும் என்ற ஆர்வமும் அறிவும் கொண்ட நம் குலச் சிறுவர்கள் ஆண்டு தோறும் பள்ளிச் செலவுக்குப் பணமின்றித் தறிக்குழிகளில் புதைக்கப்படும் துயர்நிலை கண்ணில் படவில்லையா? கல்வித்தொகை அளவில் சிறியது என்றாலும் காலத்தால் பயனால் பெரியது. ஆண்டுதோறும் கல்வித் தொகை

இடையிடின்றிக் கொடுத்துதவ கல்வி நிதிகளைத் தொடங்கி வளர்த்துச் சேமிப்புக் கணக்கில் வைக்க வேண்டும். கல்வியறிவால் தான் வாழ்க்கைப் பிரச்சனைகளை எதிர் நோக்கி வெல்ல முடியும். நம்மவர்கள் குறிப்பாகக் கைத்தறித் தொழிலில் மேம்பாடடைய ஒத்துழைப்பும் பணவுதவிகளும் தருகின்ற கூட்டுறவு வங்கிகளை உருவாக்க வேண்டும். பல்வேறு அமைப்புக் களில், அரசுத் துறைகளில் தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து செல்வாக் குடன் திகழும் நம்மவர்கள் ஓரிடத்தில் ஒருங்கு கூடி ஒருவருக்கொருவர் உதவும் எண்ணம் நற்பணி மன்றங்கள் பூத்திட வேண்டும்.

நிறைந்த செல்வமும், உயர்ந்த பதவியும், கூர்த்த அறிவும், மிகுந்த புகழும் கொண்ட செங்குந்த குலப் பெருமக்கள் தம்மினும் தாழ்ந்து கிடக்கும் நம் குல மக்களுக்கு உதவுதல் அவசரத் தேவை; அவசிய சேவை. நம்மவர்க்கு நாமே உதவ விரும்பாவிடின் வேறு யார் வேண்டாத தொல்லையை விரும்பி ஏற்பர்?

தனிமரம் தோப்பாவதில்லை. ஒரு மனிதர் உயர்வதால் சமூகம உயராது. தனித் தீவுகளாய்ப் பிரிந்து ஒதுங்கி வாழ்ந்தது போதும். இணைப்புப் பாலம் இன்றைய தேவை. நல்லுறவால் நாம் உயர்வோம்; நாம் உயர நாடு உயரும்!

எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இராசிபுரத்தில் ஒரு காஞ்சிபுரம்!

கல்யாணம் மற்றும் வைபவங்களுக்குத்தேவை யான சுத்தமான பட்டு, ஜரிகை சேலைகளை உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ற வண்ணங் களில் தெரிந்தெடுக்க வருகை தாருங்கள்.

இராசிபுரம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்., என். எஸ். ஏ. 18.

இராசிபுரம் ★ (சேலம் மாவட்டம்)

A. துரைசாமி, B. A.,
கைத்தறி அலுவலர்/செயலாளர்.

V. K. ரங்கநாதன்,
தலைவர்.

உயர்திரு. **A. பெரியசாமி**, B. SC., B. A., B. T.,
தொண்டர்படைத் தலைவர்,
தென்னிந்திய செங்குந்த சமூக மாநில மாநாடு.

• • •

தலைமையாசிரியர், செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.


கொடிகாத்த மாவீரன்

தில்லையாடி வள்ளியம்மை

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு

இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப்படும்

மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது

நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ். வார்

புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து

கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.

தொகுப்பு: ந. சண்முகானந்தன்,
T. ஜெகதீசன்.
(மலர்க்குழு.)

20 அம்சத்திட்டத்தின்கீழ்

தமிழ் நாட்டில் ஆறு மாதங்களில் முன்னேற்றம்!

அம்சம் : 1 விலைவாசி 30 முதல் 40 சதவிகிதம் வரை குறைந்தது. உணவு தானிய உற்பத்தி 81 லட்சம் டன்னுக உயர்ந்தது.

,, 2 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 10,003 ஏக்கர் உபரி நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

,, 3 59,505 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

,, 4 2,416 கொத்தடிமைகள், விடுதலையும், புனர்வாழ்வும் பெற்றனர்.

,, 5 ஆண்டு குடும்ப வருமானம் ரூ. 2,400க்கு மேற்படாத கிராம மக்கள் பட்ட கடன் ரத்து செய்ப்பட்டது.

,, 6 வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆண், பெண் இருபாலருக்கும் சம ஊதியம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது,

,, 7 இந்த ஆண்டு பாசன வசதிக்காக, ரூ. 24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நிலத்தின் நீரை வெளிக்கொணர, மேலும் 2,26,811 கிணறுகள் அமைக்கத் திட்டமிட்டுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

,, 8 மின்சக்தி கூடுதலாக உற்பத்தி செய்ய முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

,, 9 **ரூ. 521 இலட்சம் பெறுமானமுள்ள 17 012 பேல் பருத்தி நூல் நெசவாளருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. கரூர், ஈரோடு. காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் தீவிர கைத்தறி உற்பத்தி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளவ.**

,, 10 **4 276 சில்லரைக் கடைகளில் தரமான துணிகள் கட்டுப்பாடு விலையில் வழங்கப்படுகின்றன. இவற்றுள், 3,629 கடைகள் கிராமப்புறங்களில் உள்ளன.**

,, 11 நகர்ப்புற நில உடைமைக்கு உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப் பட்டுள்ளது.

,, 12 விற்பனை வரி, கேளிக்கை வரி ஏய்ப்புக்களைத் தடுக்க 2,67,556 சோதனை கள் நடத்தப்பட்டு, 25,724 வரி ஏய்ப்புக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அம்சம் : 13 கள்ளக்கடத்தலுக்கு முற்றுப்புள்ளி. கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

,, 14 தொழில் வளர்ச்சிக்கு இடையூறான தடைகளை நீக்கிதொழில் முதலீடுகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி உரிமைகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க அதிகாரிகள் 426 தொழில் கூடங்களைச் சோதனையிட்டனர்.

,, 15 536 தொழில் நிறுவனக் குழுக்களும் 191 கூட்டுக் குழுக்ககளும் தொழில் நிறுவனங்களில் நிறுவப்பட்டு, தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

,, 16 சாலைப் போக்குவரத்துக்கான 250 தேசிய அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்பட்டுள்ளன.

,, 17 நடுத்தர மக்களின் வரிப்பளு குறைய, வருமான வரி வரம்பு ரூ. 8,000 வரை உயர்த்தப்பட்டுள்ளது.

,, 18 மாணவர் விடுதிகளில் வழங்கப்படும் உணவிற்கான மாதக் கட்டணங்கள், ரூ. 15/- முதல் 25/- வரை குறைந்துள்ளன.

,, 19 125 கல்லூரிகள், 2,168 உயர்நிலைப் பள்ளிகள், 12,213 ஆரம்பப் பள்ளிகள் ஆகியவற்றில் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. புத்தகங்களின் விலை 10 சதவிகிதம் முதல் 34 சதவிகிதம் வரை குறைந்துள்ளது.

,, 20 உதவித்தொகையுடன் கூடிய 8,895 பயிற்சியாளர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

வெளியீடு : இயக்குநர் செய்தி - மக்கள் தொடர்புத்துறை. தமிழ்நாடு அரசு.

★★★

கடவுள் தேவலோகத்திலும் இல்லை; பாதாள உலகிலும் இல்லை. ஒவ்வொரு மனிதனிடத்திலும்தான் குடிகொண்டு இருக்கின்றார்; அதனால் தான் மனித வர்க்கத்துக்குச் சேவை செய்வதன் மூலமாகக் கடவுளைக் காண முயன்றுகொண்டிருக்கின்றேன். — காந்தியடிகள்.

★ ★ ★

'' அகங்காரமென்பது ஒரு அடங்காத காளை. அதனை அடக்கியாளும் நல்லவர்களே கூட்டுறவில் சிறந்து செயலாற்றும் வல்லவர்களாவார்கள்''.

வாழ்வு மலர - வளம் பெருக

20 அம்சத்திட்டம்.

—★—

அம்சம் : 1 இன்றியமையாப் பண்டங்களின் விலைவாசியைக் குறைக்கத் தொடர்ந்து துரித நடவடிக்கை; உற்பத்திப் பெருக்கம்; கொள்முதலை விரைவு படுத்தல்; இன்றியமையாப்பண்டங்கள் வழங்குமுறையைச் சீரமைத்தல்

,, 2 நில உச்சவரம்புச் சட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றுதல்; உபரி நிலங்களை ஏழைகளுக்கு விரைவாக வழங்குதல்.

,, 3 நிலமற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்கப்படுதல்.

,, 4 கொத்தடிமை முறை ஒழிப்பு.

,, 5 கிராமப்புற மக்களின் கடன் சுமை நீக்கப்படுதல்.

,, 6 விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம்பற்றி மறு ஆய்வு செய்தல்.

,, 7 நீர்ப்பாசன வசதிகளை விரிவுபடுத்துதல்.

,, 8 மின்சக்தி உற்பத்தியில் வளர்ச்சி.

,, 9 **கைத்தறித் தொழில் வளர்ச்சி—நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு.**

,, 10 **சாதாரண மக்கள் அணியும் துணிகளின் தரத்தை உயர்த்தி வழங்குதல்.**

,, 11 நகர்ப்புற மற்றும் நகர்ப்புறம் ஆகக் கூடிய நிலத்தைச் சமூக உடைமை ஆக்குதல்; காலி நிலத்தையும் புதிய குடியிருப்பு ஒட்டிய பகுதிகளையும் உடைமையாக்கிக் கொள்வதற்கு உச்சவரம்பு.

,, 12 வரி ஏய்ப்பைத் தடுத்தல்—பொருளாதாரக் குற்றங்கள் செய்வோர் மீது புலனாய்வு நடத்திக் கடுமையான தண்டனை விதித்தல்.

,, 13 கள்ளக் கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யத் தனிச் சட்டம்.

,, 14 தொழில் முதலீடுகளுக்கான வரைமுறைகள் தளர்த்தப்படுதல்; இறக்குமதி லைசென்சுகளைத் தவறாகப்பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை

,, 15 தொழில்கள், தொழிற்சாலைகளில் தொழிலாளர்களும் நிருவாகத்தில் பங்கு பெறப் புதிய திட்டங்கள்.

,, 16 சரக்கு வண்டிகளின் போக்குவரத்தில் உள்ள இடையூறுகளைக் களைதல்—தேசீய மட்டத்தில் அனுமதி வழங்கும் முறையை அமலாக்குதல்.

,, 17 ஆண்டு வருவாய் ரூ. 8,000 வரை வருமான வரியிலிருந்து விலக்கு.

,, 18 விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் இன்றியமையாப் பண்டங்களை வழங்குதல்.

,, 19 மாணவர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலைகளில் பாடப்புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் பள்ளிக்குத் தேவையான பொருள்கள் வழங்குதல்; புத்தக வங்கிகள் அமைத்தல்.

,, 20 எல்லா மக்களும்—குறிப்பாக, எளிய மக்களுக்கு—வேலைவாய்ப்பையும், பயிற்சி முறையையும் விரிவாக்குவதற்கு உதவித்தொகையுடன் கூடிய புதிய பயிற்சித் திட்டம்.

Handloom Industry in India - before and after Independence and in the present emergency.

PRAGADA KOTAIAH, M. L. C.
General Secretary,
Andhra Pradesh Handloom Weavers' Congress.

Prior to the British rule, the teeming millions in rural India, who covered over 90% of the total population, were mostly self employed to agriculture, handloom weaving, and other rural industries which were mostly heriditary and family based. With the advent of railways, automobiles and factory based industries, people started migrating from villages to towns and cities. This migration became intensified after India attained independence, due to the impetus given to industrialisation by the Government of India. Along with increased industrialisation and mechanisation, the number of salaried and wage paid employees as against self-employees in the country, are steadily increasing. Secured employment and higher earnings of salaried classes in urban areas is further pushing up migration of rural people, **including handloom weavers**, skilled artisans and other rural industrialists, to towns and cities, resulting also in a simultaneous transfer of the poor and the employed from villages to urban centres.

Among those, who shifted to towns, people commanding necessary financial facilities, could manage to capture avenues of employment with higher earnings in Industry, Commerce, Trade, State and other nationalised services. The poor had to struggle in less earning **self-employment or in low paid services**.

Under the present 20--point economic programme of our Prime Minister, attempts are now being made to reduce the social injustices, economic inequalities and disparities in earnings of many people, which assumed intolerable dimensions during last 2 or 3 decades.

In this 20-point programme, agriculture necessarily occupies an important position as bulk of the population is still depending upon agriculture. The Small Farmers Development Agency also is playing

an important role. The houseless are being provided with houses to live and the landless are given lands to till, while those with small landholdings, are being aided with loans and subsidies for acquiring agricultural tools and equipment, like carts, bullocks, ploughs etc., and for improving the fertilising and yield from their lands through better and more inputs.

Similarly the rural artisans and the small urban industrialists also are being helped through different schemes financed by Government and the nationalised banks.

But the position is different and disappointing in the case of handloom weavers.

The handloom industry of India is very ancient and its products were being exported to all civilised countries of the world for many centuries in the past. In the olden days there were no restrictions in commodities being exchanged between countries. Export then meant and of course even now means bartering of goods between different countries. History tells us that Indian Handwoven goods woven out of Indian hand spun yarn were being exchanged in past with valuable diamonds, gold and several other costly commodities like spices, silk, wool etc., in many foreign countries, after providing adequate cloth for the large number of people within this country.

As large scale industries and international trade and commerce increased, import and export tariffs, bans and duties and exchange rates between the monetary systems of different countries became inevitable. In fact, migration, colonisation, invasions, wars and empire building were and continue to be the consequences of rivalary in international trade and commerce.

Even prior to British rule in India, many European traders like East India Company were carrying on profitable trade through export of Indian handwoven fabrics which were in those days being woven out of hand spun yarns as stated above.

The British who were the last foreign rulers of India, crippled the traditional rural industries in India by importing their machine made products. Hand spinning and handloom weaving, had to face competi-

tion of mill yarn and cloth imported from England and other countries in large quantities.

Yet, as the mills could not produce multi-coloured fabrics with intricate warp and weft designs, in body and borders, Indian handloom weavers could survive the foreign mill competition. But they were forced to use imported mill yarn, as Indian Cottage Spinning almost vanished due to competition of mill yarn.

The British traders could carry on a very flourishing trade in such Indian handwoven fabrics not only in British colonies but in other countries also.

Indian cotton was then being exported to other countries for reimporting into India in the form of yarn and cloth. However. the handloom fabrics of India, woven out of the imported yarn, were being exported in large quantities to the British colonies and other countries because the mills could not produce the multicoloured and intricate warp and weft designed fabrics woven on handlooms by the skilled weavers of India.

In this trade the cotton growing Indian ryots and weavers were being exploited. But this could not continue long. International jealousies and rivalry in their industries and trade, led to two world wars and India, also demanded political independence, under the able leadership of Mahatmaji. He was urging to revive handspinning, hand weaving and other traditional village and cottage industries in India preliminary to our attaining Independence.

British Empire was in the due course liquidated making India and many other British colonies politically independent.

But Indian Independence opened a gloomy chapter for the Indian handloom industry. Independent India started expanding its textile mill industry rapidly, to replace imported textiles with Indian Textiles. For explanding the Indian Textiles Industry not only textile machinery, but long staple cotton, synthetic yarn, dyes and chemicals were also being imported heavily. To earn necessary foreign exchange for importing the above said machinery and materials, Government started giving export incentives of (a) cash, (b) import entitlements, (c) Draw Back's for exporting mill textiles.

In this process, the handloom industry was not only ignored but also injured, giving preference in exports of mill textiles, handloom exports were neglected and many of their traditional markets were almost lost during 2nd world war. Within the country also the handloom lost their markets as Indian markets ars always flooded with Indian mill textiles.

After Independence powerlooms also were forced on handloom weavers and finally handlooms are now being denied adequate supplies of required varieties of hank yarn, dyes and chemicals at fair prices.

No doubt Export Incentives have been extended to handloom fabrics also but they are benefitting the middlemen-exporters but not the producing weavers.

Without assured supplies of adequate quantities of required yarns at fair prices and without offering higher wages to increase the weavers earnings, the scheme of the Government to increase exports of handloom products cannot work as successfully as desired.

Even with adequate supplies of raw materials or inputs or with increased wages, it is also necessary to organise and effectively control this decentralised and widely dispersed rural and cottage industry, carried on by human effort as a family occupation employing men and women of all ages. Above all they have to be financed promptly, adequately and on fair terms.

At present weaver's cooperatives are benig disfavoured Independent weavers, master-weavers are being weaned into working under the officially managed export oriented or intensive deveolpment production centres, promising adequate supplies of all inputs at fair prices technical guidance and supplying improved implements with an assurance to purchase the finished products. But these official managed production centres are being found to be incapable of competing with private producers, merchants and middlemen acting as agents of the actual exporters who get the **benefits of export incentives**.

Long before India got Independence many handloom weavers organised themselves into cooperative Societies. The then composite Madras Province, with highest number of handlooms and producing many exprotable varieties, was the first State to build up cooperative

organisation among handloom weavers even prior to second world war. Short supply of yarn and other raw materials during and immediately after the war, gave further impetus for strengthening cooperative organisations and effort among weavers.

The Fact Finding Committee was appointed in 1941 while the 2nd world war was going on. Weavers' Cooperative Societies were utilised for producing varieties like Guaze, Bandage cloth, Mosquito net cloth Mazri cloth etc., required for the fighting forces. On the recommendations of the Fact Finding Committee **All India Board** also was constituted. Warended in 1945 and India got Independence in 1947.

After Independence the All India Handloom Board was re-constituted, handloom cess at 1/4 anna per yard was imposed in 1951 on all mill cloth produced in the country, and the said cess was proposed to be utilised for implementing handloom development schemes approved by the All India Handloom Board.

Recognising the need to protect and to promote handloom industry, with its one more self employment potential for crores of people in this over-populated country, the Government of India thought it also necessary to reserve certain varieties of cloth for production only on handlooms and later to levy excise duties on mill cloth. More financial help was provided for the development of the handloom industry.

But the textile Enquiry Committee (with Sri Nityananda Kanungo as its Chairman) of 1952, expected to improve the earnings of weavers, recommended to the Government to introduce powerlooms in place of handlooms. To encourage this change, domestic units of not more than 4 powerlooms were sought to be exempted from levy of excise duties on their products and from the reservations of certain varities of cloth for production on handlooms only.

The rich powerloom factory owners and mill owners took undue advantage of the above said recommendations. They split up big powerloom factories into units of 4 looms under the same roof, and exploited the above said exemptions given in favour of domestic units of not more than 4 powerlooms.

This misuse was already pointed out by the Asoka Mehata Powerloom Enquiry Committee of 1963, which emphatically recommended that coloured sarees should not be allowed to be produced even by the domestic units of four or less powerlooms. But this Committee also recommended legalising over a lakh of powerlooms already set up without due licences or authorisation and also to permit installation of some more powerlooms.

At last the latest Sivaraman Committeeof 1973 once again clearly recommended that no more expansion of powerl ooms outside the mill should be permited. It also felt that at least 60% of the total handlooms in the country should be brought back into the cooperative fold ultimately. But till then it recommended setting up (1) intensive development and (2) export oriented-handloom production centres in areas were weavers' cooperative societies are not functioning.

On the pretext of these recommendations, the Government of Andhra Pradesh recently started the Andhra Pradesh State Textile Development Corporation (Private) Ltd., It claims to promote both hand-looms and Power-looms and help even Master-weavers and handloom cloth merchants outside the cooperative fold. This Corporation is an incongruity, giving misinterpretations to the recommen ations of the Sivaraman Committee. It is encouraging powerlooms and working against handloom weavers' cooperative societies both Primary and Apex Societies.

During the last 2 decades after the Kanungo Committee suggested 'conversion' of handlooms into 'power-looms' much harm was done to handloom weavers and their cooperatives by pro-powerloom politicians, in States like Maharashtra, Tamilnadu, Karnataka, Kerala and Andhra Pradesh. Powerloom **owners** were benefitted at the cost of powerloom **weavers.**

But in the two handloom-predominent states of Tamilnadu and Andhra Pradesh and even in the other-pro-powerloom States, the handloom weavers continue to carry on their industry to large numbers. The Government of India and even the respective State Governments are now fully convinced that the handloom industry in this country is not only

capable of providing employments to lakhs of people, but can also earn very valuable foreign exchange if handloom products also are given due export incentives, just as mill cloth was being given.

Export incentives have been no doubt indirectly extended to handloom fabrics also to take advantage of the enormous demand in many countries for garments made not of the multi-colour check-designed hand-woven cloth. But the benefit of these incentives is being enjoyed more by private exporters than by the handloom weavers or their statutory organisations of Primary and Apex Weavers' Cooperative Societies and the All India Handloom Fabrics Marketing Cooperative Society.

Even the said fabrics Society and the recently started Andhra Pradesh State Textile Development Corporation, Private Limited or the Handicrafts and Handlooms Export Organisation are not extending their help and patronage to the Primary handloom weavers' cooperative societies or their Apex Societies. Consequently many weavers 'working in weaver's cooperative societies are now working for private merchants, who are offering higher wages for producing exportable varieties.

Whenever there is an increased demand for handwoven cloth either in this country or aborad, the Indian Textile Mills, on which handloom weavers are now entirely depending for supply of yarns of different counts, and the manufacturers or importers of dyes and chemicals, tighten their supplies to handloom weavers and their prices also raised, denying the weavers the due benefits of increased demand for handloom cloth.

Thus, Indian handloom weavers, who were being exploited by foreigners prior to Independence, are now being exploited by Indian Textile mill owners and traders or makers of dyes and chemicals. Even if there was, an increased demand in foreign markets for Indian handwoven fabrics or their made-ups, the benefit always goes to the exporters and the rich private merchants and producers of handloom cloth.

During the present emergency, the 20-point economic programme provided for improving the lot of the handloom weavers also. There is a proposal even to entrust production of dhoties and sarees of controlled cloth to handloom weavers. A separate Development Commissioner for Handlooms has also been appointed recently and the Commerce Ministry

has been assuring all help to handloom weavers. But textile mill owners, manufacturers of dyes and chemicals are not cooperating with the Government of India in assuring supplies of yarn, dyes and chemicals in required qualities and quantities at fair prices.

In addition, the pro-powerloom politicians in certain States, are also producing varieties of cloth reserved for production only on handlooms. In Andhra Pradesh even the Minister incharge of Handlooms has been working against handloom weavers and their cooperative societies and encouraging powerloom weavers and private producers of handloom cloth through the Andhra Pradesh State Textile Development Corporation (Private) Limited. Therefore, though our far-sighted Prime Minister is anxious to help and develop the handloom industry with its enormous employment potential with minimum investment and overheads, certain State Governments, Textile Industrialists are not extending their helping hand in implementing the 20-point economic programme of the Prime Minister.

In Andhra Pradesh and Tamilnadu where large numbers of handloom weavers are concentrated and when they were long ago organised into cooperative societies and have been for decades producing varieties having continued demand and markets in many foreign countries, the weavers' cooperatives are being managed by officials by not allowing elections of non-officials under the present emergency. Unless this state of affairs is changed, neither the handloom weavers can manage their cooperatives in a manner beneficials to them nor can they whole-heartedly participate in promoting exports of handloom cloth for earning even foreign exchanges urged by the Government of India. The Government should also extend necessary credit facilities and assure adequate supplies of yarn, dyes and chemicals at fair prices to push up production of handloom exportable varieties which cannot be produced on powerlooms in the mills or outside.

This decentralised and widely dispersed handloom industry cannot be effectively organised and controlled unless the weavers, are readmitted into cooperative societies, financed, supervised, controlled and their accounts audited by the Government. Simultaneously the 'reservations' in favour of handlooms must be rigidly enforced. This is exactly what the 20-point economic programme of the Prime Minister promised and the promise must be fulfilled by every State Government.

—◆—

ஈரோடு கலைக் கல்லூரி ஆட்சிக் குழு



திரு. C. K. கந்தசாமி முதலியார்



திரு. T. R. அர்த்தனாரி முதலியார்

திரு. மயிலோன் ஆறுமுகம்

ஈரோடு கலைக் கல்லூரி ஆட்சிக் குழு

திரு. S. வையாபுரி



திரு. J. K. நாராயணன்



திரு. C. K. சிவசுப்பிரமணியம்

கலையழகு மிக்கக் கைத்தறி அணிகள்.

P. சண்முகம், D. H. Tech. (Tex.). சென்னிமலை.

தொன்மைக் காலம் முதல் நம் தமிழகத்தில் கைத்தறித் தொழில் கலையழகு பெற்று, மிகச் சிறந்த உன்னத நிலையிலிருந்தது பற்றி வரலாற்று நூல்களாலும், 'நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை' எனும் வள்ளுவப் பெருந்தகையின் புகழ் மொழியிலிருந்தும் தெரிந்து கொண்டுள்ளோம். பெரிதும் விவசாயத் தொழில் நிரம்பிய நம் பாரத நாட்டில், பயிர் தொழிலுக்கு அடுத்த நிலையில் கைத்தறித் தொழில் லக்ஷக்கணக்கான மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் தொழிலாக இருந்து வருகிறது. இன்றைய நிலையில் நாடெங்கிலும் 'கைத்தறி' பற்றிய பிரச்னைகளையே பெரிதும் மக்களும் அரசினரும் தினந்தோறும் கருத்துடன் கவனித்துப் பேசி வருகிறார்கள்.

வேலைவாய்ப்பு இல்லை என்று தினமும் அரசியல் கூட்டங்களில் பலப்படப் பேசப்படும் இதுகாலை சுமார் 200 லக்ஷம் பேர்களுக்கு மேல் கைத்தறித் தொழில் மூலம் நன்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் செயல்படுகிறார்கள். இதனைச் சார்ந்த சாயம் தோய்த்தல் பிளீச்சிங் செய்தல், துணிகளைத் தைத்தல், முடி போடுதல், மடித்து ஒழுங்கு படுத்துதல் சுருக்கமின்றிச் செப்பனிடுதல், நூல் சுற்றல், பாவு ஓடுதல், விலைச் சீட்டு ஒட்டுதல், சரக்குகளைப் பேல் செய்தல், வண்டிகள், லாரிகள், ரயில் மூலம் பாரம் ஏற்றி வெளியூர் களுக்கு அனுப்புதல், மொத்த வியாபாரம், அன்றாடம் விற்பனை செய்யும் சில்லரை ஜவுளிக் கடைகளில் விற்பனை, முதலிய பல்வேறு வகையான உபதொழில்களில் பல லக்ஷக்கணக்கான பேர்கள் ஈடுபட்டு வாழ்க்கை நடத்துகிறார்கள், ஆரம்பகாலத்தில் நம் தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு ஜவுளிக் கடை குமாஸ்தாவாக இருந்தார் என்பது யாவரும் அறிவர். கவர்ச்சிமிக்க மில் துணி போட்டியிருப்பினும், மங்கலப் பொருளான கைத்தறித் துணிகளின் சிறப்பினை உணர்ந்து, பல வண்ணக் கலவைகளில் கவின்மிகு கலையழகு நிரம்பிய கவர்ச்சிமிக்க மோஸ்தர்களில் நயமிகு தைத்தறிச் சேலைகள், பளிச் சிடும் பட்டுச்சேலைகள், வெண்பட்டு, வேஷ்டிகள், நயமிகு ஜரிகை வேஷ்டிகள் முதலிய வைகளே திருமணவைபவங்களில் பெரிதும் விரும்பி அணியப்படுகின்றன. பாரதப் பண்பாட்டிற்கொப்ப, பெருங்குடிச் சான்றோர் போற்றும் புனிதமான ஆடைகள், உயர்வுமிகு கைத்தறி ஆடை அணிகளே ஆகும்.

முகத்திலே மஞ்சள் பூசி, நன்னீராடி, புனிதக் காஞ்சிபுரம் பட்டுச் சேலையணிந்து, நெற்றியில் திலகமிட்டு, பூச்சூடி, அகத்திலே மகிழ்ச்சி பொங்கப் பணிவுடனும் சாந்தத் துடனும் தோற்றமளிக்கும் மாதர் எவரையும், கண்டோர் வியந்து, அன்னை பராசக்தி யைக் காண்பது ஒப்பமனதில் கண்யமும், அச்சம் கலந்த பெருமிதமும் கொண்டு வாழ்த்தி வழிபட்டு நடப்பர். இதுவே மங்கலப் பொருளான கைத்தறித் துணிகளின் மகத்தான புனிதத் தன்மையாகும். எனவே, பெண்ணுலகப் பெருமக்கள் அனைவரும் தத்தம் குலமும் குடும்பநலனும் புனிதமுடன் வளர்ச்சி பெற்றுப்புகழுடன் விளங்குதற்குத் தூய்மை மிகு கைத்தறி ஆடைகளையே எக்காலத்தும் அணியும் நற்பழக்கத்தை நழுவ விடாது கைக்கொள்ள வேண்டுமென்பது நன்மக்கள் கருத்தாகும்.

நாட்டின் பெருமளவு மக்களின் வாழ்க்கையை வளப்படுத்திவரும் கைத்தறித் தொழிலுக்கு இடையூறுகள் பல மோதி அல்லற்படுத்துகின்ற நிலைமை அடிக்கடி ஏற்படுகின்றன. நூல்விலைகூடுதல், நூல்தட்டுப்பாடு, சாயவிலைகூடுதல் இவைகளினால் துணிவிலைகூடுதலால் உரிய காலத்தில் சரக்குகளை விற்பனை செய்ய முடியாமை கச்சாப் பொருள் பற்றுக் குறையும் சில சமயங்களில் போக்குவரத்தில் தடங்கல்களும் தாமதங்களும் ஏற்படுதல் முதலிய இத்யாதி காரணங்களாலும், மில் உற்பத்திகள் விசைத் தறி உற்பத்திகள் போட்டிகள் காரணமாகவும் தொழிலில் போதிய வருவாய் நெசவாளர் பெறுவதில் அநேக இடையூறுகள் இருக்கின்றன. நெசவாளர்கள் பாது காப்பான ஒரே சீரான வாழ்க்கை நடத்த இயலாத நிலைமை இருந்துவருகிறது, எப்போது நெய்த துணி விற்பனையாகாமல். வேலைவாப்பும் பறிபோய் விடுமோ என்று அஞ்சி, அஞ்சி வாழ்க்கை நடத்துகிறார்கள். அதிலும் இதுசமயம் நூல் விலைகள் ஏறியிருக்கின்ற காரணத்தினால் துணி விலைகள் கூடுதலாகின்றன. பழைய விலைக்கே சரக்குகள் விற்பனை ஆகாமல் தேங்கி இருக்கும் போது, அதிகவிலை கூறினால் துணி விற்பனை ஆவதில்லை, நெசவாளி வேலை செய்ய இயலாமல் பாதிக்கப் படுகிறான். இதனைப்பயன்படுத்தி அரசியல் கட்சிகள் ஒவ் வொன்றும் அக்கரையுடன் நெசவாளர்க்குப் பரிந்து பேசுகின்றன. ஏதோ சத்தம் கேட்கிறது; ஆனபோதிலும், முறையான வழிவகை செய்து எங்ஙனம் செயல்பட்டால் நிறைவு மிக்க நற்பணியாற்றலாம்; தொழிலுக்கு உறுதுணை செய்யலாம் என்பது தெளிவுறத் தெரியாமல், தடுமாற்றம் ஏற்படுகிறது. நெல்லுக்குப் பாய்ச்சிய நீர் புல்லுக்குப் பாய்வது போல், நெசவாளிக்கு உதவும் திட்டங்கள் மாற்றார்க்குப் பயன் படும் திட்டமாகத் தடம் புரளாமல், நெசவாளர் சமுதாயத்திற்கு மட்டுமே பயன்படும் வண்ணம் அடிக்கடி கண்காணிப்புடன் செயலாற்ற வேண்டும்.

கவின்மிகு கைத்தறித் துணி உற்பத்தியில் நம் தமிழகத்தில் ஒவ்வொரு நகரும் பிரசித்திபெற்ற துணிகளைத் தயாரிப் பதில் முன்னணிக்கேந்திரங்களாக விளங்குகின்றன திருமண வைபவங்களில் சேலம் குண்டஞ்சு வேஷ்டிகள், 100 நெ. ஜரிகை வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், வெண்பட்டு ஜரிகை வேஷ்டிகள், துண்டுகள், நயமிக்க சேலைகள் மிக மதிப்புமிக்க உயரிய அணிகளாகப் போற்றப்படுகின்றன. காஞ்சிபுரத்திலும், திருப்புவனத்திலும் உலகப் புகழ் பெற்ற உயரிய ஜரிகை வேலைப்பாடமைந்த கண் கவரும் பல வண்ணங்களில் விலை மதிப்பற்ற பட்டுச் சேலைகள் தயாரிப்பது யாவரும் அறிந்த கலைப் பொக்கிஷங்களாகும். அடுத்து மதுரையிலும், கோவையிலும் திருச்சி-உறையூரிலும் அதிநைசான 100 நெ. சேலைகள், கோடம்பாக்கம் போன்ற சேலைரகங்களும் சின்னாளப் பட்டி, கொள்ளேகாலம் போன்ற ஊர்களில் தயாராகும் பட்டுச் சேலைகளும் தமிழக மெங்கும் விரும்பி அணியப் பெறுகின்றன. கெட்டிச் சாயத்திலும் அழுத்தமான நெசவிலும் தரம்மிக்க மதராஸ், லுங்கி ரகங்களும், கர்சீப் ரகங்களும் உலகப் பிரசித்தமானவை. மலிவு விலை மோட்டாரக வேஷ்டிகளும், லாங்கிளாத், மல், சர்ட்டிங் ரகங்களைத் தயாரிப்பதில் ஈரோடு நகரம் பாரதம் எங்கும் புகழ் பெற்ற கைத்தறிக் கேந்திரமாகத் திகழ்வது யாவரும் அறிந்த விஷயமே. தமிழகத்தில் எங்கெங்கு கைத்தறித் துணிகள் தயாராகின்றனவோ, அத்துணை ரகங்களும் ஈரோடு சந்தைக்கு வாரம் தோறும் வருவதும், டெல்லி, பம்பாய், கல்கத்தா, ஜம்மு - காஷ்மீர் நேப்பாளம் முதலிய வட இந்தியப் பகுதி வர்த்தகர்கள் அனைவரும் ஈரோடில் எல்லாவித கைத்தறித் துணிகளையும் வாங்குவதும் துணி வணிகத் துறையில் ஒரு பெருஞ் சிறப்பு நிகழ்ச்சியாகும். உயர்வு மிக்க படுக்கை விரிப்புகள் (Bed spreads) மேஜை விரிப்புகள் திரைச் சீலைகள் தலையணை உறைகள், நாப்கின்ஸ் போன்ற ரகங்களையும், கேஸ்மெண்ட்,

சீர்சக்கா ஜேக்கார்ட் போன்ற ரகங்களையும் சென்னிமலையிலும் கரூரிலும் தயாரிக்கிறார்கள் பாரத நாடெங்கிலும் இவ்வகைத் துணிகள் அனுப்பப் பெற்று மிகச் சிறந்த நிலையிலுள்ளது. தனியார் துறை மட்டுமல்லாது, கூட்டுறவுத் துறையில் 'சென்டெக்ஸ்' போன்ற உலகப் புகழ் பெற்ற நிறுவனங்கள், கலையழகுமிக்க, சித்திர வேலைப்பாடமைந்த காஞ்சிபுரம் பட்டுச் சேலை மோஸ்தர் போன்ற பட்டிலும், உயர்ரக நூலிலும் கண்கவரும் பல வண்ணங்களில் 'ஜேக்கார்ட்' ரக பெட்ஷீட்டுகளைக் கண்டோர் வியந்து மகிழும் வண்ணம் உயரிய துணி ரகங்களைத் தயாரித்து உலகெங்கினும் அனுப்பிவருகின்றன. கைத்தறித் துணிகள் பொலிவுடன் என்றென்றும் புகழுடன் விளங்க, இத்துணி தயாரிப்புகள் மிக கருத்துடனும் உயரிய முறையிலும் தயாரிக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டில், நம் நாட்டில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதும் மக்களில் அநேகர் உணர்வு பெற்றனர். வெளிநாடுகளில் நடப்பது போன்ற புரட்சி நிகழ்ச்சிகள் ஏற்படுமோ என அஞ்சினர். ஆனால் அவசரச் சட்டத்தை அடுத்து பிரதமர் இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டங்கள் பிறப்பிக்கப்பட்டு, அத்திட்டங்கள் நடைமுறையில் தீவிரமாகச் செயல்படத் துவங்கியதும் மக்கள் எல்லாரும் மனமகிழ்ச்சி பெற்றனர். 20 அம்சத் திட்டத்தின் பயனாக, கள்ளக்கடத்தல், கறுப்புப்பணம், பொருள்களைப் பதுக்கல் முதலியவைகளை ஒழித்து, விலையுயர்வைத் தடுத்து, விலையைக் குறைக்கவும், தொழில் நிலையங்களில் உற்பத்தி பெருகவும், கதவடைப்பு, ஸ்ட்ரைக் முதலியவைகளை நிறுத்திக் குறிக்கோளை நிறைவு செய்யவும், விவசாயத்திற்கும் கனரகத் தொழில்களுக்கும் உதவித் திட்டங்கள் செய்தும் வருவதுபோல் நம் கைத்தறித் தொழிலுக்கும் ஊக்கமும் ஆக்கமும் நிறைந்த உதவித் திட்டங்களைப் பல்வேறு கோணங்களிலும் பயன் தரும்படியாக வகுக்கப்பட்டு, அவை தற்சமயம் காரியாம்சத்தில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகின்றன. தமிழகத்தில் ஈரோடு, கரூர், காஞ்சிபுரம் போன்ற ஆறு கைத்தறிக் கேந்திரங்களில் கைத்தறி தீவிர அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டும், புதிய கூட்டுறவு நிறுவனங்களைத் தோற்றுவித்தும் பலபடியாகத் திட்டங்கள் செயல்படத்துவங்கியுள்ளன. கைத்தறித் தொழிலுக்கு அடிப்படைத் துணையாக முக்கியமாக உதவுவது நூல்விலையைக் கட்டுப்படுத்தி ஒரே நிதானமான சீரான விலையில் நெசவாளர்க்கு நூல்கிடைக்க அரசினர் முழு முயற்சி எடுத்துக்கொள்வதே திட்டத்தின் பிரதானக் கொள்கையாக இருத்தல் பெரிதும் நலம் பயக்கும். நூல் விலை ஒரே நிதானமாக இருப்பதற்குப் பருத்தி விலைகளைக் கட்டுப்படுத்தியும், பஞ்சுப் பற்றாக்குறை ஏற்படாமலும் அடிக்கடி கண்காணிப்புடன் செயல்படவும், துணிகள் தேங்கி விடாமல், தரமான நெசவும், திடமான சாயமும் கொண்ட சிறந்த துணிகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவும் அவ்வப்போது நவீன புதிய மோஸ்தர்களைப் புகுத்தி அனைவரையும் ஈர்க்கும்படியான உத்திகளைக் கைக்கொண்டும் செயல்பட்டால், உலகத்தில் நம் கைத்தறித் துணிகளுக்கு என்றென்றும் நல்லதொரு விற்பனைச் சந்தை நிலைத்து நீடித்து வரும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. கைத்தறித் தீவிரத் திட்டங்கள் மேலெழுந்தவாரியாக நடைபெறாமல், உண்மை நெசவாளிக்குப் பயன்படும்படியான வழிவகைகளைக் 'கைத்தறிக் காவலர்' திரு. M. P. நாச்சிமுத்து B. A., B. L., போன்ற கைத்தறித் தொழில் வல்லுனர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்து சிறப்புடன் செயலாற்றுமாறு நம் அரசினைப் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம். உலகில் எந்த மிஷினரியினாலும் தயாரிக்க இயலாத, நயமும் அதியுன்னத கவின்மிகு கலையழகு மிக்க கைத்தறித் துணிகளைத் தரமானதாகவும் உயர்வானதாகவும் உண்மையாகத் தயாரித்து, உலக அரங்கில் தனித்தொரு தகுதி பெற்று நிற்க நெசவாளர் சமுதாயமும் சங்கற்பம் செய்துகொண்டு உயர்வு பெறுவார்களாக.

வளர்க கைத்தறித் தொழில்! ● வாழ்க கைத்தறி நெசவாளர்கள்!!

தொலைபேசி எண் : { 3955 / 5554

அண்ணா டெக்ஸ் ...

பேப்ரிக்ஸ்

★ படுக்கை விரிப்புகள்

★ துண்டுகள்

★ அலங்காரத் துணிகள்

★ டிரில் துணிகள்

★ கோட்டிங்ஸ்

தயாரிப்பாளர்கள் :-

அறிஞர் அண்ணா நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்

லிமிடெட் எண் C. H. 1.

24, காரைவாய்க்கால் ரோடு, **ஈரோடு-638002.**

எங்கள் தயாரிப்புகள் எல்லா "கோப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

இயக்குநர்கள் :

ஆர். எஸ். முத்துசாமி கவுண்டர்
ஆர். நடேசன்
வி. எஸ். எளையப்பன்
பி. பூசப்பன்
K. சுப்பிரமணியம்

மா. சுப்பிரமணியன், பி. ஏ., பி.எல்.,
தலைவர்.

க. ரா. ரங்கசாமி
உபதலைவர்.

மயில்

புலவர். தணிகை உலகநாதன்,
தலைவர், சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை.

தேசீயப் பறவைமயில் என்றிடுவார்; அதனுல்
தேசீயக் கடவுள்தான் யார் என்று சொல்வீர்
நேசமுறும் அடியார்கள் நெஞ்சினிலே இனிக்கும்
நின்மலனும் மயிலரசன் வேல்முருகன் அன்ருே?
நாசமுறப் பகைப்புலங்கள், நாட்டைக்காக் கின்ருன்
நன்மையெலாம் வந்தெய்தத் தீமையெலாம் நலிய,
ஓசைபெறும் கடல்மடைபோல் திருவருளை அள்ளி
உலகெங்கும் பாய்ச்சிடுவான் திருமுருகன் அன்ருே?

நாலுவகைப் பறவைகளை நானிலத்தில் கண்டோம்;
நாரை கத்தி துணையென்று கூறுபவர் இல்லை.
காலையிலே கூவுகின்ற சேவல்வாள் துணையாய்க்
கருதுபவர் ஒருவருமே இல்லைஇந்த உலகில்
வாலுடைய குருவிஈட்டி துணைஎன்பார் இல்லை;
வழிபாட்டுக் குரிய தொரு பறவைமயில் அதனுல்
வேலுமயி லும்துணையென் ருேதிடுவார் அடியார்
மேன்மைமிகு தெய்வீகப் பறவைமயில் வாழ்க.

கிளியினது உடம்பினிலே அலகில்தான் அழகு;
கேழ்வரகுக் கதிரினில்தான் கண்கவரும் அழகு;
களித்தாடும் மானினத்தில் கண்களிலே அழகு;
கடலுக்கும் வீசுகின்ற அலைகளில்தான் அழகு;
நளினமிகு செடிகளிலே மலர்கள்தான் அழகு;
நல்லதொரு வண்டுக்கும் சிறகினில்தான் அழகு;
ஒளிபடைத்த மயிலுக்கோ உடலெல்லாம் அழகு
உயர்முருகன் வாகனமாய் அமைந்திட்ட தாலே.

அன்ருெருநாள் உமையவள்தான் அழகுமயி லாக,
அவதாரம் எடுத்திட்டாள்; சிவபெருமான் தன்னை
ஒன்றியுளம் உருகிடவே வழிபாடு செய்தாள்;
உத்தமியாம் அவளுக்கே அவனுமருள் புரிந்தான்,
அன்னையவள் செயலாலே அடியவர்கள் போற்றும்

அணிநகராம் மயிலாப்பூர் [illegible] நின்றே.
தென்னகத்தின் பொன்னகராய்த் திகழ்கின்ற சென்னை
திலகமென விளங்கிடுதே மயிலாப்பூர் இன்றே.

'அரோகரா வேல்முருகா' அடியாரின் தாளம்
அதற்கேற்ற படிமயிலும் அழகுக்கூத் தாடும்.
ஒரேவொரு முறை முருகன் ஒளிமுகததைக் காணும்
உவகையினல் ஆலயத்தின் உள்முந்திச் செல்வார்.
விராவிடும் அவனழகைத் திருவருளை விழுங்கி,
விருப்பமுடன் மெய்மறந்து வெளியேவந் திடுவார்;
சரலெனத் தனிகைபயில் தானிவர்கள் முன்னே
தமிழ்முருகன் பெருமையினை அகவலிலே பாடும்.

காட்டுமயில்! உனையொன்று வேண்டுகிறேன் கனிவாய்
காதுகொடுத் துக்கேட்பாய் ரகசியமாய் வைப்பாய்
வீட்டுமயில் என்மனைவி உடன்வெளியே சென்ருல்
விரைந்தெதிரே தோகை விரித் தாடாதே, ஆடின்,
நீட்டியவுடன் தோகைநிறம் போல்புடவை கேட்பாள்;
"நேராகத் துணிக்கடைக்கே, வரவேண்டும்" என்பாள்
ஆட்டமெலாம் வேறிடத்தில் வைத்துக்கொள் உன்றன்
அழகையெலாம் வருணித்துப் பாடிடுவேன்; நன்றி.

உடம்பெல்லாம் நவமணிகள் ஒளியுமிழ்தல் போலே
ஒய்யார நடைபோட்டு நடனமிடும் மயிலே!
அடடாவோ பொன், மணிகள், அரவிந்தம், நீலம்
அடங்கியதோர் பெட்டகமாம் உன்மேனி தானே
கடத்தலிலே கலந்தாயோ என இந்நாள் உனைக்
கவனத்தில் வைத்திடுவார்; சோதனையும் செய்வார்.
படமாடும் தோகையினை விரிக்காமல் சிலநாள்
பக்குவமாய் நடந்திடுவாய் எச்சரிக்கை செய்தேன்,

அளவடியால் துள்ளலினல் அகவற்பா பாடி
அப்படியிப் படியசைந்து நாட்டிய மாடி
குளிர்மேகம் கண்டதனல் கொள்ளையின்பம் கொண்டாய்
கோலமிதைப் பார்த்ததுமே பேகனெனும் மன்னன்
உளமகிழ்வால் கவிஞர்க்குப் புத்தாடை போர்த்தும்
ஒருமரபால் பொன்னுடை உன்றனக்கும் போர்த்தான்
வளமான வள்ளலவன் நினைப்போற்றும் திறத்தால்
வையத்தில் பொன்னெழுத்து வரலாற்றைப் பெற்ருன்.

அன்புருவாம் என்மனைவி அன்றொருநாள் தனது
அழகுமிகும் நீலநிறச் சேலையினைத் துவைக்க
துன்னியஎ காலியிடம் அனுப்பிவைத்தாள் அவனும்
துவைத்தெடுத்துப் பெட்டியினால் தேய்த்திட்டுக்
கொணர்ந்தான்;
'என்சேலை வெள்ளைநிற மானதுஎன்?' என்றாள்
'என்செய்வேன்' சாயத்தில் பிடிப்பில்லை என்றான்
உன்றனது உடைநீலம் உயர்கெட்டிச் சாயம்
உயிருள்ள வரையிலது வெளுக்காது வாழ்க!

தென்னிந்திய செங்குந்த மாநில மாநாட்டிற்கு

எங்கள் நல்வாழ்த்துக்கள்!

ஸ்ரீ சாரதா இண்டஸ்ட்ரியல்ஸ்,

ஜமக்காள வியாபாரம்,

தபால் பெட்டி எண். 12.

பவானி P. O. ★ (வழி) ஈரோடு.

சைவ சமயத்தில் பெண்கள் பங்கு.

புலவர். செல்வி. தமிழ்மணி, ஈரோடு.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள? என்ற ஒரு வியப்பு வினுவிலேயே பெண்ணின் பெருமைகள் அனைத்தையும் சொல்லாமல் சொல்லுகின்ருர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அவரே மீண்டும் தொடர்ந்தார்.

'மங்கலம் என்ப மனை மாட்சி' — என்று

''மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மா த வ ஞ் செய்திடல் வேண்டுமம்மா'' என்ருர் தமிழ்த் தென்றல்.

இறைவனுல் படைக்கப்பட்ட அனைத்து ஜீவ கோடிகளிலும் பெண்ணினத்தைப் போன்ற உயர்ந்த படைப்பு வேறு இல்லை என்ருர் அண்ணல் காந்தியடிகள்.

இப்படிப் பல ஆன்ருேர்களால் புகழப்பட்டு வருகின்ற பெண்ணினம் 'நாட்டு' முன்னேற்றத்திற்குப் பற்பல நற்பணிகளைச் செய்து வந்துள்ளது. அவற்றுள் சமயத்திற்கு அவர்கள் ஆற்றிய பணி என்ன? என்பதைச் சற்று ஆராய்வோம்.

சமயம் என்பது என்ன?

உலகத்தில் நம் முன்னோர்களாலும் நம்மாலும் கடைப்பிடிக்கப்படுகின்ற சமயங்கள் மிகப்பல. உலகில் இத்துணை சமயங்கள் நிலவக் காரணம் என்ன? என்ருெரு வினு எழுமேயானுல், அவ்வினுவிற்குப் பற்பலர் பற்பல பொருந்தா விடையிறுப்பர்.

தெள்ளிதின் உணர்ந்தால்,

மக்கள் அனைவரும் 'மக்கட் சாதி' என்ற அடிப்படையால் ஒரு தன்மையினராயினும் தத்தம் அறிவு விளக்கத்தால் பலதிறப்பட்டு அறிவு சென்றவாறே பொருள் நிச்சயம் செய்தனர் ஆதலின் சமயம் பலவாயிற்று என்ற உண்மைக் கருத்துப் புலப்படும்.

இச்சமயங்கள் அனைத்தும் ஒரே காலத்தில் சிறப்புற்று விளங்கவில்லை. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு சமயம் சிறப்புற்று விளங்கியது.

பொதுவாக, எல்லாச் சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் அனைத்தும் மக்களுக்குத் தொண்டு செய்வதாகவே அமைந்துள்ளன. ''சமயத் தொண்டு'' — என்று எடுத்துக் கொண்டால் ஆடவருக்குப் பெண்டிர் ஒருபடி அதிகமாகவே முன்னேறியுள்ளனர். தமது அருந்தொண்டால், தமக்குப் பல இன்னல்கள் நேரிட்டும் அவற்றை ஒரு பொருட்டாக மதியாமல் தமது குறிக்கோளிலேயே பொறுமையுடன் இருந்து பெருமை பெற்றனர் பெண்டிர். ஆதலால் அவர்கள் மக்களால் இன்றும் போற்றப் படுகின்றனர், நாளையும் போற்றப்படுவர்.

இனி அனைத்துச் சமயங்களிலும் முதன்மை பெற்றதும் சிறப்புப் பெற்றதுமான சைவ சமயத்தில் பெண்டிரின் தொண்டு என்ன? என்பதைச் சற்று ஆராய்வோம் ;—

முதலாவது 'சைவம்' என்பதன் பொருள் யாது?

சிவத்தின் தொடர்புடையது சைவம். சிவம் என்பது யாது? சிவம் என்ற சொல்லுக்கு நன்மை, முத்தி, செம்மை என்ற பல பொருள் உண்டு. இவ்வாறு சிவத்தின் தொடர்புடைய சைவ சமயம் தழைத்தோங்க பெண்கள் தங்கள் உடல், பொருள், ஆவி அத்தனையும் அர்பணித்தனர்.

ஒரு கட்டடம் நெடுங்காலம் நிலைபெற்று இருப்பதற்கு அதன் அஸ்திவாரம் அடிப்படைக் காரணமாக இருப்பது போல, சைவ சமயம் என்ற கட்டடம் நிலைபெற்று இருப்பதற்கு அச்சமயத்தைச் செழிப்புறச் செய்த பெரிய புராணப் பெண்மணிகளே அடிப்படைக் காரணமாக விளங்கினர். அவர்களின் சிறப்பியல்புகளைத் தெள்ளிதின் உரைக்கத் தொடங்கினால், அது முற்றுப்பெறாத தொடர் புராணமாகிவிடும். எனினும் எனது சிற்றறிவுக்கு எட்டிய வரையில் எடுத்தியம்புகிறேன்.

எந்த ஒரு செயல் செய்து முடிப்பதென்றாலும், பெண்கள் மனது வைத்தால் அச்செயல் எளிதில் முடியும் என்பது யாவரும் அறிந்ததே. திலகவதியார் மனது வைத்தார். தருமசேனர் அப்பரானார். மங்கையர்க்கரசியார் மனது வைத்தார். பாண்டிய நாட்டைச் சைவ நாடாக்கினார்.

காரைக்கால் அம்மையார் பிறந்து மொழி பயின்ற நாளிலிருந்து சிவபெருமான் மாட்டுப் பேரன்பு கொண்டு வாழ்ந்து வந்தார். அவரது உடலுக்குரிய கொழுநரின் கருத்து வேறுபட்டதால், அவரை விடுத்து, உயிர்க் கொழுநரான சிவபெருமானைப் பேணும் தொண்டே சிறந்த தொண்டு என எண்ணித் தாம் விரும்பிய பேய் வடிவினைப் பெற்று, கையிலைக்குத் தலையால் நடந்து சென்று, சிவனை வாயாரப் பாடிச் சிவபெருமானால் "அம்மையே'— எனப் புகழப் பெற்றுத், திருவாலங் காட்டிற்கு வந்து பதிகம் பாடிச், சிறப்புற்றிருந்தார்.

தன் கணவனாகிய பாண்டியன் நெடுஞ்செழியனைச் சைவனாக்கிய பெருமை அவனது மங்கையர்க்கரசியாரையே சாரும். அதனாலன்றோ, ''தென்னவர் குலம் பழிதீர்த்த தெய்வப்பாவை'' — என இன்னும் புகழப்படுகின்றார்.

இளையான் குடிமாறனாரின் இல்லாள் திறம், குங்குலியக் கலயார் மனைவியின் மாண்பு, சிறுத் தொண்டர் மனைவியின் சீர்மை. மானக்கஞ்சாறரின் மகள் செய்த தியாகம், ஏயர்கோன் துணைவியாரின் சிறப்பு இவை அனைத்துமே சைவ சமய வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணங்களாக இருந்தன.

சைவம் என்பது குறுகிய நோக்கமுடையதன்று. அது இப்பூலகின்கண் பரந்து சென்று என்றும் நிலை பெற்றிருப்பது. நாம் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, அந்த வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அன்பு நெறியாகிய சைவ நெறியை நமது சொல்லாலும் செயலாலும் தழைத்தோங்கச் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இக்காலப் பெண்டிர் மறந்திடலாகாது.

★ — ✽ — ★



ஈரோடு கலைக் கல்லூரி

திரு. சு. இராமதாஸ் (முதல்வர்)

ஈரோடு கலைக் கல்லூரி ஆட்சிக் குழு

திரு. R. A. N. முத்துசாமி முதலியார் (தலைவர்)

திரு. P. P. சதாசிவம் (தாளாளர்)

திரு. A. முனுசாமி முதலியார்

திரு. K. முத்துசாமி முதலியார்



இலக்கணத்துக்கோர் இலக்கியம்

உ. கோ. ஆஷாதேவி, ஈரோடு.

இலக்கணமும் இலக்கியமும் 'மலரும் மணமும்' போல் ஒன்றையொன்று சார்ந்து, சார்ந்ததினுலேயே அழகு பெறும் தன்மையன என்பது கற்றறிந்தார் கண்ட உண்மையாகும்.

ஓங்காப் பெரும்புகழ் தொல்காப்பியர்,

'' அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற் குரிய என்ப''

என்றும்

'' செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண் பாலான''

என்றும் பெண்மைக்கு இலக்கணம் வகுத்திருக்கிறுர்,

இந்த ' இலக்கணத்துக்கு ' ' இலக்கியம் ' வகுத்தார் கவிச் சக்கரவர்த்தி கம்பர்; அந்த இலக்கியம் எது? சித்தமழகியாய், செயலழகியாய், சொல்லழகியாய் விளங்கிப் பாரதப் பெண்மைக்கே வழிகாட்டும் திருவிளக்கு—அந்த இலக்கியம் சீதை என்னும் பெரு விளக்கே.

தொல்காப்பியர் இலக்கணத்துக்குப் பொருந்த வாழ்ந்து காட்டிய 'இலக்கியமாம்' சீதையிடம் அப்பண்புகள் எங்ஙனம் அமைந்து அழகுற்றன என்பதை ஆராய்ந்து மகிழ்வதே இக்கட்டுரையின் பயனுகும்.

முதற்பண்பாய்ப் பெண்மைக்குரியதான அச்சம் என்ற பண்பு நம் தலைவியிடம் திகழ்வதைக் காணலாம். புதுமைப் பெண்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பாரதியைப் புரிந்து கொள்ளாத காரணத்தால், '' நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் '' என்பார்கள். ' தன்னைத்தான் காத்தற்கு இயலாது தடுக்கும் அச்சத் தையே பாரதி வேண்டாம் '' என்றுன். பெண்மைக்குரிய பண்பாகிய அச்சத்தைப் பற்றி பாரதி எதுவும் பேசவில்லை. தொல்காப்பியர் கூறிய இந்த அச்சம் சீதை. இராமனிடம் வைத்த அளவற்ற அன்பின் வெளிப்பாட்டில் புலனுகிறது.

இராமனது தோள் வலிமை சீதை அறியாததல்ல. யாராலும் வளைக்க முடியாத சிவதனுசை வளைத்து, தன்னை மணம் செய்த ஞான்றே இராமனின் வீரம் அவளறிந்ததே. அன்றியும் கானகத்தில் பர்ணசாலை அமைத்து எளிய வாழ்வு நடத்தி வந்த போது வந்த சூர்ப்பனகை இராம இலக்குவரால் அவமானம் அடைந்து இராவணனிடம் சென்று நடந்ததைக் கூறிக் கதறுகிறாள். அவன் உடனே பதினாலாயிரம் படையோடும் விரிசாரன், துபாணவன் என்றும் துணைவர்களோடும் பர்ணசாலைக்கு வருகிறான். பர்ணசாலையை விட்டு வெளியே வந்த இராமன் தனியனாய் நின்று அத்தனை பேரையும் மிக எளிதாக அழித்ததைக் கண்ணாரக் கண்டவள் தான். அத்தனையும் அறிந்தாலுங் கூட அப்படிஅ பட்ட இராமனுக்கு ஆபத்து வந்ததே என்று அவளுடைய அன்பு மனம் எண்ணி அஞ்சுகிறது. ஆரண்ய கண்டத்தில் இதனை நாம் காணலாம்.

மானைப் பிடிக்கச் சென்ற இராமன் மீண்டும் வராததையும் மாரீசன், சீதை இலக்குவன் பெயர் கூறிய ஒலி கேட்டும் அஞ்சிய சீதை, ' இராமனுக்கு ஆபத்து வராது' என்பதை மறந்து, இராமனுக்கும் இன்னல் விளைந்ததாய் எண்ணிக் கதறுகின்றாள்

'' பிடித்து நல்கு, இவ் உழை எனப் பேதையேன்
முடித்த னென்முதல் வாழ்வு' என மொய் அழல்
கொடிப்ப டிந்த தெனநெடும் கோள்அரா
இடிக்கு இடைந்தது எனப், புரண்டு ஏங்கினாள் ''

இவ்வாறு அவள் அழுவதுமல்லாமல் இலக்குவனையும் சாடுகிறாள். '' இவ்வுலகில் இராமனுக்கு ஈடு யாருமிலர். உன் பெண்மையால் இராமனுக்குத் தீங்கு விளைந்தது என்று கூறாதே '' என்று கூறிய இலக்குவன் உரையும் அவள் முன் வீணாயிற்று, அறிவை மறைக்கும் அன்பினால் விளையும் இந்த அச்சம் சீதையின் பண்பாய்ப் பொலிவதைப் பார்க்கிறோம்.

அடுத்ததாக நாணம், சீதையிடம் பொலிகின்ற இடமாகப் பல காணலாம். கொண்டவனிடம் மட்டுமே உயிர்த்தெழும் உணர்வு நாணம் என்பர். நமது சீதை கன்னிகா மாடத்தில் நின்ற போது தெருவிலே சென்ற இராமனைக் கண்டாள். உழுவலன்பால் இருவரும் அப்போதே ஒருவரையொருவர் அறிந்தனர்.

'' எண்அரு நலத்தினாள் இனையள் நின்றுழி,
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள் ''

என்றும்,

'' நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேல் இணை,
ஆக்கிய மதுகையான் தோளில் ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல் வீரன் செங்கணும்,
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே.''

என்றும் சிறு பாடலால் கம்பர் அதனை அழகு படக் கூறுகிறார். இவ்வாறாய் இருவரும் ஒன்றான பின்னர் சீதை இராமனையே எண்ணியிருந்தாள்.

'' விண்ணுளே எழுந்த மேகம்,
மார்பின் நூலின் மின்னெ (டு) இம்
மண்ணுளே இழிந்த தென்ன
வந்து போன மைந்தனுர்,
எண் உளே இருந்த போதும்
யாவர் என்று தேர்கிலேன் ;
கண் உளே இருந்த போதும்
என்கொல் காண்கி லாதவே ! ''

என சீதை, இராமனை நினைத்துப் புலம்புவதையும் பார்க்கலாம். பின்னர் தோழியர் வந்து ' தாமரைக் கண்ணனுய், சுந்தர மணித் தோளுடையானுய் ஒருவன் சிவதனுசை வளைத்தான் ' எனச் சொல்ல சீதை கேட்டாள். அவன் தன் உள்ளம் புகுந்த கள்வனுய் இருப்பான் என்பதில் சீதைக்கு நிறைந்த நம்பிக்கையுண்டு. ஆனுலும் தன்னுல் காணப் பட்டவனும், வில்லை ஒடித்தவனும் ஒருவன்தானு என்பதை நேர் நின்று அறியும் ஆசையை அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. அளவற்ற ஆசைப் பெருக்கிலும். நாண் அறுபட்டுப் போவது பெண்மைக்கு இழுக்கல்லவா ? இழுக்கான பெண்மை சீதையிடம் இருக்குமா ? அதனுல் தான் அவள், ' நாண் ' துறவா நிலையில் திருமண நிச்சய நாளன்று இராமனைப் பர்ர்க்கிருள். ஈண்டுக் கம்பர் மிக அழகாக நாணத்தைச் சீதைக்கு அணியாக்கி உள்ளார்.

'' எய்வளைவில் ஏற்றதும் இறுத்ததும் உறைத்தும்
மெய்வினை விடத்துமுதல் ஐயம் விடல் உற்ருள் ;
ஐயனை அகத்து வடிவேஅல, புறத்தும்
கைவளை திருத்துபு கடைக்கணின் உணர்ந்தாள்.

அகத்தால் இராமன் என்பதுணர்ந்தவள் புறத்தாலும் அவன் தானு என்பதனைத் தெளி வாக்கிக் கொள்பவள் போல் மெதுவாகக் கடைக் கண்ணுல் இராமனைப் பார்க்கிருளாம். இந்த இடத்தில் நாண் விட வேண்டிய சூழலும், அப்போதும் நாண் துறக்காப் பெண் மையும் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

அடுத்ததாக, தொல்காப்பியர் பெண்மைப் பண்பாக மடனைப் பற்றிக் கூறி யுள்ளார். மடமை என்பது அறியாமை என்ற பொருளில் வழங்கி வருவதைக் காண்கிறேம். ஆனுல் அறியாமை என்பது பொருந்தாது, எத்தனை தான் கற்ருலும் அறியாமை தோன்றக் கூறும் பெண்மையின் பண்புகளில் ஒன்ருகிய அழகிய பேதைமை சீதையிடம் இருப்பதை நாம் காணலாம்.

இராம இலக்குவணர், சீதையோடு நாடு விட்டு காடு செல்கின்றனர். நகர் எல்லை வரை வந்த சுமித்திரன், '' தேவி, தாங்கள் ஊருக்கு ஏதேனும் செய்தி சொல்லுகிறீர் களா ?'' என்ருன். தேவி சிந்தித்தாள். அத்தையர்க்கும் தசரதனுக்கும் வணக்கம் சொல்லச் சொன்னுள். பிறகு தன் பேதமை தோன்ற '' என் தங்கைகளிடம் என் கிளி பூவை முதலியவற்றை நான் வரையும் இருக்குமாறு கூறுங்கள் '' என்கிருள். கிளி, பூவை முதலியன சில ஆண்டுகளே வாழும் தன்மையன, என்பதறிந்தும் அறியாமை தோன்றக் கூறும் நிலையை ஈண்டுக் காணலாம்.

'' அன்னவள் கூறுவாள் ; '' அரசர்க்கு, அத்தையர்க்கு,
என் உடை வணக்கம்முன் இயம்பி, யான்உடைப்

பொன்நிறப் பூவையும் கிளியும் போற்றுமின்
என்னமற்று எங்கையர்க்கு இயம்புவாய்!'' என்ருள்.

இவ்வாறு சீதை சொல்லக்காரணமாய் அமைந்ததும் அவளிடம் இருக்கும் அன்புணர்வேயாகும். இவ்வாறே சீதையின் மடத்தை இன்னும் பெரிது படுத்திக் காட்டும் இடம் ஒன்றுண்டு, இரவணஞல் அசோக வனத்தில் வைக்கப்பட்ட சீதைக்கு, திரிசடை உற்ற தோழியாகிருள். வேதனை தாங்காத சீதை உறங்கும் திரிசடையை எழுப்புகிருள் எழுந்த திரிசடை தான் ஒரு கனவு கண்டதாகக் கூறுகிருள். கண்ட கனவையும் விண்டுரைக்கிருள்.

'' ஆயிரம் திருவிளக்கு அமைய மாட்டிய
சேய்ஒளி விளக்கம் ஒன்று ஏந்திச், செய்யவள்
நாயகன் தனிமனை நின்று, நண்ணுதல்
மேயினள் வீடணன் கோயில் மென்சொலாய்!

திருமகளானவள் விளக்கேற்றியவாறு இராவணன் அரண்மனையைவிட்டு நீங்கி, வீடணன் அரண்மனையை அடைவதாய்க் கனவு கண்டாளாம். இந்தக் கனவு தொடராத வண்ணம் சீதை திரிசடையை எழுப்பி விட்டாளாம். இவ்வாறு திரிசடை கூறவும் சீதைக்கு ஆர்வம் காரணமாய் மடமை மிகுதியாகிறது. உடனே, '' அன்னையே, இன்னும் தூங்கி, கனவின் முடிவைக் கண்டு சொல்,'' என்கிருள். விட்ட கனவு தொடருமா என்பதெல்லாம் குறித்து அவள் சிந்திக்கவில்லை. கலைந்த கனவை மீண்டும் காணச் சொல்லும் அளவுக்குப் பேதையாகிருள்.

'' பொன்மனைப் புக்கவப் பொருவில் போதினில்
என்னைநீ உணர்தினை முடிந்த தில்லென
அன்னையே அதன் குறைகாண் என்று ஆயிழை
இன்னமுந் துயில் கென இருகை கூப்பினுள்!''

இவ்வாருகச் சீதை அன்பினுலும், ஆர்வத்தாலும் அறியாமையின் வயப்பட்டு நிற்கும் காட்சிகளில் அவள் '' அறியாமையே அழகு '' பெறுவதை நாம் உணரலாம்.

அடுத்த பண்பாய் செறிவைக் காண்போம். செறிவு என்பதற்கு அடக்கம் என்பது பொருள்.

'' ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.'!

என்று வள்ளுவர் அடக்கத்தை இருபாலர்க்கும் உடையதாக்கினுலும் பொதுவாக அடக்கம் என்பது பெண் குலத்துக்கு உரியதாய்ச் சொல்லப் படுவதும், கொள்ளப் படுவதும் பார்க்கலாம். ஏனென்ருல் பெண்பாலர்க்கே மனம் மொழி மெய் என மூன்றும் அடக்கி ஆளும் சக்தி உண்டு. இந்த அழகிய அடக்கம் கல்வியால் அடங்கிய சீதையிடம் பெரிதும் இருந்ததில் வியப்பில்லை அல்லவா?

திருமணப் பந்தலுக்கு அழைத்து வரப் படுகிருள் சீதை. வந்தவள் முதலில் யாரும் சாடை காட்டாமலேயே வாயினுல் சொல்லாமலேயே தானுகவே அடக்கமாக முனிவர் முதலியவரை முன்னுல் வணங்கி, பின்னர்த் தன் தந்தையர்க்கருகே இருந்த தொரு கீழான ஆசனத்தில் அமர்கின்ருள். இந்த அடக்கம் மன்னன் மகளுக்கும், இராமனின் மனைவிக்கும் இருந்தது அழகுக்கு அழகு செய்தற் போலாகிறது.

'' மாதவரை முற்கொள வணங்கி, நெடு மன்னன்
பாதமல ரைத் தொழுது, கண்கள் பனி சோரும்
தாதைஅருகு இட்டத்தவி சில், தனி இருந்தாள் ;
போதினை வெறுத்தரசர் பொன்மனை புகுந்தாள் ''

இவ்வாறு சீதையிடம் கல்வியாலும், இயல்பாலும் பிறந்த செறிவு சிறந்து விளங்குகிறது.

அடுத்து நிறை எனும் பண்பை நோக்குவோம். ''நிறையெனில் மறை பிறர் அறியாது நெஞ்சினை நிறுத்தல் '' என்பர். சீதைக்கு கைகேயிடம், ''மாமியார்', என்ற காரணத்தாலோ அல்லது அவள் செய்த கொடுமைகளாலோ அவள் மீது வெறுப்புண்டு. ஆனால் ஒரு போதும் தன் வெறுப்பை சீதை புறத்தே காட்டியதே இல்லை, கணவன் மனம் நோகக் கூடாது என்பதற்காகக் தன் வெறுப்பையும் உள்ளத்துள் வைத்திருப்பாள். அது மட்டும் அல்லாமல் இராமன் மனம் நோகாதிருக்க அத்தையர்க்கு முன் என் வணக்கம் இயம் பென்றுகூறவும் செய்வாள் மீண்டும் அனுமனிடமும்,

'' சிறக்கும் மாமியர் மூவர்க்கும், ' சீதை ஆண்(டு)
இறக்கின் றாள், தொழு தாள்', எனும் இன்னசொல்,
அறத்தின் நாயகன் பால் அருள் இன்மையால்,
மறக்கும் ஆயினும், நீமற வேல் ஐயா !.

என்று சிறந்த மாமியார்களுக்கு வணக்கம் சொல்லி அனுப்புகிறாள், மூன்று மாமிகளில் கைகேயியும் ஒருத்தி அல்லவா ?

தன் உட்கருத்தை பிறரரியாது மறைத்துப் பிறருக்காகப் பேசும் இந்நிறை பிறிதோ ரிடத்துச் சீதையிடம் நாம் இருப்பதைக் காண்கிறோம். கன்னிகா மாடத்திலே நின்ற வாறு இராமனைக் கண்டு இதயம் இழந்தவள் அதைத் தோழியரிடம் கூறாது மறைக் கிறாள். பின்னர் வில் வளைக்கப் பட்டதை அறிந்ததும் அவ்வில் வளைத்தவன் முன் தன் உள்ளம் கொண்டவனன்றி வேறொருவனாயின் தான் இறந்து விடுவதாக மனதில் எண்ணுகிறாள். இதையும் பிறரிடமிருந்து மறைக்கும் பண்பைக் காணலாம்.

'' இல்லையே நுசுப்பு , என்பார் 'உண்டுண்டு' என்னவும்,
மெல் இயல் முலைகளும் விம்ம விம்முவாள் ;
'' சொல்லிய குறியின் அத்தோன்றலே அவன் ;
'' அல்லனேல் இறப்பன் ''; என்று அகத்துள் உன்னினாள்.

அடுத்ததாகச் செம்மைப் பண்பை நோக்கலாம். செம்மை எனில் கற்பாம். கற்பென்பது பெண்மைக்கு உரிய திண்மை, பேசா மடந்தையாக இருந்த கண்ணகியைப் பேசவைத்து மதுரையை எரியச் செய்த ஆற்றல் தந்த பண்பே கற்பெனப்படும். இக் கற்புக்கு நமது நாட்டில் இன்னொரு சான்றும் உண்டு, வள்ளுவரின் மனைவி வாசுகி கிணற்றிலே நீர் இறைத்துக்கொண்டிருப்பாராம் அப்போது வள்ளுவர் அழைக்கப் பாதியிலேயே கயிற்றை விட்டுவிடுவாராம். கயிறு அப்படியே நிற்குமாம். இவ்வாறாகப் பல கதைகள் பெண்களின் கற்பின் திண்மையை எடுத்துக் காட்ட வல்லனவாய் உள்ளன.

இதையே வள்ளுவர்

'' தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை '' என்றார்.

இவ்வாறு இயற்கையையே பணி கொள்ளச் செய்யும் கற்பு சீதையிடம் பெருக இருந்

தகைக் காணலாம். கொண்டவனைத் தெய்வமாகத் தொழுதவள் சீதை. அவள் கற்பு பெருங்கற்பு ஆகும். அனுமன் இலங்கையை எரியூட்டிய ஞான்று சீதை தீயைப் பார்த்துக் கட்டளையிடுகிறாள்,

'' தாயே அனைய கருணையான் துணையை, ஏதும் தகைவு இல்லா,
நாயே அனைய வல் அரக்கர் நலியக் கண்டால் நல்காயோ,
நீயே உலகுக்கு ஒரு சான்று ; நிற்கே தெரியும், கற்பு அதனில்
தூயேன் என்னின் தொழுகின்றேன், எரியே அவனைச் சுடல் !'' என்றாள்.

அன்னையின் ஆணையை இவ்வாறு கேட்ட தீக் கடவுள் அனுமனைச் சுடாதே போயிற்று. அவ்வாறே தன் கற்பின் பெரும் வன்மையினை உணர்ந்திருந்த சீதை அனுமனிடம் கூறுகின்றாள்

'' அல்லல் மாக்கள் இலங்கை அது ஆகுமோ,
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன். அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்.''

என்று கூறுகின்றாள். இக் கூற்றால் கற்புடைமையால் உலகத்தையே தன் சொல்லால் சுடும் வல்லமை கொண்டவள் என்பதனை அறிகிறோம்.

இராமன் சீதையைத் தீக்குளிக்கச் சொன்னபோது அவ்வாறே எரியில் மூழ்குகிறாள். அன்னை சீதையைத் தாங்கிய தீக் கடவுள் இராமனிடம் வந்து, சீதையின் கற்பாகிய நெருப்புச் சுட்டதனால் தன்மேல் கொப்புளம் கண்டதாகக் கூறுகிறாள், இவ்வாறாக அன்னையின் அருங்கற்பும். பெருங் கற்பும் நம்மைத் தெய்வக் கற்பாய் எண்ணித் தொழச் செய்கிறது.

அடுத்ததாகச் செப்பு என்ற பண்பைச் சீதையிடம் காணலாம். செப்பு எனில் பேச்சாற்றல் என்பது பொருள். மொழியே]ஒரு கலையென்று தான் கூறவேண்டும், அம் மொழியைப் பயன்படுத்தும் விதமோ அதைவிடப் பெரிய கலையாகும். நீள நெடுகப் பேசுவதோ, பிறர் பேசாமல் வாயடைத்துப் போகுமாறு செய்வதோ மட்டும் பேச்சாற்றல் ஆகாது. '' கடவுளைத் தொழுது வருக '' என்று கூறு தோழியிடம், '' பீடு அன்று '' என்று கண்ணகி கூறியது ஒரு வார்த்தையானாலும் அதனைப் பேச்சாற்றல் என்றே சொல்லவேண்டும். நல்லோர் உள்ளம் புண்படாதவாறு பேசுவதே பேச்சாற்றல் எனலாம். இப் பேச்சாற்றல் சீதையிடம் நிரம்ப உண்டு. அசோக வனத்துக்குச் சென்ற அனுமன் சீதையிடம், தன் தோள்மேல் ஏறிக்கொண்டால் அவளை இராமனிடம் சென்று சேர்ப்பிப்பதாககக் கூறுகின்றான் அவ்வாறு செய்யும் அனுமன் செயலைச் சீதை விரும்பவில்லை. ஆனாலும் அவள் அதை நேர்முகமா மறுத்திலள். தக்க காரணங்களுடன் தனது மறுப்பை நயம்பட எடுத்துரைக்கின்றாள், அவ்வாறு கூறும்போது அனுமன் மனம் நோகாதவாறு அவள் கூறும் நயம் நோக்கத்தக்கது.

'' அரிய(து) அன்றுநின் ஆற்றலுக்(கு) ; ஏற்றதே
தெரிய எண்ணினை, செய்வதும் செய்தியே ;
உரிய(து) அன்(று) என ஓர்கின்ற(து) உண்(டு) ; அ(து) என்
பெரிய பேதைமைச் சில்மதிப் பெண்மையால்
அன்றி யும்பிறிது உள்ளதுஒன்று ; ஆரியன்
வென்றி வெம்சிலை மாசுனும் ; வேறு இனி
நன்றி என்பது என் ? வஞ்சித்த நாய்களின்
தின்ற வஞ்சனை நீயும் நினைத்தியோ ?''

ஈண்டு, "இராவணன்தான் அரக்கன்; தூக்கிக்கொண்டு வந்தான். நீயும் அவ்வாறு செய்யலாமா" என்கிறாள். 'நீயும்' உம் என்னும் இடைச் சொல்லால் அனுமனை ஒரு படி உயர்த்திச் சொல்கின்றாள். இவ்வாறு பேசும் போது கேட்பவர் மனம் நிறைவு பெறுகிறது. நாமும், மென்மொழி சீதையின் மொழிவன்மைச் சிறப்பை கம்பனில் காண்கிறோம்.

அடுத்த பண்பாய் அறிவைக் காணலாம். யாரிடம் எப்படிப் பேசவேண்டும் என்பதை அறியும் அறிவு அறிவாகும். தன்னிடம் 'பொருந்தாதன' பேச வந்தவர் களின் வாயடைக்கும் படி பேசுவதும் அறிவின் பாற்படும். பட்டறிவால் பெறும் அறிவு, கல்வியால் பெறும் அறிவு என அறிவு பல வகைப்படும்.

இந்த அறிவு சீதையிடம் பொருந்தியிருத்தலைக் காணலாம், பொருந்தாதைப் பேசுவாரிடம் அச்சம், நாணம் கொண்டு வாய்மூடி நிற்கும் அறியாமை அவளிடம் இல்லை. இப்போது அவள் அறிவு விழித்துக் கொண்டு, தக்க பதில் தருகிறது. துறவி வேடத்தில் வந்த இராவணன் தன்னை மறைத்துக்கொண்டு சீதை கேட்குமாறு, "இராமன் இராவணன் தோளுக்கே ஆற்றாது ஓடுவான்" என்று கூறுகின்றாள், இப்போது சீதையிடம் அச்சம் இல்லை. அஞ்சாமையுடன் மிகத் தெளிவாகத் "தோள் களின் எண்ணிக்கை வலிமை தராது. இருபது தோள்களைக் கொண்ட இராவணனை, ஆயிரம் தோள்களை உடைய கர்த்த வீரியனை, இரண்டு தோள்களையுடைய பரசுராமன் வென்றான்" என்பதனைத் தக்க இடத்தில் கூறி இராவணன் மறுமொழி பேசாது தடுமாறும் படி வைக்கிறாள்,

"மேருவைப் பறிக்க வேண்டின்
விண்ணினை இடிக்க வேண்டின்
நீரினைக் கலக்க வேண்டின்
நெருப்பினைக் கக்க வேண்டின்
பாரினை எடுக்க வேண்டிற் பலவினை
சில செயல் ஏழாய்! யாரெனக் கருதிச்
சொன்னாய்? இராவணற்கு அரிதன்று"

என்று இவ்வாறு இராவணச் சந்நியாசி தன் புகழைத் தானே சொல்ல, எளியவளாகிய சீதை மிகத் தெளிவாக,

"அரண் தரு திரள்தோள் சால உளஎனில் ஆற்றல் உண்டோ?
கரண்ட நீர் இலங்கை வேந்தைச் சிறை வைத்த கழற்கால் வீரன்
திரண்ட தோள் வனத்தை எல்லாம், சிறியதோர் பருவம் தன்னில்,
இரண்டு தோள் ஒருவன் அன்றோ மழுவினால் எறிந்தான்?" என்றாள்,

இவ்வாறு தக்க விடை தந்தது போலவே பிறிதோரிடத்திலும் தன்னாற்றலைச் சொன்ன இராவணன் தலை குனியுமாறு பதில் சொல்கின்றாள்.

"சிவபெருமான் கால் கீழ் பட்டு அலறியவன் இராவணன், அப்படிப் பட்ட சிவபெருமானுடைய வில்லையே முறித்தான் இராமன். அவ்வாறு இராமன் ஒடித்த வில்லின் ஓசை இராவணன் செவிகளில் கேட்காமற் போயிற்றோ" என்று நயமாகக் கேட்கின்றாள்.

"குன்று நீ எடுத்த நாள்தன் சேவடிக் கொழுந் தாலுன்னை
வென்றவன் புரங்கள் வேவத் தனிச் சரம் துரந்த மேரு

என்றுணே கண வனற்றற்கு உரன் இலாது
இற்று வீழ்ந்த அன்று எழுந்து உயர்ந்த ஓசை
கேட்டிலே போலுமையா '' என்று கூறுகின்ருள்.

நுட்பமான அறிவுடை மையால் தான் இவ்வாறு தக்க இடத்துக்குத் தக்கன கூறுதல் முடியும். வாழைப் பழத்தில் ஊசி ஏற்றினைற் போலத்தான் சீதையும் கோபம், சீற்றம் முதலியன இல்லாது உண்மையை அழகாகக் கூறி விடுகின்ருள்.

அடுத்ததாக அருமை என்னும் பண்பை ஆராய்வோம். அருமை என்ருல் உட் கருத்தைக் கூறுதலின்மை. உலகியலில் பெண்கள் இரகசியங்களே மனதில் வைக்காது பறையைப் போல எல்லார்க்கும் சொல்லி விடுவர் என்றே எங்கும் ஒரு கருத்து நிலவி வருகிறது. ஆனல் இலக்கிய இலக்கண முறைப்படி அது பொருந்துவதல்ல. பெண்மனம் ஆழ்கடல் போன்றது. அதில் இருப்பவைகளே யாராலும் அறிய முடியாது என்றே அவை கூறும். அதனுல்தான் பெண்ணின் பண்பில் ஒன்ருக அருமையைத் தொல்காப்பியர் கூறுகிருர். சீதைக்குக் கைகேயி மீது சினம் உண்டு. அதை அவள் மறைத்தே வைத் தனள். இறுதியில் நாகாஸ்திரத்தால் இராம இலக்குவர் முதலானேர் இறந்தது போலக் கிடப்பக்கண்ட சீதை இது நாளும் மறைபொருளாய மனதில் இருப்பதைக் கூறி அழுகிருள்,

'' ஐயோ ! கைகேயின் எண்ணம் ஈடேறிவிட்டதே. இதுதான் அக்கொடியவளின் கருத்தா?'' என்று அவள் வாய் விட்டழும் போது ஒரே வழி அருமை புலப்படும்,

'' உய்யாள் உயர்கோ சலேதன் உயிரோடு ;
அய்யா ! இளேயோர் அவர்வாழ் கிலரால் !
மெய்யே வினேயெண் ணிவிடுத் தகொடும்
கைகே சிகருத்து இறுவோ, களிறே !

அடுத்ததாகப் பெண்மை என்னும் பண்பை நோக்குவோம். பெண்மைக்குத் தொல்காப்பியர் கூறும் இலக்கணம் ''கட்லனயதோர் அமைதித் தன்மை'' என்ப தாகும். சீதையே பெண்மை வடிவடுத்து விளங்கும் போது பெண்மைப் பண்பைப் பற்றிக் கூற ஒன்றும் இல்லே தான். ஆயினும் சீதை பெருகச் சிரிக்காது அளவாகச் சிரிக்கும் பல்லிடத்திலும் பெண்மையைக் காணலாம். எடுத்துக் காட்டாகக் கோதாவரிக் கரையில் யானேயின் நடை இராமனின் நடைக்கு ஒப்பின்மையைக் கண்டு அவள் அளவே சிரிக்கும் போது அவளிடம் பெண்மை நிறைந்திருப்பதை நாம் காணலாம்.

'' ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன், உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான் ;
மாதவள் தானும், ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்

இவ்வாருய், தொல்காப்பியர் வரையறுத்துத் தந்த இலக்கணத்துக்குப் பொருந்த, கம்பர், சீதையெனும் பெண்மையைப் படைத்து இலக்கியம் வகுத்த வளம் சிந்தைக்கு நயம் பயந்து நிற்றலேக் காணலாம்.

மலரும் மணமுமாய் இலக்கணமும் இலக்கியமும் ஒன்றையொன்று சார்ந்து, அந்தச் சார்தலினலேயே அழகு பெறுவதை உணர்ந்து இலக்கணம் வகுத்தோரையும் இலக்கியம் படைத்தோரையும் நினேவிலிருத்தி நெஞ்சம் மகிழ் பயன் அடைவோம்.

மலர் வெளியீட்டுக் குழு

திரு. ந. சண்முகானந்தன்

திரு. நா. ஆறுமுகம், M. A.,



திரு. தி. ஜெகதீசன்

“ கலங்கரை விளக்கம் ”



முதல் செங்குந்தர் மாநாட்டின் தொண்டர்ப்படைத்
தலைவரும், ஈரோடு கலைமகள் கல்வி நிலைய
ஸ்தாபகருமான
இருமொழிச் சொற்கொண்டல்
உயர்திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார், B. A., L. T.,

தலைமகன் தந்த கலைமகள்.

கலைமகள் தந்த தலைமகன்

T. ஜெகதீசன் (மலர்க் குழு)

குணம் என்னும் குன்றேறி நின்றதென நினைக்கும் தோற்றம்; ''நற்றவ வானின் நனிசிறந்தது பிறந்த பொன்னாட்டின் பொது நலம் காத்தல்'' — இதுவே எடுத்த பிறப்பின் இனியதோர் லட்சியம். என என்றும் நினைக்கும் பரந்த உள்ளம்; தமிழ்— ஆங்கிலம் இரு மொழிகளும் தான் இருப்பதற்கு இடம் அறியாமல் இறுதியிலே தேர்ந்து வந்து அமர்ந்துவிட்ட மலர்ந்த திருவாய்;—அன்றைய இளந் தளிரே நாளைய பூத்துக் குலுங்கும் கனிமரமென—இளைஞர் வாழ்வுக்கு இதுதான் வழியென— வகுத்துக்காட்டி அதன் வழிநடந்த தாமரைத் திருப்பாதங்கள்; இத்தனையும் அமைந்த மொத்த உருவம்தான்—இன்னிசை வீணையை ஏந்திய கலைமகள் தன் பிரதிநிதியாய் ஈரோட்டுக்குத் தந்த தலைமகன். அவர்தான் ஈரோட்டின் கலைமகள் உறையும் கல்வி நிலையம் தந்த தலைமகன், அவர்தான் அன்பால், அதை வெளிக்காட்டும் கனிவால்; அறிவால், அதைப் பயன்படுத்தும் செறிவால்; ஆண்மீகத்தால், அதற்கே உரித்தான கருணையால்; அரசியலால் அதைச் செம்மை செய்யும் நேர்மையால்; தொண் டால், தியாகத்தால், அனைவரையும் ஈர்த்து ஈரோட்டின் மக்க ளெல்லாம், ஏன்? நல்லோர் நிறைந்த இடமெல்லாம் 'ஐயா' என அன்புடன் அழைக்கப்படும் மீனாட்சி சுந்தரனார் ஆவார்.

ஒழுக்கமே வாழ்வின் உயர்ந்ததோர் குறிக்கோள் எனக் குழந்தைகட்குக் கூறும் தருணம் அவர் குழந்தைகளுள் குழந்தை யாய்த் திகழ்வார்; தன் அறிவையும் திறமையையும் நாட்டுப் பணிக்கு அர்ப்பணித்த தொண்டருள் தொண்டர்; உழைப்பின் உருவம்; அன்பு மொழியால் அன்புருகப் பேசும் ஆன்மீகத் தென்றல்; ஆழ்ந்து கற்ற அறிவியலை அனைவர்க்கும் விளங்க வைக்கும் அறிவியலறிஞர்; இத்தனைக்கும் மேலாக அவர் ஓர் பல்கலைக் கழகம்,

செயற்கரிய செய்து வாழ்ந்த இவர்தம் வாழ்வின் சிறப்புக்கள் சொலற்கரிது. 1898ம் ஆண்டு 25ம் நாள் சிரங்க முதலியாருக்கும், செல்லம்மாளுக்கும், மாதங்களில் சிறந்த மார்கழியில் பிறந்த நன்முத்து. இளமை வாழ்விலே அறிவு வளம் நிறைந்த வாழ்வாக்கிய தலைப்புதல்வன். திண்ணைப் பள்ளியில் பயின்றாலும் எண்ணற்ற கலையின் இருப்பிடமாகத் திகழ்ந்தவர். உயர்நிலைப்பள்ளியை லண்டன் மிஷன் பள்ளியில் முடித்துக் கூடல் மாநகரில் அமெரிக்கன் கல்லூரியில் 1921ல் இளங்கலைப் பட்டம் பெற்றார். 1927ல் எல். டி. பட்டம் பெற்றபின் மூன்று ஆண்டுகள் சிவகங்கை அரசர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராய்ப் பணி புரிந்தார். பின் ஈரோட்டிலுள்ள மாசன உயர்நிலைப் பள்ளியிலும் தலைமையாசிரியராகப் பணியாற்றினார்.

"ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று பள்ளுப்பாடிய பாரதியுடனும் "வெள்ளையனே வெளியேறு" என வீர முழக்கமிட்ட தேசத் தந்தையுடனும் சுதந்திரப் போரில் பங்குபெற்று விடுதலைப் போர் வேள்வியில் வேட்கையுடன் ஈடுபட்டவர் இவர்; கதர் இயக்கம், கள்ளுக் கடை மறியல் அந்நிய நாட்டுத் துணி எரிப்பு ஆகிய இயக்கங்களில் பெரும் பங்குகொண்டு அரும்பணியாற்றிய தீரர் இவர்.

சுதந்திர இந்தியாவில் தன் பணியினை மேலும் முழுமையாகச் செய்ய ஈரோடு நகரம் ஐயா அவர்களுக்கு ஓர் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்தது. ஆம். அவர் 1952 முதல் -55 வரை மூன்று ஆண்டுகள் ஈரோடு நகர மன்றத் தலைவராக இருந்து நற்பணி புரிந்திட்டார். "மக்கட் பணியே மகேசன் பணி" என்பதைக் கருத்திலே கொண்டவர். பொதுப் பணியில் இவர் கொண்டிருந்த ஆர்வம் அளவிடற்கரியது. ஆன்மீகத் துறையில் இவர் ஆற்றிய அரும் பணிகளும் சொல்லுதற்கரிது. விஞ்ஞானமும் மெய்ஞானமும் எப்படி ஒன்றையொன்று பின்னிப் பிணைந்திருக்கின்றன என்பதற்கு இவர் கொடுக்கும் விளக்கச் சொற்பொழிவுகள் இவர்க்கே உரித்தானவை.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானின் நனி சிறந்ததென எண்ணிப் பணிகள் பல புரிந்திட்ட நம் ஐயா அவர்கள் தான் பிறந்த "செங்குந்தர் குலத்தின்" மேன்மைக்காகப் பெரிதும் அயராது உழைத்தார் என்பது மிகையாகாது. 1929ஆம் ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற தென்னிந்திய செங்குந்தர் மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராயிருந்து

ஆற்றிய தொண்டினைச் சமூகம் தனது பொன்னேடுகளில் பதிய வைத்திருக்கின்றது. 1931-ஆம் ஆண்டு காஞ்சியில் நடைபெற்ற செங்குந்தர் 2-ஆவது மாநாட்டில் இளைஞர் மாநாட்டுத் தலைவராகவும், 1939-ல் திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் சமூக மாநாட்டுத் தலைவராகவும், அதே ஆண்டு செங்குந்தர் சமூகம் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலிலிருந்து விலக்கப்பட்ட போது அதனை எதிர்த்து ஓர் மாநாட்டைச் சென்னையில் கூட்டித் தானே அதற்குத் தலைமையும் ஏற்று அதில் வெற்றி தேடித் தந்ததும், 1940 முதல் 1947 வரை 7 ஆண்டுகள் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவராக இருந்தும், இவர் ஆற்றிட்ட பணிகள் - புரிந்திட்ட சாதனைகள் பலப்பல.

நற்பணிகள் பலவும் புரிந்திட்ட இவரைக் கல்வி உலகமே பெரிதும் கவர்ந்தது. 1945ல் ஈரோட்டில் கலைமகள் கல்வி நிலையத்தைத் தோற்றுவித்து அதன் வளர்ச்சிக்குத் தன் உடல். பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த அரும்பெரும் சீலர். ஈரோடு செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி. ஈரோடு அருள் நெறித் திருப்பணி மன்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, போன்ற கல்வி நிலையங்கள் தோன்றக் கண்ணயராது உழைத்தவர் இவர். இவர்தம் அயரா உழைப்பினாலேயே "தென்னகத்துச் சாந்தி நிகேதன்" எனும் சிறப்பினைத் தாங்கி நிற்கிறது கலைமகள் கல்வி நிலையம். அதனாலேயே அதன் தலைமை ஆசிரியை அவர்கள் ஐயாவைக் "கலங்கரை விளக்கு" (Beacon Light) என்று குறிப்பிடுவார்கள்.

இன்று அவர் நம்மிடையே இல்லை. ஆனால் அவரை என்றும் நினைவில் நிற்கச் செய்யும் "அறிவாலயம்" இருக்கின்றது. அதன் வளர்ச்சிக்கு அரும்பணி புரிவதே நாம் அவர்க்குச் செய்யும் நன்றிக்கடனாகும். அறிவாலயம் அமைத்த அவர்க்குக் கலைமகள் குடும்பத்தினர் "நினைவாலயம்" எடுத்துள்ளனர். அவர்கட்குச் செங்குந்தர் சமூகம் என்றென்றும் கடமைப் பட்டுள்ளது.

அன்பின் உருவாய்ப் பண்பின் பயனாய்
அறிவின் செறிவாய் என்பெலாமுருக்கி
எங்கள் இதயங்கவர்ந்து உயர்ந்த தன்னிகரற்ற
ஐயனே!
நின் பாத மலர்கட்கு எம் அஞ்சலி

என அஞ்சலி செலுத்தும் கலைமகள் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து நம் அஞ்சலியை அவர்தம் திருப்பாதங்களுக்கு உரித்தாக்குவோம்.

கலைமகள் தந்த தலைமகனின் புகழினை நோக்க நோக்கப் பனிதூங்கும் இமயத்தின் அளவும் மிக மிகச் சிறிது.

ஒரே மந்திரம்

வித்வான். ந சண்முகானந்தன்,
(மலர்க் குழு), ஈரோடு.

தழைத்து வரும் பாரதத்தின் அழைக்கின்ற குரலுக்கு உழைக்கின்ற கரங்கள் கொண்ட சமுதாயம் ஒன்று பட்டு உருவாக வேண்டும். பனிதூங்கும் இமயம் முதல் அலை ஓங்கும் குமரிவரை பாரத மண்ணின் எந்த ஒரு பகுதியில் பிறந்தவனாயினும், ''நீ யார்?'' என்ற கேள்விக்கு 'நான் இந்தியன்' என்ற சொற்கள் அவன் வாயிலிருந்து வெளிவரும் அளவிற்கு ஒன்றுபட்ட எண்ணங்கள் உருவாவதைக் காண விரும்புகிறேன். ஒன்றுபட்டு நிற்கும் பாரத நாட்டைக் கூறு போட்டுப் பார்க்க நினைக்கும் வேறுபட்ட எண்ணங் கொண்ட ''தன்னாட்சி இயக்கங்கள்'' வேரும் வேரடி மண்ணும் அற்று மண்ணோடு மண்ணாகிப் போகப் ''பாரத பூமி பழம்பெரும் பூமி; நீரதன் புதல்வர்; இந்நினை வகற்றாதீர்'' என்ற எண்ணமதைத் திண்ணமுறக் கொண்டிலங்கும் சமுதாயம் உருவாவதைக் காண விரும்புகிறேன்.

'சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்' என்பது முதுமொழி, 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பது முதுமொழியை விளக்கும் சமயச் சான்றோரின் அருள்மொழி. 'வறியார்க் கொன்றீவதே ஈகை. என்று வள்ளுவன் சொன்ன அந்த 'ஒன்று', 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' எனவும், 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனவும் தமிழர்தம் வீரத்தைப் பாடும் புறநானூற்றுப் புலவோர் கூறிய அந்த 'உண்டி', 'வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்' என மனம் நொந்து பாரதி பாடினானே அந்தச் 'சோறு' — ஆம் அந்தச் சோறுதான் பாரதம் வாழ் அறுபது கோடி மக்களுக்கும் குறைவின்றிக் கிடைக்க — அதனை அவர்கள் மன நிறைவோடு உண்டு மகிழும் நிலையைக் காண விரும்புகிறேன்.

> '' இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்''

என மனமெரிந்து சொன்னான் வள்ளுவன்.

''தனியொருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என மனம் குமுறிச் சொன்னவன் பாரதி. அதனைச் செய்து முடிப்பது பாரத மக்களான நம் கடமையென உணர்கின்ற உணர்வைக் காண விரும்புகின்றேன்.

மொழியால், இனத்தால், கலையால், கலாச்சாரத்தால், வாழ்கின்ற நிலையால், மாறுபட்ட எண்ணத்தால் வேறுபட்டு, ஆனால் அதேசமயம் 'பாரதத்தின் மக்கள்' என்ற நிலையால் ஒன்றுபட்டு நிற்கும் பாரதத்தில், கண்ணைக் கூசவைக்கும் பளபளப்பான, வானை முட்ட நிற்கும் இருவர் மட்டும் வாழ ஊருக்கொரு பங்களா, உல்லாசத்திற்கென வகைக்கொரு கார், அறுசுவை உணவு, ஆனமட்டும் அனுபவித்து ஆனந்திக்கக் கணக்கில்லா— கணக்கில் இல்லாச் செல்வம்—இத்தனையும் ஒரு பக்கம். எழுகின்ற கதிரோன் விழுகின்ற

வரை, கழனிகளில், கடைகளில், சாலைகளில், ஆலைகளில்—இப்படி உழைப்பு மண்டிக் கிடக்கும் எங்கணும் பிழைப்பு வேண்டி உழைத்து, உழைத்து உற்பத்தியைப் பெருக்கும் உழைப்பாளத் தோழனுக்குக் குறைவற்றுக் கிடக்கும் குழந்தைகளைத் தவிர மனம் நிறைவுற்று உண்பதற்கு அரைவயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லை. எண்சாண் உடம்பினை மண் மூடிக் கொள்வதற்கு முன்னால் மறைத்து மூடிக்கொள்வதற்கு ஒரு முழத் துணியைத் தேடிக் கொள்ளக் கதியில்லை—இந்நிலை மற்றொரு பக்கம். பார்க்கின்றவர் இரங்கிட உடல் வேர்க்கின்ற அளவு உழைக்கின்றவர் பலர், அந்த உழப்பை உறிஞ்சி உண்டு கொழுத்துத் திண்டுமேல் சாய்ந்திருப்போர் ஒருவராயிருக்கும் நிலை மாறுவதைக் காண விரும்புகின்றேன்.

ஓ! ஏற்றத் தாழ்வுகள் எத்தனை கொடியவை! இந்த இழிநிலை மாறி

''எல்லாரும் ஓரினம் எல்லாரும் ஓர்குலம்
எல்லாரும் இந்நாட்டு மக்கள்'
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை''

என்ற பாரதியின் நினைவான கனவுகள் நனவாகிட 'கொள்வாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை' எனக் கம்பன் என்றொரு மானிடக் கவிச் சொல் உண்மையாகிட, 'முப்பது கோடி ஜனங்களின் பொது உடைமை கொண்ட ஒப்பிலாத சமுதாயம்'' காண விரும்பிய, எல்லார்க்கும் எல்லாமும் கிடைத்திடும் புதுமைச் சமுதாயம் தன்னைக் காண விரும்புகின்றேன்,

பரணி பாடுதற்குரிய பாரதத்து வீரர்தம் தீரமிக்க வீரந்தன்னை எள்ளி நகையாடுவோர்க்குத் ''துள்ளி வருகுது வேல், சுற்றி நில்லாதே'' பகையே' எனச் சூளுரைத்துத் தோள்தட்டி ஆர்த்தெழுந்து போர்ப் பரணி பாடுகின்ற தீரமிக்க சமுதாயத்தை—வெஞ்சமரில் கண் துஞ்சாது நெஞ்சுறுதியோடு மண்ணைக் காத்து நிற்கும் வீரர்கள், போர் முனையில் வென்றிட ''ஏர் சிறக்க, ஊர் சிறக்கும்'' என்ற பழமொழிக் கேற்ப ஏர்முனை சிறப்படைந்து பாரெல்லாம் உணவால் தன்னிறைவு பெற்றிட 'ஜெய் ஜவான், ஜெய் கிஸான்' என்ற லால் பகதூரின் தாரக மந்திரத்தை உணர்கின்ற உணர்வை—ஒட்டுரிமை பெறுவோரெல்லாம் நாட்டு வரலாற்றினைப் புனிதமிக்க தியாகத்தின் ஏடுகளை அறிந்திருக்கும் அடிப்படை அரசியல் நிலையை—ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் பல தொழில்களும் பெருகி விடப் பெருகிவரும் மக்கள் தொகையின் தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்கும் கரங்களை—பெருகி வரும் வெள்ளமதைத் தடுத்து அதன் சாரத்தைக் கருவாகி நிற்கும் பயிர்கட்கும், உருவாகி வரும் தொழிற்சாலைகட்கும் பயன் படுத்தும் முறையை— பிஞ்சு உள்ளங்களில் புகுத்தப்பட்டுவரும் வெற்றுக் கல்வி முறைதனை வெறுத்துத் தேசியக் கல்விதனை விரும்பி, 'உழைப்பிற்கேற்ற ஊதியம்' என்பது போல வாழ்விற்கேற்ற கல்வியை நாட்டமுடன் கற்றிட நினைக்கும் மாணக்கர் தம் மனத்தினைக் காண விரும்புகின்றேன்.

கேரளத்து இயற்கைதனை. தெய்வீக மணங் கமழும் தமிழகத்து ஆலயங்களின் சிற்பங்களை, கண்ணன் திருவிளையாடல் புரிந்திடாப் பிருந்தாவனத்தின் எழில்மிகு தோற்றத்தினை, அமிர்தசரஸின் பொற்கோயிலின் பொற்பினை, புனிதமிக்க கங்கையை, அவசரமிக்க உலகத்தில் கல்கத்தாவின் ஜனநெரிசலை அன்பின் சின்னமாய் ஆக்ராவில் அமைந்திருக்கும் அழகுமிகு தாஜ்மகாலை, நெஞ்சமினிக்கும் காஷ்மீரத்துக் கொஞ்சும் அழகினை, குமரியில் அலைமிகுந்த கடலில் தோன்றும் பரிதியின் எழில்மிகு காட்சியினை,

அழியாத் தன்மை படைத்த அஜந்தா ஓவியங்களை, ஐந்தாண்டுத் திட்டங்கள் விளைத் திட்ட அற்புதங்களை, பெருகி வரும் தொழில் வளங்களை, பாரதமெங்கும் வாழ்ந்திருக்கும் உழைக்கும் மக்களின் வஞ்சமிலா நெஞ்சத்தினைக் காண விரும்புகிறேன்.

பாரத நாடு வளம் பல பெற்று, நலம் பல சிறக்க செழுமையும், எழிலும் நிறைந்து விளங்க, ஏற்றத் தாழ்வுகள் நீங்கி மக்கள் மனநிறைவு பெற்று மகிழ்வுடன் வாழ, உழைப்பால் உயர்ந்து உலகத்துச் சிறந்த நாடுகளின் வரிசையில் முதன்மை பெற்று முன்னின்று முன்னேறிச் செல்வதைக் காண விரும்புகிறேன்,

''கொள்வாருமில்லை; கொடுப்பாருமில்லை'' எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பன் காணவிரும்பிய ராமராஜ்யத்தை—தேசத் தந்தை காந்தியடிகள் காணவிழைந்த ராம ராஜ்யத்தை—பாரதப் பிரதமர் அமைக்க நினைக்கும் நவ பாரதத்தைக் காண விரும்புகின்றேன்.

தீர்க்க தரிசனம், சுயசிந்தனை, கட்டுப்பாடு, கடின உழைப்பு—என்ற இவைதான் நான் மட்டுமல்ல—பாரதம் வாழ் அறுபது கோடி மக்களும் காணவிரும்பும், நவபாரதத்தை உருவாக்கும் ஒரே மந்திரமாகும்.

With the best Compliments from :

Phone : 24954 Tel : PEEYAR.

P. இராமசாமி,

கைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள்

11, பஞ்சவர்ணசாமி கோயில் தெரு,

உறையூர் P. O.

திருச்சி - 620003.

வேல், குந்தம், ஈட்டி முதலிய படைக் கருவிகளைக் குறிதவருது எறியும் திறமையும் கொள்கைத் திறமும் கொண்டவர்கள் என்பதனுல் இவர்கள் **செங்குந்தர்** எனப் பட்டனர்.

தியாகம், சீலம், செம்மை, மேன்மை முதலிய ஒழுக்கங்களைக் **கைக்கொண்டவர்கள்** என்பதனுலும்,

முடியுடை மூவேந்தர்களால் நம்பிக்கைக்குரிய படைத்துணையாகத் திறனுய்ந்து தெரிந்து **கைக்கொள்ளப்பட்டவர்கள்** என்பதனுலும்,

போரில் பகைவரை வெற்றிபெற்றுச் சிறைசெய்து **கைக்கொண்டே** மீள்பவர் என்பதனுலும்,

இவர்கள் **கைக்கோளர்** எனப்பட்டனர்.

பண்டைக் கல்வெட்டுகள் பலவற்றில் 'தெரிஞ்ச கைக்கோளர்' என்னும் தொடர் பயின்று வரும், அயலவர் படையெடுப்பு முதலிய நெருக்கடியான காலங்களில் பொறுப் பேற்றுக் கொண்டு செயல் புரிபவர்கள் கைக்கோளர் எனப் பொருள் கொள்ளுதல் பொருந்தும் என்று கருதுகிருர் அறிஞர் ந. ரா. முருகவேள். (Those who assume charge during emergency periods; who take possession of most responsible duties)

அரசாட்சித் துறையிலும் இராணுவத் துறையிலும் பொறுப்பான பதவிகளை யேற்று முதன்மையுற்றிருந்த காரணத்தினுல் இவர்களுக்கு **முதலியார்** என்னும் பட்டமும் வழங்குவதாயிற்று.

இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற செங்குந்தப் பெருமக்களின் பல்வேறு சிறப்புகளையும் வகுத்தும் தொகுத்தும் அவர்களுடைய படைக்கருவியான ஈட்டியின் மேல் ஏற்றி எழுபது இனிய பாடல்களில் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரால் இயற்றப் பெற்றதே ஈட்டி எழுபது என்னும் நூலாகும்.

கவிச்சக்கரவர்த்தி கம்பரால் இயற்றப்பெற்ற ஏரெழுபது என்னும் நூல் இங்கு நினைவு கூறத்தக்கது!

> நாட்டில் உயர்செங்குந்த நாயகர்மீ திற்சிறந்த
> ஈட்டி எழுபதினைப் பாடக்—கோட்டில்
> பருமா வரையதனிற் பாரதநூல் தீட்டும்
> கரிமா முகன்கழலே காப்பு

என்பது ஈட்டி எழுபதின் முதற் காப்புச் செய்யுள்!

நவவீரர் தோற்றம்

முக்கட் செல்வனுகிய சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணின்றும் பிறந்த நெருப்புப் பொறிகளின் (முருகன் தோற்றத்தில்) வெம்மை கண்டு ஆற்ருது உமையம்மை அஞ்சி யோடினுர். ஓடியபொழுது சிலம்பினின்றும் சிதறிய இரத்தினங்கள் இறைவன் முன்பு விழுந்து விளங்கின. சிவபெருமான் அருளாணையினுல் அந்நவரத்தினங்களிலும் உமையம்மையினுடைய திருவுருவங்கள் தோன்றின. பிறகு ஒவ்வோர் இரத்தினத்திற்கும் ஒவ்வொரு சக்தியாக மாணிக்கவல்லி, மௌத்திகவல்லி, புட்பராகவல்லி, கோமேதக

ஈட்டி எழுபது

பேராசிரியர் **நா. ஆறுமுகம்,** M. A., ஈரோடு.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

பிற்காலச் சோழப் பரம்பரையில் புகழுடன் வீற்றிருந்த விக்கிரம சோழன் (கி.பி. 1118—1133), இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133—1150), இரண்டாம் இராச ராசன் ஆகிய மூன்று பெரு மன்னர்களின் அரசவைப் புலவராக—புலவர் திலகமாக—வீறுடன் வீற்றிருந்தவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஆவர்.

இவர் கவிராட்சகர்—காளக்கவி—கவுடப் புலவர்—சர்வக்ஞ கவி என்று பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார்.

தக்கயாகப் பரணி, மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், அரும்பைத் தொள்ளாயிரம், காங்கேயன் நாலாயிரக்கோவை, ஈட்டி எழுபது முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

'தமிழ் நாவலர் சரிதை' என்னும் நூல் இவரைக் 'கூத்த முதலியார்' என்று குறிப்பிடுவதனாலும், செங்குந்த மரபினரின் சிறந்த பண்பும் செயலும் வரலாறும் ஆகிய வற்றைச் சிறப்பித்து ஈட்டி எழுபது என்னும் நூலை இவர் பாடியிருப்பதனாலும் இவர் செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர் என்று தெள்ளிதின் விளங்குகின்றது என்பர் திரு. ந. ரா. முருகவேள்

> கல்விக்கரசு கவிராச சிங்கம் கலைச்சலதி
> வெல்விக்கும் வேற்கைவியன் சோழர்தம்குரு, மெய்மைநெறி
> புல்விக்கும் சொற்போர்ப்புலி, புலவர்ஏறு, பூங்கமலச்
> செல்விக்குச்சேய், ஒட்டக்கூத்தர் சிறப்பெலாம் செப்பரிதே

என்னும் பாடல் ஒட்டக்கூத்தரின் உயர்பண்பையும் சிறப்பையும் எடுத்துக்காட்டும்.

செங்குந்தர்

> வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பில் தலைப்பிரிதல் இன்று

என்னும் திருக்குறள் பழங்குடியினரின் பண்பைப் பாராட்டிக் கூறும்.

நம் நாட்டினைச் சேர்ந்த பழம் பெரும் குடியினருள் கல்வி அறிவு ஒழுக்கம், மறம், மானம். உயர்வு முதலிய பண்பு நலன்களில் சிறந்தோங்கி வாழ்ந்து வருகின்ற ஒரு குடியினர்தொ செங்குந்தர் குலப் பெருமக்கள் ஆவர்.

வல்லி, வைடூரியவல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி. நீலவல்லி என்னும் **நவசக்திகள்** தோன்றினர்.

அந் நவசக்திகள் மீது இறைவன் கொண்ட காதலால் அவர்கள் கருவுற்றுர்கள்! இதைக் கண்டு கோபித்த உமை, 'பலகாலம் இக் கருப்பத்தோடு இருக்கக் கடவீர்' என்று சாபமிட்டார்.

நவசக்திகளினுடைய கருவினுள்ளே நந்திகணத் தலைவர்கள் குழந்தைகளாய்ப் புகுந்து காளையர்களாகி யோகம் செய்துகொண்டிருந்தார்கள்.

பிறகு உமாதேவியாரின் அருளால் மாணிக்கவல்லியிடத்து விரவாகுத் தேவர், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரி, புட்பராகவல்லியிடத்து வீரமகேந்திரர், கோமேதகவல்லியிடத்து வீரமகேச்சுவரர், வைடூரியவல்லியிடத்து வீரபுரந்தரர். வைரவல்லியிடத்து வீரராக்கதர், மரகதவல்லியிடத்து வீரமார்த்தாண்டர், பவளவல்லியிடத்து வீராந்தகர், நீலவல்லியிடத்து வீரதீரர் எனத்தோன்றிய **நவவீரர்**களின் மரபினரே இந்தச் செங்குந்த மரபினர்!

பாத நூபுரத்தில் தேவி சாயை கண்டு, அமலன் கொண்ட
காதலால், கருப்பம் ஆகும் கதிர் நவ மணி மாதர்க்கண்
மேதகு வீரத் தோடும், மென்மீசை யோடும் வந்த
மாதவ வீர வாகுத் தலைவர், இத்தலைவர் மாதோ!

(பாடல்-6)

திருமுருகனின் தம்பியரும் துணைவரும் ஆகிய வீரவாகு முதலிய நவ வீரர்களுக்குக் குந்தம் என்னும் ஈட்டிப் படையை உமாதேவியார் முதன்முதலாக அளித்தார். குந்தம் என்னும் படையை யேந்திச் சிறப்புடன் போர் புரிந்த வீரர்களே செங்குந்தர்கள் எனப் புகழப்பட்டனர்!

அத்தகைய சிறப்புமிக்க குந்தப் படையின் பெருமையை எம்மால் அளவிட்டுச் சொல்ல வியலாது. என்றாலும் ஒரளவு கூறுகின்றேன் என்கிறார் ஒட்டக்கூத்தர்.

'பிறந்த ஒன்பதின்மர் குந்தப் பெருமையாம் பேசமாட்டோம்'
என்பது ஈட்டி எழுபதில் ஐந்தாவது பாடல்.

பானுகோபன் வதை

சூரபன்மனுடைய பிள்ளையின் பெயர் பானுகோபன். பானு என்றால் சூரியன்; சூரியன் மீது கோபம் கொண்டவன் பானுகோபன். குழந்தையாய்த் தொட்டிலில் விளையாடிக் கொண்டிருந்த பொழுது சூரியனுடைய கதிர்க்ள் இவன் மீது பட்டதனால் அந்தக் கதிரவன் மீது கோபம்கொண்டு அவனைப் பற்றிக் கொணர்ந்து தன்னுடைய தொட்டிலில் கட்டிவைத்தவன்!

அந்தப் பானுகோபனைப் போரில் கொன்றுகுவித்த சிறப்பினை உடையது வீர்வாகு முதலிய நவ வீரர்களின் கையிற் பொலிந்த சிறப்புப் பெற்ற குந்தம் என்னும் படையாகும்.

பூட்டிய தேரோடும் பொலிந்த பானுவை
ஈட்டிய தொட்டிலின் இறுக்கும் மைந்தனை

மூட்டிய சமரிடை முடித்து மாசறத்
தீட்டிய வீரர்கைச் சிறந்த செங்குந்தமே (9)

புலிக்கொடி பெற்றது

வலிவும் பொலிவும் பெற்ற இளவலாகிய வீரவாகுத்தேவர் முதலிய நவ வீரர்கள் உடன்வர, சிறப்புப் பொருந்திய 'கந்தர் சஷ்டி' யாகிய ஆறு நாள்களில் செவ்வேற் குகன் சூரபதுமனை வெற்றி கொள்ள அவன் கிரௌஞ்ச மலையில் பெரிய மாமரமாய் நின்முன், முருகன் வேரோடு மாமரத்தையும் கிரௌஞ்ச மலையையும் வேல் கொண்டு பிளக்க, சூரபதுமன் மயிலும் சேவலுமாய் மாறி நின்முன்.

சூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வேன் அருள்சே ரவும்எண் ணுமதோ!
சூர்வே ரொடுகுன் றுதுளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே! (24)

என்று **கந்தர் அனுபூதியில்** அருணகிரியார் பாடுகிறார்.

குறுந்தொகையிலும் கடவுள் வாழ்த்துப் பாடலில் பாரதம் பாடிய பெருந்தேவனார் போற்றுகிறார்.

தாமரை புரையுங் காமர் சேவடி
பவழத்தன்ன மேனி திகழொளி
குன்றி யேய்க்கு முடுக்கை குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்று லுலகே

மயிலைத் தன் வாகனமாகக் கொண்ட முருகன், தன் இனத்தின் புகழைப் பாடும் கோழியைக் கொடியாகத் தன்கையில் ஏற்றார். ஆணவம் அழிந்த சூரபதுமனது புலிக் கொடியை முருகன் செங்குந்தர்களுக்குக் கொடுத்தார். ஆகவே புலிக் கொடியை முருகப்பெருமான் தர, செங்குந்த வீரர்கள் பெற்றனர் என்பது சிறப்புக்குரிய வரலாறாகும்!

வனப்புறும் இளவலும் வரச்செவ் வேற்குகன்
கனப்பகல் ஆறினில் கலாபம் ஏறியே
இனப்புகழ் சேவலங் கொடிதற்கு ஏற்றுவெஞ்
சினப்புலிக் கொடிதரச் செறிகுந்தமே (11)

செங்குந்தத்தின் சிறப்பு

நவ வீரர்களுக்குத் தெள்ளிதாய் உமையாள் தந்த செங்குந்தம், நான்கு வேதங்களை வழுவற வளர்த்துத் தேவர்தம் சிறையினை மீட்டது! பொன் நகராகிய அமராவதி மீண்டும் சீறும்படி அவுணர்களை அழித்தது! திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழநி), திருவேரகம் (சுவாமிமலை; குன்று தோருடல் (பழமுதிர்ச்சோலை) முதலிய ஆறுபடை வீடுகளிலும் 'குகன் கைச்செவ்வேற்கு அருந்துணைக் குந்தம்' என்று தனிச்சிறப்புடன் வீற்றிருப்பது!

மகாராட்டிரம், குச்சரம், சீனம், கொங்கம் முதலிய நாடுகள் தந்த திறையினைப் பெற்றுச் சீரும் சிறப்புடனும் அரசாட்சி செய்தது செங்குந்தரின் தனிச் சிறப்பாகும்!

திருவாலங்காட்டில் சிவபெருமானோடு வாதாடு கோலங்காட்டிய காளி தன் வெற்றி யிழந்து வெட்கப்பட, அந்தக் காளியின் கையிலிருந்த தாளத்தைப் பறித்தது!

சிவபெருமானை மனமுருகப் பணிந்து வணங்காதவர்களையும், 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்தை நினைத்துத் திருநீறு அணியாதவர்களையும், ஆனந்தக் கண்ணீர் ஊற்றெழ திருநடனம் செய்யாதவர்களையும், திருக்கோயில் வலம் வராதவர்களையும் சினந்து தாக்கி நிற்பது!

இன்னோரன்ன பெருமைகளையுடையது செங்குந்தம்!
உருக்கொடு பணியாதாரை உளத்தில் ஐந்தெழுத்தை உன்னிப்
பெருக்கொடு தவளநீற்றைப் பேணியே அணியா தாரைத்
தருக்கொடு நின்று கண்ணீர் ததும்பமுன் ஆடாதாரைத்
திருக்கோயில் வலம்வாராரைத் திருத்தவே பொரும் செங்குந்தம் (23)

மிடுக்கு தரும் இன்பம்

திருநீலகண்டப் பெருமானின் திருநடனத்துக்கும், உமையம்மையின் கைத்தாளத் துக்கும், முக்கண் பெருமானாகிய சிவபெருமானின் திருக்கைச் சூலத்துக்கும் எவ்வாறு ஈடில்லையோ அவ்வாறே அழகுவாழ் நவவீரர் கையிலிருக்கும் குந்தப் படைக்கும் ஈடில்லை என்று ஒரு பாடல் விளக்குகிறது,

ஆலமார் மிடற்றூர் ஆடும் ஆடலே ஆடல்; அம்மை
ஏலவார் குழலாள் அங்கைத் தாளமே தாளம்; ஏந்தும்
சூலம் ஆவதும் அன்னான் கைச்சூலமே சூலம்; மற்று இக்
கோலம் வாழ் வீரர் கையிற் குந்தமே குந்தம் ஆகும்! (25)

இந்தப் பாடலின் மிடுக்கும் அந்த மிடுக்கு தரும் ஓசையின்பமும் அறிந்து இன்புறத்தக்கன.

செங்குந்தர் ஆட்சிச் சிறப்பு

விண்ணுலகத்திலுள்ள அசுரர்களையும், கடல் சூழ்ந்த மண்ணுலகத்திலுள்ள பகை வர்களையும், அவுணர்களாகிய காட்டையும், அம்புக் கூட்டங்களாகிய கடலையும், வெல்லுதற்கரிய கலிங்க மன்னனது நால்வகைப் படையையும், மலர்மாலை யணிந்த ஆண் சிங்கத்தை யொத்த வையக்கோன் என்னும் அரசனையும் வென்று, பெற்ற வெற்றியோடு உலகெங்கும் திரியுமாம் குந்தப்படை.

வானைவென்று உவரிசூழ்ந்த மண்ணைவென்று, அவுணர் ஆன
கானைவென்று அம்புராசிக் கடலைவென்று அருங்கலிங்கன்
சேனைவென்று அலங்கல் மார்பம் செறியும் மாமடங்கல் வையக்
கோனைவென்று அரியவாகை கொண்டெனத் திரியும் குந்தம் (38)

திறை பெற்ற சிறப்பு

செங்கோல் வழுவாது நீதி செலுத்தி ஆட்சி நடத்திய சோழப் பெருமன்னன் அமைத்திட்ட சிங்காதனத்தில் வீறுடன் வீற்றிருந்தவர் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஆவார். அவர் இயற்றிய நூல்களே, நூல்கள் என்றும், மற்றையோர் புன்கவிகள் என்றும், அப்புன்கவிகளாகிய களைகளை அறவே நீக்கியதோடு வங்கம், ஈழம், கன்னடம், மகாராட்டிரம், குச்சரம், சீனம், கொங்கம் முதலிய நாடுகள் தந்த திறையினைப் பெற்றுச் சீரும் சிறப்புடனும் அரசாட்சி செய்தது செங்குந்தரின் தனிச் சிறப்பாகும்!

செங்கோல் நடத்தும் வளவனிட்ட சிங்காதனத்திலே இனிதிருந்த
நங்கோன் கவியே கவியென்று நாட்டிக், கவிப்புன்களை களைந்து
வங்கோடு ஈழம் கன்னடம் மராட்டிரம் குச்சரம் சீனம்
கொங்கோடு எங்கும் தரத் திறையே கொள்ளும் மின்னுர்
செங்குந்தமே (39)

நன்மைக்கு ஆக்கம் தேடுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் தீமைக்குப் பங்கம் சேர்ப்பதும் ஆகும் என்பது அரசாட்சி நெறி! நெற்பயிர் வாழவும் வளரவும் களை நீக்கம் தேவை! நல்லவை வளர அல்லவை தேயவேண்டும்! நல்லிலக்கியம் வாழ நச்சிலக்கியம் அழியத்தான் வேண்டும். இதை நன்குணர்ந்து வீறுடனும் விருப்புடனும் வினையாற்றியவர் கவிவேந்தரான ஒட்டக்கூத்தர் என்பதை இப்பாடல் தெளிவாக்குகிறதல்லவா?

போற்றுதார் யாரே!

செங்குந்தர் படை காலதேவன் (யமன்) கரங்களைப் பிடிக்கினும் பிடிக்கும்! அவன் தலையைப் பறிக்கினும் பறிக்கும்! அவனுடைய பாசக் கயிற்றைப் பிடுங்கி எறியினும் எறியும்? அவன் உடலைப் பிளக்கினும் பிளக்கும்? அவனையே பற்றியெடுத்துக் கரகர வென்று சுழற்றினும் சுழற்றும்! அண்டத்தையே துகள் எழச் செய்யினும் செய்யும்! ஆகவே குந்தத்தின் வீறும் போரும் அறிந்தவர் இதனைப் போற்ருறு இரார் என்கிறது இப்பாடல்,

பற்றினும் பற்றும், சென்னி பறிக்கினும் பறிக்கும், பாசம்
எற்றினும் எற்றும், கூற்றை ஈரினும் ஈரும், வாரிச்
சுற்றினும் சுற்றும், அண்டம் துகள் எழச் செயினும் செய்யும்
மற்றினும் குந்தம் போற்ருது இருப்பவர் உளரோ மண்மேல்! (44)

எல்லாருடைய வாழ்நாள் கணக்கையும் பார்க்கும் காலதேவனின் கணக்கையே தீர்க்கும் திறமை குந்தத்திற்கு உண்டு என்பதைப் பாடலின் நடையே தமக்குக் காட்டி நிற்கிறது!

இவர் பெற்ற இசை எவர் பெற்ருர்!

ஈட்டி எழுபது என்னும் இனிய தமிழ் நூலை இயற்றுவதற்காக ஒட்டக்கூத்தர் என்னும் கவிமன்னருக்கு இரத்தப்பாவாடை விரித்துச் சிரச்சிங்காதனம் அமைத்துத் தந்தனர் செங்குந்தர், இதைக் கண்டோர் கண்ணும், கேட்டோர் செவியும், எண்ணியோர் மனமும் வியந்தன! அந்தரத்து அமரர் மலர்மாரி பெய்து வாழ்த்தினர்! ஆகவே இந்தச் செங்குந்தர் பெற்ற புகழைப் போல உலகத்தில் எக்குலத்தினர் பெற்றனர்?

செந்தமிழ்க்காகப் போந்து சிவந்த பாவாடையாக
நந்தமக்கு இடுங்கால் எந்த நகரமும் உளம் வியந்த,
அந்தரத்து அமரர் வாழ்த்தி அணிமலர் மாரி பெய்தார்
இந்தச் செங்குந்தர் பெற்ற இசை எவர் பெற்ருர்? அம்மா!
(பாடல் 70)

சுருங்கக் கூறின்,

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு''

என்னும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனரின் பொன்மொழிக்கிணங்க வாழ்ந்த இனம்—வாழும் இனம்—செங்குந்த இனம், ''மண்மேற் சைவ நெறிவாழ வளர்ந்து முன்னைவழி அன்பால், கண்மேல் விளங்கு நெற்றியினர் கழலே பேணுங் கருத்தினராய்'' வாழ்ந்த இனம்—வாழும் இனம்—செங்குந்த இனம் என்பதைக் குறிப்பாக உணர்த்தும் ஒப்பற்ற நூலே ஈட்டி எழுபது என்னும் உயர் நூலாகும்!

HANDLOOMS

By

Syed Mohsin, B. A.,
President, Tamil Nadu Handloom Industry and Trade Association.

The Handloom Industry is one of the eldest industries in our country and also our largest cottage industry. Our Handloom fabrics are well known for their quality and elegance since many centuries. Our handloom fabrics were exported to countries all over the world till the Textile Mills made their appearance. India, which was till the beginning of the 19th century an exporter of cotton goods began to import cotton clothes and cotton yarn thereafter. The throw shuttle loom gave place to the Fly shuttle loom and the handloom weavers took to weaving mill yarn as it was cheaper and stronger than hand-spun yarn. In view of the large export potential of the handloom industry a special Cabinet Committee has been set up by the Central Government to deal with problems of export promotion at the highest level. The Commerce Ministry has set up two cells for export planning and export project planning to co-ordinate the country's export efforts.

2. Exports of cotton handloom cloth reached its peak level in 1955; there was a gradual fall thereafter. With a view to increase our competitive capacity in the foregin markets, the Government of India introduced a scheme of cash assistance with effect from 1st January, 1961. The rate was initially 5% of the f. o. b. value and it was increased from time to time upto 30% between 1—1—66 and 5—5—66. Simultaneously, the Government of India sanctioned a scheme of import entitlement for the import of dyes and chemicals. This was 15% upto 14—9—65 but was reduced to 5% from 15—9—65. All these incentive schemes were abolished with effect from 6--6—1966 when the Rupee was devalued.

3. The devaluation of the Rupee did not stimulate export and there was a fall in our exports of handloom items in 1967. Suitable representations were made to the Government by the Tamil Nadu Handloom Industry and Trade Association for restoring cash assistance and import entitlement. The response from the Government was positive and each assistance at 7½% and impotr entitlement at 5% was sanctioned from 1—4—68. Subsequent to this date, the importing countries had other increased their import duty or levied import duties for the first time. As a result, the landed cost of our fabrics went up considerably. In view of the competition from Pakistan, Japan, China, Hongkong, Thaivan and Thailand in our foreign markets, the cash assistance of 7½% was found to be inadequate. The Tamil Nadu Handloom Industry and Trade Association made out a case for an increase in cash assistance and this

was supported by the Handloom Export Promotion Council. As a result, Government raised the rate of cash assistance which varied from 15% to 32.5% of the f. o. b value according to the destination upto 30—9—73 Simultaneously our import entitlement was also raised to 6¼% of the f. o. b. value.

4. There was however, a drastic reduction of cash assistance from 1—10—73 without advance intimation to the trade.

For fabrics of 80s and above counts :	8% of f. o. b. value
For other fabrics	3% of f. o. b. value

The above reduced rates were in force upto 30—9—74. The cash assistance scheme was suspended from 1—10—74 to 31—12—74. But, on account of the repeated representation made the scheme was revived from 1—1—75 ; the rates of cash assistance are as follows :

1—1—75 to 31—3—75	5% of the f. o. b. value
1—4—75 to 30—6—75	10% of the f. o. b. value
1—7—75 to 31—3—76	20% of the f. o. b. value
from 1—4—76	15% of the f. o. b. value

The reduction in cash assistance from 1—10—73 and nil assistance between 1—10—74 and 31—12—74 has resulted in a fall in exports of cotton handloom items as indicated below :

Year.	Value of exports of cotton items.
1970—71	13.33 crores
1970—72	16.72 ..
1972—73	23.68 ,,
1973—74	41.59 ,,
1974—75	36.82 ,,

The upward revision of quantum of cash assistance upto 30—9—73 is reflected in a gradual increase in exports upto 1973—74 while the drastic reduction in cash assistance from 1—10—73 has contributed to a fall in exports to Rs. 36.82 crores in 1974—75 against 41.59 crores in 1973—74

5. The following measures are necessary to increase exports :

(i) Applications for cash assistance have to be sent to the Handloom Export Promotion Council monthly before the second succeeding month. It takes a month for the Council to send its recommendation to the Indian Cotton Mills' Federation which takes another month to disburse the amount. Thus, exporters will get the amount only four months after the export. This period

has to be minimised by simplifying the procedure for the disbursement of cash assistance as indicated below :

(a) Exporters should route their application through approved Trade Associations of which they are members. If in any area, there is no association, the exporters should establish an association for the purpose. The associations will scrutinise the applications and forward them to the Handloom Export Promotion Council with their recommendation.

(b) Cash assistance may be disbursed by the Handloom Export Promotion Council itself. The Indian Cotton Mills' Federation may be eliminated from the picture.

(c) The contribution by the Government to the Indian Cotton Mills' Federation, if any, for the payment of the cash assistance may be placed at the disposal of the Handloom Export Promotion Council.

(ii) Cash assistance scheme and import policy should be stable for a fairly long period so as to enable exporters to quote firm prices and secure orders for a long period.

(iii) Prices of cotton yarn are fluctuating. Cotton hank yarn of export quality at steady and reasonable rates should be made available to exporters. The private sector does not get any assistance from the Government regarding supply of quality cotton yarn.

(iv) If there is any change in cash assistance or Policy or import entitlement, intimation at least 4 months in advance should be given to the Trade.

(v) Handloom items are much in demand in the sophisticated Eropean and American markets. But, we are yet to popularize our fabrics in South America and African countries. Our Embassies in these countries may conduct a survey of the clothing requirements of the local population and pass on detailed information to the Handloom Export Promotion Council through Government of India regarding varieties structures prices etc., with samples. A wide range of goods can be produced on handlooms and the information supplied by the embassies will enable exporters to try new markets for handloom fabrics.

(vi) Providing adequate finance at concession rate of interest is vital for the expansion of exports. The rate should not exceed 11½%, both for packing credit and post shipment credit.

6. The Santhanam Committee appointed by the Government of Tamil Nadu in 1972 has observed that only 30 per cent of handlooms in Tamil Nadu are under the co-operatives and the bulk of the other 70% are working for

private producers, while there is a small number of independent handloom weavers who buy yarn from the yarn merchants and sell the cloth either to merchants or directly to consumers. This is because many weavers prefer to work for master-weavers as human relationship between the employer and employee are more flexible and the weaver is able to get advances and other assistance in times of need like marriages, funerals etc. The Government of India and State Government have instituted steps to strengthen the co-operatives and bring more weavers under the co-op-fold under the 20 Point Economic Programme. The target is to bring 60% of the looms in Tamil Nadu under the co-operative fold. Private producers and weavers co-operatives will therefore co-exist in the handloom sector. In drawing schemes to improve the economic condition of weavers. the realities in the set up of the industry have to be taken into account to achieve the maximum results. Private producers also require quality yarn at steady and reasonable prices as well as dyes and chemicals, to carry out their activities. The following recommondations of the Santhanam Committee, if implemented, will go a long way to rehabilitate the industry.

(i) Further increase of powerlooms should be immediately stopped as it is a great threat to handlooms than even in looms in the Mill sector.

(ii) Unauthorised powerlooms should not be regularised.

(iii) The orders regarding reservation of certain varieties for handlooms should be strictly enforced.

(iv) Excise duty on powerlooms cloth should be brought to a level with that of the mill cloth.

(v) The State Government should undertake full responsibilities of securing the supplies of yarn and distributing them to private producers also. (The rates should be steady for a reasonably long period). Such supplies of yarn are very necessary to exporters, when it is in short supply to enable them to retain foreign customers.

வேண்டுதல் - வேண்டாமை.

நாளிற் கிழமையிற் கோயில் மனைதனில்
நாட்கள் கழிகிறது — மொழி
ஞானம் பயில்சிறு பூவின் மழலையில்
நாட்டம் பிறக்கிறது — உயிர்க்
கூட்டம் துடிக்கிறது!

கேள்வி முறைமை யிலாதிம் மனையினில்
கீதம் பிறக்கிறது — தாய்
கெஞ்சும் விழியினில் மிஞ்சுங் களைப்பினில்
கேட்டுப் படைக்கிறது — உயிர்
கூட்டில் துடிக்கிறது!

பஞ்சணை மெத்தையிற் பள்ளியில் நாடகம்
பாலின் மழலைக்கே — இவண்
பார்க்கும் சிறுபயிர் ஏக்கம் விளைப்பதும்
பைந்தொடியின் மனத்தே — வெறும்
பாலைச் சிறுமைக்கே!

கொஞ்ச நினைவொன்று மின்றிச் சிறுகுயில்
கூடத் திடைநடுவே — சீர்
குன்றிக் கிடப்பதும் தெய்வத்தின் வஞ்சனை
கொண்ட செயல்முறையே — ஞாலம்
கொள்ளும் இயல்பிதுவே!

நெஞ்சு தவிப்பதும் வெம்பிக் கிடப்பதும்
நிகழுறும் ஓரிடத்தே — உயிர்
நேயம் வளர்த்திட ஞாயம் விரும்பினும்
வேண்டல் நிலைத்திலதே — அட
மீண்டும் செழித்திலதே!

கொஞ்சிச் சிரித்திடும் பிஞ்சுக் குறும்பினைக்
கொஞ்சும் நினைவிலையே — தாய்
தொட்டு அணைக்கையில் ஊறும் துயரினில்
தோன்றுவ தென்னிதுவோ — அட
வேண்டிய சொத்திதுவோ!

பஞ்சினும் மெல்லிய பிஞ்சுப் பிறைநிலா
படுத்துக் கிடக்கிறது — அதன்
கொஞ்சும் விழியெழில் தன்னில் நெஞ்சகம்
கொள்ளை போகிறது
கெஞ்சி இறையுறை கோயில் தொறும்மனம்
கேட்டுக் கிடக்கிறது — இங்கே
மிஞ்சியற் கண்ணிமை மூடிய தெய்வதம்
பேச மறுக்கிறது — உயிர்
கூசிக் கிடக்கிறது.

பார்க்கும் அசைப்பிலோர் பாவியம் ஆயிரம்
பண்ணொடு பயில்கிறது — அதைப்
பார்க்க மறுக்கிற தாய்மையின் தத்துவப்
பாதை புரிகிறது — கண்
தூக்கிச் சிரிக்கையில் தூங்கி மருள்கையில்
தொட்டுச் சிலிர்க்கிறது — மனம்
பார்க்க மறுப்பினும் மார்புறு பாலினில்
அமிழ்தம் படைக்கிறது.

செக்கச் சிவந்தமென் பூம்பிஞ்சுப் பாதங்கள்
சீறுங் தழல்போலே! — இது
ஒக்கக் கிடக்கையில் தாயும் மகவுமத்
தீயின் தளிர்போலே! — கைப்
பக்கம் அணைகையில் ஊறும் அமிழ்தினில்
பாம்பின் நிழல்போலே — எழில்
மிக்குப் பொலியினும் வேண்டி வராதெனும்
வெற்றிசைப் பின்பாட்டே — இது
வேண்டா விருந்தழைப்பே!

புலவர் தங்க. அன்புவல்லி,
பட்டுக்கோட்டை.

சிறப்பு மிக்க பொறுப்புகளில் நம்மவர்களில் சிலர்

திரு. டாக்டர். சி. பாலசுப்பிரமணியம்,
M. A. M. Litt., Phd.,
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப்பல்கலைக் கழகம்.



திரு. M. A. முருகேசன் B. A., B. L.,
தனி அலுவலர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

திரு. J. சுத்தானந்தம்
தலைவர்,
ஈரோடெக்ஸ், ஈரோடு.



திரு. M. C. வெங்கடாஜல முதலியார்
கட்டிடக் கூட்டுறவுச் சங்கம்,
திருநகர், ஈரோடு.

தென்னிந்திய செங்குந்த சமூக மாநாட்டு வரவேற்புக்குழு உறுப்பினரில் சிலர்



திரு. S. பாலகிருஷ்ணன்



திரு. S. முருகேசன்

திரு. R. M. சண்முகவடிவேல், B. A.,



திரு. V. C. T. வேலு

திரு. S. பழனியப்பன்



திரு. M.

Every one chooses. every one uses
Chentex
HANDLOOM FABRICS
the world over
• fine quality • fancy designs
• fast colours • fair price
Manufacturers & Exporters:
Bedspreads, Pillow covers,
Table Cloths, Furnishings,
Towels, Terry Towels &
Casement Cloth - Seersucker
THE CHENNIMALAI WEAVERS
CO-OPERATIVE PRODUCTION &
SALE SOCIETY LTD.,
P. B. No. 32 Chennimalai - 638051 TAMILNADU-INDIA
M. P. Nachimuthu, B.A.B.L. President.

Erotex
FABRICS

★ பெட்ஷீட்ஸ்

★ டவல்ஸ்

★ தலையணை உறைகள்

★ அலங்காரத் துணிகள்

★ கோட்டிங் கிளாத்

கருத்தைக் கவரும் கவின்மிகு வண்ணங்கள் !
இதுவே எமது கைத்தறியின் சிறப்பைக் காட்டும் சின்னங்கள்!

எங்கள் சங்கத்தின் உயர்வு !
தரமான கைத்தறியின் நெசவு !

போன் : **4170** தந்தி : "ஈரோடெக்ஸ்"

ஈரோடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்

K. 1216.

218 நேதாஜி ரோடு ● தபால் பெட்டி எண். 138

ஈரோடு-638001.

டிப்போ : 4/1. வடக்கு மாட வீதி, மைலாப்பூர், சென்னை-4.

ஜெ. சுத்தானந்தன்,
தலைவர்.

THINGALUR TEX

Handloom Fabrics

Producers of:

$2/20^s$ Bedsheets, Bath Towels, Shirtings & Furnishing Fabrics Etc.,

$2/40^s$, $2/60^s$ Special Diamond Dhoties,
20^s, 26^s, 40^s Dhoties, Pieces & Kerchiefs Etc.,

Thingalur Weavers Co-operative Production & Sale Society Ltd., No. K. 849.

THINGALUR P. O. (Via) ERODE. Coimbatore Dt. (S. India)

Sales Depot: Phone No. 4248

144, Easwaran Koil Street, ERODE.

செங்குந்தர்கள் சிந்தனைக்குச் சில

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன், எம். ஏ. எம். லிட்., பி. எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்.

'மலர்தலை யுகம்' என்றும் 'நனந்தலை உலகம்' என்றும் தமிழகம் பழந்தமிழ்ப் புலவர்களால் கிளத்தப்பட்டது. நாடென்றுலே உலகம என்ற உயர் எண்ணம் நிலவிய காலம் அது. 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்பது கணியன் பூங்குன்றனாரின் பரந்த மனப் பண்பாட்டிற் பிறந்த உயிருள்ள வாழுந் தொடர். நம் சிந்தனைகள் உலகை அளாவி யிருக்க வேண்டும் என்பர். 'வெண்டல் வில்கி' என்னும் அமெரிக்க எழுத்தாளர் 'எதிர் காலத்தில் நம் சிந்தனைகள் உலகை அளாவி நிற்கவேண்டும்' என்று தம் புகழ் பெற்ற நூலான 'ஓர் உலகம்' (One world) என்னும் நூலிற் குறிப்பிட்டுள்ளார்.

உலகை அளாவிய சிந்தனைகள் என்றுல் என்ன? 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்பது தமிழ் முன்னேர் கூற்று. சான்ரேர்கள் வற்புறுத்திச் சென்ற நெறியில் நிற்பதும் நடப்பதும் கொள்ளத்தக்கதாகும் ஒழுகலாறு, வாழ்க்கைமுறை என்பது உயர்ந்தோர் உள்ளும் உயர் நெறியாகும்.

செங்குந்தர் இனம் காலப் பழமையுடையது; வரலாற்றுத் தொன்மை சான்றது. இம் மரபினர் வீரவாகுதேவர் வழியில் தோன்றி, முருகப்பெருமானுக்குரிய ஈட்டிப் படை-குந்தப்படை தாங்கியவராதலின் 'குந்தர்' 'செங்குந்தர்' என வழங்கபபட்டனர். உயர்ந்த குறிக்கோள் உடைய ஒழுக்கத்தினர் – கொள்கையினர் ஆதலின் 'கைக்கோளர்' என்றும் வழங்கப் பெற்றனர். சேந்தன் திவாகர நிகண்டு,

செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்
தந்துவாயர் காருகர் கைக்கோளர்'

என்று இம்மரபினரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

வீரவாகு தேவர் வழியினர் இம்மரபினர் என்பதற்கு,
'தேவியுமை பாதச் சிலம்பில் வரு வீரியர்கள் சிறுதே ருருட்டி யருளே'
'சிவகயிலாய பரம்பரையா ரென்றும் செங்குந்தரே'

'குமரச் செட்டிக் கிளையநற் செட்டிகளாகும் இச் செங்குந்தர்'

எனவரும் குறிப்புகள் கொண்டு செங்குந்தர் இனத்தின் பழமையும் பெருமையும் புலனுதல் காணலாம்.

இம்மரபினர் வீரர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் பிறங்கினர் என்பதனைப் பின்வரும் சான்றுகள் கொண்டு தெளியலாம்.

'சுண்முகன்றன் சேனு பதிகளும் சேனையும் ஆனவர் செங்குந்தரே'
'சிங்களமாகிய பல்தேயம் வென்றவர் செங்குந்தரே'
'சிறந்த சீலமுடையவர்; சிவசிந்தனை யுடையவர்'
'எய்தவர்க்குச் சிறைச் சோறு மீகுவர் கைக்கோளராகிய செங்குந்தரே'
'தேவார முற்றும் படிப்பவரும் அங்கையிற் செங்குந்தரே'
'திருவாசகஞ் சொல் ஒருவா சகத்தரும் செங்குந்தரே'
'நிதம் அந்தி சந்தி சிவசிந்தனை மறவாதவ ராவரிச் செங்குந்தரே'

இவ்வாறெல்லாம் பெருமைப்படப் பழந்தமிழ் நூல்களிற் குறிப்பிடப் பெறும் மரபினர் செங்குந்தர்களாவர்.

இவ்வாறு உயர்ந்த குறிக்கோள் வாழ்க்கையினராகவும், வீரஞ்சான்ற பண்பின ராகவும், சிவனை மறவாத சிந்தையினராகவும் ஒருங்கே காட்சியளிக்கும் இம் மரபினர் இக்காலத்து எண்ணிப் பார்க்க வேண்டிய செய்திகள் பல உள; அவற்றில் சில செய்திகளை மட்டுமே இக்கட்டுரையிற் குறிக்க உளங் கொண்டுள்ளேன்.

''ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னக்குதல் தந்தைக்குக் கடனே''

என்பது புறநானூற்றுப் புலவர் பொன்முடியார் பாடலின் முதலிரு அடிகள். தாயின் கடமை பெற்றெடுத்துப் பேணி வளர்த்தலாகும்; தந்தையின் கடமை சான்றோனுக— கல்வி கேள்வி ஒழுக்கங்களில் தலைசிறந்தவனுகத் தன் மகனை உருவாக்குவதாகும். 'தாயோடு அறுசுவை போம்; தந்தையோடு கல்வி போம்' என்னும் தொடரும் இக்கருத்தினைப் பற்றியே எழுந்திருக்க காணலாம்.

நம் சமூகத்தில் இக்காலத்தில் தான் பெண்கள் படிப்பெதற்கு?' என்று பெண்களை வீட்டிற்குள்ளேயே வைத்துப் பூட்டும் வழக்கம் போன்று அவர்களைக் கட்டுப் பெட்டி களாக வளர்த்த காலம் ஒன்றிருந்தது. வளர்ந்து வருகிற நாகரீக உலகில் இன்னமும் பெண்கள் அவ்வாறு வாழத் தலைப்படுவார்களானுல், இல்லை வாழ வைக்கப்படுவார் களானுல் அதனுல் அவர்களுக்கும் பெற்றோருக்கும் பெருமை இல்லை, சிறப்பு இல்லை, 'தொட்டிலையாட்டும் கையே தொல்லுலகை யாளும் கை' என்ற முதுமொழிப்படி. பெண்ணின் பெருமையே பேசிய இத்திருநாட்டில் பெண் படிப்பின்றி இனியும் இருந்தால் விளையும் கேடுகள் பலவாம்.

உலகம் நொடிக்கு நொடி மாறுதல்களை ஏற்று வருகின்றது. நேற்றைய புதுமை இன்றைய பழமையாய், நாளையப் பத்தாம் பசலிப் பழமையாய்ப் போய்விடுகின்றது. ஆயினும் உலகில் எஞ்ஞான்றும் மாறுத சில அடிப்படை உண்மைகள் உள. அதிலே வாழ்த்துதலுக்குரிய, வணக்கத்துக்குரிய ஒன்று இருக்குமானுல் அது 'பெண்மையே' யாம். 'பெண்மை வாழ்க' என்று ஆனந்தக் கூத்தாடினுர் பாரதியார். 'வலிமை சேர்ப்பது

தாய் முலைப்பாலடா,' காற்றிலே யேறியவ் விண்ணையும் சாடுவோம் காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' என்றார் கவியரசர் பாரதியார். பாரதி பாடிய—பாராட்டிய பெண்மை நம் பெண்களிடம் துலங்க வேண்டும். நம் பிள்ளைகளை நிறைந்த கல்வி யுடையவர்களாக – ஒழுக்க நிறையுடையவர்களாக வளர்க்க வேண்டிய இன்றியமை யாமை-எந்நாளையும் விட இந்நாளில் அவர்களுக்குப் பெரும் பொறுப்பாக அமைகிறது.

நாளுக்கு நாள் வளர்ந்து வரும்—மாறி வரும் கல்வி முறைகளுக்கு ஏற்பத் தம் மக்களை உருவாக்க வேண்டிய உயர் பொறுப்பும் அவர்கள் கையிலேயே ஒப்படைக்கப் படவேண்டியுளது. எனவே முதலில் தலையாய ஒன்றாக நாம் **பெண்கல்வியைக்** கவனிக்க வேண்டும். நம் மரபில் ஆண்களில் பலர் உயர்கல்வி முடித்து உயர் பதவிகளைக்கூட வகிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அமைந்துள்ள வீட்டரசியரோ பெரும் பள்ளி இறுதித் தேர்வு (S. S, L. C,) கூட முடிக்காதவர்களாக இருக்கிறார்கள். ஆதலால் தங்கள் கணவரின் பணி யாது? பொறுப்புகள் யாவை? என்பதைக்கூட உணரமுடியாத பேதமை நெஞ்சினராக விளங்குகிறார்கள். இவர்கள் பண்பால் உயர்ந்தவர்களே, வாழ் வால் உயர்ந்தவர்களே, மறுப்பதற்கில்லை; ஆனால், பாரதியார் பாடியதுபோலக் 'காரி யங்கள் யாவினுக்கும் கை கொடுத்துக்' கணவர் கடமையினை மாட்சிபெறச் செய்யும் ஆற்றல் அற்றவர்களாக விளங்குகிறார்கன், சுருங்கச்சொன்னால் இவர்கள் நல்லவர் களாக இருக்கிறார்கள்; வல்லவர்களாக இல்லை, இந்தக் காலத்தில் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது; வல்லவர்களாகவும் விளங்க வேண்டும்.

எனவே, நம் சமூகப் பெண்கள் அற்றைநாள் போலச் சமையல் கலையிலும், குடும்பப் பராமரிப்புக் கலையிலும், மட்டும் வல்லவர்களாக நிற்காமல், மாறிவரும் சமு தாயச் சூழல்களுக்கு ஏற்பத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளவேண்டும், வைப்புழிக் கோட்படாத, வாய்த்தீயின் கேடில்லையான், மிக்க சிறப்பின் அரசர் வெளவிக்கொள்ள முடியாத கல்வியினைப் பெண்கள் கருத்தூன்றிக் கற்க வேண்டும். அப்போதுதான் தங்கள் பிள்ளைகளுக்குத் தாங்களே ஆசிரியைகளாக அமைந்து கல்வியில் வழிகாட்ட முடியும்.

மேலும் பிள்ளைகளைப் பெரும் தீமைகளிலிருந்து காப்பாற்றும் கடப்பாடும் பெண் களுக்குத் தற்போது வந்து சேர்ந்துளது, வெளிநாடுகளில் உள்ள—குறிப்பாக அமெரிக் காவில் உள்ள இளைஞர்களில் ஆண்களும் பெண்களுமாகப் பலர் வாழ்க்கையில் அமை தியை இழந்து, நம் தாயகம் நோக்கி 'ஹிப்பி'களாக அமைதியை நாடி வருகிறார்கள். செல்வச் சிறப்பு மிகுந்த நாட்டிலிருந்தும் இவர்கள் சீர்கெட்ட நிலைக்கு ஏன் வந்தார்கள் என்று ஆராய்ந்தால். அந்த நாட்டில் நாகரிகம் என்ற பெயரால் பரவியுள்ள பல தகாத ஒழுகலாறுகளே காரணம் எனலாம். மேலும் இவர்களுக்குப் பெற்றோர் அன்பும், உற வினர் தொடர்பும்கூடச் சரிவர அமையாமற் போய்விடுகிற காரணத்தால் இந்நிலைக்கு ஆளாகிறார்கள். போதை தரும் L D S போன்ற மாத்திரைகளை விழுங்கித் தங்களை மறக்கின்றார்கள். தமிழ் நாட்டிலும் இப்போது கல்லூரியிற் பயிலும் சில இளைஞர்கள் கட்டுப்பாடற்றுத் திரிகிறார்கள். சில திரைப்படங்கள் அவர்கள் வாழ்க்கையைக் கெடுக் கின்றன. புகைப்பழக்கத்தோடு, குடிப்பழக்கமும் ஒரோவழிச் சில மாணவர்களிடம் காணப்படுவதாகச் சொல்கிறார்கள். இத்தகு தீமைகளினின்றும் மாணவர்களை விடுவிக்க வேண்டுமேயானால் அவர்களுடைய தாயின் பாசமும் பழக்கமும் கருணையும் கண்டிப்புமே அவர்களை மாற்றிச் செம்மையான பாதையிற் செலுத்தக்கூடும், எனவேதான் பெண்கள் புதிய நாகரிக உலகின் பொல்லாங்கைப் புரிந்துகொண்டு தீமையினின்று காத்து நன்மை யின்பால் செலுத்தும் நற்பணியில் ஈடுபடவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்கிறேன்,

எனவே நம் சமூகப் பெண்கள் உயர்கல்வியை உறுதியாகப் பயிலவேண்டும், தங்கள் பிள்ளைகளின் கல்வியைப் பற்றித் தாங்கள் முழுதும் அறிந்துகொண்டவர்களாக விளங்க வேண்டும்.

அடுத்து ஆணின் கடமையைக் காண்போம். செய்யும் தொழிலுள் நெய்யும் தொழிலே நேர்த்தி, திருவள்ளுவர் ஆற்றிய தொழிலே நெசவு என்றிருந்த செங்குந்தர் குடிப் பெருமக்கள் இன்று படிப்படியாகக் கல்வி கற்று அரசு அலுவலகங்களில் பொறுப்பான பதவிகளை வகிக்கிறார்கள். தங்கள் தொழிலுக்குத் துணையாகத் தங்கள் குடும்பத்தவர் அனைவரையுமே ஈடுபடுத்திய நிலைமாறித் தங்கள் பிள்ளைகள் வளமான கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தில் செங்குந்தர்கள் இன்று உயர்கல்வியில் உரிய கருத்தைச் செலுத்திவருவது உளம் உவக்கும் செய்தியாகும். இவர்கள் தங்கள் அலுவலகப் பணிகளோடு நின்றுவிடாமல் தங்கள் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தையும் அக்கறையையும் கவனிப்பதோடு, வெளியுலகில் அவர்கள் ஒழுகலாறுகள், நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன என்றும் காணுதல் வேண்டும், பாடநூல்களோடு பண்பாடு உணர்த்தும் நூல்களையும் கற்று, 'கைக்கோளர்''—'உயர்ந்த ஒழுக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டவர்கள்' என்னும் மொழிக்கேற்ப ஒழுக உறுதுணை சேர்க்க வேண்டும்,

அடுத்துச் செங்குந்தர் வழி வழி தெய்வ வழிபாடு — சிவசிந்தனையுடையவர்கள்; முருக வழிபாட்டினர், இந்தத் தெய்வச் சிந்தனை அவர்களோடு ஊழிதோறும் நிலைபெறவேண்டும், தேவார திருவாசகங்களைச் செங்குந்தர்கள் திருமறைகளாகக் கொண்டு நாள்தோறும் ஓதி வரவேண்டும். 'அன்புமிகுந்த தெய்வம் உண்டு: (கவலை) அத்தனையும் போக்கிவிடும்' என்றபடி செங்குந்தர் இறையுணர்வோடு வழிபாட்டு நியமத்தோடு வாழவேண்டும், இவ்வாறு வாழ்ந்து வந்தால்தான் எண்ணியது முடியும், இயற்றியது நிலைக்கும்,

கோலமுருகன் 'ஞாலமளந்த மேன்மைத் தமிழ்க்கடவுள். தமிழ்நாட்டில் நான்கில் ஒரு தமிழாசிரியர் செங்குந்தர்கள். ஒட்டக்கூத்தர் தொடங்கி இன்றுவரை பெரும் புலவர் பலர் இம்மரபில் உளர். தொடக்கப்பள்ளி தொடங்கிப் பல்கலைக் கழகங்கள் வரையில் இவர்கள் பெரும் பொறுப்புகளில் இருந்துவருகிறார்கள். இம் மரபினர்க்கு வழிவழியாக வாய்ந்த புலமை தமிழ்ப்புலமை. இந்நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் **பாரதிதாசன்** நம்மவர்; இணையற்ற பேச்சாளர் திருப்பாதிரிப்புலியூர் **ஞானியார் சிவாமிகள்** நம்மவர். இப்படிப் பட்டியலை நீட்டிக்கொண்டே செல்லலாம். 'மறைவாக நமக்குள்ளே பழம் பெருமை' பேசிப் பயனில்லை. புதிய சாதனைகள் தேவை.

எனவே செங்குந்தர் இனம் ஒன்றுபடவேண்டும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே; ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே' என்பதை நன்கு நினைவில் நிறுத்த வேண்டும். 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' எனக்கொள்ளவேண்டும். **நமக்குள்ளே பிரித்துப் பிரித்துப் பேசி ஒருவருக்கொருவர் பிணங்கியும் பேதமை கொண்டும் வாழும் வாழ்வு தீரவேண்டும்,** பிணக்குகளை நீக்கி இணக்கமான வாழ்விற்கு வழிகோல வேண்டும், ஒருவர்க்கொருவர் உதவி உயரும்—உயர்த்தும் மனப்பான்மை பெற வேண்டும், இவ்வாறெல்லாம் நாம் சமுதாய வுணர்வோடு தயங்காது தளராது பாடு பட்டால், 'துன்பங்கள் நீங்கிச் சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை உண்டாகிவிடும்!!.

எனவே என்னரும் இனத்தவரே, எழுமின்! விழிமின் ! ஒன்றுபட்டு உறுதியுடன் இணைமின்! இறையருளால் வெற்றிபல ஈட்டலாம் விரைந்து!

அந்த நாளும் வந்திடாதோ

(தி. சே. பழநிவேலு, செயலர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்)

தெருவிற்கு ஒரு மன்றம், கிராமத்திற்கு நான்கு சங்கங்கள் என்று நாடெங்கும் மன்றங்களும், சங்கங்களும் மலிந்து கிடக்கின்ற இந்தக் காலத்திலே, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு மட்டும் தனிச் சிறப்பு என்ன வந்துவிட்டது? என்று கேட்கின்றவர்கள் உண்டு.

பொன் விழா ஆண்டை நெருங்கிக்கொண்டிருக்கும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சமுதாய மறுமலர்ச்சிக்கும், சமயத்திற்கும், மொழிக்கும் நல்ல பல பணிகள் ஆற்றியிருக்கின்றது என்பது மட்டுமன்றி, வரலாற்று அடிப்படையில் அறிஞர்களும், பெருமக்களும் ஒன்று சேர்ந்து உருவாக்கியது இந்தச் சங்கம்.

கைக்கோளப் பெரும் படைக்குச் சோழப் பேரரசில் இருந்த செல்வாக்கைப்பற்றி- கைக்கோளப் பெரும் படையினர் நாட்டிற்கு ஆற்றிய நற்பணிகள் பற்றி வரலாற்றுச் சுவடிகளும், கல்வெட்டுகளும் பெரிதும் புகழ்ந்து பேசுகின்றன. சேனை தலையாக்கி, செங்குருதி நீர் தேக்கி, ஆனை மிதிக்கும் அருஞ் சேறும் போர்க்களத்தில், பகைவர்களின் முடிகளை நடுவதற்காக, குத்துவாளாகிய செங்குந்தத்தைக் கையிலேந்தி "வேல் வேல் வெற்றிவேல், வீர வேல் வெற்றி வேல்'' என்று பெரு முழக்கம் செய்து கொண்டே, போர்க்கள மெல்லாம் புலியெனப் பாய்ந்து, திக்கெட்டும், வெற்றி, முரசு கொட்டிய கைக்கோளப் பெரும் படையும் முன்னணி வீரர்களும், முது பெருந் தலைவர்களும், சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு ஒன்று கூடினர்கள். ஆழ்ந்து சிந்தித்தார்கள், அருமையான அறுவகை முடிவுகளை உருவாக்கினர்கள்

அவை இவை :-

(1) போர்த்தொழிலை விட்டொழிப்பது.

(2) செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை என்ற சீரியதொரு முடிவுக்கு வந்து, அந்தத் தொழிலையே, தங்கள் வாழ்வின் வளம் பெருக்குந் தொழிலாக மேற்கொள்வது.

(3) சோழப் பேரரசிற்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் வாழ்ந்து வந்த நிலையை மாற்றிவிடுவது.

(4) வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பிரிந்து சென்று வாழ்வது.

(5) பிரிந்து சென்றாலும், தங்களிடையே அன்றுவரை நின்று நிலவிய சமூக ஒற்றுமை கெடக்கூடாது என்ற பெருநோக்கத்துடன், தாங்கள் பிரிந்து சென்று வாழப்போகும் பகுதிகளை, ஒவ்வொன்றும் 18, 18 கிராமங்களை உள்ளடக்கிய 72 கிளை நாடுகளாகப் பிரித்துக் கொள்வது. இந்த 72 கிளை நாடுகளையும் 18, 18 கிளை நாடுகளை உள்ளடக்கிய நான்கு திசை நாடுகளாகப் பிரித்துக்கொள்வது.

(அ) கிழக்குத்திசை நாடு — சிவபுரம் நாடு.

(ஆ) மேற்குத்திசை நாடு — திருவிரிஞ்சைபுரம் நாடு.

(இ) தெற்குத்திசை நாடு — தொந்திபுரம் நாடு.

(ஈ) வடக்குத்திசை நாடு — சோள சிங்கபுரம் நாடு.

(6) மேற்கண்ட எழுபத்திரண்டு கிளை நாடுகளை உள்ளடக்கிய நான்குதிசை நாடுகளுக்கும் தலைநாடாக மாநாடு என்ற தலைமை நிலையில் இருப்பதற்குக் கற்றவர் மலிந்த காஞ்சீபுரத்தைத் தேர்ந்தெடுப்பது.

அறுமுகனின் அடியவர்கள், நாள்தோறும் "வேல் வேல்" என்று முழங்கிய வீரபாகு பரம்பரையினர், இந்த அருமையான ஆறு முடிவுகளை எடுத்து, நாடெங்கும் பிரிந்து சென்று அமைதியுடன் வாழத் தலைப்பட்டார்கள்.

நாம் என்றென்றும் ஒற்றுமையுடன் வாழ வேண்டுமென்ற பெருநோக்கத்துடன், நம் மூதாதையர்கள் வகுத்துத் தந்த, இந்த அரும் பெரும் சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டம், நாளடைவில் உருக்குலைந்து, சீர்குலைந்து போயிற்று. ஒவ்வொரு கிளை நாட்டாரும், தாங்கள் தான் அசல் செங்குந்தர்கள் என்ற போலிக் கௌரவம் கொண்டதுமன்றி, மற்ற கிளை நாட்டாரைத் தாழ்த்தித் தரக்குறைவாகப் பேசவும் தலைப்பட்டார்கள். இதன் காரணமாகத் தெற்குத்திசை நாடாகிய தொந்திபுரம் நாட்டைச்சார்ந்த திருமருகல் நாட்டுச் செங்குந்தருக்கும், திருநாகேஸ்வரம் நாட்டுச் செங்குந்தருக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் போய்விட்டது.

இவ்வாறு ஒருவருக்கொருவர் அறிமுகம் இன்றி, எவ்விதத் தொடர்பும் இன்றி, நாடெங்கும் சிதறுண்டு கிடந்த எழுபத்திரண்டு கிளை நாட்டுச் செங்குந்தர்களையும், தாங்கள் பழம் பெருமை மிக்கதொரு பாரம்பரியத்தின் வாரிசுகள் என்பதை உணரச் செய்வதற்கென்றே உருவாக்கப் பட்டது தான் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

தென்னிந்திய மகாஜன சங்கம் துவங்கப்பெற்ற ஆரம்ப காலங்களில், கிராமங் கிராமமாகச் சென்று, பட்டி தொட்டிகளெல்லாம் பரிந்து சென்று பணியாற்றிய பெருமக்கள், கிராமங்களில் நிலவிய கட்சி வேறுபாடுகளைக் கண்டு வேதனைப்பட்டார்கள். அற்ப விஷயங்களுக்கெல்லாம் அடித்துக் கொண்டு, தறியின் பேரிலும், தலைக்கட்டின் பேரிலும் தண்ட வரி விதித்து,

வழக்காடியும், வாய்ச்சண்டை போட்டும், தங்கள் சக்தியையும், ஆற்றலையும், செல்வத்தையும் சிதற அடித்துக்கொண்டிருந்ததை மாற்றுவதற்கு அரும் பாடு பட்டார்கள்.

ஆனல், இன்று அதிகம் படித்து, அனுபவங்கள் பலபெற்று, செல்வத்துடன், செல்வாக்குடன், சீருடன் வாழ்கின்ற, நகர வாழ்வின் பல துறைகளிலும் முன்னணியில் நிற்கின்ற நம்மவரிடையே ஒற்றுமை மிகவும் குறைந்து காணப்படுவதைக் கண்டு, கண்ணீர் விடவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நாம் உள்ளோம் 1920ல் நாலுகாசைப் பார்த்தவர், 1950ல் நாலு காசைப் பார்த்தவரை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதில்லை தனக்கும் மற்றவனுக்கும் முப்பது ஆண்டுகள் தான் இடைவெளி இருக்கின்றது, முப்பது தலைமுறைகள் முடிந்துவிடவில்லை என்பதை உணராதது மட்டுமல்ல, முப்பது ஆண்டுகள் முந்தியவர், முப்பது ஆண்டுகள் பிந்தியவரை மட்டமாக மதிப்பதுமட்டுமல்ல, துட்டமாகத் தூற்றிப் பேசுவதும், புறம் பேசுவதுமான புனிதமான பணியில் ஈடுபடுவதுமட்டமல்ல, மற்றவன் அறியாமலேயே அவன் காலை வாரிவிடும் திருத்தொண்டைச் செய்வதை ஒரு கலையாகவே வளர்த்துக் கொண்டிருப்பதையும் காண்கிறோம். அவன் நம்மவன், அவன் நல்லவன், அவன் வல்லவன் என்று வாயாரப் பாராட்ட வேண்டாம். அவன் வளர்ந்து கொண்டிருக்கிறானே! எங்கே அவன் நம்மை மிஞ்சிவிடுவானோ என்ற மன உளச்சல் கொண்டு, வயிற்றெரிச்சல் படுவதில் யாருக்கு என்ன லாபம்?

மற்ற சமூகத்தவர்கள் எப்படி எப்படி வாழ்கின்றார்கள்! கீழே இருப்பவனை, மேலே தூக்கி விடுவதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டு பணியாற்றும் பெருமக்கள் எத்தனை எத்தனை! தன் சமூகத்தில் ஆற்றல் உள்ளவனைக்கண்டால், அறிவு நலம் படைத்தவனைக்கண்டால், முன்னேறத் துடிக்கும் ஒருவனைக்கண்டால், அவனுக்கு ஆதரவு அளிப்பதற்கென்றே நிதிகள் சேர்தது வைத்துக் கொண்டிருக்கின்ற, திறமை உள்ளவர்கள் எப்போது கண்ணில் படுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற பெருமக்கள் கூட்டம் நிலைந்திருப்பது, நம்மவர் கண்களில் எங்கே படப் போகின்றது?

இத்தகைய அவல நிலையை மாற்றி மறு கோலஞ் செய்யும் பெரும் பணியாற்றவல்ல, உள்ள உறுதிபெற்ற இளைஞர் கூட்டத்தைத்தான், நம் சமுதாயம் எதிர் நோக்கி நிற்கின்றது

அநீதியை ஒழித்து. நீதியை நிலைநாட்டுவதற்கு எதையும் தியாகம் செய்யத் தயங்காத, நெஞ்சுரம் பெற்ற இளைஞர்கள், அவர் சொன்னர், இவர் சொன்னர் என்று அரண் அமைத்துப் பதுங்காது, எவர் எப்படிச் சொல்லியிருந்தால் எனக்கென்ன? என் கருத்து இது! என்று எடுத்துச் சொல்லும் திறம்பெற்ற திண்ணிய நெஞ்சினர் நம்மிடையே பெருகவேண்டும். அவர்களால் தான், ஆணவத்தை இடிப்பொடித்து, ஈன வாழ்வை உருக்குலைத்து, ஊரார் எண்ணத்திலே புதிய முறுக்கேற்றி. ஐயம் அகற்றி. ஒப்பற்ற வெற்றியைக் காணமுடியும். அத்தகைய வெற்றித்திருநாளைக் கண்ணாரக் காணக்கூடிய, அந்த நாளும் வந்திடாதோ!

— x —

குமணன் வழிக் குலப் பெருமை

புவனை நாட்டில் உள்ள திரு ஆரூரில் செங்குந்தத் தலைவர்கள் அரச செல்வத்தோடு வாழ்ந்து வந்தனர், அவர்கள் ஆலயம் சம்பந்தமாகப் பற்பல கட்டளைகளை ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வருகை தந்த கவிச்சக்ரவர்த்தி ஒட்டக் கூத்தரை சிறப்புடன் வரவேற்று உபசரித்தனர். பின்பு அவர்கள் ஒட்டக்கூத்தரை நோக்கி ''நீங்கள் நமது குலத்தின் மீது நம்குலச் சிறப்புக்களை — பெருமைகளை எல்லாம் விளக்கி பிரபந்தம் பாடுங்கள் என வேண்டினர். அதற்கு ஒட்டக்கூத்தர் ''நம் குலப் பெருமைகள் பாடும் நூல்கள் பல உள்ளன; எனவே தனித்து ஒரு பிரபந்தம் பாடவேண்டுவதில்லை'' என மறுமொழி பகர்ந்தனர். இதனைக் கேட்டும் செங்குந்தத் தலைவர்கள் புலவரைத் தனித்துப் பிரபந்தம் பாடுமாறு வற்புறுத்தினர். அவர்கள் வற்புறுத்தலைக் கேட்ட கூத்தர் நமது பெருமையை நாமே பாடிக்கொள்வது அழகன்று; நம்மினும் உயர்ந்தவர் ஒருவரால் பாடுதலே அழகு'' எனக் கூறிச் சென்றார். இதனால் மனக்கொதிப்படைந்த செங்குந்தத் தலைவர்கள் ஆயுதங்களைக் கொண்டு ஒட்டக் கூத்தரைத் தாக்கிக் கொன்று விட முற்பட்டனர். அப்போது கூத்தர் தமது ஒரு சாவா மாணுக்கராகிய சோமாசி யாண்டார் வீட்டில் தங்கியிருந்தார். செங்குந்தத் தலைவர்கள் ஆயுதந்தாங்கி வந்ததைக் கண்டு மனம் நடுங்கிய சோமாசியாண்டார் ஒட்டக்கூத்தரைக் காட்டிக் கொடுக் மனம் இசையவில்லை. எனவே தமது புதல்வனைப் பேழையுள் இருத்தி மூடிக் கொண்டு வந்து தலைவர்களிடம் தந்து ''இதனைத் திறவாது சென்று சூரிய அஸ்தமமான பின் திறந்து உங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்'' என்று கூறினர். அவ்வாறே செங்குந்தத் தலைவர் செய்ய பேழையுள் புலவருக்குப் பதிலாகச் சிறுவன் இருப்பதைக் கண்டு பயந்து, சோமாசியாகியாண்டார் வீடு வந்து சேர்ந்தனர்.

அவர்களைப் பார்த்து ஒட்டக்கூத்தர் ''நான் நம் குலப் பெருமை குறித்து விளக்கமாக ஒரு தனி பிரபந்தம் பாடவேண்டுமானல் நீங்கள் உங்கள் வீரத்தைக் காட்டும் முறையில் தலைகளை அரிந்து சிம்மாசனம் அமைத்துத் தந்தால் அதன் மீதமர்ந்து பாடுவேன்'' என்றார். இதனைக்கேட்ட செங்குந்தத் தலைவர்கள் அனைவரும் திடுக்கிட்டு மனம் நடுக்குற்றனர். அப்போது கூத்தர் தலையரிந்து தருவது நம் குலத்துக்குப் புதிய

தன்று; நமது குமணன் தன் இளவலுக்காகத் தலையையரிந்து தந்தான்; வல்லான் ஒருவனை வெல்ல நம் முன்னோர் தங்கள் தலைகளை அரிந்து கொடுத்துள்ளனர்'' என்று கூறினர்.

இவையனைத்தையுங் கேட்ட ஆவூர்ச் செங்குந்தத் தலைவர்கள் உற்சாகம் கொண்டவர்களாகி எல்லாரும் ஒருமனதாகச் சம்மதித்து ஆயிரத்தெண்மர் தலைகளை யரிந்து சிம்மாசனம் அமைத்துத் தந்தனர்.

புலவர் பெருமான் அச் 'சிரசிங்காதனத்தின், மீதமர்ந்து செங்குந்த குலப் பெருமைகளை விளக்கி 'ஈட்டி' எழுபது என்னும் நூலைப் பாடியருளினர்.

பின்பு புலவர் 'எழுப்பெழுபது' என்னும் நூலைப் பாட சிங்காதன உருவமாய் அமைந்திருந்த தலைகள் யாவும் கூட்டம் கூட்டமாய் மேலெழும்பி ஆகாய வழியே சென்று ஆங்காங்கு உள்ள தத்தம் உடல்களில் ஒட்டிக் கொண்டன. தலையரிந்து தந்த தறுகணாளர் உயிர் பெற்று எழுந்தனர்.

ஆதாரம்: செங்குந்தர் பிரபந்தத் திரட்டு.

தொகுப்பு: **ந. சண்முகானந்தன்,**

T. ஜெகதீசன்.

மலர்க்குடி.

''செங்குந்தர் புகழ் கூறும் ஒரு செப்பேட்டினைத் தந்து உதவியவர் ஊமையாம்பட்டி கவிஞர் ந. கந்தசாமி, ராசிபுரம் அவர்கள். செப்பேட்டினைப் பிரதி எடுத்து உதவியவர் தமிழகக் கல்வெட்டறிஞர் களுள் குறிப்பிடத்தக்கவரான கல்வெட்டறிஞர் ஈரோடு புலவர். செ. இராசு. அவர்கள்.

எங்கெங்கு காணினும் சக்தியடா !
ஏழுகடல் அவள் வண்ணமடா !

மனக்குறை தீர்க்கும் மாரியம்மன் ஆலயங்கள்

பண்ணாரி மாரியம்மன் (சத்தியமங்கலம்)



பாரியூர் மாரியம்மன் (கோபி)

வீரம் + தியாகம் = செங்குந்தர்



சென்னிமலை

அவினாசி

கண்ணைக் கவரும் சிற்பங்களின் கருத்தைக் கவரும் விளக்கங்கள்.

தலை ஈந்த தறுகணாளர்

வல்லவன் என்பவன், வடநாட்டிலே நல்லூர் என்னும் நகரத்திலிருந்த 'போகன்' என்னும் இரட்டனுக்கு புத்திரனாகப் பிறந்தவன். சிவபெருமானை நோக்கிப் பெருந்தவம் கிடந்து பல அரிய வரங்களைப் பெற்றான், ஊரூராகச் சென்று அங்கங்கே பலநாள் வசித்துக் கடைசியாகத் தென்னாட்டிலே கடம்பூர் வந்து சேர்ந்தவன். ஆழ்ந்து அகன்ற அகழின் மத்தியில் இருப்புத்தம்பம் நாட்டி அதன்மேல் கட்டிய கோட்டையில் வசித்துவந்தவன்; அரசர்களுக்கும் குடிகளுக்கும் மற்றைய உயிர்களுக்கும் துன்பமே செய்துவந்தவன், தஞ்சை வேம்பனை மந்திரியாகக் கொண்டு சோழ நாட்டை யாண்டுவந்த பாராந்தகச் சோழன் ஆட்சிக்கு அஞ்சாத நெஞ்சமுடையவன் 'அனங்க வல்லி' என்னும் கற்புக்கரசியின் மணவாளன்.

இவன் நாளும் செய்துவரும் அநீதங்களைப் பாராந்தகச் சோழன் கேட்டுணர்ந்தான். உடனே வீரர் வீரனாகிய பழுவை வீரன் முதலிய பன்னிருவர்களால் அவனுடைய இறுமாப்பை அடக்கப் பாராந்தகன் முயன்று வந்தான். பழுவூர் வீரன் முதலிய பன்னிருவரும் பாராந்தகச்சோழன் விருப்பப்படி ஒன்று கூடித்தாங்கள் வல்லானை வென்றுவருவதாக அச்சோழன் சபையில் சபதஞ் செய்து கொடுத்தனர். அப்போதே அவ் வீரர்கள் பன்னிருவரும் படைக்கோலத்துடன் வல்லான் இருக்குமிடஞ்செல்லப் பிரயாணமாயினர். அவர்கள், அப்பொழுது "நமக்குள்ளே யாரேனும் ஒருவர் இறந்துபடின் மற்றையரும் உயிர்வாழ்வதில்லை என்று கட்டுப்பாடு செய்துகொண்டனர்.

பின்னர்; இப்பன்னிருவருள் கச்சித்தனியன் தூகாதேவிக்கும், ஒன்றியூரான் காளிதேவிக்கும் பலியாயினர். முதுகுன்றமணியனும் கோளந்தகனும் தாமே உயிர்நீங்கி அகழியைக் கடக்கும் தெப்பக் கருவியாயினர். புள்ளிடங்கொன்டான் செந்நாய்களுக்கும், களந்தையான் புலிக்கூட்டங்களுக்கும், புலியூர்ப் பள்ளிகொண்டான் சிங்கங்களுக்கும், பசிப்பிணி யொழியத் துணிந்து ஆகாரமாயினர். பிணைவன் தன்னுயிரைவிட்டு அக்கினியாற்றை மற்றவர் கடந்து செல்ல தெப்பமாயினன். கண்டியூரன் ஏரியிலுள்ள முதலைகட்குத்

தனது மாமிசம் உணவாயும், அவ்வேரியை கடந்து செல்லத் தோல் துருத்தியாகவும் உபயோகப்பட உயிர் துறந்தான். தஞ்சை வேம்பன் வழுவழுப்பான தம்பத்தில் மணலும் இரத்தமும் பூசி மற்றிருவர் ஏறிச்செல்ல துணிந்துயிரைக் கொடுத்தான். எஞ்சிய பழுவை வீரன் நாராயணன் என்னும் இருவரும் அத்தம்பத்தின் மேலேறி சென்று வல்லான் மார்பை யிடமாகக் கொண்டார் அப்போது அவன் செயலற்றிருந்தான்;

இப்பால், அதுகண்ட வல்லான் மனைவியாகிய அனங்கவல்லி அம்மையார், தனது கணவனைக் கொல்லும்படி அவன் மார்பிலே ஏறித் தங்கியிருந்த வீரரைப் பார்த்து, "மாங்கல்யப் பிச்சை வேண்டும்" என்று முந்தானையை கையிற்கொண்டு நின்றனள். உடனே வீராராயணர் இருவரும் அவள் விரும்பியபடியே மாங்கலியப் பிச்சை கொடுத்தருளி, வல்லானுக்கு வேண்டிய நல்லறிவு புகட்டி, அவனை அவன் பிறந்த ஊருக்குப் போகும்படி கட்டளையும் கொடுத்தனர். பிறகு வல்லானும் அவன் மனைவியும் அவ்வீரர்கள் இருவரையும் வணங்கிச் சந்தோஷத்துடன் தங்களூரைப்போய்ச் சேர்ந்திருந்தார்கள். ஜெயங்கொண்ட வீரநாராயனர் இருவரும் வல்லான் கோட்டையை அக்கினிக்கிரையாக்கி அங்கிருந்து புறப்பட்டுப் பாராந்தகச் சோழன் நீதிமன்றம் வந்து சேர்ந்தனர்,

அப்போது பாராந்தகச்சோழன் அவ் வீரநாராயணரைப் பார்த்து "என் பகைவனாகிய விக்கலன் தலையை எவ்வாறு கொய்தீர்கள்" என்று கேட்டான், உடனே அவ்வீரர் இருவரும் "இவ்வாறுதான் வெட்டினோம்" என்று தங்கள் தலைகளை வெட்டி வீழ்த்தினர். அதுகண்ட பாராந்தகச் சோழன் 'இப்பழி நம்மையே சாரும். ஆதலால் நாம் உயிரைப் போக்கிக் கொள்வதே நீதியாம்' என்று உடைவாளைக் கையிலே எடுத்தான் அத்தருணத்திலே முருகக்கடவுள் எழுந்தருளிவந்து அவன் கையைப் பிடித்துக்கொண்டு "மன்னவனே உன்னுற் சரீரம் நீங்கி உயிர்விட்டவர்கள் பிழைப்பார்கள்; நீசிறிதும் அச்சமுறுதே" என்று திருவாய் மலர்ந்து பரவெளியில் மறைந்தருளினர் அப்போது மெய்த்தலைக் கொடுத்த வீரர்கள் பதின்மரும் உயிர் பெற்றெழுந்தார்கள், பின்னர்ப் பாரந்தகச் சோழன் அவ்வீரர்களுக்கெல்லாம் தனித்தனியே வரிசைகள் பல வழங்கி, அவரவர்கள் ஊருக்கெழுந்தருளும்படி செய்வித்துத் தான் தஞ்சையில் வாழ்ந்திருந்தான். வல்லான் என்னும் இரட்டனை வென்ற பன்னிரு வீரர்களும், முருகக்கடவுள் திருவருட்டிறத்தினை வாழ்த்தி வணங்கித் தங்கள் தங்கள் இருப்பிடஞ் சென்றடைந் திருந்தார்கள்.

ஆதாரம்: செங்குந்தர் பிரபந்தத்திரட்டு.

தகவல். ந. சண்முகானந்தன்,
தி. ஜெகதீசன்.
(மலர்க்குழு)

WITH BEST COMPLIMENTS FROM:-

ESTD. 1951. PHONE: 32 P.P.

PUTHU TEX

Handloom Fabrics

OUR PRODUCTS

Latest Designs **Strong and Durable**

- **BED-SPREADS,**
- **TOWELS**
- **PILLOW COVERS**
- **SPL. DHOTHIES**
- **GADA PIECES**
- **SPL. JAQUARD BEDSHEETS**
- **AND ALSO POWERLOOM PRODUCTS**

The Punjai Uttukuli Weaver's Co-operative Production & Sale Society Ltd., No. A. A. 74

UTTUKULI. R. S. (Erode Taluk)

N. B:- Our Goods are Available in all Co optex Units and All India Handloom House.

K. G. P. ARUMUGHAM
President.



சொல்லல்ல, செயலே!

அ. பூரணநாருயணன், அனுப்பானடி.

செங்குந்தச் சிரோன்மணிகளே!

வணக்கம். இரண்டு தலைமுறைகளுக்கு முன் நம் சமூகம் சிறிதேனும் சிறப்புப் பெற்றிருந்தது. ஏன் அச்சிறப்பு இன்றில்லை. மீண்டும் அச்சிறப்பினைப் பெற நாம் என்ன செய்தல் வேண்டும்? பழம் பெருமையினை பேசுவதிலும், பஞ்சாங்கம் பார்ப்பதிலும் காலத்தையும், கவனத்தையும் வீணுக்காமல் காரியத்தில் கொள்ளல் வேண்டும். விஞ்ஞானம் விரைந்து முன்னேறி அதன் பயனை அனைவரும் பெற்றுவரும் இந்நாளில் பழமையைப் போற்றுவதற்குப் பணச் செலவு செய்வது நிறுத்தப்பட வேண்டும். வான மண்டலத்தில் குடியேறி குடும்பம் நடத்தலாமா என முயற்சி செய்யும் இக்காலத்தில் உயர்வு தாழ்வு பேசி உதவாதிருந்திடல் அழகுமல்ல, அறமுமல்ல. மனிதனின் அறிவினுல் வளர்கின்ற ஆராய்ச்சிகளும், அதன் பயன்களும் அதிகமாகின்ற இக்காலத்தில் நாம் பழமையான வீர தீரச் செயல்களைப் பேசிக்கொண்டிருப்பது சமூகத்திற்கு எவ்விதத்திலும் பயன் விளைவிக்காது.

அதற்குரிய ஆக்கப் பணியில் முதல் வேலை, நம்மவர் கல்வியில் முன்னேற உடனடியாக வழி செய்தல் வேண்டும். நாடு முழுவதும் நம்மவரின் குடிமைக் கணக்கினை எடுத்தாக வேண்டும். அதில் நம்மவர் அலுவல், வாய்ப்பு, வசதி முதலியன குறிக்கப்பட வேண்டும் தமிழ் நாட்டிற்குள்ளே வாழும் நம இனத்தவருக்குள், குறிப்பாக திருமணத் தொடர்புகள் பரந்த அளவில் செய்தல் வேண்டும். ஒரே மாவட்டத்தில் வாழும் மக்களில் பக்கத்து ஊரில் கூட பெண் எடுக்க, கொடுக்க எண்ணத் துணியாத நிலை இன்றும் இருப்பதை மாற்றியாக வேண்டும். அத்துடன் திருமணத்திற்கு உபயோகிக்கப்படும் தாலி சிறிது, பெரிது என்றும் லிங்கம், பிறை போன்றும் இருப்பதை ஏதேனும் ஒன்ருகக் கொள்ளுதல் வேண்டும். மேலும் விதவைப் பெண்கள் ஒரு பகுதியில் வெண்ணிர ஆடை தரித்தும் மறு பகுதியில் வண்ண உடை தரித்தும் இருப்பதை நீக்கிடுதல் மிகவும் அவசியம் இளம் விதவைகளை இன்றும் கூட திருமணம் செய்வித்தலைத் தடுப்பதும் கண்டிப்பதும் நிறுத்தப்பட்டு அவர்களின் வாழ்வுக்கு நம்மவர் உடனடியாகப் பாடுபடுதல் வேண்டும். வீட்டிலுள்ள பெண்கள் வீட்டு அலுவல் முடிந்தவுடன் ஏதேனும் ஓர் வகையில் சிறு ஊதியம் சேர்த்திடவும், பெண்களுக்கோர் சிறிய அமைப்பினை ஏற்படுத்தி அவர்களை ஆக்கப்பணி செய்ய ஊக்கப்படுத்துதல் வேண்டும்.

''இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்னும் நம் நாயனுர் நவின்றபடி கொடையுள்ளம் கொள்ளுதல் வேண்டும்.

அரை நூறு ஆண்டுகளுக்கு முன்னேயே அருமைமிகு திட்டங்களையும் தீர்மானங்களையும் தீட்டினேம். அவையெல்லாம் ஏட்டளவில் உள்ளனவே தவிர, நாட்டிலுள்ள நம் மக்கள் நலிவு நீங்கி நலம் பெற நாமென் செய்தோம். அழகான திட்டமதை காகிதத்தில் வரைந்திடவும் நமக்கிணை தானுண்டோ? கருத்ததனில் கடுகளவும் நினைப்பது தானுண்டோ? குலமதுவின் கஷ்டம் நீங்க இஷ்டப்படுவதில் ஈடு இணை நமக்குண்டோ? புரட்சிக் கருத்துக்களைக் கூறுவதும், அதைப்பார்த்து மற்றவர் புளகாங்கிதம் கொள்வதைக் கண்டு களிப்பதையும் கைக்கொண்ட கோலரன்றே நாமெல்லாம்!

'' சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணம் செயல் ''

என்னும் தெய்வப் புலவர் செப்பியதற்கொப்ப, மழையளவு செய்வோமெனச் சொல்லுவதைக் காட்டிலும் மடுவளவேனும் செய்தல் மேலானது.

செயல் செயலென்றே செய்வதற்கு செங்குந்தரில் எவரேனும் உண்டோ? அசுரர்கள் கூட பெறற்கரிய ஆற்றல் பெற்றனர் என்றால் அவர்களின் தியாகச் செயலினல் அன்றே? அதுபோல் நம்மவர் அசுரப்பிரியத்தனம் செய்தாலன்றி செம்மையும், சீரும், சிறப்பும் பெறுவதென்பது நினைக்கத்தான் முடியும்; அனுபவிக்க முடியாது.

அறுமுகன் நமக்களித்த அருந்தொழில், அருமை மிகு நம் வள்ளுவன் செய்தொழில் செங்குந்தர்க்கே சிறப்புப் பெற்ற சீரிய தொழில் நெய்தலன்றே! அன்றொரு நாள் அவன் புகழ் நாகரிகத்தின் பிறப்பிடமாம் ரோமாபுரி. அங்குள்ள அரசரும் ஆன்றோரும் அருமைத் தமிழ் நாட்டின் அழகுமிகு ஆடைகளை அணிந்து அழகு பெற்றனராம் அன்றிருந்த நம் பெரியோர், ஆரூரில் அவதரித்த அண்ணல், வள்ளல் பெருந்தகை சபாபதி முதலியார் அவர்களின் அரும் பெரும் முயற்சியால் நம் கைத்தறி நெசவுக்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் கைத்தறியில் தயாரித்த துணிகளை இலங்கைக்கும், பர்மாவுக்கும் இன்ன பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து நம்மவரின் இன்னல் நீக்கிடவும், தொழிலினைச் சிறப்பிக்கவும் சீரிய பணி செய்தார்கள். அன்னாருக்குப் பின் நம்மினத் தலைவர்கள் எவரும் அதற்கு மேலும் ஊக்கப்படுத்தாமல் சோர்வுற்றதனால் நம்மவர் இன்று நிலை குலைந்து நிற்கின்றனர். கை நெசவுத் தொழிலாளிக்கு கதியேதும் இல்லாமல் காலமெல்லாம் கலக்கம்தானா? அழகுமிகு ஆடை நெய்யும் அருமை மிகு நெசவாளனை ஆதரிக்க யாருமில்லையா?

அன்றிருந்த இளைஞரெல்லாம் அரிய பணி செய்தார். ஆயிரவர் சிரமறுத்தீந்தார், செங்குந்தர் சிறப்பினைச் செப்புதற்கு! இன்றிருக்கும் இளைஞர்களே! என்ன பணி உம்முன்? எஃகு உள்ளம் கொண்ட எம் இளமைச் சிங்கங்களே! ஏற்றம் பெற எத்துணை திட்டமதை எடுத்து வருகின்றீர்? அத்தனையும் செயல்படுத்தி அகமகிலும் ஆற்றலுண்டு உமக்கேதான்! அரசியலில், அறிவியலில், பொருளியலில், சமுகத்தில், கல்வியில், தொழில் துறையில், அறத்தினில், ஆற்றலில், தொண்டினில் அனைத்திலும் உம்மோடு நம்மவரை உயர்த்துதற்கு உம் பணியும் என்ன? வினவை எழுப்பி விட்டேன்; விடையோடு வீரநடை போட்டு வா! மனத் தடையினைத் தூளாக்க தொடை தட்டி வா! செயல்படை ஒன்று புடை சூழ பவனி வா! நானை நாமாக்கி, நாமை என்றாக்கி நலத்தை பொதுவாக்கி குலமுயர்த்த வெற்றிக்கொடிபிடித்து வா! வீரியத்தை விட்டு காரியத்தைச் செய்வோம் வா! ஜம்பத்தைக் காட்டாது உம்பரை உயர்த்துவோம் வா! உந்தன் கற் கண்டுத் தமிழாலே சொற்கொண்டு வா! குந்தன் பொற்கொண்டு வாழ்வதற்கு நற்றுணையுண்டா! வா!

உழைப்புக்கும், நேர்த்திக்கும் நாளைய நாகரீகத்துக்கும்
ஏற்றவகையில்

உங்கள் எண்ணங்களுக்கேற்ப 260 வண்ணங்களில்
1001 வடிவங்களாக

பாலிஸ்டர் இழையால் தயாராகும்

மதுரா பேப்ரிக்ஸ்

**சூட்டிங் மற்றும் ஷர்ட்டிங் துணிகளையே எப்போதும்
வாங்குங்கள்**

கிடைக்குமிடம்

V. V. C. R. முருகேச முதலியார் & சன்ஸ்,

27, கன்னாரத்தெரு,

செவ்வாய்பேட்டை.

சேலம்-2.

முழுவினியோக உரிமையாளர்கள்

சேலம், தர்மபுரி, கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.

தென்னிந்திய செங்குந்தர் சமூக மாநாட்டிற்கு எங்கள்
உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

சீரோடும் சிறப்போடும்

ஈரோடு மாநகரில் நடக்கும் 13-வது செங்குந்தர் மாநாட்டிற்கு வரும் செங்குந்தர் குல திலகங்களையும் அறிஞர் பெருமக்களையும் வருக வருகவென வரவேற்கிறோம்.

பாவேந்தர் தொழிற் பொறியியற்கூடம்,

(பாவேந்தர் இரும்புத் தொழிற்சாலை)

59-**B I, R. K. V.** பாதை.

ஈரோடு-638001.

தொலை பேசி : 5565

அஞ்சல் பெட்டி எண் 511

தயாரிப்பாளர்கள் :-

டிரஸ்ஸர்கள், கிராதிகள். கிரில். பால்கேன்,

விவசாயச் சாமான்கள் மற்றும்

ஸ்பிரிங்கேட் முதலியன.

" குடி செய்வலென்று மொருவர்க்குத் தெய்வ
மடிதற்றுத் தான் முந்துறும் "

என்னும் தெய்வப் புலவர் திருவள்ளுவரின் அருள்வாக்கிற்கொப்ப குடி உயர்த்த வா !

செயல் திட்டம் :

சிதறிக்கிடப்பாரைச் சேர்த்திடுதல், பொது நிதி சேர்த்தல், கல்வி மேம்பாடு, தொழில் அபிவிருத்தி, தொழிலாளர் நலம், பிரச்சாரம், வேலை வாய்ப்பு, பொது இல்லம் அமைத்தல், நல்லார்க்கு விழா எடுத்தல், மாதர் அமைப்பு, அறக்கட்டளை ஏற்படுத்துதல் இன்னபிற.

சக்தியின் கால் சிலம்பில் வந்த நாம் சக்தியின்றி இருப்பதை நீக்கிட உத்தி காணக் கூடிடுவோம் மாநாட்டில்! சிவபுத்திரராய் வந்த நாம் ஜீவிக்க முடியாதிருப்பதை சீராக்க சேர்ந்திடுவோம் ! நந்தி கனத்தவராய் வந்த நாம் சிந்தை மகிழ்ந்து வாழ்ந்திட முந்திடுவோம் ! கந்தன் சகோதரனாய் வந்த நாம் சொந்தம் கொள்ளக் கூடிடுவோம்! வீரபாகுவின் வம்சத்தில் வந்த நாம் விரக்தி நீங்கிடக் கூடிடுவோம். தேமதுரத் தமிழ் வழிவந்த நமது மாபெரும் புகழை மாநிலம் அறியச் செய்திடுவோம் !

இருளகற்றி ஒளி பெற்றிட ஈரோட்டுத் திருநகரில் கூடிடுவோம்; நற்செயலைப் புகழ்ப் பேரேட்டில் பதித்திடுவோம் ! எல்லாம் இனிது ஈடேற இறைவன் இணையடி இறைஞ்சிடுவோம்.

மாநில மாநாடு வெற்றியுற வாழ்த்துகிறோம் !

சென்னை மாவட்ட செங்குந்த மகாசன சங்கம்

17, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு.

சைதை ○ சென்னை - 600015.

அலுவலர்கள்.

தலைவர் : **P. S. பாலசுப்பிரமணிய முதலியார்**

துணைத் தலைவர்கள் : திரு. **M. K. பாலசுந்தர முதலியார்**
,, **K. தருமலிங்க முதலியார்**,
,, **V. N. ஆறுமுக முதலியார்**, B. Com., F. C. A.
,, **S. D. பொன்னுசாமி முதலியார்**
,, **S. V. ராசாபாதர் முதலியார்.**

பொதுச் செயலாளர் : திரு. **சரவண பழநிவேலு முதலியார்.**

செயலாளர் : திரு. **M. வேதாசல முதலியார்.**

பொருளாளர் : திரு. **A. B. தண்டாயுதபாணி முதலியார்** B. A.,

அழுகையல்ல! அறைகூவல்!

E. M. பாலசுப்பிரமணியம்,
பொதுச் செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த சமூக மாநில மாநாடு.

மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை படிப்படியாக அடைந்துள்ள வளர்ச்சிகள்; அந்த இனத்தினரின் ஆறாத ஆர்வத்தின் அடிப்படையில் அறிவின் துணை கொண்டு பெற்ற வெற்றிகள்; எல்லாச் சாதனைகளையுமே மனிதன் தனி ஒருவனாகவே சிந்தித்துச் செயல்பட்டுப் பெற்றான் என்று சொல்வது அறிவுடைமையாகாது தனிமனிதசக்திக்கு அப்பாற்பட்டவைகளைச் சமுதாயமாகக் கூடிவாழ்ந்து வெற்றி கொண்டான்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை மனிதன் உணர்ந்து, சமுதாயத்தினின்றும் விலகி நின்று வாழாமல், அதன் ஓர் அங்கமெனத் தன்னை நினைத்து செயல்படுகிற அறிவைத் தனக்குத் தானே வளர்த்துக்கொண்டபோது, அவனுள் இருந்த ஓர் உணர்வு தான் 'மனிதன்' தன் இனம் 'மனித இனம்' என்பது மட்டுந்தான். அதன்பிறகு மனிதனின் அறிவும், நாகரிகமும் வளர்ச்சியடைந்த நிலையில் "காக்கை குருவி எங்கள் சாதி" என்று பரந்த உள்ளத்தைப் பறைசாற்றத் துணிந்தான்.

நாகரிகம் வளர வளர மனிதனின் உள்ளமும் வளர்ச்சியடைந்து, அந்த வளர்ச்சியின் முதிர்ச்சியால் பிறந்த கலைகள், கலாச்சாரங்கள், அவைகளைத் தன்னகத்தே கொண்டு உதித்த தொழில்கள் - ஆகிய இவைகள் மனிதனை மனித சமுதாயத்தைப் பல குழுக்களாகப் பிரிந்து வாழத்தூண்டியது அவ்வாறு பிரிந்து வாழ்ந்த மனித சமுதாயம், உள்ளத்தில் உதித்த உணர்வுகளாலும், எண்ணங்களாலும், ஒன்றுபட்ட மக்களைக்கொண்ட குழுக்களாகவும், தொழிலின் அடிப்படையில் ஒன்றுபட்ட குழுக்களாகவும் இணைந்து, பிரிந்து வாழ்ந்தனர். ஆதியில் ஒற்றுமையுடன் வாழ்ந்த குழுக்களைக்கொண்ட சமுதாயம் சாதி, இனம் என்ற பெயரால் ஒன்றை ஒன்று தாக்கியும், புறக்கணித்தும் வந்தமையால் ஏற்பட்ட குழப்பங்களைப்படுத்தி அயலவர் ஆதிக்கம் நம் நாட்டில் வேரூன்றக் காரணமாக அமைந்தது. இதனைக்கண்டு மனம்பொறாத பாரதி;

"ஆயிரம் உண்டிங்கு சாதி - எனில்
அந்நியர் வந்து புகலென்ன நீதி"

எனத்தீரமுடன் பாடிச்சென்றான்.

இதனைக் கேட்டு உள்ளத்தில் நாட்டுப் பற்றெனும் உணர்வுப் பேரலைகள் உந்தித்தள்ள அன்னை நாட்டின் அடிமை விலங்கை உடைத்தெறியவும், அண்ணல் காந்தியின் அறை கூவலையேற்று அவர்காட்டிய வழி நடக்கவும் நம்மவர் - நவவீரர் வழிவந்தவர் இந்தப்படைக்குச் சொந்தமுடைய செங்குந்தர் குலச்சீலர்கள் பலர் துணிந்து நின்றனர். அவர்களில் தில்லையாடியெனும் திருச்சிற்றூர் தந்த வள்ளியம்மையும், திருப்பூர்க் குமரனும் முதலிடம் வகிப்போராவர்

பொன்ருப் புகழ் பெற்ற செங்குந்த மரபினர் அன்றுமுதல் இன்று வரை தங்களைத் தாங்கி நிற்கும் தாய்த்திரு நாட்டின் சிறப்பினைக் கருத்திலிருத்தி அதன் வளர்ச்சிக்கு - வளமான வாழ்வுக்கு உறுதுணையாக இருந்து வந்தனர் - இன்றும் இருந்து வருகின்றனர். தமிழகமெங்கும் பரந்து வாழும் மிகப்பெருவாரியான மக்களைக்கொண்ட நம் செங்குந்தர் தம் சீர்த்திமிகு தொழிலான நெய்யுந் தொழிலானது "செய்யுந்தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை" என்ற பெருமைக்குரிய தொழிலாகும். பண்டு தொட்டு இன்று வரை தம் தொழில் திறத்தால் தமது நாட்டின் புகழை அயல் நாடுகளில் நிலை நாட்டிய பெருமை நம்மவரையே சாரும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை தம் தொழில் தமக்கு மட்டுமேயல்லாது தம்மைச் சார்ந்த பலரும் அதனைச் சார்ந்த பலரும் அதனைச்சார்ந்த பல உபதொழில்களினுல் வாழ்தல் கண்டு மன மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ளும் குணமுடையவர் நம்மவர்.

"ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" "அணியெல்லாம் ஆடையின் பின்" என்ற தமிழ் மொழியின் பழந்தமிழ் செய்யுளடியும், பழமொழியும் ஆடையின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. ஆடை உருவாவதற்கு மூலகாரணமாக அமைந்த நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாத மூலப்பொருளாக விளங்கியது பருத்தியாகும். பருத்தி மிகுதியாக தமிழகத்தில் இருந்தது என்பதை "பருத்தி வேலி சீறூர்" என்ற புறநானூற்றடி சான்று பகரும் பருத்திப் பஞ்சை அதனுடைய கொட்டையிலிருந்து பிரித்தெடுக்க வில்லினை பயன்படுத்தினர் என்பதை "வில்லெரி பஞ்சியின் வெண்மழை தவழும்" என்ற அகநானூற்று அடியாலும், "எஃகுறி பஞ்சிற்ருகி வைகறை" என்ற நற்றினை அடியாலும் அறியலாம். இவ்வாறு பிரித்தெடுத்த பஞ்சை மகளிர் இராட்டையால் நூற்றனர் என்று "பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து" என்ற புறநானூறு கூறுகிறது. பல வகையான ஆடைகள் நெய்யப்பட்டன என்பதை "நூலினும் மயிரினும் நுழை நூற்பட்டினும்" என்ற சிலப்பதிகார அடிகளால் அறியலாம். ஆடைகள் நேரிய கரையை (Border) உடையனவாகவும், பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்ட வையாகவும் இருந்தன என்பதை "நேர்கரை நுண்ணூற் கலிங்க முடீகி" "ஒன்பூங் கலிங்க முடீகி" என்ற புறநானூற்றடிகள் தெரிவிக்கின்றன. ஆடைகள் தைப்பதற்குத் தையற்காரர்கள் இருந்தனர், அவர்கள் துன்னகாரர், துன்னவினைஞர் என்று அழைக்கப்பட்டனர் என இலக்கியங்கள் கூறுகின்றன. ஆடைகள் வெளுத்து உடுத்தப்பட்டன, ஆடைகளுக்கு நிறம் ஊட்டுவதற்காகச் சாயம் தோய்க்கப்பட்டன.

இவ்வாறு மூலப்பொருளான பருத்தியை விளைவிக்கும் விவசாயி, பருத்தியை பஞ்சாக்கும் நன்நெஞ்சத் தொழிலாளி, பஞ்சிலிருந்து கொட்டையைப்பிரித்து நூலாக நூற்கும் மகளிர், நூலில், துணியில் சாயந்தோய்த் தெடுப்போர், ஆடையில் வேலைப்பாடு செய்யும் தொழிலாளர், நெய்தபின் ஆடையை விற்பனை செய்யும் வணிகர்கள், அதனோடு தொடர்புடைய பணியாளர்கள், தையற்காரர்- இவ்வாறு ஒரு நெசவாளி ஒன்பது குடும்பங்களை வாழவைக்கின்றான்; இப்படி நெசவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அதன் குளிர்நிழலில் வாழ்ந்திருப்போர் பலர். நெய்த ஆடையின் சிறப்பை இலக்கியங்கள் இயம்பும் மேன்மை எண்ணி எண்ணி இன்புறத் தக்கன. கலிங்கத்துப் பரணி "நிலவைத் துகிலென் றெடுத்துடுப்பீர்" என்றதனால் நம்மவர் நெய்த துகில், முகில் தூங்கும் வானத்து வெண்ணிலவைவிட மிகமிக மெல்லியதாய் இருந்தது என்பதை அறிந்து அகமகிழ் வடைகிறோம்.

இலக்கியங்களும் இன்னும் பிறநாடுகளும் இன்புகழ் பேசும் நம்மவர்-இலை, தழைகளை உடுத்திக் கொண்டு குகைகளிலும், மலைகளிலும், மரப்பொந்துகளிலும் நாகரிகமற்று வாழ்ந்த மக்களைத் தாம் நெய்த ஆடையால் நாகரிகமடையச் செய்த நம்மவர்-நாகரிகம் மேம்பட்டுக் கிடக்கின்ற இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் இன்றைய சமுதாயத்தில் ஒன்றுபட்டு நில்லாக் காட்சியைக் காண நெஞ்சம் துடிதுடிக்கின்றது, துடித்த துடிப்பின் வெடிப்பில் வெளிவந்த வார்த்தைகள் கலங்கிக் கட்டுரையாகிறது. இழிநிலை போக்கி எழில்நிலை கூட்டவே மாநாடு நம்மை அறைகூவி அழைக்கின்றது சந்ததம் பாடும் நம்தம் குலப் பெரியோர்கூறும் நித்தியமான சத்திய வார்த்தைகளைக் கேட்போம்; அதனை நம் நெஞ்சக் கூட்டினில் ஏற்போம்; அதன் வழி நடப்போம்.

நெசவாளியின் துயர்துடைக்க அவர்தம் வசைவாழ்வு போக்கிட வகையான தருணம் வாய்த்தது. அந்த வாய்ப்பு நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி வடிவில் பேருருக் கொண்டு வந்துள்ளது. பாரதம் செய்த நற்றவமோ, பாரத மக்கள் செய்த தவப்பயனோ பாரத அன்னையே, பாரதம்வாழ் அறுபது கோடி மக்கள் படும் துயரம் கண்டு பொறாது அவர்தம் துயர் துடைத்திட பிரதமர் உருவத்தில் வந்துள்ளதோ என எண்ணும்படி பிரதமரின் ஈடுஇணையில்லா இருபது அம்சத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அந்த இருபது அம்சத் திட்டம் பாரத மக்களின் நல்வாழ்விற்காக வகுக்கப்பட்ட சட்டம், அந்த இருபது அம்சத் திட்டத்திலும் சிறப்பாக ஒன்பதாவது அம்சத்திட்டம் நெசவாளர்தம் வாட்டம் போக்கிட வறுமை அகன்றிட ஏற்படுத்தப்பட்ட சட்டம். இந்தச் சட்டத்தின் பயனாக இனி நெசவாளர் வாழ்வில் வறுமையில்லை; துயரமில்லை; அவர்தம் கண்களில் துயரக் கண்ணீர் சொரியப் போவதில்லை அவர்கள் முகத்தில் தோன்றும் ஆனந்தம்; வாழ்க்கையில் இன்பது வசந்தம் எனவே ஒன்று கூடிடுவோம்-நன்று செய்திடுவோம், இம் மாநாட்டில் நாம் ஒருங்குகூடி எடுக்கின்ற தீர்மானங்கள் இம்மாநாட்டுப் பந்தலில் நாம் எடுத்திடும் சபதங்கள், நமது ஒற்றுமையின்மைக்கு முற்றுப் புள்ளி வைக்கட்டும். நமது உயர்வுக்கு வழிகோலட்டும். இது ஒரு தனிப்பட்ட உள்ளத் தின் அழுகையல்ல; உணர்ந்த உள்ளத்தினின்று எழுந்த அறைகூவல்! இதனை எல்லா உள்ளங்களும் உணரட்டும்! உயர்வு பெறட்டும்.!

தமிழ்நாட்டில் பெண்கள்

அ. மு. பரமசிவானந்தம், சென்னை-30.

தமிழகம் தொன்மைவாய்ந்தது. மிகப்பழங்காலந்தொட்டே நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியது. தமிழகத்தின் பண்டைய நாகரிகத்தை இன்று உலகப் பேரறிஞர் பலரும் போற்றுப்பரவுகின்றனர்; துருவி ஆராய்கின்றனர். அத்தகைய பழம் பெரும் நாட்டின் சிறப்புக்கு அடிப்படையாக அமைந்த ஒருசிலவற்றுள் மகளிர் தொண்டும் முக்கியமானது.

தமிழ்நாட்டில் பெண்கள் என்றும் இழிவுபடுத்தப் பெறவில்லை; மாறாகத் தமிழ்ப் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாக வாழ்ந்த வரலாறுகள் நமக்குக் கிடைக்கின்றன. இடைக்காலத்தில் பல்வேறு நாகரிகச் சூழல்களின் காரணமாய் பெண்கள் நிலை தாழ்ந்த நிலையாக ஒருசில இலக்கியங்களில் காட்டப்பெறினும் அந்த இடைக்காலங்களிலும் தமிழ்ச் சமுதாயம் பெண்களுக்குத் தந்த ஏற்றத்தில் குறை நேர்ந்ததில்லை. ஆயினும் இன்று ஒருசில இடங்களில் காணப்பெறுவதுபோன்று போலி நாகரிகத்தில் மூழ்கி நிலைகெட்ட மரபு தமிழகம் அறியாதது.

இன்று சமஉரிமை என்ற பேரால் சில பெண்கள் எல்லைகடந்து எல்லா நெறியிலும் நுழைந்து, தம்மையும் பாதுகாத்துக் கொள்ளாது சமுதாயத்தையும் பழிச் சொல்லுக்கு உள்ளாக்கும் அவல நிலையைக் காண்கின்றோம், ஆனால் இந்த நிலை தமிழ்நாடு, வேறு யார்யாரையோ பின்பற்ற நினைத்து, 'அன்ன நடை நடக்கப்போய் தன்னடையும் இழந்த கதைதான்' வழியில் சென்றதால் நேர்ந்த ஒன்று. இன்றும் சிறக்கக்கற்ற பெண்கள் தமிழ் மரபு கெடாதவகையில் தமிழர்தம் பண்பாடு, நாகரிகம் இன்ன பிறவற்றைப் போற்றிக் காப்பதைக் காண, தமிழ்ப் பெண்ணினத்தின் சிறப்பு எண்ணத்தக்கதாக அமைகின்றது. என்றும் தமிழகம் பெண்ணின் பெருமையைக் கட்டிக்காக்கும் என்பது துணிபு. தமிழ் நாட்டில் பெண்களுக்கு இடப்பெற்ற பெயர்களிலிருந்து அவர்தம் ஏற்றத்தை நன்கு உணரலாம். தமிழ்நாடு

துறவு நிலையை வற்புறுத்தாத ஒன்று. திருவள்ளுவரும் அதனாலேயே' அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என அறுதியிட்டார் அந்த அறம் செம்மையாக நடைபெற உதவுபவரே பெண்கள் தாம் பெண்கள் இன்றேல் இல்லறமில்லை; இல்லற வாழ்வு இன்றேல் இயக்கம் இல்லை. அதனாலேயே நம் சமயத்தவர் சக்தி, சிவம் என்ற இரண்டினையும் பிரிக்கமுடியாத வகையிலே இணைத்து நமக்கு வழிகாட்டிகளாக — வழிபடு கடவுளராக அமைத்தனர். கயிலைக் காட்சியினைக் கண்ட அப்பர், அதைக் கூறும்போது, 'காதன்மடப்பிடியோடும் களிறுவருவன கண்டேன்', 'கோழிபெடையொடு ஆடிக்குனிந்து வருவன கண்டேன்', 'வரிக்குயில் பேடையோடாடிவைகி வருவன கண்டேன்' என்றெல்லாம் காட்டுகிறார். எனவே வையத்துவாழ் வாங்கு வாழும் இல்லற நெறி தெய்வ நெறி, பெண்கள் ஆற்றும் அறத்தாலே சிறக்கின்றது. அதனாலேயே அவர்களைப்பற்றிக் கூறவந்த வள்ளுவர், வாழ்க்கைத்துணை என்ற சிறப்புப் பெயராலேயே பாராட்டிக் கூறுகிறார். மனைவி இன்றேல் வாழ்வு இல்லை என்ற உண்மையினையே 'போற்றுலியோடெவையும்போம்' என்று கூறினர். எனவே உலகம் வாழ்கின்றது என்றால் அதற்கு அடிப்படை வாழ்க்கைத் துணையாக நிற்கும் மகளிரேயாவர்.

இல்லத்தரசிக்கு வழங்கும் தமிழ்ப் பெயர்கள் அவர்தம் ஏற்றத்தினை நமக்கு நன்கு விளக்கும்.' மனைவி, இல்லாள்' என்ற இரு சொற்களே அவை அவற்றின் அடிப்படைகளை. எண்ணின் நலம் பயக்கும் மனைவி என்ற சொல் மனைக்கு உரியவள் என்ற பொருளில் வழங்குகின்றது. இதற்கு ஆண்பாலாக 'மனைவன்' என்ற சொல் என்றும் இருந்ததில்லை எனவே மனையின் செம்மைவாழ்வு முற்றும் தலைவியின் செம்மை நலத்திலேயே அடங்கியிருக்கின்றதன்றோ! அப்படியே 'இல்லாள்' என்ற சொல்லும். இல்லாள் என்ற சொல்லுக்கு இல்லத்துக்கு உரிமை உடையவள் என்பது பொருள். அதற்கு நேராக ஆண்பாற் பெயர் இல்லையே. 'இல்லான்' என்ற சொல் ஒன்றும் இல்லாதவனையன்றோ குறிக்கும். இவ்வாறு வாழ்க்கைத் துணையாக அமைந்து இல்லறவாழ்வு நடத்தும் பெண்ணின் பெயரிலேயே அவள் சிறப்பினையும் பண்பினையும் குறிக்கும் நிலை வேறு எம்மொழியிலெனும். உண்டோ என எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது.

வீட்டில் மட்டுமின்றி நாட்டிலும் பெண்கள் நன்கு போற்றப் பெற்றனர். 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று புதுமைப் பெண் பற்றிப் பாரதியார் பாடியுள்ளார் என நாம் எண்ணுகிறோம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த நிலை மிக நெடுங்காலமுதற்கொண்டே இருந்து வந்தது எனக் காண்கின்றோம். வெண்ணிப் போரின் வெற்றியில் தன்னை மறந்து தருக்கி, விழாக் கொண்டாடி நின்ற கரிகாலனை இடித்துரைத்தவள் ஒரு பெண்ணன்றோ! அப்படி அதிகமானுக்கும், தொண்டைமானுக்கும் நடைபெற இருந்த போரினை நீக்கி நலங்

கண்டவளும் பெண்தானே! எத்தனை அரசிகள் சங்ககாலத்தில் அரசருடன் ஒருங்கிருந்து நாட்டினை நடத்திச் செல்ல நல்ல கருத்துக்களை வழங்கிச் சமுதாயத்தினை வாழ வைத்துள்ளனர். சிறப்புச் செய்வது, கண்ணகிக்கா அன்றிப் பாண்டிமாதேவிக்கா என்று தடுமாறிய செங்குட்டுவனுக்கு, அவையிலுள்ளார் அனைவரும் வாய்வாளாயிருக்க, வானவன் மாதேவியே 'நம் அகநாடடைந்த இப்பத்தினிக்கடவுளைப் பரசல்வேண்டும்' என்று முடிவுகட்டினர். எனவே சங்ககாலத்திலே பெண்கள் சிறந்த இடத்தினைப் பெற்றிருந்ததோடு, சமுதாயத்துக்கு வேண்டிய வகைகளிலெல்லாம் உதவிபுரிந்தனர் என அறிகின்றோம்.

இடைக்காலத்திலேயும் பெண்கள் சமுதாயத்துக்கு ஆற்றிய பணிகள் அளப்பில. திலகவதியார் ஒருவர் இன்றேல் நமக்குச் சைவம் இல்லை; அப்பர் இல்லை; தேவாரம் இல்லை. அப்படியே மங்கையர்க்கரசியார் இன்றேல் தமிழ்நாட்டு நிலையே மாறியிருக்கும். அடுத்து இராசராசன் ஆட்சியிலே அவன் தமக்கை குந்தவ்வையின் உறுதுணை பெரிதும் இருந்ததை வரலாறு காட்டுகின்றது இப்படியே இடைக்காலத்தில் பெண்பாற் புலவர் பலரும் வாழ்ந்துள்ளமை அறிகிறோம்.

பிற்காலத்திலேயும் மதுரையில் ஆண்ட மங்கம்மா போன்றவர்களையும் பிற பெண்பாற் செல்வியர்களையும் காண முடிகின்றது. தமிழ் நாட்டிலும் வெளியிலும் விடுதலைப்போர் முதலியவற்றில் வீரம் விளைத்த பெண்களைப் பற்றி வரலாறு உணர்த்துகின்றது. காந்தியடிகளாரே தமிழ்ப் பெண் ஒருத்தியின் வீரச்செயலைப் பாராட்டிப் போற்றவில்லையா! இன்றும் தமிழ்நாட்டு விடுதலைப் போரிலும் விடுதலை பெற்றபின்பும் தமிழ் மகளிர் கொண்டிருந்த—கொண்டுள்ள-பங்கு பாரறிந்த ஒன்றல்லவா! எனவே அன்றுதொட்டு இன்று வரையில் தமிழ்நாட்டுப் பெண்கள் வீட்டுத் தலைவியாக இருந்து விருந்தோம்பி இல்லறம் காத்ததோடு நாட்டுக்கு வழிகாட்டிகளாகவும் விளங்கியுள்ளமை அறிகின்றோம்!

இத்தகைய தமிழ்மரபு இன்றும் வற்றிவிடவில்லை. அதன் பெருமையை விளக்கவே ஈரோடு செங்குந்தர் மாநில மாநாடும் மகளிர் மாநாடும் நடைபெறுகின்றன; சமுதாயத்துக்கு இச்சமூகமும் மகளிரும் செய்த—செய்யும் தொண்டு அளவிடற்கரிது. அவர்தம் தொண்டு மேலும் சிறக்கவும் செழிக்கவும் ஓங்கவும் உயரவும் இறைவன் நல்லருள் புரிவாராக!

செங்குந்தர்

குலச் சீலர்கள்

ஒரு சமூகத்திற்குப் பெருமையும் மதிப்பும், உயர்வும், அந்தஸ்தும் ஏற்படுவது அச்சமூகத்தில் தோன்றும் குலத்தோன்றல்களான சான்றோர்களால்தான் எனின் அது சாலப்பொருத்தமுடையதாகும். அத்தகுமுறையில் செங்குந்தர் குலத்துக்கு அத்தகையதொரு நிலை ஏற்படுவது செங்குந்தர் குலத் தோன்றல்களால்தான் எனினும் அதுவும் மிகையன்று, செங்குந்தர் குலத்தில் அவ்வக்காலங்களில் சான்றோர் பலர் தோன்றியுள்ளனர். நம் சமூகத்திற்குப் பெருமை சேர்த்த 'செங்குந்தர் குலச் சீலர்' சிலரின் பெயர்களைக் கீழே கண்டு மகிழலாம்.

1 சண்முகக் கடவுள்
2 நவவீரர்
3 இலக்க வீரர்
4 ஆயிரத்துத் தொள்ளாயிரவர்
5 திருக்கச்சியாள வந்த வள்ளலார் மடாலயச் சைவாசாரியர்
6 திருவாலங்காடு கார்கோடக மடாலயச் சைவாசாரியர்
7 திருவழுவூர் வேதநாயக மடாலயச் சைவாசாரியர்
8 மெய்கண்ட சிவாசாரியர்
9 கிளைநாட்டு மடாலயச் சைவாசாரியர்
10 திருக்கச்சி மாவடித் தேவசிங்காசனாதிபதிகள்
11 திருவாரூர் முதலிய சத்தவிடங்கத் தாபகர்
12 சிவாலய குகாலய தர்மகர்த்த தத்துவ பரிபாலன ஆட்சியோர்
13 தில்லைக் கொடி ஏற்றுவித்தோர்
14 திரு மூல தேவர்
15 காரித் தேசிகர்
16 நரசிங்க முனையரையர்
17 இடங்கழிப் பெருமாள்
18 முனைய வள்ளல்
19 பெருமிழலைப் பெருந்தகை
20 மெய்ப்பொருள் மூர்த்தி
21 சத்தியண்ணல்
22 செருத்துணைக் குரிசில்

23 கோட்புலிச் செம்மல்
24 கூற்றுவத் தலைவர்
25 எறிபத்த நாயனார்
26 கணம் புற்ருபதர்
27 தண்டியடிகள்
28 ஒட்டக்கூத்தர்
29 குகனேரியப்ப நாவலர்
30 காங்கேயர்
31 பொய்யாமொழிப் புலவர்
32 பகழிக்கூத்தர்
33 இரட்டைப் புலவர்
34 படிக்காசுப் புலவர்
35 கச்சியப்ப முனிவர்
36 சிதம்பர சுவாமிகள்
37 பிறசை அருணசல சுவாமிகள்

தொகுப்பு : **ந. சண்முகானந்தன், T. ஜெகதீசன்.** (மலர்க் குழு)

ஆதாரம் : செங்குந்த பிரபந்தத் திரட்டு.

டெலிபோன் : 83.

சென்கிரி டெக்ஸ்

C. H. 2.

எங்கள் தயாரிப்புகளாவன :

★ **படுக்கை விரிப்புகள்**
தலையணை உறைகள்
ஜெக்கார்டு டிசைன் விரிப்புகள்
டெர்ரி டவல்கள்

சென்னிமலை சிரகிரி முருகன் நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட், C. H. 2.

சென்னிமலை - 638051.

தலைவர் : P கருப்பண்ணன்.

மானங் காப்போம்.

புலவர் கோ. இளையபெருமாள்,
ஆரணி.

(எண்சீர் விருத்தம்)

1 விண்ணகத்தே வாழ்தேவர் வேண்டி நிற்க
விடையேறும் வித்தகனின் விளங்கும் நெற்றிக்
கண்ணகத்தே தோன்றுமனல் கங்கை சேரக்
கவினுருவாய் வந்தருளும் கந்த வேளின்
எண்ணகத்தே வீற்றிருக்கும் ஏற்றம் மிக்க
இளவலெனும் செங்குந்தர் இனமே என்றும்
மண்ணகத்தே வாழ்பவரின் மானங் காக்கும்
மரபாகும் அம்மரபு மன்னி வாழ்க.

2 புவியரசர் தலைவணங்கிப் போற்ற முன்னாள்
புலமைநலஞ் சிறந்துலகு புரந்து நின்ற
கவியரசர் புகழ்ஒட்டக் கூத்த ரோடு
கலம்பகப்பேர் இரட்டையரும் கற்றோர் மெச்சச்
செவியமுதாய்ப் பன்னூல்கள் செய்த ளித்த
செந்தமிழ்தேர் குந்தரினம் சேர்த்து வைத்த
குவிபுகழைப் பாரெங்கும் குலவச் செய்து
குன்றாமல் காப்பதுநம் கொள்கை யாமே.

3 உடம்பினிலே ஒருறுப்புப் பழுது பட்டால்
ஊனமுற்றோர் என்றுலக முரைக்கு மன்றோ?
குடும்பத்தில் ஒருவர்நலங் குன்றி வாழின்
குழப்பத்தால் எல்லோர்க்கும் குறையுண்டாகும்
இடும்பையுறு சமுதாயம் இருக்கும் என்றால்
ஏற்றமிகு நாட்டிற்கே இழிவு நேரும்
திடம்பெற்ற நம்நாட்டில் சீர்குலைந்த
செங்குந்தர் முன்னேற்றம் தேவை தானே.

4 வண்ணமிகும் ஆடைபல வகையில் நெய்து
வையகத்து வாழ்மக்கள் மானங் காப்போம்
எண்ணமிகு உயாந்தனவா யெண்ணி வாழ்வில்
இனவுணர்ச்சி கொண்டுழைப்பில் இன்பங் காண்போம்
கண்ணெனவே கடமையினைக் கருதிச் செய்வோம்
கண்ணியமாய் வாழ்ந்தமைதி கட்டிக் காப்போம்
திண்ணமுற நம்நாடு செழிக்கத் தீட்டும்
திட்டங்கள் நிறைவேறச் செய்கு வோமே.

5 குன்றின்மேல் விளக்காகக் குலவி நின்ற
குந்தரினத் தின்சீர்த்தி குவல யத்தில்
பொன்றிவிடா தொன்றுபடப் புரட்சி செய்து
புதுவாழ்வு தந்தினிது புரக்கும் நல்லோர்
வென்றியுடன் தலைச்சங்கம் விளங்க அந்நாள்
வித்திட்டுப் பயன்மரமாய் விளையச் செய்தார்
நன்றியுடன் இந்நாளில் நயந்து போற்றி
நற்பணிகள் செய்திடுவோம் நாடி வாரீர்.

Our Heaty wishes to Coimbatore District
Sengunthar Mahajana Sang.

Vairavel Textiles,

Mfrs. of Silk Sarees, Shirting Carpets & Fast Colour Bed Sheets

BHAVANI. (Post)

(Vaia) ERODE South India.

நேற்று,

இன்று,

நாளை.

சி. அருணாசல முதலியார், B. A., L. T., நெல்லை.

செங்குந்தர். ஆம். சிவப்பு குந்தத்தை ஏந்திப் போர் புரிந்ததால் நம் குலத்தைச் செங்குந்தர் குலமென அழைக்கிறார்கள். யாருக்காக. குந்தத்தை ஏந்தினோம்? ஆறு படை வீடு கொண்ட ஆறுமுகத்துக்காக. தேவர்களை வாட்டிவதைத்த சூரபத்மனின் செருக்கை அடக்குவதற்காக. சுப்பிரமணியக் கடவுளுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான போர் வீரர்கள் நாம். வீரபாகுத் தேவர் வமிசத்தில் பிறந்தவர்கள் நாம். ''ஈட்டி எழுபது'' எழுதிய ஒட்டக்கூத்தர் வமிச பரம்பரையில் உதித்தவர்கள் நாம். நம் குலத்தில் தான் புலவர்கள் ''இரட்டையர்'' தோன்றினர். நமது குலத் தொழில் நெசவு. பண்டைக்காலத்தில் நம் முன்னோர்கள் நெய்த துணி எவ்வளவு மிருதுவானது தெரியுமா? பல கஜம் கொண்ட துணி ஒன்றை நம் உள்ளங்கையில் வைத்துக்கொள்ள முடியும். நம் முன்னோர்கள் நெய்த துணி மேலை நாடுகளுக்குச் சென்று, நம் நாட்டிற்குப் பெரும் பணத்தை ஈட்டிக் கொடுத்தது. இந்தப் பாணியிலே நம் செங்குந்த குலத் தோன்றல்கள் பலர் செங்குந்தர் சங்கங்களிலும், மாநாடுகளிலும் நமது குலப்பெருமையை இன்னும் வானளாவப் பேசியதை,—பத்திரிகையில் எழுதியதை நாம் கேட்டு—பார்த்து இருக்கிறோம். இவை அத்தனையையும் உண்மை. புகழுரையல்ல. இது நேற்றைய நிலை.

இன்றைய நிலை என்ன? கல்வி அறிவு மிகக் குறைந்தவர்களாய், தொழில் அதிபர்கள் எனக் கூறுவதற்குக் குதிரைக் கொம்பாய், சிறந்த பணக்காரர் என அழைப்பதற்கு அத்தி பூத்தது போல, உயர்ந்த அதிகாரிகள் எங்கிருக்கிறார்கள் என்று சந்து பொந்துகளில் தேடி அலைய வேண்டிய நிலையில் இருக்கிறோம். செங்குந்தர் என்று சொன்னதும் ஒட்டிய வயிற்றையும், உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் உடலையும், பரட்டைத் தலையையும், கந்தல் துணியையும், கல்வி அறிவற்ற ஒரு மனிதனைத்தான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம். தென் இந்தியாவில் பல லட்சம் எண்ணிக்கையைக் கொண்ட சமூகம் நமது சமூகம். எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது முக்கியமான சமூகங்களில் நமது சமூகமும் ஒன்று. தமிழ்நாட்டில், குமரி மாவட்டம் நீங்கலாக, மற்ற மாவட்டங்களில் செங்குந்தர்களின் எண்ணிக்கை, பிற சமூகத்தினருடன் கல்வி, தொழில், வியாபாரம், அரசியல் இவைகளில் போட்டி போட்டு முன்னேறவேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால் உண்மையில் அப்படி அல்லவே. மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய பிற சமூகங்கள் எல்லாத்துறையிலும் முன்னேறி உச்சக் கட்டத்தை அடைந்து, சில சமயங்களில் நம் சமூக மக்களையே ஆட்டிப்படைக்கின்ற நிலையில் இருக்கின்றனவே. எத்துறையை எடுத்துக்கொண்டாலும் அத்திப் பூத்ததுபோல் அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில் சில பெரியோர்கள் நம் சமூகத்தில் இருக்கிறார்கள் அந்தச் சிலர்கூடத் தங்களைச் செங்குந்தர் என்று கூறிக்கொள்ள மனமில்லாதவராய், நம் சமூகத்தினருக்குத், தங்களால் இயன்ற அளவு தங்கள் துறையிலேயே உதவிசெய்ய தயங்கும் நிலையில் இருக்கிறார்கள். தொழில் அல்லது வியாபாரத் துறையை எடுத்துக் கொள்வோம். ஒரே தொழில், அல்லது வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்குள்

ஒற்றுமையோ அல்லது உதவி செய்யும் மனப்பான்மையோ இருப்பது அரிது. இதே போல், கல்வி, அரசியல் துறைபோன்றவைகளிலும் இருப்பதை நாம் காண்கிறோம். என்று ஒரு சமூகத்தில் ஒற்றுமைக்குறைவும், பொறுமையும் ஏற்பட்டதோ அந்தச் சமூகம் முன்னேறுவது முடியாத காரியம். இரண்டோர் இடங்களில் தனி மனிதன் முன்னேறியிருக்கலாம். ஆனால் ''ஒரு மரம் தோப்பாகாது'' என்ற பழமொழிக்கு இணங்க ஒரு சிலர் நம் சமூகத்தில் முன்னேறினால் சமூக முன்னேற்றம் என்று ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நம் தமிழ் நாட்டில் முன்னேற்றப் பாதையில் விளங்கிவரும் சமூகங்கள். ஏன் அந்த முன்னேற்றப் பாதைகளில் செல்லுகின்றன? அவைகளின் ஒற்றுமை மனப்பான்மை, கைதூக்கிவிடும் மேலான செயல், பரந்த மனப்பான்மைகள் தான் காரணம். இதற்கு உதாரணமாக நம் நாட்டில் எத்தனையோ சமூகங்களின் பெயர்களைக் கூறலாம். எண்ணிக்கையில் மிகவும் குறைவான சமூகங்கள் நல்ல முன்னேற்றப் பாதைகளில் முன்னேறியிருப்பதின் காரணங்களை அறிந்தால் நம் சமூகத்தின் குறைபாடுகளை நாம் அறிந்துகொள்ளமுடியும். உத்தியோகம் கொடுப்பதென்றால், உத்தியோக உயர்வு கொடுப்பதென்றால், பாங்கியில் கடன் கொடுப்பதென்றால்கூட, ஏன் பொதுத்தேர்தலில் தங்கள் வாக்குச் சீட்டைக் கொடுப்பதென்றால் தமது சமூகத்தினருக்கே கொடுப்பது என்ற விரதம்பூண்ட சமூகங்கள் முன்னேறி இருப்பதை, முன்னேறி வருவதை நம்முன்னால் காண்கிறோம். இப்படி ஒற்றுமை மனப்பான்மை குறைந்து, முன்னேற்றப் பாதையில் செல்லமுடியாமல் இருக்கிறது நம் சமூகத்தின் இன்றைய நிலை.

இனி நாம் என்னசெய்யவேண்டும்? நம் குறைகளை உணர்ந்து. அக்குறைகளை நீக்க முயலவேண்டும். ஒரு சமூகம் முன்னேறுவதற்கு அடிப்படையான காரணம் கல்வி அறிவு. நம் நாடு விடுதலை பெற்றபின்னர் மக்களிடைய கல்வி அறிவு பெருகிவருகிறது. அரசாங்கப் புள்ளி விவரங்கள்படி இப்பொழுது 40 சதவிகித மக்கள் இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்துள்ளார்கள். செங்குந்தர் குழந்தை ஆணோ, பெண்ணோ கல்வி அறிவு பெற்றாகவேண்டும். வசதி படைத்த குடும்பத்திலுள்ள பிள்ளைகள் கல்வி அறிவு பெற்றுக் கொள்வார்கள், ஆனால் சமூகத்தில் இருக்கும் பெரும்பாலான ஏழைச் செங்குந்தர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கொடுக்க முன்வரவில்லை; ஏன் தெரியுமா? அச்சிறுவனோ, சிறுமியோ தங்களுடன் சேர்ந்து தங்கள் தொழிலாகிய நெசவுத் தொழிலில் தங்களுக்கு உதவிசெய்தால். கூடுதல் கொஞ்சம் காசுகள் கிடைக்குமென்ற நப்பாசைதான் காரணம். இளஞ்சிறுவர்கள் பள்ளிக்குச்செல்வதில்லை. உயர்நிலைப்பள்ளிப் படிப்புவரை இலவசமாய்ப் படிக்கும் வாய்ப்பைப்பெற்ற நம் தமிழ்நாட்டுச் செங்குந்தர் பிள்ளைகள் இவ்வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். பள்ளியில் இலவசப் படிப்பு; ஆனால் புத்தகங்களும், பள்ளிக்கு வாங்கவேண்டிய பிற பொருள்களும் வாங்கமுடியாமற்தான் பெரும்பாலும் மாணவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடரமுடியவில்லை. இதற்கு மாவட்டம் தோறும் செங்குந்தர் கல்வி நிதி திரட்டப்பட்டு மாணவர்களுக்குப் பொருள் உதவி செய்ய வேண்டும். மேலும் அரசாங்கத்தாரால் நம் சமூகத்தினருக்கு ஸ்காலர்ஷிப் பணம் கொடுக்கப்படுகிறது, அந்தப் பணத்தைப் பெற தகுந்த நேரத்தில் விண்ணப்பம் செய்து, அனுபவம் உள்ளவர்களின் உதவியால் அப் பணத்தைப் பெற வழி செய்துகொள்ள வேண்டும். ஆண் கல்வியோடு பெண் கல்வியும் பெருகவேண்டும். ஆண் மட்டும் கற்று பெண் கல்லாது போனால் குடும்பம் இன்பமாக நடைபெறுவது அரிது. ஆகவே வாய்ப்பு இருக்கின்ற மாவட்டங்களில் நம் சமூகத்தினரே பள்ளிகளை நிறுவினால் செங்குந்த குழந்தைகள் பெருவாரியாய் கல்வி பயில வாய்ப்புப் பெறும். இந்தச் சமயத்தில் கல்விச் சாலைகளை நிறுவி, நல்ல முறையில் செயல்படச் செய்துகொண்டிருக்கும் சில மாவட்டங்களிலுள்ள செங்குந்தர் அன்பர்களுக்கு நமது நன்றியும், போற்றலும் உரித்தாகுக.

அடுத்தபடியாக செங்குந்தர் உணர்ச்சியைப் பெருக்க செங்குந்தர் சங்கங்கள் சிற்றூர்கள்தோறும் தோன்றவேண்டும். இச் சங்கங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட வேண்டும். அதற்குக் கிராம, நகர, மாவட்டச் சங்கங்கள் இணைக்கப்பட்டு, நம் தலைமைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டு நல்ல செயல் படவேண்டும். தேசீய கட்சிகள்போல் அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு சீரிய செயல்கள் செய்யவேண்டும்.

பின்னர் ''கழுதை தேய்ந்து கட்டெறும்பாய் மாறி'' வருவதுபோல் காட்சி அளிக்கும் ''நம் செங்குந்த மித்திரனை'' நாம் கட்டிக் காக்கவேண்டும். ஒவ்வொரு செங்குந்தரும் செங்குந்த மித்திரனின் சந்தாதாரராய்ப் பதிவு செய்து, ஒழுங்காய் சந்தாவையும் செலுத்தி செங்குந்த மித்திரன் பொலிவோடு நம்முன்னர் காட்சி அளிக்க முயல வேண்டும்.

அரசியல் துறையில் நன்கு பங்குகொள்ள வேண்டும்; ஆனால் கட்சி வேறுபாட்டை ஒதுக்கிவைத்துச் சமூகப் பற்றுடன் உறுதியாய் பணிபுரிந்து சமூக நண்பர்களை முன்னேற்ற ஆவன செய்யவேண்டும்.

பலதுறைகளில் உயர்நிலையில் இருப்பவர்கள் தங்களால் இயன்ற அளவு அந்தந்தத் துறைக்கு வருபவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டவேண்டும்.

மேலே கூறிய சிலவற்றைக் கையாண்டு அடித்தளத்தில் இருக்கின்ற நமது சமூகத்தை, அதற்குரிய இடத்தைப் பிடிக்குமாறு ஈரோடு மாநில செங்குந்தர் மகாநாடு நடந்த நாளிலிருந்து விரதம் கொண்டு நாம் முன்னேறுவோமாக.

வாழ்க கைத்தறி! ஸ்தாபிதம்: 1952 வளர்க கூட்டுறவு!!

எங்கள் சங்கத்தில் 20-ம் நெம்பர் முதல் 80-ம் நெம்பர் வரை வேஷ்டி ரகங்களும் துண்டு ரகங்களும் தயார் செய்கிறோம்.

60-ம் நெம்பரில் சேலை ரகங்களும் சிறந்த முறையில் தயாரிக்கிறோம்.

தேவைக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!

S. 1122 நடுப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்.,

அலவாய்ப்பட்டி P. O. (via) வெண்ணந்தூர் (சேலம் Dt.)

"விழுமிய செங்குந்தர்களே......?

வைகறை, திருக்கழுக்குன்றம்.

"பூவிரியும் காவிரிபாய் கின்றஈ ரோட்டில்
நாவினிக்கும் நற்றமிழ்செங் குந்தர்மா நாடு;
பாமணக்கக் கூடுகின்ற பாங்குதனைக் காண
ஏவுகணை போல்திரண்டு என்றமிழீர், வாரீர்!

சீர்மிகுத்த செஞ்சடையான் திருமகன்; மால் மருகன்;
போர்நிகழ்த்திப் பார்சிறக்கத் தம்பியர்ஒன் பதின்மர்
பேர்படைத்த நவவீர வாகுதேவர் குலத்தோர்
நீர்மையுடன் ஒன்றுகூடும் மாநாடு வெல்க!

இனங்கண்டு கொள்வதற்கே இணைந்தொன்று கூடி;
மனந்திறந்து பேசுதற்கே மார்க்கமொன்று தேடி;
கனவாகும் எண்ணங்கள் கனிந்துநலம் பாட
நனவாகும் காலமிது! நனிதிரண்டு வாரீர்!

"கலமின்றிக் கரையேற முடிந்திடுமோ? உலகில்
குலத்தாழ்ச்சி உயர்வுகொளல் முறைமையல்ல! எனினும்
கல(க்)கங்கள் தீரவில்லை! காலங்கள் தொட்டுப்
புலராத பொழுதாக இருப்பதுநம் இனமே!

ஒற்றுமையைக் கூவியழைத் திடுவதினால் எவர்க்கும்
பற்றுடனே பாசம்மிகும் என்பதும்பொய்க் கணக்கே!
நற்றவஞ்சேர் நற்பண்பு நாளும்உண் ணுதற்கே
சுற்றமுடன் சூழ்ந்திடுவீர்! சுகம்மிகவே பெறுவீர்!

செகம்மெச்சும் செங்குந்தர் மாநாட்டுச் சிறப்பை
அகத்தினிலே தேக்கிடவே அழைக்கின்றோம்! இன்பம்
புகப்புகத்தான் புத்துணர்வு பெற்றுவிடும் உயிர்கள்!
யுகம்யுகமாய் வாழ்வதுபோல் நாமும்வாழ்ந் திடவே!

அழுத்தழுத்த மேலெழும்பும் பந்தினைப்போல்; நாமும்
அழுந்தழுந்த மேலெழவே முயன்றிடஇம் மாநா(டு)
எழுந்ததுகாண்! ஏற்றமிகும் ஈரோட்டு நகரில்
விழுமியசெங் குந்தர்களே! அணிதிரண்டு வாரீர்!

"நாடெடுக்கும் முடிவனைத்தும் நாமெடுத்தல் நன்றும்
கூடெடுத்த மானுடர்தம் குறைதீரச் செய்வோம்
பாடுபட்டும் பயனின்றி வாடும்செங் குந்தர்
வீடுடனே நாடும்வளம் பெறவேவழி வகுப்போம்!

எழுப்பெழுபது- ஒரு திறனாய்வு

கவிஞர் தென்னவன், செம்பொன்னார் கோவில்.

முன்னுரை :

ஒருசமயம் சோழநாட்டு அரசன் விக்கிரம சோழன் மகன் இரண்டாம் குலோத்துங்க சோழன் அரசவையில் வீற்றிருந்தபோது, அவனுக்கு ஆசிரியராயும், அரசவைப் புலவராயும் சிறப்புற்றிருந்த நம் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் அவனைப் பார்த்து,

''ஆடுங் கடைமணி நாவசையாமல்
அகில மெல்லாம்
நீடுங் குடையிற் றரித்த பிரான்''

என்று தொடங்கிப் பாடி முடிக்கு முன்னே குலோத்துங்கசோழன் முந்திக்கொண்டு

''—என்று நித்தம்
பாடுங் கவிப்பெரு மானொட்டக்
கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்கச் சோழனென்
றேயெனைச் சொல்லுவரே.''

என்று முடித்துத் தான் அக்கூத்தர் பிரானுக்கு அடியவன் என்று கூறிப் போந்ததாக ஒரு செய்தி உண்டு,

இப்படி முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070—1118) விக்கிரமசோழன் (கி, பி. 1118—1143) அவன் மகன் இரண்டாம் குலோத்துங்க சோழன்; இரண்டாம் குலோத்துங்கனின் மகன் இராசராசன் ஆகிய சோழ மாமன்னர்கள் காலத்தில் அவர்களாலே பெரிதும் ஆதரிக்கப் பெற்று, பாராட்டும் மதிப்பும் பெற்று வாழ்ந்தவர்தாம் நம் கூத்தர்பிரான் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்,

இத்தகைய நம் கூத்தர் பாடிய நூல்கள் பலவற்றுள் நம் செங்குந்த குலப் பெருமையை — சிறப்பை—வள்ளன்மையை—வீரத்தை—பண்பாட்டை—ஒழுக்கத்தை—பாடிச் சிறப்பு செய்த '**ஈட்டி எழுபது**' எனும் நூலைப்பற்றி நம்மில் பலரும் நன்கு அறிவோம், இந்த **ஈட்டி எழுபதின்** பின்னே அவர் பாடியளித்ததுதான் '**எழுப் பெழுபது**' எனும் ஒப்பற்றச் சிற்றிலக்கியம்,

எழுப்பெழுபது :

ஈட்டி எழுபது பாடிய கூத்தர் சிரச்சிங்காதனத்திலிருந்து இறங்கி வந்த பின்னே, அச்சிங்காதனத்தைப் பார்த்து, தாம் நாளும் தொழும் கலைவாணியை எண்ணி, அவளையே முன்னிருத்தி, விளித்து, வெட்டுண்ட அத்தலைகளெல்லாம் அந்தந்த உடலங்களோடு மீண்டும் ஒட்டிக்கொண்டு உயிர்பெற்றெழும்படி வேண்டிப் பாடிய ஒரு சிற்றிலக்கியமே '**எழுப்பெழுது**' என்பது.

ஈட்டி எழுபது போலவே இந்நூலும் எழுபது பாடல்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு சிற்றிலக்கியம் என்பதை இந்நூலின் பெயரமைப்பே நமக்குச் சுட்டிக் கூறுகின்றது. ஆனாலும் நாம் செய்தத் தவக்குறையோ அல்லது தமிழ்செய்தத் தவக்குறையோ ஈட்டி எழுபதுபோல, **எழுப் பெழுபது** நூல் முழுமையும் நமக்குக் கிடைக்கவில்லை. காப்புச் செய்யுளும் இறுதிச் செய்யுளும் நீங்கலாக மொத்தம் பன்னிரண்டு பாக்களே இன்று நமக்குக் கிடைத்திருக்கின்றன.

வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்கள் பதிப்பித்த '**செங்குந்தர் பிரபந்தத் திரட்டு**' எனும் அரியதொரு தொகுப்பு நூலில் இவ்வெழுப் பெழுபது ஈட்டி எழுபதின் பின்னே இரண்டாம் நூலாக இணைக்கப்பட்டிருக்கிறது. இத் தொகுப்பு நூலை ஆய்வு செய்து முன்னுரை எழுதிய மறைந்தத் தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் இந்நூல் பற்றி,

> "இது சிரச்சிங்காதனத்தின் பொருட்டு வெட்டப்பட்ட தலைகள் உயிர் பெற்றெழும்படி கூத்தர் நாமகளை வேண்டிச் செய்ததாகும். எழுபது செய்யுட்களில் பன்னிரண்டே கிடைத்துள்ளன. ஒவ்வொரு செய்யுளிலும் முருகக் கடவுள் வீறு செவ்வையாகச் சொல்லப் படுகிறது. அறுபட்டத் தலைகள் உறையூரினின்றும் பறந்தோடி ஆங்காங்கே விழுந்துகிடந்த உடலோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டு உயிர்பெற்றன என்று கூறப்படுகின்றது. இதனால் கூத்தர் ஒட்டக்கூத்தர் எனப் பெயர்பெற்றனர் என்னும் வரலாறு வழங்குகிறது."

என்று கூறியுள்ளார். மேற்கண்ட பேராசிரியர் கூற்று ஒன்றே எழுப்பெழுதின் சிறப்பை நாம் அறியப் போதுமானதன்றோ?

முதல் பாட்டு :

இந்நூலின் முதற்பாட்டும் இறுதிப்பாட்டும் தவிர மற்றப் பாட்டுகள் அனைத்தும் 'வாணித்தாயே' என்று கலைவாணியை வேண்டுவதாய் முடிவில் அமைந்துள்ளன. முதல் பாட்டில், கூத்தர் கலைவாணியை நோக்கி,

> "கலைவாணி நீயுலகில் இருப்பதுவும்
> கல்வியுணர் கல்விவல் லோரை
> நிலையாகப் புரப்பதுவும் அவர்நாவில்
> வாழ்வதும் நிசமே யன்றோ?"

என்று கேட்டு, கலைவாணி உலகில் வாழ்வது உண்மையே என்று தம் மனத்தை உறுதி செய்துகொண்டு, அவளை விளித்து

''சிலைவாண ஞவிருந்தா யிரம்புயங்கள்
துணிந்துமுயர் சீவ னுற்றான்
தலையாவி கொடுத்திடும் செங்குந் தர்உயிர்
பெற்றிடவும் தயைசெய் வாயே!''

என்று ஒட்டியத் தலைகள் உயிர்பெற்றெழ வேண்டிக்கொள்கிறார்.

இறுதிப் பாட்டு:

இப் பாட்டில், கூத்தர் தாம் இயற்றிய ஈட்டி எழுபது எனும் கவிதை நூலுக்குச் செங்குந்தர்கள் தம் தலைகளையே விலையாக அளித்தார்கள்; தமக்கு ஒட்டக்கூத்தன் எனும் பெயரினையும் அளித்தார்கள் என்று கூறி பெருமை கொள்கிறார்.

''நிலைதந்தார் புவியினுக்கு யாவருக்கும்
அபிமானம் நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகர்க்குச் சீவனம்செய்
திடவென்றே கையில் யாண்டும்
விலைதந்தார் தமிழினுக்குச் **செங்குந்தர்**
என்கவிக்கு விலையா கத்தான்
தலைதந்ததார் எனக்கொட்டக் கூத்தனெனும்
பெயரினையும் தாந்தந் தாரே.''

கூத்தர்க்கு ஒட்டக்கூத்தர் எனும் பெயர்வரப் பலரும் பலவிதமாய்க் காரணம் கற்பித்துக் கூறுவர், இவர் இரு கண்ணிகளை இணைத்து ஒரு வெண்பாவாக ஒட்டிப்பாடும் திறமையுடையவர் என்பதாலே அப்பெயர் பெற்றார் என்றும், 'ஒட்டம்' என்பது 'பந்தயம்' எனப் பொருள் தருதலால் பிற புலவர்களுடன் பந்தயம் வைத்துப் பாடும் புலவர் என்னும் பொருளில் அப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர். இக் கூற்றுக்கள் ஒருவாறு பொருந்துமேனும், கூத்தரே தம் கூற்றாகத் தமக்கு 'ஒட்டக்கூத்தன்' எனும் பெயர்வரக் காரணம் இதுதான் என்று இப்பாட்டில் அறுதியிட்டு உறுதியாகக் கூறுவதால், இக்காரணமே தக்கச் சான்றாக அமைவதை நாம் மனம் கொள்ளுதல் வேண்டும்.

பிற பாட்டுகள்:

இதற்கடுத்துவரும் பதினொரு பாட்டுகளும், முதலிரண்டு அடிகளில் நம் குல முதல்வன் முருகவேளின் வீறும் சீரும் பேசப்பெற்று, பின்னிரண்டு அடிகளில் செங்குந்தர்களாகிய நாம் அம் முருகவேளின் வழித்தோன்றல்கள் என்பதை உறுதிப்படுத்தி, அத்தகைய செங்குந்தர்களின் தலைகள் உடலுடன் கூடி உயிர் பெற்றெழும்படி வாணித்தாயை வேண்டிக்கொள்வதாகவும் அமையப் பாடப் பட்டுள்ளன. இப்பாட்டுகளின் ஈற்றடிகளின் ஈற்றில் 'வாணித்தாயே' என விளித்து அமைந்திருப்பது, வாணியிடம் கூத்தர் கொண்டிருந்த ஆராப் பெருங் காதலையும், நம்பிக்கையையும் நாம் அறிந்துகொள்ள நல்ல சான்றுகளாக அமைந்துள்ளன; பாட்டிற்கு நல்ல ஓசையின்பத்தையும் நல்குகின்றன. ஆம்; நம் கூத்தர் வாணியின் அருள் பெற்ற கவிச்சக்கரவர்த்தியன்றோ?

முடிவுரை :

ஈட்டி எழுபது செங்குந்தர்களின் பெருமையை விளக்க எழுந்ததுபோல, எழுப் பெழுபது செங்குத்தர்களின் குல முதல்வன் முருகவேளின் பெருமையை விளக்க எழுந்த ஓர் அருமையான நூல் எனலாம். இத்தகைய அருமையான நூல் முழுவதும் நமக்குக் கிடைத்திருக்குமானல் குமரப் பெருமானின் இன்னும்பல சிறப்புக்களையும் கூத்தர்பிரான் தம் கவிக்கண்கொண்டு எப்படிப்பார்த்தார் என்று அறியும் வாய்ப்பு நமக்குக் கிடைத் திருக்கும்.

இந்த நூல் முற்றிலும் மறைந்துவிட்டது என்று நாம் எண்ணத்தேவையில்லை. இந்நூல் எங்கேனும் ஒரு செங்குந்தர் இல்லத்துப் பரணின்மேல் உறங்கலாம்; அல்லது சுவடிக்கட்டுகளோடு சுவடியாகச் சேர்ந்து இருக்கலாம்; அல்லது இதன் பயனை உணராது வீணே பூசையறையில் வைத்துஇருக்கலாம்; யார் கண்டார்கள்!

எனவே, இக்கட்டுரையைக் காணும் அத்தகையப் பெரியோர்கள் இந்நூல் தம்மிடம் இருக்குமானல் அதனை நமது **தென்னிந்திய செங்குந்தப் பெருமக்கள் கழகத்தின் தலைமையலுவலகத்திற்கு** அனுப்பிவைப்பார்களானல் செங்குந்தர் உலகம் அன்னவர்க்குத் தம் நெஞ்சு நிறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளும். அந்நாள் வருமா? எம்போன் ரோர் இதயம் மகிழுமா?

> ''கார்வாழி வாழி; கலைமகள் வாழி; கனகமயில்
> கூர்வேலுஞ் சேவற் கொடிவாழி; வாழி குகனிருதாள்
> சீர்வாழி வாழி; தெய்வயானை வள்ளி சிறந்தக்சி
> யூர் வாழி; செங்குந்த வேலவர் வாழி உலகெங்குமே!''

[செங்குந்த வேலவர் திருக்கை வழக்கத் தந்தாதி]

கேணி நீரின் அளவு அதன் ஆழத்தைப் பொருத்து அமைவதைப் போல ஒருவர் கூட்டுறவுத் துறையில் அடையும் வெற்றியும் அவரின் ஆழ்ந்த பற்றுள்ளத்தைப் பொருத்தே அமையும்.

★ ★ ★

பெரியோர்க்கு அடங்கி நடத்தல் ஒருவரது வளர்ந்த உள்ளத்தைக் காட்டுகின்றது.

ஆயிரம் உண்டிங்கு ஜாதி!

C. சந்திரசேகரன்; B. Sc., ஈரோடு.

கலையால், கலாச்சாரத்தால், பண்பால், நாகரிகத்தால், செல்வச் செழிப்பால் உயர்ந்தோங்கிய பாரதத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி என்ற போர்வையால் வாணிக நோக்குடன் நுழைந்த வெள்ளையன் நம்மிடையே நிலவிய ஒற்றுமையின்மையையும், குழப்பங்களையும், தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு பாரத அன்னையின் கரங்களிலே அடிமை விலங்கிட்டுப் பொன்னையும், பொருளையும் அள்ளிச்சென்று தன் நாட்டில் மேலும் வளம் பெருக்கினான். இதனால் வறுமை மிஞ்சி, தாழ்வுற்று. விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டுநின்ற பாரத தேசந்தன்னை—பாரத சமுதாயத்தினைக்கண்டு உள்ளம் கொதித்து, அன்னையின் கைகளில் பூட்டிய விலங்கு தகர்த்தெறிய முற்பட்ட பாரதி, ஒற்றுமையின்மைக்கும் உட்பூசல்களுக்கும் அடிகோலிய ஜாதிகள் சமுதாயத்தினை விட்டு ஒழிக்கப்படவேண்டும் என்று உணர்ந்து, உறுதி பூண்டு, நம்மை நோக்கி ஜாதிகள் இல்லையடி பாப்பா எனச் சூளுரைத்தார். வெள்ளையர் ஆட்சி நம் மண்ணில் நிகழாவண்ணம் தடுக்கப்பட்டிருக்குமேயானால் இந்தச் சூளுரைக்கு இடமில்லாமல் போயிருக்கும். "ஆயிரம் உண்டிங்கு ஜாதி, எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி" என்று ஜாதியினைக் கண்டிக்க முற்பட்ட பாரதியின் வாக்கினிலே அவர் அந்நியர் ஆட்சி ஏற்படுவதற்குக் காரணமாக விளங்கிய சூழ்நிலையை உருவாக்கிாதனால்தான் சாடுகிறார் என்பது தெரியவரும். பாகுபாட்டினை நீக்குவதற்குப் பாடுபட்ட காந்தியடிகள் தாழ்வுற்ற மக்களை உயர்வாக்கும் முகத்தான் அவர்களுக்கு ஹரிஜன் என்ற புனிதச்சொல்லினை அளித்தார். ஜாதிகள் வேரறுக்கப்படவேண்டும் என்று பலரால், பலகாலங்களில் முயன்றபோதுங்கூட அங்கங்கே அவைகள் செயல்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன, சமயங்கள், சங்கங்கள், ஜாதிகள் ஆக எதுவாக இருப்பினும் சமுதாய நலனைக் கருத்தில்கொண்டு, அவற்றிற்காகப் பாடுபடுவோமேயானால் அவைகள் மக்களால் வரவேற்கப்பட்டுச், செல்வாக்கு பெறுகின்றன, அவைகளே மாறாக சமுதாய நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலே காரியங்களில் ஈடுபடும்போதுதான் மக்களால் புறக்கணிக்கப்படுகின்றன. ஒரே மண்ணில் தோன்றிய நம்மிடையே தீண்டத்தக்கவர்—தகா

அன்னையின் புகழுக்கு இழுக்குத்
தவர் என்ற வேறுபாடு திகழ்வது நம் லட்சியங்கள், போன்ற நற்
தருவதாகும். உயர்ந்த எண்ணங்கள். சிறந்த தவிர. பிறப்பால்
செயல்களைக் கொண்டுதான்மனிதனை மதிக்கவேண்டுமே
பாகுபாட்டினை உருவாக்குவது நம்மை நாமே அழித்துக்கொள்வதைப் போன்
றதாகும். ஜாதிகள் உருவாகும்போது தொழில்களை அடிப்படையாகக் கொண்டு
தான் பிரிக்கப்பட்டனவேயன்றி, பிறப்பினைக்கருதி பிரிக்கப்படவில்லை என்
பதனை மனதில்கொள்ளவேண்டும். முற்காலத்தில் மனிதன் தாழ்ந்தவனா
உயர்ந்தவனா என்று பாராமல் அவன் சமுதாய வளர்ச்சிக்குச் சிறந்த வகையில்
நற்பணியாற்றியவனைச் சமுதாயம் போற்றிஏற்றுக்கொண்டது, சேக்கிழாரின்
பெரியபுராணப் படைப்பினிலே சமயத் தொண்டின்மூலம் சமுதாயத்தில்
உயர்ந்து விளங்கிய அனைத்துப்பிரிவினருள் சிறந்தவர்களை நாயன்மார்களாகத்
திகழ்வதைக் காணலாம். நம்மிடையே நிலவுகின்ற கருத்தினைப்போல்
அன்றும் நிலவியிருந்தால், தாழ்ந்த வகுப்பினைச்சார்ந்த சில நாயன்மார்கள்
புறக்கணிக்கப்பட்டிருப்பார்கள், இதனால் நாம் சமயத் தொண்டினில் சிறந்து
விளங்கிய சில நாயன்மார்களை இழந்திருக்கக்கூடும் மாதவியின் மகள்
மணிமேகலை பல சோதனைகளையும், இன்னல்களையும் மீறி, சிறந்த அறவுரை
களை நல்கி; சமயத்திற்கு ஆற்றிய பணியினைச் சமுதாயம் ஏற்றுக் கொண்ட
காரணத்தால்தான், அவள் காப்பியத் தலைவியாக மக்களால் இன்றும் மதிக்கப்
படுகிறாள், கோபுரங்களில் காணப்படும் சிற்பங்களில் நாம் பலவகைப்பட்ட
இனத்தவரையும் காணலாம்.

ஒற்றுமையின்மையினையும், உட்பூசல்களையும் இன்னும் அவைகள்
வளர்க்க முற்படுமேயானால் சமுதாயத்தில் நீடித்திருக்க வேண்டியதில்லை.
சட்டத்தால் அவை அழிவற்கு முயலப்படும். கலப்பு மண ஆதரவால் ஏற்றத்
தாழ்வு மனப்பான்மை நீங்க முயலப்படுகின்றது. சமய போதகர்கள் நிகழ்த்தும்
அறவுரைகள் மூலம் அறவே ஜாதிகள் சமுதாயத்தினை விட்டு நீங்குவதற்குப்
பாடுபடவேண்டிருக்கும்.

ஜாதிகள் நீடித்து நிலைக்கவேண்டும் என்ற அவாவினை தன்னகத்தே
கொண்டிருக்குமேயானால் அவைகள் ஒன்றினை மற்றொன்று புறக்கணிப்பதனை
விடுத்து, சம அந்தஸ்த்துடன் பழகவேண்டும், தங்கள் இனத்தவர் முன்
னேற வழிவகுத்தல் வேண்டும் அறியாமை நீங்கிட கல்விக்கூடங்கள் அமைத்
துக் கல்வித்துறையில் முன்னேற உதவுதல், தங்களில் குறைந்த வருவாய்
உடையவர்களின் கல்விக்காக நிதி ஒதுக்குதல், மருத்துவமனைகள் அமைத்துச்
சிறந்த மருத்துவ வசதி அளித்து. சுகாதாரத்தைப் பேணிக்காத்தல். தங்களி
னத்தவர் புரிகின்ற தொழில் உள்ள குறைபாடுகளை அறிந்து அவற்றை நீக்க
அரசிடம் முறையிட்டு ஆவண செய்தல், உற்பத்திப் பெருக்கத்தால் தேங்கிக்
கிடக்கும் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடுசெய்தல்,
வேலைவாய்ப்பு அற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க தொழிற்

கூடங்கள் அமைத்தல்போன்ற நாட்டிற்கும், நாட்டின் நலனுக்கும் உகந்த நற்காரியங்களை அமல் நடத்தும் முயற்சியில் ஈடுபடுமேயானால், ஜாதிகள் நீங்க வேண்டும் என்று கூறுபவர்கள் ஒருவரும் இலராவர்.

ஒரே தொழிலில் கண்ணோட்டம் செலுத்தி நன்மைபெற தொழில்களை அடிப்படையாகக்கொண்ட ஜாதிகள் தோன்றின. அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல் என்ற பழமொழிக்கு இணங்க ஒருவன் பல தொழில்களிலும் நாட்டம் கொண்டிருப்பானேயானால் நன்மை குறையும். இன்று சில தொழில் களில் சிலகாலங்களில் பயன் விளையும்போது மற்ற தொழில்புரிபவர்கள் அனைவரும் லாபம்கருதி அதனுள் நுழையும்போது அத்தொழிலும் சிரமப் படுகிறது மக்களையும் சிரமப்படுத்துகின்றது.

ஜாதிகள் சமுதாயத்திற்கு நன்மைபுரியும் வகையினிலே செம்மையான நிலையினிலே திகழவேண்டும். அல்லது பாரதி போன்றவர்களின் கூற்றுக்கு ஏற்ப அறவே சமுதாயத்தில் இல்லாமலிருக்க வேண்டும். இதைவிடுத்து இரண்டுக்கும் மாறுபட்ட நிலையினிலோ அல்லது இரண்டுக்கும் மாறுபட்ட நிலையினிலோ அல்லது இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையினிலோ அவைகள் செயல்படும்போதுதான் அவைகள் ஒழிக்கப்படவேண்டும், வேரறுக்கப்பட வேண்டும் என்ற எண்ண்ம் உருவாகிறது.

முதலியார் பட்டச் சிறப்பு

இந்திர னயன்மா றேவர் யாவர்க்கு முதன்மையாக
வந்தபான் மையினுற் சூல மழுப்படை யத்தனுர்க்கு
முந்திய நாமந் தானு முதலிய ராகை யாற்செங்
குந்தர்சந் ததிக்கு மப்பேர் முதலியரென்று கூறும்.

—ஈட்டியெழுபது.

With the Best Compliments from :



kalaimagal printers

FINE ART PRINTERS & BOOK BINDERS

61, KUTCHERY STREET, ERODE-638001

PHONE • 2892

We have Specialised in Printing of

MONTHLY CALENDARS BOOKS &

SOUVENIRS

Please Choose us for Creative Printings

"கல்வெட்டில் நெசவியல்"

அ. அப்துல் மஜீத், எம். ஏ.,
பதிவு அலுவலர், தொல்பொருள் துறை, திருச்சி.

கல்வெட்டின் துணைகொண்டு பல்லவர், சோழர், சம்புவராயர், பாண்டியர், விஜயநகரப் பேரரசர்களின் காலங்களில் நெசவுத் தொழிலைச் செய்தவர் எவ்வாறு இருந்தனர் என்றும், அவர்களுடைய தொழிலின் முக்கியத்துவத்தையும், சமூகத்தில் அவர்களுக்கிருந்த செல்வாக்கையும், உரிமைகளையும் பற்றிச் சிறிது நோக்குவோம்.

பல்லவர் காலம் :

இரண்டாம் நந்திவர்மப் பல்லவனுடைய (கி பி. 731–796) காசக்குடிச் செப்பேடும் தண்டந்தோட்டம் செப்பேடும் தறியைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இத்தறியிறையிலிருந்து அரசிற்கு வருவாய் வந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

கோப்பெருஞ்சிங்க தேவனின் (கி பி. 1243–79) எட்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த சிதம்பரம் கல்வெட்டு சாலிய வணிகர்களுக்கு இல்லங்கள் அமைத்துக் கொள்ள நிலமளித்ததையும், அவர்கள் அதற்காக சிதம்பரத்திலுள்ள இறைவனுக்கும் இறைவிக்கும் தேவையான ஆடைகளை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் குறிப்பிடுகின்றது இக்கல்வெட்டில் இருந்து அவர்கள் அரசிடமிருந்து பெற்ற சலுகையையும், அவர்களுடைய தொழிலுக்கிருந்த முக்கியத்துவத்தையும் நன்கு அறிய முடிகிறது.

சோழர் காலம் :

பராந்தகச் சோழனின் (கி பி 907-955) இரண்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு, கடிகாவன் களத்தன் என்னும் கைக்கோளப் படையைச் சேர்ந்தவன் 90 ஆடுகளை திருகுடமூக்கில் எழுந்தருளியுள்ள திருக்கீழ் கோட்டாறு பரமசுவாமிக்கு நொந்தா விளக்கெரிப்பதறகாகக் கொடையாக அளித்தான் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.

இம்மன்னனின் இரண்டாம் ஆட்சி ஆண்டைச் சேர்ந்த உடையார்குடி கல்வெட்டொன்று கூதத்பெருமாளுக்கு ஆண்டொன்றுக்கு ஒரு சோடி ஆடை கொடுக்க வேண்டும் என்பதற்காக கைக்கோளப் படையைச் சேர்ந்த அரையன் ஜெயவிடங்கன் என்பவன் பத்துக்காசு கொடையை அளித்துள்ளான் என்பதையும், இக்கொடையை அளித்தவர் கூத்தபிரானுக்கும், கணபதிக்கும், பிச்சதேவருக்கும் கோயில்கள் எடுப்பித்துள்ளதாகவும் குறிப்பிடுகிறது

உத்தமச் சோழன் (கி. பி 970–985):

இவருடைய காலத்தில் நெசவுத் தொழில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்திருந்தது குறிப்பாக காஞ்சிபுரத்தில் வாழ்ந்த நெசவுத் தொழில்

புரியும் மக்கள் ஆலயங்களிலும் அரசியலிலும் மிகவும் ஈடுபாடுடையவர்களாக இருந்தனர் காஞ்சிபுரத்தில் இந்நெசவாளர்கள் வாழ்ந்த பகுதிகள் நான்கு இருந்தன அவைகளைப் 'பாடிகள்' என்று உத்தமச் சோழனின் செப்பேடு குறிக்கிறது இங்கு வசித்தவர்கள் 'பட்டசாலியன்கள்' என்று அழைக்கப் பட்டனர் இவர்கள் பட்டாடை நெய்பவர்கள். இவர்கள் அரசர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு மட்டுமே ஆடை நெய்பவர்கள் உத்தமச் சோழன் இவர்களைக் காஞ்சிபுரத்திலுள்ள ஊரகம் என்ற கோயிலின் நிதி சம்பந்தப்பட்ட விவகாரங்களைக் கவனிக்கும்படி நியமித்தான். மேலும் சோழ நியமம் என்ற இடத்தில் வசித்தவர்களின் மீது விதித்திருந்த வரியை நீக்கி ஆலய சம்மந்தப்பட்ட கணக்குகளை மாதம் ஒருமுறை பரிசோதிக்கும்படி நெசவாளர்களுக்குப் பொறுப்பை அளித்தான்.

முதலாம் இராசராசன் (கி. பி. 985-1016)

இவ்வரசனுடையக் கைக்கோளப் படையினர் வருவாய்த் துறை அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் சோமூரில் உள்ள இறைவியைச் சூரிய கிரகணத்தின் போது ஊர்வலமாகக் கொண்டு வரும் நாளை விழாவாகக் கொண்டாடவில்லை என்பதற்காக அக்கோயிலைச் சார்ந்த பொறுப்புடையவர் களின் மீது தண்டம் விதித்தனர்.

முதலாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1012-44.)

இம்மன்னனது இரண்டாம் ஆட்சி ஆண்டில் கைக்கோளப் பெரும் படையைச் சேர்ந்தவர்கள் திருவிடைமருதூரிலுள்ள மகாலிங்க சுவாமி கோயிலில் ஒரு சன்னலும், ஒரு கதவும், ஒரு நிலைப்படியும், அங்குள்ள மண் டபத்தில் முன்னே படிகளும் கட்டுவித்தனர் என்று அங்குள்ள கல்வெட் டொன்று குறிப்பிடுகிறது

முதலாம் இராசாதிராசன் (கி. பி. 1018-54).

இம்மன்னனது 35 ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு திருவிடைமருதூர் என்ற கிராமம் அங்கு உறையும் வராகப் பெருமாளுக்குக் கொடையாக அளிக்கப்பெற்றது என்றும் அக்கிராமத்திலிருந்து வரும் தறியிறையிலிருந்து வரும் வருவய் அரசன் பிறந்த நாளான பூர்வ பங்குனித் திருவிழாவிற்குப் பயன்படுத்தப்பட்டதென்றும் குறிப்பிடுகிறது

வீரராஜேந்திரன் (கி. பி. 1063-69).

இம்மன்னனது இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு திருவொற்றி யூரிலுள்ள ஜெயசிங்க குலகால பெருந்தெருவில் வசிக்கும் நெசவுத் தொழில் செய்பவர்களும் சாலிய வணிகர்களும் அரசன் பிறந்த நாளன்று நடக்கும் விழாவிற்கு அவர் அவர்களுக்குரிய பங்கீட்டுப் பணத்தை அளிக்கவேண்டு மெனக் குறிக்கிறது.

மூன்றாம் இராசராசன் (கி. பி. 1216-1279)

இம்மன்னனின் 24-ஆம் ஆண்டுப் பொய்கைக் கல்வெட்டு வரிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது இரண்டு வகை வரிகளைக் குறிப்பிடுகிறது. அவை

யான நெல்லாயம் காசாயம் ஆகும். தறியிறை காசாயம் என்ற பிரிவின் கீழ் வந்துள்ளது ஆகவே இதிலிருந்து தறியின் மீது விதிக்கப்பட்டிருந்த வரி காசாகவே வசூலிக்கப்பெற்றதெனபதை நன்கு அறியலாம்

சீன வரலாற்றாசிரியர் சௌ-ஜு-குவா (Chau-Ju-Kau) சோழ நாட்டில் இருந்து சீனாவிற்கு இறக்குமதியாகும் பொருள்களின் பட்டியல்களைக் குறிப்பிடும் பொழுது, பருத்தியாலான துணிகளும், பல நிறமுள்ள பட்டு நூலையும் சோழ நாட்டிலிருந்து கி பி பதின்மூன்றாம் நூற்றாண்டு வரைக்கும சீனா இறக்குமதி செய்தது என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து நம் பண்டைய நெசவுத் தொழிலின் பெருமையையும், வெளிநாட்டு வணிகத்தையும், நன்கு அறிய முடிகிறது.

சம்புவராயர் காலம்

இராசநாராயண சம்புவராயர் (கி. பி. 1337-60):

இவரது ஏழாவது ஆட்சி ஆண்டு நெறும்பூர் கல்வெட்டு திருவாலீஸ்வரமுடைய நாயனார் கோயிலைச் சுற்றி வசித்து வந்த கைக்கோளரின் மீது கடமையும், வாசல் வரியும் ஒரு குறிப்பிட்ட தொகை செலுத்த வேண்டும் என்று நிர்ணயிக்கப் பெற்றதைக் குறிப்பிடுகிறது

இவரது மற்றொரு புலிப்பார கோயில் கல்வெட்டு திருப்புலிப்பாவை நாயனார் கோயிலைச் சுற்றியுள்ள திருமாட விளாகம் என்னும் பகுதியில் வசிக்கும் கைக்கோளர்களும், சாலியர்களும் தறிக்கடமையும் பேர்கடமையும் கோயில் இறைவழிபாட்டிற்காக அளிக்க வேண்டும் என்ற செய்தியைக் குறிப்பிடுகிறது

பாண்டியர் காலம்:

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1238-1253).

இம்மன்னனது பதினைந்காம் ஆட்சி ஆண்டு களத்தூர் கல்வெட்டு முன்குடுமீஸ்வரர் கோயிலுக்கு அக்கோயிலைச்சார்ந்த கைக்கோளர்களில் ஒருவரான கக்குநாயகன் என்பவர் இறைவழிபாட்டிற்காக நிலம் கொடையாக அளித்தமையைக் குறிக்கிறது.

இக்கோயிலிலேயே காணப்படும் மற்றொரு கல்வெட்டு மல்லந்தை என்னும் கைக்கோளன் கோயில் வழிபாட்டிற்காக நிலத்தைக் கொடையாக அளித்தான் என்றும், முன்னர் குறிப்பிட்ட கக்குநாயகன் ஆளுடைய நாயகன் ஆகியோர் இவனுடைய சகோதரர்கள் என்றும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இதிலிருந்து ஒரே குடும்பத்தைச்சேர்ந்த சகோதரர்கள் ஒருவர் பின் ஒருவராக கோயிலுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர் என்று அறியமுடிகிறது

இம்மன்னனின் பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டு புலிப்பாரகோயில் கல்வெட்டு கைக்கோள வகுப்பைச்சார்ந்தவர்களும் அவர்களுடைய புதல்விகளும், குழந்தைகளும் கோயிலில் நடக்கும் எல்லாவிதமான செயல்களிலும் சுதந்திரமாக ஈடுபடவும். கிராமத்தில் நடக்கும் எல்லாவிதமான செயல்களிலும் ஈடுபடவும், சுதந்திரமாக இருக்கவும், விழாக்காலங்களிலும், சிறப்பான

நாட்களிலும் இருப்பவர்களில் முதன்முறையாக வெற்றிலை பெறும் உரிமை இவர்கள் பெற்றிருந்தனர் என்றும் குறிப்பிடுகிறது.

இரண்டாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டிய தேவன் (கி.பி. 1276-90)

இம்மன்னனது பதினைன்காம் ஆட்சி ஆண்டு காஞ்சிபுரம் கல்வெட்டு அரசனுக்கும், கோயிலுக்கும் நெசவாளர்களும், கைக்கோளர்களும் சாலிய நெசவாளர்களும் ஆண்டு ஒன்றுக்கு ஆறு பணம் வீதம் ஒவ்வொரு தறிக்கும் வரியாக அளிக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது

ஜடாவர்மன் வீரபாண்டியன் (கி பி. 1301, ஜூன் 20),

கோட்டமங்கலம் சிவன் கோயிலில் காணப்படும் இம்மன்னனுடைய கல்வெட்டு ஆவுடையார் சிலையையும் நாச்சியார் சிலையையும் அமைத்த ஆதித்த தேவன் என்பவனுக்குக் கைக்கோள முதலிகள் வீடு கட்டிக் கொள்வதற்கு ஏற்ற வீட்டு மனையைக் கொடையாக அளித்தமையைக் குறிக்கிறது.

மாறவர்மன் வீரபாண்டிய தேவன் (கி. பி. 1334):

சிதம்பரம் நடராசர் கோயிலில் காணப்படும் இம்மன்னனின் எட்டாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு சோழிய சாலியர் என்னும் வகுப்பைச் சார்ந்த நெசவாளர்கள் வாழ்வதற்கு கட்டடங்கள் அமைத்துக் கொள்ளத் தனியாக அவர்களுக்கு நிலம் அளிக்கப் பெற்றது என்றும், அவர்கள் வாழ்ந்த பகுதிக்கு தெரியவர நின்ற பெருமாள்புரம் எனப் பெயரிடப் பெற்றது என்றும் இங்கு வசிப்பவர்கள் சிவகாம சுந்தரி அம்மைக்கு குடிமக்கள் முதல் விளைவைக் கோயிலுக்குக் கடமையாகச் செலுத்தும் விழாவின் போது ஒவ்வொரு ஆண்டும் நான்கு புதிய துணிகளை அளிக்க வேண்டுமென்றும் திருஞான சம்பந்தன் கோயிலுக்கு ஐந்து சிறிய துணிகளைக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறது.

விஜயநகரப் பேரரசு காலம்:

இரண்டாம் ஹரிகரர் (கி பி. 1337-1404):

திண்டிவனம் வட்டத்திலுள்ள இம்மன்னனின் அகத்தீஸ்வரர் கோயில் கல்வெட்டு கைக்கோளருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வரிச்சலுகையைக் குறிப்பிடுகிறது இக்கோயிலின் சுற்றுப்புறத்தில் வசித்த கைக்கோள நெசவாளர்கள் வரிச்சுமை தாங்க முடியாத காரணத்தினல் கோயிலுக்குக் கட்ட வேண்டிய பணத்தைக் கட்டாமல் வேறிடம் புகுந்தனர். ஆகவே இக்கோயில் நிதியில்லாமையால் பாதிக்கப்பட்டு. கோயிலை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே கோயிலை நிர்வாகம் செய்பவர்கள் நெசவாளர்களை அணுகி அவர்களுடைய நெசவுத் தொழிலை மீண்டும் கோயிலின் முன் புறத்திலேயே ஆரம்பிக்கக் கேட்டுக் கொண்டனர் மேலும் அவர்கள் மீது விதித்திருந்த வரியைப் பரிசீலித்து வரி குறைக்கப் பெற்றமையை நன்கு எடுத்தியம்புகிறது.

இம்மன்னனுடைய மற்றொரு, பாடி என்ற ஊரின் கல்வெட்டுத் தொழில் புரியும் பதினெட்டு இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் மீது விதிக்கப் பட்டிருந்த தொழில் வரியைக் குறிப்பிடுகிறது, அத்தொழில் வரியில் பட்டாடை நெசவு செய்பவர்களின மீது விதிக்கப்பட்டிருந்த வரி, பட்டாடை ஆயம் என்றும் பட்டாடை நெய்வதற்கு வேண்டிய பட்டு நூலின் மேல் விதிக்கப் பெற்ற வரி பட்டாடை நூலாலயம் என்றும் குறிப்பிடுகிறது.

திருவள்ளுவர் மாட்சி

ந. ரா. முருகவேள், M. A., M. O, L.
ஆசிரியர், 'திருக்கோயில்' சென்னை.

முன்னுரை :-

திருவள்ளுவர் ஒரு சிறந்த பெருங்கவிஞர். ஒப்புயர்வற்ற நீதி நூல் ஆசிரியர். மிகச் சிறந்த தத்துவஞானி; இணையறற் இலக்கியப் பேராசிரியர்; அரும்பெரும் அரசியல் நுண்ணறிஞர்; பொருவிலாப் பொருளியல் மேதை; தன்னிகரற்ற பல்கலைக்குரிசில்; உலகம் முழுவற்குமே ஒரு பெரும் வழிகாட்டி காலமும் இடமும் கடந்து, சாலவும் நிலை பெற்று, ஞாலமே புகழ்ந்து வியக்கும் திருக்குறள் என்னும் செந்தமிழ்த் தெய்வீக அற நெறிப் பெரும்பனுவலை இயற்றி அளித்த, அரும் பெரும் வள்ளல் அவர்; பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும், அவர் தம் அருளுரைகள் அமைந்து பொலிந்து விளங்குகின்றன.

உலகப் பெரும் சமயத் தலைவர்களும் சான்றோர்களும் கூறியுள்ள கருத்துக்கள் எல்லாம், திருக்குறளில் செறிந்து கிடக்கக் காண்கின்றோம். திருவள்ளுவர் எல்லாச் சமயத்தவரும் ஒப்புக்கொள்ளத்தக்கவகையில், என்றும் மாறாத அடிப்படை வாழ்வில் உண்மைகளை நடுவுநிலை பிறழாமல் நன்கினிது கவைமிக விளக்கியருளுகின்றார், அவர் தம் நூல், நவில்தோறும் நயம் பயக்கின்றது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போலக் கற்றனைத்தூறும் நற்கருத்துக்களை உடையதாக மிளிர்கின்றது. ஒரு நாடு—ஒரு காலம்—ஒரு மொழி— ஓர் இனம் என்பவற்றிற்கே உரியதாகிவிடாமல், எல்லாக்காலமும்—எல்லா நாடும்—மொழியும்—இனமுமாகியவற்றைச் சேர்ந்த மக்கள் அனைவருக்குமே உரிய, மாபெரும் பொதுமுறை நூலாகத்திருக்குறள் திகழ்கின்றது.

வாழ்க்கையில் ஒவ்வொரு கூறுபற்றியே. நூல்களெல்லாம் பொதுவாக விளக்கும். ஆனால் வாழ்க்கையின் பலதிறக் கூறுகளையும் முழுவதாக ஒருசேர, முன்னொடு பின் முரண் படாமல் விளக்கும் திறனில், திருக்குறளுக்கு இணையாக ஒரு நூலும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இல்லறத்தான் துறவறத்தான், அரசன், அமைச்சன், நண்பன், பகைவன், போர்வீரன், தூதுவன், கற்றோன், கல்லான், கள்ளுண்பான், கவறுடுவான், இரவலன், புரவலன், ஆண்கள், பெண்கள், முதலிய அனைவருக்குமே. ஏற்ற பெற்றி அறி வுரைகள் கூறும் அரும்பெறற் சமுதாயப் பெருநூலாகத், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் தலைசிறந்து திகழ்கின்றது. அறம் பொருள் இன்பம் என்னும் முப்பெருந் தலைப்பில், எப்பெரும் பொருளையும் உண்டாக்கிக் குறைவிலா நிறைவாய் விளக்கும் முறையில், தெய்வப்புலவர் திருவள்ளுவருக்கு நிகராவார் பிறர் எவருமே இலர்,

கௌடில்யர் :-

திருவள்ளுவரின் மாட்சி, அவரை வேறு பிற ஆசிரியர்களோடு ஒப்பிட்டுக் காண்ப தனுலும், மிகவும் நன்கு நமக்குப் புலப்படும். திருக்குறளின் பொருட்பாலேக் கௌடில்யரின் அர்த்த சாத்திரத்திற்கும், காமத்துப்பாலே வாத்ச்யாயனரின் காம சூத்திரத்திற்கும், சிலர் ஒப்பிடுவதுண்டு. அஃது ஒருபுடை ஒப்புமையாகுமேயன்றி, முழுவதும் ஏற்புடைத் தாகாது. கௌடில்யரின் அர்த்த சாத்திரத்தில் உழவருக்கு ஒரு சிறிதும் முதன்மையளிக்கப்படவில்லே. அரசன் குடிமக்களே அச்சுறுத்தியும், வற்புறுத் தியும், தனது வருவாயைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கூறி, நீண்டதொரு வரிப் பட்டியலேயும், அர்த்த சாத்திரம் வகுத்துத் தந்துள்ளது. வருணுச்சிரம சாதிப்பாகுபாடு களே அடிப்படையாகக்கொண்டே, அர்த்தசாத்திரம் அமைந்துள்ளது. 'நீதிநெறி பிறழாமல்தான் ஒருவன் பொருளீட்டுதல் வேண்டும்' என்று கூறும் குறள் நெறிக்கும், பொருளீட்டுதலில் நீதிபற்றி ஏதும் நிணக்க வேண்டுவதில்லே எனப் போதிக்கும் இயல்பிற் செல்லும் அர்த்தசாத்திரத்திற்கும் உள்ள இடையீடு, மிகப்பெரியது.

குடிமக்களின் கரவின்மை, அறியாமை, மூட நம்பிக்கை, சமயவுணர்வு ஆகியவற் றைப் பயன்படுத்திக்கொண்டு, ஓர் அரசன் தன் பணப் பெட்டியை நிரப்பிக்கொள் ளலாம் எனக் குறிப்பிற் புலப்படுத்தி, அதற்குரிய வழிவகைகளேயும் கௌடில்யர் தமது நூலில் வகுத்துரைக்கின்ருர். மேலும் சூதுகுடி இணேவிழைச்சு என்பனபோன்ற இழி செயல்களுக்கும் ஊக்கம் அளித்து, அவ்வாற்ருலும் அரசன் தன் வருவாயைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது அதன் கொள்கை. இவையெல்லாம் திருவள்ளுவருக்குச் சிறிதும் உடன்பாடு அல்ல. இங்ஙனமே, அறநெறியைப் பொருட்படுத்தாமல் புறக்கனித்துத் தீய சூழ்ச்சித்திறங்கள் பலவற்றைக் கூறும் மாக்கியவல்லி (Machiavelli)யில் கொள்கைகள் பலவும், திருவள்ளுவர்க்கு உடன்பாடு உடையன அல்ல. ஓர் அரசன் நரியைப்போன்ற சூழ்ச்சித்திறம் மிக்கவனுதல் வேண்டும் என்பது, மாக்கியவல்லியின் கொள்கை, அரசன் அரிமாப்போன்ற பெருமித இயல்புடையவனுகப் பிறங்குதல் வேண்டும் என்பது, திருவள்ளுவரின் கொள்கை. இதுவே இவ்விருவருக்கும் உள்ள இடையீட்டின் அளவை, நம்மனேர்க்குப் புலப்படுத்தப் போதியதாகும்,

வாத்ச்யாயனர் :-

இவ்வாறே திருவள்ளுவரும் வாத்ச்யாயனரும், ஒருவரோடொருவர் நெடுந் தொலேவினர். திருவள்ளுவர் தூய தெய்விகக் காதலே விளக்கினர். வாத்ச்யாயனர் தீய இழிந்த காமத்திறன் பற்றியே விரித்துரைத்தனர். பாலுணர்ச்சியைத் தூண்டி விடுவது, வளரச் செய்வது, நீடுநிலேபெறுத்துவது பற்றியெல்லாம், வாத்ச்யாயனரின் காமசூத்திரம் விவரிக்கின்றது. ஆண் பெண் சேர்க்கையில் நிகழும் பலதிறச் செயல்கள், நிலேகள் பற்றியெல்லாம் வாத்ச்யாயனர் வருணிப்பர். பிறன் மனேவியை மயக்கிக் கெடுப்பதற்குரிய வழிவகைகளேயம் கூடக் காமசூத்திரம் கட்டுரைக்கும். பரத்தைமைப் பண்பும் செயல்களும் பற்றிக்கூட, அது பரித்துரைக்கக் காணலாம், இன்னேரன்ன இழிதகவுகள் எதுவும் திருக்குறளிற் காணப்படமாட்டா.

பிளேட்டோ :-

திருவள்ளுவர்க்கு மேலே நாட்டுப் பேரறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்றவர்களும், சிறிதும் ஈடாகமாட்டார்கள். பிளேட்டோ கண்ட குடியரசு அள வாற் சிறியது; நகர அரசு எனத்தக்கது, குடிமக்களின் தொகையிலும், செல்வநிலேயிலும்,

வளர்ச்சியற்ற தேக்கமுடையது. பேச்சுரிமைக் குறைப்பு முதலிய பலவகைக் கட்டுப்பாடுகள் அங்கு உண்டு, தனிநிலையிற் குடும்ப வாழ்வின் இன்பமும், குழந்தை வளர்ப்புரிமையும் அங்கே அனுமதிக்கப்பெறமாட்டா. கவிஞர்கள் அங்கே மதிக்கப் பெறுர். மெலிந்தோர் நலிந்தோர் புறக்கணிக்கப்படுவர். திருவள்ளுவர் கூறும் கற்பு முதலிய பண்புகளுக்கு அங்கே இடமில்லை,

அரிஸ்டாட்டில் :-

அரிஸ்டாட்டிலின் கருத்தின்படி, அடிமை முறை இன்றியமையாதது; உயர்வு தாழ்வுகள் இயல்பானவை; இழிநிலை பிறவியிலேயே அமைந்தது; குடியாட்சி என்பது இரேக்கர்களுக்கு மட்டுமேயுரியது. ஏனைய ரெல்லோரும் நாகரிகமற்ற இழிசினரே (Barbariens) ஆவர். செல்வம் தேடுதற்கும், நீதிநெறி முறைகளுக்கும், யாதொரு தொடர்பும் இல்லை. இத்தகைய கருத்துக்களெல்லாம் திருக்குறளில் ஒரு சிறிதும் காணப்படமாட்டா.

உலகப் பேரறிஞர்கள் பலர், மிகப் பழங்காலத்தில் எழுதிய எத்தனையோ கருத்துக்கள், இன்றைய உலகின் நடைமுறைக்கு ஒவ்வாமலும், அறிவுக்குப் பொருந்தாமலும், எள்ளி நகையாடும் வகையிலும், மாறிப்போதலை நாம் கண்டு வருகின்றோம். அரிஸ்டாட்டில் போன்ற பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள கருத்துக்கள், பலவற்றைப் பிழையுடையனவாக மறுத்து **'அறிவுத்துறைக் குப்பைகள்'** (Intellectual rubbish) என இகழ்ந்து ஒதுக்கிப் பேரறிஞர் திரு **பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்** எள்ளி நகையாடுகின்றார் :

இங்ஙனமெல்லாம் இன்றி, நூற்றுக்கு நூறு விழுமிய கருத்துக்களே பொருந்தி, ஒதுக்கித் தள்ளத்தக்கது எதுவும் இன்றிக் **"காழில்கனி"** எனக் கட்டுரைக்காலம்படி கவின் மிகச் சிறந்து, காலம் இடம் இனம் நாடு மொழி முதலிய எல்லைகளையெல்லாம் கடந்து, அறிவுக்கும் இயற்கைக்கும் நடைமுறைக்கும் உண்மைக்கும் அணுத்துணையும் பிறழாமலும், தள்ளிலையிற்றுழாமலும், நிலைபேறுற்று நிகரின்றித் திகழ்கின்றது, நம் திருக்குறள்; இஃது, எண்ணுந்தோறும் நமக்கு மிகவும் இரும்பூது பயப்பதன்றோ?

முடிவுரை :-

இங்ஙனமெல்லாம் மிகச்சிறந்த முறையில், தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானுல், இயற்றப் பெற்றமை பற்றியே, ஆழ்வார்கள் நாயன்மார்கள் போன்ற அருட்பெரும் சான்றோர்களும், அவர்களின் அடிச்சுவட்டினைப் பின்பற்றிப்போந்த அரும்பெரும் கவிஞர்களும் பிறருமெல்லாம், திருக்குறளின் கருத்துச் சொற்பொருட்சுவை நலங்களைப் பெரிதும் போற்றித், தத்தம் பாடல்களில் அமைத்து மகிழ்வாராயினர். ஆழ்வார்களும் நாயன்மார்களுமே திருக்குறளை வியந்து போற்றியுள்ளனர் எனின், திருக்குறளின் பெருமையினையும், அதனை இயற்றியருளிய திருவள்ளுவரின் மாட்சியினையும், நாம் அளவிட்டுரைத்தல் இயலுமோ; திருவள்ளுவரின் மாட்சிமை உணர்ந்து, திருக்குறளைக்கற்று, அதன் வழி நின்று, நாம் அறம்பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பெரும்பேறுகளையும் எய்தும் வகையில், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலமுற முயலுவோமாக;

"காலத்தால் வாடிக் கழியாது; பன்னலமார்
சீலத்தாற் குன்றுச் சுவைதிகழும்—ஏலத்தான்
ஊட்டிப் பசிபெருக்கும்: ஓங்கு **திரு வள்ளுவர்நூல்**
மாட்சிக் கிணையுண்டோ? மற்று."

குலை வாழைக் குலம்

புலவர். பி. தங்கராசு, B. A., B. O. L. B. ED.

செங்குந்தர் பெரியீரே ஒன்று சேர்வீர்!
செம்மையுறு செயல்செய்யச் சிந்தை செய்வீர்!
பொங்கும் வளம் தங்கிடவே புதுமை காண்பீர்!
புதுவுலகம் படைத்திடவே பங்கைச் செய்வீர்!
எங்குமுள செங்குந்தர் இணைந்துநின்று
எழுச்சியுள்ள தமிழகத்தில் ஏற்றம் காண்பீர்!
தங்கும்வளம், புகழ்வளரும், தழைக்கும்வாழ்வு
தாரணியில் சிறந்ததொரு இடமும்உண்டு!

புவியாண்ட பெருமன்னர் போற்ற அன்று
புத்தமிழ்த் தமிழ்காத்தார் ஒட்டக் கூத்தர்.
புவியினுக்கு அணியாகப் போற்றும் நல்ல
புலவர்களாம் இரட்டையர்கள் புகழைக் கண்டோம்
செவியினிலும் சிந்தையிலும் நிறைந்து வாழும்
செங்குந்த வள்ளியம்மை குமரன் கண்டோம்;
கவிவாணர் அரங்கினிலும் நாடுகாக்கும்
கணக்கற்றோர் நம்மினத்தார் காணு கின்றோம்

பெருமைகளைப் பேசிவிட்டுப் பிரிந்து சென்று
பிறகதனை மறந்துவிட்டால் பெறுவ தென்ன?
அரும்பயனைப் பெறுவதற்கு அயரா தென்றும்
ஆக்கமுடன் செயல் செய்ய வழிவ குப்போம்
கருமேகம் கடலின்மேல் மழையும் பெய்யக்
கலங்குகின்ற உள்ளம்போல் கைத்த றிக்கு
வரும்உதவி என்றுசொல்லி வார்த்தையாலே
வெறுமுழந்தான் போட்டகதை போதும்! போதும்!!

வேட்டிசேலை கைத்தறிக்கே வழங்க வேண்டும்
வேறுவகைத் துணிகளெலாம் ஆலைக் கென்று
பாட்டிமுதல் காலமாகப் பரிந்து ரைத்தும்
பார்த்த பயன் நாமென்ன? பகர்வீர்! இன்று
காட்டுகின்ற ஊக்கவுரை கனிவ தற்குக்
காத்திருப்போம் பார்த்திருப்போம் காலம் மாறும்'
நாட்டினிலே பொருள் பெருக உழைப்போம் நாளும்
நம்கடமை அதுவென்றே நன்கு காப்போம்

இன்றுள்ள நம்மிளைஞர் படித்தும் வேலை
இல்லையென்று ஏங்குகின்ற நிலையை மாற்றி
நன்றுபுரி தொழிலமைத்து நன்மைசெய்வோம்
நமக்காகக் கல்லூரி பலவ மைப்போம்
என்றுமுள வைப்புநிதி ஏற்ப டுத்தி
ஏற்றமுற வணிகத்தும் வழிய மைப்போம்
குன்றுபோல் மனம்தளராக் கொள்கை கொண்டு
குலைவாழைக் குலம்போலக் காப்போம் என்றும்.

—◆◆◆—

Wishing

The Conference

every success.

Phone: 5667.

D. Ranganathan,

Commission Mundy,

3rd. Road, Lee Bazaar Street, Salem-636 009.

தூக்குமேடை ஏறத் தயார்

சுடும் துப்பாக்கி முன் நிற்கத் தயார்

தியாகி. T. P. இராமசாமி, திருப்பூர்.

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறி
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடியின் னல்விளைந்
தென்னை யழித்திட் டாலும்
சுதந்தர தேவி நின்னை
தொழுதிடல் மறக்கி லேனே
—பாரதியார்.

உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இங்கிலாந்து நாட்டு வெள்ளையரால் இருமுறை பலமாகத் தாக்கப்பட்டார். பாஞ்சாலச் சிங்கம் எனப் போற்றப் பட்ட லாலா லஜபதிராயும் பாரத மண்ணிலேயே—தான் பிறந்த மண்ணிலேயே வெள்ளையர் அதிகாரியினால் தடிகொண்டு பலமாகத் தாக்கப்பட்டார். அதனால் பாரத மாதாவின் முப்பது கோடிப் புதல்வர்களில் ஒருவரான—அன்னை சுதந்தரதேவியின் அடிமை விலங்கை உடைத்தெறியப் புறப்பட்ட லாலா லஜபதிராய் சுதந்தரப் போரட்டக் களத்தில் முதல் உயிர்ப் பலியானார். இடர்மிகு சிறைக்கொடுமைக்கு ஆளான சிதம்பரனார் செக்கிழுத்த செம்மலானார். வெஞ்சிறைகளில் வாடிய சுதந்திரப் போராட்டத் தியாகச் சுடர்களை மற்ற குற்றக் கைதிகளுடன் ஒன்று சேர்த்து நடத்திய தீமையை—அநீதியை எதிர்த்து—அதனைக் கண்டித்து அறுபத்து மூன்று நாட்கள் அணு அணுவாய்ச் சிதைந்து தன் ஆருயிரைத் துறந்தார் தீரர் யதீன்தரதாஸ்.

1930ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் மகாத்மா காந்தி புதிய முறையில் நமது நாட்டின் சுதந்தரப் போரைத் தொடங்கி வைத்தார். பம்பாய் மாநிலத்தில் மேற்குக் கடற்கரையில் உள்ள 'தண்டி' என்ற உப்பளத்தை நோக்கித் தொண்டர்களுடன் கால்நடையாகவே பாத யாத்திரை செய்து உப்புச் சட்டத்தை மீறிச் சாத்வீகச் சட்ட மறுப்பு இயக்கத்தைத் துவக்கினார். அதன் தொடர்பாகத் தமிழகத்திலும் தலைவர் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சரியார் தலைமையில் வேதாராண்யத்தில் உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்றது. இம்முறையில் ஓராண்டுக் காலம் இச் சட்ட மறுப்புச் சத்தியாகிரகப் போர் நடந்தது.

பம்பாய் நகரத்தில் ஜவுளிக் கடை மறியல் செய்து கொண்டிருந்த பாபுகான் மீது லாரியை ஏற்றின கொடுமையால் நாட்டின் விடுதலைப் போருக்கு இரத்தம் சிந்தித் தன் இன்னுயிர் ஈந்து பலியானார். வேதாரண்யப் போர் முனையில் சென்னை சட்டசபை உதவித் தலைவராக விளங்கிய ருக்மணிலட்சுமி பதி அம்மையார் கரத்தில் கொடியுடனும்

உள்ளத்தில் உரத்துடனும் முன்னணியில் நின்ருர். அவ்வீராங்கனையின் கையில் பிடித்திருந்த கொடியைப் பிடுங்கப் போலீசாரும் அவர்களது அதிகாரிகளும் பெரும்பாடு பட்டனர். ஆயின் அவ்வீராங்கனை தன் கையில் ஏந்திய கொடியினை விடவில்லை. இறுதியில் போலீசாரால் அடிபட்டு நினைவிழந்த பின்னரே அக்கொடியைப் பிடுங்க முடிந்தது.

இவ்வாருக நாடெங்கும் ஒருவருட காலம் சட்டமறுப்புச் சத்யாகிரகம் நடைபெற்று வந்தது. பின்னர் அது பம்பாய் மாநிலத்தினைச் சேர்ந்த பர்தோலி வட்டத்தில் வரிகொடா இயக்கமாக உருவெடுத்தது. அதனைக் கண்டு ஆங்கில அரசு ஸ்தம்பித்து நின்றுவிட்டது. அத்துடன் விதேசித்துணி பகிஷ்கார இயக்கத்தினுல் ஆங்கிலேயர் மிரண்டு நடுங்கிப் போயினர். எனவே இவ்வியக்கங்களினின்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஆங்கில அரசு மகாத்மா காந்தியுடன் சமாதானம் பேசி ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. அதுவே 'காந்தி இர்வின்' ஒப்பந்தம் ஆகும்.

சரித்திரப் புகழ் பெற்ற 'காந்தி இர்வின்' ஒப்பந்தம் கையெழுத்தானதும் சட்டமறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் நிறுத்தி வைத்தது. சிறையிலிருந்த தொண்டர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வொப்பந்தத்தால் பாரத நாட்டு மக்கள் சில உரிமைகளைப் பெற்றனர். இதனைப் பொருத அரசு அதிகாரிகள் ஆத்திரமுற்றனர். ஏனெனில் எந்தச் செயல்களைச் செய்யக் கூடாது என்று அதிகாரிகள் சட்டத்தின் மூலம் தடைவிதித்துக் கொண்டிருந்தார்களோ அந்தச் செயல்கள் தங்கு தடையின்றித் தங்கள் கண் முன்னுலேயே நடைபெறுவதைக் கண்டு மனக் கொதிப்படைந்தனர். மறுபடியும் சந்தர்ப்பம் கிடைக்குமானுல் தேச பக்த தொண்டர்களைக் கடுமையாகத் தாக்கத் துடித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சந்தர்ப்பம் அவர்களுக்கு விரைவிலேயே கிட்டும் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இவர்களுடைய ஆத்திரத்திற்கும் மன எரிச்சலுக்கும் மூலமாக அமைந்த ஒப்பந்தத்திற்குக் காரணமாக இருந்த இர்வின்பிரபு தமது வைஸ்ராய் பதவிக்காலம் முடிவுற்றதால் 18—3—1931 அன்று இலண்டன் திரும்பிச் சென்ருர். உடனடியாக லார்டு வெலிங்டன் இந்திய வைஸ்ராயாகப் பதவியேற்று இந்நாட்டிற்கு வந்தார்.

வந்ததும் அவசரக் கோலத்தில் முன்பு நடந்த அடக்குமுறைச் சட்டத்தைவிடப் பலமடங்கு கடுமையானதாக அடக்குமுறைச் சட்டங்களை அமல்படுத்த ஆரம்பித்தார். அதன் விளைவாக 1932 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் நான்காம் நாள் நமது தேசப்பிதா சிறைப்படுத்தப்பட்டார். இச்செய்தி காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவியது. இச்செய்தியினை அறிந்ததும் தமிழகத்தின் காங்கிரஸ் கோட்டையாகத் திகழ்ந்த திருப்பூர் நகரின் அஞ்சா நெஞ்சம் படைத்த தேச பக்தர்கள் சற்றேனும் காலதாமதம் செய்யாது ஒன்று திரண்டனர். அவர்கள் நகரத்தின் நிலைமையை மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் காரியங்களில் கண்ணுங் கருத்துமாய் ஈடுபட்டிருந்தனர். ஏனெனில் அந்தச் சமயம்நகருக்குப் புதிதாகவந்திருந்த சர்கிள்இன்ஸ்பெக்டர்முகமது அவர்களின்அட்டகாச முறைதான் அவர்களை அவ்வாறு இருக்கச் செய்தது. முகமது சர்கிள் ரிசர்வ் போலீசைக் கோவையிலிருந்து வரவழைத்துக் கொண்டு தெருக்களில் ஆர்ப்பாட்ட பவனி நடத்தினுன். பஞ்சாப் படுகொலைப் பாதகன் டயரைப் போல் திமிர் பிடித்த வெறியோடு நகரத்தின் கடைகளில் திடீர் திடீரெனப் புகுந்து கடைகளில் மாட்டப் பட்டிருந்த காந்தி, நேரு, படேல்; சுபாஸ் சந்திரபோஸ், பகத் சிங் ஆகியோரின் படங்களை உடைத்துத் தெருவிலே எறிந்தான்; கடைகளில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த கொடிகளைக் கிழித்து எறிந்தான். ஒழுங்குமுறையற்றுக் கண்டபடி மக்களைத் திட்டி மிரட்டிக்கொண்டிருந்தான்.

ஆனால் ஊரோ 'நீறு பூத்த நெருப்புப் போல்' வெளிக்குத் தென்பட்டது. கொடி ஊர்வலம், கூட்டங்கள் முதலியவற்றிற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. கூட்டமோ, கொடி ஊர்வலமோ நகரத்தில் நடந்தால் சுட்டுப் பொசுக்கி விடுவதாக மிரட்டிக் கொண்டு ஒருவிதமான இனம் புரியாத பீதியை நகர மக்களிடையே உண்டாக்கி வைத்திருந்தான். இத்தனையும் மீறி 10—1—1932 அன்று காலை திருப்பூர் நகரமெங்கும் மக்கள் திரள் திரளாகத் திரண்டு வந்து ஊர்வலம் புறப்படும் இடமான திரு. ஈஸ்வரமூர்த்திக கவுண்டர் அவர்களின் 'மங்கள விலாஸ்' பங்களாவின் முன் வாயிலருகில் கூடி விட்டனர். முன் வகுத்தத் திட்டப்படி தொண்டர் படையினரும் வந்து அணிவகுத்து நின்றிருந்தனர். தேச பக்தர்களின் உற்சாக வெள்ளம் கரை புரண்டோடியது.

ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடத்தும் தலைவர் வராததால் சிறிது மனச் சோர்வு ஏற்பட்ட நிலையிலும் தொண்டர்கள் உற்சாகம் குன்றாது ஊர்வலமாகப் புறப்படத் துடி துடித்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்து சேர்ந்த திரு. பி. எஸ். சுந்தரம் அவர்கள் தலைமையில் திரு. குமாரசாமி (தியாகி குமரன்), தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி உறுப்பினரான திரு. இராமன் நாயர், பள்ளி மாணவரான திரு. அப்புக்குட்டி, திருப்பூர்த் தொண்டர்களான திரு. நாச்சிமுத்து செட்டியார், திரு. N. S. நாரயணசாமி, திரு. சுப்பராயன், திரு. நாச்சிமுத்துக் கவுண்டர், திரு. விஸ்வநாத நாயர் ஆகிய ஒன்பது பேர் அடங்கிய குழு மிகுந்த உற்சாகத்தோடு மின்னல் வேகத்தில், 'மகாத்மா காந்திக்கு ஜே' என்ற கோஷம் வானைப் பிளக்க முழக்க மிட்டுக் கொண்டு போலீஸ் ஸ்டேசனை நோக்கி நடந்தது; மக்களும் அதனைப் பின் தொடர்ந்து சென்றனர். ஊர்வலம் வருவதை அறிந்த சர்கிள் இன்ஸ்பெக்டர் முகமது வெகுண்டு எழுந்து தடிகளுடன் பாய்ந்து தாக்கும்படி போலீசாரை ஏவித் தானும் தன் உடன்அதிகாரிகளோடு சேர்ந்து கொண்டு உரக்கச் சத்தமிட்டபடியே வந்து ஊர்வலம் மேலும் தொடர்ந்து செல்லாதவாறு தடியடி தர்பார் நடத்தலானான்.

முன்னால் கொடி பிடித்துக்கொண்டு ஏறு போல் பீடுநடை போட்டுச் சென்ற குமரனும், இராமன் நாயரும் போலீசாரின் பலமான தாக்குதலுக்கு உள்ளானார்கள், ''நம்பற்குரியர் அவ்வீரர் தங்கள் நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்'' என்ற பாரதியின் தீர்க்க தரிசனப்படி தடியடி பெற்றும் புன்முறுவலோடும் இடைவிடாக் கோஷ முழக்கத் தோடும் சென்ற அவ்விருவரும் மரண அடி பெற்றனர். குமரன் தன் கையிலிருந்த தாயின் மணிக் கொடியை விடாப்படியாக உறுதியுடன் பிடித்தபடியே மூர்ச்சையாகிக் கீழே விழுந்தார்.

தொண்டர்களின் அஞ்சாமையைக் கண்டு கோபவெறி தலைக்கேறிய முகமது சர்க்கிள் இவ்வளவுக்கும் காரணம் தலைமை தாங்கி வந்த பி. எஸ். சுந்தரம் அவர்கள் தான் என்ற ஆத்திரத்தோடு அவர்மீது பாய்ந்து தன் கையினாலேயே மிகமிக மூர்க்கத் தனமாகக் கை கால் எல்லாம் முறியும் அளவிற்குச் சித்திரவதை செய்தான். நினைவிழந்த நிலையில் கிடந்த அம்மூவரையும் பஸ்ஸில் இழுத்துப் போட்டுக் கொண்டு போய் மருத்துவ மனையில் சேர்த்தான். அங்கும் அவர்களைப் போலீசைக் கொண்டு கால்களைப் பிடித்து இழுத்துத் திண்ணைகளில் போடச் செய்தான். மருத்துவமனை டாக்டரிடம் ''அவர்களை சரிவரக் கவனிக்க வேண்டாம்; நாய்கள் சாகட்டும்'' என்று மலையாளத்தில் கத்தினான். ஆனால் மனிதாபிமானம் நிறைந்த டாக்டர் கோபாலகிருஷ்ணமேனன் அவர்கள் கடுங்கோபத்துடன் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முகமதுவைப் பார்த்துக்

''கொல்வது உன் வேலை; உயிரைக் காப்பாற்றுவது என் கடமை'' என்று மறுமொழி கூறிவிட்டுத் தொண்டர்களைக் கவனிக்கலானார். அடங்காக் கோபத்துடன் சர்க்கிள் ஏதோ பேச முனைந்தான். ''தயவு செய்து போலீசைக் காவல் வைத்துவிட்டு நீங்கள் இந்த இடத்தை விட்டு வெளியே போய்விடுங்கள்'' என்று டாக்டர் சுடச்சுடப் பதில் தந்தார். இதனைக்கேட்ட சர்க்கிள் விநாடி கூட நிற்காமல் முனகிக் கொண்டே வெளியேறினான். டாக்டர் எவ்வளவு பாடுபட்டும் குமரன் உயிரைக் காப்பாற்ற முடியாத நிலைக்கு உள்ளானார். மறுநாள் கொடி காத்த மாவீரனின் உயிர் விண்ணுலகை நோக்கிப் பயணம் புறப்பட்டுவிட்டது. ஆருத்துயரில் ஆழ்ந்த அவரது உறவினர்கள் அவரது பூதவுடலை எடுத்துச் சென்று அடக்கம் செய்தனர். அன்னையின் அடிமை விலங்கொடிக்கத் தம் உடல், பொருள், ஆவி என அனைத்தையும் தியாகம் செய்து அழியாப் புகழ்பெற்ற அருந்தலைவர்கள் வரிசையில் ஓர் உன்னதமான இடத்தைப் பெற்று அமரரானார்.

குன்று தோறுடும் குமரவடிவேல் நின்று நித்தம் அருள்புரியும் சீர் பெற்றது சென்னிமலை. அச்சென்னிமலையில் ''செய்யுந் தொழில் யாவும் நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை'' என்ற புகழுக்கும் பெருமைக்கும் உரிய நெசவுத் தொழில் புரியும் நெசவாளர் குடும்பத்தில் 1904 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் குமாரசாமி பிறந்தார். நாச்சிமுத்து முதலியாரும், கருப்பாயி அம்மாளும் குமரனைப் பெறும் பேறு பெற்றனர். வளரும் வயதில் ஆரம்பப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரை சென்னிமலையில் படித்தார். வயிற்றுப் பிழைப்பா ? வளரும் கல்வியா ? என்ற இரண்டுக்கும் ஏற்பட்ட போட்டியில் வயிற்றுப் பிழைப்பு முன்னின்று வழிகாட்டச் சென்னிமலையை விட்டுப் பள்ளிபாளையம் வந்து சேர்ந்தார். அங்கு, சொக்கலிங்க முதலியார், காளியப்ப முதலியார், என்ற தாய்மாமன்மார்களின் ஆதரவின் நிழலில் நெசவுத் தொழிலில் தேர்ந்து வாழ்க்கை நடத்திவரலானார்.

அவரது வாழ்வில் மறக்க முடியாத மகிழ்ச்சியான நிகழ்ச்சி 1923-ஆம் ஆண்டு நடந்தது. அப்போது அவருக்கு வயது 19. அந்த ஆண்டு தான் அவர் 14 வயதான இராமாயம்மாள் என்பவரைத் தமது இல்வாழ்க்கைத் துணைவியாக்கிக்கொண்டார். இல் வாழ்க்கையின் இன்பகரமான நிகழ்ச்சிகளுக்கு இடையே வேலையற்ற நிலை அவரை மிகவும் வருத்தியது. பள்ளிபாளையம், ஈரோடு முதலிய அருகருகே உள்ள இடங்களில் வேலை தேடியும் கிடைக்காமற் போகவே திருப்பூருக்குச் சென்றார். அங்கு, சென்னியப்ப முதலியார், ரங்கசாமிக் கவுண்டர் என்ற இருவரும் இணைந்து நடத்தி வந்த O. K. S. & E. R. R. என்ற நிறுவனத்தில் பொறுப்பு மிக்க 'டோலி கிளார்க்' என்ற வேலையில் அமர்ந்து பணிபுரிந்தார். ஆறுண்டுக் காலப் பணியிலேயே தனது தளராத நாணயமான உழைப்பினால் நிறுவனத்தாரின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவரானார்.

குமரன் திருப்பூர் தேசபந்து வாலிபர் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார். அவர் கொடிப்போராட்டத்தில் ஆர்வத்துடன் கலந்துகொள்ளப் புறப்பட்டபோது தந்தையை இழந்து ஆறு மாதங்களே ஆகியிருந்தன. இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும் துணைவியாரும் பள்ளிபாளையத்தில் இருந்தார். இந்நிலையில் தான் அவர் கொடிப் போராட்டத்தில் கலந்துகொண்டு அமரரானார்.

கண்ணினும் இனிய சுதந்திரத்தை நம் பாரத நசடு 15—8—1947-இல் பெற்றது. அன்று காலையில் திருப்பூர் நகரில் தாலுகா அலுவலகத்தின் அருகில் போலீஸ் ஸ்டேசன்

முன் சுதந்திர விழா நடைபெற்றது. அப்போது டிப்டி சூபரண்டெண்டாகப் பதவி உயர்வு பெற்றிருந்த அதே முகமது அவர்கள் எந்தக் கொடியைத் தியாகி குமரனின் கைகளிளிருந்து பறித்து எறிந்தாரோ அதே கொடியைத் தன் கைகளினாலேயே ஓங்கி உயர்ந்த கொடிக் கம்பத்தில் ஏற்றி வைத்தார். அவரது கண்களில் கண்ணீர் மல்கியது. தியாகி பி. எஸ். சுந்தரம் அவர்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தவாறே, பாரத நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தந்த மகாத்மா காந்தியடிகளுக்கு நன்றி கூறிய சொற்பொழிவைத் திருப்பூர் மக்கள் என்றென்றும் மறத்தற்கியலாது.

தேச விடுதலைக்காகத் தம் உயிரையும் துச்சமென மதித்துப் போராடிய தேசபக்தத் தொண்டர்களை நாடு என்றென்றும் மறவாது நினைவிலிருத்திப் போற்றும். வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தூக்கு மேடை ஏறவும், வெள்ளையரின் சுடும் துப்பாக்கி முன் நிற்கவும் தயார் என ஆயிரம் ஆயிரமாகத் திரண்டெழுந்த திருப்பூர் வட்டார மக்களின் தேச பக்தியுணர்வினைத் தலைவணங்கிப் போற்றுவோம்.

வளர்க நாட்டுப்பற்று ! வாழ்க குமரனின் புகழ் !

தென்னிந்திய செங்குந்தர் மாநாட்டிற்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்.

கந்தன் சில்க் ஸ்டோர்,
138, பஜார் தெரு,
சைதாப்பேட்டை ● சென்னை-600015.

பாருக்குள்ளே நல்லநாடு

M. M. ஜெயராமன், B. A., B. T., ஈரோடு.

இந்தியா என்ற பெயர் எவ்வாறு உண்டாயிற்று? இந்தியாவின் முக்கிய நதிகளில் ஒன்றாகிய சிந்து நதியின் பெயரால் பண்டைக்காலந்தொட்டே இந்தியா என்று அழைக்கப்பட்டு வருகின்றது. சிறப்புமிக்க நமது தாய் நாட்டின் சிறப்பு அம்சங்களைக் காண்போம்.

இந்தியா எண்ணற்ற மலைகள், வற்றாத ஆறுகள், காடுகள் மற்றும் இயற்கை வளங்கள் பல கொண்ட நாடு. சிந்து நதியும் கங்கை நதியும் இந்திய வரலாற்றுடன் பின்னிக் கிடக்கின்றன பண்டைய இந்தியா அந்நியர் கேட்டு ஆசைப்படும்படியும், அவர்களைப் படையெடுக்கத் தூண்டும்படியும் அவ்வளவு வளமான நாடாக இருந்தது. தமிழகத்தின் முக்கிய நகரங்களில் உள்ள கடை வீதிகளில் முத்து, பவழம் போன்ற உயர்வகைக் கற்கள் குன்றுகள்போல் குவிக்கப்பட்டு விற்பனைக்கு இருக்குமாம். புகழ்பெற்ற டாக்காமஸ்லின், முத்து, வாசனைப் பொருள்கள் இவைகளுக்கு அயல் நாடுகளில் நல்ல மதிப்பு இருந்தது.

நமது நாட்டிற்கு வந்து குடியேறிய முதல் அயல் நாட்டவர் ஆரியர்கள். அவர்களுக்குப்பின் பாரசீகர், கிரேக்கர், அராபியர், துருக்கியர், மொகலாயர் ஆகியோர் படையெடுத்துவந்தனர். இந்தியாவின் வடமேற்கிலுள்ள கைபர், போலன் கணவாய்கள் இந்திய வரலாற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன இவைகளின் வழியாகத்தான் அயலவர் நம நாட்டிற்குள் வந்தனர்.

உலகிலேயே உயர்ந்த சிகரமான 'எவரெஸ்ட்' முதலிய பல உயரமான சிகரங்களைக் கொண்ட இமயமலை இந்தியாவிற்கு இயற்கை அரணாக அமைந்து உள்ளது. குளிர் காலத்தில் 'ஆர்ட்டிக்' பிரதேசத்திலிருந்து வீசும் கடுங்குளிர் காற்றைத்தடுத்து, இந்தியாவைக் கடுங் குளிரிலிருந்து பாதுகாக்கின்றது. அம்மலையில் எண்ணற்ற வளங்கொழிக்கும் காடுகள் பல உள்ளன, இந்துக் கடவுளாகிய சிவபெருமான் இருக்கும் இடம் இம்மலைதான் என்று புராணங்கள் கூறுகின்றன.

உலகிலேயே மிக அதிக மழை பெறும் சிரபுஞ்சி இந்தியாவில்தான் உள்ளது. மைசூர் காபி, சந்தனம், அசாம் தேயிலை இவைகளுக்கு அயல்நாடுகளில் நல்ல மதிப்பு உண்டு. தெற்காக உள்ள மன்னார்குடாவில் முத்து எடுக்கப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பிரதேசத்தில், மிளகு, ஏலம், லவங்கம், முந்திரி போன்ற வாசனைப் பொருள்கள் மிகுதி.

உலகில் நாகரிகம் முதன் முதலில் தோன்றிய இடங்களில் இந்தியாவும் ஒன்று. ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய நகரங்களில் வாழ்ந்த மக்கள் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே சிறந்த நாகரிகம் உடைய மக்களாய் இருந்தனர். இந்தியப் பண்பாடு, குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பண்பாடு தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பரவியுள்ளதை இன்னும் காணலாம்.

ஆன்மீகத் துறையில் உலகிலேயே சிறந்து விளங்கும் நாடு இந்தியா. புத்த சமயம், சமண சமயம் இந்தியாவில்தான் தோன்றின. இந்தியா என்பது பல இனங்கள், மொழிகள், மதங்கள் கொண்ட ஒரு 'பொருட் காட்சி சாலை' என்று ஒரு அறிஞர் கூறியுள்ளார். இந்தியரிடையே மேற்கண்ட வேற்றுமைகள் பல இருப்பினும் நம்மிடையே ஒற்றுமை இருப்பதுதான் நமது பண்பாட்டின் சிறப்பாகும். வடக்கேயுள்ள ஹரித்துவாரம், காசி முதல் தெற்கேயுள்ள ராமேஸ்வரம் வரை உள்ள எண்ணற்ற புண்ணியத் தலங்கள் இந்தியாவின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. நம்மிடையே சமய ஒற்றுமை காணபபடுகின்றது. சுவாமி விவேகானந்தர் அவர்கள் அமெரிக்காவில் நடந்த உலக சமய மாநாட்டில் கலந்துகொண்டு இந்து சமயத்தின் சிறப்புக்களை எடுத்துக்கூறி வெளிநாட்டினருக்கு நமது நாட்டின் பண்பை வெளிப்படுத்தினர்.

நீதி நூலாகிய திருக்குறள் அதன் சிறப்புக் கருதியே உலகப் பொது மறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பகவத் கீதையில் உள்ள அறிவுரைகள் இந்துக்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா சமயத்தினருக்கும் பொருந்துவனவாக உள்ளன. பண்டைக்காலம் முதலே காஞ்சி, கல்வியின் இருப்பிடமாக இருந்து வந்திருக்கிறது. காஞ்சியைச் சேர்ந்த தர்மபாலர் நாலந்தா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினர். குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த ஆர்யபட்டர் புகழ்மிக்க கணித வானியல் மேதை. அவர் நினைவாகத் தான் நமது முதல் விண் வெளிக் கலத்துக்கு 'ஆர்யபட்டா' எனப் பெயர் வைத்துள்ளோம். கணக்குக் குறியான π என்பதற்கு மதிப்புக் கண்டு பிடிக்கப்பட்டது. மேலும் பூஜ்யம், அதன் மதிப்பும் கண்டுபிடிக்கப்பட்டது. ஐம்பெருங் காப்பியங்கள் மற்றும் உள்ள இலக்கியங்கள் தமிழ் மொழியின் சிறப்பைத் தெரிவிக்கின்றன.

கலைத் துறையிலும் பண்டை நாள் முதல் இந்தியா சிறப்புப் பெற்று விளங்குகின்றது. அஜந்தா ஓவியங்கள், எல்லோரா சிற்பங்கள், மகாபலிபுர கல் ரதங்கள், எண்ணற்ற குகைக் கோயில்கள் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் காணப்படும் பழங்காலச் சிலைகள், சிற்பங்கள் இந்தியாவின் பெருமையை விளக்குகின்றன. தமிழ் நாட்டிலுள்ள கோயிற் கோபுரங்களை குறிப்பாக மதுரை, தஞ்சைக் கோபுரங்களைக் கண்டு அயல் நாட்டவர் வியக்கின்றனர். தென்னாட்டின் கட்டடக்கலையின் சிறப்புக்கு இவைகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஆக்ராவில் உள்ள தாஜ்மகால் உலக அதிசயங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. சிந்து வெளி நாகரிகக் காலந்தொட்டே இந்தியர்கள் அணிகலன்கள் செய்தலில் சிறப்புப் பெற்று விளங்குகின்றனர்,

அரசியல் நிர்வாக முறையில் இந்தியர் சிறந்திருக்கின்றனர். மௌரியர் காலம் முதல் சிறந்த நிர்வாக அமைப்பு இந்தியாவில் இருந்திருக்கிறது. அவைகளில் உள்ள சில சிறப்பு அம்சங்களை ஆங்கிலேயரும் பின்பற்றினர். தற்காலத்தில் இந்தியரின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர்களுள் முக்கியமானவர்கள் மகாத்மா காந்தி, நேரு ஆகியோர். எந்தவித ஆயுதமும் இன்றி ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் மாபெரும் புரட்சி நடத்தி இந்தியாவிற்கு விடுதலை பெற்றவர் மகாத்மா காந்தி அவர்கள், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்து, பொருளாதாரத்துறையில் இந்தியா முன்னேற்றம் அடைய பல நல்ல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியவர் நேரு அவர்கள்.

அண்மையில் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறையில் பின்னேக்கியிருந்த நம் நாடு அவைகளை வெற்றிகண்டு உலக நாடுகளே வியக்கும் வண்ணம் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது. அதன் வெற்றிக்கு நாம் பாடுபடுவோம்.

கலையுண்டு எழிலுண்டு கவர்ச்சி மிகவுண்டு
கைத்தறியால் பல்லோரின் நல்வாழ்வும் உண்டு
பாரெல்லாம் ஒளிவீசும் பாரதத்தின் பெருமை
புகழ்மிக்க கைத்தறியால் உண்டு! உண்டு!
இதுஉண்மை உண்மை! எக்காலும் உண்மை!!

கூடி வாழ்ந்ததால் கூட்டுறவில் தலைமை பெற்ற நம்மவர்கள்

செங்குந்தர் குலப்பெருமக்கள் நாட்டின் பல்வேறு துறைகளிலும் சிறப்பான தொரு இடத்தைப் பெற்றிருந்ததால்தான் சமூகத்திற்குப் பெருமையும் உயர்வும் ஏற்பட்டன. அம்முறையில் நம் சமூகப் பெருமக்கள் கூடிவாழ்ந்து கூட்டுறவுத்துறையில் சீரியதொரு இடத்தினைப் பெற்றுள்ளனர். நம் சமூகப் பெருமக்களின் சீரிய தலைமையில் இயங்கிவரும் கூட்டுறவுத் துறையில் ஓர் அங்கமான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கங்களும் அவற்றின் தலைவர்களும்; மாணப்பெரிய நம் சமூகச் சிறப்பினில் நீங்கள் காணச் சிறிது தந்தோம்;

	கூட்டுறவுச் சங்கங்கள் :	தலைவர்கள் :
1	காவலிப்பாளையம்	— கருப்பண்ண முதலியார்
2	கெட்டிச்சேவியூர்	— A. சுப்பிரமணிய முதலியார்
3	செட்டிபாளையம்	— P. சோமசுந்தர முதலியார்
4	கணக்கம்பாளையம்	— K. V. சொக்கலிங்க முதலியார்
5	கொண்டையம்பாளையம் (அருள்ஜோதி)	— S. குருசாமி முதலியார்
6	விஜயமங்கலம்	— குப்புசாமி முதலியார்
7	திங்களூர்	— K. கருப்பண்ண முதலியார்
8	கவுண்டச்சிபாளையம்	— R. அங்கப்ப முதலியார்
9	தாண்டாம்பாளையம்	— K P. இராமசாமி முதலியார்
10	தாண்டாம்பாளையம் (திருவள்ளுவர்)	— V. N. ஆறுமுக முதலியார்
11	சிவகிரி	— முருகேச முதலியார்
12	சிவகிரி தெற்குப்பாளையம்	— K. இலட்சுமண முதலியார்
13	கவுந்தப்பாடி	— P. மாரிமுத்து முதலியார்
14	P. மேட்டுப்பாளையம்	— C. குப்புசாமி முதலியார்
15	திருவாமுதலியூர்	— M. அங்கப்ப முதலியார்
16	ஆதியூர்	— கதிர்வேல் முதலியார்
17	கொட்டத்துவளவு	— அவிஞசி முதலியார்

18 வெள்ளகோயில் — இருளப்ப முதலியார்

19 கவுந்தப்பாடி (அமரர் அண்ணு) — முருகேச முதலியார்

20 திருமநாதன்பாளையம — V. குமாரசாமி முதலியார்

21 P. ஊத்துக்குளி — K. G. P. ஆறுமுக முதலியார்

22 மொரட்டுப்பாளையம் — M. A. ஆறுமுக முதலியார்

25 சிவகிரி (பாலதண்டாயுதம்) — V. S. ரங்கசாமி முதலியார்

24 சுக்கோகவுண்டம்பாளையம் — K. அருணுசல முதலியார்

25 ஆலாம்பாளையம் — P. நாராயணசாமி முதலியார்

26 சென்னிமலை-சென்குமார் — N. S. K. நடராஜ முதலியார்

27 ஈரோடு — J. சுத்தானந்த முதலியார்

28 சென்னிமலை — M. P. நாச்சிமுத்து முதலியார்

29 பள்ளக்கவுண்டம்பாளையம் — மாரப்ப முதலியார்

30 மடத்தூர் செங்குந்தர் — M. மாணிக்க முதலியார்

தென்னிந்திய செங்குந்தர் மாநில மாநாட்டிற்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்.

காஞ்சிக்கோயில் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், எண். A. A. 94,

காஞ்சிக்கோயில்-638107.

(வழி) நசியனூர், ஈரோடு S. Rly.

உற்பத்தி ரகங்கள் : **2 × 17s டவல்ஸ், பெட்ஷீட், 20s கலர் காடா பிஸ்கள்.**

பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்

செங்குந்தர் உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.



அருள்நெறி திருப்பணி மன்ற உயர்நிலைப் பள்ளி, ஈரோடு.

ஆணுக்குப் பெண்ணிங்கே இளைப்பில்லை காண்!



கொமரப்பா செங்குந்தர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளி, சென்னிமலை.

கொமரப்பா செங்குந்தர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சென்னிமலை.

செங்குந்தர் குலத்துக்கு ஒரு விண்ணப்பம்

T. N. சிங்காரவேல், B. A., B. L.,
தமிழ்நாடு தொழில்துறை நீதிபதி,
சென்னை.

'' செய்யும் தொழிலே தெய்வம்—அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையும் காலுமே நமக்குதவி
கொண்ட கடமைதான் நமக்கு பதவி ''

என்பதால் செங்குந்தரின் குடிமக்களின் பாரம்பரிய குலாசாரம். இதையே 'நிஜ கர்மோ பாத்தம்' என்று ஆதிசங்கரர் கூறுகிறார். தன்னுடைய உடல் உழைப்பினால் தனக்கு விதிக்கப்பட்ட காரியத்தை அல்லது தொழிலைச் செய்து, அதனால் வரும் பொருளைக் கொண்டு மனத்திருப்தி அடைகிறவன் விவேகி. அதற்கு மாறாக ஒன்றை விட்டு ஒன்று பற்றி, ஆசைக் கடலில் அகப்பட்டு, பாசக் கடலில் வீழ்வது அழிவில் முடியும். 'பிறர் பங்கை நாடாதே' என்பதும் இதனடிப்படையில் எழுந்த வாக்கு. இந்தப் பெருமையை செங்குந்தர் குலம் பொதுவாக நன்குணர்ந்திருக்கிறது.

எனினும், சமீபகாலத்திலே இந்நாட்டில் தோன்றிய அரிசியல் விழிப்புணர்ச்சியாலும், விஞ்ஞான வளர்ச்சியாலும், கால வேகத்தாலும் நம் மக்களிடையே ஒரு புதிய பாணி உருவாகியிருக்கிறது. பண்டையக் குடிமக்கள். செல்வத்திற்காக ஒருவரை மதித்ததில்லை ; துதி பாடியதில்லை. திறமையையும், நேர்மையையும் தான் அவர்கள் போற்றி வந்தார்கள். தன்னலத்திற்காக கசடரிடம் சென்று தலை வணங்கியதில்லை. இந்த உயர்ந்த பண்பை நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளுதல் நன்மை பயக்கும் வறுமையில் வாடியபோதும் நம் புலவர்கள் தம் விருப்பத்திற்கெதிராக அரசனுக்குக் கூட அடிபணியவில்லை. '' மன்னவனும் நீயோ ! வளநாடும் உன்னதோ '' ''நீ முனிந்தால் இல்லையோ எங்கட்கு இடம் '' என்று மன்னவன் பரிசை உதறி பொய்ம்மையாளரைப் பாடாதே வாழ்க்கை நடத்தினர். அந்த உயர்ந்த பாங்கு, மனோதிடம், நம் தமிழ் நாட்டிலே பரவியிருந்தது என்பதையும் நினைவு கொள்ள வேண்டும்.

இனி மக்களோ அல்லது மக்கட் பகுதியோ தனித்து வாழமுடியாது என்ற உண்மையை நாம் உளமாற ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். 'உலகம் சுருங்கி விட்டது' என்று கூறுவர். இங்கிருந்து டில்லிக்கு இரண்டு மணி நேரத்தில் பறந்து செல்கிறோம். லண்டனுக்கு எட்டுமணி நேரத்தில் செல்லலாம், தொன்னூறு நிமிடங்களில் உலகத்தை ஒருமுறை சுற்றிவருகிறார்கள் விண்வெளி வீரர்கள். தெய்வ அம்சங்களாக கருதி வந்த சந்திரன், செவ்வாய் ஆகிய கிரகங்களில் மனிதன் இறங்கிவிட்டான். அப்படியிருக்க,

சில ஆண்டுகளே இவ்வுலகில் வசிக்கப் பிறந்திருக்கும் நாம் தனித்து இயங்க முடியுமா? முடியவே முடியாது. ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''. 'கூட்டுறவே நாட்டுயர்வு' 'ஒற்றுமையே சிறந்த வலிமை' என்ற வாக்குகளெல்லாம் வெறும் பழமொழிகள் அல்ல, அவை என்றும் பயனுள்ள உயிருள்ள புது மொழிகள்.

நம் அரசியல் சாசனத்திலே எல்லோருக்கும் சம உரிமை, சம வாய்ப்பு, சம நீதி உண்டு என்று உறுதி சொல்லியிருக்கிறோம். அதை நிறைவேற்றுவதில் இச்சமூகம் ஒரு போதும் பின்வாங்காது. நம் நாடு வறுமையிலே தோய்ந்த நாடு. தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டுக் கிடந்தோர் தேசத்திற்கு வாழ்வைக் கொடுத்தவர் அண்ணல் மகாத்மா காந்தியடிகள், ஒரு பெரிய செல்வமிக்க திவான் குடும்பத்திலே பிறந்து, அயல் நாட்டிலே படித்து, பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியா திரும்பியவுடன், நம் மக்கள் உடுத்தியிருக்கும் உடையின் அவல நிலையைப் பார்த்து. தானும் தம் வாழ்நாள் பூராவும் சட்டை அணிவதில்லை என்று விரதம் பூண்டு பெருந் தொண்டாற்றியவர் நம் தியாக புருஷர் அண்ணல் காந்தி. நாட்டிலே சமதர்மம் நிலவ வேண்டும் என்பதுதான் அவர் மூச்சு. அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் நம் நாடு வளர்ந்து வருகிறது. லக்ஷக்கணக்கான நெசவுத் தொழிலாளிகள், விவசாயத் தொழிலாளிகள், ஊழியம் செய்வோர், நிரந்தரத் தொழில் இன்றி வருமையினால் வாடி வருவதை நாம் காண்கிறோம். அவர்களை வாழ வைப்பதும் நம் பொறுப்பே. ''நாம் வாழ வேண்டும்; மற்றவர்களையும் வாழவிடவேண்டும்'' என்ற சுலோகத்தை இன்னும் உயர்த்தி, ''மற்றவர்களையும் வாழவைக்க வேண்டும்'' என்ற எண்ணம் வளரவேண்டும். எல்லோரும் வாழ்ந்தால்தான் சமுதாயத்தில் அமைதி நிலைக்கும். வன்முறையும் நீங்கும், மனிதர் உணவை மனிதர் பறிக்கும் நிலையை யாரும் அனுமதிக்க மாட்டார்கள். இந்நிலையை நம் மனமாற்றத்தின் மூலம் நிவர்த்தி செய்வதே நம் கடமை. அல்லாவிடில், சட்டங்கள் நம்மைத் திருத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நம் பிற்கால சந்ததியினர் நல்வாழ்வு வாழவேண்டுமென்று நாம் விரும்பினால், இந்த சமதர்மக் கொள்கையை மனமார ஏற்றுக் கொண்டு விரைவாக செயலாற்ற வேண்டும் என்பதை உலக சரித்திரம் நமக்கு வழியுறுத்துகிறது.

முடிவாக, நம் சமூக நல்வாழ்வுக்கு எளிய வாழ்க்கையும் உயர்ந்த லட்சியமுமே எப்பொழுதையும் விட இப்பொழுது மிகவும் அவசியமானது. ஆசைக்கும் தேவைக்கும் அடிமைப்படாமல் வாழவேண்டும்; நல்லவர்களாக நெறிதவறாமல் வாழவேண்டும்; வித்தகம் பேசாமல் பணி செய்யவேண்டும். இவ்வுலகில் எல்லோரும் நல்வாழ்வு வாழ்வதற்கு உரிமை உண்டு. அதுபோலவே நமக்கு அடிப்படைக் கடமைகளும் உண்டு என்பதை நாம் மறத்தலாகாது. அப்போதுதான் நம் சமய ஆசாரியர்கள் நமக்குக் காட்டிய ''மிருத்த கனமதுர நீள்சவுக்ய சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு'' வாழ முடியும். அதற்கு இறைவனும் நமக்குப் பெருந்துணை புரிவான் என்பதும் உறுதி.

''ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு; உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு; பசித்தோர் முகம்பார்; நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு; நடு நீங்காமலே நமக்கு இட்டபடி
என்றென்றிரு; மனமே! உனக்கே உபதேசமிதே,''

— ◀●▶ —

நேருக்கு நேர்

இரா. முருகேசன், ஈரோடு-1.

[கைத்தறியும். விசைத்தறியும் ஒரு பொதுஇடத்தில் சந்திக்கின்றன. அவை இரண்டும் பேச ஆரம்பிக்கின்றன]

ஓ.........வாங்க.........வாங்க......... நம்மளைப் பார்த்து ரொம்ப நாளாச்சே ! எங்க இந்தப் பக்கமே காணோம்,

எங்கிங்க வர்ரது. வர விடமாட்டீகரீங்களே ! நாங்க பத்துபேரு செய்யர வேலையை நீங்க ஒருத்தரே செய்யறீங்க. அப்ப நாங்க எப்படி வர்ரது, கொஞ்ச கொஞ்சமா இந்த ஜனங்க நம்மளை மறந்திடுவாங்க போலிருக்கே ! என்ன இருந்தாலும், 'வலியவன் வந்துட்டா எளியவன் வழிவிடவேண்டியது' தானே

இல்லே—... இல்லே...... என்ன அப்படிச் சொல்வீட்டீங்க, என்னைக்குமே, 'Old is Gold' அதை மறந்திடாதீங்க, நீங்க இல்லாம நாங்க எப்படி வந்தோம், உங்களுடைய வளர்ச்சியே நாங்க !

ம்......ம்......ம்......இதை உங்க வாயால சொல்லனுங்கரதுக்காகத்தானே அப்படிச் சொன்னேன். நீங்க வந்தாலும் வந்தீங்க எத்தனை ஏழை நெசவாளிகளை கஷ்டப்பட வச்சிட்டீங்க எண்சான் உடம்பிலுருக்கிற ஒரு சான வயித்துக்குக் கெடச்ச கஞ்சியைக் கூட இப்ப இல்லாம பன்னீட்டீங்களே !

யார் சொன்னது? நான் இப்ப எத்தனை பேரைப் பணக்காரன் ஆக்கியிருக்கேன் தெரியுமா? உனக்கு எங்க அது தெரியப்போவுது. நீதான் ஊர் ஓரத்திலே அங்கங்கே ஒண்டிக்கிட்டிருக்கியே !

ஆமாங்க...... இந்தக் கண்ணராவியெல்லாம் பார்க்கக் கூடாதுங்கரதுக்காகத்தான் அப்படி ஒதுங்கிட்டேன், ஊர் ஓரத்திலே இருக்கக்கூடிய கிராம மக்களுக்கிட்டே இருக்கக்கூடிய அன்பும், ஆதரவும், நாணயமும் இந்தப் பட்டணத்திலே எங்க இருக்குது கிராமத்து அமைதியான வாழ்க்கையே ஒரு அலாதி ...... பட்டணத்துக் காத்து பட்டாலே உடம்பு கெட்டுப்போவுதே ! எல்ல...... உன்னையாட்ட ஆளுக்கெல்லாம் வந்து இந்த ஊரையே கெடுத்திடுவீங்க போலிருக்கே !

அப்படி என்ன... நாங்க செஞ்சிட்டோம் இந்த ஊரே கெட்டுப் போகிற அளவுக்கு.

ம்......ம் அப்படி வாங்க வழிக்கு ! எங்க காலத்திலே Power Cut கண்டோமா ? 'Lay out' கண்டோமா ? இந்த Strick த்தான் கண்டோமா ? அப்படீன்ன என்னன்னு கூடத் தெரியாதே ?

உங்களுக்குத்தான் ஒன்னுமே தெரியாதுன்னு அப்பவே சொல்லீட்டனே! தொழிலாளர்களுடைய திறனும், எதையும் சிந்தித்து ஏத்துக்கனும்கற சுய உரிமையும் இப்ப எந்த அளவுக்கு வளர்ந்திருக்குது தெரியுமா ?

சுய உரிமை சுய உரிமைன்னு சொல்லி இருக்கிற உடைமையை இழப்பதுதான் மிச்சம். நாங்க பத்துப்பேரு ஒரு நாள் பூரா செய்யர வேலேயை நீ ஒருத்தனே செய்யர! இதனுல தயாரிப்பு அதிகமாவரது மட்டுமில்லாம எங்க ஒன்பது பேத்துக்கு வேலே போவுது.

அடப்பாவமே! அதிகமா உற்பத்தி பண்ணரதைத் தப்புன்னு சொல்லறியே!

அதுமட்டுமா? கரண்ட் இருந்தாத்தா ஓடுவேங்கரே. இப்படித் தயாரிப்பு அதிகமாவரதுனுல, அத்தனே சரக்கையும் எப்படியாவது உங்க முதலாளி விக்கனும்னு நினேக்கிருன், கடனுக்குக் கொடுக்கிருன்.

அப்படீன்ன, வியாபாரத்தில கொடுக்கல் வாங்கலே இருக்கப்படாதா! அப்படியென்ன வியாபாரம் அது!

அடக் கொஞ்சம் பொறுங்க! அவசரப்படறீங்களே! இப்பத்தான் உங்களுக்குத் தெரியுமே, பட்டணத்து வியாபார நாணயம். 'கடன் கொடுத்தார் நெஞ்சம்போல' காலமெல்லாம் கஷ்டப்படருன். அது மட்டுமா, பாதியிலே உன் ஓட்டமும் நின்னு போவுது, அவன் ஆட்டமும் நின்னுபோவுது, கடைசியிலே வேர வழியில்லாம என்னேத் தான் தேடி வருவாங்க.

ஆமா...... வாழ்க்கையிலே முன்னேற வழி தெரியாத கோழைகள்தான் அப்படி வருவாங்க. இப்ப எங்கிட்ட சொன்னமாதிரி வேறே எந்த கைக்கோளர்கிட்டயாவது யோய்ச் சொல்யிருந்தீன்ன.........

தான் செஞ்சுக்கிருக்கிற தப்பை உணர்ந்து திருந்திடுவாங்க.

ஆமா திருந்தி கொஞ்ச நஞ்ச இருக்கிற உன்னே அடியோடு ஒழிச்சிடுவாங்க. என்ன தான் இருந்தாலும் நீ இவ்வளவு உலகம் புரியாதவன இருப்பீன்னு நான் நினேக்க வேயில்லே. இன்னேக்காவது புரிஞ்சுக்கோ என்னுடைய மகிமையை

ஆமா, நாளுக்குநாள் எனக்கு வேலே அதிகமாயிட்டே போரதுனுல நான் பட்டணத்து பக்கமே வரலே. கொஞ்ச சொல்லுங்க கேப்பமோ.

உன்னுடைய காலத்திலே இந்தியாவின் ஜனத்தொகை 40 அல்லது 45 கோடிதான் இருந்தது. ஆன இன்னேக்கு 65–70 கோடியை எட்டிக்கிட்டிருக்குது. அத்தனே பேத்துக்கு உன்னலே துணிகொடுக்க முடியுமா?

ஜனத்தொகை அதிகமாயிட்டே போகும்போது நாங்களும் அதிகரித்துக் கொண்டே போகிருேம்கற சாதாரண உண்மை கூடப் புரியலேயே உங்களுக்கு.

எனக்குப் புரிஞ்சதையும், உங்களுக்குத் தெரியாததையும் சொல்லறேன் கேளுங்க. இப்பத்தான் தீபாவளி போச்சுதே! கடைகடையா பார்த்திருப்பியே! கைத்தறிக்கு 10 பைசா தள்ளுபடி 20 பைசா தள்ளுபடின்னு உன்னேக் கொஞ்ச கொஞ்சம்மா தள்ளுபடி செஞ்சுக்கிட்டு வாரதை.

அது என்னேத் தள்ளுபடி செய்யரதுல்ல. ஏழை எளியவர்களும் வாங்குரதுலே இருக்கிற சிரமத்தைத் தள்ளுபடி செய்யரது.

அதுமட்டுமா, உன்மூலமா தொழில் செய்யரவங்களுக்கு அதரவு கொடுங்க...... வாழ்வு கொடுங்கன்னு சொல்லி 'Wall Post' அடிச்சில்ல ஒட்டிக்கிட்டு இருக்காங்க...... இத்தனையும் இருக்கும்போதே நீ என்னைக் குறை சொல்ல வந்துட்ட. உன்னைப்பத்தி பரிதாபப்படரதத் தவிர வேர வழியே இல்லை,

ஏன் இல்லை... உனக்குன்னு எப்படி ஆதரவாளர்கள் இருக்கராங்களோ அதேமாதிரி எனக்கும் இருக்காங்க. ஆனா அவங்க உன்னையாட்ட 'Old is Gold'ன்னு வெரும் வாயில் மட்டும் சொல்ல மாட்டாங்க. **पहले करो, पीछे बोलो** ன்னு இந்தியிலே 'முதலில் செய் பின்னல் பேச' ன்னு பழமொழி இருக்கிறமாதிரி ஆண்டாண்டு காலமா என் மூலமா தயாரான துணிகளையே அணியராங்க. அதுவும் அதுதான் அவங்களுக்கு கௌரவம்னு நினைக்கிறாங்க.

அப்படி நினைக்கிறவங்க ஒரு முறை என் துணியை வாங்கிட்டாங்கன்னா அப்பற உன் கதி அதோகதிதான்,

அட...... பதட்டப்படாம கேளுங்க அப்படி, என் துணி அணியரதுல இருக்கிற அமைதியும், நிறைவும் வேறெந்த துணியிலும் இல்லைன்னு சொல்லறாங்க. இன்னைக்கு சுதேசி வியாபாரிகளில் பெரும்பாலான பேர் என்னையே விரும்பராங்க முற்றிலும் உன் மூலமா தயாரான துணிகளை உபயோகிக்கிரவங்க கூட, ஒரு பொது இடத்துக்கு, ஒரு பெரிய மனிதரைப் பார்க்கப் போகும்போது தேவைங்கரதுக்காக என்னையும் வாங்க ராங்க, ஆனா முற்றிலும் என்னையே உபயோகிக்கிற பலபேர்ல ஒருத்தர்கூட உன் பக்கமே வரமாட்டாங்கன்னு நினைக்கும்போதுதான் என் மதிப்பை பற்றி எனக்கே தெரியுது,

கிணற்றிலிருக்கிற தவளை நினைக்குமா,, தான் இருக்கிற கிணற்று நீரை விட வேறெந்த கிணற்று நீரும் சுவை இல்லாததுன்னு, அது போலத்தான் இருக்குது உன் பேச்சு.

அது பல நூற்றாண்டுகளுக்கு முன்னல், இப்ப நான் வண்ணத்து பூச்சி. என் மூலமா தயாரா வரது எத்தனை கலர் எத்தனை டிசைனுங்கரது உனக்கு எங்கத் தெரியப் போவுது. ஆண்டு தோரும் எத்தனை லட்சம் துணிகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகு துன்னுவது உனக்குத் தெரியுமா ? என் மூலமாகத்தான் தயாரிக்கனிம்கரதுக்காக தனி ரகமே இருக்குதே ! இது ஒன்னே என் பெருமைக்குப் போதாதா ?

போதும்...... போதும்...... சுத்த சுய விளம்பரக்காரனா இருப்ப போலிருக்கே !

இப்படி என்னைப்பற்றி நானே சொல்லிக்கரதுலே பெருமையில்லத்தான்...... என்ன செய்யறது, உங்களாட்ட இருக்கிற உண்மை புரியாதவங்களுக்கெல்லாம் என்னை யாட்ட இருக்கிறவங்களுடைய சுய விளம்பரம் தேவைதான்,

இன்னைக்கு இளைஞர் சமுதாயத்தினுடைய முற்போக்கு எண்ணங்களைப் பற்றி உனக்கு என்ன தெரியும், அவங்க மடிப்புக் கலையாம துணி அணிந்து அழுக்குப்படாம வேலை செய்யனும்னு நினைக்கிறாங்க,

அடப்பாவமே! இதுதான் முற்போக்கு எனனமா? 'வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும்', கூர்ற மாதிரி நான் உயர்ந்தா, தான் பாரதத்தின் பெருமை உயரும், பொருளாதாரம் முழு வளர்ச்சி அடையும். இதற்காகத்தானே பழைய காலத்திலிருந்தே காந்தியைப் போல பல பெரும் தலைவர்களெல்லாம் எனக்கு ஆதரவு தந்து, என் முன்னேற்றத்திற்குத் தாங்களே வழிகாட்டியாக இருந்தாங்க.

ஏன் காந்தி கூடத்தான் வெளிநாட்டில் இருக்கும்போது மில் துணிகளை அணிந்து வந்தார். பிரதமராக இருந்த நேருவும்தான் அணிந்திருந்தார்.

'குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்' இது திருக்குறள். இது தெரிஞ்சதுனு இப்படியெல்லாம் கேட்க மாட்டீங்க. இவற்றையெல்லாம் நீங்க தெரிஞ்சுக்கனுங்கரதுக்காகத்தான் இன்னும் கைத்தறி சேவா சங்கங்கள் ஊர் முழுதும் செயல்பட்டு வருது. தமிழ் நாட்டில் சுமார் இரண்டு கோடிப் பேர் கைத்தறி மூலம் ஏராளமான துணிகள் தயார் செய்யராங்க. அது பாரதத்திலே இருக்கிற எல்லா மக்களுக்கும் எளிதாகக் கிடைக்கனுங்கரதுக்காகத்தான் அனேக விற்பனை நிலையங்களை ஏற்படுத்தி மிகவும் குறைந்த விலைக்கு கொடுக்கறங்க. இதை நீங்களும் உணர்ந்து, நாட்டு மக்கள் அனைவரும் உணர்ந்து என்னையே குலத்தொழிலாக கொண்டிருக்கும் ஏழை எளிய மக்களை வாழ வகை செய்வதே, நாம் இப்பிறவி எடுத்த பயனாகும், இனி மேலாவது போலிகளை நம்பி ஏமாந்து போகம நீங்களும் என்னோடு சேர்ந்து கைத்தறியின் புகழ் பரப்புங்க? எங்க சொல்லுங்க பார்க்கலாம். வளர்க கைத்தறி! வாழ்க நெசவாளர்கள்.

(தென்னிந்திய செங்குந்த சமூக, கைத்தறி, மாதர், மாநில மாநாடுகளின் நினைவின் விளைவாய் உதித்த கற்பனை உரையாடல்.)

நன்றி மருதகை நானிலங் கீர்த்தி நடாத்துசெங்கை
குன்றுத பாக்கியங் கூடுற் திருக்கை குணந்தருங்கை
என்றுந் திருக்கச்சி யேகம் பரர்தாளை யேத்து செங்கை
மன்றிலோ யாதிருச் செங்குந்த வீரர் மணிச்செங்கையே.

—திருக்கை வழக்கத்தந்தாதி.

கொண்டுள்ள சாறதனைக் கொட்டும்" என்றான்
நல்லதொரு சமுதாயம் அமையும் இந்த
நற்கருத்தை ஏற்கின்ற நாட்டின் மீதே.

5 அறமலிந்த சமுதாயம் அமைய வேண்டி
அனைவர்க்கும ஒழுக்கமதை வகுத்துச் சொன்னான்
"பிறர்பொருளும் தம்பொருள்போல் நினைக" என்றே
பேசினான் **வணிகர்க்கே** ஒழுக்கந் தன்னை
நிறைகோலின் தன்மையதாய் நிற்க என்றே
நீதிதரும் **நடுவர்க்கும்** ஒழுக்கம் சொன்னான்
முறைபோற்றும் **அரசுக்கும்** ஒழுக்கம் சொன்னான்
"முட்டாமல் **முறைசெய்து** ஆள்க" என்றே.

6 தம்மவர்கள் என்பதனால் கருணை காட்டல்
தனியார்க்கென் றொருவகையாய் நீதி காட்டல்
வம்பாகும் அரசுக்கு என்றே காட்ட
"வகைஓர்ந்து **கண்ணோடா தனைவர்** மாட்டும்
தம்நீதி தருகவெனச் சொன்னான் இஃதைத்
தரணிதனில் கொள்ளுகின்ற அரசே வெல்லும்
அம்புவியில் வல்லரசுக் கேது வான
அறிவெல்லாம் பொருட்பாலில் நிறைய உண்டே.

7 **அரிதான** பொருளவற்றுள் அரிதே., என்றான்
அறிவுள்ள **பெரியோரைத்** தமராக் கொள்ளல்
நரிதானும் வென்றுவிடும் **யானை** தன்னை
நயமாக இடமறிந்து செயல்மேற் கொண்டால்
கரியதாம் **"காக்கையும்** கூகை வெல்லும்
காலத்தால்" என்றானிக் கருத்தை ஏற்றால்
சரியான அரசாக அமைவ தன்றிச்
சரியாத அரசாயும் அமையும் அன்றே.

8 கம்பனது காவியத்திற் குறளைக் காண்போம்
கவியமுதச் சிலம்பிலதன் ஒலியைக் காண்போம்
சம்பந்தன் முதல்நால்வர் தமிழிற் கொஞ்சும்
சந்தமிசைக் குறளதனின் தெளிவைக் காண்போம்
உம்பராம் சேக்கிழார் தமது நூலில்
ஒளிர்கின்ற குறளோதும் நெறியைக் காண்போம்
செம்பரிதிக் கதிர்சூழ்கா **உயிர்கள்** உண்டோ
திருக்குறளின் பொருள்சேராக் கவிகள் உண்டோ

வையம் ஓங்க!

வித்துவான் **R. கிருஷ்ணசாமி**, ஈரோடு.

1 உலகுக்கோர் ஆசானாய்த் திகழும் எங்கள்
ஒப்பரிய வள்ளுவர்சொல் வழியே நின்றால்
கலகத்துக் கிடமேது உலகம் எங்கும்
கனிவான அன்புதழைத் துவகை பொங்கும்
நலமுற்ற சமுதாயம் அமைய வேண்டி
நாற்பொருளை முப்பாலில் வடித்துத் தந்த
புலமோங்கும் வள்ளுவரின் பொதுநூல் தன்னில்
போற்றுமற நெறியதனின் பெருமை காண்பாம்.

2 அறிவின்றேல் உயர்பொருளும் புகழும் ஏது?
ஆகாய வெளியதனில் பயணம் ஏது?
செறிபகையை வெல்லுகின்ற திறனும் ஏது?
செய்கின்ற தொழிலேது? கலைகள் ஏது?
அறிந்தன்றோ வள்ளுவரும் அன்றே சொன்னார்
அறிவான தெய்வத்தைப் போற்றீர்! என்றே
அறிந்தோதும் கல்வியினாற் பயனும் அஃதே
அன்றென்பார் அறியாமை வேண்டு வாரோ?

3 எப்படியும் வாழலாம் என்றில்லாமல்
இப்படிநீ வாழ்ந்திடுக. என்றே காட்ட
இப்புவியில் "**வாழ்வாங்கு வாழ்க**" என்றான்
எந்நாளும் புகழோடு சிறந்தே நிற்க
இப்பொருளைச் சமுதாயம் ஏற்றே நின்றால்
எள்ளளவும் எள்ளுதலுக் கிடனுண் டாமோ
ஒப்பரிய சமுதாயத் திருளைப் போக்க
ஒருகுறளின் ஒளியதுவே போதும் அன்றே.

4 நல்லோர்தம் செல்வமெலாம் நாட்டின் மீதே
நன்மரமாய்ப் பழுமரமாய் அமையும் என்றான்
அல்லோர்தம் செல்வமதை நாட்டிற் காக
ஆக்கிடுக சட்டத்தால் என்றே காட்ட
"**கொல்லுகின்ற** போதன்றோ கரும்பு தன்பால்

9 ‘பிறப்பொக்கும் எவ்வுயிரும்’’ என்றே சாதி
பேதமற்ற சமுதாயம் அதனைக் கண்டான்
சிறக்கின்ற புகழொன்றே உயிரின் ஆக்கம்
தேடாத பிறப்பேதும் பயனின் றென்றான்
இறக்கின்ற நிலையேனும் உயிர்க்கின் னாமை
எள்ளளவும் செய்யற்க என்றான் இஃதை
மறக்கின்ற சமுதாயம் மறைந்தே நன்றி
மறவாத சமுதாயம் என்றும் வாழ்க!

10 வள்ளுவனைத் தந்ததமிழ் வையம் என்றே
வான்பெருமை பேசிடுவோம் நெறியில் நில்லோம்
உள்ளமெனும் ஆலயத்தில் அவர்தாம் கண்ட
உண்மையெனும் நல்விளக்கை ஏற்றி வைத்தே
வள்ளுவனைக் கொண்டாடி மகிழ்வோம் என்றும்
மாசில்லா நெறிநின்றே வாழ்வோம் ஒன்றாய்
வள்ளுவரின் வாய்மொழியே வையம் ஓங்க!
மன்னுக!நல் லறம்பொருளும் இன்பம் சேர்ந்தே.

— ★ —

Our Hearty Wishes for the Success
of the South India Sengunthar
District Conference

Jothi
Electrical
Stores,

Car Street □ **SALEM**

அதனால் பெரியவர்கள் இவருக்குத் திருமணம் செய்விக்க ஏற்பாடு செய்து தங்கள் வியாபாரத்திற்குத் தங்க வைத்துக் கொள்ள எற்பாடு செய்தார்கள். திருமணம் நடந்தது. எனினும் திரு. மாரியப்பன் அவர்களை அவர்கள் பெற்றோர்களால் நிரந்தரமாக உபயோகித்துக்கொள்ள முடியவில்லை. தேச சேவையும் பொது ஜன சேவையும், அவரை மிகவும் கவர்ந்தன. நமது தேசத் தலைவர்களான மகாத்மா காந்தியடிகள், பண்டித நேரு போன்றவர்களின் அறைகூவலும் இந்தியாவைக் கலந்துகொள்ளாமல் சண்டையில் தேசத்தைச் சம்மந்தபடுத்தியதும். இளைஞர்களின் ஆவேசத்தைத் தூண்டியது. இவரும் தன்னலம் கருதாமல் துடிப்புடன் செயல்பட்டார். மகாத்மாவின் தேசபக்தி விசுவாசத்தின் வீரச்சொற்களான (செய் அல்லது செத்துமடி) என்ற கோஷத்தைப் பொதுமக்கள் மத்தியில் பரப்புவதில் பெரிதும் ஈடுபாடு ஏற்பட்டு அதற்கேற்ப விடுதலைப் போரில் பல இரகசிய இயக்கங்களிலும் பங்கேற்றார். 1947ல் தேசம் விடுதலையடைந்தது. பாகிஸ்தான் பிரிவிற்குப் பிறகு ராஜாஜி முதல் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஆனார். அரசியல் நிர்ணயசபை தோற்றுவிக்கப்பட்டதில் திரு. ராஜேந்திர பிரசாத் இந்தியாவின் முதல் தலைவரானார். யுத்த சமயத்தில் ராஜாஜி காங்கிரசை விட்டு ஒதுங்கியிருந்த போது தமிழ் நாட்டில் அவர்மீது காங்கிரஸ் உறுப்பினரிடம் பெரும் கசப்பு ஏற்பட்டது. அதில் இவர் பெரும் பங்கு கொண்டார். அவர் மீண்டும் காங்கிரசில் சேர முனைந்த போது திரு. மாரியப்பன் அவர்கள் ராஜாஜியை காங்கிரஸில் சேர்ப்பதை எதிர்த்தார். காந்தியடிகள் ராஜாஜிக்கு கைகொடுத்திருக்கா விட்டால் அவரது நிலைமை வேறுவிதமாக இருந்து இருக்கும். ராஜாஜியின் ஆதரவாளர்கள் காமராஜ் ஆதரவாளர்கள் என்று இரண்டு கோஷ்டிகள் ஏற்பட்டன. இது அம்மாப்பேட்டையில் வலுவாக ஏற்பட்டது சேலம் ஜில்லாவில் காமராஜ் கோஷ்டிக்கு முதன்மையாக நின்று செயல்பட்டார். அதன் பயனாக திரு. மாரியப்பனுக்கு சேலம் காமராஜ் என்ற பட்டப் பெயர் ஏற்பட்டது. சேலம் ஜில்லா சம்மந்தப்பட்ட எந்த முடிவையும் திரு. மாரியப்பன் அவர்களைக் கலந்து கொண்டு தான் தீர்மானிப்பார். திரு. மாரியப்பன், காமராஜ் ஆதரவாளர்களின் சார்பிலும் திரு. ஊராளி உடையார் அவர்கள், ராஜாஜி தரப்பிலும் இருந்து மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தேர்வில் போட்டியிட்டதில் திரு. மாரியப்பன் அவர்கள் வெற்றி பெற்றார். அதே சமயம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் மெம்பராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு திரு. காமராஜ் அவர்களுடன் அப்பொழுது நடந்த அகில இந்தியா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திற்கு சென்றார். 1951ம் ஆண்டு நடந்த அம்மாப்பேட்டை கூட்டுறவு நெசவாளர் சங்கத்தின் தேர்தலில் போட்டியிட்டு தலைவராகத்தேர்ந்தெடுக்கப் பட்டார். அதிலிருந்து சுமார் இருபது ஆண்டுகாலம் நேர்த்தியான பணி செய்து இன்று இந்த தேசத்திலேயே உள்ள உன்னதமான சொஸைட்டியாக உயர்வடையச் செய்த பெருமை அவரையே சாரும். 1956ஆம் ஆண்டு மாபெரும் தலைவர் திரு. காமராஜ் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் அடிக்கல் நாட்டப் பெற்ற அம்மாப்பேட்டை, காமராஜர் நெசவாளர் காலனி 200 வீடுகள் கொண்டதாகக் கட்டி முடிக்கப்பெற்று 22—5—58ல் அப்பொழுது தொழில் வர்த்தக மந்திரியாக இருந்த லால்பகதூர் சாஸ்திரி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. 1963ல் சொஸைட்டிக்குத் தேவையான ஒரு நவீன சாயப்பட்டரையும் ஏற்படுத்தினார். சேலம் நூற்பு ஆலையை நிறுவப் பெரிய முயற்சி எடுத்துக்கொண்டார். பின்னால் அவர் அதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பல ஆண்டுகள் நன்கு திறம்பட நிர்வகித்து 1957 ஆம் ஆண்டு சேலம் நகரத் தொகுதியில் திராவிட முன்னேற்ற கழக பொதுச் செயலாளர் திரு. இரா. நெடுஞ் செழியன் அவர்களை வென்றார். சட்டமன்ற உறுப்பினரானார். கைத்தறி வாரியத்தில் அங்கம் வகித்துக் கைத்தறிக்கு அரசாங்கத்திடம் எவ்வளவு வாதாடி ஏழை நெசவாளர்

களுக்கு உதவ முடியுமோ அவ்வளவையும் செய்தார். சேலம் டெக்ஸ்டைல்ஸ் என்ற ஆத்தூரில் நிறுவியிருக்கும் நூற்பாலையைக் கட்டி அதன் நிர்வாகப்பொறுப்பை ஒய்வு ஒழிவின்றி ஏற்று நடத்தி வந்தார். இன்று அந்த ஸ்தாபனத்திற்கு அவரின் இழப்பு ஈடு செய்ய முடியாத அளவிற்குள்ளாயிருக்கிறது. சென்ற அக்டோபர் 2ந் தேதி பெரும் தலைவர் காலமான மறு 2ந் தேதி முதல் அம்மாப்பேடையில் உள்ள இராமலிங்க சுவாமிகளின் மடாலயத்தில் ஏழைகளுக்குத் தினசரி சுமார் 200 பேருக்குக் கூழ்வார்க்கப் படுகிறது. அதை 2ந் தேதியன்று மாத்திரம் சாதமாகக் கொடுக்க வேண்டுமென்றும். அதற்கு உண்டான செலவைத் தானே கொடுத்தும் வந்தார். ஏழைகளுக்கு அன்னம் படைக்க வேண்டுமென்ற அவா, அவருக்கு அடிக்கடி ஏற்பட்டது. அதன் முடிந்த முடிவாக சென்ற ஜூலை 18ந் தேதியன்று ஒரு பெரிய அளவில் ஏற்பாடு செய்தார். சுமார் நாற்பது மூட்டை அரிசியையும் சுமார் இருபதனுயிரம் ரொக்கத்தையும் நன்கொடையாக வசூலித்து இருபத்தைந்தாயிரம் பேரும் சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் பொழுது (காலக் கூற்றுவன் அவரை நம்மிடமிருந்து பிரித்துக் கொண்டு போய்விட்டான்) சாப்பாடு போட்டவர் மறைந்தார் என ஆயிரமாயிரம் மக்கள் கூட்டம் சாப்பிட்ட கையைக் கழுவாமல் கேவிக் கேவி அழுத வண்ணமாக சாரி சாரியாக பலமணி நேரம் வெய்யிலில் நின்று கடைசி முறையாகப் பார்த்துத் தங்களின் இறுதி மரியாதையை செலுத்திய பொழுது கண்ணீரும் கம்பலையுமாக நின்ற துயர நிலையை என்னவென்பது! டவுன் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக நியமனம் செய்யப்பட்ட அவர் நான்கு புத்திரிகளையும் வயதான தாய்தந்தையரையும் சகோதர சகோதரிகளையும் ஏராளமான நண்பர்களையும், எங்களையும் ஆருத்துயரத்தில் ஆழ்த்தி விட்டுப் பிரிந்தார். அவர் ஆன்மா சாந்தியடைக!

—★—

"கோயமுத்தூர் பால விநாயகர் சேலைகள்"

- நரத்தில், உழைப்பில்,
- கண்கவர் கலர்களில் சிறந்தது.

எல்லாக் கோவாப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளிலும், கைத்தறி மாளிகைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள் :

பாலவிநாயகர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச்சங்கம் No. K. 1566.

14/16, லிங்கப்ப செட்டி தெரு, ○ கோயமுத்தூர்.

திரு. N. S. ராஜு — தலைவர்.
திரு. C. R. கிருஷ்ணசாமி — உபதலைவர்.
திரு. E. பரமசிவம் — காரியதரிசி.

நிர்வாகஸ்தர்கள் : திரு. V. சோமசுந்தரம், திரு. M. அருணசலம், திரு. P. ராம்குமார், திரு. G. E. கோபால்.

பிற துறைகளில் பெண்டிர் கடமைகள் :- சமுதாயத்தில் புரையோடிக் கிடக்கும் மூடப் பழக்கங்களை அகற்றுதல் மணப்பரிசு (வரதட்சணை) வாங்குதலை ஒழித்தல், வீட்டு விளக்கு மட்டுமன்றிக் கல்வி விளக்கும் ஏற்றுதல், சேரி மக்கட்கு இயன்றவரை தொண்டுபுரிதல் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்தல், ஆடம்பரப் பொருள்களை வெறுத்தல், எளிய வாழ்க்கையைக் கைக்கொள்ளுதல், குறிப்பாக நாளைய பாரதத்தை உருவாக்கும் சிற்பிகளை நன்மக்களாய் வளர்த்தல் வறுமையை விரட்டப் பாடுபடுதல் பேச்சைக் குறைத்துச் செயலில் ஈடுபடுதல், சிக்கனச் செலவு, குடும்பக் கட்டுப்பாட்டின் இன்றியமையாமையை உணர்தல் போன்றவற்றைக் கடமைகளாகக் கொள்ளுதல் வேண்டும், "மனைக்கு விளக்காகிய வாணுதல் மகளிர்" இவற்றைக் கைக்கொண்டால் நாடும் வீடும் செழிக்கும்.

நிறைவுரை :- பொற்காலமாகிய சங்ககாலப் பெண்டிர்போல் உரிமையோடு வாழத் தற்காலப் புலவர் பாரதியாரின் பொன்னுரையைப்போல் திகழ நாம் பாரதநாட்டுப் பெண்டிர் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தம் கடமைகளை உணர்ந்து செய்தால் நம் நாடு செவ்விய நாடாகத் திகழும்.

"இன்று புவியின் பெண்கள் சிறுநிலையில் இருக்கவில்லை; விழித்துக் கொண்டார்" என்று பாரதிதாசனார் நல்லுரையை உன்னுவோம்.

"விடியும் நல்லொளி காணுதி நின்றே
மேவு நாகரிகம் புதிதொன்றே,
... .
அறிவு யாவும் பயிற்சியால் வென்றே
கடமை செய்வீர். நந்தேசத்து வீரக்
காரிகைக் கணத்தீர் துணிவுற்றே"

என்ற பாரதியாரின் நல்லுரையை எண்ணுவோம்; புகழ் நண்ணுவோம்.

"காத லொருவனைக் கைப்பிடித் தேஅவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி"
—பாரதியார்

'மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' என்ற பொன் குறளின் ஒழ் நற்செய்கைகளாவன ; வாழ்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து கடைப் பிடித்தலும், அட்டில் தொழில் மேன்மையும், ஒப்புரவு செய்தலும் முதலாயின, வருவாய்க்குத் தக்க வாழ்க்கையானது முதலை அறிந்து அதற்கியைய அழித்தல் என்று உரைவிளக்கம் தந்து மகளிர் கடமையினைக் கூறுகிறார். அக்காலப் பெண்டிர்க்கு இல்லறம் காத்தலும், வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடாத் தலும், தற்கொண்டானைப் பேணுதலும், கற்புக் கடம் காத்தலும் பொற் புடைக் கடமைகள் ஆயின. 'ஈன்று புறந்தருதல், என்பதால் மக்களைப் பெற்று வளர்த்தல் பெருங்கடமையாகக் கொண்டனர் என்று அறியலாம் நாட்டிற்கு ஏதேனும் போரால் துன்பம் ஏற்படுங்கால் மகளிர்க்கு வீரம் கொப்பளிக்கும். அதனை 'மூதின் முல்லை' என்று கூறினர், அக்காலத்திலேயே பெண்டிர் வீடு காத்தலோடு, நாடு காத்தலையும் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர் என்று அறியலாம். இதற்குத் தூது நடந்த தோட்டியாம் ஔவையாரே சான்றாகத் திகழ்கின்றார். இத்தகு பொற்றகுதி படைத்த நற்றவக் காலத் திலும் பெண்டிர் கணவனை இழப்பின் கைம்பெண்களாக வாழ்ந்தனர் என்பதை அறியும் போது வேதனையில் விம்முகிறோம். பெருங்கோப் பெண்டின் பாடலும், சிலம்புக் கண்ணகியின் கூற்றும் கைம் பெண்டிர் துன் பத்தை நவில்கின்றன.

பிற்காலப் பெண்டிர் :- பிற்காலத்தில் பாரதநாட்டுப் பெண்டிர் ஆடவர்க்கு அடிமையாக இருத்தலே கடமையாகக் கொண்டனர். இவ்வடிமை முறையை ஒழித்துப் பெண்டிர்க்கு அறிவு புகட்ட எழுந்தனர் இராசாராம் மோகன்ராய் போன்றோர்.

பாரதியார் காலத்தில் :- பாரதியார் காலத்தில் பெண்டிர் விடுதலை நிரம்ப வலியுறுத்தப்பட்டது. 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்றார் பாரதியார்.

"பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் என்று கும்மியடி" என்று பெண்டிர் கடமை

களாகப் புரட்சிக் கடமைகளைக் கூறினர் நிமிர்ந்த நன்னடை வேண்டும். நேர் கொண்ட பார்வை வேண்டும். திமிர்ந்த ஞானச் செருக்கு வேண்டும், கல்விகற்றல் வேண்டும். இறுதியாக நாணும் அச்சமும், நந்தாய்த்திரு நாட் டிற்குப் பணிபுரியத் தடைசெய்கு மேல் அவற்றைத் தூக்கி எறியவேண்டும் என்றார்.

தலைமையும் பெருமையும்

குலப்பெருமைக்குத் தலைமைப் பொறுப்பு

திரு. **E. M. பாலசுப்பிரமணியம்**
தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கட்டிடக் கூட்டுறவுச் சங்கம்,
திருநகர் காலனி, ஈரோடு.

குமணன் வழிக் குலப்பெருமை

செங்குந்தர் கல்யாண மண்டபம், ஈரோடு.

புகழுடன் வாழ்ந்த புனிதன்

P. கந்தசாமி முதலியார், சேலம்-3.

திரு. A. மாரியப்பன் அவர்கள் 1920ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2ம் தேதி தமிழ் 'ஆடி மாதம் 18ந் தேதி' சேலம் அம்மாப்பேட்டையில் திரு. வே.மு. ஆறுமுக முதலியார் ரத்தினம் அம்மாள் இவர்களுக்கு முதல் மகனாகப் பிறந்தார். இவருக்கு இரண்டு சகோதரர்களும், ஐந்து சகோதரிகளும் உண்டு. இவர் நல்ல சைவ குடும்பத்தில் தோன்றியவர். சிறுவயதினில் ருத்திராக்ஷம் கட்டியிருந்தார். மான் குட்டி மாதிரி துள்ளிக் குதித்து ஓடுவார். இளைத்த உடல். இவர் ஆரம்பப்பள்ளி முடியும் வரைதான் படித்தார். கணக்கில் கெட்டிக்காரர். சிறுவயதிலேயே தன் பாட்டனருக்குக் கணக்கு எழுதுவார். திரு. துரைசாமி சர்மா என்பவரிடம் ஆங்கிலம், ஹிந்தி பயின்றார். தேசத்தில் நடைபெற்ற எழுச்சியும் கிளர்ச்சிகளும் அவருடைய மனதைக் கவர்ந்தன. மகாத்மா காந்தி தேசிய வாலிபர் சங்கத்தில் முக்கிய பங்கு கொண்டு பணியாற்றினார். கைத்தறி நெசவாளர்கள் நிறைந்த இப்பகுதியில் கல்வி அறிவு நிறையப் பெறாத குழந்தைகளும் வாலிபர்களும் ஏராளமாக இருந்தனர். 1936ம் ஆண்டு முதன்முதலில் காங்கிரஸ் மகாசபையின் தீர்மானப்படி மாகாண சுயாட்சி வழங்கப்பட்ட பொழுது திரு. ராஜாஜி அவர்கள் முதன்முதலாக மந்திரிசபை அமைத்து மதுவிலக்கை அமல் செய்து சுற்றுப்பயணம் வந்தார்கள். இளைஞர்களுக்குப் பல அறிவுரைகளை வழங்கினார். அதில் முதியோர் கல்வியும் ஒன்று. தேசிய வாலிப சங்கத்தார் இந்தத் திட்டப்படி ஒரு இரவு வாசகசாலை நடத்தி வந்தனர். சுமார் 1300 பேர்கள் அதில் கல்வி பயில வந்தனர். சங்கத்தில் இடம் போதவில்லை. கட்டிட நிதிக்காக தேசபக்தி என்னும் நாடகத்தை அப்போது முனிசிபல் சேர்மேனாக இருந்த திரு. சீத்தாரம செட்டியாரின் தலைமையின் கீழ் நடத்தித் தொகை சேர்த்தார்கள். அதில் திரு. A. மாரியப்பன் அவர்கள் சட்டசபைத் தலைவராக நடித்தார். இவர் சிறு வயதிலேயே மேடைப்பிரசங்கம் செய்வார். கைத்தறி நெசவுத் தொழில் மிகவும் நலிந்த காலம் திரு. அருணாஜல முதலியார் என்னும் பொதுத்தொண்டில் ஆர்வமிக்க பெரியவருடன் சேர்ந்து நெசவாளர் சொசைட்டி ஒன்றை ஏற்படுத்த வீதிவீதியாகச் சென்று மணியடித்து ஆள் சேர்த்துக் கூட்டம் போட உதவினார். அதன் பயனாக 1938ம் வருடம் அம்மாப்பேட்டை கூட்டுறவு சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டது. 1942ம்ஆண்டுஇயக்கத்தில் மிகவும் துடிப்புடன் பல செயல்களில் ஈடுபட்டார். நண்பர்களுடன் சேர்ந்து ரகசிய கை அச்சு இயந்திரங்களை வைத்து தலைவர்களிடமிருந்து வரும் கடிதங்களின் பிரதி எடுத்துப் பல இயக்கங்களுக்கு உதவுவது. சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின்பால் மிகவும் கவரப்பட்டவர். 1941ம் வருடம் தனி நபர் சத்யாகிரகம் செய்து 15 நாள் சிறையில் வைத்து விடுதலை செய்தனர். சிறு வயதிலேயே வியாபாரத்தில் மிகவும் கெட்டிக்காரர் கைராசி உடையவர். அவர் குடும்பத்தினர் நெசவுத் தொழிலும் ஜவுளிக் கடையும் நடத்தி வந்தனர். தொழிலுக்கு இவருடைய தேவை மிகவும் முக்கியமாகப்பட்டது.

கையில் கொண்டு சேர்த்தது. அங்குள்ள ஆறு தாமரை மலர்களில் அவ்வாறு பொறிகளும் ஆறு ஆண்குழந்தைகளாய்த் தோன்றின. கார்த்திகை மகளிர் அறுவர், அக்குழந்தைகளுக்குப் பாலூட்டிச், சீராட்டி வளர்த்தனர்.

நவசக்திகள் :-

வெம்மைக்கு ஆற்ருது ஓடிய உமாதேவியார், மீண்டும் சிவபெருமான் முன்வர, அவர், சிலம்பிலிருந்து உதிர்ந்த நவரத்தினங்களிலும் உமாதேவியார் திருவுருவம் தெரிந்ததால், அந்த ஒன்பது திருவுருவங்களேயும் 'வாருங்கள்' என்று அழைத்தார். அவ்வுருவங்கள் நவசக்திகளாக வெளிவந்தனர். அந்த நவசக்திகளும் பெருமான் இடத்தில் விருப்பம் வைத்தமையால், அப்பொழுதே கருவுற்ருர்கள். இதைக்கண்ட உமா தேவியார், நவசக்திகள் மீது சினங்கொண்டு, அக்கரு வெளிப்படாமல் இருக்கச் சபித்தார். அந்தச் சாபத்தைப் பெற்ற நவசக்திகளும் அஞ்சி நடுங்கி உடல் வியர்த்தார்கள். அவ்வியர்வைத் துளிகளிலும் உமாதேவியின் சாயல் தோன்றினமையால், சிவபெருமான் அவர்களைக் கனிவோடு நோக்க, அவர்களிடம் ஓர் இலக்கம் வீரர்கள் தோன்றினுர்கள்.

நவ வீரர்கள் தோற்றம் :-

உமாதேவியின் சாபத்தைப் பெற்ற நவசக்திகள், நந்திகணத்தலைவர்களையே கருவினுள் ஏற்று, பாரம் தாங்காமல் வருந்தியதைக் கண்ட சிவபெருமான், உமாதேவியாரிடம் கூற, உமாதேவி மனம் இரக்கம் கொண்டு அருள்செய்ய, நவசக்திகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வீரராக ஒன்பது வீரப் புதல்வர்களைப் பெற்றெடுத்தனர். அவர்களே நவ வீரர்கள் ஆவார்கள். அவர்களின் தலைவராக வீரவாகு விளங்கினர். அந்நவ வீரர்கள் அனைவருக்கும் உமாதேவியார் தனித்தனியாக குந்தம் ஒன்றுகொடுத்து வாழ்த்தினர். சிவபெருமான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வாள் ஒன்று கொடுத்து, அவர்களைத் தனது புதல்வர்களாகிய ஓர் இலக்கம் வீரர்களோடு கூடி, ஆறுமுகக் கடவுளுக்கு நீங்காது பணிசெய்து வாழ்வீர்களாக என்று பணித்தருளினுர்.

கந்தவேளும், நவவீரர்களும்:-

பின்னர் சிவபெருமான் உமாதேவியாரோடு சரவணப் பொய்கையை அடைய, அங்கு ஆறு திருவுருவங்களாக இருந்த ஆறுமுகங்களேயும், உமாதேவியார் தன் இரு கைகளாலும் அன்போடு எடுத்துத் தழுவ, ஆறுமுகங்களும், பன்னிரு கரங்களும் கொண்ட திருவுருவாக மாறிய கந்தவேளை, உமாதேவியார் பாலூட்டி மகிழ்வித்தார்.

வீரவாகுவைத் தலைவராகக் கொண்ட இலக்கத்து ஒன்பது வீரர்களும், முருகக் கடவுளை அடைந்து அவர் பணித்தக் கட்டளைகளைச் செய்து வந்தனர்.

குமரவேள்—சூரபன்மன், சிங்கமுகன், தரகாசுரன் ஆகியோர்களை, நவ வீரர்களின் துணைகொண்டு, வதம் செய்து, தேவர்களுக்கெல்லாம் வாழ்வு தந்து, தெய்வயானையையும், வள்ளியம்மையையும் திருமணம் கொண்டு, கந்தவெற்பில் இனிது இருந்தார்.

நத்தக்கருவூர் நாடொன்றுமேலும்
முத்தமநற்கரு கூர்காங்கேயநாடு
நறுமலர்ச்சோலைசூழ் நாமக்கல்நாடு
முறுதியாயிப்படி யுளபதினேழு
முரைத்தனன்மேல்நாட்டி லுறும்வளமெல்லாம்
கருத்தொடுமறிந்துகொள் கன்னிநீயம்மா

4 **சோளிங்கபுரம் :-**

திகழ்காளவயிரவர் திருவருளாலே
புகழ்கொண்ட **சோளிங்கபுரஞ்**
சூழ்ந்தபரவை
நாட்டினுக்கிளைநாடு நானிலமதனில்
தாட்டியாயுளத்தின் சரித்திரங்கேளாய்
தளர்விலாவளர்திருத் தணிகைமாநாடு
தெளிநாடுநெறிநாடு திருவடிநாடு
எழில்பெருந்திருமே ழிசையொருநாடு
பழுதிலாக்கொந்தம் பாக்கமோர்நாடு
அழிவிலாதிருக் காளத்திமாநாடு
வழுவிற்றெண்டமாநாடு மகிழ்வறையநாடு
வேங்கடகிரிநாடு விண்ணோர்கள்யாருந்
தீங்ககன்றிடுநல்ல திருப்பதிநாடு
செகன்னாதநாடு சீட்டம்பள்ளிநாடு
தகைவானசெம்புரந் தழைத்தோங்குநாடு
வரதபுரிநாடு வளர்சந்திரகிரிநாடு
கருதுவோர்வினை தீர்க்குங்காசிமாநாடு
இப்படிவடநாட்டி னிற்பதினேழி
னெப்பிய பெயரெலா மோர்குறைவின்றி
தப்பிலாமறைகளிற் சாற்றியபடியே
செப்பினேனிவையெலாந் தெரிந்துகொள்வாயே.

[மேலேயுள்ள நாடுகளைப் பற்றிய நான்கு பாடல்கள் ''ஜாதி நூல் கோர்வை'' என்ற நூலில், இலக்ஷணக் குறவஞ்சிப் பகுதியிலுள்ளவையாகும்.— ஜாதிநூல் கோர்வை என்ற நூல் தந்து உதவியவர் தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலூக்கா, மேல புவனகிரி— திரு. நா. ச. சிங்கார முதலியார் ஆவார்கள்.]

இதைத் தவிர்க்க ஒரே வழி படித்துப் பட்டம் பெற்றவர்கள் அரசு அலுவல்களில்தான் ஈடுபடவேண்டும் என்ற போக்கை விட்டுத் தங்கட்கே உரிய இயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி நம் குலமக்கள் பெரும்பாலோர் செய்துவரும் நெசவுத் தொழிலில் நூதன முறைகளைப் புகுத்திக் கைத்தறித் துணிக்கு நல்ல ஏற்றுமதி வாய்ப்பு இருக்கும் இத்தருணத்தில் சிறந்த நெசவுத் தொழில் நிபுணர்களாகவும் ஆக முயற்சிப்பதுதான்.

நமது பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரின் சிறந்த தீர்க்க தரிசனத்தால் ஏற்பட்டு நடந்துவரும் 20 அம்சத் திட்டத்தில் ஒன்றாகக் கைத்தறி நெசவுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட்டுவரும் இந்நேரத்தில் நம் இளைஞர்கள் தொழில் துறையில் தம் கவனத்தைத்திருப்பி அரசினரிடமிருந்தும் வங்கிகளிடமிருந்தும் கிடைக்கும் பல்வேறு சலுகைகளைப் பயன்படுத்தித் தங்கள் திறமையாலும், உறுதியாலும் ஊக்கத்தாலும் உழைத்து இவ்வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்புற எல்லாம் வல்ல எம் இறைவன் முருகன் திருவடிகள் துணை நிற்குமாக.

Our Hearty Congratulations to
South India Sengundha District
Conference

Sree Venkatesa
Weaving Factory

BHAVANI P. O. :: Tamil Nadu.

கொடி வணக்கம்

ஜெ. தங்கவேல், பி. ஏ.,

நங்குலச் செங்கொடி பாரீர் — அதை
நாளும் உயர்த்தியே நாட்டிட வாரீர்! (நங்)

சோறுடைச் சோழ நன்னாட்டில் — என்றும்
சோர்விலா வண்மைகொள் சோதரர் வாரீர்!
வீறுடன் தமிழ்த்தாய் வளர்த்த — பாண்டி
வீர செங்குந்தரே விரைவினில் வாரீர்!

மலையரண் மல்கிய சேரர் — நாட்டு
மலைவிலா மாண்புடை மன்னரே வாரீர்!
கலைபயில் சான்றோர்கள் வாழும் — தொண்டைக்
கண்ணிய நாட்டில்வாழ் புண்ணியர் வாரீர்!

ஓரன்னை உந்தியில் வந்த — உயர்
உத்தம புத்திரர் ஒன்றாகச் சேரீர்!
பாரெங்கும் சோதர வாஞ்சை — எனும்
பண்புடைத் தருநன்கு பரவிச் செழித்தே

அன்பெனும் நறுமலர் பூக்க — தூய
அறிவெனுந் தீங்கனி அமிழ்திற் பழுக்க
அன்புடன் நங்குலத் தாயைப் — போற்றி
ஆருயிர்க் கொடியதன் அருகினிற் கூடீர்!

இந்திரப் பதிஎட்டுங் கம்பம் — அதன்
எழிலான உச்சியில் ஏறிப் பறக்கும்
மந்திரக் கொடிமாண்பு கேளீர் — அதில்
மணிச்சிற கடித்து மகிழ்ந்திடுஞ் சேவல்

போற்றி உடுப்பீர்!

கவிஞர் தென்னவன், செம்பொன்னூர்கோவில்.

வாழ்வு மலர வேண்டும் — நெசவாளி
தாழ்வு அகல வேண்டும்!

உயிரினும் மேலாம் மானம் — இதனை
உணர்ந்து காப்பவன் யாவன்? — இறைவன்
துயரினைச் சொல்லல் எளிதோ? — வாழ்வின்
தொல்லையை விளம்பல் தவறோ? — அதனால்

வாழ்வு மலர வேண்டும் — நெசவாளி
தாழ்வு அகல வேண்டும்! 1

'உழுவார் உலகுக்கு) ஆணி' — எனில்
உழவர்க் கடுத்தவன் யாவன்? — இன்றவன்
அழுகுரல் ஓங்குதல் நலமோ? — வாழ்வின்
அடித்தளம் தகர்தல் முறையோ? — அதனால்

வாழ்வு மலர வேண்டும் — நெசவாளி
தாழ்வு அகல வேண்டும்! 2

பெரும்புகழ் ஈட்டித் தந்தான் — கலையின்
பெயரால் உலகில் நிலைத்தான் — இறைவன்
உருவம் குலைதல் நெறியோ? — வாழ்வின்
ஓடம் கவிழ்தல் அறமோ? — அதனால்

வாழ்வு மலர வேண்டும் — நெசவாளி
தாழ்வு அகல வேண்டும்! 3

அன்புளம் மிக்க நல்லான் — உலகில்
ஆக்கத் தொழில் வல்லான் — இன்றவன்
இன்புளம் வாழ்வில் கொளவே — **கைத்தறி**
எழிலுடை போற்றி உடுப்பீர்! — அதனால்

வாழ்வு மலர்ந்து ஓங்கும் — நெசவாளி
தாழ்வு உடனே நீங்கும்! 4

—○—

நவ வீரர்களும், முசுகுந்த சக்கரவர்த்தியும் :-

முசுமுகச்சோழன் என்பவர் வசிட்டமுனிவர் அறிவுரைப்படி, முருகக்கடவுளுடைய சஷ்டி விரதத்தை முறைப்படி நோற்று, காத்த சிறப்பால் தம்முன் தோன்றிய ஆறுமுகக் கடவுள் திருவடி பணிந்து, ''நான் என் முன்னோர்களைப் போல பேரரசர் பதவியைப் பெற்று புவியில் செங்கோலாச்ச, வீரவாகு தேவர் முதலானவர்களை அடியேனுக்கு உறவினர்களாகவும், படைத்துணைவர்களாகவும் தந்தருள வேண்டும்'' என்று விண்ணப் பித்துக் கொண்டார்.

தம்மிடம் பிரியாத்துணைவர்களாக இருந்த வீரவாகு முதலானவர்களை, முசுகுந்தன் விருப்பப்படி பூலோகத்துக்குச் செல்ல பணித்தபோது, வீரவாகு தேவர் முதலியோர் முருகக்கடவுளின் திருவடிகளைப் பணிந்து, ''எங்கள் முதல்வனே, உங்கள் ஏவலின்படி சூரபன்மனை ஒழித்து, வெற்றிகண்ட நாங்கள், இம்மானிடனாகிய முசுகுந்தன் ஏவல்படி பணிசெய்ய இசைவில்லை'' என்று கூறி மறுத்தனர்.

செங்குந்தர் மரபு, தோற்றம் :-

இம்மறுப்புரையைக் கேட்ட முருகக்கடவுள் அவர்களிடம் சீற்றம் கொண்டு, ''நமது கட்டளையை மறுத்ததனால், நீங்கள் அனைவரும் மானிட உருவுப் பெற்று முசுகுந் தனிடம் சேனைத்துணைவர்களாக இருந்து, காலத்தினைக் கழிப்பீர்களாக'' என்று கூறினார்.

நவவீரர்கள் மானிட வடிவு அடைந்து செங்குந்தர் மன்னர் என்ற பெயரோடு, முசுகுந்தன் சேனைத்தலைவர்களாகி அவரின் உற்றத்துணைவர்களாகவும், உறவினர்களா கவும் கலக்கப்பெற்று வாழ்ந்தனர். இதனால் அச்சோழ அரசன் குந்தர்களோடு உறவு கொண்ட காரணத்தால், **முசுகுந்தன்** என்ற பெயரைக், கந்தவேளின் திருவாக்கினால் பெற்று, இனிது வாழ்ந்தான்.

முசுகுந்த மன்னன் நவவீரர்களைக் கருவூர் என்ற தனது தலைநகருக்கு அழைத்து, அவர்களுக்குத் தனித்தனி அரண்மனைகள் கட்டித்தந்து குடியேறச் செய்து, அவர்களுக்குச் சோழ அரசன் தனது உறவினர்களிடத்துச் சிறுமிகளாய்ப் பிறந்திருந்த தேவர்களின் குமாரிகளைத் திருமணம் செய்து கொடுத்தான்.

வீரவாகு தேவர் தமது மனைவியாகிய புட்பகந்தியிடத்தில் சித்திரவல்லி என்னும் ஒரு பெண் மகவையும், அனகன், சனகன் என்னும் இரு ஆண் மகவையும் பெற்றார். இவ்வாறே மற்றைய வீரர்களும் தத்தமது மனைவியார்களிடத்து ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றெட்டு ஆண் மகவையும், பல பெண் மகவையும் பெற்றெடுத்தார்கள். இவர்களோடு அனகன், சனகன் உட்பட ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆவர். இவர்கள் அனைவரும் முசுகுந்த சோழ வேந்தனுக்குத் துணை நின்று, மண்ணுலக அரசர்களை எல்லாம் வென்று, முசுகுந்த சக்கரவர்த்தி என்ற பெயரினைப் பெறச் செய்தனர்.

சிவபெருமான் திருவருள்படி, வீரவாகு தேவர் தனது புதல்வியாகிய சித்திர வல்லியை, முசுகுந்த சக்கரவர்த்திக்குத் திருமணம் செய்துவித்தார். அவ்விருவருக்கும் அங்கிவன்மன் என்னும் நற்புத்திரன் தோன்றினான்.

செங்குந்தர் அரசு தோற்றம் :-

முருகவேலை அவர்தம் ஆணைப்படி விட்டுப் பிரிந்த வீரவாகு தேவர் முதலானவர்களும், முசுகுந்த சக்கரவர்த்தியும் இம்மண்ணுலகை விட்டு, விண்ணுலகை அடைந்து குமரக்கடவுளின் திருப்பாதங்களை என்றும் துதிசெய்து, பேரின்பம் எய்த விரும்பினர். ஆகையால் முசுகுந்த சக்கரவர்த்தியின் மகனாகிய அங்கிவன்மனைக் கருவூருக்கரசனாகவும், வீரவாகுவின் மகனாகிய அனகனை காஞ்சிபுரத்திற்கு அரசனாகவும் முடிசூட்டிச் சிறப்பித்தனர். வீரவாகு தேவர் முதலிய நவவீரர்களின் மக்களாகிய அனகன், சனகன் உள்ளிட்ட ஆயிரத்துத்தொளாயிரவருள் அனகன் அரசனாக வீற்றிருக்க,மற்றவர் அவனுக்குத் துணைவர்களாக இருந்து காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு செங்குந்தப் பேரரசு நிறுவப்பெற்றது.

காஞ்சிபுரம் என்னும் மகாநாடும், அதன் திசை நாடுகளாக கிழக்கே சிவபுரம், தெற்கே தொந்திபுரம், மேற்கே விரிஞ்சிபுரம், வடக்கே சோளிங்கபுரம் என்னும் நான்கு நாடுகளும், ஒவ்வொரு நாட்டிற்கும் பதினேழு, பதினேழு கிளைநாடுகளையும் கொண்டு, ஆக மொத்தம் எழுபத்திரண்டு கிளைநாடுகளை அமைத்து, ஒவ்வொரு நாட்டிற்கும் செங்குந்தத் தலைவர்கள் சிற்றரசர்களாக இருந்து, காஞ்சிரிரம் மகாநாட்டைத் தலைமையாகக் கொண்டு செங்குந்தர் ஆட்சியை நடத்தி வந்தனர்.

(எழுபத்திரண்டு கிளைநாடுகளின் விவரம் இக்கட்டுரையின் இறுதியில் 'சாதிநூல் கோர்வை' என்ற நூலில் இலக்ஷணக் குறவஞ்சி பகுதியிலிருந்து கொடுத்துள்ளோம்.)

குந்தப்படை பற்றி :-

இனி உமாதேவியார்தான் நவ வீரர்கட்குக் குந்தப்படையைத் தந்தனர் என்பதை ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதில்,

''ஆதிநாள் உமையவள்
அளித்த குந்தமே''

—(பாட்டு.26)

''வலம்பிரி யாதசெவ்வேட்
குறுதுணையாக மண்ணுட்
குலம்பெற வந்தா ரென்றங்
கொடியுமை தந்த ஈட்டி''

—(பாட்டு-16)

என்று பாடியுள்ளார்.

மேலும் அக்கூத்தர் பிரானே அந்நூலில், குந்தப் படையின் சிறப்பை,
''பூமாலை கடப்பம் தாமம்
பூண்மணித் தெரியல் செய்ய
பாமாலை தன்னைக் கைக்குள்
முதலியார் பங்கதாக்கி
மாமாலை யொல்லார் காலில்
வழிதுழிக் குடரின் மாலை

முக்தி கொடுக்கும் மந்தமலை, மருதமலை. (கோவை)

சித்தி பெருக்கும் சிவன்மலை, சிவன்மலை. (காங்கேயம்)

மும்மூர்த்திகள் உறையும் மூவர்பாடிய ஆலயம்



நான்முகனுக்கோர் நற்றவ ஆலயம் (கொடுமுடி)

திரிமூர்த்திகள் உறையும் திருப்பாண்டிக் கொடுமுடி

உள்ளத்தாற் பொய்யாது வாழ்ந்ததனல் உலகத்தார்
உள்ளத்தில் வாழ்கின்ற உத்தமராம் அண்ணலே
நள்ளாரும் நண்ணுகின்ற உலகப்பிதா ஆக்கியநம்
நாயகிகஸ் தூரிபாவும் நன்மைநிறை பெண்களன்றோ?

5 தெய்வமணம் கமழுகின்ற தேவாரம் பாடியநம்
திருநாவுக் கரசரையே உருவாக்கித் தந்தபெண்
தெய்வமாம் திலகவதி தியாகத்தில் பூத்தமலர்
தான்தேய்ந்து மணமளித்த தன்னிகரில் பெண்ணன்றோ?
பூணுநல் லறம்யாவும் படைக்கின்ற புதுமைப்பெண்
புதியதோர் உலகத்தைப் பூங்காவாய் ஆக்கியென்றும்
ஆணுக்குச் சக்தியினைத் தருகின்ற அன்புருவம்
அகத்திற்குச் சிறப்பினைத் தருகின்ற ஆற்றலூற்று.

6 பாரதத்தை வாழ்விக்கும் பாரதத்தின் ரத்தினமாம்
பத்திரண்டு திட்டத்தைக் கொடுத்திட்ட புதுமைப்பெண்
பாரதத்தைப் பாரினிலே உயர்த்திவிட்ட ஒளிவிளக்கு
புகழ்என்னும் ஆரமதைப் பொன்மலையாய்த் தான்குவித்துத்
தொட்டிலைத்தான் ஆட்டும்கை தொல்லுலகை ஆளுமென்ற
தொன்மையான வாசகத்தைத் தொல்லுலகில் நிரூபித்து
நாட்டிற்காய் வாழுகின்ற நவபாரதச் சிற்பியாம்
நம்மருமை இந்திராவும் நலம்சான்ற பெண்ணன்றோ?

7 அன்பென்னும் செல்வத்தை அகத்தினிலே பெற்றுள்ள
ஆனந்த ஜோதியான அமரதீப மாம்பெண்கள்
எண்ணத்தில் இனிமைதனை என்றுமே பெற்றுரென்றுர்
வங்கம்தான் பெற்றெடுத்த தங்கக்கவி 'தாகூரும்'
ஞானத் தினுமுயர்ந்தது நல்லதொரு பெண்ணென்றுன்
நியாயத்தை உரைக்கின்ற நிகரற்ற 'சாஸருமே'
ஞாலத் தினுமுயர்ந்த நலமான பெண்மையுமே
ஞாலங்காப் பவனுக்கே நிகரென்றுல் பொய்யாமோ?

8 வாடிவிடும் மலரல்ல வற்றுத பெண்ணன்பு
நாடிவரு வோர்தமையும் நேயமுட னரவணைத்து
நாடுயர வீடுயர நன்மக்கள் நிலையுயர
பாடுபடும் பேசுகின்ற பாசமலர் பெண்ணுவாள்
ஆழிதனில் தான்சென்று ஆயிரமாய்ப் பொருளீட்டி
அகிலமதில் புகழ்பெற்ற ஆடவரை ஊக்குவித்து
சூழுலகில் தன்வாழ்வை வான்மழைபோல் தருகின்ற
சொர்க்கத்தின் திறவுகோலே! பெண்ணே உன்பெருமை
வாழ்க!

ஒட்டக் கூத்தர் வாழ்த்துப் பாமாலை

கவிஞர் அடிகள். கு. ஆ. அரங்கநாதன்.

உமையவள் சிலம்பிற் றோன்று மொன்பது சக்திதம்பால்
அமைந்தவர் பாலராகி அம்மைபாற் குந்தம் வாங்கி
தமைமதி யாதசூரைத் தருக்கொழித் தூர்திகொண்ட
உமைதரு சேய்தாள் போற்றுமொட்டக்கூத் தெழிலோன்வாழி.

ஆயிரத் தெண்மர்தந்த அருந்தலையொட்ட வாய்மை
பாயிரத் தோடுஈட்டிப் பாக்களைப் பாடக் கேட்ட
சேய்த்திருப் பாதம் போற்றுஞ் செங்குந்த ராவிதந்த
நாயக ரொட்டக் கூத்தர் நல்லடிக் கமலம் போற்றி.

கலைவாணி தாள்கள் போற்றிக் கழுத்தொடு தலைகளொட்ட
நலமாகச் செய்ததீரர் நங்குலத் தோன்றலான
கலையாவுந் திருத்தும் வாய்மைக் காவலன் கருணைவாய்ந்த
நல்மேவு மொட்டக் கூத்தன் நாமமென்னாளும் வாழி.

எந்தெந்த நாளாய்ந் தாலும் இப்படிப் பட்டமேன்மை
இந்நல் லுலகிற் செய்த இனிதமிழ்ப் புலவன் காணோம்.
சந்ததம் தமிழைப் போற்றித் தகைவிலாப் புலவர் வீட்டு
நன்தந்தை யொட்டக் கூத்த நாவலர் வாழி வாழி.

செங்குந்த மன்னரான திருவாலூர்ச் செல்வர் கேட்குந்
தங்குலப் பிரபந்தத்தைத் தாவென்று லாயிரத் தெண்
நங்குலத் தலைகள் தந்த நங்குந்தத் தினைசிறப்பித்து
இங்குநாம் பாடுவோமென் றிசைத்திருங் கூத்தர் வாழி,

அறந்தெரி புலவன் மிக்க ஆண்மைகொள் புலவனாட்சித்
திறந்தெரி புலவன் செங்கோல் செலுத்திய புலவன் கல்வி
முறைதெரி புலவன் கற்றோர் முழுதுணர் புலவன் வெட்டும்
குறையுடற் றலைபொருந்தக் கூறிடும் புலவன் வாழி.

தலைதந்த செங்குந் தர்க்குத் தாரணி போற்ற மேலாங்
கலைதந்து புகழுந் தந்து காசினி யுள்ள மட்டும்
நலமுந்து செல்வ மோங்க நல்லற வாழ்வு தந்த
தலைவரெம் தந்தையொட்டக் கூத்தர்தம் தகைமை வாழி.

முழங்கியோர் சமய உலகத்திலும் பலர். ஆனால் ஏன் சாதிகள் ஒழியவில்லை? கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு — அம்மணவழி பிறந்த மக்களுக்குத்தான் கல்விக்கூடங்களில் முதல் இடம் என்று முன்னுரிமை தரும் ஓர் உத்திரவை இந்த நெருக்கடி நிலையிலேனும் அவசரச் சட்டமாகப் பிறப்பிக்க வேண்டும். அப்படிச்செய்தால் இந்த நூற்றாண்டு முடிவதற்குள் இந்தியாவில் சாதிக் கொடுமை சரிபாதியாகவேனும் ஒழிந்து விடும்.

இன்றையச் சூழ்நிலையிலும் இந்தத் தமிழ் நாட்டிலும் அதிகாரிகளுக்கும் செல்வர்களுக்கும் அஞ்சி அநீதிகள் எதிர்க்கப்படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். கட்டுப்பாட்டின் பெயரால் யார் ஒருவரும் காட்டுத் தர்பார் நடத்துவதற்கு நாட்டு மக்கள் இடம் தருதல் கூடாது. எந்த ஓர் அநீதியையும் எதிர்த்து எவர் ஒருவரும் முறையாகப் புகார் செய்வது வரவேற்கப்படவேண்டும். இன்னொன்று; அதிகாரிகளையும் செல்வர்களையும் எதிர்த்து அதிகாரம் இல்லாதவர்களும் வறியவர்களும் எப்படி வழக்காட முடியும்? அதிகாரிகள் அலுவலகப் பணத்திலேயே வழக்காடுவார்கள். செல்வர்கள் நீதித் துறையிலே கூட எவ்வாறு விளையாடுவார்கள் என்பதை வரலாறு அறியும், எனவே, வாருவாய் இல்லாதவர்கள் எதிர் வழக்காடும்பொழுது அவர்களுக்குரிய வசதியை அந்த அலுவகமும் அரசாங்கமும்தான் கடனாகவேனும் செய்து கொடுக்க வேண்டும் — நீதி நிலைக்க வேண்டுமானால்: புகார் செய்தவர் தம் புகாரை நிலைநிறுத்தவரானால் அவர் செய்த செலவுக்கு நிகரான தொகையைப் பாராட்டுத் தொகையாகவும் வழங்குதல் வேண்டும். இல்லையேல் நீதி நிலைக்காது,

இறுதியாகவும் உறுதியாகவும் இளமைத் துடிப்புக்கு என் இதயத் துடிப்பு இயம்புவது எல்லாம் இதுதான். அன்னை இந்திராவின் ஆசைக் கனவாகிய சமதர்மச் சமுதாயத்தைச் சமைக்கும் பணியிலே அச்சத்தைச் துச்சமாய் மதித்துத் தேவையானால் நம் ஆவியையும் காணிக்கையாக்கலாம். நாம் அழிந்தாலும் நம் வருங்காலத் தலைமுறை நல்வாழ்வு வாழ்ந்தால் போதும்.

மாவடியி லேவிளங்கும் வல்லிகா மாட்சித்தாய்
சேவடியி லேயுதித்தார் செங்குந்த ரம்மானை
சேவடியி லேயுதித்தார் செங்குந்த ராமாயில்
பாவடியி னின்று பசப்புவதே னம்மானை
பசித்தவருக் கன்னமிடப் பசப்பாரோ வம்மானை

—செங்குந்தர் குலமாட்சி

மக்கள் தொகை பெருகி வருவது, எதிர்காலத்தில் சமுதாய முன்னேற்றத்தை மட்டுமல்ல; அதன் அடிப்படையையே தகர்த்துவிடுமோ என அறிஞர்கள் அஞ்சுகின்றனர். புதுமைப் பெண்கள் இதை உணர்ந்து குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்தை எளிய முறையில் மக்கட்கு விளக்கிக் கூறுதல் வேண்டும்.

கிராம மக்களில் பெரும்பாலோர் ஓய்வு காலங்களில் பிற குடிசைத் தொழில்களைச் செய்யாமல் வீண் சண்டைகளிலும் சூதாட்டங்களிலும் ஈடுபடுகின்றனர்.

அத்தகையவர்கட்கும் வருமானம் தரக்கூடிய குடிசைத் தொழில்களை ஓய்வு நேரத்தில் செய்யுமாறு கற்பித்து வழிகாட்டல் வேண்டும்.

தொற்று நோய் முதலியன பரவுவதற்குச் சுத்தமும், சுகாதாரமும் இல்லாமையே முக்கிய காரணம். இதனை மக்கட்கு அன்புடனும் பொறுமையுடனும் விளக்கிக் கூறும் இயல்பு பெண்கட்கு உண்டு. எனவே இப்பணியில் அவர்கள் ஈடுபடுவதும் சமுதாய முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதாகும்.

இவற்றையெல்லாம் எதையும் தாங்கும் இதயம் கொண்ட நங்கைமார் நிச்சயம் சாதிக்கமுடியும். இவற்றை மட்டுமென்ன இப் பரந்த இந்திய நாட்டையே வழி நடத்திச் செல்லப் பெண்களால் முடியும் என இன்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் நிரூபித்துக் கொண்டிருப்பதை எவர் தாம் மறக்கமுடியும்?

தென்னிந்திய செங்குந்தர் மாநாட்டிற்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்.

○ ○ ○

உமையாள் & கோ.,

N. C. A. பழனியப்ப முதலியார் & சன்ஸ்

கமிஷன் மண்டி,
64, சோளக்கடை வீதி,

தாராபுரம்.

இளமைத்துடிப்புக்கு என் இதயத்துடிப்பு

டாக்டர் ந. சஞ்சீவி

மனித வாழ்வு, இளமைத் துடிப்பிற்கும் முதுமை மோனத்திற்கும் இடையே வாழ்வது; வளர்வது. இது இயற்கை — கூர்தல் அறம்.

என்னைப் பொறுத்தவரையில் எல்லாம் கர்மவினைதான். வாழ்வின் அடிப்படை இயற்கை. தன் விருப்பத்தில் (Self will) அடிப்படையில் உருவாகி நல்லது, கெட்டது இன்ப துன்பங்கள் ஊடாகப் பண்பட்டுத் திருவாவதுதான்.

இரு வகையான அறிவு நமக்கு இருக்கிறது. ஒன்று கல்வியறிவு; மற்றொன்று கருத்து அறிவு. முன்னதைப் பழையது என்றும், பின்னதைப் புதியது என்றும் மொழியலாம். எந்த ஒரு கருத்தோடும் இன்னொரு கருத்து உராயும்போது ஒரு புதிய கருத்துப் பொறி பறக்கிறது. அப்பொறியிலிருந்து எத்தனையோ விளக்குகள் ஏற்றப்படுகின்றன. அதுதான் வளர்ச்சி; வாழ்வு.

இன்னொரு வகையில் சொன்னால் கருத்துகள் இருவகை எனலாம். ஒன்று தன் கருத்து; மற்றொன்று சமுதாயம் தந்த கருத்து, இரண்டும் மணங்கொண்டு பெறும் மக்கள் தம்மினும் தக்காராய் இருப்பதே முன்னேற்றம் — முழுமை நோக்கி:

மனித வாழ்வின் குறிக்கோள் முழுமை (Perfection). இதைத் தவிர இன்னொன்று இருத்தல் இயலாது. தெரிந்தோ தெரியாமலோ திருடனும் கொலைகாரனும் கூட இந்தக் குறிக்கோளை நோக்கித்தான் பயணம் புரிகிறார்கள். முள்ளும் கல்லும் நிறைந்த காட்டுப் பாதையில் சிக்கிக்கொள்வது போன்று களவு, கொலை வழியில் செல்லல் நேர்ந்தால் அல்லல் நேரும். இது இயற்கைதான்; சரிதான். மக்கள் பட்டுப்பட்டு பட்டுப் போகாத பட்டறிவு பெறுகின்றனர். இந்த அறிவே அறிவு. இளமையிலேயே ஞான வாழ்வு கிடைத்தல் — முன்னைப் பிறவிகளில் உழன்று உழன்று சுழன்று சுழன்று பயின்று பயின்று பெற்ற அறிவின் பயன்தான். அப்படிப்பட்ட ஞானசம்பந்தர்கள் நால்வருள்ளும் ஒருவர்தான்: மற்றோர் நிலை நாம் அறிந்ததே. எனவே, எத்தகைய வாழ்க்கை நமக்குக் கிடைத்தாலும் அத்தகைய வாழ்க்கைக்குதான் நாம் உரிமை பெற்றவர்கள் என்பதை உணர்ந்து, அதன் காரணமாகச் சோர்வோ செருக்கோ அடையாமல் வாழ்வதே வாழ்வு,

"பண்டைக் காலப் பெண்களைப் போல குடும்பக் கடமைகளோடு மட்டும் நின்று விட்டால் போதாது. இக்காலப் புதுமைப் பெண்கள் சமுதாயக் கடமைகளையும் செய்தல் வேண்டும்" எனும் கருத்தை வலியுறுத்தும் வகையில் அவர் பாடியுள்ள பைந்தமிழ்ப் பாடல் வருமாறு

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணு தலார் நாங்கள் பாரத
தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் "வாணிகம் செய்யலாம் பெண்கள், நல் வான ஊர்தியும் ஓட்டலாம் பெண்கள்" என்று முழங்கியுள்ளார்.

எனவே சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு மிக மிகத் தேவை என்பதை உணரலாம். எதிர்காலச் சமுதாயத்தின் உறுப்பினர்களாக விளங்க இருக்கும் இன்றைய சிறுவர்களை வளர்க்கும் பொறுப்பு பெண்களுக்கு உண்டு.

வளர்ப்பவர்கட்குக் கல்வி அறிவு இருந்தால்தான் வளர்க்கப்படுபவர்கள் நல்லவர்களாக விளங்கமுடியும். எனவேதான் புரட்சிக் கவிஞர்

கல்வி யில்லாத பெண்கள்
களர் நிலம் அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவுடைய மக்கள்
விளைவது நவிலவோ நான்?

என்று பாடினார்.

எனவே சமுதாயத்தை முன்னேற்றக் கருதும் பெண்கள் கிராமங்களிலுள்ள தாய்மார்களுக்கு (முதியோர்) கல்வி கற்பித்தல் வேண்டும்.

கிராம மக்களிடம் வேரூன்றி விட்ட மூட நம்பிக்கைகள் பொய்ச் சடங்குகள் முதலானவை, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையூறாக இருக்கின்றன.

இன்றைய பெண்கள் அப்படிப் பட்ட மக்களைச் சந்தித்து அவர்களது அறியாமைகளை நயமாகவும், பக்குவமாகவும் நீக்கப்பாடுபடுதல் வேண்டும்.

ஆம்; பாடுபடுவார்கள் எனும் நம்பிக்கை பாரதிக்கு இருந்தது அதனால் அவன்

மூத்த பொய்கள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்

என்று உறுதியாகப் பாடினன்.

அஞ்ஞானக் கொக்கறு கோவைப் — போற்றி
அழைத்திடுவீர் வினை அறுத்திட வென்னும்
செஞ்ஞாயி றெனத்திகழ் வேங்கை — சோழர்
செருக்களம் வென்று சிறந்தமை கூறும்:

நடுவண் பகைவரிரத்தம் — தோய்ந்த
நாம நெடுங் குந்தம் நங்குல வீரர்
அடுதிறல் கொண்டறங் காத்து — நன்மை
அல்லவை அழித்திட்ட ஆண்மையே காட்டும்.

நாற்றிசை யாடிப் பறந்து — பெரு
நானில மெங்கணும் நம்சீர் பரப்பும்
ஏற்ற முடைய கொடியை — வானில்
ஏற்றியே காத்தென்றும் போற்றிடல் கடனே.

குந்தத்தைத் தோளினி லேந்திக் — குலக்
கொற்றத்தைத் தாழாது காத்திடுங் குறியாய்ச்
சொந்தச் சோதரன் தாளைப்போற்றிப் — புகழ்
சோர்வின்றி ஏறிட ஆர்வமாய் ஏற்றும் (நங்)

*

காளிப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், S1163.

காளிப்பட்டி அஞ்சல் - P. C. 637501.

(வழி) ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்.

எங்கள் சங்கத்தில் 60s, 80s ரகங்களில் 1x4 சின்னபாவஞ்சி, 1x4 பெரிய பாவஞ்சி ரகங்களில் சிறந்த முறையில், கை தேர்ந்த நெசவாளர்கள் மூலம் தயார் செய்கிறோம். தேவைக்கு ஒருமுறை விஜயம் செய்யக் கேட்டுக்கொள்கிறோம்.

"எங்கள் ஜவுளிகள் ஈரோடு மார்க்கெட்டில் பெயர் பெற்றவை"

தங்களன்புள்ள,

(sd) A. விஸ்வநாதன்,

தலைவர்.

'வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும், சாதம் படைக்கவும், தெய்வச் சாதி படைக்கவும், காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுக்கவும் பெண்டிர் முனைதல் வேண்டும்! என்று முழங்கினார் பாதியார், பாரதியின் அடிச்சுவட்டில் வந்த புதுவைக் குயில் பாரதிதாசனார்,

'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற் கொம்பே' என்றுபாடி
'மாதர்தம் உரிமை மறுப்பது மாண்பா?
மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா' என்று வினவுகிறார்.

பெண்டிரைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"தனித்துக் கிடந்திடும் லாயம்—அதில்
தள்ளி அடைக்கப் படும் குதிரைக்கும்
கனைத்திட உத்திரவுண்டு—வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டும்! என்று கூறுகிறார்,

இத்தகைய நிலை மாதர் கல்வி கற்றிடுவதால் மறையும். எனவே மாதர் கல்வியில் வல்லவராதல் பெருங்கடமையாகும், இன்றும் பாரத நாட்டில் பெண்டிருள் கல்வி கற்றோர் மிகக் குறைவானவரே,

கைத்தறிக்கு ஆதரவு:- நம் மாதர் அயல் நாட்டுத் துணிகளின் மேல் அவாக் கொள்ளக்கூடாது. நம் நாட்டில் உற்பத்தியாகும் துணிகளைப் பயன்படுத்தல் வேண்டும், அவற்றினும் ஆலைத் துணிகளை நீக்கிக் கைத்தறி ஆடைகளை அணிந்தோமென்றால் எத்துணையோ கைத்தறி நெசவாளர்களை ஆதரித்தவராவோம், அந் நாளில் பெண்டிர் தங்கள் கணவர்கட்கு நெசவுத் தொழிலில் உறுதுணையாக இருந்தனர். நன்னூலார் காலத்தில் நூல் நூற்றல் தொழிலே பெண்டிர்களைச் சார்ந்திருந்தது, சங்க காலத்தில் கைம் பெண்டிர் நூல் நூற்றலையே தங்கள் பிழைப்புத் தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை 'ஆளில் பெண்டிர் தாளின் செய்த நுணங்கு நுன் பனுவல்' என்ற நற்றிணை அடிகளால் அறியலாம். பெண்டிர்க்கு வாழ்வு கொடுக்கவே காந்தியடிகளும் கைராட்டைத் தத்துவத்தைக் கொண்டுவந்தார். இக் காலத்திலும் ஆடவர்க்குச் சமமாகச் பெண்டிரும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நம் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இருபது அம்ச திட்டத்தில் ஒன்பதாவது அம்சமாக கைத்தறிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கும் திட்டத்தைச் சேர்த்துள்ளார்கள். கைத்தறித் துணிகளை அணியும்போது எத்தனையோ பெண்டிர்க்கு நம் இனத்திற்கு உதவி செய்தவராகின்றோம். எனவே பெண்டிரின் இன்றைய பெருங் கடமையாகக் கைத்தறி ஆடையைப் பயன்படுத்துவதைக் கொள்ளல் வேண்டும்.

அணிசேவற் கொடியோன் அமர்ந்த அலங்கார மலைகள்!



அழகின் பிறப்பிடம், பச்சைமலை. (கோபி)



அமைதியின் இருப்பிடம், பவளமலை. (கோபி)

"It is presently well recognised in India that the reform measures dealing with security of tenure and acreage ceilings are only partially enforced and that many of the State legislatures are not anxious to have such radical land reform. Even if a ceiling is imposed, the land acquired is sufficient to give minimal holdings either to the mini-farmers or the land less-but not both. There appears to be scope for some distribution which will also assist agricultural production because the yield per acre in India is higher on small farms............... A large extension of credit at reasonable terms together with accessible marketing channels to small farms in general, and particularly to tenants with secure leases, are required. Provision of these facilities is as essential as further land distribution for attaining the income equity and productivity objectives of India's land reform, and is likely to present fewer problems".

The same point has been highlighted by the Reserve Bank's study of small farmers, which has stressed that given the same agri-economic conditions, small farmers can do as well as the large ones. Small farmers deserve help not only on humanitarian grounds, but on account of their considerable contribution to agricultural production. Therefore, if total agricultural production is to be increased substantially. sufficient importance should be attached to the development of small farms.

Preparation of proper land records should help eliminate the uncertainty regarding ownership and tenancy rights of land in the rural sector. This should help the banks and other financial institutions to ascertain the interest of farmers in land and to find out his genuine credit requirements. As a result, a large number of farmers will be in a position to avail of credit from institutional credit agencies.

House Sites for landless.

The third measure in the welfare category is the stepping up of provision of house sites for landless and weaker sections. In this respect also, Maharashtra, Gujarat and Orissa States have already moved in the matter.

The problem of housing in India is a complex one requiring finance on a huge scale. Though no precise data are available about the shortage of housing in the country the 1971 census placed the shortage at 1.45 crore units comprising 29 lakh units in urban areas and 1.16 crore units in rural areas. A scheme for providing free house sites for landless workers has been in force since 1971. The Union Government provides full assistance to State Governments for meeting the expenditure on development of house sites and acquisition of land wherever necessary. The maximum size of a house site allowed to a landless family is normally100 sq. yards. Up to the 31st March 1974, projects of 15

ளிலும் குன்றுதோறுடும் குமரவடிவேலனின் வீறு செவ்வையாகக் கூறப் பட்டுள்ளது. எழுபது செய்யுள்கள் கொண்ட இந்நூலில் தற்போது பதின் மூன்று செய்யுள்களே கிடைக்கப்பெற்றுள்ளன. சிறப்புமிகு இந்நூலை இயற் றியவர் ஒட்டக்கூத்தராவர்.

3. **களிப்பொருபது :** இது சிரச்சிங்காதனமிட்ட செங்குந்த வீரர்களின் பெருமையையும், அவ்வீரர்களின் அறுபட்ட தலைகளை ஒட்டப்பாடிய ஒட்டக் கூத்தரது தெய்வீக சக்தியையும் சிறப்பித்து அசரீரி, ஔவையார் முதலியோர் பாடியனவாம். இதில் கம்பர், புகழேந்தி, அம்பிகாபதி, சேரன், சோழன், பாண்டியன், அஞ்சனாட்சி, சைவாசாரியார் பெயர்களும் காணப்படுகின்றன, இந்நூல் பத்து செய்யுள்களையுடையது. தொகுத்தவர் குலோத்துங்கன் என்பர்.

4. **திருக்கை வழக்கம் :** இந்நூல் செங்குந்தமரபினருள்ளே மேம் பட்டவர்களது கைவண்மைகளைச் சிறப்பித்துப் பாடப்பட்டதாகும் இது கலிவெண்பாவால் அமைந்த பிரபந்தமாகும். இது கம்பர் பாடிய 'திருக்கை வழக்கம்' போன்றது. இது செங்குந்தரைப் பற்றியதாய் ஒவ்வொரு கண்ணி யும் 'கை' என்ற சொல்லால் முடிவுறுவது. இது புகழேந்தியரால் பாடப்பட்டது.

5. **பிள்ளைத்தமிழ் :** இந்நூல் செங்குந்த வீரர்களது பிள்ளைமைப் பருவங்களைச் சிறப்பித்துப் பாடியது. அவ்வீரரது வீரம், நியாயம், தியாகம் முதலிய சிறப்புகளைப் பலப்படப் பாராட்டுவது. ஆண்பாற் பிள்ளைக் கவியாகப் பத்துப் பருவங்களை உடையது' வீரவாகு தேவர் முதலிய ஒன்பதின்மர், முருகக்கடவுள் ஆகிய இவர்கள் மரபில் வந்தவர் செங்குந்தர் என்னும் செய்தி யைத் தெரிவிக்கின்றது. இதனை, 'மயில் வாகனத்தோன் துணையாக வந்தோர் தாலோ தாலேலோ' என்னும் அடியால் அறியலாம்.' "சங்குந்து வயல்மேவு செங்குந்த வளநாடர் சப்பாணி கொட்டியருளே" எனக் கூறப்படுவதால் செங் குந்தநாடு என்று ஒருநாடு இருந்தது என்பதும், செங்குந்தர் அந்நாட்டிற் குரிய சிற்றரசாயிருந்தனர் என்பதும் விளங்குகிறது. நூற்றுத்தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்நூல் இயற்றப்பட்டது என்பதனை இந்நூலின் இறுதியில் வரும் பாடலினால் அறியலாம். இந்நூலை இயற்றிய ஆசிரியர் ஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஆவர்.

6. **கலித்துறை மாலை :** (கலித்துறையந்தாதி) இந்நூலில் செங்குந்த மரபினரின் சிறப்புகளும் வீரதீரங்களும் சொல்லப்படுகின்றன. ஈட்டி யெழுபது முதலிய நூல்களை இம்மரபினர் பெற்ற வரலாறுகள் இதில் கூறப்படுகின்றன. "தப்பில் புராணம் பரணி உலா பிள்ளைத்தண்டமிழ்

private credit agencies including land lords, professional moneylenders, agriculturists-money lenders, agriculturist-cum-traders, traders and commission agents and relatives. Commercial bank credit was conspicuous by its absence in 10 districts. In many instances, majority of small farmers indicated a scope for investment expenditure and gave lack of credit facilities as a reason for not implementing their plans.

Many States have gone ahead in implementing this point since the announcement of the programme was made. West Bengal, Tamil Nadu and Maharashtra have already taken action in this direction. In all, as many as 12 States and 4 Union Territories have taken action in the matter.

Though this measure is likely to provide some relief to the weaker section of the rural community, this alone will not improve the lot of these people unless simultaneous measures are taken to see that these people are not again forced to go to moneylenders and be again in debt. Perhaps, in course of time, commercial banks as well as co-operatives may have to step in and provide credit facilities to this section of rural community. The proposed establishment of rural banks as announced by the Government may, perhaps, help these people in this respect.

Ceilings on Agricultural land holdings

Next in importance in this category is the measure for implementation of agricultural land ceiling and speedier distribution of surplus land and compilation of land records. The Government is moving fast in the implementation of this point. On August 19, 1975, the Chief Ministers accepted the deadline, viz., end-June 1976, for the distribution of surplus land.

Though a ceiling on land exists in almost all States since 1960-61, it has not been pursued and implemented effectively. As a result, only 9,64,000 hectares were declared surplus after the scrutiny of statements submitted by substantial landholders. Due to litigation resorted by the substantial landholders, there is a large gap between the area taken possession of and the area distributed. Consequently, only 4,64,176 hectares have been finally distributed. While speeding up the ceiling on land-holdings, it is essential that agricultural production does not suffer.

Since the announcement of the measures many States have initiated action in this respect. Assam, Andhra Pradesh, Jammu and Kashmir, Punjab, Uttar Pradesh and Sikkim are reported to be moving this direction.

In regard to the impact of this measure on agricultural productivity, it may be relevant to quote World Bank's study on 'Land Reforms.'

1973, டிசம்பர் மாதம் இந்திய அரசு அமைத்த குழுவின் பரிந்துரையின்படி பல திட்டங்களைச்செயல்படுத்தவும் அதில் நுண்ணிய கவனம் செலுத்தவும் கைத்தறிவளர்ச்சி ஆணையாளர் (Development Commissioner for Handloom) அவர்கள் தலைமையின் கீழ் புதுடெல்லியில் வணிக அமைச்சகத்தில் ஒரு தனி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுப் பாதையில் கைத்தறித் தொழில் இப்போது மிகவேகமாக முன்னேற்ற மடைந்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது.

1965ல் 43 கோடி மீட்டர் அளவினதாக இருந்த துணி உற்பத்தி, 1974-75ல் 229 கோடி மீட்டர் அளவினதாக அதிகரித்துள்ளது. 1965ல் 15 கோடி ரூபாய் அளவிருந்த ஏற்றுமதி வருமானம், 1975ல் 105 கோடியாக ஏழுமடங்கு பெருகியுள்ளது. கைத்தறித் தொழிலாளர் சேவை நிலையங்கள் எண்ணிக்கை ஏழிலிருந்து பதினான்காக இரட்டித்து உள்ளது. நடப்பாண்டில் அது பதினெட்டாக உயருமென எதிர்பார்க்கலாம். சேலத்திலும் வாரணாசியிலும் உள்ள தொழில் நுட்பக் கழகங்கள் தொழில் நுட்ப ஊழியர்களைப் பயிற்றுவிக்கின்றன.

நமது நாட்டின் மொத்த கைத்தறித்துணி ஏற்றுமதியில் 50 சதவிதத்தைத் தமிழகம் தயாரிக்கின்றது. இதற்கு ஆகும் இறக்குமதி செலவு சொற்பம். ஏற்றுமதி வரவோ 100 கோடி ரூபாய்.

கூட்டிறவுத்துறையில் கைத்தறி அடைந்த வெற்றிகளுக்கு ஒரு மைல்கல் "சென்டக்ஸ்" என அழைக்கப்படும் சென்னிமலை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

45 உறுப்பினர்களுடன், ரூ. 1,771/- மூலதனத்துடன் தோன்றிய இச்சங்கம், 31—3—76ல் 571 உறுப்பினர்களையும் சுமார் 3,40,130 மூலதனமும் பெற்று ஆல் போல் தழைத்து, வளர்ச்சியுற்றுள்ளது. 1940-41ல் ரூ. 128 ஆக இருந்த நிகர லாபம், 1974-75ல் ரூ. 8.85 லட்சமாக உயர்ந்துள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் கைத்தறிப் போட்டியில் பங்குகொண்டு பரிசுகளைப் பெற்று வருகிறது. 1962-63ல் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறையினரின் கேடயம் பெற்றுப் பெருமை அடைந்தது. ஏற்கனவே வெள்ளி விழாக் கொண்டாடிய சங்கம் மேலும் தழைத்துப் பொன் விழா கொண்டாட வாழ்த்துவோம். சென்டெக்ஸ் மட்டுமின்றி, ஈரோடெக்ஸ் எனப்படும் ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் போன்றவை வளர்ந்து வருகின்றன.

நெசவாளரின் துயர் துடைக்கப் பல உதவிகள் செய்யப்படுகின்றன.

நூல் வங்கிகளை ஏற்படுத்துவது, நெசவாளர்களுக்கு நிதியுதவி, தரக்கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது ஆகியவை அபிவிருத்தித் திட்டங்களாகும். திட்டக்குழு அனுமதித்துள்ள ஒதுக்கீடுகளின்படி தேசவுடைமையாக்கப்பட்ட வங்கிகள் சுமார் ரூ. 260 கோடி வரை நிதியுதவியளிக்கும். தரக்கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில் வேட்டிகள், புடவைகள் உற்பத்தி கைத்தறித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்தியை மாநில அரசுளே கவனிக்கும்.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கார்ப்பரேசனின் ஆதரவுடன் கூட்டுறவு நெசவுத் துறையினது உற்பத்தியை வலுப்படுத்தத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. கடன் வசதிகளைப் பொறுத்தவரையில் கைத்தறிகள் பருத்தி வகையில் சுமார் ரூ. 1000 வரையிலும்

செங்குந்தர் பேரரசு

கங்காபவானிக்கு இலக்ஷுமிதேவி சொல்லிய

இலக்ஷணக் குறவஞ்சி.

1 சிவபுரம் :

தார்புனைநந்தியின் தயையினுல்நாளுஞ்
சீர்புனைந்தோங்குஞ் **சிவபுரநாட்டின்**
வளங்கொளுங்கிளைநாடு வருமுறைச்சொல்வேன்
விளங்கிவாழ்ந்திடுநல் மேலப்படப்பை
பழுதிலாகீழப் படப்பையாத்தஞ்சேரி
வழுவிலாமூன்றுமோர் மாநாடதென்பர்
பயில்வுறுமானும் பதிசெம்பாக்கமு
முயர்வுறுமூணத் தொன்றகரமுமின்
நான்குமோர்நாடு நலந்திகழ்முன்னூர்
மேன்மைகட்செய் பரமேசுரமங்கல
மும்மதராந்தக மூன்றுமோர்நாடு
வம்பவிழ்திண்டி வனஞ்சாரமோர்நாடு
பரிவுகொள்வக்கரைப் பத்துமோர்நாடு
திருவக்கரைபுதுச் சேரியொழுகரை
இவைபத்துநாடு இயல்திரிபுவன
முவகைகொள்நல்லாத் தூருமோர்நாடு
திருவதிப்பாலூர் சேரவோர்நாடு
தெரிதருமிடையாத்தூர் திருவெண்ணைநல்லூர்
கனந்தருமோர்நாடு கருதுபனமூலை
அனந்தபுரமுமோ ரழகுகொள்நாடு
பரவிவாழ்வழுதிலைப் பட்டுமோர்நாடு
மருவுமாப்பறைய வரமாசூரென்னும்
திட்டமாயிரண்டுந் திகழவோர்நாடு
பட்டணங்கருங்குழி பரவுமோர்நாடு
குறைவிலாமன்றை கோவிலோர்நாடு
நெறியானபாளையம் நெடுந்தனிநாடு
சரியானபாகந் தனிநாடுஜம்பை
திருவரங்கமிரண்டுஞ் சீர்பெறுநாடு
பண்பதாயிப்படி பதினேழுநாடும்
வண்மைகீழ்ப்பாலில் வளர்ந்திடுகின்றதா
லுண்மையாயவைகளுக் குளபெயரெல்லாம்
நன்மையாயுரைத்தேன் நயந்துகேளம்மா.

The Government of Uttar Pradesh has issued orders under the Defence of India Rules fixing prices of text-books and recommended books from Class I to XII. The Government of Andhra Pradesh has decided to open consumer stores in the 133 taluka headquarters in the State. Such stores will be opened in all educational institutions and hostels also for the supply of books and stationery to students.

These steps are likely to reduce the cost of education to the students from rural areas.

Socialisation of Urban land

Socialisation of urban and urbanisable land, ceiling on ownership and possession of vacant land and on plinth area of new dwelling units: Fortunes have been made out of urban land at the nation's expense. Speculation in land and the concentration of urban property have led to glaring inequalities and to a great deal of haphazard urban growth. Legislation is being initiated to impose ceilings on the ownership and possession of vacant land, to acquire excess land, to restrict the plinth area of new dwelling units and to socialise urban and urbanisable land. The Government is thinking about the socialisation of urban land and ceiling on ownership through legislation. These measures will help eliminate speculation in urban land as a result of which land prices in urban centres are expected to come down. In large towns and metropolitan cities, most of the construction activity is financed through black money and associated with a number of corrupt practices. These measures are expected to put a stop to these malpractices. However. construction activity at urban centres is likely to be adversely affected and consequently, housing problem may become somewhat more serious unless the Government itself undertakes construction on a very large scale.

Elimination of evils

A ti-smuggling Measures

Special legislation for confiscation of smugglers' properties. The campaign against smugglers, which was thwarted by their release on technical grounds, will be intensified. The properties of smugglers will be confiscated whether held in their own name or benami to curb the evil practice and to see that fortunes created out of smuggling are not enjoyed by relatives of smugglers.

A large number of arrests are being made by the Government under the Conservation of Foreign Exchange and Prevention of Smuggling Activities Act 1974. A decision has been taken by Government to attach property of smugglers who have been absconding for a long time. With all the branded smugglers behind bars under the Customs Act and the Government's drive on the high

Defence of India Rules, the sellers of packaged goods have been asked to affix the sale price and net contents on the pack from October 2, 1975. Business organisations have been asked to eliminate or cut down all unnecessary expenditure (e. g. advertisment, entertainment, hotel and travel) to reduce costs and prices of their products. Economy in Government expenditure is an oft-repeated statement with little achievement in reality. In 1974 - 75, for example, the budgetary deficit was Rs. 696 crores against the original estimate of Rs. 126 crores. For 1975-76, the budgetary deficit has been placed at Rs. 258 crores. It is hoped that the Government will succeed in its efforts to effect economics and restrict the deficit to the budgeted level.

It the context of price stability, procurement of foodgrains has strategic role. But the country's performance in this respect has not been very encouraging. Procurement of foodgrains has to be intensified to support the public distribution so that the Government will be in a commanding position to tackle the problem of inflation. The procurement of wheat from the last rabi crop is reported to have reached 3.9 millian tonnes as against the target of 5 millian tonnens. Though there was some pick-up in the market arrivals after the declaration of emergency, the procurement is still lagging behind the target. The procurement target for the kharif rice is reported to have been scaled down from 5.3 million tonnes as recommended by the Agricultural Prices Commission to 4.635 million tonnes The current rice crop is reported to be progressing well and a record output of 50 million tonnes is expected. In this context, rice procurement could have been fixed at a higher level.

Conclusion :—

The implementation of the 20-point economic programme is likely to pose a major challenge to the administrative machinery of both the Central and State Governments. Most of the measures have a welfare connotation as they aim at the upliftment of the rural poor. The Additional Rural Income Survey conducted by the National Council of applied Economic Research for the period 1968-69 to 1670-71has found out that big farmers benefited relatively more than small farmers with the advent of Green Revolution. However, the inequality in the income distribution among rural households declined during the period as indicated by a fall in the Gini Concentration Ratio from 0.43 in 1968-69 to 0.39 in 1969-70 and 0.38 in 1970-71. Thus, with the progress in agrculture as well as general economic development involving special schemes, such as Small Farmers Development Area Projects, Marginal Farmers and Agricultural Labourers, Crash Schemes for Rural Employment and others, inequality in rural incomes has declined in the years. The Survey also has pointed out that the Green Revolution and general economic development have resulted in a perceptible decrease in absolute poverty in rural India during the period. However, despite this achievement, there is still urgent need for effective remedial measures to achieve greate equality in income and economic opportunities for majority of the rural popur lation in the country. From this angle, the programme regarding the implemen-

State Governments involving Central Assistance of Rs. 19.77 crores were approved for provision of 8,85,502 house sites. The 20-point programme is likely to give a further impetus to the scheme for providing house sites to land less rural workers.

This measure is thus expected to benefit a large number of people in the countryside. The demand for building materials such as lime, cement, bricks' timber tiles and corrugated sheets is likely to go up. The problem of finance required for the purpose of construction will continue, unless, of course, the proposed rural banks come forward to finance a part of the cost of construction.

Bonded labour Banned.

Another important measure in this category is that bonded labour wherever it exists, will be declared illegal. The practice of bonded labour is inhuman. All contracts and other arrangements under which the services of such bonded labour are secured will be declared illegal. The Kerala Assembly has passed a Bill for abolition of bonded labour and creation of a fund for the welfare of workers. Over one lakh tribals engaged as bonded labour will be benefited.

The problem of bonded labour is a complex one and will present a number of difficulties in enforcement. Informal arrangements will be difficult to detect and hence, they are likely to continue. Alternate evenues of employment will have to be created so as to free these people from these shackles.

Minimum Agricultural Wages.

Minimum wages for agricultural workers have been fixed under the Minimum Wages Act, 1948, in all States except Jammu and Kashmir. In Maharashtra and Tamil Nadu, however, minimum wages have so far been fixed only in some specified areas. The Central Government has also fixed minimum wages for workers in certain agricultural institutions and military farms.

Agricultural labour is one of the most unorganised section of the community. While industrial wages are linked to consumer price index, the farm lobour is not insulated against the erosion of real wages due to inflation. In the circumstances, the present move is welcome. At the same time, there is a possibility of the cost of agricultural commodities going up considerably leading to a rise in the prices of foodgrains and commercial crops. Further rural demand for foodgrains and other essential goods like cloth will increase as a result of higher wages in the agricultural sector. Farm surplus especially of foodgrains going to the urban sector will decline, but this may be counter balanced by the increase in out put as a result of land redistribution and better enforcement of tenancy rights.

ஈட்டியைச் சிறப்பித்தேதான் எழுபது திருப்பாச் செய்தும்
ஈட்டிநா லெனும் பேர்தந்து எழுப்பெழு பதனை லுய்யச்
காட்டியே தலைகளொட்டக் கண்டநம் கவிஞன் றன்னைப்
பாட்டிலே பாடி யொட்டக் கூத்தனைப் பணிவோம் வாழி.

திருக்கையி லாயம்விட்டு திரளுஞ் சூரன் றன்னைத்
திருக்கிளர் வேலார் செற்ற சேயவின் மரபில் வந்த
அருட்டிருக் குலத்தோனை அருங்கலைத் தமிழில் வல்லான்
தொட்டிரு ஓட்டக்கூத்தச் செங்குந்தன் வாழி வாழி.

தழைத்திருங் குந்தர் வாழி தருமறங் கலைகள் வாழி
விழைத்திரு மாரி வாழி விளைபயிர் செல்வம் வாழி.
செழித்திடுஞ் செங்கோல் வாழி செழுந்தமிழ்ப் புலவர் வாழி
பிழைபடா ஓட்டக் கூத்தர் பெயரது என்றும் வாழி.

தென்னிந்திய செங்குந்த மாநில மாநாட்டிற்கு எங்கள்
உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

★ அழகிய அச்சு வேலைகளுக்கும்
★ உறுதியான பைண்டிங் வேலைகளுக்கும்
★ ராசியான அச்சகம்.

ஸ்ரீ சாரதா பிரஸ்,

217, காமாட்சி அமமன் கோவில் தெரு,
பவானி P. O. ▭ (வழி) ஈரோடு.

சாதனை புரிந்த உள்ளம்



'ஐயா' உயர்திரு. S. மீனாட்சிசுந்தர முதலியார் நினைவாலயம், கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு.

சாதனை நிறைந்த இல்லம்

செங்குந்தர் மாளிகை, சென்னை.

துன்ப வாழ்வு இன்ப வாழ்வினும் எவ்வளவோ விருப்பம் வாய்ந்தது. காரணம், நோயாளி எச்சரிக்கை வாழ்வு வாழ்வதுபோல் துன்பப்படுபவனும் எச்சரிக்கையாய் இருப்பான். ஆனால் தாங்கமுடியாத துன்பம் தற்கொலையில் முடிகிறதே என்ற வினா எழலாம். அங்குதான் மீண்டும் முன்னே செய்த நல்வினையால் கிடைக்கும் நல்லறிவு துணை புரிய வேண்டும். தற்கொலை கோழைகளின் பாதை. போராட்டமே வீரனின் வழி. எனவே, எந்தச் சூழ்நிலையிலும் தற்கொலைக்கு இரையாகாமல் முயல்வதும் போராடுவதுமே முதன்மைத் தவம் ; முழுமைத் தவம்.

இன்று இந்தியா நெருக்கடி நிலையில் உள்ளது ; அவசரப் பிரகடனத்திற்கு ஆளாகி இருக்கிறது. இந்தியா விடுதலை பெற்றதுமே நெருக்கடி நிலையும் அவசரப் பிரகடனமும் அமைந்திருந்தால் இந்த முப்பது ஆண்டுகளில் எவ்வளவோ முன்னேறி இருக்கலாம். போனது போகட்டும் ; இனியேனும் புதுவாழ்வு — புது யுகம் — காண்போம்.

என் வருங்காலப் பார்வைத் தெள்ளத் தெளிவாக இருக்கிறது. அன்னை இந்திரா உறுதியுடன் இந்த நாட்டில் தனியுடைமை வாழ்விற்கு இறுதிச் சடங்கைச் செய்தல் வேண்டும். இல்லையேல் பச்சோந்தி போன்ற கட்சி மாறும் — மாற்றம் — தனியுடைமை அவர் செய்யும் முயற்சிகளையெல்லாம் ஒன்றை நூறாய்ப் பெருக்குவதிலும் ஒன்றை நூறாய்ப் பிளவுபடுத்தி விடும். தமிழ் நாட்டிலேயே தனியுடைமை — முதலாளித்துவ — சாதி சக்திகள் தன்னலத்திற்காகச் சூடு, சொரணை, மானம், மரியாதை எல்லாம் கூடக் காற்றில் பறக்க விட்டுக் கறங்கு போல் சுழன்றன—சுழல்கின்றன என்பதை நாம் நன்றாகப் பார்க்க முடியும். சட்டையை மாற்றிக்கொண்டு சாட்டையை மட்டும் மாற்றாமல் இருக்கும் இந்தச் சாதி — சதி சக்திகளை அன்னை இந்திரா இனம் கண்டு அழித்து ஒழிக்க வேண்டும். முள்ளை எடுக்கப் பயன்படுத்தும் முள்ளும் கூடக் கையைக் கிழிக்கும் ; பட்டுச்சேலையையும் பரிவின்றி கிழிக்கும்.

எனவே இந்த நாட்டின் கோடான கோடி மக்கள் பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்து விட்டனர் என்பதை நம் பாரதத் தாய் நன்கு உணர்வார்கள் என்பது நாட்டின் நம்பிக்கை. பாரத நாட்டின் கோடான கோடி பாமர மக்கள் அன்னை சொல் கேட்க — அதன் பொருட்டு ஆவியையும் காணிக்கையாக்க — அணி வகுத்துக் காத்து நிற்கின்றனர். இந்தத் தருணம் தப்பினால் எந்த மரணம் வருமோ ? எனவே, அன்னை இந்திரா தெய்வத்தின் திரு உள்ளம் கொண்டு கோடான கோடி மக்கள் மீது மட்டும் நம்பிக்கை வைத்துக் கொள்கை விளக்கை ஏற்றி வைக்க வேண்டும். கட்சி நலத்திற்காகவும் கூடத் தனி முதலாளித்துவ சக்திகளுக்கு நெகிழ்ச்சி காட்டுவது தற்கொலைப் பாதையாகும். உண்மையான சோசலிச உணர்வும் உறுதியும் கொண்டவர்களை அன்னையின் அருந்தவப் புதல்வர் சஞ்சய் காந்தி உருவாக்க வேண்டும் ; அவர்களை இந்த நாட்டின் திருவாக்க வேண்டும். தாயும் தனயனும் நினைத்தால் ஆகாதது உண்டோ ?

வேண்டுவதெல்லாம் விருப்பு வெறுப்புகளைக் கடந்த விழுமிய பொதுவுடைமைப் பாதை ; மக்கள் சக்தியை மட்டுமே நம்பும் நம்பிக்கை ; காந்திய அடிப்படையில் பிரச்சார பலத்தின் வாயிலாகவே காரல்மார்க்சின் கருத்துகளைக் கோடான கோடி பாமர மக்களும் அறிந்து உணர்ந்து ஆழ்த்து எழச் செய்யும் பிரச்சார பலம்.

கொள்கைகளை வாய் வழிப் பிரச்சாரம் செய்யும் கலை வழிக்கு வழியனுப்பு விழா நடத்திவிட்டு நெஞ்சார நம்பும் கொள்கைகளை நடைமுறையில் ஈடேற்றும் சட்டங்களைச் செய்வதே உண்மை சம தர்மத்தை நிலைநாட்டும் கடமை வழி. எடுத்துக் காட்டாக, சாதி ஒழிப்பு பற்றிச் சஞ்சய் காந்தி முழங்கி வருகிறார். அவரைப்போல் முற்காலத்திலும்

சமூக முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு.

(புலவர். நடேச நாராயணன், மானாம்பதி)

பண்டைக்காலத்தில், சமூக முன்னேற்றத்திற்குப் பெண்களின் பங்கு அதிகம் தேவைப்படவில்லை. ஆடவர்களுடைய தொண்டே போதுமானதாக இருந்தது. அதனால் பெண்கள் குடும்பக் கடமைகளை மட்டுமே பெரிதும் போற்றி வந்தார்கள். இந்த உண்மையைப் புறநானூற்றில் பொன்முடியார் எனும் பெண்பாற் புலவர்.

" ஈன்று புறந் தருதல் என்தலைக் கடனே "

என்ற தொடரால் குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப் புறநானூற்றில் மட்டுமல்ல, அக நானூற்றிலும் அம்மூவனார் எனும் ஆண்பாற் புலவரும் பாடியுள்ளார்.

'பெற்ற தாயாகிய என்னையும் நினைத்துப் பார்க்காமல் என் மகள் காதலனுடன் சென்றுவிட்டாளே' என்று தாய் ஒருத்தி இரங்குவதாக அமைந்துள்ள அப்பாடலில்

" ஈன்ற புறந்தந்த எம்மும் உள்ளாள் "

எனக் குறிப்பிட்டுள்ளார் (அகம்: களிற்றி யானை நிரை 35)

இவ்வாறு இருபாற் புலவரும் இருதுறை (அகம், புறம்) நூலிலும் பெண்களின் கடமையைக் குடும்பக் கடமை அளவிலேயே குறித்துள்ளதைக் காணலாம்.

ஆனால் இன்றோ நிலைமை வேறு. மக்கள் தொகை பெருகிவிட்டது; தேவைகள் மிகுந்துவிட்டன. பிரச்சனைகள் எண்ணற்றனவாகக் கிளைத்துவிட்டன.

எனவே, இன்றைய நிலையில் ஆடவர்களால் மட்டுமே சமுதாயப் பிரச்சனைகளைத் தீர்த்திட முடியாது; சமுதாயத்தை முன்னேற்றிடவும் இயலாது. பெண்களும் பங்கு கொண்டாக வேண்டும். அப்போதுதான் சமுதாயம் விரைவாக, நிறைவாக முன்னேற முடியும்.

இதைக் கருத்தில் கொண்டே காந்தியடிகள், "நாட்டிற்குச் சேவைசெய்ய நங்கையரும் முன்வரவேண்டும்" என்றார்,

ஆடவர்களைவிட மாதர்கள் அன்பும், பொறுமையும் மிக உடையவர்கள்; அதனால் சமுதாய மாற்றங்களைப் பிறர் மனம் புண்படாமல் ஏற்படுத்த அவர்களால் முடியும்.

அதனால்தான் பெண்களின் உரிமைக்காகப் பரிந்து பாடிய பாரதி அவர்களது கடமைகளையும் மறவாமல் குறிப்பிட்டுள்ளார்.

Income-tax Relief to Middle Class.

One of the most important relief measures included in the programme is, the income-tax relief to middle class by raising exemption limit to Rs. 8,000. People with fixed incomes have suffered severe hardships in the last few years. In order to provide relief to such people, the minimum exemption limit for income-tax has been raised from Rs. 6,000 to Rs. 8,000. The concession is likely to benefit nearly 8 lakh persons involving a tax loss of nearly Rs. 45 crores. The annual benefit would range from Rs. 284 for those with an annual income of Rs. 8,001 to Rs. 44 for those with an income of Rs. 15,000 and more.

The likelihood of saving this reduction in tax liability would depend on the trend in the price level of essential goods. If prices fall, a portion of the amount is likely to be saved. Otherwise the amount is likely to be spent on consumption.

Relief for Students.

Students from poor families face special difficulties if they pursue higher studies away from their homes. To help them, essential commodities will be supplied at controlled prices to all hostels and approved lodging houses.

A scheme has been drawn up wherein student hostels and approved lodgings all over the country will receive essential commodities through consumer co-operatives. The scheme would cover all towns and cities with a population of 1,00.000 and more. The scheme has been expanded to cover all university and degree college hostels including 500 university hostels with nearly 80,000 residents. A beginning has been made in some parts of Tamil Nadu and Union Territory of Delhi. The main features of the scheme are: (I) co-operative institutions will make supplies to university and college hostels at preferential/concessional basis; (II) items of essential consumer goods to be supplied are foodgrains (non-controlled), pulses, spices, vanaspati and edible oils, tea, coffee, toilet and washing soaps, sugar, bread, eggs, butter, salt, controlled cloth hosiery goods , cycle tyres and tubes, paper and stationery including exercise books and dry electric cells; (III) where the university/college store does not exist, the co-operative institution will open its branches in the university/college campus so that students get supplies at their doors, and (iv) the university/college concerned will provide accommodation and other facilities on a nominal rent to the concerned consumer co-operative store.

The proposal to provide books and stationery at controlled prices will ensure that text-books and stationery are available at reasonable prices to all school, college and university students. Prices will be strictly controlled and book banks established

வேறு எந்த நாட்டிலுண்டு கொங்கு நாட்டின் விசித்திரம்

ஸ்ரீ குஞ்சித நடராஜர்

எக்கோயிலிலும் காணா குக்குட நடனம்

வியாக்ரபாத சக்தி விநாயகர்



புலிக்கால், சக்தியுடலுடன் விநாயகர்

கொடுமுடி

தேமாலே யாகச் சூடுஞ்
செங்குந்தம் போலு முண்டோ?

—(பாட்டு-43)

என்ற பாட்டாலும், முருகக் கடவுள் கையில் வேற்படையும், நவவீரர் பெற்ற குந்தப் படையும் வேறல்ல என்றும், சான்றோர்கள் எப்படிச் சிவன் வேறு, மால் வேறு என்று பிரித்து வணங்கமாட்டார்களோ, அத்தன்மைபோல முருகவேள் தாங்கிய வேல் வேறு நவ வீரர் தாங்கிய குந்தம்வேறு என்று சொல்லமாட்டார்கள் என்றும் விளம்புகின்றார்.

''மால்வேறு சிவன்வே றென்ன
வழுத்திடா வண்மை போல
வேல்வேறு குந்தம் வேறென்
றிருபொருள் விளம்பார் மேலோர்''

—(பாட்டு-42)

ஐவகைப் பெயர்கள்:-

நம் செங்குந்தர்க்குக் கைக்கோளர் என்னும் பெயரும் வழங்கி வருகின்றது. எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் சேந்தன் திவாகரரால் இயற்றப்பட்டுள்ள நிகண்டு நூலில்,

''செங்குந்தப் படையர் சேனைத் தலைவர்
தந்து வாயர் காருகர் கைக்கோளர்''

என்று செங்குந்தர், சேனைத்தலைவர், தந்துவாயர், காருகர், கைக்கோளர் ஆகிய ஐந்து பெயர்களும் ஒரு வகுப்பாரையே குறிக்கின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காருகர் :-

இந்த ஐந்து பெயர்களுள் ''காருகர்'' எனும் பெயரை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட சிலப்பதிகாரத்தில் இந்திரவிழவூர் எடுத்த காதையில்,

''பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் **காருகர்**
இருக்கையும்''

என்று எடுத்தாளப்பட்டிருக்கக் காண்கின்றோம். அன்றியும் இக்காலத்தே நம்மில் பல்லோர் நெசவுத் தொழிலையே கொண்டு வாழ்வது போல, அக்காலத்திலேயும் நம்மவர் 'காருகர்' எனும் பெயரோடு காவிரிப்பூம்பட்டினத்தில் நெசவுத்தொழிலை மேற்கொண்டொழுகினர் என்பதையும், அவர்கட்குத் தனிக்குடியிருப்புகள் இருந்தன என்பதையும் இச்சிலப்பதிகார அடிகள் உணர்த்தக் காணலாம்.

கைக்கோளர் :-

கைக்கோளர் என்னும் சொல்லுக்குச் சிறந்த கொள்கைகளைக் கைக்கொண்டவர் என்றும், கையுழைப்பைக் கொண்டு வாழ்வு நடாத்தியவர் என்றும் கூறலாம். வீரவாகு தேவர் என்பதன் வேறு பெயர்தான் கைக்கோளர் என்றும் சிலர் கூறுகின்றனர். இதற்குக் காரணம் குந்தத்தைக் கைக்கொண்டமையால் இருக்கலாம்.

Prime Minister's 20-Point Programme.

M. P. NACHIMUTHU MUDALIAR B. A., B. L., Erode.

1. Continuance of steps to bring down prices of essential commodities, Streamlined production, procurement and distribution of essential commodities, Strict economy in Government expenditure.

2. Implementation of agricultural and ceilings and speedier distribution of surplus land and compilation of land records.

3. Stepping up of provision of house-sites for landless and weaker sections.

4. Bonded labour, wherever it exists, will be declared illegal.

5. Plan for liquidation of rural indebtedness, Legislation for moratorium on recovery of debt from landless labourers small farmers and artisans.

6. Review of laws on minimum agricultural wages.

7. Five million more hectares to be brought under irrigation. National Programme for use underground water.

8. An accelerated power programme. Super thermal limit stations under central control.

9. **New development plan for development of the handloom sector.**

10. **Improvement in quality and supply of people's cloth.**

11. Socialisation of urban and urbanisable land. Ceiling on ownership and possession of vacant land and on the plinth area of new dwelling units.

12. Special squads for valuation of conspicuous construction and prevention of tax evasion. Summary trails and deterrent punishment to economic off enders.

13. Special legislation for confiscation of smugglers properties.

14. Liberalisation of investment procedures. Action against misuse of import licences.

முன்—செப்பும் பிரபந்தம் எண்ணில பெற்றவர் செங்குந்தரே" என்னும் செய்யுளடிகள் இதனை விளக்கும். இதன் ஆசிரியர் நாகை முத்துக்குமார தேசிகர் ஆவர்.

7. **தசாங்கம்:** இது செங்குந்தர் மரபினர்க்குரிய தசாங்கங்களைக் கூறும். இதில் மலை, ஆறு, நாடு, நகர், மாலை, குதிரை, யானை, முரசு, கொடி, செங்கோல் ஆகிய பத்தும் கூறப்படும். இவற்றில் செங்கோல் ஒழிய மற்றைய ஒன்பதும் இவ்விரண்டாகக் கூறப்படும் சிறப்பினை உடையது. விண்ணரசுக்கு ஒன்றும், மண்ணரசுக்கு ஒன்றுமாகப் பாடப்பெறும். இதனைச் "செப்புத் தசாங்கம் இருவகைப் பெற்றவர் செங்குந்தரே" என்ற செய்யுள் விளக்கும். ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு பறவையை முன்னிலைப்படுத்திக் கூறும் சிறப்பினை உடையது. இதனை இயற்றியவர் ஸ்ரீ சத்யசந்தர் என்பராவர்.

8. **ஊசல்:** இது செங்குந்த குலத்தவரைப் பெரும்பாலும் மன்னராகக் கொண்டு பாடப்பட்ட செய்திகளை விளக்குகிறது. செங்குந்தர் உமாதேவியின் புத்திரர் என்றும், சோழமண்டல முதலிகள் என்றும் கூறப்படுகிறது. இக்குலத்து வீரர்களைப்பற்றிப் பாடப்பட்ட ஊசல், வாழ்த்து, லாலி, எச்சரிக்கை, பெரியகட்டியம், சின்னகட்டியம், மங்களம் என்ற செய்திகள் அடங்கப் பாடப்பட்ட செய்யுள் தொகுதியாகும்.

இந்நூல்களேயன்றித் "திருவெற்றியூர்ச் செங்குந்த விநாயகர் மாலை" 'செங்குந்த சிலாக்கியர் மாலை", செங்குந்த வேற்பதிகம்", செங்குந்தர் மரபு விளக்கம்", 'சேனைத்தலைவர் மரபு விளக்கச் சூறுவளி", செங்குந்த வேலவர் திருக்கை வழக்கத்தந்தாதி." "செங்குந்த குலமாட்சி" என்னும் பிரபந்தங்களும் செங்குந்தர் பிரபந்தத்திரட்டில் அடங்கியுள்ளன. இவைகள் முன்னர்க் கூறிய நூல்களில் உள்ள செங்குந்த மரபினரைப் பற்றிய செய்திகளை விரித்தும், தொகுத்தும் கூறுகின்றன.

ஆதாரம்: **செங்குந்தர் பிரபந்தத் திரட்டு.**

தொகுப்பு: **ந. சண்முகானந்தன்,**
T. ஜெகதீசன்.
மலர்க்குழு.

★

ஆண்களின் குணத்தில் மிருகத்தனமும், குழந்தைத்தனமும் கலந்திருக்கின்றன. அந்த மிருகத்தனத்தைக் குறைத்து, குழந்தைத்தனத்திற்குப் பயிற்சியளிப்பதுதான் பெண்களின் கடமை.

—**Dr. Radhakrishnan.**

செங்குந்தர் மரபும் ஆட்சிமுறையும்

ச. கு. பா. பழநிவேலு,
பொதுச் செயலர்
தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கம்.

இன்றைய உலகில் சாதி, சமய வேறுபாடுகள் இன்றி ''எல்லோரும் ஓர் குலம்'' என்ற உணர்ச்சிப் பெருவெள்ளத்தில் மகிழ்ந்து வாழும் இந்நேரத்தில், நாம் நமது குலத் தோற்றத்தையும் பண்டைய பெருமைகளையும் நினைப்பதும், பேசுவதும், எழுதுவதும் விந்தையான செயல் என்று நாம் கருதியபொழுதிலும், நமது குலத்தின் தோற்றம் அதில் பிறந்த பெரியார்கள், ஆற்றிய தொண்டுகள், நடத்திய ஆட்சிமுறை, நீதி, நேர்மை, இறையன்பு, கட்டுப்பாடு இவைகளை நினைந்து பார்ப்பதும், பேசுவதும் நம்மை உயர்ந்த பண்பாளர்களாக, பழைமையான, பெருமையான பழங்குடி மக்களாக, நல்லவர்கள் போற்றும் நற்பண்பாளர்களாக சிறக்கச் செய்யும் என்ற கருத்திலே ஒரு சிலவற்றை நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

முன்னொரு காலத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு கைலாயத்தில் வீற்றிருந்தபோது சூரபன்மன், சிங்கமுகன், நரகாசுரன் போன்ற அசுரர்கள் இழைத்தக் கொடுமைகளைத் தாங்கமாட்டாமல், அல்லற்பட்டு ஆற்றாது திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்கள் எல்லோரும் ஒருங்குகூடி அவரைக் கைலாயத்தில் கண்டு, தங்களைக் காத்தருளுமாறு விண்ணப்பம் செய்தனர்.

சிவபெருமான் அவர்களை நோக்கி, ''நீவிர் இனி வருந்த வேண்டாம்'' என்று திருவாக்கு செய்து, தமது பழைய ஆறுமுகங்களைக் கொண்டு அத்திருமுகங்களின் நெற்றிக்கண்கள்தோறும் ஒவ்வோர் தீப்பொறியைத் தோற்றுவித்து அருளினார். அத்தீப் பொறிகளின் வெம்மையைத் தாங்கவொண்ணாது எல்லோரும் அஞ்சி ஓடினர். அருகிலிருந்த உமாதேவியாரும் அஞ்சி உளங் கலங்கி ஓடினார். அவ்வாறு ஓடியபொழுது அவரது திருவடிகளை அணிசெய்த சிலம்பின் மணிகள் ஒன்றோடொன்று மோதி ஒன்பது மணிகளைச் சிந்தின.

இந்நிலையில் சிவபெருமான் ஒரு திருமுகம் கொண்டு, அந்த ஆறு பொறிகளையும் அருகில் அழைத்து, வாயுதேவனையும் — அக்கினிதேவனையும் இப்பொறிகளைச் சரவணப் பொய்கையில் சேர்க்கப் பணித்தார். வாயுதேவன் அப்பொறிகளின் வெம்மையைத் தாங்க இயலாமையால், அக்கினிதேவனிடம் கொடுக்க, அவனும் வெம்மை தாங்காது கங்கையில் சேர்ப்பித்தான். கங்கை அவ்வாறு பொறிகளையும் சரவணப்பொய்

G. ராஜாசந்திரசேகர், B. Com., ஈரோடு.

பாதையும் பணியும்

உலகின் மொத்த ஜனத்தொகை நானூறு கோடியில் பாரதத்தின் பங்கு ஏறக்குறைய அறுபது கோடி மக்கள். இருநூறு ஆண்டுகள் அந்நியர் ஆட்சியில் இருந்த நம் பாரதத்தின் பொருளாதாரத்தில் விவசாயமும், கிராமத் தொழில்களும் பெரும்பங்கு வகித்தன.

கிராமக் கைத்தொழில்களில் முதலிடம் வகிப்பது கைத்தறி நெசவுத் தொழிலாகும். நசிவுற்றிருந்த கைத்தறித் தொழிலை கண்ணுற்ற தேசத்தந்தை, கைத்தறி முன்னேற்றம், நமது முன்னேற்றத்திற்கு மிக அவசியம் எனவுணர்ந்து கதர் இயக்கத்தை ஏற்படுத்தினுர், அதனுல் பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைத்தது, மக்களும் சுதேச உணர்வுடன் கதர் வாங்கியணிந்து நெசவாளர்களுக்குப் பேராதரவு தந்தனர்.

உலகச் சந்தையில் இந்தியாவின் எழில்மிகு தயாரிப்புகளில் முக்கிய பங்கு வகிக்கும், கைத்தறி தொழிலில் சுமார் 77 லட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் நல்வாழ்விற்காக சுதந்திரம் பெற்ற பிறகு, மத்திய மாநில அரசுகள், பல திட்டங்களை வகுத்தன.

கைத்தறியின் மதிப்புணர்ந்து நமது பாரதப் பிரதமர் சமீபத்தில், தமது இருபது அம்ச திட்டத்தில் அத்தொழில் முன்னேற்றத்திற்குப் பல நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். இத்தொழிலைக் கண்காணிக்க ஒரு தனி ஆணையரை நியமித்து அதற்காக ஒரு குழுவை அமைத்துள்ளார், ஆணையர் மேற்பார்வையில் உற்பத்தி பெருகவும், கைத்தறித் தொழிலாளர் நலன் பெருகவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திட்டக் குழு உறுப்பினர் திரு. பி. சிவராமன் அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்ட உயர் அதிகாரிகள் குழு ஒன்று அண்மையில் இத்தொழில் குறித்த பிரச்சனைகளை ஆராய்ந்தது. அக்குழுவின் பரிந்துரையின்படி, திட்டங்களை நிறைவேற்ற ஐந்து ஆண்டு காலத்தில் சுமார் 300 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும்.

கைத்தறி வளர்ச்சிக்கென, பதின்மூன்று தீவிர திட்டங்களும் (Intensive Development Project) ஏற்றுமதி உற்பத்தித் திட்டமும் (Export Production Project) வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தீவிர திட்டம் மேற்கொள்ளப்படும். மத்திய அரசின் உதவியுடன் நாடு முழுவதிலும் 20 ஏற்றுமதி உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும். நியாயமான விலையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க வகை செய்வது தீவிர வளர்ச்சித் திட்டங்களில் ஒன்று.

15. New schemes for workers' association in industry.

16. National Permit scheme for road transport.

17. Income-tax relief to the middle-class-exemption limit raised to Rs. 8000.

18. Essential commodities at controlled prices to students in hostels.

19. Books and stationary at controlled prices; and

20. New apprenticeship scheme to enlarge employment and training, specially of weaker sections.

The 20-Point Programme.

The 20-point economic programme announced by the Prime Minister on the 1st July 1975 has been regarded as a step ushering in a new era for the poor and the down trodden. It not only offers a new deal to these people, but it also shows a new sense of realism in the management of the economy. Some of the measures in the package are ameliorative in nature, some others aim at rooting out the evils that have corrupted economic and social life of the community and the remaining measures aim at strengthening infrastructural base of the economy and attune production to the urgent needs of the community.

Ameliorative Measures
Liquidation of Rural Indebtedness

The most important of this type of measures is liquidation of rural indebtedness and moratorium on recovery of debt from landless labourers, small farmers and artisans. While announcing the 20-point programme the Prime Minister said that action would be taken in stages to liquidate rural indebtedness. New schemes are being drawn out for devising alternate agencies to provide institutional credit facilities to land-less labourers, rural artisans and small and marginal farmers who own less than two hectares.

The problem of rural indebtedness is quite widespread. The recent All-India Debt and Investment Survey conducted by the Reserve Bank of India has indicated that about 43 per cent of the rural households were in debt at the end of June 1971 and the total amount of debt stood at Rs. 3,921 crores. The Reserve Bank's recent study of small farmers has highlighted the lack of institutional credit. In the issue of agricultural credit, the record of co operatives was dismal in 11 districts out of 12 districts covered in the study. The bulk of the credit requirements of small farmers in 11 out of 12 districts was met by

About 70 to 80 lakh persons depend on this industry for their livelihood. In order to ensure proper growth of the industry, a separate Development Commissioner for handlooms is being appointed. The industry will be assured of regular supplies of inputs at reasonable prices. The policy of reservation for handlooms is being rationalised to give greater protection to weavers.

The plan for development of handlooms includes (i) extension of coverage by co-operatives of handlooms to 60 per cent by 1978-79 (ii) intensive development of 5,000 to 10,000 handlooms each outside the co-operative fold in compact geographical areas and setting up of a number of export-oriented pilot production centres (iii) the All India Handloom Board would be converted into a statutory body in due course.

Improvement in Quality and Supply of Controlled Cloth.

The controlled cloth scheme has not been able to fulfil its primary objective of ensuring that a part of the total output of cotton cloth would be made available to the poor at prices they can afford. For the last few years, not only production of controlled cloth has fallen short of requirements, but its quality has also deteriorated. Under the new scheme, it will be ensured that the production of dhoties, sarees and cloth will be of better quality and sold through a large number of outlets in rural and urban areas.

The Union Government is working out the details of the new controlled cloth policy which is likely to come into force from October 1, 1975. Larger and better quality suplies, if properly distributed, will help greatly the working class and lower middle class as also rural poor.

Workers' Participation in Management.

The package also includes a scheme of workers' participation in industries At present, the Industrial Disputs Act, 1947, provides for the setting up of works committees in establishments employing more than 100 workers to promote measures for securing and preserving amity. The scheme of joint management councils has been in existence on a voluntary basis since 1958. Similarly, the Government has tried to introduce, on an experimental basis, the schemes of appointing workers on the boards of management of some selected public sector undertakings. However, the Government now feels that it is high time that a broad-based scheme of workers' participation at various levels from the shop-floor level up to the board of directors is enforced statutorily to step up production. The scheme envisages councils for each department or shop in every industrial undertaking employing more than 500 workers to deal with safety measures, general discipline, working conditions, welfare and health measures and steps for increasing efficiency and productivity. The scheme also envisages a joint council in every undertaking employing more than 100 people to deal with the problems affecting more than one department or shop or problems which remain unresolved at the level of the shop council such as the develop-

பெண்ணே உன்பெருமை வாழ்க!

அ. மங்கை, தூத்துக்குடி.

1 உலகமதை வாழ்விக்கும் உத்தமராம் பெரியோரின்
உயர்விற்கு ஒப்பற்ற அடித்தளமாய் அமைகின்ற
விலையில்லா மாணிக்கம்; விடிவெள்ளி; வெண்ணிலவு
வையமதைக் கரையேற்றும் வாழ்க்கைப் படகாகி
மாசில்லாக் குலவிளக்காய்த் திகழ்கின்ற சுமைதாங்கி
மன்னிக்கும் ஒருவகைச் செயலாலே விளக்கிநிற்கும்
பேசும்பொற் சித்திரமாம் பெண்ணவளின் பெருமைதனைப்
பேசற்கோ வாய்போதா; எழுதற்கோ சொல்லில்லை.

2 தன்னலனைக் கருதாது தற்சார்ந்தோர் நலனுக்காய்த்
தாயாகி தாரமாகி தமக்கையாகி தங்கையாகி
அன்றுதொட்டு இன்றுவரை அவனிதனில் வாழ்ந்துவரும
அன்பின்நல் லிருப்பிடமாய் அமைபவர்கள் பெண்களன்றோ?
மாதரையே ஆளுகின்ற மனுநீதி தவறாத
மன்னர்களை உருவாக்கிய மாதரார் பெண்களன்றோ
மாதரையில் புகழ்பெற்ற மராட்டிய மாவீரன்
மலைஎலியாம் சிவாஜியின் அன்னை **ஜீ ஜீபாயும்,**

3 வளையாத செங்கோலை வளைத்திட்ட தென்னவனின்
வாயில்சென்று வாதிட்டு வடுவினையும் தான்போக்கி
வளைவையுமே தானிமிர்த்தி வரலாற்றில் நிலைத்திட்ட
வனிதையரின் திலகமாம் கற்புக்கனல் **கண்ணகியும்**
மாற்றானின் மாளிகையில் மாதம்பத்து இருந்தாலும்
மங்காத புகழுடனே மாசில்லாக் குலவிளக்காய்
ஏற்றம்பெற் றென்றென்றும் இதயத்தில் வாழுகின்ற
எம்மன்னை **ஜானகியும்** எழிலுடைய பெண்ணன்றோ?

4 ஆண்டவனை அறிந்திட்ட அண்ணல்ராம கிருஷ்ணருக்கு
அருந்துணையாய் நின்றநம் அன்னைசார தாமணியும்
அமரண்சமயம் புகுந்துவிட்ட அரசனும் மாறனை
அருள்நெறிக்கண் செலுத்திவிட்ட **மங்கையர்க்**
கரசியாரும்

செங்குந்தர் பிரபந்தத் திரட்டு

செங்குந்தர் பிரபந்தத்திரட்டு என்னும் இந்நூல் ஸ்ரீமத் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பதிப்பிக்கப்பட்டது, பண்டைக் காலத்தில் வீரத்தின் விளைநிலமாய்த் திகழ்ந்த செங்குந்த மரபினரது அறிவாற்றல், பெருமை, புகழ், வீரம், முதலியவற்றைச் சிறப்பித்துப் புலவர் பலரால் பாடப்பட்ட செய்யுள் திரட்டாகும். செங்குந்தர் குல வரலாறுகளாக வழங்கும் நூல்கள் பல உள்ளன என்பதும், அம்மரபின் முன்னோரது சரித்திரங்களும் பல என்பதும் இவற்றால் அறியப்படும். குன்று தோறுடும் குமரனும் முருகக் கடவுளின் துணைவர்களான வீரவாகு முதலான நவ வீரர்களின் வழித்தோன்றலாகத் தங்களைப் பழங்காலம் முதற்கொண்டு வழங்கி வருவதையும், சோழவரசர் காலத்தே அவ்வரசரது வெற்றிகளுக்குக் காரணகர்த்தகளான படை வீரர்களாய் அவரது அன்பிற்கும், அபிமானத்திற்கும் பாத்திரர்களாய் இருந்தமையும் இந்நூல்களில் பரக்கக் காணலாம்.

1. **ஈட்டியெழுபது :** செங்குந்தர் மரபைச் சிறப்பித்துப்பாட உடன்படாத ஒட்டக்கூத்தரைக் கொலைசெய்ய ஆவூர்ச் செங்குந்தர் முயன்றனர். இதனையறிந்த கூத்தர் ஓராயிரத்தெண்மர் சிரங்களை அறுத்து ஒன்றாகக் குவித்துச் சிரச்சிங்காதனம் அமைப்பின் அதன்கண் இருந்து ஈட்டிப் படையைக் குறித்து ஒரு பிரபந்தம் பாடுவேன் என்று கூறினார். அதனைக்கேட்ட செங்குந்த மரபினர் அனைவரும் ஒருங்கு திரண்டு சென்று புலவரின் விருப்பத்தின்படியே தங்கள் தலைகளை யரிந்து வைத்துச் சிரச் சிங்காதனமிட்டுத் தம் வீரத்திறத்தைக் காட்டி நின்றனர். அப்போது அச்சிரச்சிங்காதனத்தில் வீற்றிருந்து புலவர் பெருமான் தம் மரபினரது வீரம். பெருமைகளை எல்லாம் ஈட்டியெழுபது, என்ற நூலால் பாடினார்.

2. **எழுப்பெழுபது :** சோழவேந்தன் முன் தங்களின் வீரத்தின் திறம் துலங்கும்படி சிங்காதனமிட்ட செங்குந்த வீரர்களது வெட்டுண்ட தலைகள் உயிர்பெற்றெழுந்து ஒட்டிக்கொள்ளுமாறு கலைமகள் முதலிய கடவுளரை வாழ்த்திப் பாடப்பட்டதாகும். இந்நூலைப் பாடியதும் அறுபட்ட தலைகள் உறையூரினின்றும் பறந்தோடி ஆங்காங்கே விழுந்துகிடந்த உடல்களோடு சேர்ந்து ஒட்டிக்கொண்டு உயிர்பெற்றன. இந்நூலின் ஒவ்வொரு செய்யு

செங்குந்தர் பண்பு

K. வஜ்ரவேலு முதலியார், B. A., L. T.,
தனி அலுவலர், சைவசித்தாந்தத் தத்துவத்துறை. மதுரைப் பல்கலைக்கழகம்.

"செங்குந்தர்" என்னும் சொல் செம்மையான வேலை (ஈட்டியை) ஏந்தியவர் என்ற பொருளில் உள்ளது. குந்தம், ஈட்டி, வேல் செம்மை என்னும் அடை அக்கருவியை அறவழியில் பயன்படுத்துவதைக் குறிக்கும் செங்கோன்மை என்னும் இடத்தைப் போல. இதனால் இவர்கள் பண்டு செங்கோல் மன்னர்க்கு படைத்துணையாக இருந்து வந்தவர் என்பதைக் கருதி உணரலாம். முருகனுடைய உடன் தோன்றல் மரபினர் எனவும், முசுகுந்தப் பேரரசனது சேனை மரபினர் எனவும் கூறப்படும். செவி வழிச் செய்தியும் இக்கருத்தையே வலியுத்துகின்றது. சோழ மன்னர்களது ஆட்சி வீழ்ச்சியுற்ற பின் இவர்கள் படைத்தொழிலை விட்டு நெசவுத் தொழிலை மேற்கொண்டிருத்தல் வேண்டும். அத்தொழில் ஆங்கில அரசு வருவதற்கு முன் மிகச் சிறப்புற்றிருந்தது. பின்னர்தான் அத்தொழில் சீர் குலைந்து விட்டது. இம்மரபில் பல்லோர் சிறந்த புலவர்களாக இருந்து வந்துள்ளனர். ஒட்டக்கூத்தர், சோழ மன்னர்களது ஆஸ்தான பண்டிதராகவும், மகாகவியாகவும், கவிச்சக்ரவர்த்தியாகவும் விளங்கி வந்துள்ளனர். சிவஞான முனிவர் முதலிய சான்றோர்கள் இவர்களது நட்பையும் ஆதரவையும் பெற்றுள்ளனர். ஊர்தோறும் திருக்கோயில்களைப் பொது நிறுவனமாகக் கொண்டு அவற்றைப் பாதுகாத்து வருவதும் பிறவும் இவர்களது அறவொழுக்கத்தையும், சமயப்பற்றையும் குறிக்கும்.

ஆயினும் பழைய பெருமையை நினைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. இக்காலத்தோடு பொருந்த உலகியல் அறிவும், கட்டுக் கோப்பும், கட்டுப்பாடும், ஒற்றுமையும் உடையவர்களாய் உழைப்பினால் உயர்தல் வேண்டும். இப்பொழுதுள்ள அரசாங்கம் பின் அணியில் உள்ள மக்களுக்குப் பலவகையிலும் உதவி செய்ய முன் வந்துள்ளது. இம் மாநாட்டிற்கு வரும் செல்வர்களும், அறிஞர்களும் கலந்து ஆலோசனை செய்து நல்ல முடிவுகளை எடுத்து அம்முடிவுகளின்படி விடாமுயற்சியுடன் செயற்பட்டு நன்மைகளை எய்த வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

ஒப்பில் புலவர் பெருமான் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் நம் சமூகத்தவர் என்பதும், அவர்கள் தான் முப்பெருஞ் சோழ மன்னர்கட்கு ஆசாரியராகவும், அமைச்சர் ஆகவும் சீரும் சிறப்புமாக இருந்தவர் என்பதும் இன்ன பிற செய்திகளும் தெரிய வந்தன.

சபாபதி வள்ளலார் அவர்களும் பேராசிரியர் திரு. மா. சண்முகசுந்தர முதலியார் அவர்களும் சென்னையில் செங்குந்த மகா ஜன சங்கமும், செங்குந்த வாலிபர் சங்கமும் தோற்றுவித்ததோடு அமையாமல், ஊர் ஊராகவும் கிராமம் கிரமமாகவும் கால்நடையாகவும் மாட்டுவண்டியிலும் சென்று நம் குலமக்களுக்கு விழிப்புணர்ச்சியுண்டாக்கியும், குலச்சிறுர்களைப் படிக்கத் தூண்டியும், கிளைச் சங்கங்களைத் தோற்றுவித்தும் சிறந்த தன்னலமற்றத் தொண்டுபுரிந்து வந்தனர். இவர்கள் சென்றுவந்த இடங்களிலெல்லாம் தொய்வு ஏற்படாமலிருக்கவும் மேலும் ஊக்குவித்து நிறைய பிள்ளைகள்—ஆண்களும் பெண்களும்—உயர்கல்வி பயிலவும் அல்லும் பகலும் அயராது உழைத்த பெருமை மகாஜன சங்கப் பிரசாரர்களாகப் பணிபுரிந்த மறைந்த நாவலர் அஞ்சா நெஞ்சம் படைத்த எனது கெழுதகை நண்பர் திரு. பி. செ, மாணிக்க வாசக முதலியாரும் (காஞ்சி மணிமொழியார்), 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என அப்பர் அடிகளைப் போல அமைதியாகத் தொண்டு செய்த திரு. அ. சண்முக முதலியாரும் ஆவார்கள்,

இவ்வாறு கடைக்கால் போடப்பட்டு எழுந்த மாளிகைகள் தாம் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமும் அதன் பத்திரிகையான நமது செங்குந்த மித்திரனும். இவற்றின் தொண்டினால்தான் செங்குந்த சமூகம் தற்போது ஆயிரக்கணக்கான பட்டதாரிகளையும் பல டாக்டர்கள் (மருத்துவம், கலை) இஞ்சினியர்கள், பேராசிரியர்கள், தலைமையாசிரியர்கள் (மத்திய; மாநில அரசு விருது பெற்றவர்கள்) I A S, I. P. S. அலுவலர்கள். சிறந்த வழக்கறிஞர்கள் என எல்லாத் துறைகளிலும் பிற முற்போக்கு சமூகத்தாரின் போட்டிக்கிடையேயும் சீரும் சிறப்பாகப் பொலிவுபெற்றுத் திகழ்வதைக் காணலாம்.

காஞ்சிச் செங்குந்த குலச் செம்மலும், பல ஆண்டுகள் காஞ்சி நகர சபைத் தலைவரும் ஆகிய உயர்திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்களின் சீரிய தலைமையில் 1929ல் ஈரோட்டில் நடைபெற்ற முதல் செங்குந்தர் மாநாட்டிலிருந்து தற்போது 1976ல் அதே நகரில் நடைபெறும் நமது மாநாடு வரையடங்கிய அரை நூற்றுண்டில் கல்வித் துறையில் நம்முடைய முன்னேற்றம் கணிசமான அளவில் பாராட்டுதற்குரியது என்ருலும் படித்துப் பட்டம் பெற்ற இளைஞரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் வெகுவாகத் தலைதூக்கி நிற்கிற காரணத்தால் பெரும்பாலானவர்கள் ஏழை மக்களாய் இருக்கும் நம் சமூதாயத்தில் படிக்கவேண்டும், படிக்கவைக்கவேண்டும் என்ற மனப் போக்குக்குத் தடங்கல் ஏற்பட்டுவருவது கண்கூடாகத் தெரிகிறது.

உ

மாதர் கடமை

திருமதி செல்லம் சுந்தரம்
ஈரோடு.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்

நற்றவ வானினும் நனிசிறந்தனவே' என்று தாய்க் குலத்தை உயர்த்திப் பாடினர் பாட்டுக்கொருபுலவர் பாரதியார். எங்கு மகளிர் அச்ச மற்றும், துன்பமற்றும், உரிமைபெற்றும், தங்கள் கடமைகளை ஆற்றியும் இருக்கின்றுர்களோ அங்கு வளம் கொழிக்கும். வான் மழை செழிக்கும், ஒரு நாட்டின் எதிர்காலம் தாயின் மடியில் தவழ்கிறது. அதனைப் பார்க்கும் போது மாதர் தம் கடமை எத்துணைப் பெரிது என்பதை உணரலாம்.

முற்கால மாதர்:

சங்ககாலப் பெண்டிற்குக் கற்பைக் காத்தலே பெருங் கடமையாக இருந்தது, இதனை,

'உயிரினும் சிறந்தன்று நாணே : நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்ததன்று' என்று
தொல்காப்பியரும், 'கற்புக் கடம் பூண்ட இத் தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்'

என்று சிலப்பதிகாரமும் செப்புகின்றன. இல்லறத்தினைப் பேணி 'அற வோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்து எதிர்கோடலும், மகளிர் கடமைகள் எனச் சிலம்பு ஒலிக்கிறது.' இல்லதென் இல்லவள் மாண்பானல்? "என்று வினவித் தற்காத்து தற்கொண்டார் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர் விலாள் பெண் " என்று உறுதிப் பாட்டைக் கூறுகிறது வள்ளுவம்.

'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' என்று புறநானூற்றுப் பொன் முடியாரின் இன் கவிதை இயம்பும். திருக்குறள் உரையாசிரியர் பரிமேலழகர்

2 தொந்திபுரம் :

கங்கைவேணியனார் காதலால்வந்த
ஐங்கரனருளா லழகோங்கிவாழும்
திருந்தொந்திபுரமெனும் தென்னாட்டைச்சார்ந்த
கருத்துள்ளகிளைநாட்டின் கணக்கினைச்சொல்வேன்
முருகமங்கலநாடு முநிவோர்களேத்தும்
திருவைமாத்தூர்நாடு திருவண்ணமலைநாடு
கோதிலாவாதூர்செங் குறிஞ்சியோர்நாடு
தீதிலாக்கச்சித் திறல்தனிநாடு
சேலத்துநாடு திட்டகுடிநாடு
பாரொத்ததிருமலைப் பாடிமாநாடு
செந்திருப்பெருமாள் சீர்கோவில்நாடு
கெந்தமார்திரு நாகேசுரநாடு
திருச்செம்பள்ளிநாடு சீர்காழிநாடு
பரிசுத்தமான மாப்பளைகுப்பநாடு
தேவூருநாடுதிகழ் காட்டூர்நாடு
பூவாருஞ்சோலைசூழ் போலகநாடு
சீருளநல்லச் சேரியோர்நாடு
பாரினிலிப்படி பதினேழுநாடு
மாதியாய்தென்னாட்டி லறைபெயர்தன்னை
தீதிலாதுரைத்தேன் தேரிந்துகொள்ளம்மா.

3 விரிஞ்சிபுரம் :-

சிவசுப்ரமணியர் செயுங்கிருபையாலே
விவரமாய்விளங்கும் **விரிஞ்சிமாநாட்டி**
னுளகிளைநாடெல முண்மையாய்ப்புகல்வே
னளிமுரன்சோலைசூ ழாமூர்நாடு
வாணியம்பாடி மாநாடதொன்று
நாணயக்கொறட்டை நல்லநாடொன்று
தருமபுரிநாடு தளர்விலாதோங்கும்
நிருமலபவானி நீண்டநாடொன்று
வழுவிலாதாரா மங்கலநாடு
இழிவிலாநல்லதோ ரேழாநாடு
புகழாரை நாடு பூரதிரைநாடு
திகழ்கின்றநற்திருச் செங்கோடுநாடு
வாழ்வுகொள்நல்ல வையாபுரிநாடு
தாழ்விலாதவநாசி தனிநாடதொன்று
நஞ்சுண்டவூர்நாடு நலமிகுந்தோங்குங்
கஞ்சமலர்த்தடக் காவல்பாளையநாடு

முதலியார் :-

நம்மை முதலியார் என்னும் பட்டப்பெயராலும் வழங்குவர். இதற்குரிய காரணத்தை ஈட்டி எழுபது நமக்கு விளக்கிக் கூறுகிறது.

சூலத்தையும், மழுவாயுதத்தையும் தமது கைகளிலுடைய பரமசிவன், இந்திரன்—நான்முகன்—திருமால்—முதலிய தேவர்கள் யாவருக்கும் முதன்மையாக ஆதியில் எழுந்தருளி வந்த தன்மையால், அப்பரமசிவனுக்கு முதலியார் என்றொரு பெயர் வந்தது. ஆதலால் அவர் மரபில் வந்த செங்குந்தர் சந்ததியார்க்கும் முதலியார் என்ற பெயர் வந்தது.

''இந்திரன் அயன்மா தேவர் யாவர்க்கு
முதன்மையாக
வந்தபான் மையினுற் சூல மழுப்படை
யத்தனுர்க்கு
முந்திய நாமந் தானு **முதலியர்**
ஆகை யாற்செங்
குந்தர்சந் ததிக்கும் அப்பேர் **முதலியர்**
என்று கூறும்''

(பாட்டு எண்–29)

பாட்டில் குறித்த ''முதலியர்'' என்பது பின்னுளில், 'அர்' எனும் விகுதி, 'ஆர்' என நீண்டு, 'முதலியார்'' என வழங்கலாயிற்று.

முடிவுரை :-

இவ்வரலாறு. நாம் செங்குந்தர் என்னும் பெயர் பெற்ற வரலாற்றையும், நம்மைக் கைக்கோளர் என்றும் முதலியார் என்றும் லழங்குவதற்குரிய காரணத்தையும், நாம் கயிலாயப் பரம்பரையினர் என்பதையும், வீரவாகு தேவர் வழி வந்தவர்கள் என்பதையும், நாம் செங்குந்தப் பேரரசு அமைத்து நல்லாட்சி புரிந்தவர்கள் என்பதையும் தெற்றெனத் தெளிவாக்கும் அன்றோ?

குறிப்பு :-

(இவ்வரலாறு, 1926–ல் ஸ்ரீலஸ்ரீ காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களால் பதிப்பிக்கப் பெற்று, செங்குந்த மகாஜன சங்க நிறுவனர் திரு. தி. நா. ச. சபாபதி முதலியார் அவர்களால் வெளியிடப்பெற்ற ''செங்குந்தர் பிரபந்தத்திரட்டு'' எனும் நூலேயும்,

திரு. வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களால் எழுதப்பெற்று, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியிட்டுள்ள 'கந்தபுராண வசனம்' எனும் நூலேயும் அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றது.)

tation of agricultural land ceiling, speedier distribution of surplus land, provision of house sites for landless and other workers, liquidation of rural indebtedness, provision of minimum agricultural wages, development of handloom sector and major change in structure of production of controlled cloth etc., are very signifiant.

While this is good as far as it goes, something also needs to be done for the urban poor, as inequalities of income and wealth are more glaring in urban areas than in rural parts. In addition, the problem of disparities between the rural sector on the one hand and the urban sector on the other needs to be tackled.

Another object of the programme is to root out the evils which have engulfed the social fabric of the community and threatened economic stability of the country during last so many years. Democracy implies certain code of common behaviour and certain measure of discipline on the part of every member of the society. The abuse of freedom under the democratic set-up ends in evils in the various forms, thus nullifying the very concept of freedom. Therefore, the corrective programme was long over due and hence it has to be welcomed.

The programme relating to the extension of irrigation by 5 million hectares, setting up of super thermal stations, development of handloom industry, etc., will involve a huge outlay and it is not known how these schemes or they will be outside the programmes of the Five Year Plan. The 20 point programme also does not seem to be a time-bound programme. In the present context time has bccome vital factor because considerable time has already been lost.

The views expressed in this article are personal views of the auther and they do not necessarily represent those of the State Bank of India and its Subsidiaries.

SOURCE : State Bank of India Monthly Review.

THE GOAL:

An expert archer lets off his arrow only after he is sure of his target.

A wise man decides on action only after he sees his purpose clearly.

ment of skills and abilities of workmen, general administration of standing orders and payment of rewards. Further, the scheme also provides for the representation of workmen on the board of management so that they have a say in the decision-making level. It is hoped that the workers' participation will help raise efficiency and productivity.

New Apprenticeship Scheme.

The 20-point programme also includes new apprenticeship scheme to enlarge employment and training specially of weaker sections. The Apprenticeship Act is proposed to be suitably amended so that managements in the organised sector of the economy take a larger number of apprentices for a specific period. Special care is proposed to be taken to ensure a fair deal to scheduled castes and tribes, minorities and handicapped persons in the recruitment of apprentices.

National Permits for Road Transport.

Road transport at present moves a little over 25 per cent of the combined rail road freight as against only 11 per cent in 1950-51. The index number in growth of goods traffic by road has shot up from 100 in 1950-51 to 316.4 in 1960-61, to 620 in 1965-66, to 796.4 in 1969-70 and was expected to touch 1,527.3 in 1973-74. While there has been a significant improvement in the movement of goodstraffic by railways in recent months, restrictions in the form of restrictive regulations on routes and areas of operation, hold-ups at numerous octroi and other check posts have been adversely affecting the movement of goods traffic by roads. To remove the constraint on the movement of goods by trucks, an ordiance has been issued for the introduction of system of national permits. Ininially, 5,300 national permits will be issued. This is likely to reduce the transport bottlenecks and ensure smooth movement of industrial rawmaterials to factories and finished goods and foodgrains to consuming centres thereby removing pockets of scarcity and surplus in the country.

It is also essential that more new roads are constructed and the existing ones are kept in a good condition. This will not only speed up the road traffic, but it will also help reduce fuel cost. At present, out of over Rs. 800 crores collected as revenue from road transport by the Government, only about 38 per cent is spent on construction and maintenance of roads. Therefore, there is an urgent need to extend the network of roads in the country as also to maintain them properly.

Steps to Control Prices

The new economic programme ccords a high priority for meeting thea challenge on the price front. Already, the Government has directed the traders to display prices and stocks of essential commodiitse. By an order under the

seas to hunt the vessels bringing in contraband, smuggling activities are now at a low ebb.

Hundreds of crores of rupees worth gold and luxury goods are believed to be smuggled into the country annually. Foreign exchange required for the purpose is secured by illegal diversion of remittances from foreign tourists and Indian citizens working abroad,under-valuation of exports and over-valuation of imports and smuggling out of the country of Indian goods, precious metals art work, etc. The amount of foreign exchange wasted on account of this is estimated to be Rs. 250 crores per annum. Anti-smuggling steps may, therefore, help increase foreign exchange flow into the country. A recent study conducted by the Reserve Bank of India of two districts in Kerala indicates that, inward foreign remittance effected through regular banking channels have gone up following the action taken against smugglers under MISA.

Against Misuse of Import Licences.

Import licences are also being misused. Import-export regulations are being amended to provide for speedy trials and penalties for breaking rules including confiscation of impotred goods.

Against Tax-evaders.

Special measures have been recently taken to prevent tax evasion. A great deal of black money so evaded goes into luxury housing. Urban property is grossly undervalued. Special squads are being set up to take up property valuation.

Large scale searches and raids have been initiated by the income-tax authorities to dig out unaccounted money running into crores of rupees invested in luxury flats in major cities like Bombay, Delhi, Madras and Calcutta. The Government is also considering new laws to deal with economic offences more effectively. These measures will help check tax evasion and circulation of black money. This is also expected to check hoarding of goods in short supply and black marketing in these goods.

Measures to step up production and to Strengthen Infrastructure.
Extension of Irrigation.

One of the most important objectives of the 20-point programme is to expand production by removing the bottlenecks and by strengthening infrastructural base of the economy. From this point of view, the proposal to bring 5 million more hectares under irrigation and to prepare national programme for use of groundwater is very significant. Of the net area under cultivation in India, only 22.2 per cent is irrigated. The vulnerability of India's agriculture owing to the vagaries of the monsoon has made it imperative to accord irriga-

tion a high place in the programme of economic development. The utilisable surface and groundwater resources were assessed by the Irrigation Commission in 1972 at 87,000 crores cubic metres. Against this, the utilisation, which was about 17,250 crores cubic metres in 1950-51, has risen to about 33,700 crores cubic metres by March 1974. This shows that there is still scope for utilising the water potential of the country. The Central Groundwater Board is carrying out groundwater survey and exploration at various places in the country with the object of providing scientific guidance for further groundwater development. Notable progress has been achieved in groundwater utilisation. Between 1968-69 and 1973-74, the number of dug wells went up from 57 lakhs to 65 lakhs, electrical pumpsets from 11 lakhs to 24 lakhs, private tubewells from 2.66 lakhs to 8.20 lakhs and public tubewells from 15,000 to 20,000.

Between 1950-51 and 1970-71, the net irrigated area increased by 103. crore hectares to 3.12 crore hectares. A proposal to bring under irrigation. 5 million more hectares of land would be condutive to boost agricultural production.

Accelerated Power Programme.

Another measure in this group is proposal regarding establishment of super thermal stations under central control to improve power supply. During 1974-75, power supply position continued to be critical in several parts of the country. The overall shortage of energy in the country was of the order of 17 per cent in the pre-monsoon period. The timely outbreak of monsoon this year has brightened the outlook on the power front. However, for meeting the future needs, it is essential to step up the generating capacity. Total electricity generation is expected to go up by about 20 per cent in 1975-76. It is expected that 2.6 million kw. of additional generating capacity will be commissioned as against 1.7 million kw. in 1974-75, thereby raising total installed capacity to 22.77 million kw. by the end of 1975-76.

The Government has selected four coal pithead sites at Singrauli, Korba, Farakka and Neyveli for setting up super thermal power stations. The capacities of these projects would range from 1,200 mw. to 2,000 mw.

Liberalisation of Investment Procedures.

Licensing procedures have come in the way of new investment, causing delays. These are being simplified. The investment limit of those industries which need no imports or Governmental help is likely to be raised.

DEVELOPMENT OF HANDLOOM SECTOR

Handloom indurtry is next only to agriculture in the number of people employed. There are about 30 lakh handlooms, half iof thebeing co-operative sector.thesne

செங்குந்த மித்திரனின் அரை நூற்றாண்டு அரும் பணி.

(C. பக்கிரிசாமி முதலியார், B. A, L. T., காஞ்சீபுரம்).

1927ம் ஆண்டு ஜூன் திங்கள் நான் சென்னை சைனாபஜாரிலிருந்த பச்சையப்பன் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் (Intermediate) சேர உதவி நாடி அரண்மனைக்காரத் தெருவில் மதறாஸ் பளயகாட் கம்பெனியிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'செங்குந்த மித்திரன்' அலுவலகம் சென்றசமயம் நமது சமூகத்தின் நிலையென்ன என இப்போது சிந்திக்கிறேன்.

தாழ்வுற்று, வறுமைமிஞ்சி, தன்னிலைத்தவறிக்கெட்டு. பாழ்பட்டுக் கிடந்தது பண்டைப்புகழ்நிறைந்த இச்செங்குந்த சமூகம் முக்கியமாகக் கல்வித் துறையில் நம்நிலை மிகமிகக் கீழாக இருந்தது. அரைக்கோடி மக்கள் கொண்ட இச் சமூகத்தில் ஒருசில பட்டாதாரிகளே அப்போது இருந்தனர். S. S. L. C. வரைப் படித்து அலுவல் பார்த்தவர்கள் சில நூறு என்ற அளவில்தான். பெண்கள் படிப்போ சொல்லத் தேவையில்லை. 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு' என்று கேட்கலாம். வணிகத்துறையை எடுத்துக்கொண்டாலும் எங்கோ ஒருசிலரே சிறு வணிகர்களாக கைத்தறி வேட்டி, சேலை முதலியன விற்றுவந்தனர். மிகப் பெரும்பாலான மக்கள் காலைமுதல் மாலை வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ கைத்தறியில் மாரடித்துக் கைக்கும் வாய்க்கும் என்ற நிலையில் அன்றாடக் கஞ்சிக்கு அல்லற்பட்டு வயிற்றைக் கழுவிக்கொண்டு வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தனர்.

இந்த இழிந்த நிலையை மாற்றியமைத்துச் சீர்பெற்ற நம் செங்குந்த சமூகத்தைத் தலை தூக்கி நிற்கச்செய்ய கங்கணம் கட்டிக்கொண்டு எழுந்தார் திருவாரூர் அண்ணல் சபாபதி வள்ளலார் அவர்கள் அவருக்கு உறுதுணையாக நின்றவர்கள் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முனிவர் அவர்களும், பேராசிரியர் திரு மா. சண்முகசுந்தர முதலியார் அவர்களும், திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களுமே,

வள்ளலார் அவர்களின் உதவிகொண்டு காஞ்சி முனிவர் அவர்களால் எழுதப்பெற்ற 'செங்குந்தர் பிரபந்தத் திரட்டு' என்னும் நூல்தான் முதன் முதல் நம் குலப் பண்டைப் பெருமையையும், பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நமக்கு மட்டுமல்லாமல் பிற குலத்தவர்க்கும் எடுத்துக்காட்டியது.

பருத்தியில்லாத வகைகளுக்கு ரூ. 2000 வரையில் நிதி உதவி அளிக்கப்படும். கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகம் எதையும் உற்பத்தி செய்ய நூற்பு ஆலைகளும், விசைத்தறிகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

பலருக்கு வேலையளித்து ஏற்றுமதி வரவில் 100 கோடியை மிஞ்சி சுதேச உணர்வு மக்களிடையே பெருக்கி நாட்டு முன்னேற்றத்திற்கு மிக உதவும் கைத்தறித் தொழிலுக்கு, பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படைக் கொள்கையாகக் கொண்ட எந்த அரசாங்கமும் முன்னுரிமையளிக்காமல் இருக்கமுடியாது. ஏனெனில் கூட்டுறவுப் பாதையில் கைத்தறியின் பணி அளவிடற்கரியது.

சோழ மன்னர்கள் காலத்தில், வீரத்துடன், மன்னரின் ஆபத்துதவிகளாக விளங்கிய அஞ்சாநெஞ்சக் கைக்கோள வம்சத்தினர் அதிக அளவில் ஈடுபட்டிருப்பது மேன்மைக்குரிய கைத்தறித் தொழிலேயாகும்.

பிரச்சனைகள் பல எதிர்வரினும் அவையெல்லாம், சரியான முறையில் தீர்த்து வைக்கப்படும். கைத்தறித் துறையின் எதிர்காலம் மிகவும் ஒளிமயமாக இருக்கும் என நம்புகிறோம். ஒளிமயமான எதிர்காலம் அமைய வாழ்த்துவோம்.

நன்றி :—

''செய்தித்தாள்களும்'' கூட்டுறவு ஒன்றியம் வெளியிடும் **"கூட்டுறவு"** மாத இதழ்களும்.

மகாஜன சங்கத்திற்கு எங்கள்
நல்வாழ்த்துக்கள்.

P. S. குப்புசாமி முதலியார்,

ஜவுளி வியாபாரம்,

9, அருணாசல ஆசாரி தெரு, சேலம்-636001.

Phone : 4012

P. S. K. பாலசுப்பிரமணியம்,

P. S. K. ஜெகந்நாதன்.

திட்டம் தீட்டிச் செயல்படுவோம்!

ஆக்கூர் சு. இராமலிங்க முதலியார்,
(தலைவர், தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கம்.)

நமது தலைச்சங்கம் தோன்றி சுமார் 50 ஆண்டுகள் ஆகின்றன. இச் சங்கம் தோன்றுவதற்கு அரும் பாடுபட்டவர்கள் பலர். அதில் குறிப்பாக ஆரூர் வள்ளல் பெருந்தகை சபாபதி முதலியாரும் ஒருவர், அவரும் அவருக்குத் துணையாகச் சிலரும் இருந்து நமது செங்குந்தர் சமூகத்தின் பழமையான சிறப்புகளெல்லாம் கெட்டுப் பன்னெடுங்காலமாகச் சீரழிந்து வருவதைக்கண்டு அதற்கு விடிவுகாலம் காணவும், சமுதாயம் செழிப்புற்று வாழவும் சிதறிக் கிடந்த நம்மவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து அதன் மூலம் ஆக்கப்பணிகளைச் செய்யவும் தீர்மானித்துத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்ற பெயரில் இதை ஆரம்பித்தார்கள். இதற்கு உறுதுணையாக அவருடன் சேர்ந்து பாடுபட்டவர்களிலே காஞ்சி நாகலிங்க முனிவர், கா. அ. சண்முக முதலியார், V. இரத்தின முதலியார், தி. அ. சண்முக முதலியார், காஞ்சி மணிமொழியார், புதுவை முத்தையா முதலியார். C. நடராஜ முதலியார், மஞ்சக்கொல்லை இராமசாமி முதலியார் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஒரு காலத்தில் சிறப்புடன் முன்னேற்றப் பாதையில் சென்றுபீடு நடை போட்டுக்கொண்டிருந்த நம் சமூகம், மற்ற சமூகத்தவர்கள் மதிக்கத்தக்க வகையில் நாட்டு மக்களுக்குச் சிறப்பான தொண்டுகளும் சரித்திரப் புகழ் பெற்ற பணிகளும் செய்துவந்தது என்பது சரித்திரச் சான்ருகும். ஒட்டக் கூத்தர்முதல் தமிழ் அரசர்கள் ஆண்டகாலம் வரை நம்மவர்களின் தொண்டு, தியாகம், கடவுள் பக்தி முதலியன மிகச் சிறப்பாக இருந்து வந்தன.

பின்பு நாளாவட்டத்தில் கால மாறுபாட்டின் காரணமாகவும், அன்னிய ஆதிக்கத்தின் காரணமாகவும், நம்முடைய முன்னேற்றம் தடைப் பட்டுச் செயலற்று எல்லாத் துறைகளிலுமே பின்னடைந்தது. இதை நன்ருக உணர்ந்த பெருமைக்குரிய நம் தலைவர்கள் இச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். சமூக முன்னேற்றம், மாதர் முன்னேற்றம், இளைஞர் முன்னேற்றம், தொழில் முன்னேற்றம் என்ற வகையில் பல துறை களிலும் ஈடுபட்டு, நமக்கென்று பாடுபடத் தனிப் பத்திரிகை ஒன்று மிகமிக அவசியம் என்பதையும் உணர்ந்து **செங்குந்த மித்திரன்** என்ற மாத இதழையும் தோற்றுவித்து அதன் வாயிலாகச் சிறந்த பணிகளைப் பறைசாற்றி நம் சமூகத்தவர்களைச் சற்று விழிப்படையச் செய்தார்கள்.

ஆனல் வள்ளல் திரு. சபாபதி முதலியார் மறைவிற்குப் பின் தலைமைச் சங்கமும் அதன் வாயிலாகத் தோன்றிய மாத இதழும் சற்று ஊக்கம் குறை

வாகவே செயல்பட்டது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அந் நிலை ஏன் ஏற்பட்டது என்பதை நாம் சிந்திக்கவேண்டும். நம் குலத்தில் செல்வந்தர்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், சிறப்பான அதிகாரப் பொறுப்பில் உள்ளவர்கள், தியாகச் சிலர்கள் இல்லையா? நம் குலப் பெருமையைக் காக்க வந்தவர்களில் திருப்பூர் குமரன், தில்லையாடி வள்ளி யம்மை போன்ற தியாகப் பரம்பரையும் இல்லையா? அறிஞர்கள் சிந்திக்க வேண்டும். சிந்திக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது.

நம் குலத்தவர்களில் கல்வி அறிவு இல்லாத ஏழை எளிய மக்களும், வாழ்வில் சிறிதும் இன்பமில்லாத குடிமக்களும் சுமார் 75 விழுக்காடு இன்னும் இருந்துகொண்டு வருவது யாவரும் அறிந்த உண்மை. 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்பட்டோர் நலக்குழு வந்ததை முன்னிட்டு தஞ்சை மாவட்டத்தில் சில புள்ளி விவரங்கள் தயார் செய்வதற்காகத் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கத்தின் சார்பில் நானும் சிலரும் பல கிராமங்களுக்கும், பட்டி தொட்டிகளுக்கும் செல்ல நேர்ந்தது. அந்தச் சமயம் சில கிராமங்களில் நம்மவர்கள் மிக்க கேவலமான முறையில் இருக்க இடமில்லாமலும், உடுக்க நல்ல உடைகூட இல்லாமலும், மரத்தட்டிகளில் குடிசை போட்டுக்கொண்டு அரிசனங்களைவிடக் கேவலமாக வாழ்வதையும், கேவலமான தொழில்புரி வதையும் பார்த்து மனம் நெகிழ்ந்தேன். இப்படியும் இந்த இருபதாம் நூற்றாண்டில் நம் சமூகம் பின்தங்கிய நிலையில் இருந்துவருகிறதே என்று நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து கண்ணீர் உகுத்தேன். இந்த அவல நிலை மாறி எப்போது நம் சமூகம் நல்ல நிலைக்கு வந்து மற்றவர்களுடன் சரிநிகர் சமானமாக வளரும் என்பதை எண்ணி, நந்நிலை ஏற்பட இறைவனை வேண்டினேன்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தோன்றிய பிறகு, முதல் மாநாடு நடத்திய பெருமை ஈரோட்டுச் செங்குந்தர்களைத்தான் சாரும். அன்று ஈரோட்டில் சிறப்புடன் வாழ்ந்த திரு. மொட்டய முதலியார் அவர் களைத் தலைவராகக் கொண்டு மிகச் சிறப்பாக மகாநாடு நடந்தது. அப்போது யான் சிறுவனாக இருந்தேன். அந்த மகாநாட்டின் காட்சிகள் என் கண்முன் இன்னும் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. பல ஆண்டுகள் கடந்தாலும் மறுபடியும் நல்ல சமயத்தில் இம் மாநாடு ஈரோட்டில் நடப்பது மிகப் பொருத் தமானது—சிறப்புடையது—பயன் தரத்தக்கது என்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனதருமை அன்பு நிறைந்த சான்றோர்களே, அறிஞர்களே, வணிகர் களே, செல்வந்தர் பெருமக்களே, உயர்பதவி வகிக்கும் அண்ணல்களே! நீங்க ளெல்லாம் மேலும் நம் சமூக முன்னேற்றத்திற்கு என்ன செய்யப்போகி றீர்கள்? என்பதே இன்றைய கேள்வியாக இருக்கிறது. சற்று நேரம்

சிந்தியுங்கள் ; சமூகம் சிறக்க செயல் திட்டங்ள் தீட்டுங்கள் ; சமூகத்திற் திற்காகத் தங்களை அர்பணித்துக்கொள்ளுங்கள், பிற சமூகத்தார்களெல்லாம் பல மாநாடுகள் கூட்டித் திட்டம் வகுத்துச் செயல்படுவதையும் சிறப்பாக வாழ்வதையும் கவனியுங்கள், கவனித்து நாமும் நம்முடைய பழம் பெருமைகளை நிலைநாட்ட முற்படவேண்டும்.

பொது நல நோக்கமுடைய செயல் வீரர்களுக்கு நம்மிடம் பஞ்சமில்லை. அறிவு படைத்த அறிஞர்களுக்கும் பஞ்சமில்லை ; ஆற்றல்மிக்க செம்மல் களுக்கும் பஞ்சமில்லை. அப்படியிருக்க நம் முன்னேற்றத்தில் ஏன் தடை ? அதைத்தான் சிந்திக்க இந்த மாநாடு கூட்டுகிறோம். இப்போதுள்ள சூழ் நிலையில் இன்னும் காலந்தாழ்த்தினால் நம் சமூகம் (மற்ற) சமுதாயத்துடன் மானம் மரியாதையுடன் வாழத் தகுதியற்றுப்போய்விடும் என்பதில் ஐயமில்லை. பெரியவர்கள் தொண்டாற்ற முடியாவிட்டாலும் ஆங்காங்குள்ள இளைஞர் களுக்கு ஊக்கம் தந்து உணர்ச்சிகளைத் தட்டியெழுப்ப ஆவன செய்யுங்கள். மனிதனாகப் பிறந்த நாம் இறப்பது உறுதி என்பதை எல்லோரும் அறிவோம். அப்படி அறிந்தும் சமூகப் பணிகளில் நாம் அயர்வுகாட்டுவது ஏனோ என்பது புரியவில்லை.

காந்தியடிகள் நம் நாட்டில் தோன்றியிராவிட்டால் நமக்குச் சுதந்திரம் கிடைத்திருக்காது. நம்முடைய அடிமை விலங்கு முறிக்கப்பட்டிருக்காது. இது நாம் நம் காலத்தில் கண்ட உண்மை. அவர் நமக்குச் சொல்லிய பாடம் சமதர்மம். அதாவது செல்வமோ, கல்வியறிவோ, அதிகாரமோ எல்லாமே எல்லாருக்கும் சமமாகப் பயன்படவேண்டும் என்பது. இதை மனதில் கொண்டால் நம் சமூகத்தில் தாழ்வுநிலை என்பது சிறிதும் நிலைத்திருக்க முடியுமா ? அதுதான் தர்மகர்த்தா முறை. அதை மனதிற்கொள்வோம்.

இனி நாம் செய்யவேண்டியதை உடனடியாகத் தீர்மானித்துச் செயல்பட வேண்டும். முதலாவதாக நம்மிடையே உள்ள ஏழை எளிய மக்கள் கல்வி அறிவு பெறவேண்டும். குறிப்பாகத் தொழிற்கல்வியும் – படித்துப் பட்டம் பெற்றவர்கள் நுண்ணறிவும், விஞ்ஞான அறிவும் பெறவேண்டும். அதற் குரிய வாய்ப்பினை உருவாக்கவேண்டும், தற்போது மனிதன் சந்திரமண்டலம், செவ்வாய் மண்டலம் போக. வழி கண்டுபிடித்துவிட்டான். நாமோ இன்னும் தறிக்குழியிலிருந்து மேலே வரவில்லை. இதை எண்ணினால் மனம் வேதனைப் படுகிறது.

செல்வந்தர்கள். அறிவுடைய பெரியவர்கள், பதவிகளில் உள்ளவர்கள் சற்று மனம் திருந்தி “ தனி ஒருவனுக்கு உணவிலையெனில், சகத்தினை அழித் திடுவோம் ” என்று அன்று பாரதி சொன்ன சொற்களை நினைத்துப் பார்க்க வேண்டும். பாரதி இன்னொன்றும் தெளிவாகச் சொன்னான் “உழவுக்கும்

தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டுகளித்திருப்போரை நிந்தனைசெய்வோம்" அதையும் நாம் சற்று நினைவில் கொள்ளவேண்டும். இனியும் நாம் வாளாவிருந்தால் சமுதாயம் நம்மை நிச்சயம் நிந்தனை செய்யும்.

நம் குலத்திற்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் தீராத நோய் என்னவென்றால் ஒன்றுபடாமலிருப்பதுதான். அந்நோய் முற்றி நமக்குப்பல அபாயங்களைத் தோற்றுவித்து, நம் குலத்தின் எல்லா முயற்சிகளையும் நல்லெண்ணங்களையும் தலைதூக்கவிடாமல் செய்துகொண்டிருக்கிறது என்பதையும் நன்கு அறிவோம். இனியும் நாம் ஒன்றுபடாமலிருந்தால் செங்குந்தர்களுக்கு இனி வாழ்வே கிடையாது என்ற நிலை வந்துவிடும். நம் குலத்தை எண்ணித்தானே என்னவோ கவி பாரதி, "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே— நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே" என்று சொல்லிப் போனார் என்று எண்ணத்தோன்றுகிறது.

நாமிருக்கும் நாடு சுதந்திர நாடு. நாம் வாழ்வதும் அந்த நாட்டிலேதான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. நம் நாடு அரசியல் சுதந்திரம் பெற்றுள்ள நாடு. இதில் நம்மவர்கள் இன்னும் அரசியல் தெளிவுடன் அதில் அதிகம் ஈடுபடாமலும் இருந்துவருகிறோம். இந்நிலை மாறவேண்டும்.

நமக்குள்ளே எத்தனை பிரிவு! வடக்குத்தெரு—தெற்குத்தெரு, மேலத்தெரு—கீழத்தெரு; வடக்கத்தியார்—தெற்கத்தியார், மேற்கத்தியார்—கிழக்கத்தியார், காஞ்சிபுரத்தார், திருப்பத்தூரார், தஞ்சாவூரார், தர்மபுரியார், சேலத்தார்—மதுரையார், கரூரார்—கடப்பை ஜில்லாக்காரர், பட்டினத்தார்—கிராமத்தார் என்றெல்லாம் எத்தனை விதம். நெஞ்சு பொறுக்கவேயில்லை இந்த நிலைகெட்ட செயலை நினைந்துவிட்டால். ஆனால் செங்குந்தர்கள் என்று சொல்லிக் கொள்வதில் மட்டும் பெருமைப்படுகிறோம். அது போதாது நமக்குள் இருக்கும் மேற்கண்ட பாகுபாடுகள் எல்லாம் இன்றே ஒழிக்கப்பட வேண்டும். நாம் அனைவரும் ஒரே செங்குந்தர் என்ற உணர்வு ஏற்பட வேண்டும். நமக்குள் எந்த விதத்திலும் போட்டியோ, பொறாமையோ, உயர்வோ தாழ்வோயின்றி எல்லோரும் சமம், நாம் எல்லோரும் ஒரே இனம், ஒரே நிறை என்று செயல்பட்டு உறவுகொண்டு, கண்மூடி வழக்கங்களையெல்லாம் விட்டகற்றி, மாதர் தம்மை இழிவுசெய்யும் வரதட்சணை முறையை ஒழித்துப் பழையன கழித்துப் புதியன புகுத்தி ஒன்றுபட்டு வாழவேண்டும்.

சமூகத் தொண்டுக்கும், பொதுநலத் தொண்டுக்கும் நம்மவர்களில் பெரும்பான்மையினர் முன்வருவதில்லை. அப்படி யாராவது முன்வந்தால் அவர்களுக்கு ஊக்கமோ, உதவியோ உற்சாகமோ அளிப்பதில்லை. அதனால் முற்போக்குத் துடிப்புள்ளம் கொண்ட இளைஞர்கள் ஆர்வம் குன்றிச் செயலற்று சோர்ந்துவிடுகிறார்கள். இனியும் நாம் அவ்வாறில்லாமல் எல்லா ஜில்லாக்

களிலும் ஜில்லாச் சங்கங்களும், எல்லாக் கிராமங்களிலும் கிளைச் சங்கங்களும் தோற்றுவித்து, அதன்மூலம் இளைஞர்களையும், தொண்டர்களையும் உருவாக்கி அவர்களுக்கு எல்லா விதத்திலும் உதவிசெய்து—ஊக்குவித்து—உற்சாகமூட்டி நல்ல பல பணிகளில் குலப்பணியும் சிறந்தது என்பதை நினைந்து செயல்படச் சிறந்ததொரு திட்டத்தைத் தீட்டுவோமாக. எந்தச் செயலையும் செம்மையாகச் செய்ய ஒரு அமைப்பு மிகமிக அவசியம். அமைப்பு இருந்தால்தான் கட்டுப்பாடுடன் செயல்பட முடியும்.

நமது முன்னோர்கள் நம் குலமக்கள் வதிந்த காசி முதல் கன்னியாகுமரி வரையில் பல கிராமங்களை இணைத்து 72 நாடுகளாகப் பிரித்து, அதற்கு எல்லை வகுத்து எல்லாவற்றிற்கும் தலையாய நாடு ஒன்று நிறுவி மிகச் சிறந்த முறையில் கட்டுப்பாடு குலையாமல் இருந்துவந்தனர். எந்தப் பிரச்சனையானாலும் நமக்குள்ளேயே தீரும் வகையில் ஒரு தனிச் சிறப்புடைய அங்கமாகவே சட்டதிட்டங்கள் வகுத்து மற்ற சமூகத்தார்களுக்கு ஒரு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அதை நினைவில் கொள்ளவேண்டும். நாம் வீரப் பரம்பரையினர் என்றும் நவ வீரர்கள் வழி வந்தவர்கள் என்றும் பழங்கதைகள் பேசுவதிலே மகிமை இல்லை. அவ் வீரத்தைச் செயலில்காட்ட, சிந்திக்க நேரம் வந்துவிட்டது.

ஜனநாயக நாட்டில் அரசியல் பலமும் நமக்கு மிக மிக அவசியம். ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் முதல் சட்ட மன்றம், பாராளுமன்றம் வரை நமது பிரதிநிதித்துவம் இருக்க, நாம் இடம்பெற பாடுபடவேண்டும். நமது பாரம்பரிய தொழில் நெசவு, இந்தத் தொழிலை நம்மவர்களில் ஏறக்குறைய 75 விழுக்காடு பேர் இன்னும் பிழைப்பாகக் கொண்டுள்ளார்கள், அதற்கு இந்த தேசத்திலேயோ, வெளிநாட்டிலோ நமக்கு நிலையான மார்க்கெட்கள் வேண்டும். நமது தேவைக்கு வேண்டிய மலிவு நிலையில் நூல் கிடைக்க வேண்டும். தீர்க்கதரிசி ராஜாஜி அவர்கள் தீர்மானித்தபடி கலர் சேலைகளையும் கரை போட்ட வேட்டிகளையும் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும். நாமும் புதிய புதிய கண்கவர் ரகங்களையும் தயார் செய்யவேண்டும். அதற்கான பயிற்சிகளையும் பெறுவதற்கு முயற்சிக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தையோ மாநில அரசாங்கத்தையோ அணுகி அதற்கான சட்டங்களைச் செய்ய சகல முயற்சிகளையும் நமது தலைமைச் சங்கம் இன்னும் தொடர்ந்து செய்துவர வேண்டும்.

குறிப்பாக நம் குல அறிஞர்களைக்கொண்டு, நம் சமூகம் விழிப்படையப் பிரசாரக்குழு ஒன்று அமைத்து, கிராமங்கள்தோறும் சென்று முன்னேற்றக் கருத்துக்களை எடுத்து இயம்ப ஜில்லா சங்கங்கள் பொறுப்பேற்கவேண்டும். பிரச்சாரமும் விளம்பரமும் மிக மிக அவசியம் தேவையானது என்பதைப் பல அரசியல் கட்சியின் சமீப வளர்ச்சியால் நாம் அறிய முடிகிறது.

பண்டைய காலந்தொட்டு சமய வளர்ச்சிக்குக்கூட நாயன்மார்கள், ஆழ்வார்கள் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி இவைகளின் மூலமாக சைவ, வைணவ மதத்தையும், முஸ்லீம்கள், கிருத்துவர்கள், குரான், பைபிள் முதலிய நூல்களைக்கொண்டு பிரச்சாரம் செய்து சமயத்தை வளர்த்திருக்கிறார்கள். அவைகளை நமக்கு வரலாறு காட்டுகிறது. நம் குலம் சிறக்க—விழிப்புணர்ச்சிகொள்ள—கல்வி கேள்விகளில் சிறந்தோங்க—தொழில் வளம் பெருக—பொருளாதாரம் மேம்பட பிரசாரப் பலத்தை ஏற்படுத்தி அனைத்து முயற்சிகளையும் செய்யவேண்டும்.

இம் மாநாடு நம் சமூகம், மாதர், இளைஞர்கள் முன்னேறவும், நமது குலத்தொழிலாகிய கைத்தறித் தொழில் நசிந்து போகாமல் இருக்கச் சிறந்த பயனுள்ள பல திட்டங்களை வகுக்குமென்று நம்புகிறேன். தியாகம்—துணிவு—அறிவு—நேர்மை—உழைப்பு இவைகளை அடித்தளமாகக் கொண்டு திட்டம் திட்டுவோமாக! செயல்படுவோமாக!!

நிறுவனம் : 1938 தொலைபேசி எண். : 29

- வண்ணமிகு படைப்புகள் !
- அழுத்தமான நெசவு !
- பிடித்தமான தேர்வு !
- பெருமை மிக்க கவர்ச்சி !
- நியாயமான விலை ! இத்தனையும் அமைந்தது.
- காலத்திற்கேற்ற ரகங்கள் !
- அழியாத வண்ணம் !
- பொறுத்தமான சேலை !
- நாகரீக நிலை !

எங்கள் ஸ்பன் ரகம் ஒன்றே!

தயாரிப்பாளர்கள்:

S. 581, ஜலகண்டபுரம் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம்,

ஜலகண்டபுரம்-636501 ● சேலம் (மாவட்டம்)

★ உயர்ந்த தரமே எங்கள் இலட்சியம். ★

முயற்சி

சொல்நயப் புலவர், சிலம்படியான், சேலம்.

''முயற்சி திருவினையாக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்'' —குறள்.

முயல் என்றால் தொடங்கு என்று பொருள். சோம்பலை விட்டுச் சுறுசுறுப்பாயிரு, என்று கூறலாம்.

''ஆடவர்க்கு வினையே உயிர்''
என்று பெண்மகள் ஒருத்தி பேசியுள்ளாள்.

இன்று — நாளை என்று ஒன்றைச் செய்ய மனமின்றிச் சோம்பி இருப்பவன் பிறருக்கு, நாட்டுக்குச் சுமையானவன். அவன் கணுக்கால் தண்ணீரிலும் கால் வைக்க மாட்டான். அது அவனுக்குக் கடலாகத் தோன்றும்!

''எல்லாம் அவன் செயல் — என்னாலாவது எதுவுமில்லை'' என்று தத்துவம் பேசும் தவளை மனத்தான் சரித்திரம் அறியாதவன். அவனை ஆண்டவனும் ஆதரிக்க மாட்டான்! கை விட்டு விடுவான்.

''தாளாளன் என்பான் கடன் படா வாழ்பவன்''
தாளாளன் — முயற்சியாளன்.

''என்னிடத்தில் இல்லை; உன்னிடத்தில் இருந்தால் கொடு'' என்று பல்லெல்லாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டிச் சொல்லெல்லாம் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்து நீட்டிக் கடன் கேட்டு வாங்கும் வறியவனும் முயற்சியில்லாதவனே யாவான்.

''முயற்சி திருவினை யாக்கும்''

திரு என்பதற்கு, செல்வம், அழகு, வெற்றி, சிறப்பு, தெய்வத் தன்மை, இலக்குமி, வீரம், பொலிவு, அருள் முதலிய பொருள்கள் உள. மங்கலச் சொல்லாகும்.

ஒரு தொழிலைச் செய்து முடிக்க ஊக்கங்கொண்டு எழுகின்றவனிடத்துத் திருவாகிய 'மங்கலம்' தேடி வந்தடையுமாம். அது காரணமாகவே அவன் எடுத்த காரியம் யாவினும் வெற்றி அடைவான் என்பது திண்ணம்.

''அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—''

இதைப் படிக்கின்ற பொழுது சற்று மனச்சோர்வு உண்டாகிறது, அல்லவா! ஆம் பனங்கொட்டையை நிலத்தில் ஊன்றி வைத்து விட்டு, ஓராண்டுக்குள் அதன் பழம் உண்ணத் துடிக்கலாமா? வாழைக் கிழங்கைப் புதைத்து வைத்து வளர்த்து வந்தால் வருடத்தில் பழம் உண்ணலாம். பனம் பழத்திற்காகப் பலப்பல ஆண்டுகள் காத்திருந்தாலும் வைத்தவன் உண்ண முடியாமல் போனாலும் போகலாம்!

அரச மரத்தடிப் பிள்ளையாரைச் சுற்றிவிட்டு அடுத்த நாளே அடிவயிற்றைத் தடவி பார்ப்பதால் பயன் என்ன? அதனதன் இயற்கைத் தன்மைக் கேற்ற பருவம் வாய்க்க வேண்டாமா? அதுவரை அதன் பயனுக்கான முயற்சியைச் செய்து கொண்டே இருக்கவேண்டும்.

மொட்டைத் தலைக்காரி மூன்றாம் நாளே முழப்பூ வைத்துக்கொள்ள முயலலாமா? ''விதிவலிது'' எத்தனை முயன்றாலும் அது நமது முயற்சிக்கு முன் சென்று நின்று கொள்கிறதே! முயற்சியின் முதுகெலும்பை முறித்துவிடுகிறதே! என்ன செய்வது என்ற ஏக்கம் உண்டாகலாம்.

''அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும்''
''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்''

அம்மியைத் தூக்கிக் கொண்ட ஒருவன் ஓட்டமாக ஓடிவிட முடியாது. ஒவ்வோரடியாக வைத்து நடப்பானேயானால் தூக்கமுடியாத கனமான அம்மியையும் வெகுதூரம் கொண்டு செல்ல முடியும். விதியும் அவன் பின்னிற்குமாம்!

ஸ்காட்லாந்து மன்னன் 'ராபட் புரூஸ்' இங்கிலாந்து மன்னனோடு ஆறு முறை போரிட்டும் தோல்வியையே அடைந்தான்! ஆறு முறை போரிட்ட முறையை மாற்றிப் புதுமுறை ஒன்றை உருவாக்கி ஏழாவது முறை போரிட்டான். வெற்றி பெற்றான்! சிலந்திப் பூச்சி அவன் சிந்தனையை எழுச்சியுறச் செய்தது! என்றால் சிற்றெறும்பு நமது சிந்தனையைக் கிளர்ச்சியுறச் செய்யாதா? ''மன முண்டானால் மார்க்கமுண்டு.''

அமெரிக்கத் தேர்தலில் ஆறுமுறை தோல்வி கண்ட ஆபிரஹாம் லிங்கன் ஏழாவது முறை பழைய உத்திகளை உதறித் தள்ளிவிட்டு, அவன் மனைவி 'மேரிடாட்' கூறிய புது உத்தியை மேற்கொண்டான். பெரிய பதவியை அடைந்து விட்டான்! வரலாற்றுப் பொன்னேட்டில் வாழ்கிறான்!!

ஊழ் இப்படிப்பட்டவர்களின் முன் செல்ல அஞ்சிப் பின் வாங்கியது! உலகம் அவர்களைப் பாராட்டியது.

''நாளென் செய்யும் வினைதானென் செய்யும் எனைநாடி வந்த
கோளென் செய்யும் கொடுங் கூற்று என்செய்யும்...''

என்று வினையாற்றத் தொடங்கிவிட்ட வீரனுக்கே வேல் தாங்கிய குமரனும் வெற்றி வடிவேலனாகக் காட்சி தருவான். அல்லாதவனுக்கு அவன் வடிவம் காண்டலரிதாகும்.

நல்லதே செய்ய நாளும் ஓய்வின்றி முயல்வானைத்தேடி வழிகேட்டுத் தெய்வத் திருமகள் வந்தடைவாள். விதியும் அவன் பின்னடையுமாம்.

ஒருவனுக்குள் அடங்கியிருக்கின்ற சக்தி அவனுக்கே தெரியாது. முயல்கின்ற பொழுதே அது வெளிப்படுவதறிவான்.

சீதையைத் தேடிச் சென்ற அனுமான் கடற்கரையருகே கவலையோடு குந்தியிருந்தான்; 'அங்கதன்' வந்து, அனுமனுக்குள் அடங்கியிருக்கும் பேராற்றலை நினைவு படுத்தினன். அனுமன் எழுந்தான்; ஓங்கினன்; வளர்ந்தான்; வான் முட்ட நின்றன்; இலங்கை மாநகரம் எட்டிப்பிடித்திடலாம் போல் அவன் எதிரில் தெரிந்ததாம்!

வெள்ளை இனத்தவர்கள், ஆப்பிரிக்கக் கறுப்பு நிறத்தவரை அடிமைப் படுத்திக் கொடுமை புரிந்து வந்ததை — வருவதை யாரே அறியார்? கறுப்பர்கள் அத்தனை கொடுமைகளையும் தாங்கிக் கொண்டு பொறுமையோடு போராட்டம் நடத்திப் பாதி வெற்றியும், புகழ்மிக்க மருத்துவம் போன்ற கல்வியால் பாதி வெற்றியும் அடைந்து வருகின்றனர். அவ்வினத்தவரே மனிதன் சாகாதிருக்க வழி காணப் போகிறன்! அப்போது உலகமே அவர்கள் காலடியில் கிடக்கப்போகிறது!

செங்குந்தனே! நீயும், ''மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் பேசி
வருவதை'' நிறுத்து. மனித முயற்சிகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டு
கல்வி — தொழில் — விஞ்ஞானம் — மெய்ஞானம் முதலான கலைகளில்
வல்லாரை உருவாக்கப் புறப்படு எட்டுத்திக்கும் சென்று
கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்க்கத் தலைப்படு.
பணமும் — திறனும் பயன்படச் செயல்படு. நாட்டு நலனில்
அக்கறை கொண்டு நல்ல தெல்லாஞ் செய்யத் துவங்கு. அறிவியல்
மூலம் ஆக்கப் பணிபுரிவோரை அடையாளம் காட்ட எழுந்து நட.
''தன்கேளிர் துன்பம் துடைத் தூன்றும் தூணுக'' நில்.

''இதற்கெல்லாம் என்ன செய்யலாம்'' என்று நாளும் சிந்திப்பீர்.
முடிவை எனக் கெழுதுவீராக.

எல்லாமே இன்பம்! இன்பம்! இன்பம்! ஆம்...

திருமணம் இணையும் திருமண மண்டபம்

செங்குந்தர் திருமண மண்டபம், ஈரோடு.

காமாட்சியம்மன் திருமண மண்டபம், பவானி.

ஆன்மீகம் ஒருபக்கம் அறிவகம் மறுபக்கம்

அருளாலயம்



சோழீச்சுவரர் ஆலயம், காவிரிக் கரை, ஈரோடு.

அறிவாலயம்

செங்குந்தர் வாசகசாலை ஈரோடு.

விண்மறைக்கும் கோபுரம் விதிமறைக்கும் ஆலயம்



சங்கமேஸ்வரர் ஆலயம், பவானி.

மகிமாலீஸ்வரர் ஆலயம், ஈரோடு.

கோபுர தரிசனம் கோடி ஜென்ம விமோசனம்.

திருத்தொண்டீஸ்வரர் ஆலயம், ஈரோடு.

பட்டீஸ்வரர் ஆலயம், பேரூர். (கோவை)

புனித யாத்திரை.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்றெனவும், 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா' மெனவும், நமது செந்தமிழ் மொழியின் சீர்மை மிகு வாசகங்கள் செப்புகின்றன. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு வேண்டிய சித்த சுத்தி பெறவும், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுகின்ற சிந்தையினைப் பெறவும் ஆலய தரிசனம் பயன்படுகின்றது. இந்த வகையில் எங்குமிலாததோர் சிறப்பினைப் பெற்றுக் கொங்கு நாட்டுத் திருத்தலங்கள் பார்ப்போரைப் பரவசப்படுத்தும் வண்ணம் அமைந்திருக்கின்றன. கோவை மாவட்டத்துக் கோயில்களைச் சுற்றிப் பார்க்க நினைப்போர் நினைவில் நிற்பதற்காகச் சில குறிப்புகளைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"திருப் பாண்டிக் கொடுமுடி நட்டனைத் தொழ நம்வினை நாசமே" எனத் திருநாவுக்கரசராலும், "கொடுமுடி நட்டவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" எனச் சுந்தரராலும், "சித்தருந் தேவருங் கூடிச் செழுமலர் நல்லன கொண்டு பக்தியிருற் பணிந்தேத்தும் பாண்டிக் கொடுமுடியாரே" என ஞானசம்பந்தராலும் பாடப்பெற்ற சிறப்பினை யுடையது திருப்பாண்டிக்கொடுமுடி என்னும் திருத்தலமாகும். இத்தலம், பிரமபுரி, அரிகரபுரம், அமுதபுரி, கன்மாடபுரம், கறையூர், கறைசை, அங்க வருத்தனபுரம், பாண்டு நகரம், பரத்துவாச சேத்திரம், தென் கைலாயம், திருப்பாண்டிக் கொடுமுடி, கொடுமுடி, என்னும் பல சிறப்புப் பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றது. தேவாரப் பாடல் பெற்ற 274 தலங்களுள் ஒன்றாகவும் இது விளங்குகின்றது. மும்மூர்த்திகள் எழுந்தருளியுள்ள சிறப் பினையுடையது. இக் கோவிலில் உள்ள நடராஜர் — குக்குடு நடனமும், வியாக்ரபாத சக்தி விநாயகர் (புலியின் பாதமும், சக்தி உடலும் கூடிய விநாயகர்) சிற்பமும் காண்போர் கருத்தைக் கவர்வனவாக அமைந்துள்ளன.

'திருமுக மலர்ந்த நாதர்
அருள்புரி குழந்தை வேலர்
சிரகிரியமர்ந்து வாழும் முருகோனே"

என்று அருணகிரி நாதரால் பாடப் பெற்ற சிறப்புடையது சென்னிமலை. இத்தலம் புஷ்பகிரி, மகுடகிரி, கனககிரி, சிரகிரி என்னும் பல சிறப்புப் பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகின்றது. அருணகிரிநாதர் இத்

தலத்தில் படிக்காசு பெற்றதாகக் கூறப்படுகின்றது இம்மலையில் 12 வருடங்களுக்கு ஒரு முறை மாசி மாதத்தில் பொங்கி வழியும் மாமாங்க தீர்த்தம் உள்ளது அடிவாரத்தில் உள்ள வரடி தீர்த்தத்தில் மூழ்கி முறையாக ஷஷ்டி விரதம் அனுஷ்டிப்பவர்களுக்குச் சந்தான பாக்கியம் உண்டு என்பது கண்கூடு இம்மலையில் ஏறும்போது பாதி வழியில் இடதுபுறம் 'சாவன் கோவில்' அமைந்துஎளது. இதன் வரலாறு செங்குந்தர் கீர்த்தியை விளக்குவதாக அமைந்துள்ளது. (தன் தலையைத் தானே அரிந்து கொள்வது போன்ற சிலை மற்றும் இரண்டு சிலைகள் கொங்கு நாட்டில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது ஒன்று அவிஞசியிலும் மற்றொன்று அன்னூரிலும் அமைந்துள்ளன. சிற்பங்களின் படங்கள் மலரில் இடம் பெற்றுள்ளன. வரலாற்று விளக்கம கல்வெட்டறிஞர் இராசு அவர்களின் செந்தமிழ்க் கல்வெட்டும் செங்குந்தர் சிறப்பும் கட்டுரையில் காண்க). சேர நாட்டிலுள்ள கிரிகளுக்கெல்லாம் இது சென்னியங்கிரியாக அமைந்துள்ளது

கொங்கு நாட்டுத் தேவாரப் பாடல் பெற்ற பகுதிகளில் பவானி எனும் பதியும் ஒன்று. வழிபடுவோர்க்கு யாதொரு தீங்கும் நண்ணாத பதியாதலின் இது 'திரு' என்னும் அடைமொழியோடு 'திருநணா' என்னும் பெயர் பெற்று விளங்குகின்றது. இப்பதி புண்ணிய நதிகளான காவிரியும், பவானியும் கூடுதலால் 'பவானிக்கூடல்' என்றும் அழைக்கப்படுகின்றது.

'செந்தேன் தெளியொளிரத் தேமாக்
கனியுதிர்க்கும் திருநணாவே'

என்றும்,

'நல் வித்தகத்தால் இனிதுணரும் ஞானசம்
பந்தன் என்னும்
சொல் வித்தகத்தால் இறைவன் திருநணா
ஏத்து பாடல்'

என்றும், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமானரால் ஏத்தி இறைஞ்சி வழிபடப் பெற்ற சங்கமுகநாதர் எழுந்தருளிய சிறப்பினைப் பெற்று விளங்குகின்றது இத்திருத்தலம். திருக்கோயிலுள் 'பொன்னரமளியம்மன் கோயிலைப் பார்த்திப ஆண்டு இம்மடி கெட்டி முதலியார் கட்டினர்' என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.

'கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சோல்லு காலனையே' என்று, தம்பிரான் தோழர்—ஆலால சுந்தரர்—முதலை விழுங்கிய மகனை இறையன்பு மிகுந்த அவனது பெற்றோர்களது துயரத்தை நீக்குதற் பொருட்டு, முதலை வாயினின்றும் அழைத்துத் தருதற்குக் குளக்கரைக் கண் சென்று பாடிய

சிறப்பினையுடையது திருப்புக்கொளியனூர் அவிநாசி எனும் திருத்தலமாகும். இத்தலத்திலிருந்து 5 கி. மீ. தொலைவில் திருமுருகன் பூண்டி என்னும் திருத் தலம் திகழ்கின்றது. இது முருகப் பெருமான் பூசித்த தலமாதலால் 'திருமுருகன் பூண்டி' என்னும் பெயர் பெற்றது. சேரமான் பெருமாள் நாயனார் கொடுத்தருளிய செல்வங்களுடன் சுந்தரமூர்த்தி நாயனார் இத் தலத்திற்கு அருகில் எழுந்தருளிய பொழுது இறைவவர் சிவ பூதங்களை வேட வடிவத்தோடு அனுப்பி அவைகளைக் கவர்ந்து வர அனுப்பினார். அப் பொழுது நாயனார் 'கொடுகு வெஞ்சிலை' எனத் தொடங்கும் திருப் பதிகத்தைப்பாட இறைவர் அவைகளை நாயனார்க்கு மீட்டும் திருக்கோயில் வாசலில் கொடுத்தருளிய சிறப்பினையுடையது இத்தலமாகும்.

பட்டீசுவரப் பெருமானும், பச்சைநாயகி யம்மையும் ஒருங்குட னமர்ந்த பேரூர்த்தலமும்,

'போற்றித் திரிந்தேன் புகழ்பேசும் நின் நாமம்
ஆற்றி அலைந்தேன் அறுமுகவா —தேற்றி
மருள் சாரா அன்பே! மருதமலைக் கோவே
இருள் சேரா இன்பமளி'—என வேலேந்திய

வேலவனை நாளும் அன்பர்கள் நாடும் மருதமலையும்,

'சிவமலை யென்றிடச் சிதையுந் தீவினை
சிவமலை யென்றிடத் திருவந் தெய்திடும்
சிவமலை யென்றிடச் சேரும் புண்ணியம்
சிவமலை யென்றிடச் சித்தி யாகுமால்'

எனச் சிறப்புடன் பாடப்பெற்ற சிவன்மலையும்

'எம்பிரான் இமையோர்கள் தமக்கெலாம்
இன்பமாகி இருந்த எம் ஈசனார்
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்
கண்பராகி நின்றார் அன்னி யூரரே'

என்றவண்ணம் வல்வினை போக்கும், அன்னூரில் அமைந்துள்ள மன்னீஸ் வரர் ஆலயமும் கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள சிறப்புமிகு ஆலயங்களாகும்.

இன்றும், வட்டமலை, பச்சைமலை, பவளமலை, திண்டல்மலை முதலிய திருக்கோயில்கள் குன்றுதோறாடும் குமரன் அமர்ந்த கோவை மாவட்டத்துக் குன்றுகளாகும்.

'பண்ணாரி மாரிநின் பாதம் பணிந்து தினம்
பண் மாரி பொழிய வருவேன்'

எனப் பக்தர்கள் ஒன்று கூடி, பங்குனி மாதத்தில் விழா எடுக்கும் பண்ணாரி மாரியம்மன் ஆலயமும், கோபிக்கருகிலுள்ள பாரியூர் ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மன் ஆலயமும் கோவை மாவட்டத்திலுள்ள குறிப்பிடத்தக்க அம்மன் ஆலயங்களாகும்

எல்லாவற்றுக்கும் மேலாக ஈரோட்டில், நெடிதுயர்ந்த கோபுரம் தாங்கிய திருத்தொண்டீஸ்வரர் ஆலயமும், ஈரோடு விளங்குகின்ற மகிமாலீஸ்வரர் ஆலயமும், காவிரிக்கரையிலமைந்த சோழீஸ்வரர் ஆலயமும், காண்பவர் கருத்தைக் கவரும் கலையழகும், வழிபடுவோர் நெக்குருகி நிற்கும் சிறப்பும் உடையனவாய்த் திகழ்கின்றன இக்கோயில்கண் அனைத்தும் கோவை மாவட்டத்துக்கு மணிமுடியாய்த் திகழ்கின்றன.

ந. சண்முகானந்தன்
T. ஜெகதீசன் (மலர்க்குழு)

கோவை மாவட்ட செங்குந்த மகாஜன சங்க மாநாட்டிற்கு

எங்கள் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்

தயாரிப்பாளர்கள்.

சிவசக்தி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட் எண் கே. 1938.

26/58, ரங்கே கவுடர் வீதி,
கோயமுத்தூர்-641001.

R. துரைசாமி
தலைவர்

"செந்தமிழ்க் கல்வெட்டும் செங்குந்தர் சிறப்பும்"

கல்வெட்டறிஞர். புலவர். செ. இராசு, பி. லிட்.,

ஈரோடு.

தமிழகத்தின் கலை, இலக்கியம், சமய வளர்ச்சியிலும், பண்பாட்டைக் காத்துவரும் அருஞ்செயலிலும், அருள் – அறம் – பெருவீரமாகிய மறம் இவற்றை நிலைநிறுத்திய பெருமையிலும் செங்குந்த குலச் செம்மல்களுக்குப் பெரும் பங்குண்டு என்பதை வரலாற்றுசிரியர்கள் நன்கு அறிவர்.

தமிழகத்தின் ஒரு பகுதியாகிய குன்றாப் பெருமைகொண்டு விளங்கும் நம் கொங்கு நாட்டின் சிறப்புக்கு அவர்களே இன்றியமையாத காரணகர்த்தாக்கள்! அவர்கள் நுழையாத துறையில்லை. நுழைந்ததில் நுண்மான் நுழை புலத்தோடு உழைத்து வெற்றி கொள்ளாத் துறையுமில்லை! பண்டைப் பெருமையைத் தொட்ட இடமெல்லாம் செங்குந்தர் பெருமையே துலங்குகிறது என்பதில் ஐயமில்லை.

இலக்கியம் வளர்த்த ஏந்தல்கள் :

சென்ற நூற்றாண்டில் கொங்கு நாட்டில் பெரும் புலவராகச் செங்குந்தர் சிலர் விளங்கிப் பெருமை பெற்றிருக்கின்றனனர் கோவை கந்தசாமி முதலியார் (1838-1890) பேரூர், மருதமலைக்கு 8 பிரபந்தங்கள் பாடியுள்ளார். வடவழி அருணாசலக் கவிராயர் யவன காவியம், பேரூர் உலா, மருதமலைப் பிள்ளைத் தமிழ் பாடினார். ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் பல செங்குந்த குலப் புலவர்களை ஈன்றெடுத்துள்ளது. அவர்களுள் குட்டியானை முதலியார், முத்து நைநாத்தை முதலியார், வாசுதேவ முதலியார் ஆகியோர் மிகச் சிறந்தவர்கள். தனிப்பாடல்கள் பல பாடிய முரட்டுப்பாளையம் குப்பானந்த சுவாமியார் செங்குந்த குலத்தினரே! கந்த புராணச் சுருக்கம் பாடிய குமாரசாமி முதலியார், கலம்பக இலக்கியத்தில் புகழ் கொண்ட சுந்தர முதலியார் ஆகியோரின் பெருமைகளை அறியாதவர் அறியாதாரே!

ஆலயம் காத்த அடியார்கள் :

திருக்கோயில் வழிபாட்டிலும், ஆலய பராமரிப்பிலும், இறைத்தொண்டு பூணுவதிலும் என்றும் செங்குந்தர்குலப் பெருமக்கள் பிறருக்கு முன்னோடியாக இருந்திருக்கின்றனர்.

"இக்கோயில் கைக்கோளரில் அமரகோனர் கொளந்தை யாண்டார்க்கு திருமுக்காணி குநித்தபடி இவன் தமக்கை அறம் வளர்த்த நாச்சியார் மிஸ்த கண்ட மாணிக்கம்

தேவராய மகாராயரைக் கண்டு இக்கோயிலுக்குச் சர்வமானியம் பண்ணிச் செப்பேடு வாங்கி வருகையில்" (1)

என்ற பகுதியால் இக்குல ஆடவர் மட்டுமல்ல பெண்டிரும் திருப்பணியில் முன்னின்றமை தெளிவாகும்.

திருக்காவனத்து ஸ்ரீ மகேஸ்வரரும் ஸ்தானத்தாரும் நாட்டாரும் வீரசோழ அணுக்களும் **கைக்கோளரும் இருந்து''** (2)

எனவரும் தொடரால் இக்குலப் பெருமக்கள் ஆலய நிருவாகத்தில் பெற்றிருந்த முதன்மை நமக்குப் புலப்படுகிறது.

அன்னூர் போன்ற மிகப்பழைய ஊர்க் கல்வெட்டுக்களை நோக்குமிடத்து கொங்குச் சோழர், பாண்டியர் காலத்தே அவ்வாலயத்தில் செங்குந்தர் குலப்பெருமக்கள் விளங்கிய சிறபபுப் புலனாகும்.

"கைக்கோளர் கேசியகங்கன்" "கைக்கோளர் தன பாலராயன்" "கைக்கோளரில் அவனுசி" "கைக் கோளர்" அவனிராயன்" "சேவூர்க் கைக்கோளர் கரிகாலன்" (3)

என்ற பெயர்களை ஆண்டுக் காணுகின்றோம். இப்பெயர்கள் அவர்களுடைய சமய, அரசுப் பற்றினை நமக்குக் காட்டுகின்றன. பொங்கலூர்க் கல்வெட்டில்

"பொங்கலூர்க்கா நாட்டில் அழகுமலைக் கொமாரர் திருவுளத்தினாலே சுவாமிக்கு ஸ்ரீ பாதந் தாங்கி சமய முதலிகள்" (4) என்ற சிறப்புக் கூறப்படுகிறது.

வணிகம் போற்றிய வள்ளல்கள்:

கல்வெட்டுக்களில் **தறியிறை, தறியூட்டுப் பாட்டம், நூலாலயம்** (5) என்ற பல வரிகளைக் காணுகின்றோம். சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேசுரர் கோயிலில் உள்ள சுந்தர பாண்டியனின் சந்தை பற்றிய கல்வெட்டில் **"பரும்புடவை"** **"மென்புடவை"** இவைகள் தலைச்சுமை, பாக்கம், வண்டி ஆகியவைகளில் சந்தைக்குக் கொண்டுவந்த செய்தி கூறப்படுகிறது.

கொங்கு நாட்டுக் கைக்கோளர் குலப் பெருமக்கள் கிராமப் புறங்களிலிருந்து புடவைகளைச் சந்தைக்குக் கொண்டு சென்றும், அங்கிருந்து பல்வேறு பண்டங்களை மக்களுக்குக் கொண்டுவந்து கொடுத்தும் அளப்பரிய பணி புரிந்தனர். இதனைக் கல்வெட்டு

"இவ்வூர்க் கைக்கோளர் பட்டணத்துக்குக் கொண்டு போகும் புடவைக்கும் இவர்கள் பட்டணத்திலிருந்து கொண்டு வரும் பலசரக்குக்கும் (6)

என்று கூறுகிறது.

---

(1) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் I எண் 128. (2) மேலது - எண 525
(3) AR. No 615, 614, 634, 607, 603 of 1922
(4) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் I எண் 331 (5) AR 225, 254 of 1920
(6) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் I எண் 465.

புடவைக் கடைகள் தனி வீதிகளில் வைத்து விற்கப்பட்டன. வேறெங்கும் இப்படி நடைபெறவில்லையாம். அதற்காக வரி விதிக்கப்பட்டது. இதனை,

"வடபரிசார நாடு, குறுப்பு நாடு, நாலூர்ப் பற்று நாடு, பேரூர் நாடு, வீர சோழ வள நாடு, ஒடுவங்க நாடு இந்நாட்டிலுள்ள கைக்கோளருக்கு நிருபம் குடுத்த படியாவது கொங்கு மண்டலத்து மத்து மொரு நாட்டிலுமில்லாத கட்டளையிந்த நாட்டிலே இரண்டு வருஷம் கூலதிறை என்று நடந்த அளவுக்கு இவ்வருஷம் முதலா என்றென்றைக்கும் நாம் இந்த நாடுகளுக்குச் கூலதிறையிட்டோம்" (7)

என்று கல்வெட்டு கூறுகிறது.

படை நடத்திய பண்பாளர்கள்:

பழந்தமிழ் அரசர்கள் வீரமிக்க பரம்பரையாகிய கைக்கோளர் குலத்தினரைக் கொண்ட பெரும் வலிமை கொண்ட படையைத் தம் அருகிலேயே வைத்திருந்தனர். வெள்ளலூர் ஆன அன்னதான சிவபுரி, அன்னூர் கல்வெட்டுக்களிலிருந்து கொங்கு நாட்டிலும் அப்படை இருந்ததென அறிகிறோம். "ஆமட்டம் தெருஞ்ச கைக்கோளர்" "கைக்கோள சேனாதிபதிகள்" (8) என்பது அக்கல்வெட்டுத் தொடர்களாகும். கைக்கோளப் படையிலிருந்து தேர்ந்தெடுத்த வீரர்களைக் கொண்ட சிறப்புப் படையே "தெரிஞ்ச கைக்கோளப்படை" ஆகும்.

தலையீந்த தறுகணாளர்:

"சோழன் பூர்வ பட்டயம்" என்பது கொங்கு நாட்டு வரலாறு கூறும் அருமையான ஒரு நூல் "சில நூற்றாண்டுகளின் முன் கைக்கோளர்களுக்கு மிகுந்த செல்வாக்கு நாட்டில் இருந்தது என்று சொல்ல இந்நூல் இடந்தருகிறது. கோயில் அமைப்பு, அதிகாரம் இவைகளிலும் வகுப்புப் பிரிவினை, அவர்களின் உரிமை கடமைகளை விசாரித்து வழக்குகளைத் தீர்த்தல் முதலிய செயல்களிலே கைக்கோளத் தலைவர்களுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அரசர்களும் இவர்கள் பேச்சைக் கேட்டு அதற்கு மதிப்புத் தந்திருக்கிறார்கள்" என்று வரலாற்றுப் பேரறிஞர் கோவை சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் சோழன் பூர்வ பட்டய மதிப்பீட்டில் கூறுகின்றார். (9)

அப்பட்டயத்தில் செங்குந்த குலத்தினர்கள் தங்களையே பலியிட்டுக் கொண்ட சிறப்புக் கூறப்படுகிறது. செங்குந்தர் மெய்க்கீர்த்தியில் 'சாவாரப் பலி' பற்றிய செய்தி கூறப்படுகிறது.

மாமல்லபுரம், புள்ளமங்கை, திருச்சி போன்ற இடங்களில் தலைப்பலிச் சிற்பங்களைக் காணுகின்றோம். அறகண்ட நல்லூர்க் கல்வெட்டில் திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தரபாண்டியன் காலத்தில் பொன்னாண்டி மகன் இளவெண்மதிசூடி என்பவன் அக்கோயில் மண்டபம் இடையூறின்றிக் கட்டி முடிக்கப்படுவதற்காகத் தன் தலையை அரிந்து கொடுத்தான் என்ற செய்தியைக் காணுகின்றோம், (10)

---

(7) தென்னிந்தியக் கோயில் சாசனங்கள் I எண் 219.
(8) AR No. 590 of 1922; A R No. 625 of 1922
(9) சோழன் பூர்வ பட்டயம். பக்கம் 6.
(10) AR. No. 197 of 1935.

கம்பவர்மன் காலத்து நடுகல் ஒன்று இதனை நன்கு விளக்குகிறது.

"ஸ்ரீ கம்ப பருமயற்கியாண்டு இருபதாவது பட்டை போத்தனுக்கு ஒக்கொண்ட நாதன் ஒக்க திந்தன் பட்டை பொத்தன் மேதவம் புரிந்ததென்று படாரிக்கு நவகண்டங் குடுத்த குன்றகத் தலை அறுத்துப் பிடலிகை மேல் வைத்தானுக்கு"

தலை அரிந்து கொடுப்பதை "நவகண்டம் கொடுத்தல்" என இக்கல்வெட்டுக் கூறுகிறது. (11) இதனையே இலக்கியங்களும் பலப்படப் பாராட்டுகின்றன.

"அடல்வலி எயினர்நின் அடிதொடு கடன் இது
மிடறுஉகு குருதிகொள் விறல்தரு விலையே"

என்று சிலப்பதிகாரமும், (வேட்டுவவரி)

"அடிக் கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவராலோ
அரிந்த சிரம் அணங்கின்கைக் கொடுப்பராலோ"

என்று கலிங்கத்துப் பரணியும், (கோயில்-15)

"தலையரிந்து விடுவார்; உயிர் விடார்"

என்று தக்கயாகப் பரணியும், (61)

"அச்சமது அறத்தமது உயிர்க்கொடை
அளித்தவர் அறுத்ததலை"

என்று அரிச்சந்திர புராணமும் பாராட்டுகிறது அச்செயலை!

இலக்கியச் சிறப்புமிக்க செயலைக் கொங்கு நாட்டில் பல தெய்வீகத் திருத்தலங்களில் செங்குந்தர் குல அடியவர் மட்டும் செய்திருக்கின்றனர்.

சமய முதலி துணையுடன் கரிகால் சோழன் சென்னியங்கிரி வனம் (சென்னிமலை) வருகின்றான். சென்னி மாகாளிக்குரிய வனத்தை வெட்டி அழிக்கும்போது அக்காளி நரபலி கேட்டது. சென்னிமலை செங்குந்தர் சார்பாக சமய முதலியார் நரபலிக்கு ஒப்புக் கொண்டான். அச்செயல் எவ்வாறு நடந்தது என்று செப்பேட்டு வாசகத்திலேயே காண்போம்.

"சென்னியங்கிரி ஆலயத்திற்கு விட்ட மானியம் ஐந்நூறு பொன் கிராமமும், ஐம்பது பொன் சுங்கத் தீர்வையும், ஐம்பது மிடா விரைப்பு நஞ்செய்யும் ஐம்பது விரைப்பு புஞ்செய்யும் விடுவித்துவிட்ட மானியத்திற்கு நாலு சூலக்கல் போடுவித்து அந்த ஆலயத்திற்கு விட்ட மான்யத்தில் சமய முதலிக்குப் பத்தில் ஒன்று என்றுசென்னியங்கிரி ஆலயத்தில் கல்ச் சாகரம் போடுவித்தார்.

கரிகாலச் சோழன் கல்ச்சாகரம் போடுவித்து நிகுதிசெய்தபின்பு சமய முதலி அந்த ஆலய ஊழியத்திற்கு நம்பி முதல் திருவலகு கடைவரைக்கும் ஆள் போடுவித்து திருவாடு தண்டிகை சீர்பாத ஊழியத்திற்கு கைக்கோள்வரில் ஐம்பது

கொங்கு-4 பக்கம் 176.

தொழில் முன்னேற்றத்திற்கான பல திட்டங்களைத் தெரிவித்தார்கள். ஆடைகள் சம்பந்தமாக திரு, நித்யானந்த கானுகோ குழுவினரின் அறிக்கை வெளிவந்தவுடன் திருச்செங்கோட்டில் நடந்த கைத்தறி நெசவாளர் மாநாட்டில் அவ்வறிக்கையை ஆராய்ந்து ''விசைத்தறிகளைப் புகுத்தினால் கைத்தறித் தொழில் அழிந்துவிடும்'' என்ற அபாய நிலையைச் சுட்டிக் காட்டினார்கள். தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் இயக்குனராகப் பல ஆண்டுகள் ''கைத்தறிக் காவலர்'' உயர்திருச் M. P. நாச்சிமுத்து முதலியார் அவர்களுடன் தோளோடு தோளாய்ப் பணிபுரிந்து வந்தார்கள். திருநெல்வேலி பேட்டையில் தென்னிந்திய நூற்பாலை நிறுவ ''கைத்தறிக் காவலருடன்'' சீரிய பணி புரிந்து அவ்வாலையின் இயக்குனராகவும், பின்னர் சட்ட ஆலோசகராகவும் பணிபுரிந்தார்கள்.

சமயப் பணி :-

நம் தலைவர் அவர்கள் கடவுள் பக்தி மிகுந்தவர்கள். தென்னிந்திய பாடல் பெற்ற திருத்தலங்கள் அத்தனையையும் சென்று தரிசித்தவர்கள். தம் வாழ்வின் கடைசி காலத்தை விஸ்வ ஹிந்து பரிஷித்திற்கு அர்ப்பணம் செய்தவர்கள். அந்நிறுவனத்தின் நெல்லை மாவட்டத் துணைத் தலைவராய்ப் பணியாற்றினார்கள். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் தாய் சமயமாகிய இந்து சமயத்தை துறந்து பிற சமயத்தைத் தழுவியவர்கள் மறுபடியும் தாய்ச் சமயத்தில் சேர்க்கும் சேவை. இதன் பயனாக ஆயிரக்கணக்கானவர்கள் தாய்ச்சமயத்தைச் சார்ந்துவிட்டார்கள். நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த இடிந்தகரை என்ற கடலோர பகுதிவாழ் மக்களை இந்து சமயத்தைத் தழுவச்செய்து, வினாயகர் திருக்கோயில் ஒன்றையும் நிறுவினார்கள்.

குண நலன்கள் :-

திரு. வி. எஸ். எஸ். அவர்கள் ஆடம்பரமற்ற தூய, எளிய வாழ்க்கையைக் கையாண்டு வந்தவர்கள். அவர்களுடைய எளிய உடை, பீடுநடை, ஆடம்பரமற்ற தோற்றம், அமைதியான பேச்சு, புன்சிரிப்பு எல்லோரையும் கவர்ந்துவிடும் ''இடுக்கண் வருங்கால் நகுக'' என்ற வள்ளுவர் பெருந்தகையின் பொன்மொழிக்கேற்ப தனக்குத் தாங்கமுடியாத துன்பங்கள் வந்தாலும், அவைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் தகைமை வாய்ந்தவர்கள். தான் மட்டுமின்றி அவர்களது நண்பர்களையும் தன்னைப் போல் இடுக்கணை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும்படி பழக்கிவிடுவார்கள். ஒரு பொருளைத் துருவித்துருவி ஆராய்வதிலும் உற்று உணர்வதிலும், பண்டிதர்களும் வியக்கும் வண்ணம் நன்கு கற்று, அனைவருக்கும் புரியுமாறு விளக்கம் கூறுவதில் சிறந்து விளங்கினார்கள். அமைதியும் பொறுமையும் அவர்களது அணிகலன்கள். செயலில் இறங்குவதற்கு முன்னர் நன்றாகச் சிந்தித்து, செயலில் ஈடுபடும்போது ஏற்படும் இன்னல்களை அமைதியாகவும், பொறுமையாகவும் சமாளித்து முடிவில் வெற்றிபெறுவார்கள்.

இவ்வளவு சிறந்த திறமையும், குணநலன்களையும் பெற்றிருந்த அன்னார் நமக்கோர் வழிகாட்டியாக விளங்கினார்கள். காலதேவன் அவர்களை நம்மிடமிருந்து பிரித்து விட்டான். செங்குந்தர் ஒவ்வொருவரும் அவர்களது ஆத்மா சாந்தி அடைய எண்ணி அன்னார் வாழ்ந்த வாழ்க்கைப்படி நடக்க முயல்வோமாக!

குடியையழைத்துச் சென்னியங்கிரி நகரத்தில் குடிவைத்து அதன் பின்பு சமய முதலி அந்த ஐம்பது குடியும் வரவழைத்துத் தன்னெதிர் நிறுத்திக்கொண்டு அந்த ஐம்பது குடி கைக்கோள்வரில் யாதாமொருவன் சென்னி மாகாளி துர்க்கைக்கு ஒரு நற்பலி நான் கேட்டவிடத்தில் தருகிறோம் என்று நானென்று துணிந்தவர்க்கு...முதன்மை நாட்டாண்மை தருகிறோமென்று சமயமுதலி சொல்ல... கருப்பண்ண முதலியார் நானே ஒரு நற்பலிக்கு நிகுதிசெய்து... கருப்பண முதலியார் தன் மகன் பாலகுமாரனை அழைத்து திருமஞ்சனமாடுவித்துத் திருநீற்றுக் காப்புமிட்டு ஆடையுடுத்தி ஆபரணங்கள் பூட்டி அலங்கரித்துப் பாலசனமிடுவித்துப் பரிமள களப் கஸ்தூரிகள் பூசி வீரசந்தனமிடுவித்து பாக்கு வெற்றிலை கையில் கொடுத்து வீர கொம்பு, வீரகாளம், வீரமல்லாரி, வீரசிகண்டி, வலம்புரிச் சங்குடனே வீரமேள வாத்தியம் முழங்க பஞ்ச வன்னக் குடை பஞ்சமுகத் திவட்டிகை விருதுரண வீரரணப் புலிக் கொடியுடனே நடபாவாடையுடனே நட பாவாடைமேல் நடந்து நடன சங்கிதராக மேழ வாக்கியம் சூழ்ந்து வர சென்னிமாநகரில் நாலு வீதி மிறவனையும் வரவித்துச் சென்னிமாகாளிக்கு எதிர் நிறுத்தி அந்தப் பாலகுமாரனைச் சமய முதலியாகிறவர் நாம் முன் சொன்ன நற்பலியும் உனக்கு வந்ததென்று அந்தப் பாலகுமரனை வெட்டிப் பலியூட்டி வைத்து...பலிக்கு நின்ற பாலகுமரனையும் சாவார்க்கோல முகத்தேதியாய் ஒரு கல் சிலை விக்கிரகமும் அவனைப் போல பார்க்கிற முகமாக அடிப்பித்து அந்தச் சிலையைச் சென்னியங்கிரி ஆலயத்தில் நிறுத்தி வைத்து ...அந்தச் சாவாரப் பலிக்கல் சிலைக்குச் சென்னியங்கிரி வேலவர்க்கு முந்தின பூசை நைவேத்தியம் என்று அந்தச் சென்னியங்கிரி ஆலயத்துள்ப்பட்ட பேருக்குக் கட்டுச் செய்து அவரவர்க்கும் நிகுதி செய்து...'' (12)

என்ற பகுதியால் சென்னிமலை சாவாரப் பலிக்கல்லின் பெருமையை அறிகின்றோம்.

மேற்கண்ட கல்வெட்டுச் செய்திகளால் இலக்கியம், சமயம், வாணிகம், வீரம் ஆகிய பண்புகளிற் சிறந்து விளங்கிய செங்குந்தர் சிறப்பை அறிகின்றோம்.

---

(12) சோழன் பூர்வ பட்டயம் பக்கம் 70, 73.

நமது முன்னோர் மருத்துவப் பணி!

ஒட்டியம், சல்லியம் என்ற மருத்துவ நூலினை 1892 ஆம் ஆண்டு ஈரோடு சகல கலா நிலைய அச்சுக்கூடத்தில் அர்த்தனாரி முதலியார் என்பவர் அச்சிட்டார். அதற்கும் பல ஆண்டுகட்கு முன்பே கோயமுத்தூர் கு. அண்ணுசாமி முதலியார் ''புலிப்பாணி வைத்தியம் 500'' என்ற நூலை வெளியிட்டார்.

தகவல்—**புலவர் சண்முகானந்தம்.**

இல்லறம் :-

திரு. வி. எஸ். எஸ். அவர்கள் கற்புக்கரசி சங்கரம்மாளை மணந்து, அவ்வம்மையார் மூலம் தமது மூத்த மகனும், தற்பொழுது திருநெல்வேலி மாவட்ட தேசிய சேமிப்பு கோட்ட துணை இயக்குனராய் (Assistant Regional Director of Small Savings) பணியாற்றிவரும் திரு. S. பாலசுப்பிரமணியன் B.A., யைப் பெற்றெடுத்தார்கள். 1933–ல் அவ்வம்மையார் மறையவே, இரண்டாம் முறை சீலம் வாய்ந்த கணபதி அம்மையாரை மணந்து 3 ஆண்களையும், 7 பெண்களையும் பெற்றெடுத்தார்கள். சுபாஷ்சந்திரன் B. Sc. ஸ்டேட் வங்கியிலும், நம்பிராஜன் M. Sc. பழநி ஆண்டவர் கல்லூரியிலும் பணிபுரிந்து வருகிறார்கள். பெண்களை நெல்லை மாவட்ட உயர் குடும்பங்களில் திருமணம் செய்து வைத்துள்ளார்கள்.

குலப் பணி :-

பள்ளியில் பயிலும்போதே தமது சிற்றூரில் 1917–ல் செங்குந்தர் அபிவிருத்திச் சங்கம் எற்படுத்திச் சமூக முன்னேற்றப் பணியில் ஈடுபட்டு வந்தார்கள். ஒவ்வொரு ஆண்டும் சமூக ஆண்டு விழாவைச் சிறப்புற நடத்தி, தமிழ் நாட்டில் பல ஊர்களிலுள்ள செங்குந்த குலப்பெரியார்கள் ஒன்றுசேர்ந்து உறவு கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தினார்கள். செங்குந்தர் கல்வி வளர்ச்சிக்காக காலம் சென்ற திருவாங்கூர் பல்கலைக் கழக தலைமைத் தமிழ்த் துறைப் பேராசிரியர் சி. பன்னிருகைப் பெருமாள் முதலியார் எம். ஏ., பி, எல்., அவர்களுடன் கோவை, சேலம், மலபார் மாவட்டங்களுக்குச் சென்று நிதி திரட்டி வந்தார்கள். மைலாப்பூரில் நடந்த செங்குந்தர் வாலிப மாநாட்டின் தலைவராகவும், அம்பா சமுத்திரம் செங்குந்தர் வாலிபர் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகவும் பணியாற்றினார்கள். செங்குந்தர் மகாஜன சங்கத்தில் பல ஆண்டுகளாகச் செயற்குழு உறுப்பினராகவும், 1927 முதல் துணைத்தலைவராகவும் இருந்து சீரிய பணியாற்றி வந்தார்கள்.

நாட்டுப் பணி :-

வி. எஸ். எஸ். மாணவராக இருக்கும் போதே தேசியப் பற்றோடு திலகரின் விடுதலை நிதிக்குப் பணம் வசூல செய்து கொடுத்தார்கள். தேசிய இயக்கம் பொது மக்களுடன தொடர்பு கொள்ள வேண்டி 1921–ல் திரு. டி. ஆர். மகாதேவ அய்யருக்கு உறுதுணையாக இருந்து அம்பாசமுத்திரம் வட்டாரத்தில் பெருமளவில் உறுப்பினர்களைச் சேர்த்தார்கள், 1932–ல் நடந்த விடுதலைப் போராட்டங்களில் நேரடியாகப் பங்கேற்றார்கள். பிற நாட்டுத் துணிக்கடை மறியல், கள்ளுக்கடை மறியல்களுக்கு விரிவான திட்டங்கவ் தயாரித்துப் போராட்டம் நடத்தினார்கள். நம் நாட்டுப் பொருட்களையே மக்கள் வாங்க வேண்டும் என்பதற்காக ‘‘ இந்தியப் பொருள்களையே வாங்குக ’’ (Buy Indian League) என்ற இயக்கத்தை நெல்லை மாவட்டத்தில் ஆரம்பித்து, அதில் தலைவராகவும், செயலாளராகவும் பணியாற்றி 1933 முதல் 1940 வரை சுதேசிப் பொருட்காட்சியை நெல்லை நகர்மன்ற மைதாளத்தில் நடத்தினார்கள்.

1936-ல் நெல்லை நகர காங்கிரஸ் குழுவின் தலைவராக இருந்தபொழுது அரசினரின் அடக்கு முறையை எதிர்த்து துணிவுடன் தொண்டர்களை ஒன்று சேர்த்து காங்கிரஸின் நல்ல பணிகளை துரிதமாக்கினார்கள். 1938 முதல் 1945 வரை நெல்லை மாவட்ட காங்கிரஸின் துணைத் தலைவராகவும் ஒராண்டு காலம் செயலாளராகவும் பணியாற்றி இருக்கிறார்கள், அப்போது தேர்தல் குழுவின் பொறுப்பாளராக இருந்து திருநெல்வேலி,

ஒரு வாழ்க்கை-வரலாறாகிறது

[அமரர் திரு. வி. எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்களின் வாழ்க்கை வரலாறு]

— சி. அருணாசலம், B. A., L. T. திருநெல்வேலி. —

நெல்வயல்கள் வேலிபோல் சூழ்ந்திருப்பது திருநெல்வேலி மாவட்டம். தென் பாண்டிய நாட்டின் தலைநகராய் விளங்கியது திருநெல்வேலி. இம்மாவட்டம் தன் பொருனை நதியையும் குற்றால நீர்வீழ்ச்சியையும் உடைத்து. தேசிய கவி சுப்பிரமணிய பாரதி, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. சுதந்திரக் கொடியை முதல் முதல் உயர்த்திய கட்டபொம்மன், தொழில் துறையில் முன்னோடியாய் விளங்கும் T. V. சுந்தரமய்யங்கார் இன்னோரன்ன பெரியார்கள் பிறந்தது இம்மாவட்டம். இச் சிறந்த மாவட்டத்தில் பிறந்தவர்தாம் அமரர் உயர்திரு வி. எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

இளமைப் பருவமும், கல்வியும் :-

நெல்லை மாவட்டத்தைச் சார்ந்திருப்பது நூற்றுக்கணக்கான சிற்றூர்கள். அச்சிற்றூர்களில் ஒன்றுதான் கைத்தறி நெசவாளர்கள் பலர் வாழும் வீரவநல்லூர். இச்சிற்றூரில் தோனறியவர் திரு, சு, சுப்பிரமணிய முதலியார், அண்ணாரின் அருமை மனைவி முத்தாச்சி அம்மையார். இவ்விருவருக்கும் பிறந்தவர்தான், நம் அன்பிற்கும், மரியாதைக்கும், போற்றுதலுக்கும் எற்றவர் திரு. ''வி. எஸ். எஸ்'' அவர்கள், நம் திருநாட்டில் தங்களது பெயர்களை உலகப் பொன்னேட்டில் பொறிக்கத்தக்க தகையுடையோர்கள் பலரை அவர்களது முன்னடைச் சுருக்கெழுத்துக்களால் அழைப்பது மரபு. ''திரு. வி. க'' '':டி. கே. சி.''. ''வ. உ. சி.'' போன்றவை. அதற்கொப்ப நம் மறைந்த தலைவரை ''வி. எஸ். எஸ். என்று அழைப்பார்கள். ''வி. எஸ். எஸ். என்றாலே தமிழகம், அதிலும் சிறப்பாகச் செங்குந்த குலமக்கள் நன்கறிவார்கள்.

பெரியார் வி எஸ். எஸ். 1902 அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் தோன்றிய வர்கள். தமது சிற்றூரிலுள்ள உயர் தொடக்கப்பள்ளியில் மூன்றாம் படிவம் வரை படித்து முடித்தார்கள். பின்னர் நெல்லையில் சி. எம், எஸ். கல்லூரியில் தமது உயர் நிலைப் படிப்பை முடித்துவிட்டு, சென்னைக் கிருத்துவக் கல்லூரியில் பயினறு 1925-ல் பட்டம் பெற்றார்கள். தொடர்ந்து சென்னை சட்டக் கல்லூரியில் பி. எல். பட்டமும் பெற்று 1928-ல் நெல்லையில் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார்கள். வீழ்ச்சியுற்ற தாயகத்தின் விடுதலைக்காகப் 1930-ல் காங்கிரசில் இணைந்து, இறுதி முச்சு வரை நாட்டின் சேவைக்கும், முக்கியமாகச் செங்குந்தர் குல முன்னேற்றத்திற்கும் கைத்தறி நெசவாளர் வாழ்விற்கும் அரும்பாடுபட்டார்கள்.

பாளையங்கோட்டை, தூத்துக்குடி நகர் மன்றங்களில் காங்கிரஸ் பெருமளவில் வெற்றி பெற முக்கிய காரணமாய் இருந்தார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் குழுவில் பல்லாண்டு களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். மறியல்களின் விளைவாக, உத்தமர் காந்தி அடி களுக்கும், ஆலை உரிமையாளர்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பயனாக, சுதேசி நற்சான்றுக் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார்கள். 1928 முதல் 1932 வரை நெல்லை மாவட்டப் போக்குவரத்து குழுவின் இயக்குனராகப் பணியாற்றினார்கள்.

1945-ல் நடந்த பொது தேர்தலில் நெல்லை, பாளையங்கோட்டை நகர்த் தொகு தியின் சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் அப்போது சட்டமன்ற காங்கிரஸ் குழுவின் செயலாளராகப் பணிபுரிந்தார்கள். அனைத்திந்திய துணிக் கட்டுப்பாட்டுக் குழுவில் தமிழ்நாட்டின் பிரதநிதியாகச் சட்ட மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியிருக்கிறார்கள்.

நெல்லை நகர்மன்றத் தலைவராக 1938-ல் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறை தண்டனை அடையும் வரை சீரிய முறையில் நற்பணிகள் பல ஆற்றினார்கள். இக்காலத்தில் தான் நெல்லையில் முதன் முதலில் சிமிண்டுச் சாலைகள் அமைக்கப்பட்டன.

தமிழ்ப் பணி :-

மாணவராய் இருக்கும் பொழுதே தமிழ்ப் பற்றுடையவர்கள். பல தமிழ்ப்பெரியார் களிடம் விதிப்படி பாடம் கேட்டவர்கள். மாணவப் பருவத்திலேயே சைவ, சமய நூற்கள், கைவல்லியம் நிகண்டு போன்ற நூற்களை வரைமுறையாகக் கற்றவர்கள். 1942-ல் நடந்த ''வெள்ளையனே வெளியேறு'' என்ற போராட்டத்தில் கைது செய்யப் பட்டுப் பாதுகாப்புக் கைதியாக 1945 ஏப்ரல் வரை வேலூரிலும், தஞ்சையிலும் சிறை இருந்தார்கள். சிறை வாழ்வின் போது சுமார் ஆயிரம் சிறைக் கைதிகளுக்கு ''மேயராக'' இருந்து அறிவுப் பணியும், அறப்பணியும் ஆற்றியுள்ளார்கள். சிறை நண்பர்களுக்கு சிலப்பதிகாரம், மணிமேகலை. நன்னூல், யாப்பிலக்கணம் போன்ற நூல்களைப் பாடமாக நடத்திவந்தார்கள். இரவு நேரங்களில் நடத்திய ''வானநூற்கலை'' வகுப்புகளில் ஏராளமான நண்பர்கள் கூடிப் பாடம் கேட்பர்.

கைத்தறிப் பணி :-

கடந்த ஐம்பது ஆண்டுகளாகவே கைத்தறியின் முன்னேற்றத்திற்குச் சலியாது உழைத்து வந்தார்கள். பிறநாட்டுத் துணி இறக்குமதியைத் தடுக்க வேண்டுமென 1923-ஆம் ஆண்டிலிருந்து நெசவாளர் மாநாடுகளின் மூலம் அரசினருக்கு வற்புறுத்தி வந்தார் கள். பிறநாட்டுத் துணியின் இறக்குமதி ஓரளவு குறைந்து அதே நேரத்தில் ஆலையில் மிகுதியாகத் துணி உற்பத்தி செய்வதைக் கண்டு அஞ்சி, கைத்தறித் தொழில் அழியா திருக்க வேண்டுமானால் ஆலையில் உற்பத்தியாகும் துணிகளின் அளவையும், இரகங்களையும் கட்டுப்படுத்த வேண்டுமென்று இந்திய அரசினருக்குப் பல தீர்மானங்கள் மூலம் தெரிவித் தார்கள். 2-வது உலகப்போரின் போது சப்பானியர்கள், பர்மா, மலேயா முதலிய இடங்களைக் கைப்பற்றியதால் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதியான துணிகளெல்லாம் தடைபட்டு கைத்தறித் தொழிலுக்கு ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அப்போது சென்னை கோகலே மண்டபத்தில் நிகழ்ந்த தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் மாநாட்டில் தலைமை தாங்கிப் பல அறிவுரைகள் கூறினார்கள், இன்று மத்திய அரசு கைத்தறித் தொழிலுக்குச் செய்துவரும் உதவிகளெல்லாம் அந்த அறிவுரையின் விளைவே ஆகும் பின்னர் 1949-ல் கைத்தறித் தொழில் பாதுகாப்பு மாநாட்டில் தலைமைத் தாங்கி.

காலச் சக்கரம்

ஆர். நாகரத்தினம், ஈரோடு.

பேராசிரியர் அருள் மொழியார் எனக்கு அறிமுகமானபோது நல்ல தமிழ் ஆசான் என்று மட்டும் எண்ணியிருந்தேன். காலக் கிரமத்தில் அவர் ஓர் சிறந்த ஓவியர்; பொறி இயல் வல்லுனர்; கைதேர்ந்த நாட்டு வைத்தியர்; சுருங்கச் சொன்னால் பல்கலை வல்லுனர் என்று தெரிந்துகொண்டேன். இந்த ஊரில் இருந்தபோது என் அறிவை வளர்த்தவர் அவர்தான். கடந்த 5 ஆண்டுகளாக ஜெர்மன் அரசாங்க அழைப்பின் பேரில் டூபின்கன் நகரில் (Tubingen - W. Germany) பணி புரிந்து கடந்த ஜூன் 2-ஆம் தேதி இந்தியா விற்கு வந்ததும் நேரே இங்கு வந்தார்.

அவரை வரவேற்க நான் இரயில் நிலையம் சென்றிருந்தேன்; நல்வரவு கூறி வரவேற்றேன்; பெட்டி படுக்கைகளை இரயிலிலிருந்து இறக்கி வைத்தேன் "பிறருக்கு நன்மை செய்வதானால் அவருடைய துன்பத்தைக் குறை என்ப தைக் கடைப்பிடிக்கிறாய் போலிருக்கிறது" என்றார் சிரித்துக்கொண்டே. "நீ நலம் தானே" என்றதுடன் குடும்பம் முதல் நண்பர்கள் வரை எல்லோ ரையும் கேட்டார். முடிவில் "நீ இங்கு கற்ற கல்வியால் உன் நண்பர்களை யாவது நல்லதையே சிந்திக்க, செயலாக்க வைக்க முடிந்ததா? நான் அடிக் கொருதரம் சொல்லிக்கொண்டிருப்பேனே கல்வியின் தலையான நோக்கம் சிந்திக்கத் தூண்டுவதுதான். உங்கள் அறிவால் பிறரைச் சிந்திக்கத் தூண் டுங்கள்' என்று ஞாபகம் இருக்கின்றதா?" என்றார். 'மன்னிப்பதற்கு உரியவர் ஒருவரிடம் குற்றத்தை ஒளியாது ஒப்புக்கொள்வது தான் சிறப்பு' என்ற மகாத்மாவின் சொல் என் நினைவுக்கு வந்தது.

"மன்னிக்க வேண்டும் ஐயா, 'தைரியம் என்பது சரீரத்தின் இயல்பல்ல; அது ஆத்மாவின் இயல்பு' என்று தாங்களே சொல்லியுள்ளீர்கள், நான் கோழை; உண்மைக்கும், நேர்மைக்கும் என்னால் போராட முடியவில்லை; நான் நாணல் தான்" என்றேன்.

"தம்பி நாம் எவ்வளவு நாள் வாழ்வோமென்பது முக்கியமல்ல, எங்ஙனம் வாழ்கிறோம் என்பதே முக்கியம். மீண்டும் முயற்சி செய், சரி சரி, என்று எண்ணாதே. யாலை வந்ததும் வராததுமாய்க் குறை கூறுகின்றேன்

விடுதிக்குவா" என்று புறப்பட்டார் அவருக்கு ஓய்வளிக்க வேண்டி நான் பின் தொடர வில்லை.

மாலை 4 மணி நான் அவர் தங்கியிருக்கும் விடுதிக்குச் சென்றேன். வெளி நாட்டவர் சிறப்பை மட்டும் கூறினர். கல்விக்கும், கற்றவர்களுக்கும் கடவுளுக்கு அடுத்தபடியாக மரியாதை தருவதாகக் கூறினர்.

"படிப்பு ஒருவனை நிறைவுடயவனுக்குகிறது. கேள்வி எதற்கும் சித்தமுடையவன் ஆக்குகிறது' இது ஜெர்மன் பழமொழி" என்றார். "ஜெர்மன் நாட்டுக் குளிர் நீலகிரியின் டிசம்பர் மாதக் குளிர்போல் இருக்குமா" என்றேன் நான். ஒரு கனம் தன்னையே மறந்து ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தார். "உண்மையில் மனிதன் தன் ஆசைகளையும், கனவுகளையும் மறந்தாலும் அனுபவங்களை மறப்பதில்லை, நீ நீலகிரி என்றதும் என் மனம் கால வெள்ளத்தில் பின்னோக்கிச் சென்று விட்டது. சுமார் 35 ஆண்டுகட்கு முன் நான் நீலகிரி மலையில் ஊட்டியிலிருந்து மைசூர் செல்லும் மார்க்கத்திலுள்ள கூடலூரில் காவல்துறை ஆய்வாளராக 3 ஆண்டுகள் வேலை செய்தேன் உனக்குத் தெரியுமா?" என்றார்.

"காவல்துறையை வெறுத்துப் பேசியிருக்கிறீர்களே. நீங்களா ... ...' என்றேன் நான்.

"இரவில் காணும் நட்சத்திரங்கள் சூரியன் உதயமானதும் தெரிவதில்லை. அதனால் பகலில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லிவிட முடியுமா!? அதுபோலத்தான் என் வாழ்வில் ஏற்பட்ட கசப்பான நிகழ்ச்சிகளால் அப்படிச் சொல்லியிருப்பேன். அப்போது எனக்கு 30 வயது. இளமை முறுக்கில் இந்த உலகத்தையே திருத்தி விடலம் என்றிருந்தேன். என் மனைவி மற்றும் என் ஒரே மகன் பாரியுடன் கூடலூரில் காவல்துறை இல்லத்திலேயே குடியிருந்தேன். இரக்கமற்ற ஒரு கொள்ளைக் கூட்டத்தார் தங்களைப் புரட்சியாளர்கள் என்று சொல்லிக்கொண்டு ஒரு எஸ்ட்டேட் குடும்பத்தினர் அனைவரையும் கொன்று தீர்த்துக் கொள்ளையடித்திருந்தனர். இரவு, பகல் ஓயாது ரகசியமாய்த் தகவல் சேகரித்து, ஒருநாள தக்க துணையுடன் முதுமலைக் காட்டில் போராடி மூவரை உயிருடனும் இருவரைச் சுட்டுப் பிணமாகவும் பிடித்தேன். காவல்துறையில் சிலரும் காயமுற்றனர். கொலை குற்றம் சரியாக நிருபிக்க முடியாமல் 2 ஆண்டுகள் மட்டுமே தண்டனை பெற்றனர். அவர்கள் விடுதலையானதும் என்மேல் பழி தீர்க்கத் திட்டம் தீட்டியது எனக்குத் தெரியாது. பள்ளிக்குச் சென்றிருந்த என் ஒரே மகன் பாரியைக் கடத்திச் சென்று விட்டார்கள். ஐந்து நாட்களுக்குப் பின் தேடும் முயற்சியே தோல்வி என்று எண்ணும்போது என் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் என் மகன் நலமுடன் இருப்பதாகவும், அவனை அன்று இரவு 1 மணி

சுமாருக்கு மைசூர் ரோட்டில் முதுமலைக் காடுகளையும், பண்டிப்பூர் காடுகளையும் இணைக்கும் யானைப் பள்ளம் பாலத்தின்மேல் கோடியில் விட்டு விடுவதாகவும், வந்து அழைத்துப் போகும்படியாகவும், அதை எழுதியவன் அந்த மூவரில் ஒருவன் என்றும், இரண்டாண்டு ஜெயில் வாசத்தில் ஒரு பெரியவர் போதனையால் (வார்டன்) தான் இனிமேல் குற்றமே புரிவதில்லை என்று முடிவெடுத்தவன் என்றும், தனக்குத் தெரியாமல் தன் சகாக்கள் இருவர் என் மகனைக் கடத்தி வந்து விட்டதாகவும், தவறுக்கு வருந்துவதாகவும் எழுதியிருந்தான். அத்துடன் தான் அந்த இருவருக்கும் தெரியாமல் என் மகனை என்னிடம் ஒப்படைக்க வேண்டியிருப்பதால் இரவைத் தேர்ந்தெடுத்திருப்பதாகவும் எழுதியிருந்தான். என்னையும் ஒழித்துக்கட்டத்தான் இத் திட்டம் என்று மற்றவர்கள் கருதுவார்கள் என்று யாரிடமும் இதைச் சொல்லவில்லை.

"உனது மனப்பான்மையையும், கொள்கைகளையும் உன் உள்ளத்தே வைத்துக்கொண்டு நட. அவைகளை வாய்விட்டுப் பேசாதே பேசினால் உனக்குத்தான் நஷ்டம்! என்று யாரோ சொன்னது என் நினைவுக்கு வந்தது. எனக்கு நம்பகமான இருவர் துணையுடன் மாறு வேடத்தில் துப்பாக்கிகள் சகிதம் குறிப்பிட்ட நாள் இரவு சுமார் 10 மணிக்கே அப்பாலத்தையடைந்தோம் ஜீப்பை ஒரு புதர் மறைவில் நிறுத்திவிட்டுக் குறிப்பிட்ட பாலம் நன்கு தெரியும்படி ஒரு பாறை மறைவில் மறைந்துகொண்டோம். என்னுடன் வந்த இருவருக்கும் திருடர்களைவிட யானைப் பள்ளத்திற்குத் தண்ணீர் குடிக்க இரவில் வரும் யானைகளிடம்தான் பயம் அதிகம்.

இரவு 12 மணி சுமாருக்கே குறிப்பிட்ட மலைச் சரிவில் யாரோ கஷ்டத்துடன் இறங்கி வருவது மங்கிய நிலவொளியில் நன்கு தெரிந்தது. பாலத்தில் மறு கோடியில் வந்ததும் அவன் பின்னால் வந்த பையனையும் பார்க்க முடிந்தது அவன் பாலத்தின் இக்கோடியைக் கையைக்காட்டுவதையும் பையன் சில அடிகள் முன்னேறி பாலத்தில் வருவதும் தெரிந்தது. நான் என் இடத்தை விட்டு எழுந்தேன். என் சகாக்கள் தடுத்தார்கள். 'எப்படியாவது உயிர் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற உணர்ச்சி விலங்கினத்தைச் சேர்ந்தது' எனக்கு ஆபத்து வந்தாலொழியச் சுட வேண்டாம் என்று கூறி, பாலத்தின் முகப்பையடைந்தேன். பையன் என்னைப் பார்த்திருக்க வேண்டும் என்னை நோக்கி ஓடிவர முயன்றான். அவன் பின்னே அவன் கடிதமெழுதியவனாகத்தான் இருக்க வேண்டும், அடுத்த வினாடி துப்பாக்கியில் பல முறை சுடும் ஓசை கேட்டேன் தற்காப்பிற்காகப் பாலத்தில் குப்புறப் படுத்தேன். அதே வினாடி என் உதவியாளர்களும் சப்தம் வந்த திக்கை நோக்கிச் சுட்டார்கள். சுமார் ஐந்து நிமிடங்களுக்குப் பின் ஒரே நிசப்தம், தூரத்தில் என் மகன் பாலத்தில் படுத்திருப்பது தெரிந்தது. தவழ்ந்தபடியே அவ்விடத்தை அடைந்தேன் என் இதயமே நின்றுவிட்டது என் மகன் தலையைத் துளைத்திருந்தது. ஒரு குண்டு

குப்புற வீழுந்து இறந்திருந்தான். அவனுக்குச் சிறிது தூரத்தில் அவனைக் கூட்டி வந்தவனும் இறந்துகிடந்தான்! உண்மையிலேயே அவன் மனம் திருந்தித்தான் என் மகனை விடுவித்துள்ளான். ஆனால் கல்நெஞ்சர்களான மற்ற இருவர் தொடர்ந்து வந்து சுட்டிருக்கிறார்கள். என்னையும் சுடும் முன் நான் படுத்துவிட்டேன், அத்துடன் என் உதவியாளர்கள் கூடவே தங்களைக் காத்துக்கொள்ள ஓடிவிட்டார்கள்.

அப்புறம் ... ... என்ன? என் மனைவி மகன் பிரிவு தாங்காமல் நோய் வாய்ப்பட்டாள். என்ன முயன்றும் அவளையும் காப்பாற்ற முடியவில்லை. என் வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு வடக்கே போனேன். ‘மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் நிற்பதில்லை. அதுபோல ஞானம் அறிவு தற்பெருமை கர்வம் என்ற மேடு உள்ளவர்களிடம் தங்கி நிற்பதில்லை’ என்று உணர்ந்தேன். ‘உலகையே திருத்திவிடலாம்’ என்றகர்வத்துடன் காவல்துறைக்குச் சென்ற நான் என்னையே திருத்திக்கொள்ள தமிழ் பயின்றேன். ‘உனக்குத் தெரியுமா ஒளியும் நிழலும் கலந்தால் அழகிய ஓவியம் உருவாகிறது. அதுபோலத்தான் அன்பும் பண்பும் தான் அழகிய மனிதனை உருவாக்குகின்றது என்று முடித்தார்.

தென்னிந்திய செங்குந்தர் மாநில மாநாட்டிற்கு
எனது நல்வாழ்த்துக்கள்.

கு. ப. ர. சுப்பராய முதலியார்,
சிவகிரி.

★ செங்குந்தர் ஒப்பந்தம் ★

(மோரூர் காங்கேயர் ஏடு.)

— கொடுமுடி. சண்முகப் பிரகதம் —

○○★○○

ஸ்ரீமத் நந்திகேசுபர சுவாமியார் அனுக்கிரகத்தாலே திருவாய் மொழிந்த படிக்கு அநேகம் சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவாதி தேவன் தெய்வ உத்தமன், பத்திப்பிரியன், பத்தயசாசனன் பார்வதி மணாளன், திரு பொஷ்கரணி முக்கணீசுவரன், நின்ற கோலமழகிய நிமலன், நிறமொரு பஞ்சவர்ணப் பிரகாசன், தெண்டாயுத அஸ்தன்.

செம்புத் தீவில், திராவிட தேசத்தில், தொண்டை மண்டலத்தில், காஞ்சி மாநகரில், திருக்கம்பையாற்றில் பார்வதி தேவியம்மன் அர்த்தபாகம் பெற வேண்டி, அரிய தவசு பண்ணுகையில், வாம பாகம் பெத்தருளிய அம்மன் வீரபாகுவைப் பார்த்து, நீங்கள் 6 பேரும் தேவர் செரையை மீட்டபடியினுலே எங்களுக்கு அரவகிரியைச் சூழ்ந்த எளுகரை நாட்டுக்கும் கொங்கனனென்றும் பேருமிட்டு பட்டாபிஷேகம் சூட்டுகிறேனென்று அம்மன் கட்டளையிட்ட படிக்கு,

கொங்கு மண்டலத்திலே தெட்சின கைலாசமாகிய அரவகிரியைச் சூழ்ந்த எழுகரை நாடெனும் காவேரி, வவானி, திருமணிமுத்தாநதி, அழகு முரிச்சான், தொப்பை, ஆம்பிராந்தி, நொய்யல் ஆக சத்த நதியாகிய எழுகரை நாட்டிலுள்ள சிவ சந்நிதிகளும்.

பூந்துறை நாடு, பூவாணிநாடு, வஞ்சி நாடு, செலநாடு, இராசிபுர நாடு, பருத்திப்பள்ளி நாடு, எழூர் நாடு, வாழவந்தி நாடு. அறைய நாடு மற்று முண்டான சிவசந்நிதி நாடு உறவின் முறையாரும்,

குடிபிரிதி சிட்டபரிபாலனம் பண்ணி அருளா நின்ற திருவளம் வீரலட்சுமி, விசயலட்சுமி வாசராகிய, களம் வம்முச பரிபாலராகிய ஆதி கன்னிவாடி 60 காங்கயரோடே 60 காரண காங்கயனென்று இடங்கை பட்டமுத்து நல்லய்யன் குமாரன் நல்லய்யன் மோரூரு காணி

துந்துபி வருஷம் ஆவணி மாதம் 25 தியதி திங்கட்கிழமை சப்தமி திருவோண நட்சத்திரத்தில்

60 காங்கயனுக்கு வெகுநாளாய் பிள்ளையில்லாமால் 60 கருண காங்கயனென்று வந்த நல்லய்யன் குமாரன் நல்லய்யன் 60 காங்கையனுக்குப் பிள்ளை வரம் வேண்டி நல்லபுள்ளியம்மன் சந்நிதி முன்பாக பச்சைப்பார்ப்பான் னெரிவி (நேர்வு) செய்து வைராக்கியம் செய்து தன் செரசினை இரு துண்டாக வெட்டி செயங்கொண்ட குமாரன் நல்லய்யன் பேரிலே சந்தோசமாகி பின்பு 60 காங்கேயனுக்கு என்ன வேண்டுமென்று கேட்க

தேவரீர் நமக்குக் கன்னிவாடியில் இடங்கைக்குட்பட்டது நடந்த மேரைக்கு வடக்கிலேயும் நடப்பிக்கவேணும் தேவரீர் என்று கேட்க

அப்படியே தருகிரோமென்று கையில் கீழ்கரைப் பூந்துறை நாட்டில் அரவகிரியில் 60 கரண காங்கயரும், **செங்குந்த கோத்திர** உறவின் முறை யாரும் இடங்கை முதலான உறவின் முறையாரும்,

ருத்ரோத்காரி வருஷம் புரட்டாசி மாதம் சனிக்கிழமை 15 தியதி சனிக்கிழமை மாளிகையிச்சம் உத்தர நட்சத்திரம் இந்தச் சுபதினத்தில் கூடி

முருகாவுடையா சந்நிதி இந்திர விமானத் தேர் முன்பாக இருப்பு முகிகாலி வைத்து ஆசாரஞ்செய்து *12* சுமைபோட்டு அக்கினி எரியவிட்டு 60 காரண காங்கனை அதின் மேலே இருத்தி ஆண்டவர் கிட்டங் தரித்து பட்டம் வைத்துக் குருக்கள்மார் ஆறுபேறும் கும்பாபிஷேகம் பண்ணி அட்சதை தாம்பூலம் குடுத்து

இனிமேல் செங்குந்த கோத்திரத்திற்கு நடக்கவேண்டிய சாதிஞாயம் அர்த்தபாகம் முன்பாக கட்டளையிட்டோம். சொன்ன விபரமாவது விசாரிக்கும் போது அடிகரைப் பணம் 6 வைத்து மேல் ஞாயம் பேசவும். செங்குந்தர் குத்தத்துக்கு அவுதாரம் பணம் 12 வாங்கக் கட்டளையிட்டார்.

காராளர் காணிக்கை ஏருக்கு கால் பொன்னும் செங்குந்த சாதிகள் மக்கத்துக்கு வராகன் கால். தேவடியாளுக்கு மூக்குத்திக்குப் பணம் 3.
கண்ணாளர் அரசுக்குச் சாதிக்கு தலைக்கட்டுக்கு பணம் 1.
வன்னிய குலத்தார் மோழிக்குப் பணம் 1.

சிவப்பிராமணர் அரிசிப் படிச் செலவு விசாரிக்கும் விவரம் நகரத்துச் செட்டிக்குக் குடிப்பணம் 1 பகடை பட்டரைக்குக் கணம் 2

இந்தப் பிரகாரம் கட்டளையிட்டு எழுகரை நாடும் கூடி செப்பேடு சாசனப்பட்டயம் எழுதிக் கொடுத்த பிரகாரம் சகலமான பேரும் தெரியப் பல்லக்கு மேலே வைத்து குதிரை. தீவட்டி, சூரியபானு, பதினெட்டு விருது கொடுத்து வீதி மெரவனை பண்ணி வைத்து, மேள வாத்தியத்துடனே மண்டபத்திலே வச்சு, இந்த அர்த்த பாகம் அறிய ஆறும் பன்னிரண்டும்உன்னு தென்று அனைவரும் திருவாக்குக் கொடுத்து அடி பணிந்தார்கள்.

அர்த்த பாகம், சந்திர, சூரியர், நல்லபுள்ளியம்மன் பாதம் அறிய இதுக்கு ஆரொருவன் அனாத்தியம் பண்ணினவர்கள் வம்சமும் அழிந்து அழிஞ்சு போயும், கெங்கைக்கரையில் காராம் பசுவைக் கொன்ன தோஷத்தில் போவானாக. மாதா பிதாவைக் கொன்ன தோஷத்தில் போவானாக. குருவுக்கு ரண்டகம் பண்ணின தோஷத்தில் போகக் கடவீராக. அரி பூசை. சிவபூசை, குருபூசை, மகேசுவர பூசை தடுத்தவர்கள் போற நகரத்தில் போகக் கடவீராக. ஸ்ரீவதை, சிசுவதை பண்ணின தோஷத்தில் போகக் கடவீராக. இனிமேல் வரப்பட்ட காலாகாலங்களுக்கும் யுகங்களுக்கும் இந்த பட்டத்துக்கு ரண்டகம் பண்ணப்பட்டவர்கள் வம்சமும் போகக்கடவாது.

சிவமயம் அர்த்தபாகம் துணை.

நல்லபுள்ளியம்மன் துணை.

சுப்ரமணியர் துணை.

காமாட்சியம்மன் துணை. காரிவிநாயகர் துணையிருந்து ரட்சிப்பார்.

அனைவர் சொல்படிக்கு எழுதிய எடப்பாடி ராமசாமிப் பத்தன் செய்தது பட்டயம் முற்றிற்று.

இந்தப் பட்டயத்தின் ஒரு பகுதி "தோனோலை" காலாண்டிதல் (வேலூர் ரோடு திருச்செங்கோடு-637211) 1976 சனவரி தேதி வெளியான ஏழாம் இதழில் வெளியாயிற்று. பின்பகுதி அப்போது கிடைக்கவில்லை. நகல் உதவியவர் மல்லசமுத்திரம், ஊமையாம்பட்டி, கவிஞர் ந. கந்தசாமி அவர்கள் இப்போது முழுமையாகக் கிடைத்து வெளியிடப்பட்டுள்ளது

மோரூர் காங்கேயர் வமிசத்தில் நல்லய்யன் என்பவருக்குப் பிள்ளை யில்லாமல் போகவே, பிள்ளை வரம் வேண்டி செங்குந்தர் வமிசத்து இளைஞர் தமது தலையைத் தானே அரிந்து யாகசாலையில் போட்டு, வேண்டுதல் செய்து கொள்கின்றான். ஓராண்டில் வம்ச விருத்தி தெரிகின்றது. அதனால் மகிழ்ந்த காங்கேயன், தலையைத் தந்தான் வழித்தோன்றலுக்கு, முன்னம் கன்னிவாடியில் நடந்தபடி ஊராரிடம் இவ்வளவென்று வரிவிதிக்கின்றான். அதன் விவரமே இந்த ஒப்பந்தம் ஆகும்.

தமிழ்நாட்டில் இடைக்காலத்தில் நரபலி இருந்த விபரம் சோழன் பூர்வ பட்டயத்தால் அறியலாம். 17ம் நூற்றாண்டிலும் இருந்ததாக இப்பட்டயத்தால் அறிகிறோம். முந்தைய நரபலிகளிலும், செங்குந்தரே தம் தலையைத் தானே ஈந்துள்ளதாகத் தெரிகிறது.

செங்குந்தர் புகழ் கூறும் ஒரு செப்பேடு!

★ ★ ★

இச்செப்பேட்டுப் பட்டயம் சேலம் மாவட்டம் இராசிபுரத்தையடுத்த அலைவாய் மலைச்சாரலிலுள்ள குகையீசர் மடத்தில் உள்ளது. இது 400 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இதில் செங்குந்தர்களின் வீரம், ஈகை, பக்தி, நேர்மை, அவர்களின் தியாகம், அவர்கள் சோழ மன்னர்க்குப் படை வீரராயிருந்தமை, வல்லானை வென்றது, அவர்கள் பெண்மைக்கு (வல்லான் மனைவிக்கு) இரங்கிய பேராண்மை முதலிய அனேக சிறப்புமிக்க குணங்கள் கூறப்பட்டுள்ளன.

ஹரி ஓம் நன்ருக குரு வாழ்க
குருவே துணை.

அலகாமலை குகையீசுவர சுவாமியார் கீழ்கரை ஏழு நாட்டுப்பட்டயம் – மேல்கரை 14–நாட்டுப் பட்டயம்.

ஸ்ரீ மண்மகா மண்டலே சுபரன் அரியதள விபாடனபாடன், செங்குந்த பூவருய கண்டன் மூவருய கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான், பூர்வ தட்சிண பச்சிம உத்திர சத்தசமுத்திராதிபதி, பாண்டிய மண்டலத்தாபஞசாரியன், எம்மண்டலமும் திறை கொண்டருளிய ராசாதிராசன், ராஜபரமேசுபரன், ராஜமார்த்தாண்டன், ராஜகெம்பீரன், ராஜப்பிரதாபன், ராஜாக்கள்தம்பிரான், ரணமுக வீரபத்ரன், அதரசூர வீர விக்கிரமாதித்தியன், கட்டாரிச்சாளுவன், நவகண்ட சக்ரவரத்தி, மலை கலங்கினும் மனங்கலங்காதவன் ஒரு குடைக்கீழ் உலகமுழு தாண்டவன் ராஜ கோலாகலன், ராஜ கோளரி. ராஜ சங்காரன், ராஜ புங்கவன், திருநய் பிறதிஷ்டாசாரியன், துட்டநிக்கிரக சிஷ்டபரிபாலன், அசுவபதி, கெஜபதி, நரபதி நவகோடி நாராயணன், கண்டர்கண்டன், மிண்டரில் மிண்டன், லண்டர் கொருகண்டன், வண்டராவுத்தன், உத்தண்ட கோதண்டராமன், உத்தண்ட மண்டலீகர் கண்டன், உபயகுல சுத்தாங்கதீரன், மன்னிய மார்த்தாண்டன், மதியாத மண்ணியபெருமாள் மதியாத மன்னிய மணிமகுட மாலையிட்ட வீரவல்லபப்பிரதாபன், வீரகண்ட பிரதாபன், தொண்டமண்டலத்துசண்டபிரதாபன், சோழ மண்டல திறைகொண்ட திண்புயாசலன், துலுக்கர்தள விபாடன், துலுக்கர் மோகந்த விழ்த்தான், ஒட்டியாதள விபாடன், ஒட்டியர் மோகந்தவிழ்த்தான், அண்டினவர்தஞ்ச மிண்டினவர் கோளரி கலியுகராமன், வரதுங்கபிரதாபன், தங்கப் பொன்மார்பன், மணிமகுட முடி சூடும் மனேபயங்கரன், ஈழமும்இலங்கையும் திறைகொண்டருளிய ராஜாதிராஜன், யாழ்ப்பானப் பட்டணமும் வங்காளதேசமும் கொண்டருளிய தொண்மண்டலம், சோழ மண்டலம் பாண்டிய மண்டலம், கொங்கு மண்டலப் பிறதிஸ்டாச்சாரியாரின், அஷ்டலட்சுமி பொருந்திய

மார்பன், கேள்பமண்ணியர் கண்டன் துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபால அஸ்டபோக புரந்தரன். அதுஷ்ட கோஷடந்த விழ்த்தான், பதினெட்டுக் கோட்டத்து மன்னியண்டன் நவரத்தின மாலிகாபாத்ரன், சங்கீத சாயூச்சிய வித்யாவினோதன், கொடிமன்னிய சாதாரணன், பூலோக தேவேந்திரன், ரணமுக சுத்தவீரன், சொல்வித்த பூவராயன் புண்டரீக புருஸோகினி சகல சாம்பிராணி, லட்சுமி வாசனு பூலோக நாயகன், பூமண்டலாதி சூரசண்டப் பிரசண்டன், சத்துருக்கள் மணவாளன், சமய கெம்பீரன், சமயநாராயணன், சமய ரோக காண்டன், அஷ்டஐஸ்வரிய சம்பன்னன்.

சத்தசாகரமும் ஒருகுடைக்கீழ் ஆண்டு கொண்டருளிய ஸ்ரீ கட்டாரிச்சாளுவன், ஸ்ரீ விருபாட்சி தேவ மகாராயன், வீரவசந்தராயர், போஜ ராயர், வீரநரசிங்கமகா ராயர், தன்மராயர், பூபதிராயர், கம்பராயர், அசளங்கதேவவமகாராயர், தெய்வ ராயர், கெசபதிராயர், சுசரிராயர், கதபராயர், பிரபுடதேவமகாராயர், சம்பட்டி ராயர், சூடும் புலித்தேவராயர், ஈசுரப்பராயர், கம்பராயார், உச்சமல்லிகதேவமகாரா யர், விசயராயர், தேவராயர், பவளேந்திர தேவராயர், ஈசுவரப்பனுயக்கம்பராயர், கிருஷ்ணதேவமகாராயர், அச்சுததேவமகாரயர்,சதாசிவராயர், புஜபலதேவமகாராயர், ஸ்ரீ ரங்கராயன்மல்லிகார்ச்சுனராயர், ஸ்ரீ வரஹரிநாராயணன், மல்லி கார்ச்சுனராயர், கிருஷ்ணராயர், ராமராயர், வெங்கடபதிராயர். அறிவுக்கு அகத்திசன்போலவும் அழகுக்கு அனங்கனைப்போலவும், வில்லுக்கு விசயனைப்போலம். மல்லுக்குப் பீமனைப் போலவும், வாளுக்கு அபிமனைப்போலவும், பொறைக்குத் தருமனைப் போலவும், கொடைக்குக் கர்ணனைப்போலவும் நீதிக்குச் சோழனைப் போலவும் புலியும் புல்வாயும் ஒரு துறையிலே நீர்குடித்து வாழவும், எலியும் பூனையும் கூடி வாழவும், கருடனும் பாம்பும் கூடி வாழவும், இந்தப்படி நீதிநெறியாக ஒருகுடைக்கீழ் ராஜ்ய பரிபாலனம் செய்து அருளா நின்ற **கலியுகசகாப்தம் 4624மேல் சொல்லா நின்ற ஆனந்த வருஷம் வைகாசி மாதம் 5-ந் தேதி** பூமடந்தை பணி கேட்ப, ஒரு மகுடந்தனிக்குடைக்கீழ் உலகனைத்தும் காத்து கற்பகத்தையும், சுரபியையும் கார்முகிலையும் காத்தளித்து நீதியின்கண் நிலைநிறுத்தி நியாயத் தன்மம் நெறிபடுத்தி செங்கோலால் வருகலியை மேவித்து, செழுமணி முடிசூடி, செங்கோல் வேந்தன் செய்வகையறிந்து, சிம்புள்தேவனே தெய்வமாகவும், அறம் வளரப் பிணி தணியாத் திசாதிசையனைத்தும், செவிடுபடாமல் மேகத்தைத் திறை கொண்டு பூதத்தைப் பணி புரந்த ராஜன் வீற்றிருப்ப, கொம்பும் சங்கும் காளமும் குலதனமாகவும், மாற்றலரை, அரநழித்து. வந்தடைந்தார்க்கும் இனிதளித்து ஏற்றவர்க்கு மிருநிதியும் எண்டிசையும் எழில் பரப்பி, வையத்துப் புகழ் நடத்தி மனம் பெரிதாய் அறம் வளர்ப்போர், ஆண்மை யும், நல்லொழுக்கமும், தாண்டாமையும் மிகபெருகிச் சர்வ சம்பத்து முடையவர்களாய்

நாலு வர்ணசிரமங்களும் வழுவாமல் நடத்தப்பட்ட சோழ சக்ரவர்த்திப் பெருமான், வல்லானைக் கொன்று படைவீடு கொண்டு தருபவருண்டோ வென்று கேட்டளவில் வள்ளான் மாளிகையிலே சென்று புகுந்து, வகைதோறும் பத்துப்பேரைப் பலியிட்டுப் பிறஷ்தபதி தொடுந்தூளிங்கும் வல்லானைக் கொல்லச் சூரியை வாங்கும் அளவில் வல்லான் தேவிக்காக வல்லானைக் கொல்லாது விட்ட சிவன் மைந்தர் திருமேனிக் காவல் காவலர் காமாட்சி வரபுத்திரர் கந்தன் சகோதரர் வீரநாராயணர் வீர சாகச் வல்வானை வெற்ற பஞ்சவர்ண தீட்சிதராகிய அபிமான பூஷணர்கள், மோவாய் சோம்பாதார் தன்பல மீட்டவர் நிறைவருது வாணுழ் சொடுத்தார் எழுந்தார் கேளாய்ப் பிறந்தார் சோழன் அங்கம் காக்க நில்லா உயிர் கொடுத்து நீற்கும் புகழ் கொண்டோர் சென்னமான மொத்தக் கைக்கோளர் நம் பெருமாள் திருமக்கள்

சோழனுக்கு வச்சிரம் அளித்தோர் சொன்ன தாயம் தப்பாதோர் துஷ்டகண்டர் துஷ்டராதித்த துஷ்டபயங்கரர் துஷ்ட நிட்டூரர் கொடுமையிலங்கேசர் மீசை பறித்து விடுமயிர் கட்டினோர் அம்மயிர் செங்குத்தர்க் கடயாளம் புனைந்தோர்கள் மிண்டர் சகளங்க வல்லோர்சாகச் சறுக்காதார் சாகச் சோம்பாத சாகைக்காலமதன் தம்பலத்தின்ன தலையரிந்தோர். அடநடத்தோர் தாய்ப்பசுவை வாளுருவி விட்டோர் பலவாயுதத்தில் வல்லோர் போரில் வீரர் போற்கொண்ட கொண்டோர் போர்க்களத் தானைகள்பொன்னுபரணம் பூணுமல் புகழாபரணம் பூண்டோர்கள் பூதலங்கள் ஏழும் புகழ் படைத்து வாழ்வோர்கள்.

மனமொத்த கைக்கோளர் மலைகலங்கினும் மனங்கலங்காதோர், மணவாள மான தீரர் வீரர் அனகன் அங்காரபேர் வல்லான் அபயகரத்தோர் வாசியும் மானமும் வண் மையும் வமிவாதோர் வாவேனைக்காரர் வாடாத மாலையுடையோர் வாழ்வு கண்டு தாழ்வுசெய்யாதார், வல்லான் தேவிக்கு மாங்கலியம் கொடுத்தோர் முனையில் சறுக்கா தார் முன்னே செங்குந்தம் உடையோர் வல்லாரில் வல்லோர் மதியாதார் மணவாளன் யிரட்டைச் சங்கும் நாதமுடையோர் பூதலம் புகழும் கொம்பும் காளமும் கொடிமுர சுடையோர் பணபடையும் தலைப்பிறையுமுடையோர் பூதலம் புகழும் புலிக்கொடியுமுடையோர் காளியைக் கைப்பிடித்துக் காலனுக்கு ஓலைவிட்டோர் கொடுக்கமுசியாதோர் கொடுத்து வழிகாட்டினோர் தோல்லுங்கையும் வெல்லுந்தோளும் உடையவர் கங்கை மண்டலம் குறும்பு அறுத்து கலிங்க மண்டலம் கட்டு அறுத்தோர் கடகமும் கல்யாணமும் கொண்டோர் விருதுவிளக்காதோர் வென்றன்றி மீளாதோர் சென்றசிகை வென்றோர் சிவனடியை மறவாதோர் ஸ்ரீபாதசேகரர் செந்தமிழோர்க் குயிரளித்தோர் சோழரை வென்றவர்கள் சிலம்புடையதில் வீரர் திக்கெட்டும் புகழுடைய கைக்கோள்காரர் கணமுகமுடையோர் கற்பகத்தின் அருளாமும் கைலாசர் அளுளாலும் ஓரடியால் மண்ணலந்த உலகர் அருளாலும் இருநாழிநெற்கொண்டு ஏழுலகும் இனித ளிக்கும் பரமேஸ்வரி தன்னுடைய பாத பங்கைய அருளாலும் எத்திசையும் வெல்ல வல்லோர். இடங்கைக்கு தலையானோர். அமணகந்தெரிந்தோர் அறிவுடைகைக் கோளரும் அமரசேனுதிபதிகளும் தெற்கு வடக்கு கிழக்கு மேற்கு உள்பட்ட செங்குந்த முதலிகளும் அருளாள் ஆதி நந்தீஸ்வரன் அனுக்கிரகித்து திருவாய் மலர்ந்து அருளினபடி கிரேதாதி திரேத துவாபர கலியுகம் கிரேதாயுகத்துக்கு பிரம்மா அர்ச்சிக்கையில் பிரம்ம கிரியும் பிரம்மேசுரமானதும் திரெதாயுகத்துக்கு விஷ்ணு அர்ச்சிக்கையில் விஷ்ணுகிரியும் விஷ்ணுஈஸ்வரமானதும் துவாபர யுகத்துக்கு துர்க்கையரிக்சிக் கையில் துர்க்கை கிரியும் துர்கேஸ்வரமானதும், கலியுகத்துக்கு நாகம் அர்ச்சிக்கையில் நாககிரியும் நாகேஸ்வர மானதும் இப்படி அநேகங்கோடி சதுர்யுகம் பூசை கொண்டருளிய தேவதேவன் தெய்வச் சிகாமணி முத்திக்மு வித்து முக்கண்ணீசுவரன் பத்திப்பிரியன் பார்வதிவல்லவன் பத்த வச்சலன் நின்றகோல மழகிய நிமலன் நேரம் ஒரு பஞ்சவர்ண பிரகாசன்,

திருமுருகவோவன் தெண்டாயுத அஸ்தன் செம்புத்தீவில் தொண்டை மண்ட லத்தில் காஞ்சி மாநகரில் திருக்கம்பையாற்றில் ஓறன்டா மாவடியில் பார்வதிதேவி அர்த்தபாகம் பெறவேண்டி அரிய தவசு பண்ணுகையில் அப்போது காட்சி கொடுத்து ஐந்து தலமுள்ள பொருள்தனையும் கொண்டுவரும் பொன்னிப்புனலாறு புடைசூழ்ந்த கொங்குதன்னில் தெட்சிண கைலாசமென்கின்ற ஸ்ரீ நாககிரி பர்வதத்தில் அர்த்தபாகம் கொடுத்தருளிய அர்த்தநாரீஸ்வரருடைய தம்பிரான் அவருடைய ஸ்ரீ மத் குமாரராகிய கொடுத்தருளிய அர்த்தநாரீஸ்வரருடைய தம்பிரான் அவருடைய ஸ்ரீ மத் குமாரராகிய விப்பிரப்பிரியன் விசுவமூர்த்திசுவரபாலன், சரவணபாலன், சண்முகப்பிரதாபன், கெவுரி திருமகன் கெணபதி சகோதரன் பக்கரைப் பகட்டாகப் பட்டி படைக்குள் நீடு கொக்க ரித்து தார்பரித்தகுக் குடக்கொடிக்குகன்.

சக்கிரவட்டமெட்டிடாபிதா விசிர காலடிக்கும் துர்க்கைப் பிரதாபன் துரங்கன், சிஷ்டிக்கும் பிரமன் சிரசு திண்டாட குட்டிக் குடுமியை நெட்டவாங்கும் குமரா கெம்பீ ரவன் சுட்ட சமணரை வெட்டிக் கழுமிசை வைத்தப் பிரமண்ணியப் பிள்ளையார் பழனி வேலாயுத சுவாமியார் சொல்படிக்கு கந்தன் சகோதரர் ஆகிய வீரபாகுதேவர் மாபு டைய செங்குந்த முதலிமார்கள்.

கீழ்கரை ஏழுகரை நாட்டில் பூந்துரைநாடு பூவாணி நாடு, வனவாசிநாடு, சேலநாடு, ராசிபுரநாடு, பருத்திப்பள்ளிநாடு, எழுருநாடு, வாழவந்திநாடு, அரையநாடு ஆக கீழ் கரைநாடு எழுநாடும் மேல்கரை நாட்டில் கொங்கு தாராபுரம் தென்கரைநாடு, காங்கய நாடு, தட்டய நாடு, வெங்கல நாடு, கிழங்குநாடு, மழவநாடு, தலையநாடு, இடப்பூச்ச நாடு, பூந்நுறைநாடு, வடகரைநாடு, காஞ்சிக்கோயில்நாடு, ஒடுவங்கநாடு, வண்டிசூழ் நாடு, லயாரிநாடு, பேரூர்நாடு, செம்பியநல்லூர்நாடு, சோழபுரிநாடு, குருப்புநாடு, பொன்குலுக்கிநாடு, வாரக்கநாடு, ஆனைமலைநாடு, வைய்யாவூர்நாடு, அண்டநாடு, (இந்த) கொங்கு இருபத்து நாலு நாட்டுச் சமைய முதலிமாரும் மதுரைச் சமைய முதலி மாரும் ஆனந்த ஞு வைகாசி மீ 5.ந் தேதி **கும்பினிச் சன்னடையாய்க்** காஞ்சிபுரத் துக்குப் போகையில் சேலநாட்டுத் தெட்சிண மேருவென்னும் அலையாகிரி பருவத்தில் கபாட நிஷ்டை சிவயோகமாகிய குகையீஸ்வர சுவரமியாரவர்களிடத்தில் அனுக்கிரகம் பெற்றுப்போனபடியால் வியாச்சியம் செயிச்சு வந்ததின் பேரில் அர்த்தநாரீசுர சுவாமி யார் சொற்படிக்கு எழுகரை நாட்டுப் பட்டக்கார நல்லியண்ணமுதலியாரும், இருபத்து நாலு நாட்டு பட்டக்காரனுகிய கொங்கில் அன்னியூர் குள்ளபட்டக்காரனும் ஏழுகரை நாட்டுச் சமயமுதலிமார்களும் இருபத்நு நாட்டுக் சமயமுதலிமார்களும் மதுரை அண்ணுமலை முதலியாரும் கூத்தாடி ஆணுய்ப்பிறந்தானும் இவர்கள் எல்லோரும் கூடி அலையாகிரி குகையீஸ்வர சுவாமியார் அவர்களுக்கு மக்கத்துக்குக் கால்பணமும் மணவாளப்பிள்ளையார்க்குக் கால் ரூபாயும் கைக்குளதா சிக்கு ரூபாய் அரைக்காலும் வன்னிய குளகோத்திரத்தாருக்கும் தலைக்கட்டுக்கு ரூகவாயிந்தப்படிக்கு கெந்தக சுத்தி வனபோஜனம் மயேசுர பூஜை தூப தீப நைவேத்தியம் நடந்து வரத்தக்காத குகையீசுவரசுவாமியார் மடத்தில் இந்தத் தன்மம் வழுவாமல் நடக்கவேண்டிக் குடுத்ததற்குக் குகை எழுத்துக் கொடுத்து எழுகரை நாட்டுப் பட்டக்கார நல்லியண முதலியாரும் எழுகரை நாட்டு சமய முதலியாரும் இருபத்து நாலு நாட்டுச் சமய முதலிமார்களும் தென்கரை நாட்டு வேலப்ப முதலியார் காங்கய நாட்டுச் சுப்பிரமணிய முதலியார் ஒகுவங்க நாட்டுக் குமாரசாமி டுதலியார் அருணு நாட்டு பட்டக்கார முதலியார் அவிஞசிலிங்கம் முதலியார் தென்கரைக்கறைப் பட்டியப்ப முதலியாரும் குருப்பு நாட்டு குமாரசுவாமி முதலியாரும் மற்று முண்டான நாட்டு முதலியாரும் மக்கத்துக்குக் கால்பணமும் **மணவாழப் பிள்ளையார்க்குக் கால் ரூபாயும்** கைக்குள தாசிக்கு ரூபாய் அரைக்காலும் வன்னிய குலத்தாருக்கு ஒண்ணே காலும் இந்தப் படிக்கு மேல் கரை இருபத்து நாலு நாடும் கீழ்கரை எழுகரை நாடும் இந்த வர்த்தனை நடக்கத்தக்கதாக.

அலையாகிரி குகையீஸ்வரசுவாமியாரவர்களுக்கு கையெழுத்துக் குடுத்தது இந்த வர்த்தனைக்கு வந்த தவசிப் பிள்ளைகளுக்கு சோடச உபசாரமாய் அமுதுங் கொடுத்துதாமசமில்லாமல் இந்த வர்த்தனை குடுத்தபேர்கள் காசியிலேயிருந்து கெங்கா பவானி தீர்த்தம் கொண்டு போய் ரமேஸ்வரத்து ராமலிங்கத்துக்குப் பூசை பண்ணுகிற பலன் பெறுவார்கள். பொன்னம்பலத்துக் கனகசபையைச் சேவித்த பலன் பெறுவார்கள் திருவாரூர் தியாகருக்கு பங்குனி உத்திரத்தில் காசி தீர்த்த அபிஷேகம் செய்த பலன் பெறுவார்கள். பொன்னசங்கத்தில் மார்கழி மீ சொர்க்க

வாசல் யேகாதெசி அனுஷ்டித்த பலன் பெறுவார்கள் கொங்கேழு திருப்படை வாசல் சேவித்த பலன் பெறுவார்கள். இந்தத் தர்மம் நடத்தி வரக்கடவேணுகவும் இந்தந் தர்மத்துக்கு யாதமொருவர் இடையூறு பண்ணின பேர்கள் காசி கெங்கைக் கரையில் காராம்பசுவைவர் கொன்றதோஷத்திலே போகக்கடவதும் ராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் போகிற பூரண கெர்ப்ப ஸ்திரியைக் கொன்ற தோஷத்திலே போகக் கடவதும் மாதா பிதா குரு தெய்வம் மனையாள் இவர்களுக்கு வஞ்சனை பண்ணின தோஷத்திலே போகக்கடவது யிந்தத் தர்மம் வழுவாமல் நடத்தின பேர்கள் தர்மதாராய் இகத்திலே அஷ்ட்டயீசுரிய சம்பன்னராய் சிவசாயுச்சியமைடைவார்கள் இந்த வரிசை காவேரி சந்திரா தித்தர் உள்ளளவும் நடத்தி வரக்கடவோமாகவும் தங்களை அக்த்த நரரீசுர தம்பிராணரும் பழனி வேலாயுத சுவாமியாரும் லட்சிக்கவும் குகையீஸ்வர சுவாமியார் ரட்சிக்கவும் திருச்சிற்றம்பலம் வேலுமயிலுமுன்னடக்க குமாரசுவாமியார் ரட்சிக்கவும்வ.

★★★

உங்களுக்குத் தெரியுமா?

உடுமலை மலையப் பண்டிதர் பாடிய செங்குந்தர் குல விளக்கத் திரட்டும், செங்குந்த மன்னர் குல தீபிகையும், ஈரோட்டில் அச்சிடப் பெற்றன.

எங்கே? எப்பொழுது?

1909 ஆம் ஆண்டு ஈரோடு சென்ட்ரல் பிரசிலும், 1905 ஆம் ஆண்டு ஈரோடு நித்திய கல்யாணசுந்தரம் பிரசிலும்தான்.

—தகவல்: **புலவர் சண்முகானந்தம்.**

கோவை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கத்திற்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்

திருமணங்களுக்கும், விசேஷங்களுக்கும் வேண்டிய எல்லா விதமான ஜவுளி ரகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

மாரியப்பா ஸ்டோர்ஸ்,

மொத்தம் & சில்லரை வியாபாரம்.

11, கள்ளத் தெரு,

திருச்சிராப்பள்ளி-620008.

Phone: 24075 தபால் பெட்டி நெ. 405

கைத்தறித் துணி உற்பத்தி செய்வோர் உறையுமிடம்



ஜெகநாதபுரம் குடியிருப்பு, ஈரோடு.

நாச்சிமுத்து நகர், சென்னிமலை.

கைத்தறித் துணி விற்பனை செய்யும் வணிகக் கூடம்

‘ ஈரோடெக்ஸ் ’,
ஈரோடு.

‘ சென்டெக்ஸ் ’, சென்னிமலை.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

ம. அ. முருகேசன் B. A., B. L.,
நீதித்துறை அலுவலர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

"கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்" என்பதும் "கலம்பகத்துக்கு இரட்டையர்கள்" என்பதும் ஒரு பழந் தமிழ்ப் பாடலில் உள்ள தொடர்கள். இந்த மூவரையும் தந்தது பழந் தமிழ்க் குடிகளில் ஒன்ருகிய செங்குந்தர் குலம். இந்த பரம்பரையின் நேற்றைய தோன்றலே புதுவைக் கவி கனக சுப்புரத்தினம் என்கிற பாரதி தாசன். தமிழ் இலக்கிய உலகத்திலே "தெய்வப் புலவர்" என்ற பட்டம் திருவள்ளுவருக்கும், சேக்கிழார் பெருமானுக்கும் உண்டு. "கவிச்சக்ரவர்த்தி" என்ற பட்டம் கம்பநாட்டாழ்வாருக்கும், ஜெயங்கொண்டாருக்கும், ஒட்டக்கூத்தருக்கும் உண்டு. இம் மூவரில் ஒட்டக்கூத்தரே காலத்தாற் பிற்பட்டவர். இவர் கம்பநாட்டாழ்வாருக்கும் புகழேந்திப் புலவருக்கும் சம காலத்தவர் என்றும், பொருமைக் குணம் மிக்கவர் என்றும் புகழேந்திக்கும் இவருக்கும் பெரும் பூசல் என்றும் ஒரு கதை வழங்கி வருகிறது. ஆனல், தமிழ் இலக்கிய வரலாற்றை நன்ருக ஆராய்ந்த, பேரறிஞர் மு. அருணுசலம் அவர்கள் இந்த கூற்றுக்கு உண்மை சிறிதும் இல்லை என்றும், புகழேந்திக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் ஒட்க்கூத்தர் வாழ்ந்தார் என்றும் அறுதியிட்டு கூறுகிருர். அத்துடனமையாமல், கூத்தர் கல்வியாளரைப் பெரிதும் போற்றும் இயல்பு உடையவர் என்றும் ஜெயங்கொண்டாருடைய கலிங்கத்துப் பரணியை மனமாரப் புகழ்ந்து பாடியிருக்கிருர். விரிந்த மனப்பாங்கு உள்ளவர் என்றும் இந்தப் பேரறிஞர் கூறுகிருர்.

எந்த மொழியிலும் இல்லாத இறவாத புகழுடைய நூல்கள் நம் தமிழ் மொழியில் இருந்தாலும் அவற்றைப் பாடிய கவிஞர் பெருமக்களின் உண்மை வரலாறுகள் நமக்கு கிட்டவில்லை. கர்ண பரம்பரையாக வந்த செய்திகளையும் இங்குமங்குமாக கிடைக்கும் சில கூற்றுக்களையும் தவிர கவிஞர்களின் முழு வரலாறுகள் தமிழகத்தில் அரிதாகவே இருக்கின்றன. வள்ளுவர் முதல் இரட்டையர்கள் வரை எல்லோருடைய வரலாறுகளும் இப்படித்தான் கணிக்கப்பட்டிருக்கின்றன. அந்த முறையில், ஒட்டக்கூத்தரின் உண்மை வரலாறு கிடைக்காத காரணத்தால் ஏதோ அவர் பொருமைக் குணம் உடையவர்

தொள்ளாயிரம்'', ''குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ்'', ''தக்கயாகப் பரணி'', ''ஈட்டி எழுபது'', ''உத்தரகாண்டம்'' இன்னும் சில தனிப் பாடல்கள் ஆகியவற்றை இப்புலவர் இயற்றி இருக்கிறார். இது தவிர, விக்கிரம சோழன் தென் கலிங்க மன்னனாகிய வீமனை வென்றதைப் புகழ்ந்து கலிங்கத்து பரணி யொன்று இவர் இயற்றி இருப்பதாகவும் தெரிகிறது. ஆனால், அந்நூல் இன்று கிடைக்கவில்லை. ஒட்டக்கூத்தர் ''ஈட்டி எழுபது'' பாடியது பற்றி ஒரு வரலாறு உண்டு. இவர் தம் குலத்தினராகிய செங்குந்தர்கள் தம் குலத்தைப் புகழ்ந்து ஒரு நூல் இயற்ற வேண்டுமென்று இவரைக் கேட்டபொழுது, இவர் முதலில் மறுத்துவிட்டதாகவும், பின்பு அவர்களுடைய அடையாளமாகிய ஈட்டியை வைத்து ''ஈட்டி எழுபது'' என்ற நூலைப் பாடினார் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் பேரறிஞர் மு. அருணாசலம் அவர்கள் ''ஈட்டி எழுபது'' ஒட்டக்கூத்தர் செய்தது அல்ல என்று கூறுகிறார்,

மூவர் உலா:

ஒட்டக்கூத்தர் இயற்றிய நூல்களில் இன்று நமக்கு முழுவதும் கிடைத்து உள்ளவை மூவருலாவும், தக்கயாகப் பரணியுமே. உலா என்பது தமிழ் மொழிக்கு உரிய பலவகைப் பிரபந்தங்களில் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலா வரும் பொழுது விதியில் உள்ள பேதை முதல் பேரிளம் பெண் ஈருக வெவ்வேறு பருவத்திலுள்ள பொதுமகளிர் அவனைக் கண்டு காமுற்றதாகப் பாடுவது. பெருங்காப்பியங்களில் பாட்டுடைத் தலைவன் உலா வருவதாகச் சுருக்கமாக அமைக்கப்படும் செய்தியையே பொருளாகக் கொண்டு விரிவு பெற அமைப்பது உலா ஆகும், தத்தம் புலமைத் திறத்துக்கு ஏற்றபடி கதையை விரித்துத் தாம் வழிபடும் தெய்வங்கள் மீதும், தம்மை ஆதரித்த வள்ளல்கள் மீதும், தங்கள் ஆசிரியர்கள்மீதும் பல புலவர்கள் உலாக்களைப் பாடி இருக்சின்றனர். இவ்வகையில், சேரமான் பெருமான் நாயனார் எழுதிய ''திருக்கைலாய ஞான உலா'' தான் முதலில் எழுந்த ஆதி உலா ஆகும். இதைத் தொடர்ந்து பல உலாக்கள் எழுந்தன. கூத்தரும் தம்மை ஆதரித்த சோழ மன்னர்கள் மூவர் மீதும் ''விக்கிரம சோழன் உலா'' ''குலோத்துங்க சோழன் உலா'' ''இராசராஜன் உலா'' என்ற மூவர் உலாவை இயற்றினார், உலா பாடுவதில் வல்லவராக இருந்த காரணத்தால் ''கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்'' என்று இவர் சிறப்பிக்கப்பட்டார்.

தக்கயாகப்பரணி:

பரணி என்பது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. பாட்டுடைத் தலைவன் வெற்றியைப் பாடுவது. கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, கள வேள்வி, களம் காட்டல் முதலிய பதினெரு பகுதிகளை உடையது. பாட்டுடைத் தலைவன் நிகழ்த்திய போரில் விழுந்த பிணங்களை நிறைய உண்டு வந்த ஒரு பேய், அப்போர் வரலாற்றைப் பசியால் வாடும் மற்றப் பேய்களுக்கு கூறுமுகத்தானுக போர்க் களத்தை விவரிப்பது இந்த நூலில் ஒரு சிறந்த பகுதி ஆகும். கற்பனை மிகுந்த இந்தப் பகுதி படிப்போர்க்கு நல்விருந்தாகும். சோழ மன்னனின் தானைத் தலைவனுகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்கத்தின் மீது கொண்ட வெற்றியை புகழ்ந்து பாடியது கலிங்கத்துப் பரணி. இப்பரணியே பரணி

என்றும் புகழேந்தியிடம் பூசல் கொண்டவர் என்றும் இடைக்காலத்திலே சில கூற்றுகள் வந்து சேர்ந்துவிட்டன. ஆராய்ந்து பார்க்குமிடத்து, இக்கூற்றுகள் ஆதாரமற்றவைகள் என்பது நன்கு விளங்கும். கி. பி. 1118 முதல் 1163 வரை ஆட்சி புரிந்த விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், ராஜராஜசோழன் என்ற மூன்று புகழ் பெற்ற சோழ மன்னர்கள் மீது இப்புலவர் மூன்று உலாக்கள் பாடி இருப்பதால் இவர் கி. பி. 1118க்கும் 1163க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்பது திட்டவட்டமாக தெரிகிறது.

இப்புலவரது இயற்பெயர் திருவம்பலக்கூத்த முதலியார் என்பது. கூத்தர் என்ற பெயர் தில்லை நடராஜப் பெருமானுக்கு உரியது. அதனாலேயே, இவர் ஆழ்ந்த சைவ சமயத்தவர் என்பது விளங்குகிறது.

'' சென்று செவியளக்குஞ் செம்மைவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர் நோக்கொன்று
மலரிவருங் கூத்தன்தன் வாக்கு '' என்ற

தண்டியலங்கார சூத்திர மேற்கோள் பாடலால், **மலரி** என்ற ஊரில் பிறந்தவர் என்று தெரிகிறது. **மலரி** என்னும் ஊர் பாடல் பெற்றத் தலமாகிய திரு எறும்பியூர் ஆகும். இப்பாடலின் கடைசி அடியை '' மணவை வரும் கூத்தன் தன் வாக்கு '' என்று கொண்டு இவர் **மணவை** என்ற ஊரைச் சேர்ந்தவர் என்று சொல்வாரும் உண்டு. இன்னும் சிலர் இவர் சீர்காழியைச் சேர்ந்தவர் என்றும் கூறுகிறார்கள். அதற்கு ஆதாரமாக

'' கம்பன் என்றும் கும்பன் என்றும் காழி ஒட்டக்கூத்தன் என்றும் ''

என்று வருகிற வெண்பாவினைக் காட்டுகின்றனர். காழி என்பது சீர்காழி. ''தக்கயாகப் பரணியில்'' தொடர்பில்லாமல் சம்பந்தர் வரலாற்றை இவர் புகுத்தி இருப்பதையும் தக்கயாகப் பரணியின் முதலிலே வைரவருக்கு காப்புக்கூறி இருப்பதையும் இதற்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். சீர்காழியில் சட்டைநாதர் என்ற பெயரில் வைரவ மூர்த்திக்குத் தனிச் சிறப்புண்டு. எனவே, இப்புலவர் பெருமான் சீர்காழியைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்ற கூற்றிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது. பின்னும், இவர் **மணக்குடியில்** பிறந்தவர் என்றும் இவர் தந்தையார் பெயர் சிவசங்கரபூபதி என்றும், தாயார் பெயர் **வண்டமர் பூங்குழலி** என்றும் கூறுகிறார்கள். இந்த மணக்குடியிலே இன்றும் ஒரு மனைக்கட்டு ஒட்டக்கூத்தர் மனைக்கட்டு என்று வழங்கி வருகிறது. எனவே, இந்தக் கூற்றுக்கும் ஆதாரமிருக்கிறது. இவற்றையெல்லாம் நோக்குமிடத்து இப்புலவர் பெருமான் சோழ நாட்டில் பிறந்தவர் என்றும் நிச்சயமாகச் சொல்லமுடியும் அத்துடன், தமிழ் இலக்கண இலக்கியங்களையும், வடமொழியையும் நன்கு பயின்று, சிறப்பாகக் கவி பாடும் ஆற்றலுடையவர் என்பதும் இவர் பாடிய ''தக்கயாகப் பரணி'' ''மூவருலா'' முதலிய நூல்களால் விளங்குகிறது.

இவருக்குக் கலைமகளிடத்து ஆழ்ந்த பக்தி என்று தெரிகிறது. தன் பெயரை, சில இடங்களில் இவர் ''வாணிதாசன்'' என்று குறிப்பிடுகிறார். '' ஆற்றங்கரை சொற்கிழத்தி வாழிய '' என்று நாமகளைத் துதித்திருக்கிறார். அக்கலைமகள் வாயிலாக

